கறுப்பு சிகப்பு இதழியல்

தொகுப்பாசிரியர்

இரா. பாவேந்தன்

கறுப்பு சிகப்பு இதழியல்

திராவிட இயக்க இதழியல் பற்றிய பதிவுகள்

திராவிட இயக்க இதழாளர்களின் இதழியல் பார்வை, அணுகுமுறை, இதழியலின் உட்கூறுகளைக் கருத்தியல் பரப்புரைகளுக்குப் பயன்படுத்தியமுறை, திராவிட இயக்க இதழ்கள் ஏற்படுத்திய புதிய போக்குகள், பார்ப்பனர்களும் அவர்களுடைய சார்பாளர்களும் இந்த இயக்க இதழ்களை எதிர்கொண்டவிதம் முதலானவை பற்றிய திராவிட இயக்க இதழாளர்களின் கட்டுரைத் தொகுப்பு இந்நூல்.
ஏகாதிபத்தியச் சார்பாளர்கள், சூனாமானா, பள்ளன் பறையன் கட்சி என சமூகப் பண்பாட்டுப் புறக்கணிப்புக்கு ஆளான திராவிட இயக்கத்தின் அறிவுப்பூர்வமான இதழியல் பணிகளைப் பதிவுசெய்யும் அச்சு ஊடக ஆவணம் இது.

முனைவர் இரா. பாவேந்தன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

கறுப்பு சிகப்பு இதழியல்

திராவிட இயக்க இதழியல் பற்றிய பதிவுகள்

தொகுப்பாசிரியர்

இரா. பாவேந்தன்

கயல் கவின்

விலை: ரூ. 450

கறுப்பு சிகப்பு இதழியல் • கட்டுரை • தொகுப்பாசிரியர்: இரா. பாவேந்தன் • முதல் பதிப்பு: அக்டோபர் 2009 • வெளியீடு: கயல்கவின் புக்ஸ், 16/25, இரண்டாம் கடல் போக்கு சாலை, வால்மீகி நகர், திருவான்மியூர், சென்னை – 600 041. தொலைபேசி: 044-4202 0389. மின்னஞ்சல்: karunabooks@gmail.com • அச்சுக்கோப்பு: யாழினி, சென்னை • நூல் வடிவமைப்பு: கீழ்வேளூர் பா. ராமநாதன், சுவடி, சென்னை • அட்டை வடிவமைப்பு: மதுரை பாபு • அச்சாக்கம்: எஸ்ஸார் பிரிண்டர்ஸ், சிவகாசி.

வடிவம்: டெம்மி 1 x 8 • தாள்: 18.6 கி. மேப்லித்தோ •
பிரதிகள்: 1200

Karuppu Sigappu Eithaziyal • Articles • Complier: Era. Paventhan • Language: Tamil • First Editon: October 2009 • Size: Demmy 1 x 8 • Paper: 18.6 Maplitho • Pages: 456• Copies: 1200 • Published by: Kayal Kavin Books, 16/25, Second Seeward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai 600 041. Phone: 044-4202 0389. email: karunabooks@ gmail.com • Typeset: Yalini, Chennai • Inner Pages: Kilvelur B. Ramanathan, Chuvadi, Chennai 600 005 • Cover Design: Madurai Babu • Printing: Yessaar Printers, Sivakasi.

Rs. 450

நீதிக்கட்சியின் *திராவிடன், ஜஸ்டிஸ், ஆந்திரப்பிரகாசிகா* ஆகிய
இதழ்களின் இதழாளர்களுக்கு

இத்தொகுப்பில் இடம்பெற்ற கட்டுரைகள், படைப்புகள், கருத்துப்படங்கள், விளம்பரங்கள் முதலியன வெளிவந்த இதழ்கள், மலர்கள்

திராவிடன்

குடிஅரசு

திராவிடநாடு

முரசொலி

காஞ்சி

போர்வாள்

கழகக்குரல்

மன்றம்

நம்நாடு

விடுதலை

தென்றல்

திருவிளக்கு

விடுதலை தந்தை பெரியார் நினைவு மலர் (1974)

விடுதலை தந்தை பெரியார் 105வது பிறந்தநாள் மலர் (1982)

விடுதலை தந்தை பெரியார் 111 ஆண்டு பிறந்தநாள் விழா மலர் (1989)

முரசொலி பொன்விழா மலர் (1992)

முரசொலி ஞாயிறு மலர்கள்

விடுதலை ஞாயிறு மலர்கள்

உள்ளடக்கம்

நன்றி 13

திராவிடர் இயக்கத்தின் காலப்பெட்டகம் 15

பார்ப்பனரல்லாதார் இயக்க இதழியல்; 21
நீதிக்கட்சிக்கு முன்னும் பின்னும்

1. நமது பத்திரிகையின் நோக்கங்கள் 61

2. 'குடியரசு' ஏடு 68
- தந்தை பெரியார்

3. சுதேசமித்திரனின் ஜாதிபுத்தி 73
- தந்தை பெரியார்

4. 'பிராமணப்' பத்திரிகைகளின் பிரச்சாரம்: 75
உஷார்! உஷார்! உஷார்!!
- சித்திரபுத்திரன்

5. ஆபத்தான பார்ப்பன ஏடுகள் 79
-தந்தை பெரியார்

6. எழுத்தாளர் மாநாடு 83
-பரதன்

7. நிருபரின் நிலைமை 99
- பரதன்

8. பேச்சு மேடை 111
- பரதன்

9. பத்திரிகைத் தொழில் பொதுச்சேவையா? சொந்தத் தொழிலா? 118
சி.என். அண்ணாதுரை - ம.பொ.சிவஞானம் வானொலி உரையாடல்

10. கார்டூனாயணம் 127
- அண்ணாதுரை

11. தேசீயப் பத்திரிகைகள்! 162
- பாரதிதாசன்

12. 'தமிழ்நாடு' பத்திரிகையும் ஆதிதிராவிடர்களும் 167
- சுந்தரராமாநுஜம்

13. ஆளவந்தாருக்கு எச்சரிக்கை! 172
- புத்ததாசன்

14. பழிவாங்கும் உணர்ச்சி! 180

15. மித்திரனின் சித்திரம் 185

16. இந்தி எதிர்ப்பு முதற்போர் - 1938 192
'விடுதலை' நிருபரின் பழைய நினைவுகள்
- பேராசிரியர் அன்பு கணபதி

17. கலைஞர் மு. கருணாநிதி நடத்திய முரசொலி 208
- தி. வ. மெய்கண்டார்

18. இவர் செய்யும் தொண்டு 250
- தமிழ் மறவன்

19. ஏடுகள் வளர்த்த இயக்கம் 261
- மா. செங்குட்டுவன்

20. பத்திரிகையாளரே! பத்திரிகையாளரே! 272

21. தேசியத் தாள்களின் தெகிடுதத்தம் 282

22. மித்திரன் தலையங்கம் - சித்திரவிளக்கம் 291

23. திராவிட ஓவியம் 295
- சாதுவன்

24. புனை பெயர்கள் ஏன்? 304
- செங்கோடன்

25. இயக்கம் போட்ட எதிர்நீச்சல்கள் 311

26. உயர்நீதி மன்றத்தில் கருணாநிதி அபிடவிட்! 319
மனுதாரர் மு. கருணாநிதி

27. கிண்டலா? தாக்குதலா? 326
- கண்ணதாசன்

28. மூலிகை, மலைமீது 330

29. ஏடுகளே புரட்சி ஆயுதங்கள்: 334
தடை போட்டால் படையாகும்

30. நாடும், ஏடும்! 336

31. ஏடுகள் போட்ட எதிர்நீச்சல்! 340

32. உதவி ஆசிரியர் 346
- கண்ணதாசன்

33. கழக இதழ்களில் கால் நூற்றாண்டு 351

34. ‘முரசொலி’ பொங்கல் மலர் விளம்பரம் 365

35. அனுதாபத்துக்குரிய ‘கல்கி’ ஆசிரியர் குழாம்! 371
- பி.ஆர். இலட்சுமிகாந்தன்

36. தீபாவளியும் தினத்தந்தியும் 374
- வேத்தரசன்

37. தென்றல் அலுவலகத்தில் போலீஸ் படையெடுப்பு!
கவிதைகளைக் கைப்பற்றினர்! 379
- கண்ணதாசன்

38. சிரிப்புத்தான் வருகுதையா...! பலே பாண்டியா! 382
- ‘சேனா’

39. எது வெத்து வேட்டு விகடனாரே? 390
- மின்சாரம்

40. குற்றம் செய்யத் தூண்டுகிறது ‘குமுதம்’! 398
- மா. செங்குட்டுவன்.

41. ‘குமுத’த்தையே படியுங்கள்- குட்டிச்சுவர் ஆகி மடியுங்கள்! 405
- ‘‘அரிமா’’

42. பத்திரிகை (அ) தர்மம்! 410
- செ. கந்தப்பன்

43. சந்திக்கலம்பகம் 415
- மிளைக்கந்தன்

44. வெளிநாட்டு பத்திரிகைகள் இந்தியாவிற்குள் நுழைய
அனுமதி அளிப்பது நாட்டிற்கு நன்மையா? 420
- ஏ.கே. வில்வம்

45. எரிச்சல் ஏன் 'இந்து'வுக்கு? 427
- இனநலம்

46. அந்தப் புன்னகை எங்கே? 432
- ஏ. சுந்தரம்

47. நகைச்சுவை என்ற பெயரில்- இந்தி எதிர்ப்பை கேலி செய்யும் விகடனின் முரண்பாடுகள் 437
- சின்னக்குத்தூசி

48. கலைஞரின் கருத்துப்படங்கள் 443

49. 'சோ' கூட்டத்துக்குத் தெரியுமா? கற்பூர வாசனை? 447
- மின்சாரம்

நன்றி

திராவிட இயக்கத்துக்கும் இதழியலுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிய இத்தொகுப்பை வெளியிடவேண்டும் என்ற எண்ணம் உருவாகக் காரணமாக இருந்த நண்பன் தமிழ்ச்செல்வனுக்கு என் முதல் நன்றி. இத்தொகுப்பு முயற்சியை உடனே வெளியிட ஆவன செய்த கயல்கவின் பதிப்பக நிறுவனர் அண்ணன் வீ.எம்.எஸ். சுபகுணராஜன், மேலாண் இயக்குநர் கே.எஸ். இராஜ மகேந்திரன், நிறுவன ஆலோசகர் மருத்துவர் சுதந்திராதேவி ஆகியோருக்கு என் பணிவான நன்றிகள்.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள், பழைய திராவிட இயக்க இதழ்கள் பலவற்றில் இடம் பெற்றவை. அரிய திராவிடர் இயக்க இதழ்களைப் பார்வையிடவும், நகலெடுக்க அனுமதியும் தந்தவர்கள் கீழ்க்கண்டோர்:

சென்னை திராவிடர் கழகத் தலைமைநிலைய பெரியார் ஆவணக்காப்பக நூலகர், அண்ணா அறிவாலய நூலகர் சுந்தரராஜன், பத்மநாபன், செந்தில், வண்ணாரப்பேட்டை தமிழ் இளைஞர் கழக நூலகப் பொறுப்பாளர்கள், கன்னிமாரா நூலகப் பொறுப்பாளர்கள், இலயோலா கல்லூரி நூலகப் பொறுப் பாளர்கள், டிராட்ஸ்கி நூலகப் பொறுப்பாளர்கள், மதுரை, ஆழ்வார்குறிச்சி தி.மு.க. அலுவலகப் பொறுப்பாளர்கள், அய்யா நீலமேகம், காஞ்சிபுரம் அழகேசன், தாம்பரம் கருணாகரன், வளவனூர் சேகரன், மஞ்சக்குப்பம் கருத்திருமன் குடும்பத்தினர், வியாசைநேசன் குடும்பத்தினர், வேலூர் கு.மு. அண்ணல்தங்கோ குடும்பத்தினர், நெல்லிக்குப்பம் சபாபதி, முன்னாள் அமைச்சர் நெடுஞ்செழியன் குடும்பத்தினர், மதுராந்தகம் ஆறுமுகம் குடும்பத்தினர், முன்னாள் அமைச்சர் கே.ஏ. கிருஷ்ணசாமி,

எம்.ஜி.ஆர். நிலைய இல்லத் தோழர்கள், ஆகியோரின் ஒத்துழைப்பும் ஆர்வமும் இல்லையெனில் இத்தொகுப்பு உருவாகி இருக்காது.

இத்தொகுப்பிற்கு சிறப்பான அணிந்துரை வழங்கிய திராவிடர் இயக்க மூத்த இதழாளர் சின்னக்குத்தூசி அவர்களுக்கு என் நன்றி என்றும் உரியது.

இத்தொகுப்பின் பதிப்புரையைப் படித்து கருத்து தெரிவித்த மானமிகு கு.வெ.கி. ஆசான், புலவர் செந்தலை ந. கவுதமன், முனைவர் கு. முருகேசன் ஆகியோருக்கு என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன். இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரையாளர் பலர் மறைந்து விட்டனர். மறைந்த கட்டுரையாளர்களின் குடும்பத்தினரின் முகவரிகளையும், புனைப்பெயரில் எழுதிய கட்டுரையாளர்களின் இயற்பெயர்களையும் அறிய இயலவில்லை. கட்டுரையாளர் களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் இந்நூலின் தொகுப் பாசிரியர் என்னும் முறையில் என் நன்றியும் அன்பும் உரித்தாகுக.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளை எழுதிய வாழும் கட்டுரையாளர்களான தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி, கலி. பூங்குன்றன், தி.வ.மெய்கண்டார், சின்னக்குத்தூசி, மா.செங்குட்டுவன் ஆகியோரை அணுகியபோது மகிழ்வோடு வெளியிட அனுமதியளித்தனர் அவர்களுக்கு என் நன்றி.

கருத்துப்படங்களைச் செப்பம் செய்து கொடுத்த தோழர் ட்ராட்ஸ்கி மருது, இராம், கருணா, ஆகியோருக்கும். அட்டை வடிவமைப்பு செய்த தோழர் ஓவியர் மதுரை பாபு, பிழைத்திருத்தப் பணியில் ஒத்துழைத்த தோழர் சிங்கராயர், ப. ஜெயபால், அ. இளையராஜா, அ. சுஜிதா ஆகியோருக்கும் என் நன்றி.

கட்டுரைகளைப் பிழையின்றி தட்டச்சு செய்த தோழர் ம.கா. செந்தில்குமார், நூல் உருவாக்கம் செய்த சுவடி நிறுவனப் பொறுப்பாளர் நாகம் உள்ளிட்ட அலுவலக நண்பர்கள், பக்க வடிவமைப்பு செய்த கீழ்வேளூர் பா. ராமநாதன், இந்நூலை அழகுற அச்சிட்ட சிவகாசி எஸ்ஸார் பிரிண்டர்ஸ், ஆகியோருக்கும் என் நன்றி என்றும் உரியது.

தோழமையுடன்
இரா. பாவேந்தன்

திராவிடர் இயக்கத்தின் காலப்பெட்டகம்

– சின்னக்குத்தூசி

இந்தத் தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்கள் திராவிடர் கழகத்திலோ, திராவிட முன்னேற்றக் கழகத்திலோ உறுப்பினர் களான பின்னர் திராவிட இயக்கத்தின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

திராவிடர் இயக்க வரலாறு என்பது 1910களில் ஆரம்பமாகின்றது. நீதிக்கட்சி என்னும் பெயரில் ஆரம்பமாகும் அந்த இயக்கத்தின் வரலாற்றிற்கு ஏறத்தாழ 100 வயதாகப் போகின்றது.

நூறாண்டு காலத்திற்கு முன்பிருந்த தமிழர்களின் நிலை, அதாவது பார்ப்பனரல்லாத மக்களின் நிலை எவ்வாறு இருந்தது? கல்வியில், உத்தியோகங்களில் வாழ்க்கை வசதிகளில் அவர்களது நிலை எப்படி இருந்தது? பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்னும் திராவிடர் இயக்கம் தோன்றி வளர்ந்ததின் பயனாக இப்போது நாம் வாழும் தமிழகத்தில் பார்ப்பனர் ஆதிக்கம் எந்த அளவுக்கு சரிந்து விட்டது? பார்ப்பனரல்லாத மக்களின் கல்வியும், வேலைவாய்ப்பும் வாழ்க்கைத் தரமும் எந்த அளவிற்கு உயர்ந்திருக்கின்றன? என்பதோடு திராவிடர் இயக்கத்தின் உயிர்க் கொள்கையான சாதிகள் ஒழிந்த சமத்துவ சமுதாயம் என்பதிலும் எத்தகைய வெற்றிகள் கிடைத்திருக்கின்றன என்பதையெல்லாம் திராவிடர் இயக்கத்தில் புதிதாக இணைந்த இளைஞர்கள் முழுமையாகத் தெரிந்துகொள்ள என்னவழி?

திராவிடர் கழகத்தின் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தினரே 1910களிலிருந்து இன்று வரையிலான வரலாற்றினை அறிந்து கொள்ளும் வகையில் சின்னதும், பெரியதுமாக ஏறத்தாழ 400

நூல்களை வெளியிட்டுள்ளனர். தி.மு.கழத்தின் தலைமைநிலைய வெளியீடுகளாக ஏறக்குறைய 140 நூல்கள் வெளிவந்துள்ளன.

திரு. வே. ஆனைமுத்து தொகுத்த 'பெரியார் சிந்தனைக் களஞ்சியம்' மூன்று தொகுதிகள் வெளிவந்துள்ளன. முனைவர் நன்னன் வெளியிட்டுள்ள தொகுப்பு நூல்கள், திரு எஸ்.வி. ராஜதுரை – வ. கீதா எழுதிய அரிய ஆய்வு நூல்கள், கோ. கேசவன், அ. மார்க்ஸ் முதலியோரின் விமர்சனநூல்கள் என்று திராவிடர் இயக்கம் பற்றி பிரமிக்க வைக்கும்படியான எத்தனை எத்தனையோ நூல்கள் வெளிவந்திருக்கின்றன. முரசொலிமாறன் எழுதிய திராவிட இயக்கவரலாறு 1920 வரையிலான வரலாறே. 300 பக்கத்துக்கு மேல் எழுதப்பட்டு 1920லிருந்து இன்று வரையிலான வரலாற்றை முழுமையாக எழுதினால் இன்னும் எத்தனை ஆயிரம் பக்கங்கள் வருமோ என்று திகைக்க வைக்கிறது. க. திருநாவுக்கரசு, நீதிக்கட்சி வரலாற்றினை மட்டுமே 1400 பக்கங்கள் கொண்ட நூலாக எழுதியுள்ளார்.

புதிதாகக் கட்சியில் சேருபவர்கள் இத்தனை புத்தகங்களையும் இத்தனை ஆயிரம் பக்கங்களையும் படித்தால்தான் திராவிடர் இயக்கம் பற்றித் தெரிந்து கொள்ளமுடியுமா என்று மலைத்து நின்றால் அதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் அவர்களது ஆயாசத்தையும் ஐயத்தையும் போக்கும் வகையில்,

இதோ ஒரு நூல்
இதை மட்டும்
படித்தாலே
திராவிடர் இயக்கம் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டுவிட முடியும்.

அய்யாவின் *குடி அரசு*, அண்ணாவின் *திராவிடநாடு*, கலைஞரின் *முரசொலி*, 1950கள் வரையில் திராவிடர் இயக்கத்தின் சார்பில் வெளிவந்து கொண்டிருந்த நூற்றுக்கணக்கான மாத, மாதமிருமுறை, வார–தினசரிகளில் வெளிவந்த– தேர்ந்தெடுக்கப் பட்ட சிறந்த கட்டுரைகளை எல்லாம் தேடித் தேடித் தொகுத்து

திராவிடர் இயக்கத்தின்
காலப்பெட்டகம் இது

என்று போற்றும் வகையில் 'கறுப்பு சிகப்பு இதழியல்' என்ற நூலாகப் படைத்தளித்திருக்கின்றார் இரா. பாவேந்தன்

'நமது பத்திரிகையின் நோக்கங்கள்' என்று *திராவிடன்* ஏட்டில் வந்த (01.06.1917) கட்டுரையுடன் ஆரம்பமாகின்றது இத்தொகுப்பு நூல். அந்த முதல் கட்டுரையிலேயே திராவிடர் இயக்கத்தின்

முன்னோடிக்கட்சி என்று அழைக்கப்படும் நீதிக்கட்சியின் தலையாய கொள்கைகள் எவை என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்டுரை எட்டாண்டுகளுக்குப் பிறகு சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் தந்தைப் பெரியார் அவர்கள் நடத்திய *குடிஅரசு* ஏடு தொடங்கி இருபது மாதத்தில் தந்தைப் பெரியார் எழுதிய தலையங்கம். இதில் நீதிக்கட்சி காலத்தின் தொடர்ச்சியாக சுயமரியாதை இயக்கம் பார்ப்பனரல்லாத மக்களுக்கு எந்தெந்த வகையில் பாடுபட்டு வருகிறது என்பதைப் பெரியார் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்.

"உண்மையில் குடிஅரசுக்கு எந்த பிராமணரிடத்திலும் குரோதமோ வெறுப்போ கிடையாதென்பதை உறுதியாகச் சொல்வோம். ஆனால் பிராமணன் உயர்ந்தவன் என எண்ணிக்கொண்டிருப்பதிலும், மற்றவர்கள் தீண்டத்தகாதவர்கள், பார்க்கக்கூடாதவர்கள், 'இழிவான' மிருக உரிமைக்கும் பாத்திரமில்லாதவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணத்திடத்திலும், தங்கள் வகுப்பார்தான் முன்னணியில் இருக்க வேண்டும்; மேன்மையுடன் பிழைக்க வேண்டும்; மற்றவர்கள் என்றென்றைக்கும் தங்களுக்கு அடிமையாகவே இருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டும், அதற்காக மற்றவர்களை உபயோகித்துக் கொண்டும் செய்யும் கொடுமையான சூழ்ச்சிகளிடத்திலும் தான், *குடிஅரசுக்கு* வெறுப்பு இருப்பதுடன் அதை அடியோடு களைந்தெறிய வேண்டுமென்று ஆவல் கொண்டு உழைத்து வருகிறது என்று எழுதியிருக்கின்றார் பெரியார். இதன்மூலம் 1925லேயே பார்ப்பன எதிர்ப்புக்கான நியாயமான காரணங்களை எடுத்து வைத்திருக்கின்றார்.

பார்ப்பனர்கள் எப்போதுமே பார்ப்பனர்அல்லாதார் நலனுக்கு எதிராகவே செயல்பட்டு வருகிறார்கள் என்பதை விளக்க ஒன்றல்ல, மூன்று கட்டுரைகளை 'சுதேசமித்திரனின் சாதிப் புத்தி, 'பிராமணப் பத்திரிகைகளின் பிரச்சாரம்: உஷார்! உஷார்! உஷார்!' 'ஆபத்தான பார்ப்பன ஏடுகள்' என்ற தலைப்புகளில் கோபம் கொப்பளிக்க எழுதியிருக்கின்றார்.

அந்த மூன்று கட்டுரைகளைப் படிக்கும் எவருக்கும், அன்றுமட்டுமல்ல; இன்றும் பார்ப்பன ஏடுகள் திராவிடர் இயக்கத்தை எப்படியாவது ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்ற வன்மம், துவேஷத்துடனேயே செயல்பட்டு வருகின்றன என்பதைப் புரிந்து கொள்ளமுடிவதோடு, அய்யா பெரியாரவர்கள் எவ்வளவு தொலைநோக்குப்பார்வையுடன் பார்ப்பன ஏடுகளிடம் தமிழர்கள் எவ்வளவு உஷாராக நடந்துகொள்ள வேண்டும் என்பதை 1927ஆம் ஆண்டிலேயே சொல்லி வைத்திருக்கின்றார் என்பது புரியும்.

பார்ப்பனர் நடத்தும் ஏடுகள், அவர்கள் நடத்தும் எழுத்தாளர் மாநாடுகள், புராணப் பிரசங்கங்கள் என்ற பேரில் அவர்கள் அன்றாடம் நடத்தும் பிரச்சாரங்கள் ஆகிய அனைத்திலும் சாதித் துவேஷமும் பார்ப்பனர்களின் நல் பாதுகாப்பும் விரவிக் கிடக்கின்றன என்பதே *திராவிடநாடு* ஏட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் பரதன் என்ற புனைப்பெயரில் மூன்று கட்டுரைகளில் மிக விரிவாக சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

'கார்டூனாயணம்' என்ற தலைப்பில் அவர் 'காஞ்சி பொங்கல் மலரில் எழுதியுள்ள மிக நீண்ட கட்டுரை தமிழ்ப் பத்திரிகை யுலகிற்கே ஒரு புதிய அறிமுகமாக அமைந்திருக்கின்றது. இதில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிவரும் ஏடுகள் வெளியிட்ட கார்டூன்கள் என்ன சொல்கின்றன என்பதுபற்றி அற்புதமான ஒரு சொல்லோவியத்தைப் படைத்திருக்கிறார் அண்ணா! கட்டுரையின் இறுதிப்பகுதியில்தான் எதற்காக அண்ணா இத்தனை பத்திரிகைகளில் வெளிவந்த கார்டூன்களையெல்லாம் தேடிப் பிடித்துத் தொகுத்து அவை கூறும் கருத்துக்களை விமர்சித்திருக்கின்றார் என்பது புரிகிறது.

"நானும், ராஜாஜி, காயிதே மில்லத் ஆகியவர்களும் ஒரு கழுதைமீது சவாரி செய்வதாக *'விகடன்'* படம் போட்டு காட்டிற்று. நண்பர்கள் வருத்தப்பட்டார்கள் நான் சமாதானம் சொன்னேன். கழுதை மீது சவாரி செய்வதாகத்தானே படம்! கழுதையாகச் சித்தரிக்கவில்லையே! என்று இப்படி ஏதாவது ஒரு சமாதானம் சொல்லிவிட்டால் போதுமா என்று சலித்துக் கொண்டார்கள்.

விகடன் அதிபர் காங்கிரஸ்காரர்! ராஜ்யசபை உறுப்பினர். அவர் எதிர்க்கட்சிகளை கேலி படம் மூலம் கேவலப்படுத்துகிறார். பண்பு அல்ல என்றாலும், அது அவர் தம்முடைய கட்சிக்காகச் செய்திடும் சேவை என்று கருதிக்கொள்ளக்கூடும்.

அவர்—தன்னிடம் இதைத்தான் எதிர்பார்க்கலாம் என்று கூறும்போது, அவரிடம் வேறு எதிர்பார்க்க நமக்கு ஏது உரிமை.

மலக்குழி என்று போர்டு போட்டப்பட்டுள்ள இடத்திலே நிலைகொண்டு மல்லிகை மணம் வீசக்கூடாதா என்று கூறுவதும் எதிர்பார்ப்பதும் மிகப் பெரிய தவறு, மதியீனம் அல்லவா?

என்று முத்தாய்ப்பு வைப்பதின் மூலம் கார்டூன்கள் மூலம் நாட்டுநடப்புகளை நயம்படவும் சுட்டிக்காட்டலாம், நயத்த நாகரிகத்தின் குரல்வளையை நசுக்கிடவும் பயன்படுத்தலாம் என்பதை கார்டூனாயணம் என்ற மிக நீண்ட கட்டுரை மூலம் நளினமாகக் காட்டியிருக்கிறார் அண்ணா.

திராவிடர் இயக்கம் நடத்திய போராட்டங்களிலேயே தமிழ்மொழி காக்க 1938இல் நடத்திய முதல் இந்திஎதிர்ப்புப் போர் தமிழக வரலாற்றில் புதியதோர் திருப்புமுனையை ஏற்படுத்திய போராட்டமாகும். பெரியாரும், மறைமலையடிகளும், கி.ஆ.பெ. விசுவநாதமும் தமிழகத்தில் பல்வேறு துறைகளைச் சார்ந்த தமிழ்ஆர்வலர்களும் ஒன்றிணைந்து நடத்திய அந்த வீரஞ்செறிந்த போராட்டம் பற்றிப் பேராசிரியர் அன்புகணபதி எழுதிய கட்டுரை இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. அன்புகணபதி அவர்கள் *விடுதலை*யின் நிருபராகப் பணியாற்றியவர் என்ற செய்தியே இதுவரை எவரும் அறியாத ஒன்றாகும்.

திராவிடர் இயக்கத்தின் சார்பில் எத்தனை எத்தனையோ ஏடுகள் நூற்றுக்கணக்கில் வெளிவந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் அண்ணாவின் *திராவிடநாடு* உட்பட அனைத்து ஏடுகளும் ஒவ்வொரு காலக்கட்டத்தில் ஏதோ சில காரணங்களால் நின்று விட்டன. அந்தக் காலக்கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஏடுகளில் இன்று வரையில் 'அவாள் ஏடுகளுக்குச் சவாலாக' தொடர்ந்து வெளிவந்து சாதனைச் சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கும் ஒரே ஏடு கலைஞரின் *முரசொலி*தான். தி.வ. மெய்கண்டார் எழுதிய கலைஞர் மு. கருணாநிதி நடத்திய *முரசொலி* என்ற கட்டுரை. கலைஞர் இந்த ஏட்டை எப்போது எப்படிப்பட்ட காலத்தில் தொடங்கினார். இதனை நடத்திட அவர் பட்ட கஷ்டங்கள் எத்தனை எத்தனை? என்பதே.

"இன்று நிலையாக வந்து கொண்டிருக்கும் *முரசொலி* வாரஇதழாகத் தத்தித் தத்தித் தளர்நடையிட்டு தடுக்கிவிழுந்து சோர்ந்து எழுந்து நிலையாக நிற்க ஏற்றுக்கொண்ட இன்னல்கள் ஏராளம்; ஏராளம். அத்தகைய சோக நிலைமைகளை எல்லாம் விளக்குவதுடன், *முரசொலி* 1948இல் வாரஇதழாகத் தோன்றிய காலத்தில் ஆற்றிய அரும் பணிகளையும் எடுத்துக் காட்டுவதே இந்தக் கட்டுரையின் 'நோக்கம்' என்ற முகவுரையோடு *முரசொலி*யின் வரலாற்றினை அற்புதமாக எழுதி விளக்கி யிருக்கிறார். ஏறத்தாழ 50 பக்கங்கள் கொண்ட அந்த வரலாற்று ஆவணத்தை, தனி புத்தகமாகவே வெளியிடலாம்! அவ்வளவு சிறப்புமிக்க கட்டுரை அது.

இந்தத் தொகுப்பு நூலின் முத்தாரமாகத் திகழ்கிறது. *கழகக் குரல்* ஏட்டில் தமிழ்மறவன் 1975இல் எழுதிய 'இவர் செய்யும் தொண்டு' என்ற கட்டுரை. 'இவர்' யார்? கழகப் பொதுக்கூட்டங்களிலும், மாநாடுகளிலும், கழகம் சார்ந்த நிகழ்ச்சிகளிலும் எது இருக்கிறதோ இல்லையோ இவரது புத்தகக் கடை இருக்கும். 30 ஆண்டுகளுக்கும் மேலாக, இயக்கப்பணியை

இயக்கத்தின் பிரச்சாரப் பணியை, கழகம் சார்ந்த புத்தகங்களை மட்டுமே விற்பனை செய்யும் பணியை–ஓசைப்படாமல் விளம்பரமில்லாமல் பணிசெய்த அன்புமணிதான் தமிழ் மறவன் சுட்டிக் காட்டியிருக்கும் 'இவர்'. திராவிடர் இயக்கத்தின் தலைவர்கள், ஏடுகள், அவற்றில் வெளிவந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தலையங்கங்கள், கட்டுரைகளை எல்லாம் தொகுத்துத் தந்துள்ள இந்நூலின் தொகுப்பாசிரியர் இரா. பாவேந்தன் இயக்க வளர்ச்சியில் குடத்திலிட்ட விளக்காக புத்தக விற்பனைமூலம் அளவிடற்கரிய தொண்டு புரிந்த ஒரு புத்தகக் கடைக்காரரின் வாழ்வும் தொண்டும் பற்றிய கட்டுரையைச் சேர்த்திருப்பது பொன்மலர் நாற்றமுடைத்து என்பதுபோல அமைந்திருக்கின்றது.

நூலாசிரியர் பாவேந்தன் திராவிடர் இயக்கக் குடும்பத்தில் தோன்றியவர். இவரது தந்தை முனைவர் அருணா. ராஜகோபால் அவர்கள் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் கண்ட புகழ்பெற்ற விஞ்ஞானி. இவரும் அதே பல்கலையில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். இவரது 'கறுப்பு சிகப்பு இதழியல்' என்ற இந்த நூல் காலப்பெட்டகம், கழகத்தின் கருத்துக் கருவூலம் என்பதில் சந்தேகமில்லை. இவ்வளவு திறமைவாய்ந்த பாவேந்தன் அவரது திறமையின் அளவுக்கு இன்னும் புகழ் பெறவில்லையே என்ற ஏக்கமே இந்த நூலைப் படித்து முடித்ததும் எவர் மனதிலும் பரவும் என்பதில் சந்தேகமில்லை!

பார்ப்பனரல்லாதார் இயக்க இதழியல்; நீதிக்கட்சிக்கு முன்னும் பின்னும்

– இரா. பாவேந்தன்

"தினசரி வருகின்ற திராவிடன் குடியரசும்
ஜெயம் பெரும் ஜஸ்டிஸ் செல்வக்குமரனும்
குணமிகும் நாடார் குலமித்திரனும் கூட
கோடை இடிபோலக் குமுறும் தமிழனும்
இன்னமும் ஏற்றம் இறைக்கின்ற சிங்கப்பூர்
இயலும் முன்னேற்றம்
பிரசண்ட மகாவிகடன் பெயர்போன ரிவோல்டு
பத்திராபதிபர்கள் பிரகாசிப்பதையும் பார்த்தேன்
தீர ஜெயம் கூட்டும் திரு இராமசாமியார்
செப்பும் மொழிகளை நான் சிரமேற்கொண்டிருக்கேன்
விட மாட்டேன் நானே, உன் வேதபுராணம் எல்லாம்
தடுமாட்டம்தானே"

— பாப்பாத்திக்கும் பறச்சிக்கும் நடந்த அலங்கார சண்டை *(1929)*

I

இந்தியாவிற்கு வருகைதந்த காலனிய அதிகாரிகளும் கிறித்துவச் சமயப்பணியாளர்களும் பாரம்பரியச் சமூகத்தின் மொழி, இலக்கியப் பண்பாட்டு மரபுகளை அறியவும் தொகுக்கவும் முற்பட்டபோது சமஸ்கிருத வேதப்பண்பாட்டை ஆரியப்பண் பாடாகவும் இந்தியப் பண்பாடாகவும் அடையாளம் கண்டனர். தென்னிந்தியப் பகுதியில் பணியாற்றிய காலனிய அரசு அதிகாரி எல்லீஸ், கிறித்துவச் சமயப் பணியாளர் கால்டுவெல் முதலியோர்

இந்திய ஆரியப் பண்பாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்ட, வேத மறுப்பு தமிழ்ப் பண்பாட்டு வேர்களைத் தென்னிந்தியப் பகுதி களில் அடையாளம் கண்டனர்.

சமஸ்கிருத வேதப்பண்பாடே இந்தியப் பண்பாடு என்ற கருத்தியலை முன் வைத்து இந்திய விடுதலையைக் கோரும் முயற்சிகளில் இந்தியத் தேசியக் கருத்தாளர்கள் ஈடுபட்டனர். சென்னை மாகாணத்தில் காலனிய அரசுக்கு எதிராக இந்தியத் தேசியக் கருத்தியல் எழுந்த காலகட்டத்தில் பார்ப்பனரல்லாதார் அரசியலும் வேர் பிடித்தது. சென்னை மாகாணத்தின் பல பகுதி களில் வாழ்ந்து வந்த, பல நூற்றாண்டுகளாகக் கல்வி மறுக்கப் பட்ட பார்ப்பனரல்லாதார் கிறித்துவச் சமயப் பணியாளர் களாலும், காலனிய அரசாலும் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங் களில் கல்வி கற்றனர். இக்கல்வி நிறுவனங்களில் ஐரோப்பியக் கல்வியைக் கற்ற முதல் தலைமுறை பார்ப்பனரல்லாதார் கல்வி வேலைவாய்ப்பு எனச் சமகாலச் சிக்கல்களுக்கு விடைகாணப் புறப்பட்டனர். மேலும், தங்களின் கடந்தகால அறிவு மரபு குறித்த தேடல்களிலும் அவற்றைக் கருத்தியல் பின்புலத்துடன் அரசியலாக்கும் பணிகளிலும் ஈடுபட்டனர். இப்பணிகளுக்காக நவீன ஊடகமாகக் கருதப்பட்ட அச்சுஊடகத்தின் மூலம் நூல்களையும் இதழ்களையும் அச்சிட்டு வெளியிடும் முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கினர். கல்வி, வேலைவாய்ப்பு, சமூகப் பொருளாதார முன்னேற்றம் குறித்து அக்கறை கொண்ட பார்ப்பனரல்லாத இளைஞர் பிரிவினர், இந்திய தேசியச் சார்பாளர்களால் முன்வைக்கப்பட்டஇந்து, இந்தியப் பண்பாடு, சமஸ்கிருத வேத பண்பாட்டுக்கு மாற்றாக தமிழ் நாத்திக, தமிழ்ப் பௌத்த, தமிழ் சைவ மாற்றுமரபை முன்னிறுத்தினர்*. இதன் தொடர்ச்சியாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் சென்னை மாகாணத்தில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் அரசியல் மோதலுக்கு அடித்தளமிடப்பட்டது.

இந்து வர்ணாசிரமதர்மத்தின் சமூக, அரசியல், பொருளியல், பண்பாட்டு, இலக்கிய அடித்தளத்தைத் தொடர்ந்து தாக்கி அழித்தது முதல் தனிக் குடியரசு அமைக்கக்கோரி அரசியல்ரீதியாக மக்களைத் திரட்டித் தீவிர இயக்கம் நடத்தியது வரை திராவிடர் இயக்கத்துக்கு நிகரான அரசியல் இயக்கம் இந்திய அரசியல் பரப்பில் எதுவும் இல்லை. சமூக, அரசியல், பண்பாட்டு,

---

* (இம்மரபுகள் பெரியாரின் வருகைக்குப் பிறகு, மதநீக்கம் செய்யப்பட்ட பால்சார்பற்ற ஜனநாயகப்படுத்தப்பட்டத் தமிழ்ப் பண்பாடாக மாறியது தனி வரலாறு).

பொருளாதார, சமய, மெய்ப்பொருளியல், கலை, இலக்கியம், இதழியல், காட்சிஊடகம் என அனைத்து முனைகளிலும் பார்ப்பனரல்லாதாரின் விடுதலையைத் திராவிடர் இயக்கம் முன்னிறுத்தியது.

தென்னிந்திய நல உரிமைச் சங்கம், சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், பெரியார் இயக்கப் பிரிவுகள் என விரியும் திராவிடர் இயக்கத்தின் அரசியல் அமைப்புக்கள் தமிழகத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இந்த அமைப்புக்கள் தங்கள் கருத்தியல் பரப்புரைகளுக்குத் தொடக்கக்காலம் முதல் தற்காலம்வரை இதழ்களையும் நூல் களையும் வெளியிட்டு வருகின்றன. 'இதழியல்' என்ற ஊடகத்தைப் பற்றிய திராவிடர் இயக்கத்தின் கண்ணோட்டம், புரிந்துணர்வு, கருத்துப் புலப்பாட்டு நெறிமுறைகள், நிர்வாக மற்றும் மேலாண்மை, திராவிடர் இயக்க இதழ்கள், இதழாளர்கள் சந்தித்த அவதூறுகளும் அடக்குமுறைகளும், அவற்றை எதிர்கொண்ட முறைகள் ஆகியனவற்றை இதழியல் வரலாற்றுநோக்கில் ஆவணப்படுத்துவதே இத்தொகுப்பின் நோக்கமாகும்.

II

திராவிடர் இயக்கத்தின் இதழியல் சார்ந்த மதிப்பீடுகளை அறிய நீதிக்கட்சிக்கு முந்தைய பார்ப்பனரல்லாதார் இதழியல் போக்குகளையும் திராவிடர் இயக்க இதழியல் போக்குகளையும் அறிவது அவசியம். ஐரோப்பாவில் அச்சுஊடகம் கண்டுபிடிக்கப் பட்ட ஒரு நூற்றாண்டு முடிவதற்கு முன்பாகவே தென்னிந்தியா வின் மேற்குக்கடற்கரைப் பகுதியில் தமிழ்மொழியின் முதல் நூல்கள் (1554) பல அச்சேறின. (B.S.Kesavan, 1985 : 16) தொடர்ந்து அச்சேற்றப்பட்ட நூல்களும் கிறித்துவச் சமயப் பணியாளர்களின் பயன்பாட்டுக்கானவை. மேற்குக்கடற்கரைப் பகுதியில் செயல் பட்டுவந்த தமிழ் அச்சகங்கள் 1612ஆம் ஆண்டுவரை செயல்பட்டு வந்தன. கிழக்குக் கடற்கரை நகரான தரங்கம்பாடிக்கு 1709ஆம் ஆண்டு வருகைதந்த சீகன்பால்கு 1713ஆம் ஆண்டு தொடங்கிய அச்சகம் செயல்படத் தொடங்கிய பிறகு அச்சிடப்பட்ட நூற்றுக்கணக்கான நூல்களும் கிறித்துவச் சமயச் சார்பு தமிழ் நூல்களே. இந்த அச்சகத்தில் ஓரிரு தமிழ் நீதி இலக்கிய நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள், அகராதிகள், கிறித்துவ சமயத் தமிழ்த் துண்டறிக்கைகள் அச்சிடப்பட்டன.

சென்னை மாகாணத்தில் பல பகுதிகளில் துண்டறிக்கைச் சங்கங்கள் தொடங்கப் பெற்றன. சென்னையில் 1818ஆம் ஆண்டு சென்னை துண்டறிக்கைச் சங்கத்தின் தொடக்கத்தின் போது,

தமிழ் அச்சுஊடகத்தின் வளர்ச்சி ஜனநாயகப்படுத்தப்பட்டது. இச்சங்கம்தான் முதன்முதலாக பொதுமக்களிடம் மலேரியா பரவுவதைத் தடுக்கும் அறிவியல் துண்டறிக்கையை வெளியிட்டு அச்சுஊடகத்தின் 'சமயச்சார்பில்லா' பரப்புரைப் பணிகளுக்கு அடித்தளமிட்டது.

'அறிவு' சிலருக்கு மட்டுமே உரியது என்ற வர்ணாசிரமக் கருத்தியலுக்கு மாற்றாக அறிவு அனைவருக்கும் பொதுவானது என்ற புதிய நம்பிக்கை தோன்ற அச்சு ஊடகத்தின் வரவு காரணமாக அமைந்தது. மேலும் சாதிகளாகப் பிளவுண்டிருந்த தமிழ்ச் சமூகத்தில் தமிழ்த் தேசியம் என்ற துணைத் தேசிய அரசியல் அடையாள உருவாக்கத்திற்கும் அது வித்திட்டது. "அச்சு இயந்திரமும் நூல் வெளியீடும் தமிழகத்தில் குறிப்பாகச் சாதாரண மக்கள் மத்தியில் அறிவுப் பரவலில் (Knowledge dissiemination) ஏற்படுத்திய பெரும்புரட்சி நமது கற்பனைகளின் எளிய வரம்புகளுக்கு அப்பாற்பட்டது. அறிவுத்துறை ஏக போகத்தில் அது ஒரு சிதைவை ஏற்படுத்தியது. மடங்களிலும் உயர்சாதி புலமையாளர்களின் இல்லங்களிலும் சிறையிலிருந்த தமிழ் அறிவு பொதுச் சொத்தாவதற்கான கால்கோள் இடப்பட்டது. சைவம், வைணவம், அவைதீகம் என்றெல்லாம் தமிழிலக்கியங்கள் கூறுபோடப்பட்டு, தனித் தனி தீவுகளில் முடங்கியிருந்த நிலை மாறி ஒட்டுமொத்த தமிழிலக்கியம், தமிழ்மக்கள், தமிழ்த் தேசிய உணர்வு குறித்த ஒரு பார்வை விசாலிப்பதற்கும் அது வழிவகுத்தது". என்பார் அ. மார்க்ஸ். *(அ. மார்க்ஸ் 2006 : 10)*

அச்சு ஊடகத்தின் வரவு அறிவை ஜனநாயகப்படுத்தியது எனினும் காலனிய ஆட்சியின் கீழ் இருந்த சென்னை மாகாணத்தில் அச்சகங்களைத் தொடங்கும் உரிமை ஆங்கிலேயருக்கும் கிறித்துவச் சமயப் பணியாளர்களுக்கும் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. சென்னை மாகாணத்தின் முதல் இதழான *மெட்ராஸ் கூரியர்* (Madras Courier) என்ற வார இதழ் *12,* அக்டோபர் *1785*ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்த இதழைத் தொடங்கிய ரிச்சர்ட் ஜான்ஸ்டோன் அரசாங்க அச்சகத்தில் பணியாற்றிய ஆங்கிலேயர் என்பது மனங்கொள்ளத்தக்கது. இந்த இதழைத் தொடர்ந்து *ஹிர்காரா* (Hircarrah) *(1793) மெட்ராஸ் கெசட்* (Madras Gazette) *(1795), அரசாங்க கெசட்* (Government Gazette) *(1795), மெட்ராஸ் அட்வர்டைசர்* (Madras Advertiser) *இந்தியன் ஹெரால்ட்* (Indian Herald) *(1795)* ஆகிய பதினெட்டாம் நூற்றாண்டு இதழ்கள் அனைத்துமே ஆங்கிலேயர்களால் தொடங்கி நடத்தப்பட்ட ஆங்கில மொழி இதழ்களேயாகும் (K. Mohanram 2003 : 14).

சென்னையில் கிறித்துவச் சமயப் பணியாளர்களால் 1818ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை துண்டறிக்கைச் சங்கமே பின்னாளில் சென்னை பள்ளிப் பாடநூல் வட்டார மொழிகள் இலக்கியச் சங்கமாக மாற்றப்பட்டது. இந்த அமைப்பின் சார்பில் *தமிழ்மேகசின் (1831)* என்ற இதழ் வெளியிடப்பட்டது. இந்திய அளவில் சார்லஸ் மெட்காப்பின் ஆணையைத் தொடர்ந்து இந்தியர்களுக்கு அச்சகம் தொடங்க உரிமை வழங்கப்பட்டது. பின்னர் சென்னை மாகாணத்திலிருந்த பல மொழிப் பேசும் மக்கள் தங்கள் மொழி நூல்களையும் இதழ்களையும் அச்சிட அச்சகங்களைத் தொடங்கினர். இந்த அச்சகங்கள் மூலமாக ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டிருந்த தங்கள் தாய்மொழி இலக்கியங்களை நூல்களாக அச்சிட்டனர். கிறித்துவர்களைப் போல தங்களது சமயக் கருத்துக்களைப் பரப்ப நூல்களையும் இதழ்களையும் அச்சிடும் முயற்சிகளில் சென்னை மாகாண இந்துக்களும், இஸ்லாமியர்களும், பௌத்தர்களும் (தாழ்த்தப்பட்ட மக்கள்) ஈடுபட்டனர்.

இக்காலகட்டத்தில் சென்னையில் செயல்பட்டு வந்த ஃபிரி சர்ச் மிஷன் (Free Chruch Mission) ரெவரண்ட் ஜெ. ஆண்டர்சன் என்ற கிறித்துவச் சமயப் பணியாளர் மூன்று பறையர் சாதியைச் சேர்ந்த மாணவர்களை 1838ஆம் ஆண்டு பள்ளியில் சேர்க்க அனுமதியளித்தார். இதற்கு அப்பள்ளியில் படித்த உயர் வகுப் பினரின் பெற்றோர் கடும் எதிர்ப்பு தெரிவித்தது மட்டுமல்லாது அம் மாணவர்களைப் பள்ளியிலிருந்து வெளியேற்றக் கோரினர். ஆண்டர்சன் மறுக்கவே உயர்சாதியினர் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்திக் கொண்டனர். தொடர்ந்து 1841ஆம் ஆண்டு சென்னையைச் சேர்ந்த உயர்சாதி மாணவர்கள் சிலர் பெற்றோர் எதிர்ப்பையும் மீறி கிறித்துவச் சமயத்திற்கு மாறிய நிகழ்வும், மூன்றாண்டுக்குப் பிறகு சி. விஸ்வநாதன் என்ற உயர்சாதி மாணவனின் மதமாற்றமும் சென்னை மாகாணம் முழுவதும் இந்துக்களுக்கும் கிறித்துவச் சமயப்பணியாளர்களுக்கும் இடையே பெரும் மோதலை ஏற்படுத்தியது (K. Mohanram 2003 : 34).

இந்த முரண்பாடே சென்னை மாகாணத்தில் இந்துக்கள் பள்ளிகளைத் தொடங்குவதற்கும், வீபூதி சங்கங்கள், இந்து ஆதரவு இதழ்கள், நூல்கள் (கிறித்துவச் சமய எதிர்ப்பு நோக்கம் கொண்டவை) வெளிவருவதற்குக் காரணமாக அமைந்தது. கிறித்துவச் சமயப்பணியாளர்களின் செயலைக் கடுமையாகக் கண்டனம் செய்ய இந்துக்களின் சார்பாக சி. நாராயணசாமி நாயுடு 1840ஆம் ஆண்டு *நேடிவ் இன்டர்பெரட்டர்* (Native Interpreter) என்ற இதழைத் தொடங்கினார். இந்த இதழ் சென்னை மாகாணத்தில் செயல்பட்டு வந்த கிறித்துவச் சமயப் பணியாளர்

களைக் கடுமையாகக் கண்டித்தது. ஆண்டர்சன் 1841ஆம் ஆண்டு தொடங்கிய *நேடிவ் ஹெரால்ட்* (Native Herald) மத மாற்றத்தை ஆதரித்தது. இந்த இரு இதழ்களுக்கானக் கருத்து மோதல் நடைபெற்று வந்த காலகட்டத்தில் காஜுலு லட்சுமி நரசு செட்டி சி. நாராயணசாமி நாயுடுவிடமிருந்து *நேடிவ் இன்டர்பெரட்டர்* இதழை 1844 ஆம் ஆண்டு விலைக்கு வாங்கி *கிரசண்ட்* (Cresant) எனப் பெயர் மாற்றம் செய்தார். தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் என மும் மொழிகளில் வெளிவந்த இந்த இதழின் ஆங்கிலப் பகுதியை எட்வர்ட் ஹார்லி என்ற ஓய்வுபெற்ற ஆங்கிலக் கடற்படை அதிகாரி கவனித்து வந்தார் (R. Sundaralingam 1974 : 38).

இந்திய மக்களின் குறைகளை அரசுக்குத் தெரிவிக்கவும், இதழ்கள் வாயிலாக இந்திய மக்களின் பொதுக்கருத்தை உருவாக்கவும் 1852ஆம் ஆண்டு சென்னை சுதேசிகள் சங்கம் (Madras Native Association) என்ற அமைப்பை காஜுலு தொடங்கி னார். இந்த அமைப்பு அவர் மறைந்த 1868ஆம் ஆண்டு வரை தொடர்ந்துச் செயல்பட்டு வந்தது. இந்த அமைப்பில் தொடக்க கால கட்டத்தில் அவரோடு உடனிருந்த சீனிவாசம்பிள்ளை அந்த அமைப்பிலிருந்து விலகி இந்து முற்போக்கு முன்னேற்றக் கழகம் (The Hindus Progressive Improvement Society) என்ற அமைப்பை 1852ஆம் ஆண்டு தொடங்கினார்.

இந்த அமைப்பு சாதிய ஏற்றத் தாழ்வுகளைக் களைவதற்கான செயல்திட்டங்களை வகுத்தது. மேலும் தாழ்த்தப்பட்டோருக்குக் கல்வி நிலையங்கள், வறுமை ஒழிப்பு, கைம்பெண் மறுமணத்திற்கு ஆதரவு என முற்போக்கானச் செயல்திட்டங்களைக் கொண்டி ருந்தது. சீனிவாசம் பிள்ளையின் எதிர்பாராத மறைவுக்குப் பின் 1853ஆம் ஆண்டு முதல் அவருடைய நண்பரான எம். வெங்கடராயலு இந்த அமைப்பைத் தொடர்ந்து 1863ஆம் ஆண்டு வரை நடத்தினார். இந்த அமைப்பின் சார்பில் *ரைசிங் சன்* (Rising sun) என்ற இதழ் 1853ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது (R. Sundaralingam 1974 : 51).

1857ஆம் ஆண்டு நடந்த சிப்பாய்க் கலகத்தின் தொடர்ச்சியாக இந்தியாவின் அனைத்து மாகாணங்களிலும் இதழ் உரிமை சட்டம் (Licencing Act 1857) நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் படி அச்சகங்களைத் தொடங்க விரும்புவர்கள் அரசின் அனுமதியைக் கட்டாயம் பெற வேண்டும். அடுத்த ஆண்டு இச்சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

திருநெல்வேலியில் 1858ஆம் ஆண்டு உயர்சாதியினரின் தெருவில் கிறித்துவர் பிணம் போனதால் ஏற்பட்ட கலகத்தின்

போது அரசைக் கண்டித்து காஜுலு தலைமையில் திரண்ட இந்துப் பழமைவாதிகள் கூட்டத்தை எம். வெங்கடராயலு எதிர்த்தார். இவ்வாறாக இந்துப் பழமைவாதத்தின் பெயரால் அரசை எதிர்க்கும் குழுவும், சமூகச் சீர்திருத்ததை முன்னிறுத்தி இந்துப் பழமைவாதத்தை எதிர்க்கும் (காலனிய கிறித்துவச் சார்புடன்) குழுவுக்குமான மோதல் பின்னாளில் பார்ப்பனர் — பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு வித்திட்டது.

சென்னையில் தாழ்த்தப்பட்ட பிரிவினரில் பறையர் சாதியைச் சார்ந்த இதழாளர்களின் முயற்சியால் *மகாவிகடத் தூதன் (1866)*, *சூரியோதயம் (1869)*, *பஞ்சமன் (1870)*, *சுகிர்தவசனி (1877)* ஆகிய இதழ்கள் வெளியிடப்பட்டன. இந்தியாவின் பல மாகாணங்களில் பல்வேறு மொழிகளில் இதழ்களைத் தொடங்கிய இந்தியர்களின் பொதுக் கருத்துப் பரப்பலை முறியடிக்க 1878ஆம் ஆண்டு காலனிய அரசு வட்டாரமொழி இதழ்ச் சட்டத்தை (Vernacular Press Act) அறிமுகப்படுத்தியது. இந்தியாவெங்கும் நடைமுறைப்படுத்தப்பட்ட இச்சட்டம் சென்னை மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படவே இல்லை.

சென்னையில் இந்து சுயாக்கின சங்கம் (Hindu Freethought Union) என்ற அமைப்பின் சார்பில் 1882ஆம் ஆண்டு முதல் 1886ஆம் ஆண்டு வரை வாராந்திர ஆங்கிலோ திராவிட சுயாக்கின பத்திரிகை என்ற பெயரில் *தத்துவ விவேசினி* வார இதழாக அ. முனிசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது. இந்த இதழைப் போல *தி திங்கர்* (The Thinker) என்ற இதழ் A crusade Against Superstition, Custom, Poverty and Prosititution என்ற முழக்கத்துடன் வெளிவந்தது. ஐரோப்பிய அறிவொளிவாத நாத்திகக் கருத்துக்களை வெளியிட்ட *தத்துவ விவேசினி* இந்து மதத்தின் மூட நம்பிக்கைகளையும் சாதி அமைப்பையும் கடுமையாகச் சாடியது. பெண்ணடிமை எதிர்ப்பு, தாழ்த்தப்பட்டோர் கல்வி, பார்ப்பனரல்லாதாரின் துயரங்களை வெளியிட்ட இந்த இதழை நடத்திய இந்து சுயாக்கின சங்கம் வெளியிட்ட நூல் ஒன்றை மறுவெளியீடு செய்ய தந்தை பெரியார் 1930ஆம் ஆண்டு முயற்சி மேற்கொண்டார் (வே. ஆனைமுத்து 1993:9). *ரைசிங் சன்* (Rising Sun) இதழ் 1853ஆம் ஆண்டு முதல் 1863 வரை வெளிவந்துள்ளது. இந்த இதழ் கிடைக்காததால் அந்த இதழின் கருத்தியல் பின்புலத்தை அறிய இயலவில்லை. *தத்துவ விவேசினியின் (1886)* 60 வார இதழ்களைப் பார்வையிட்ட போது பார்ப்பனரல்லாத அறிவு மரபின் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட அறிவாளர்களின் அறிவுச் செயல்பாடுகள் ஆவணப்படுத்தப்படாமையால் திராவிடக் கருத்தியல் உருவாக்கத்தில் வேளாளர்களே பங்குபெற்றனர்

என்ற தவறான கருத்து தமிழ் ஆய்வுலகில் நிலைபெற்றது.* *தத்துவவிவேசினி* இதழ் மூடநம்பிக்கை எதிர்ப்பு, மத எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, பெண் கல்வி, ஆதிதிராவிடர் நலம் தொடர்பான பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளது.

சென்னை மாகாணத்தில் இந்தியத் தேசியக் கருத்தியலுக்கு ஆதரவான *கிரசண்ட்* இதழ் வெளிவரத் தொடங்கிய 1843 ஆண்டு முதல் *தத்துவவிவேசினி* இதழ் நிறுத்தப்பட்ட கால கட்டமான 1886ஆம் ஆண்டுவரை *திராவிட தீபிகை* (1847), *சங்கமம்* (1870) *வெற்றிக்கொடியோன்* (1874), *திருவாங்கூர் அபிமானி* (1874), *தியாகநாடு* (1874) *சென்னை நியாய போதினி* (1875), *திராவிடவர்த்தமானி* (1882) ஆகிய இதழ்கள் வெளிவந்ததாக அறியமுடிகிறது (க. திருநாவுக்கரசு 1998:7). இந்த இதழ்களைத் திராவிடர் இயக்கத்தின் முன்னோடி இதழ்கள் எனக் குறிப்பிடும் திராவிடர் இயக்க ஆய்வாளர் க. திருநாவுக்கரசு எந்தவிதச் சான்றுகளையும் தரவில்லை.

மேலே எடுத்துக்காட்டப்பட்ட இதழ்களில் "*திருவாங்கூர் அபிமானி* பிற்பட்ட மக்களின் தூணாக விளங்கியது அரசியல் பொருளாதார மறுமலர்ச்சிக்குப் போராடியது" என்ற தகவலையும், *வெற்றிக்கொடியோன்* இதழின் ஆசிரியர் த. மெய்யப்பன் என்பதையும் அ.மா.சாமி பதிவு செய்துள்ளார் (அ.மா.சாமி 1992 : 96). சென்னையில் 1871ஆம் ஆண்டுக்கு பிறகு தாழ்த்தப் பட்டோரால் தொடங்கப்பெற்ற *திராவிடமித்திரன்,* (1885) *திராவிடபாண்டியன்* (1885) ஆகிய இதழ்கள் வெளிவந்தன. ரெவண்ட் ஜான்ரத்தினம் என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவரால் *திராவிடபாண்டியன்* இதழ் தொடங்கப் பெற்றது. இந்த இதழ்க் குழுவில் பண்டித அயோத்திதாசரும் பணி யாற்றியதாக குறிப்புக்கள் கிடைத்துள்ளன. சில ஆண்டுகள் வெளிவந்து நின்றுவிட்ட இந்த இதழ்தான் '*திராவிடன்*' எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டு நீதிக்கட்சியின் அதிகாரபூர்வ இதழாக வெளிவந்தது என்ற கருத்தும் உள்ளது (எக்ஸ்ரே கருணாகரன் 1992:189).

சென்னையில் இந்தியத் தேசியக் கருத்தியலுக்குச் சார்பாளர் களான ஜி. சுப்பிரமணிய ஐயர், சேலம் விஜயராகவாச்சாரியர் உதவியுடன் தி இந்து (*The Hindu*) வாரஇதழை வெளியிடத்

---

* இக்கருதுகோளை ஆராய்ந்த ஆ.இரா.வேங்கடாசலபதி திராவிட இயக்கத்துக்கும் வேளாளர் இயக்கத்துக்கும் பின்னாளில் ஏற்பட்ட முரண்பாட்டை அரிய ஆவணங்களுடன் முன்வைத்து இக்கருத்தை மறுதலித்துள்ளார்.

திட்டமிட்டார். 1878ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் *இந்து* ஆங்கில இதழ் வாரஇதழாக வெளிவந்தது. வாரஇதழாகத் தொடங்கப்பெற்ற இந்த இதழுக்கு கிடைத்த வரவேற்பினைத் தொடர்ந்து 1883ஆம் ஆண்டுமுதல் வாரம் மும்முறை இதழாகவும், 1889ஆம் ஆண்டுமுதல் நாளிதழாகவும் வெளிவந்தது. இந்து இதழைத் தொடங்கி நடத்தி வந்த ஜி.சுப்பிரமணிய அய்யர் *சுதேசமித்திரன்* என்ற தமிழ் வாரஇதழை 1882 மார்ச்சு மாதம் தொடங்கினார். வாரஇதழாக வெளிவந்த இந்த இதழ் 1897 முதல் வாரம் மும்முறையாகவும், 1899ஆம் ஆண்டுமுதல் நாளிதழாக வும் வெளிவந்தது. இந்த இரண்டு இதழ்களும் சென்னை மாகாணத் தில் இந்தியத் தேசியக் கருத்தியல் வளர்ச்சிக்குத் துணை நின்றன.

திராவிட பாண்டியன் இதழைத் தொடர்ந்து *திராவிட ரஞ்சனி* (1886) *திராவிட மஞ்சரி* (1893), *விகட தூதன்* (1897) ஆகிய இதழ்களைப் பார்ப்பனரல்லாதார் வெளியிட்டதாக அறிய முடிகிறது. சென்னை மாகாணத்தில் வாழ்ந்துவந்த தாழ்த்தப்பட்டப் பிரிவினரில் ஒரு பிரிவினரான பறையர் சாதியினரால் 1892ஆம் ஆண்டு சென்னை ஆதிதிராவிடர் மகாஜனசபை என்ற அமைப்பு தொடங்கப்பெற்றது. இந்த அமைப்புக்கு மாகாணம் முழுவதும் கிளைகள் ஏற்படுத்தப்பட்டன.

அயோத்திதாசரின் உறவினரான இரெட்டமலை சீனிவாசன் 1894ஆம் ஆண்டு *பறையன்* என்ற இதழைத் தொடங்கி நடத்தினார். சென்னை மாகாண தாழ்த்தப்பட்ட மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது இந்த இதழ். இதே காலக்கட்டத்தில் சென்னையிலிருந்து இந்திய தேசியக் கருத்தியலுக்குச் சார்பான *சுதேசமித்திரன்* இதழ் அலுவலகத்தில் *பறையன்* இதழுக்குக் கிடைத்த 'வரவேற்பை' தொழிற்சங்கத் தலைவர் செ.கா. மாதவனின் கருத்தின் அடிப்படையில் க. திருநாவுக்கரசு தம் நூலில் பதிவு செய்துள்ளார்.

> "*பறையன்* ஏடு தொடங்கப்பட்டு முதல் இதழ் வெளியிடப்பட்டு அதன் பிரதி ஒன்று திறனாய்விற்காய் *சுதேசமித்திரன்* பத்திரிக்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அப்போது அப்பத்திரிகை யின் ஆசிரியராக சி.ஆர். நரசிம்மன் இருந்தார். அவரது மேசையின்மேல் திறனாய்விற்காக அனுப்பப் பட்டிருந்த *பறையன்* பத்திரிக்கையும் இருந்தது. அதனை அவர் கையில் எடுத்துப்பார்க்காமல் தொட்டு எழுதும் கட்டைப் பேனாவைக் குச்சிப்போல பிடித்து அதனைக்கொண்டு புரட்டிப் பார்த்தாராம்" (க. திருநாவுக்கரசு 1993 : 130).

மேலும் பார்ப்பனரல்லாத இதழாளர்கள் மீது பார்ப்பனீய இதழாளர்களும், அவர்களுடைய சார்பாளர்களும் கொண்டிருந்த கருத்தை,

> "*சுதேசமித்திரன்* தொடங்கிய பின்னரும் முன்னருமாக வேறு எத்தனையோ தமிழ்ப் பத்திரிக்கைகள் தோன்றித் தோன்றி மறைந்திருப்பினும் அவற்றுள் ஒன்றேனும் உண்மை லக்ஷணங்களோடிருப்பதால் நினைக்க எனக்குப் பிரியமில்லை. பத்திரிக்கையின் நோக்கமும் பொறுப்புமின்னாதாவென்றுனராத அதிசாதாரண மனிதர்கள் கூட பத்திராதிபத்திய தொழிலில் பிரவேசித்து விட்டார்கள் ..." *(குருமலை சுந்தரம்பிள்ளை 1907 : 111)*

என்பதால் அறிகிறோம். அறிவுப் பரப்பலைப் பல நூற்றாண்டுகளாகத் தடை செய்து வந்த பார்ப்பனர்களுக்கு எதிராகப் பார்ப்பனரல்லாதார் கல்வி கற்று இதழ்களை நடத்தும் அளவிற்கு அறிவு வளர்ச்சிப் பெற்றதைப் பொறுக்க முடியாத *சுதேசமித்திரன்* இதழ் இவ்வாறு ஓலமிட்டது.

மேலும், சென்னை மாகாணத்தில் பத்திரிக்கைத் தொழில் பெருமையும் மக்கள் ஆதரவையும் பெற இயலாமைக்கு *அதிசாதாரண மனிதர்கள் தான்* (அழுத்தம் ஆசிரியருடையது) காரணம் என்று விளக்கும் குருமலை சுந்தரம்பிள்ளையின் கருத்து வருமாறு:

> "நமது சென்னை மாகாணத்தில் *சுதேசமித்திரன்* பத்திரிகையும் அதைப் பின்பற்றி சமீப காலத்தில் தோன்றி நடைபெறும் வேறுசில வாரபத்திரிக்கைகளும் தவிர மற்ற பத்திரிக்கைகளெல்லாம் பத்திராதிபத்திய தொழிலில் இயல்பறியாத அதிசாதாரண மனிதர்களால் நடத்தப்பட்டு வந்தனவென்பதும் அப்படிப் பட்டவர்களின் சேர்க்கையாலேயே நமது மாகாணத்தில் பத்திரிக்கைத் தொழில் என்பது அவ்வளவு பெருமையும் பொதுஜன மதிப்பையும் பெறவில்லை என்பதுமே எனது மனப்பூர்வமான அபிப்பிராயம்" *(குருமலை சுந்தரம்பிள்ளை 1907 : 114).*

சுதேசமித்திரன் இதழில் துணையாசிரியராக இருந்த குருமலை சுந்தரம்பிள்ளை 'அதிசாதாரணர்கள்' இதழியல் துறைக்கு வந்துவிட்டதால்தான் இதழியல் தொழிலுக்குப் பெருமை ஏற்படவில்லை என்று கூறியுள்ள கருத்து பார்ப்பனீயச் சார்புக் கருத்தியலே என்பது வெளிப்படை. மேலும் *பறையன்* என்ற

பெயரில் இதழை நடத்திவந்த இரெட்டைமலை சீனிவாசன் மீது அவதூறு வழக்குகளும் பொய்வழக்குகளும் போடப்பட்டன. சொந்தசாதி மக்களைத் தூண்டிவிட்டு அவர்மீது வழக்குப் போடப்பட்டது மட்டுமல்லாது செய்தி வெளியிட்ட குற்றத்துக்காக சென்னை நீதிமன்றம் ரூபாய் நூறு அபராதமாக விதித்தது (தலித்: மே – ஜூலை 2002:47–49).

இதழ் தொடங்கிய ஆண்டு 1893 அக்டோபரில் மாதஇதழாக நான்கு பக்கங்களுடன் வெளிவந்த *பறையன்* இதழ் மூன்று மாதங்களுக்குப் பிறகு வாரஇதழாக இரெட்டைமலை சீனிவாசன் 1900ஆம் ஆண்டு வெளிநாடு செல்லும் வரை ஏழு ஆண்டுகள் வெளிவந்தது. இந்த இதழ் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையை முன்னிறுத்தியது. பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ் கட்சியில் புறக்கணிக்கப்படுவதை ஜூலை 6, 1895ஆம் ஆண்டு *பறையன்* இதழ் 'பார்ப்பன காங்கிரஸ்' என்ற தலைப்பில் கண்டித்துள்ளது.

பறையன் இதழ் இந்திய தேசியக் காங்கிரசைக் கடுமையாக எதிர்த்து எழுதியது. அன்றைய காங்கிரஸ் கட்சி பார்ப்பனர்கள் பிடியிலே இருந்ததை கண்டிக்கும்போது

> "பார்ப்பார் நிறைந்த கூட்டத்தில் செய்யும் தீர்மானங்கள் ஒவ்வொன்றும் பார்ப்பாருக்கு இசைந்ததாக இருக்குமே யன்றி, இதர ஜாதியினருக்கு நன்மை உண்டாக்குவதாகவும், பார்ப்பாருக்கு கெடுதி உண்டாக்குவதாக்குவதுமான தீர்மானம் எவ்விதத் திலும் செய்யப்படாது. வேளாண்மைத் தொழிற் செய்யும் கோவறுத்த ஜாதியாராகிய பறையர் முதலானவரும் வியாபாரிகளுக்கும் அச்சபை நன்மை தரக்கூடாததாய் இருப்பதால் அப்பாப்பாரக் காங்கிரஸ் பறையராகி நம்மவர்க்கு யாதுபயனையுந் தராது" (பெ.சு.மணி 2007:70)

என அறிவுறுத்தியது.

காலனி அரசின் உயர் பதவிகளை பெறுவதற்காக ஐ.சி.எஸ். தேர்வை இந்தியாவிலும், இங்கிலாந்திலும் நடத்த வேண்டும் என இந்திய தேசியக் கருத்தாளர்கள் வேண்டுகோள் வைத்தனர். இதற்கு சென்னை மாகாண பறையர் சமூகத்தினர் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தனர். இந்தச் சமூகத்தைச் சார்ந்த 3412 உறுப்பினர்கள் தங்கள் கைப்பட எழுதிய கையெழுத்திட்ட மனுவை தளபதி செஸ்னி (General Chesney) மூலமாக பிரிட்டிஷ் பாராளுமன்றத் திற்குக் கோரிக்கை விடுத்தனர். சென்னை மாகாண பார்ப்பனர் களின் திட்டத்தை *பறையன்* இதழ்

> "இந்து அரசர்கள் ஆண்டபோது அவர்களின் ஆட்சியில் பிராமணர்கள் உயர்ந்த பதவிகளைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியிலும் இந்த உயர்நிலையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் பிராமணர்கள் இத்தகைய தந்திரங்களைக் கையாண்டு வருகிறார்கள்... மற்ற சமூகத்தினர் யாவரும் இப்பொழுதுதான் உயர்க் கல்வியின் பலன்களை அனுபவிக்கத் தொடங்கியுள்ளார்கள்; இன்னும் சிறிது காலத்திற்குள் இச் சமூகத்தினர் உயர்நிலையை எட்டி, பிராமணர்களின் பதவிகளையெல்லாம் பிடித்துக் கொண்டு விடுவார்கள் என்று பிராமணசமூகத்தினர் அஞ்சுகின்றார்கள். அதனால்தான் கீழ்ச்சாதி மக்கள் உயர்ப் பதவிகளை அடைய தகுதிகளையெல்லாம் பெறுவதற்கு முன்பாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அந்த உயர்ப் பதவிகளையெல்லாம் தங்களுடைய ஏகபோகமாகக் ஆக்கிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில் ஐ.சி.எஸ். தேர்வுகளை ஒரே சமயத்தில் இருநாடுகளிலும் நடத்த வேண்டுமென பிராமணர்கள் கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள்"
>
> *(மேற்கோள். டி. சதாசிவன் 1983:110)*

என அம்பலப்படுத்தியுள்ளது. மேலும் காங்கிரசைப் புறக்கணிக்க வேண்டும் என்பதை 'காங்கிரஸ் சந்தாவாக ஒரு பைசா கூட தராதீர்கள். காங்கிரசிற்கு உதவி செய்தால் அது பாம்பிற்குப் பால் வார்ப்பதாகும்' என அறிவுறுத்தியுள்ளது. இந்த இதழைத் தொடர்ந்து *திராவிடவாணி (1895) திராவிட கோகிலம்* ஆகிய திராவிடர் இயக்க முன்னோடி இதழ்கள் வெளிவந்துள்ளன. இதே காலக்கட்டத்தில் *இல்லற ஒழுக்கம் (1899), பூலோக வியாஜன் (1900)* முதலிய தாழ்த்தப்பட்டோர் சார்பு இதழ்கள் வெளிவந்தன.

காங்கிரஸ் கட்சியின் மாநாடு மகாராஷ்ட்டிர மாநிலத்திலுள்ள அமராவதி நகரில் நடந்தபோது சி. சங்கரநாயர் தலைமை உரையாற்றிய போது 'சாதிக்கொடுமைகள் ஒழிப்பு, பெண்களுக்கும் தாழ்த்தப் பட்டவர்களுக்கும் கல்வியும், உரிமையும் வழங்க வேண்டும் எனவும் இதற்கு ஒரு சமயசார்பற்ற அரசு வேண்டும்' எனவும் வற்புறுத்தினார் *(க. நெடுஞ்செழியன் 1996 : 164–165).*

காங்கிரஸ் மாநாட்டில் தலைமையுரையாற்றிய சி. சங்கரன்நாயர் போன்ற மிகப் பெரிய தலைவர்கள் கூட பார்ப்பனர்களால் சாதியின் பெயரால் அவமானப்படுத்தப் பட்டனர். இதனை

> “காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக நாங்கள் வடக்கே பிரயாணம் செய்யும்போது எங்களுடைய பிராமண நண்பர்கள் உணவு அருந்தும் போது மிகவும் வெளிப்படையாக எங்களை ஒதுக்கிவிடுவார்கள். வடக்கேயுள்ள பிராமணர்கள் மிகவும் தாழ்ந்த சாதியினரைத்தான் இப்படி நடத்துவது வழக்கம். அவர்கள் (எங்களுடைய பிராமண நண்பர்கள்) நாங்கள் சூத்திரர்கள் – என்றும் எங்களிடம் கூறுவார்கள். வட இந்தியாவில் சூத்திரர் என்பது ஒரு தாழ்ந்த சாதியைக் குறிக்கும். நாங்களோ இந்த மாகாணத்தில் ஆளும் இனத்தைச் சேர்ந்தவர்கள் எங்களுக்கு இது எரிச்சலைத் தந்தது. இருந்தாலும் நாங்கள் ஒரு சண்டையை உருவாக்க விரும்பவில்லை. நாங்கள் காங்கிரசை விட்டு ஒதுங்கி இருந்தோம்.”
>
> (முரசொலி மாறன் 1991:68)

என கே.பி.எஸ். மேனன் எழுதிய நூலை மேற்கோளாகக் காட்டுவார் முரசொலி மாறன். மேலும் “இந்திய தேசியக் காங்கிரஸ் பார்ப்பனர் நலன்களையே முன்னிறுத்துகிறது என்ற ஒட்டுமொத்தக் கருத்து எழுந்தது. இதன் விளைவாக பார்ப்பனரல்லாதார் தாழ்த்தப்பட்டவர் ஒருபுறமும் மறுபுறம் பார்ப்பனர்கள் என்ற அணி திரட்சியே 1916—1929 காலக்கட்ட பார்ப்பானரல்லாதார் அரசியலுக்கு அடித்தளமிட்டது” என இர்சிக் கருத்துரைப்பார் (Irshick 1969 : 21). *திராவிட தீபம்* என்ற இதழை ஜெ. பக்தவச்சலம் 1906ஆம் ஆண்டு தொடங்கினார். இந்த இதழ் 1910ஆம் ஆண்டுவரை நான்காண்டுகள் தொடர்ந்து வெளிவந்தது. *ஆன்றோர் மித்திரன்* என்ற தாழ்த்தப்பட்டோர் சார்பு இதழ் 1910ஆம் ஆண்டு வெளிவந்தது.

இந்தியாவின் பல பகுதிகளில் சுதேசி இயக்கத்தின் கருத்துக்கள் தீவிரமாகப் பரவிய காலகட்டத்தில் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா முதலியோர் அந்த இயக்கத்தைத் தமிழகத்தில் தலைமை தாங்கி வழிநடத்தினர். இக்காலக்கட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் மாவட்ட செஷன்ஸ் நீதிபதியாக பணியாற்றி வந்த கே. சீனிவாசராவ் ‘பிராமணர், பிராமணரல்லாதார் பிளவுகள் மறையாதவரை ஜனநாயத்தைப் பரந்த அளவில் செயல்படுத்துவது ஆபத்தானது என The Present Political unrest in India என்ற தலைப்பிலான தன்னுடைய ஆங்கில நூலில் கருத்து தெரிவித்தார் (முரசொலி மாறன் 1996 : 62). இந்நூல் 1908ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இந்நூலினைத் தொடர்ந்து Crisis in India என்ற மற்றொரு நூலை வெளியிட்டார். இந்நூல் ராம்தாஸ் என்ற சென்னைவாசிக்கும், ஒரு ஆங்கிலேயருக்கும் நடக்கும் உரையாடல் வடிவில் சென்னை மாகாண அரசியலை விளக்குவது போல உருவாக்கப்பட்டிருந்தது. இந்நூலில் 'இந்தியன் என்ற சொல், ஓர் அர்த்தமற்ற சொல்' என நூலாசிரியர் குறிப்பிட்டார். சென்னை மாகாணத்தில் *1908*ஆம் ஆண்டு செய்தி இதழ் குற்றத்தூண்டல் தடுப்புச் சட்டம் (News Paper Incitement to Offence Act, 1908) நடைமுறைப் படுத்தப்பட்டது. இச்சட்டம் காலனிய அரசுக்கெதிராக கருத்துப் பரப்பல் மேற்கொள்ளும் இதழ்களின் பிணையத் தொகையை பறிக்கவும், அச்சு இயந்திரத்தைப் பறிக்க உதவும் கடுமையான விதிகளையும் உள்ளடக்கியிருந்தது.

இக்காலக்கட்டத்தில் தமிழ் பௌத்த சிந்தனைகளை முன்வைத்து அயோத்திதாச பண்டிதர் தமிழக தாழ்த்தப் பட்டோரின் விடுதலைக்காக *1907*ஆம் ஆண்டு *ஒரு பைசா தமிழன்* இதழைத் தொடங்கி *1914*ஆம் ஆண்டுவரை இந்திய தேசிய கருத்தியலையும், பார்ப்பனியத்தையும் கடுமையாகச் சாடி வந்தார். இக்காலக்கட்டத்தில் இசுலாமியத் தலைவர் ஆகாகான் தலைமையில் இசுலாமியர் தனி அரசியல் பிரதிநிதித்துவம் கோரினர். இக்காலக்கட்டத்தில் மிண்டோ மார்லிச் சீர்திருத்தங்கள் *1909*ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டன. இசுலாமியர்களுக்கு வழங்கப்பட்ட தனி வாக்காளர் தொகுதிகளும், தனித்த பிரதி நிதித்துவம் போன்றவை சென்னை மாகாண பார்ப்பன ரல்லாதாரிடமும், ஆங்கிலோ இந்தியர்களிடமும் தனிப் பிரதிநிதித்துவம் கோருவதற்கான எண்ணம் எழ விதை விதைத்தது.

திருநெல்வேலி மாவட்டத்தில் மணியாச்சி ரயில் நிலையத்தில் ஆஷ் துரையை *1911*ஆம் ஆண்டு ஜூன் *17*ஆம் நாள் வாஞ்சிநாதன் என்ற பார்ப்பன இளைஞன் சுட்டுக்கொன்று விட்டு, தானும் தற்கொலை செய்து கொண்டான். இதுபற்றி கருத்து தெரிவிக்கும் பண்டித அயோத்திதாசர்

> "பிரிட்டிஷ் அரசாட்சியோரைச் சொற்ப பயமுறுத்தியதால் பெரிய உத்தியோகங்களை நமக்கு கொடுத்துக் கொண்டு வருகின்றார்கள். இன்னும் பயமுறுத்தினால் ராஜாங்கத்தையே நம்மவர்களிடம் ஒப்படைத்துவிட்டு போய்விடுவார்களென்றும் ஓர் அவாக்கொண்டே இக்கொலையை நிறைவேற்றி இருப்பானென்றும் விளங்குகின்றது"
>
> *(ஞான. அலாய்சியஸ் 1998:363)*

என்பார். காலனிய அரசை அகற்றிவிட்டு மறுபடியும் மனுதர்ம சார்பு இந்தியத் தேசிய அரசை உருவாக்க வேண்டும் என்ற முனைப்புடன் இந்தியாவெங்கும் வாஞ்சிநாதன் போன்ற தீவிரவாத இளைஞர்கள் செயல்பட்டனர்.

சென்னை மாகாண காங்கிரஸ் கட்சி மிதவாத பிரிவு என்றும் தீவிரவாதப் பிரிவு என்றும் இரு பிரிவுகளாகப் பிரிந்து நின்றபோது இங்கிலாந்திலிருந்து வருகைதந்த அன்னிபெசண்ட் அம்மையார் இந்த இருபிரிவினரையும் சமாதானப்படுத்திக் காங்கிரசைக் கைப்பற்ற முயன்று தோற்றார். அவர் *நியூ இந்தியா* என்ற ஆங்கில இதழை 1914ஆம் ஆண்டு தொடங்கினார்.

1914ஆம் ஆண்டு முதல் 1918ஆம் ஆண்டுவரை நடைபெற்ற முதலாவது உலகப்போருக்குப் பின் இந்தியர்களுக்கு அதிக அதிகாரங்களைத் தர காலனிய அரசு முடிவெடுத்தது. இக்காலக் கட்டத்தில் சென்னை மாகாண பார்ப்பனரல்லாதாரின் குரலை வெளிப்படுத்த திராவிட சங்கம் (Dravidian Association) என்ற அமைப்பு 1912ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இச்சங்கம் சென்னை மாகாண பார்ப்பனரல்லாதாரின் நிலையைக் குறித்து *பிராமணரல்லாதார் கடிதங்கள்* (Non-Brahmin Letters) என்ற தலைப்பிலான நூலை எஸ்.என்.கே. என்ற புனைப்பெயரில் 1915ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. சி.சங்கரன் நாயர் எழுதிய மற்றொரு நூலான *டிரவிடியன் வொர்த்தீஸ்* (Dravidian worthis) என்ற நூலை சி. கருணாகரமேனன் 1915ஆம் ஆண்டு வெளியிட்டார்.

தென்னிந்திய மக்கள் சங்கம் (South Indian People Assosiation-SIPA) *ஜஸ்டிஸ்* இதழைத் தொடங்குவதற்கு முன்பாக *Non Brahmin* என்ற ஆங்கில வார இதழ் வெளிவந்துள்ளது. இந்த இதழைப் பற்றியக் குறிப்புக்களை இர்சிக் (1969), சரோஜா பிரபாகரன் (1989), பு. இராசதுரை (1991) ஆகியோர் சென்னை மாகாண நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போட்டிலிருந்து பயன்படுத்தியுள்ளனர். இந்த இதழ் சி. சாரங்கபாணி முதலியார் என்பவரின் ஆசிரியர் பொறுப்பில் வெளிவந்துள்ளது. இவர் ஹோம்ரூல் இயக்கத்தின் அன்னிபெசன்ட் மற்றும் அவருடைய பார்ப்பன ஆதரவாளர்களை எதிர்த்து இவ்விதழில் தொடர்ந்து எழுதி வந்துள்ளார். *Non Brahmin* இதழின் தோற்றம், வளர்ச்சி ஆகியவை விரிவான ஆய்வுக்குரியவை.

இந்த இதழைப் பற்றி 1916 நவம்பர் 26 நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்டில்

> "பிராமணரல்லாதாரின் ஒற்றுமைக்காக முதற் குரல் கொடுத்த இதழ் இதுவே. நீதிக்கட்சியின் *ஜஸ்டிஸ்*

நாளேடு தோன்றுவதற்கு முன்பு *நான் பிராமின்* வெளிவந்ததால் குரல் கொடுத்த முதல் இதழ்' என குறிப்பிடப்பட்டுள்ளது" (பெ.சு. மணி 2007:109)

ஏறக்குறைய ஓராண்டு 17.12.1917 வரை நேடிவ் நீயுஸ் பேப்பர் அறிக்கையில் *நான்பிராமின்* இதழைப் பற்றிய செய்திகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. எனவே இந்த இதழ் ஓராண்டு வெளிவந்துள்ளது என்ற முடிவுக்கு வரலாம். மேலும் *'நான் பிராமின்'* இதழ் *ஜஸ்டிஸ்* இதழ் விரைவில் வெளிவர இருப்பதை அறிவித்துள்ளது.

"பார்ப்பனரல்லாத சமுதாயங்களின் குரல் கேட்கத் தொடங்கிவிட்டது. மஹாத்மாக்கள் சிலருக்கு மட்டுமேயாக எழுதத் தொடங்கி விட்டார்கள். *நியூ இந்தியா* தன் கலைந்த கூந்தலுடன் அலறத் தொடங்கி விட்டது. ஏனென்றால் வெகு விரைவில் *ஜஸ்டிஸ்* பத்திரிகை தோன்றப்போகிறது என 14.10.1917 நாளிட்ட நான்பிராமின் அறிவித்துள்ளது"

(மேற்கோள் பு. இராஜதுரை 1991 : 29).

அன்னிபெசன்டின் ஹோம்ரூல் இயக்கம் (Home rule League) 1915ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பார்ப்பனரல்லாத தலைவர்களான பிட்டி. தியாகராயர், டாக்டர் டி. மாதவன் நாயர் ஆகியோரால் நவம்பர் 20, 1916ஆம் ஆண்டு தென்னிந்திய மக்கள் சங்கம் (South Indian People Assosition- SIPA) என்ற கூட்டுக்குழுமம் (Joint Stock Company) தொடங்கப்பட்டது. இந்த அமைப்பின் சார்பில் *ஜஸ்டிஸ்* (ஆங்கிலம்), *திராவிடன்* (தமிழ்), *ஆந்திரப்பிரகாசிகா* (தெலுங்கு) இதழ்கள் வெளியிட திட்டமிடப் பட்டது. இந்த அமைப்பு தொடங்கப்பட்ட ஒரு மாதம் கழித்து பார்ப்பனரல்லாதார் கொள்கையறிக்கையை டிசம்பர் 20, 1916ஆம் ஆண்டு பிட்டி. தியாகராயர் வெளியிட்டார். அன்றைய தினம் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Fedaration - SILF) என்ற அமைப்பு தொடங்கப் பெற்றது.

நீதிக்கட்சியின் *ஜஸ்டிஸ்* ஆங்கில இதழ் டி.எம். நாயரை ஆசிரியர் பொறுப்பில் 26.02.1917 முதல் வெளிவந்தது.

ஜஸ்டிஸ் இதழைத் தொடங்குவதற்கு முன்பாகவே அந்த இதழை நிறுத்த அன்னிபெசன்ட் தலைமையிலான குழுவினர் முயற்சி மேற்கொண்டதையும் அந்த முயற்சியால் கலக்கமடையாத டி.எம்.நாயர் தாமே *ஜஸ்டிஸ்* இதழின் ஆசிரியர் பொறுப்பேற்றதை

"*ஜஸ்டிஸ்* ஆசிரியர் பதவிக்குக் காலஞ்சென்ற திவான்பகதூர் கருணாகர மேனனை அழைக்க நமது

தலைவர்கள் முயற்சி செய்தார்கள். அவரும் ஒருவாரு இசைந்தார். ஆனால் டாக்டர் பெசன்ட் அம்மையாரும், சி.பி. இராமசாமி அய்யரும் திவான்பகதூர் கே.கேசவப்பிள்ளையும் குறுக்கிட்டு தடுத்து விட்டார் கள். *ஜஸ்டிஸ்* வெளிவருவதைக் குறிக்கப் பட்டிருந்த தினத்துக்கு 6 நாட்களுக்கு முன் தம்மால் *ஜஸ்டிஸ்* ஆசிரியர் பதவியை ஒப்புக்கொள்ள முடியாதென்று திவான்பகதூர் கருணாகர மேனன் தெரிவித்து விட்டார். அக்காலத்திலே பத்திரிக்கைத் தொழில் அநுபவம் வாய்ந்த பிராமணரல்லாத படிப்பாளிகள் அதிகமில்லை..."

(பண்டித எஸ். முத்துசாமிப்பிள்ளை 1992:23)

இதன்பிறகு டி.எம். நாயரே இந்த இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இந்த இதழுக்கு *மதராஸ் ஸ்டாண்டர்டு* இதழில் பணிபுரிந்த அனுபவம் மிக்க பி.என்.ராமன் பிள்ளையும் தமிழறிஞர் எம்.எஸ். பூர்ணலிங்கம்பிள்ளையும் துணையாசிரியர்களாக பணியேற்றனர். தெலுங்கு நாளிதழான *ஆந்திரபிரகாசிகா*விற்கு ஏ.சி. பார்த்தசாரதி நாயுடு ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். இந்த இதழில் ராகவையா நாயுடுவும், நரசிம்மராவ் நாயுடுவும் துணையாசிரியர்களாகப் பணியாற்றினர்.

திராவிடன் இதழின் ஆசிரியர் பொறுப்பை பக்தவச்சலம் பிள்ளை ஏற்றார் சுவாமி ருத்ரகோடீசுவரரும், பண்டித வில்வபதி செட்டியாரும் துணையாசிரியர்களாகப் பணியாற்றினர்.

நீதிக்கட்சியின் தமிழ் நாளிதழான திராவிடன் 1.06.1917 முதல் வெளிவரத் தொடங்கியது. இந்த இதழின் பெயர் காரணத்தைப் பற்றிய பண்டித எஸ்.எஸ். அருணகிரிநாதரின் கருத்து வருமாறு:

"சுமார் இரண்டு மூன்று நாட்கள் டாக்டர் நாயரும் மற்ற தலைவர்களும் கூடி யோசித்த பின்னரே தமிழ் நாளிதழுக்கு *திராவிடன்* என்று பெயர் சூட்டப்பட்டது. பிராமணரல்லாதாராகிய எல்லா சாதி வகுப்பாரையும் ஒரே குறியீட்டுப் பெயரால் அழைத்து வரும்படியான வழக்கம் ஏற்பட வேண்டும். அக்குறியீட்டுப் பெயரால் அவர்களிடையே இன உணர்ச்சி எழுப்பிவிட வேண்டும் என்ற விருப்பம் எல்லோருடைய பேச்சிலும் தெரிவிக்கப்பட்டது இவ்விருப்பத்திற்கு ஏற்ப ஆலோசித்து பார்த்தபோது *'திராவிடன்'* என்ற சொல்லே தமிழ் நாளிதழுக்கு முடிவு செய்யப்பட்டது"

(கோ. குமாரசாமி 1985).

அந்த அமைப்பு நடத்தி வந்த ஜஸ்டிஸ் இதழின் பெயரே அந்த அமைப்பின் பெயராக ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ் பார்ட்டி, தமிழில் நீதிக்கட்சி எனவும் வழங்கப்பட்டது.

மகாகவி பாரதியார் *ஜஸ்டிஸ்* இதழை "ஸ்வதேச விரோதிகளின் முக்கியக் கருவி" என்ற ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். காற்றை விதைத்து 'புயற்காற்றை அறுப்பது என்ற *சுதேசமித்திரன்* கட்டுரையில் (22.11.1920) இக் கருத்தை தெரிவித்துள்ளார் (பெ.சு.மணி 2007:223). மேலும் *ஜஸ்டிஸ்* இதழைக் கண்டித்து 10.2.1921 *சுதேசமித்திரன்* இதழில் பாரதி எழுதியுள்ளார்.

நீதிக்கட்சி இதழ்களை அன்னிபெசன்டின் *'நியு இந்தியா', இந்து, சுதேசமித்திரன், லோபாகாரி* ஆகிய இதழ்கள் கடுமையாகத் தாக்கி எழுதிவந்தன. நீதிக்கட்சியின் பார்ப்பனரல்லாதோர் எழுச்சியை அடக்க சென்னை மாகாணச் சங்கம் என்ற போட்டி பார்ப்பனரல்லாத அமைப்பு (29.9.1917) தொடங்கப்பெற்றது அந்த அமைப்பின் கருத்துக்களைப் பரப்புரை மேற்கொள்ள *'தேசபக்தன்'* இதழ் (07.12.1917) தொடங்கப்பெற்றது. இந்த இதழின் ஆசிரியப் பொறுப்பை ஏற்ற திரு.வி.க,

> "அக்கட்சி *(ஜஸ்டிஸ்)* பத்திரிகைகள் சென்னை மாகாணச் சங்கத்தைக் கண்டபடி தூற்றத் தொடங்கின. ஜஸ்டிஸ் கட்சியார் சென்னை மாகாணச் சங்கம் பிராமணர் ஏவுதலால், அவர்தம் அடிமைகளால் காணப்பட்டதென்று முழங்கினர். அதை மறுக்கத்தக்க தினப்பதிப்பு அப்பொழுதில்லை. அது தேசபக்தன் கருக்கொள்ளாத காலம்... பத்திரிக்கையைப் பற்றி சுப்பராய காமத்தும் யானும் பன்முறை சிந்திப்போம். தொடர்ந்து பத்திரிக்கைக்குரிய முயற்சி தொடங்கப் பட்டது"

என நீதிக்கட்சி எதிர்ப்புக்காகவே *தேசபக்தன்* இதழைத் தொடங்கியதாக குறிப்பிடுவார்.

நீதிக்கட்சியை எதிர்ப்பது ஒன்றையே நோக்கமாகக் கொண்டு ஒரு இதழ் தொடங்கப்பட்டது என்ற செய்தி சென்னை மாகாண அரசியலில் நீதிகட்சி பெற்றிருந்த செல்வாக்கையும், நீதிக்கட்சி இதழ்கள் ஏற்படுத்திய தாக்கத்தையும் மதிப்பிட உதவும். மேலும் நீதிக்கட்சியும் அக்கட்சித் தலைவர்களும் அன்றைய இதழ்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர் என்பதற்கு *லோபாகாரி* (03.06.1918) இதழின் பின்வரும் பகுதியே சான்று:

> "இந்திய சுவராஜ்யக் கட்சிக்கு விரோதமா யிருக்கும் டாக்டர் நாயரை இங்கிலாந்திற்கு செல்ல

கவர்மென்டார் அநுமதி கொடுத்தது அடாத செய்கையாகும். சுயராஜ்ய கட்சியினர் இங்கிலாந்துக்கும் செல்லவிருந்தது தடை செய்யப்பட்டது. டாக்டர் நாயர் தேக அசௌகரியத்தின் பொருட்டு இங்கிலாந்துக்குச் சென்றார் என்று *மதராஸ் மெயில்* பத்திரிக்கை கூறுகின்றது. தேகம் சுகத்திற்கன்றித் தேசத் துரோகஞ் செய்ய செல்கிறாரென்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. டாக்டர் நாயர் தேசத் துரோகமான காரியங்களைச் செய்ய இங்கிலாந்துக்கு செல்கின்றாராதலின் அவர் திரும்பி வருவது சந்தேகமேயாகும். தாம் பிறந்த தேசத்திற்குக் கேட்டைத் தரும் காரியங்களைச் செய்ய முற்படுவாருக்குக் கடவுள் சகாயஞ் செய்வாரா?"

(பெ.சு.மணி 1998 : 126)

உடல்நலம் குறைந்த நிலையிலும் கூட பார்ப்பனரல்லாத மக்களின் வகுப்புவாரி பிரதிநித்துவ உரிமைக்காக ரெட்டிநாயுடு உள்ளிட்ட நீதிக்கட்சித் தலைவர்களுடன் லண்டன் பயணம் மேற்கொள்ள முயன்ற மாபெரும் தலைவர் டி.எம்.நாயர் மரணமடைய வேண்டும் என்று எழுதிய *லோபாகாரி* இதழின் கொடூர மனம் இதன்மூலம் வெளிப்பட்டது.

நீதிக்கட்சியின் மூன்று இதழ்களின் சாதனைகளைக் கூறும்போது,

"அம் மூன்று பத்திரிக்கைகளும் சென்னை மாகாண மக்களைத் தட்டி எழுப்ப எவ்வளவோ பாடுபட்டன. நமது எதிரிகள் நம் கட்சி மீது கூறிய குற்றச்சாட்டு களுக்கு உடனுக்குடன் பதிலளித்து நமது எதிரிகள் வாயை அடைத்தன. நமது கட்சியார் 16 ஆண்டு காலம் மந்திரி பதவி வகித்ததற்கும் நமது மக்கள் அரசியல் உணர்ச்சிப் பெற்று சுதந்திரப் புத்தியுடன் நடக்க வந்ததற்கும் அப் பத்திரிக்கைகளின் உழைப்பே முக்கியக் காரணம்" என விளக்குவார் (பண்டித எஸ். முத்துசாமிபிள்ளை 1993:24).

"சென்னை மாகாணச் சங்கத்தின் ஆதரவாளராக இருந்த தந்தைப் பெரியார் வைக்கம் தெருநுழைவுப் போராட்டத்துக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ கோரிக்கையைக் காங்கிரஸில் தீவிரப்படுத்தி நீதிக்கட்சியைத் தோற்கடிக்க நினைத்தார். மேலும், இதன் காரணமாக பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பார்கள் என்ற முடிவுக்கு வந்தார்" (நெது. சுந்தரவடிவேலு 1979:40) இதன் விளைவாக திருநெல்வேலி (1920), தஞ்சாவூர் (1921), திருப்பூர் (1922), சேலம் (1923), திருவண்ணாமலை (1924), ஆகிய இடங்களில் நடைபெற்ற

காங்கிரஸ் மாநாடுகளில் வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்துக்கு ஆதரவான தீர்மானத்தைக் கொண்டுவர முயன்று தோற்றார். இறுதியாக 1925ஆம் ஆண்டு நவம்பரில் காஞ்சிபுரத்தில் நடைப் பெற்ற தமிழ் மாகாண மாநாட்டில் காங்கிரசிலிருந்து வெளியேறினார்.

காங்கிரசில் இருக்கும்போது ஏற்பட்ட 1922ஆம் ஆண்டு சிறைவாசத்தின் போது *'குடிஅரசு'* இதழைத் தொடங்க தன்னுடைய நண்பர் தங்கப்பெருமாள் பிள்ளையுடன் திட்டமிட்டார். பின் *02.05.1925* அன்று பெரியார் *குடிஅரசு* வார இதழை வெளியிட்டார். அந்த இதழைத் தொடங்கிய காலம் முதல் பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறும் காலம் வரை *(நவம்பர் 1925)* காங்கிரஸ் சென்னை மாகாணச் சங்க ஆதரவு இதழாகக் *குடிஅரசு* வெளிவந்தது. *"ஜஸ்டிஸ்* இதழின் ஆசிரியராக பணியாற்றிய டி.எம். நாயரின் மறைவுக்குப் *(1919)* பிறகு ஏ.ராமசாமி முதலியார் அந்த இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது நிர்வாகத்தில் பத்திரிகை மிகமிக செல்வாக்குப் பெற்றது பதினாயிரக்கணக்கில் செலவாயிற்று" என பண்டித முத்துசாமிப்பிள்ளை ஆவணப்படுத்தி யுள்ளார். *(பண்டித எஸ். முத்துசாமிபிள்ளை 1993:90)*

காங்கிரசிலிருந்து வெளியேறிய பெரியார் *1925*ஆம் ஆண்டு முதல் நீதிக்கட்சியோடு இணைந்து செயல்பட்டார். காலப் போக்கில் நீதிக்கட்சி இதழ்கள் பெருத்த இழப்புக்கு ஆளாயின என்பதை 16.06.1929 *குடிஅரசு* இதழில் பெரியார் பதிவு செய்துள்ளார்.

> "இப் பத்திரிகைகளும் (நீதிக்கட்சி இதழ்கள்) சங்கமும் சகல போக்கியங்களையும் தாங்களே ஏகபோகமாய் அனுபவித்து வந்த சுதேசமித்திரன் போன்ற பத்திரிக்கைகளும் அதன் கூட்டத்தாரும் போட்டியால் கண்டதால் இவற்றைச் செல்வாக் கில்லாமலடித்து ஒழிக்க பல தந்திரங்களும் செய்ததி னால் இத் தந்திரங்களுக்குத் தாக்குப் பிடிக்க *சுதேசமித்திரன்* போலவும் அதன் கூட்டத்தார் போலவும், *திராவிடனும்* அதன் கூட்டத்தாரும் அரசாங்கத்தைத் தழுவ நேரிட்டது. என்ன செய்தும் *சுதேசமித்திரன்* கூட்டத்திற்குள்ள தந்திர சக்தி *திராவிடன்* கூட்டத்திற்கில்லையாதலாலும் பிராமண ரல்லாதாரில் சிலருக்கு தங்கள் தனிப்பட்ட சுயநலத்திற்கும் கீர்த்திக்கும் *சுதேசமித்திரன்* கூட்டம் இடம் கொடுத்ததாலும் இவர்களும் சேர்ந்து எதிர்ப் பிரச்சாரம் செய்ததாலும் *'திராவிடனுக்கு'* பாமர ஜனங்கள் உண்மையை உணரும்படி செய்யவும்,

> பாமர ஜனங்களிடத்தில் செல்வாக்குப் பெறவும் முடியாமற் போய்விட்டதால் இது தக்க பலனைத் தென்னிந்திய மக்களுக்கு அளிக்கக் கூடியதாய் இல்லாமல் இருக்கிறது.”
>
> (அ. இறையன் 2005:87)

மேலே எடுத்துக்காட்டப்பட்ட விரிவான விளக்கம் *சுதேசமித்திரன்* சார்பாளர்களான பார்ப்பனர்களால் *திராவிடன்* இதழுக்கு ஏற்படுத்தப்பட்ட தடைகளையும் அந்த இதழ்ச் சார்பாளர்களின் பார்ப்பனரல்லாதார் எதிர்ப்பு மனோபாவத்தையும் வெளிப்படுத்துகிறது.

திராவிடன் இதழுக்கு உதவி செய்வதற்காக தன் *குடிஅரசு* இதழைத் தந்தைப் பெரியார் சென்னைக்கு மாற்றினார். *திராவிடன், குடிஅரசு* இதழ்ப் பணிகளை ஒரு சேர மேற்கொண்ட பெரியாருக்கு அந்த இதழின் ஆசிரியர் ஜே.எஸ். கண்ணப்பர் உறுதுணையாக இருந்தார்.

இக்காலக்கட்டத்தில் 1929ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் தமிழ் மாகாண சுயமரியாதை மாநாட்டுச் சிறப்பு மலரைப் பல வண்ண புகைப்படங்களுடன் 92 பக்கஅளவில் அச்சிட்டு வெளியிட்டது *திராவிடன்* இதழ். “உயர்ந்த கிளேஸ் தாளில் மிக நன்றாயும் அழகாயும் அச்சிடப்பட்டிருக்கிறது. ராயல் 80 பவுண்ட் ஆர்ட் பேப்பரில் திரு. ஈ.வெ. ராமசாமியின் உருவப் படத்துடன் மூன்று கலரில் அச்சிடப்பெற்று கண்ணைப் பறிக்கும் அழகு வாய்ந்திருக்கிறது. உள்ளே உயர்ந்த கிளேஸ் பேப்பரில் சுயமரியாதை மாநாட்டிற்கு வந்திருந்த சுமார் 60 தலைவர்களின் ஆப்டோன் படங்களையும், பந்தல் அமைப்பு, இயற்கை அழகு, ஊர்வலச் சிறப்பு முதலிய பல ஆப்டோன் படங்களையும் மிகுந்த செலவுடனும் சிரமத்துடன் தயார் செய்து அச்சிட்டு நடுநடுவே மலரில் சேர்த்திருக்கிறோம்”. (செங்கல்பட்டு தமிழ் மாகாண மாநாட்டு ஆவணங்கள் 2008 : 121) *திராவிடன்* சிறப்பு மலரின் தொழில்நுட்பக் குறிப்புக்கள் நீதிக்கட்சி இதழியலாளர்களின் இதழியல் மேன்மையை விளக்கி நிற்கின்றன. படிப்பறிவில்லாத பார்ப்பனரல்லாத சமூகத்தின் முதல் தலைமுறை இதழாளர்களின் இச்செயல்பாடுகள் பெரும் வியப்பையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்துகின்றன.

பெரியாரின் பொறுப்பில் வெளிவந்தபோது *திராவிடன்* இதழின் வாசகர் வட்டம் விரிவடைந்தது. இதழ் விற்பனையும் பல ஆயிரத்தைத் தாண்டியது. சென்னையில் செயல்பட்டு வந்த ஒரே அச்சகத்தில் *திராவிடன், குடிஅரசு* இதழ்களை அச்சிட்டு வெளியிடுவதில் பல தொழில்நுட்ப இடர்ப்பாடுகள் ஏற்பட்டன.

இதன் காரணமாக *குடிஅரசு* இதழின் பக்கங்களை 16 பக்கங்களாக பெரியார் குறைத்துக் கொண்டார். மேலும் இதற்காகக் *குடிஅரசு* இதழின் விளம்பரங்களைக் கூட குறைத்துக்கொண்டார். இவ்வாறு பெரும் தியாகம் செய்த பெரியாருக்கு நீதிக்கட்சியினர் வாக்களித்தபடி நிதி உதவிகளை செய்யவில்லை. *திராவிடன்* இதழை நடத்திய போது, தனக்கு ஏற்பட்ட இழப்புகளைத் தொடர்ந்து 1929 ஆம் ஆண்டு மீண்டும் ஈரோட்டுக்கே *குடிஅரசு* இதழ் அலுவல கத்தைக் கொண்டு சென்றார். இதுகுறித்து பல ஆண்டுகளுக்குப் பிறகு,

> "*திராவிடன்* பத்திரிக்கையை நடத்தும்போது ஜஸ்டிஸ் கட்சியார் பத்திரிக்கை நஷ்டத்திற்கு மாதாமாதம் கொடுப்பதாக வாக்கு கொடுத்த ரூபாயில் ஒரு காசு கூடக் கொடுக்கவேயில்லை. அதனால் சுமார் 20, 30 ஆயிரத்துக்கு மேல் வெளியாகும் ஈ.வே.ராவும் கை நட்டப்பட வேண்டி வந்தது. அதற்காக ஆதியில் பெருந்தொகை தருவதாக வாக்குக் கொடுத்த சில தோழர்கள் அக்காலத்தில் *திராவிடனுக்கு* சுமார் 3, 4 ஆயிரம் ரூபாய் மாத்திரமே கொடுத்தார்கள். இதைத்தவிர ஒருவரும் கொடுக்க வில்லை"
>
> (அ. இறையன் 2003 : 87)

என்று 29.03.1936 *குடிஅரசு* இதழ் வருத்தத்துடன் தெரிவித்துள்ளது. 1929ஆம் ஆண்டுக்குப் பிறகு *திராவிடன்* இதழ் அரசின் கோபத்துக்கு இலக்காகியுள்ளது. பிறகு ஏழு மாதங்கள் கழித்து வெளிவந்துள்ளது. இக்காலக்கட்டத்தில் ஆசிரியர்கள் அடுத்தடுத்து ஐந்து பேர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இக் குழப்பநிலையில் 1931ஆம் ஆண்டு *திராவிடன்* இதழ் நின்று போயிருக்கலாம். எனக்கருத இடமுண்டு.

ஜஸ்டிஸ் இதழ் தொடர்ந்து ஏ. ராமசாமி முதலியார் பொறுப்பில் வெளிவந்தது. 1933ஆம் ஆண்டில் '*நியுடைம்ஸ்*' என பெயர்மாற்றம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தொடர்ந்து *ஜஸ்டிஸ்* என்ற பெயரே நீடித்தது. இந்திய கவுன்சில் மெம்பராக இராமசாமி முதலியார் 1936ஆம் ஆண்டு லண்டன் செல்வதுவரை அவர் பொறுப்பில் வெளிவந்த *ஜஸ்டிஸ்* இதழ் டி.ஏ.வி. நாதன் பொறுப்பில் வெளிவரத் தொடங்கியது. இக்காலக்கட்டத்தில் நீதிக்கட்சியில் அதிகாரப்பூர்வ இதழாக 1935ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் '*விடுதலை*' மாதமிரு முறையாக 14, மவுண்ட் ரோடு முகவரியிலிருந்து டி.ஏ.வி. நாதனால் தொடங்கப்பெற்றது.

இவ்வாறாக *திராவிடன், ஜஸ்டிஸ்* இதழ்களின் தோற்றம், வளர்ச்சி, செயல்பாடுகளையும், போக்குகளையும் அறிகின்றோம். தெலுங்கு மொழியில் வெளிவந்த நீதிக்கட்சியின் அதிகாரப்பூர்வ இதழான *ஆந்திரப்பிராகாசிகை* இதழின் வளர்ச்சியையும், தளர்ச்சியையும் பற்றி எவ்வித வரலாற்றுப் பதிவும் இல்லை. எனவே, இவ்விதழ் எந்த ஆண்டுவரை வெளிவந்தது என்பது பற்றிய விவரங்கள் அறிதற்கில்லை. அந்த இதழில் வெளிவந்த தலையங்கங்கள், செய்திகள், கட்டுரைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

பெரியாரின் *குடிஅரசு* இதழ் தொடர்ந்து நடைபெற்று வந்த காலகட்டத்தில் 07.01.1928 முதல் *ரிவோல்ட்* என்ற ஆங்கில இதழை 1930ஆம் ஆண்டு வரை பெரியார் நடத்தி வந்தார். காலனிய அரசின் தடை காரணமாக 19.11.1933 *குடிஅரசு* இதழ் வெளிவருவது தடைபட்டது. இதனைத் தொடர்ந்து 26.11.1933 முதல் *புரட்சி* என்ற வார இதழை பெரியார் வெளியிட்டார். இந்த இதழ் 17.06.1934 வரை வெளிவந்தது. *புரட்சி* வார இதழுக்கும் தடை வந்ததால் *பகுத்தறிவு* நாளிதழாக 15.03.1934 முதல் 1934ஆம் ஆண்டு மே இறுதி வரை வெளிவந்தது. பிறகு *பகுத்தறிவு* வார இதழாக 26.08.1934 முதல் 06.01.1935 வரை வெளிவந்தது. *குடிஅரசு* இதழக்கு ஏற்பட்ட நீதிமன்றத் தடைகள் விலக்கிக் கொள்ளப் பட்டதால் மீண்டும் *குடிஅரசு* இதழ் 13.01.1935 முதல் வெளிவரத் தொடங்கியது. ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு நிறுத்தப்பட்ட *பகுத்தறிவு* இதழ் மாத இதழாக 01.05.1935 முதல் 1938ஆம் ஆண்டு வரை வெளிவந்தது.

டி.ஏ.வி. நாதன் *ஜஸ்டிஸ்* இதழை நடத்த ஆர்.கே. சண்முகம் செட்டியாரிடம் நிதிஉதவி கேட்டுள்ளார். இதற்கு ஆர்.கே. சண்முகம் செட்டியார் பார்ப்பனரல்லாதார் இயக்க உணர்வுகளுக்குப் புத்துயிர் ஊட்ட நீதிக்கட்சி தவறிவிட்டது என குற்றம்சாட்டி நிதிவழங்க மறுத்துவிட்டார் என்பதை ஆர்.கே. சண்முகம் செட்டியார் ஆவணங்களை மேற்கோள்காட்டி பெ.சு.மணி குறிப்பிடுவார் (பெ.சு.மணி 2007:202). 1937ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் நீதிக்கட்சி படுதோல்வி அடைந்தது. பிறகு 1938ஆம் ஆண்டு *ஜஸ்டிஸ்* இதழ் நிறுத்தப்பட்டு விட்டது.

டி.ஏ.வி. நாதன் பொறுப்பில் 01.06.1935 முதல் வெளிவந்த *விடுதலை* (மாதமிருமுறையாக வெளிவந்தது என்றும் க. திருநாவுக்கரசு 1991:206) வாரமிருமுறையாக வெளிவந்தது என்றும் (*குடிஅரசு*, 07.06.35) இருவேறு கருத்துக்கள் உள்ளன. ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகள் 01.06.1935 முதல் 01.01.1937 வரை வெளிவந்த *விடுதலை* 01.01.1937 முதல் சென்னையிலிருந்து நாளேடாக சில நாள்கள் வெளிவந்தது. ஓரிரு நாளில் 03.01.1937 முதல் ஈரோட்டிலிருந்து

பெரியார் பொறுப்பில் வெளிவரத் தொடங்கியது. அன்றிலிருந்து இன்றுவரை திராவிடர் கழக நாளேடாக வெளிவரும் இந்த இதழுக்கு அண்மையில் பவழவிழா கொண்டாடப்பட்டது.

காஞ்சிபுரத்தில் 'யங் கிரிட்டிக்ஸ் அசோசியேஷன்' என்ற அமைப்பைத் தொடங்கிய காஞ்சி மணிமொழியார் நிறுவிய *நவயுகம்'* என்ற வாரஇதழுக்கு அண்ணா ஆசிரியராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். தொடர்ந்து *பாலபாரதி* இதழில் பணியாற்றிய அண்ணா *விடுதலை* ஏட்டின் பொறுப்பாசிரியராக *1938* ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டார். விடுதலை இதழில் தொடர்ந்து பணியாற்றிய அண்ணா *21.12.1941* பிறகு அந்த இதழிலிருந்து விலகிக்கொண்டார். வாரஇதழாக *திராவிடநாடு* இதழை *1942* ஆம் ஆண்டு முதல் வெளியிட்ட அண்ணா *1962* ஆம் ஆண்டுவரை தொடர்ந்து நடத்தி வந்தார். தொடர்ந்து *காஞ்சி* இதழைத் தொடங்கிய அண்ணா *மாலைமணி, நம்நாடு* ஆகிய இதழ்களில் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

அண்ணாவின் *திராவிடநாடு* இதழைத் தொடர்ந்து திராவிட இயக்கத் தலைவர்கள் பலராலும் வார, மாத, வாரம் இருமுறை இதழ்கள் தொடங்கப்பெற்றன. இந்திய இதழியல் வரலாற்றில் ஒரு இயக்கத்துக்கு நூற்றுக்கணக்கான இதழ்கள் வெளிவந்தது திராவிடர் இயக்கத்துக்கு மட்டுமே என்பது வியப்பும் மகிழ்ச்சியும் தரும் செய்தியாகும்.

III

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் தொடக்க விழா *20* டிசம்பர் *1916* சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடைபெற்ற போது வெளியிடப்பட்ட பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கையை சென்னை மாகாணம் முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.

நீதிக்கட்சியின் தமிழ் நாளிதழான *திராவிடன்* இதழின் முதல் இதழ் 1917 ஜூன் முதல் நாளன்று வெளிவந்தது. '*திராவிடன்* இதழின் முதல் தலையங்கம் சென்னை மாகாண பார்ப்பனரல்லாத இயக்கத்தின் இதழியல் போக்கின் தொடக்கப்புள்ளி ஆகும். 'திராவிடர்கள் அறிய வேண்டியது' என்ற துணுக்குச் செய்தியையும் திராவிட நேசன் என்ற புனைபெயரில் *திராவிடன்* இதழ் வாசகர் ஒருவர் எழுதியுள்ளார். நீதிக்கட்சியின் தொடக்ககால ஆவணங் களான *ஜஸ்டிஸ், திராவிடன்* முதலிய இதழ்கள் அக்காலத்தில் ஆவணக் காப்பகங்களிலிருந்தும் நூலகங்களிலிருந்தும் ஒரு சிலரால் வேண்டுமென்றே அகற்றப்பட்டதாக *முரசொலி* மாறன் குறிப்பிடுகின்றார். 'நீதிக்கட்சியின் வரலாற்றினை *ஜஸ்டிஸ்* நாளேடுகளைப் பார்த்துதான் தெரிந்துக் கொள்ளமுடியும். ஆனால்,

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் உள்ளிட்ட எந்த நூலகத்திலும் அவை கிடையாது. 1937ஆம் ஆண்டுக்குப் பிறகு தேசியவாதிகள் அவற்றைத் திட்டமிட்டு அழித்திருப்பதாகத் தெரிகின்றது' (*முரசொலி* மாறன் 1999 : 342). பார்ப்பனரல்லாத மக்களின் விடுதலைக்கு உழைத்த நீதிக்கட்சி இதழ்கள் வேண்டுமென்றே முற்றிலுமாக அழிக்கப்பட்ட செயல் நவீன காலத் தமிழக வரலாற்றில் பார்ப்பனரல்லாத அறிவுமரபை அழித்தொழித்த, நிகழ்த்தப்பட்ட அறிவு வன்முறையேயாகும்.

தி.மு.க. இதழ்களை ஆவணப்படுத்தும் நோக்கில் தி.வ. மெய்கண்டார் *கழகக்குரல்* (1972) இதழில் அண்ணாவின் *திராவிடநாடு* குறித்து எழுதினார். தொடர்ந்து கலைஞரின் *முரசொலி* இதழின் தொடக்கக்கால வரலாற்றை விரிவாக ஆவணப்படுத்தியுள்ளார். கலைஞரின் கையெழுத்து இதழான, *மாணவர் நேசனின்* பணிகள் முதல், *முரசொலி* இதழின் தோற்றம், வளர்ச்சி, வரலாற்றை பல்வேறு சான்றாதாரங்களுடன் விளக்கியுள்ளார்.

கலைஞர் உள்ளிட்ட பல தலைவர்கள் அண்ணாவின் இதழியல் பாதையைப் பின்பற்றி இதழ்களைத் தொடங்கி நடத்தியதை 'ஏடுகள் வளர்க்கும் இயக்கம்' என்ற கட்டுரை பட்டியலிட்டுள்ளது. இப்பதிவு திராவிட இயக்கத்தின் விரிவான இதழியல் பரப்பை அறிமுகப்படுத்துகின்றது. பல நூற்றாண்டு களாகக் கல்வியறிவு மறுக்கப்பட்டு, நீதிக்கட்சியின் வரவுக்குப் பிறகு கல்வியறிவு பெற்ற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் பல்வேறு இதழ்களை நடத்த முன்வந்தனர். பழமையும் பக்தியும் ஊறிய குடும்பப் பின்னணியைக் கொண்ட இந்த இளைஞர்கள் திராவிடர் இயக்கத்தின் கருத்துக்களை இதழ்களில் எழுதியதற்காகவும், மேடைகளில் பேசியதற்காகவும் கண்டிக்கப்பட்டனர். திராவிடர் இயக்கத்தின் இதழ்களை வாசிப்பதும் கையில் வைத்திருப்பதும் கூட குற்றம் என்ற நிலை இருந்தது. புதிய நாத்திகக் கருத்துக்களையும் சமூக மாற்றக் கருத்துக்களையும் இந்த இதழ்கள் வெளியிட்டு வந்தன. ஊர்மன்றங்கள், முடித்திருத்தகங்கள், சலவைத் தொழிலாளர் கடைகள், தேநீர் கடைகள், சிறு வணிக நிறுவனங்கள் என பார்ப்பனரல்லாத இளைஞர்கள் கூடும் இடங்களில் எல்லாம் திராவிடர் இயக்க இதழ்கள் படிக்கக் கிடைத்தன.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கல்விகற்க சென்ற பார்ப்பனரல்லாத இளைஞர்கள் இந்த இதழ்களைப் படித்து கேள்விகளை எழுப்பிய போதும் இந்த இயக்கச்சார்பு இதழ்களை வைத்திருந்ததற்காக வெளியேற்றப்பட்ட நிகழ்வுகள் பல உண்டு.

இந்த இதழ்களைப் படித்த இளைஞர் கூட்டம் புதிய படைப்பிலக்கிய படையணியாக எழுத்துத் துறையில் களமிறங்கியது. கவிதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் என புதிய தமிழ் நடையில் இந்த இயக்க இளைஞர்கள் எழுதத் தொடங்கினர்.

இக்காலகட்டத்தில் வெளிவந்துகொண்டிருந்த பார்ப்பன இதழ்களின் தாக்குதல்களுக்குப் பார்ப்பனரல்லாத இதழ்கள் இலக்காயின. *'சுதேசமித்திரனின் ஜாதிபுத்தி'*. 'பிராமணப் பத்திரிக்கைகளின் பிரச்சாரம்: உஷார், உஷார், உஷார்" "ஆபத்தான பார்ப்பன ஏடுகள்" ஆகிய கட்டுரைகள் பார்ப்பனிய இதழ்களின் கோரமுகத்தை அம்பலப்படுத்துகின்றன.

பார்ப்பனர்களால் மட்டுமே தரமான இதழ்களை நடத்த முடியும் என்ற நிலையை மாற்றிப் பார்ப்பனரல்லாதார் இதழியல் போக்குத் தொடங்கியது. இலக்கிய இதழ்களான *பொன்னியும், கதிரும், கல்கி* இதழின் தரத்துக்கு நிகராக வெளிவந்தன. இடதுசாரி இயக்க இதழ்களின் கருத்துக்களுக்கு நிகரான கருத்துக்களைத் தாங்கி வெளிவந்த *மன்றம், தென்றல், போர்வாள்* என திராவிட இயக்க இதழியல் பரப்பு விரிவானது. பொங்கிவரும் புதுப் புனலாகத் தோன்றிய திராவிடர் இயக்க இதழ்களின் தீரம் வெறும் வரலாற்றுப் பதிவாகிவிட்டதை 'ஏனோ இந்த ஆர்வம் இப்போது மங்கிக் குறைந்தே போய்விட்டன', என்று 1976ஆம் ஆண்டு *கழகக்குரல்* இதழில் கட்டுரையாளர் மா. செங்குட்டுவன் பதிவு செய்துள்ளார்.

இந்திய அரசியல் பரப்பில் சுமார் 250 தமிழ் இதழ்களையும், இருபதுக்கு மேற்பட்ட ஆங்கில இதழ்களையும், தெலுங்கு மொழியில் ஓர் இதழையும் வெளியிட்டு சாதனை புரிந்தது திராவிடர் இயக்கமே. இந்த இதழ்களின் வளர்ச்சியும் 1940 முதல் 1965 வரையிலான காலக்கட்டத்தோடு வீழ்ச்சியடைந்தது ஏன்? என்ற கேள்விக்கு விடை காணப்பட வேண்டும். திராவிட இயக்கத்தினர் வெளியிட்ட பல நூறு இதழ்களில் இன்று ஆய்வாளர்களுக்கு ஒரு சில இதழ்த் தொகுப்புகள், ஓரிரு இதழ்கள் மட்டுமே பார்வைக்குக் கிடைக்கின்றன. தனி மனிதர்களிடமும் தனியார் சேகரிப்புகளிலும் உள்ள திராவிடர் இயக்கத்தின் பல நூறு இதழ்களை ஆவணப்படுத்த தேடலும் திரட்டலும் அவசியமான பணியாகும். இந்த இதழ்களை ஆவணப்படுத்துவதன் மூலம் பார்ப்பனரல்லாத மக்கள் திரளின் கலை/இலக்கிய/ மொழிப்பெயர்ப்பு படைப்பாக்கத் திறனை அறியவும் மதிப்பிட உதவும்.

இதழாளர் செங்குட்டுவனின் மற்றொரு கட்டுரை திராவிட இயக்கத் தலைவர்களோடு இதழியல் பணியாற்றிய அனுபவத்தை

‘இயக்க ஏடுகளில் இருபத்தைந்து ஆண்டுகள்’ என்ற தலைப்பில் முன் வைக்கிறது. தி.மு.கழகத்தின் அதிகாரப்பூர்வ இதழாக முதலில் வெளிவந்த *மாலைமணி*, இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்த *நம்நாடு*, 1972 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை வெளிவந்த *கழகக் குரல்* ஆகிய இதழ்களில் பணியாற்றிய அனுபவத்தை விரிவாக விவாதித்துள்ளார்.

மாலைமணி, நம்நாடு இதழ்களின் தலையங்கங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரப்பூர்வ கருத்துக்கள். இவை தமிழக அரசியலின் திசைகளையும் தடங்களையும் மாற்றிப் போட்டவை. தி.மு.கழகத்தின் அரசியல் வரலாற்றெழுத்துக்களுக்கு அரிய ஆவணங்களாகத் திகழும் இந்த இரு இதழ்களின் தலையங்கங்களும் கட்டுரைகளும் தொகுக்கப்பட வேண்டும். அவை முழுமையாகத் தொகுக்கப்பட்டால் தி.மு.கழகத்தின் அரசியல் கண்ணோட்டம் பற்றி முன்வைக்கப்படும் ஏளனக் கருத்துக்கள் பல உடைபடும்.

அரசியல் இதழ்களில் அரசியல் தலைமைகளின் எண்ண ஓட்டத்தை தொண்டர்களுக்கு உணர்த்துபவை தலையங்கப் பகுதிகளே. மாற்றுக் கட்சியினரை விமர்சிப்பதற்குப் பயன்படும் இப்பகுதியை இதழாளர்கள் பயன்படுத்தும்போது தரம் தாழ்ந்துவிடக்கூடாது என்பதை “தாக்கி எழுதுவதாக எண்ணி தமிழை ஆபாசப்படுத்தவது தற்கொலைச் செயலாகும் என கருத்து வேற்றுமைக் கொண்ட இதழ்கள் கண்ணியம் காக்க வேண்டுகோள் விடுத்துள்ளது” *முரசொலி*.

கண்ணதாசன் *தென்றல்* இதழைத் தொடங்கியபோது முதலாவது இதழில் மென்மையான விமர்சனத்தையும், இரண்டாவது இதழில் எதிர்க்கட்சிகள் மீது கடும் விமர்சனங்களையும் வைத்து இதழைத் திட்டமிட்டு வெளியிட்டு வாசகர்களின் எதிர்வினை களை அறிந்து கொள்ள முயன்றார். இந்த இரு இதழ்கள் குறித்த வாசகர் எதிர்வினைகளையும் தனது சோதனை முயற்சியையும் ‘கிண்டலா தாக்குதலா’ என்ற தலைப்பில் எழுதும்போது ‘தாக்குதல்களில் நேரடிமுறையை விட அண்ணாவின் திண்ணிய வழியே சிறந்தது, என கண்ணதாசன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தலையங்கங்களுக்கு நிகராக இதழாசிரியர்களின் கருத்துக் களை வெளிப்படுத்துபவை கருத்துப்படங்கள். தமிழில் கருத்துப் படங்களை அரசியல் பரப்புரைக்காக பாரதியார் முதன்முதலாகப் பயன்படுத்தினார். *ஜஸ்டிஸ்* இதழ் அரசியல் கருத்துப்படங்களை வெளியிட்டுள்ளது. *திராவிடன், ஆந்திரப்பிரகாசிகா* ஆகிய இதழ்கள் கருத்துப்படங்களை வெளியிட்டுள்ளன. பெரியாரின் *குடிஅரசு* இதழும் சில கருத்துப்படங்களை வெளியிட்டுள்ளது.

அண்ணா சிறைச்சாலையில் இருந்தபோது அவர் வரைந்த படங் களை தையல் கலை சுந்தரம் 'அண்ணாவின் சிறை நினைவுகள்' நூலில் வெளியிட்டுள்ளார். *திராவிடநாடு* இதழில் அண்ணா சில கருத்துப்படங்களைத் தானே வரைந்து வெளியிட்டுள்ளார்.

கருத்துப்படங்களின் அரசியலை விளக்கும் 'கார்டூனாயணம்' கட்டுரையில் தலையங்கம், கட்டுரை ஆகிய வடிவத்தில் தமது கண்டனத்தை அமைத்துத் தருவதுடன் நிலைமையை நன்கு விளக்கிட கார்டூன்களையும் கேலிச்சித்திரங்களையும் வெளியிட்டு வருகின்றன என கருத்துப்படங்களின் இருவகைகளை வரையறை செய்வார் அண்ணா. கருத்துப்படங்களுக்கும் (Cartoon) கேலிச் சித்திரத்துக்கும் (Caricature) உள்ள நுட்பமான வேறுபாட்டை அவர் நன்கு அறிந்திருந்தார்.

காங்கிரஸ் இயக்க எதிர்ப்புக் கருத்துப்படங்களை அக் கட்சிக்குச் சார்பான இதழ்கள் வெளியிட்டதையே எடுத்தாண்டு எதிரிகளின் கார்டூன்களைக் கொண்டே காங்கிரசைக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார். இந்தியாவின் பல்வேறு இதழ்களில் வெளிவந்த முப்பதுக்கும்மேற்பட்ட கருத்துப்படங்களை அ்ண்ணா இக்கட்டுரையில் மேற்கோள் காட்டியுள்ளார். மற்றொரு கட்டுரையில் மித்திரன் சித்திரத்தில் தன்னையும் தன் கூட்டணித் தலைவர் களையும் *சுதேசமித்திரன்* இதழ் கழுதை மேல் ஏறிவருவதாக இடம்பெற்ற கருத்துப்படத்தைக் குறிப்பிட்டு தன்னைக் கழுதையாக சித்தரிக்கவில்லை என்பதால் ஆறுதல் அடைவதாகக் கூறும் அண்ணா *சுதேசமித்திரன்* வெளியிட்ட கருத்துப்படம் மூலமாகவே இராஜாஜி தரப்பிற்குப் பதிலடி தருகிறார். இராஜாஜியின் வடவர் எதிர்ப்புக் கருத்துக்களையே தன் வாதத்திற்கு ஆதரவாகக் கொண்டு எதிர்காலத்தில் இராஜாஜி, *திராவிடநாடு* கேட்பார் என எதிர்கால அரசியல் ஆருடம் கூறினார். (பிற்காலத்தில் திராவிடர் இயக்கம் கோரியதைப் போன்ற தென்னாட்டுக்கான தனி அரசியல் நிர்வாக அமைப்பைப் 'தட்சிணப்பிரதேசம்' என்ற பெயரில் இராஜாஜி கேட்டது சுவையான வரலாறு).

சுதேசமித்திரன் வெளியிட்ட தலையங்கத்தையே தன்னுடைய கருத்துப்படத்துக்கான கருப்பொருளாக *முரசொலி* இதழ் எடுத்தாண்டுள்ளது. 'மௌடிக அடிப்படையில் வளரும் சமுதாயப் பிளவுகளை அதிகமாக்கி மக்களின் சிந்தனைகளை நேரான வழியில் செலுத்தாமல் துஷ்பிரயோகம் செய்யும் எழுத்தாளர்கள் ஈனப் புத்திப் படைத்தவர்கள் என்ற *சுதேசமித்திரன்* இதழின் தலையங்கக் கருத்துக்கு ஏற்ற கருத்துப் படத்தை *முரசொலி* இதழ் *23.04.1954* ஆம் ஆண்டு வெளியிட்டது. எதிரிகளின் கருத்துக் களையே எதிரிகளுக்கு எதிராக திருப்பிவிடும் அண்ணாவின்

அரசியல் உத்தியை *முரசொலி* இதழ் பின்பற்றியுள்ளது கவனிக்கத்தக்கது.

முரசொலி இதழில் கலைஞர், தன் கைப்பட வரைந்த ஐந்து கருத்துப்படங்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. எண்பதுகளில் கலைஞர் வரைந்த நூற்றுக்கும் மேற்பட்ட அரசியல் கருத்துப்படங்களை ஆவணப்படுத்துவது அவசியமான பணியாகும்.

திராவிடன் இதழின் சிறப்பு மலரில் (1929) புகைப்படங்களை ஹாப்டோன் முறையில் அச்சிடும்முறை பின்பற்றப்பட்டுள்ளது. திராவிடர் இயக்க இதழ்களின் சிறப்பு மலர்களில் வண்ண அச்சில் தமிழர் பண்பாடு, நாகரிகம், கலை, வரலாறு குறித்த பல ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. பார்ப்பனிய இதழ்கள் திராவிட ஓவியமரபை மக்களுக்கு அறிமுகப்படுத்தாமல் இருட்டடிப்பு செய்கின்றன மேலும் அந்த இதழ்களின் முக்கிய நோக்கம் "திராவிட ஓவியத்தை வாழவைக்கவோ வளரவிடவோ கூடாது" என அம்பலப்படுத்துகிறது *மன்றம்* இதழின் பொங்கல்மலரில் வெளிவந்த சாதுவனின் சிறப்புக்கட்டுரை. திராவிட ஓவியக் கலையின் மூலவேர்கள் தமிழகத்தில் கிடைத்த பானையோடுகளில் உள்ளதைக் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

மேலும் திராவிட ஓவியமரபின் மூலத்தை ராய்சௌத்திரி போன்ற நவீன ஓவியர்கள் களவாடிக்கொண்டு நவீன ஓவியமரபை உருவாக்கிய வரலாற்றுத் திரிபுகளை அம்பலப்படுத்துகின்றது. திராவிட இயக்கத்துக்கும் ஓவியத்துக்கும் உள்ள தொடர்பை விளக்கும் இக்கட்டுரை திராவிடர் இயக்க ஓவியராக ஆர்.எம். கோபாலை முன்னிறுத்தியுள்ளது. அண்ணா, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், ஓவியத்திற்கும் உள்ள தொடர்பைப் பயன்படுத்தி பரப்புரைக் கலையாக்கும் உத்தியை மேற்கொள்ளத் திட்டமிட்டதாக அறியமுடிகிறது. அண்ணாவின் தலைமையில் திருச்சியில் நடந்த தி.மு.கழகத்தின் முதல் மாநில மாநாடு (1951) சென்னையில் நடந்த இரண்டாவது மாநில மாநாடு (1956, மே) கோவையில் நடந்த தேர்தல் சிறப்பு மாநாடு (1962) ஆகிய மாநாடுகளில் தி.மு.க.வின் ஓவியக் கலைஞர்களால் நடத்தப்பட்ட ஓவியக்கண்காட்சிகள் நடத்தப்பட்டன. திராவிடர் இயக்கத்துக் கென மாவட்டந்தோறும் ஓவியக் கலைஞர்களும், சுவரெழுத்துக் கலைஞர்களும் இருந்தனர். ஓவியம் போன்ற நுண்கலைகளைக் கூட கருத்துப்பிரச்சாரத்துக்காக பயன்படுத்தும் அரசியல் மேலாண்மையைத் திராவிடர் இயக்கத்தவர்கள் அறிந்திருந்தனர். எனினும் திராவிடர் இயக்கக் கலைஞர்கள் பிற்காலத்தில் தலைவர்களின் ஓவியங்களையும் கட்அவுட்களையும் வடிவமைக் கும் கலைஞர்களாகவும் மாறி தனிமனித துதிபாடும் நசிவுக் கலாச்சாரத்துக்கு வித்திட்டது வரலாற்றுச் சோகம்.

ஓவியங்களைப்போல புகைப்படங்களும் திராவிடர் இயக்க இதழ்களிலும், சிறப்பு மலர்களிலும் இடம்பெற்றன. புகைப் படக்கலை தமிழகத்தில் அறிமுகமாகிய காலகட்டத்தில் பார்ப்பனரல்லாத இளைஞர்கள் பலர் திராவிடர் இயக்க இதழ்களுக்குப் பகுதிநேர புகைப்படக் கலைஞர்களாகப் பணியாற்றினர். பழைய திராவிடர் இயக்க இதழ்களில் இன்று அகவை முதிர்ந்த தலைவர்களின் அன்றைய இளமைக்கால படங்கள் பல வெளிவந்தன. போராட்ட காலங்களில் எடுக்கப் பட்ட பல புகைப்படங்கள் இதழ்களில் வெளிவந்து பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

முதல் இந்திஎதிர்ப்புப் போர் நடைபெற்றபோது இந்திஎதிர்ப்பு போராட்ட வீரர்களை முதல்நாள் புகைப்பட நிலையத்துக்கு அழைத்துச்சென்று புகைப்படம் எடுத்து, அடுத்தநாள் போராட்டத்துக்கு அனுப்பிவிட்டு கைது செய்யப்பட்டவுடன் செய்தியையும், புகைப்படத்தையும் பெரியாரின் *குடிஅரசு* இதழுக்கு அஞ்சலில் அனுப்பிய வரலாற்றை அன்புகணபதி பதிவு செய்துள்ளார்.

கல்லக்குடி இரயில் நிலையத்தின் பெயர் ‘டால்மியாபுரம்’ என மாற்றப்பட்டதைக் கண்டித்து கலைஞர் தலைமையில் நடந்த இரயில் மறியல் அறப்போரின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் திராவிட இயக்க வரலாற்றின் அழியாசுவடு. இதேபோல நெருக்கடிநிலை காலத்தின்போது கருத்துரிமை, எழுத்துரிமைப் பறிப்புக்கு எதிராக எழுதிய *முரசொலி* இதழின் மீது நடத்தப்பட்ட ஜனநாயக விரோத தாக்குதல்களைக் கண்டித்து கலைஞர் அண்ணாசாலையில் தன் கைப்பட எழுதிய துண்டறிக்கைகளை விநியோகம் செய்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் கருத்துரிமைக்கான போராட்டத்தில் தன்னையே முதற்பலியாகக் கொடுக்கத் துணிந்த கலைஞரின் போர்க்குணத்தை வெளிப்படுத்தும் வரலாற்றுப் புகழ்மிக்க புகைப்பட ஆவணம்.

ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமியின் இளம்வயது படம் 1954ஆம் ஆண்டு வெளிவந்த *திராவிடன்* இதழில் காணக்கிடைக்கிறது. தந்தைப் பெரியாரைத் தொடக்க காலம் முதல், அவர் இறக்கும்வரை பல்வேறு புகைப்படங்களை எடுத்த புகைப்படக்கலைஞர் சுபா சுந்தரம் அண்ணாவுக்கும், திராவிடர் இயக்கத் தலைவர்களுக்கும் மிக நெருக்கமானவர். அவருடைய நினைவுத் தொகுப்பான அந்த புன்னகை எங்கே? என்னும் கட்டுரையில் பெரியார் காசுக்காக அதிக அளவில் தொண்டர்களோடு படம் எடுத்துக்கொள்வார்; ஒரு படத்துக்கு தொண்டர்களிடம் பணம் வாங்குவார் என்ற செவிவழி அவதூற்றின் உண்மைகளை வெளிப்படுத்துவார். சிறுசிறு நடப்பியல்

செய்திகளில்கூட பெரியார் எதிர்காலவியல் கண்ணோட்டம் கொண்டவராகக் காணப்பட்டார். அக்காலகட்டத்தில் புதிதாக அறிமுகமான வண்ணப்படத் தொழில்நுட்பத்தைப் பற்றிக் கருத்துக்கூறும் போது "இந்த வண்ணப்படங்கள்கூட ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்பு காட்டுமிராண்டி காலத்தவையாகக் கருதப்படும்" என்ற பெரியாரின் கருத்து வியப்பளிக்கிறது. மாபெரும் மக்கள் தலைவருக்கும் எளிய இதழியல் புகைப்படக் கலைஞருக்கும் இருந்த நட்பின் உறவுநிலையை விளக்கும் சுபா சுந்தரத்தின் அனுபவப் பகிர்வு இதழியல் துறையினருக்குத் திராவிட இயக்கத் தலைவர்கள் கொடுத்த மரியாதையின் அடையாளங்கள். இதேபோல ஜெயபால் என்ற அச்சுக் கோர்ப்பாளருடன் பெரியாரும், அண்ணாவும் மிகுந்த தோழமையுடன் இருந்துள்ளனர். இந்திஎதிர்ப்பு போராட்டத்தில் பங்கு கொண்ட '*விடுதலை* இதழின் நிருபர் பார்வையில் முதல் இந்திஎதிர்ப்புப் போராட்டம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

திராவிட இயக்க இதழ்களில் புனைபெயர்களில் எழுதும் முறையைத் திராவிடர் இலக்கிய படைப்பாளிகள் *திராவிடன்* இதழ் காலத்திலிருந்தே தொடங்கினர். '*திராவிடன்* முதல் ஆண்டு இதழிலே *(1916)* புனைபெயர்களில் எழுதியவர்கள்: திராவிட கேளன், பிங்களன், செம்படவன், விஸ்வகர்மன், திராவிடநேசன், வரி செலுத்துவோன், நாட்டுப்புறத்தான். தந்தைப்பெரியார் 'சித்திரபுத்திரன்' என்ற புனைபெயரிலும் அண்ணா 'பரதன்' என்ற புனைபெயரிலும் கலைஞர் 'சேரன்' என்ற புனைபெயரிலும் எழுதிவந்தனர். அறிஞர் அண்ணா, பதினைந்துக்கும் மேற்பட்ட புனைபெயர்களில் எழுதியுள்ளார்.

திராவிட இயக்க எழுத்தாளர்களின் பட்டியல் அளவிட முடியாதது. புனைபெயரில் எழுதுவது கோழைத்தனம் என்ற கருத்தை மறுக்கும் 'புனைபெயர்கள் ஏன்' என்ற கட்டுரை புனைபெயரில் எழுதும் சர்வதேச எழுத்தாளர் முதல் திராவிட இயக்க சாதாரண எழுத்தாளர் வரை பட்டியலிடுகிறது. புனை பெயரில் எழுதும் வல்லிக்கண்ணன் போன்ற சந்தர்பவாத எழுத்தாளர்களின் 'கோர' முகத்தையும் இக்கட்டுரை அம்பலப்படுத்துகிறது.

நீதிக்கட்சியின் *திராவிடன், ஜஸ்டிஸ், ஆந்திரப்பிரகாசிகா* இதழ் முதல் தற்காலம் வரை திராவிடர் இயக்க இதழ்கள் பொருளாதார நெருக்கடிகளைத் தொடர்ந்து சந்தித்துள்ளன. சமூகத்தின் அடித்தளமக்களின் சிக்கல்களுக்காகப் போராடிய இந்த இதழ்களில் விளம்பரங்கள் அதிக எண்ணிக்கையில் வெளியிடப் படவில்லை. தங்கள் கட்சியின் தொண்டர்களின் நிதியிலும், கட்சித் தலைவர்களின் சொந்த நிதியிலுமே இந்த

இதழ்கள் நடத்தப்பட்டன. பெரியார் *குடிஅரசு* இதழைத் தொடங்கி ஆறுமாதமாகியும் சந்தாதாரர்கள் அதிகரிக்காத நிலையை "நமது பத்திரிக்கையை அதிகரிக்க வேண்டியது பிராமணரல்லாத ஏழைகள், தொழிலாளர்கள் தீண்டத்தகாதவரெனப்படுவோர் முதலிய ஒடுக்கப்பட்ட சமூகத்தாருக்கு ஏற்பட்டிருக்கும் கடனாகும்" என *குடிஅரசு* இதழைப் பார்ப்பனரல்லாதார் ஆதரிக்க வலியுறுத்தியுள்ளார்.

அண்ணாவின் *திராவிடநாடு, காஞ்சி* முதலிய இதழ்கள் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்ததுண்டு. கலைஞரின் *முரசொலி* தொடக்க நாள்களில் பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்கும்போது அவருடைய மனைவி பத்மா அம்மையாரின் தாலிச்சங்கிலி, தாலிக்கயிறாக மாற்றம் செய்யப்பட்டு அச்சகத்தின் கடன்கள் அடைக்கப்பட்டன.

சமூக மாற்றத்தை நோக்கமாகக் கொண்டிருந்த திராவிட இயக்க இதழ்கள் வெளிவந்த சமகாலத்தில் விடுதலைப் போராட்ட ஆதரவு இதழ்களும், சமூகத்தில் பிரச்சனைகளற்ற பிரிவினர் சிரித்து மகிழ பல விகட ஏடுகளும் வெளிவந்தன. இந்த இதழ்கள் பொதுமக்களுக்குப் பொழுதுபோக்கும் கதைகள், நகைச்சுவைத் துணுக்குகள், குறுக்கெழுத்துப் போட்டிகள் என வணிகத் தந்திரங்களுடன் வாசகர்களுக்கு மகிழ்வூட்டும் பணியினை ஆற்றிவந்தன. இதன் விளைவாக நகர்புற மேல்தட்டு படித்த வர்க்கத்தின் வாசிப்புத் திறனை வணிகப்படுத்தும் நோக்கில் முதலாளிகள் பலரும் களமிறங்க தமிழ் இதழியல் இலாபந்தரும் தொழிலாக மாறியது. இதனால் இதழியல் தொழில் என்பது பொதுமக்கள் சேவையா? சொந்தத் தொழிலா? என்பது போன்ற விவாதங்கள் எழ 'சமூக முரண்பாடுகளும் சிக்கல்களும் உள்ள சமூக அமைப்பில் பொதுச்சேவையை அடிப்படையாகக் கொண்டே இதழ்கள் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தை ம.பொ.சிவஞானத்துடன் அண்ணா நடத்திய வானொலி உரையாடலில் கருத்து தெரிவித்துள்ளார்.

ஏடுகள் புரட்சிக்கான ஆயுதங்கள் என்பதை விளக்கும் கட்டுரை ஜனநாயக சமூகத்தில் இதழியல் பணிகளின் அவசியத்தை வலியுறுத்துகிறது. காங்கிரஸ் இயக்க இதழ்களைப் போல கம்யூனிஸ்ட் கட்சியின் இதழான *ஜனசக்தி* தி.மு.கழகத்தினரைப் போலிப் பகுத்தறிவாளர்கள் எனவும் சிங்காரவேலருக்கும் தங்கள் இயக்கத்துக்கும் உள்ள தொடர்பைக் கூறி திராவிடர் இயக்கத்துக்கும் சிங்காரவேலருக்கும் தொடர்பில்லை என்று முன்வைத்த புரட்டல்வாதத்தை முறியடிக்கும் வகையில் என்.சி.பி.எச். நிறுவனத்தின் புத்தக வெளியீட்டுப் பட்டியலைச்

சுட்டிக்காட்டி ஜனசக்தியை நோக்கி 'சிரிப்பலைகளையே விமர்சனமாக்கியுள்ளது' *கழகக்குரல்*.

மெயில் ஏடு சர்க்காரியா ஆணையத்தைக் காட்டி தி.மு.கழகத்தை பயமுறுத்தும்போது சர்க்காரியா தலைமையில் அமைந்துள்ளது ஒரு விசாரணை ஆணையமே. தி.மு.கவினர் மீது குற்றம் இருந்தால்தான் நீதிமன்றத்தால் விசாரிக்க முடியும். நீதிமன்றத்தில் அக்குற்றம் முழுமையாக நிருபிக்கப்பட்டால்தான் தண்டனை தரமுடியும் என வாசகர்களுக்கு மட்டுமல்ல *மெயிலின்* இதழாளர்களுக்குச் சேர்த்து அறிவூட்டும் பணியை *நம்நாடு* இதழ் மேற்கொண்டது.

கண்ணதாசனின் *தென்றல்* இதழ் இராமனைப் பற்றி இந்தி மொழிபெயர்ப்புக் கவிதை ஒன்றை வெளியிட்டதற்கு காவல்துறையினர் 'கவிதைகளை' கைது செய்தபோது "அடக்கு முறை என்பது எதிர்கட்சிகளுக்கு உண்மையான நண்பனைப் போன்றது. அது தட்டிக் கொடுக்கும். பயமுறுத்தி அடக்க நினைக்கும் பள்ளி ஆசிரியராக அதை எதிர்கட்சிக்காரர்கள் ஒருபோதும் மதிக்க மாட்டார்கள்' என எவ்வித அடக்கு முறைகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெற்றவர்கள் திராவிட இயக்கத்தவர்கள் என கண்ணதாசன் எடுத்துரைத்துள்ளார்.

நீதிக்கட்சிகளின் ஏடுகளான *திராவிடன், ஜஸ்டிஸ், குடியரசு* முதலிய இதழ்கள் கடல் கடந்த தமிழர்களாலும் விரும்பி படிக்கப்பட்டன. பெரும்பாலான திராவிடர் இயக்க இதழ்கள் அஞ்சல் மூலமாகவே அனுப்பப்பட்டன. இதழ் விநியோகம் என்ற புதியமுறை நாற்பதுகளுக்குப் பிறகே அறிமுகமாகியது. திராவிடர் இயக்க இதழ்களையும் நூல்களையும் விற்பனை செய்யும் அன்புமணியின் வாழ்க்கை திராவிட இயக்க இதழியல், நூல்வெளியீடு பற்றிய வரலாற்றுச் சித்திரத்தைத் தருகிறது.

பார்ப்பனீய இதழ் அலுவலகத்தில் நடந்த உரையாடல் சம்பவத்தை தம்மிடம் நேரடியாகச் சொன்ன நிருபரின் பெயரைக் குறிப்பிட்டால் "அவர் வேலை போய்விடும் உண்மையிலே வேலை அவருக்கு போய்விட்டால் அவரை ஆதரிக்க தமிழர் களிடம் தினசரி உண்டா? இல்லை" யார் அந்த ரிப்போர்ட்டர் என்பதை அறிவதைவிட இது என்னுடைய கற்பனை என்பதாக நினைத்துக்கொள்ளுங்கள் என வேண்டுகோள் விடுக்கின்றார்.

பார்ப்பன இதழாளர்கள் கடைபிடிக்கும் இதழியல் தீண்டாமையை 'மவுண்ட் ரோட், அண்ணாசாலை' பெயர் பற்றிய மற்றொரு கட்டுரை *விடுதலை* இதழ் விரிவாக விளக்குகிறது. ஆதிதிராவிடர்கள் மீது *தமிழ்நாடு* இதழ் பரப்பிய அவதூறை *குடிஅரசு* இதழ் கடுமையாக கண்டித்துள்ளது.

திராவிடர் இயக்கங்களை அவதூறு செய்யும் தேசிய இதழ்களின் இயல்பைப் பாரதிதாசன் "தவறு செய்யாத தாயை இகழும் மகனின் மூலம் படைத்துக் காட்டியுள்ளார்" திராவிடர் கழக ஏடுகளான *குடிஅரசு, விடுதலை, ரிவோல்ட், பகுத்தறிவு* ஆகிய இதழ்கள் மீது அரசின் அடக்குமுறைகள் ஏவப்படும்போது அவற்றை அறவழியில் இந்த இதழ்கள் எதிர்கொண்டன. திராவிடர் கழகத்தினரைத் தந்தை பெரியார் கருப்புச் சட்டை அணியச் சொன்னபோது திராவிடர் கழகத்தையும், ராஷ்ரிய சேவாதளத்தையும் ஒரே நேரத்தில் தடைவிதிக்க திட்டமிட்ட அன்றைய காங்கிரஸ் அரசு திராவிடர் கழக அமைப்புகள், அலுவலகங்கள் அனைத்தையும் தமிழகம் முழுவதும் ஒரே நேரத்தில் சோதனையிட்டது. சோதனையின் முடிவில் கருப்புச் சட்டைகள் சிலவும், ஓரிரு திராவிட இயக்க இதழ்கள் மட்டுமே எடுத்து செல்லப்பட்ட வரலாற்றை 'ஏடுகள் போட்ட எதிர் நீச்சல் கட்டுரை' பதிவு செய்துள்ளது. கலைவாணரின் பாராட்டுவிழா நிகழ்ச்சிக்குப் பிறகு ஏற்பட்ட கலவரத்தைப் *பாரததேவியும் சுதேசமித்திரனும்* செய்தி வெளியிட்ட முறையைக் *குடிஅரசு* 'தேசியத் தாள்களின் தெகிடுதெத்தம்' என்ற தலைப்பில் வன்மையாக கண்டித்துள்ளது.

குடிஅரசு இதழின் மீது 10,000 ரூபாய் ஜாமீன் கேட்டதை மக்களிடம் கொண்டுசெல்ல *குடிஅரசு* வெளியிட்ட விளம்பரம் அந்த இதழின் மீது அரசின் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. புதுமைப்பித்தனின் பொன்னகரம் என்ற கதையின் தழுவலாக *குடிஅரசு* இதழ் வெளியிட்ட அக்கிரகாரம் என்ற கதையை வெளியிட்டது உள்ளிட்ட ஐந்து குற்றச்சாட்டுகளுக்கு ஜாமீன் தொகையாக 3000/— ரூபாய் கட்ட வேண்டும் என்ற தீர்ப்புக்கு எதிராக எழுதப்பட்ட கட்டுரை 'பழிவாங்கும் உணர்ச்சி' என்ற கட்டுரையாகும்.

அன்றைய முதல்வர் பக்தவச்சலம் கலைஞரை 1965ஆம் ஆண்டு *முரசொலியில்* வெளியிடப்பட்ட செய்திகளுக்காகப் பாதுகாப்புச் சட்டத்தில் கைதுசெய்ததை எதிர்த்து கலைஞர், தன் தரப்புக் கருத்துகளை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அபிடவிட்டும், தொன்னூறுகளில் *முரசொலி* மீது தமிழகச் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட உரிமைப் பிரச்சினையின் போது *முரசொலி* செல்வம் விசாரிக்கப்பட்டபோது நடந்த விவாதமும் *முரசொலியின்* மீது அதிகார அமைப்புகள் நடத்திய அடக்குமுறையின் வீரத்தழும்புகள்.

எழுத்தாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளாத அண்ணா எழுத்தாளர்கள் சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதை 'பரதன்' என்ற புனைபெயரில் *திராவிடநாடு* இதழில் எழுதியுள்ளார். கோவை எழுத்தாளர் மாநாடு கூலிஉயர்வு

மட்டும் கேட்டதைக் கண்டிக்கும் அண்ணா "இலட்சியமில்லாத எழுத்து மணமில்லாத மலர்' என எழுத்தாளர்கள் சமூக நோக்க மில்லாமல் செயல்படுவதைச் சாடுகின்றார்.

மூடநம்பிக்கைகளான சோதிடத்திற்கு தனிப்பகுதி வெளியிடும் இதழாளர்களைப் "பத்திரிக்கையாளர்களே! பத்திரிக்கை யாளர்களே!' என விளித்து 'பத்திரிக்கையாளர்கள் எழுத்துச் சிற்பிகள் மட்டுமல்லர். புதுயுகப் பூங்காவை நிர்மாணிக்கும் கொத்தர் என்று சுட்டிக்காட்டி கொள்கைப்பற்றோ கொள்கைத் தாக்கமோ மாச்சரிய மனப்பான்மையோ, சமுத வேண்டும் என்ற குறிக்கோள் தடைக்கல்லாக இருக்க முடியாது! இருக்கவும் கூடாது பத்திரிக்கையாளர்கள்" என இதழாளர்கள் பாரபட்சமற்ற போக்குடன் நடந்துகொள்ள வேண்டிய அவசியத்தை அண்ணா வலியுறுத்தியுள்ளார். "சோதிடப்பகுதி இல்லாத பத்திரிக்கைகள் காற்றில் பறந்துவிடவில்லை! *கல்கி, ஆனந்தவிகடன், கலைமகள்* முதலிய சஞ்சிகைகளும் *இந்துவும் மெயிலும்* எடுப்பாரற்ற தாள்களாக ஆகிவிடவில்லை! சோதி டத்தையும், சூதுக்கொள்கையும் மட்டம் தட்டும் நமதியக்க பத்திரிக்கைகள் போன்ற பத்திரிக்கைகள் நாட்டில் நடமாடவே செய்கின்றன" என மாற்றான் தோட்டத்து மல்லிகைகளைக் கண்டு அண்ணா மனமகிழ்ச்சி கொள்கிறார். மேலும் 'பேச்சுமேடை என்ற கட்டுரையில்' இதழ்களின் மூடநம்பிக்கை களைக் கடுமையாக அவர் சாடியுள்ளார். பார்ப்பனீய இதழ்களில் நிருபர்கள் படும்பாட்டை மக்களுக்கு எடுத்துக்காட்டும் கட்டுரையில் தமிழிசை மாநாட்டைப் பற்றிச் செய்தி சேகரித்து கட்டுரை எழுத, செய்தி ஆசிரியரை அணுகுகின்றனர். அப்போது அந்த மாநாட்டு நிகழ்வுகளைப் பிடிக்காத ஆசிரியர் நிருபரைப் பார்த்து "சுருக்கா ரொம்ப ஹார்டா இருந்தா போதும். ராஜா சர் பிரசங்கம் கால் காலம், ராஜாஜி பிரசங்கம் முக்கால்காலம் அல்லது ஒரு காலம் இருக்கலாம். மற்றவா பேச்செல்லாம் Mr. So and so also spokeலே சேர்த்துப்போடு போ" என்பதாக குறிப்பிடுகிறார்.

நாம் தமிழர் இயக்கத் தலைவர். சி.பா. ஆதித்தனாரால் நடத்தப்பட்ட *தினத்தந்தி* இதழ், தீபாவளி வணிகத்தில் ஈடுபடுவதைக் கண்டிக்கும் கண்ணதாசனின் *தென்றல்* இதழின் கட்டுரை ஒன்று "இன்னிசியல் முதற்கொண்டு தமிழிலேயே வேண்டும் என்று தமிழ்ப்பற்று பிரச்சாரம் செய்கின்ற *தினத்தந்தி* விளையாட்டு முதற்கொண்டு தமிழ் விளையாட்டாக விளையாட வேண்டும் என்று தலையங்கம் தீட்டும் *தினத்தந்தி* தீபாவளி கொண்டாட்டம் கெட்டுப்போகிறதே என்று கனன்று எழுதுவது மானங்கெட்டா? மதிகெட்டா?" என கேள்வி எழுப்பியுள்ளது.

தீபாவளி எதிர்ப்பு இயக்கத்தை முன்வைத்து பெரியாரின் கருத்துக்கள் கனியும் காலம் வந்துவிட்டதைப் பல்வேறு பார்ப்பனீய இதழ்களின் தீபாவளி மலர்களில் இடம்பெற்ற பலருடைய கவிதைகளில் காணப்படும் தீபாவளி எதிர்ப்பு உணர்வை அண்ணா ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியுள்ளார். ஆரியப் பண்டிகை யான தீபாவளிக்கு *ஆனந்த விகடன், கல்கி* ஆகிய இதழ்கள் மலர்களை வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்த காலக் கட்டத்தில் 'தமிழர் திருநாளைக்' கொண்டாடும் புதிய வழக்கத்தைத் திராவிட இயக்கம் தொடங்கி வைத்தது. பொங்கல் விழாவைச் சமயசார்பற்ற விழாவாக இசுலாமிய, கிறித்துவ நண்பர்களுடன் கொண்டாடும் நிகழ்ச்சிகள் நடந்தேறின. திராவிட இயக்க இதழ்கள் பொங்கல் மலர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தன. *முரசொலி* பொங்கல் மலருக்கு வெளியிடப்பட்ட விளம்பரம் அம்மலரின் உள்ளடக்கத்தை விரிவாகப் பட்டிய லிட்டுள்ளது.

எழுபதுகளில் *குமுதம்* இதழில் வெளிவந்த கருத்துகளுக்கு *கழகக்குரல்* ஏட்டில் வெளிவந்த கட்டுரைகள் குற்றம் செய்யத் தூண்டும் *குமுதம்* எனவும், குமுதத்தைப் படியுங்கள் குட்டிசுவர் ஆகிமடியுங்கள் என கண்டனம் தெரிவித்துள்ளன.

இராஜாஜியின் பெயரை மாவட்டத்துக்கு வைக்க அன்றைய தி.மு.க. அரசு அறிவித்தபோது *ஆனந்தவிகடனில்* 'வெத்து வேட்டு கண்டனம்' என்ற பெயரில் வெளியான தலையங்கத்தை 'எது வெத்து வேட்டு விகடனாரே' என 'மின்சாரம்' வரலாற்று ஆதாரங்களுடன் கேள்வி எழுப்புகின்றார். கலைஞரின் இந்தி எதிர்ப்புணர்வை கேலிசெய்த *ஆனந்தவிகடனின்* முரண்பாடுகளை அந்த இதழின் முந்தைய தலையங்க கருத்துகள் மூலமாகவே சின்னக்குத்தூசி அம்பலப்படுத்துகின்றார்.

இதழியல் துறையில் உள்ளூர் முதலாளிகளும் பார்ப்பனர் களும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இந்நிலையில் ஏற்பட்ட உலகமயமாக்கலைத் தொடர்ந்து உலக முதலாளிகளும் அந்நிய முதலீடுகளும் இந்திய இதழியல் தொழிலுக்கு வருவதைப் பற்றி ஏ.கே. வில்வத்தின் *முரசொலி* கட்டுரை விளக்குகிறது.

இந்தியா டுடே ஏடு புத்தாயிரம் மலரில் சோ எழுதிய கட்டுரையை கண்டிக்கும் மின்சாரத்தின் கட்டுரை சோ கூட்டத் துக்குத் தெரியுமா? கற்பூரவாசனை என கேள்வி எழுப்புகிறது.

திராவிடர் இயக்க இதழ்களில் கதைகள், கவிதைகள் இடம் பெறுவதுண்டு. பிரச்சாரத்துக்காகப் படைப்பிலக்கியத் துறைக்குள் திராவிட இயக்கத்தினர் படைப்பிலக்கியத்துக்கு வந்தனர் என்ற

குற்றச்சாட்டு தொடர்ந்து இருந்து வந்தாலும் அண்ணாவின் ‘தனபால செட்டியார் கம்பெனி’ கதையை விஞ்சும் வகையில் இதுவரை எந்த நவீன இலக்கியச் சிறுகதை எழுத்தாளரும் படைக்கவில்லை. உதவி ஆசிரியர் படும்பாட்டை பற்றிய உதவி ஆசிரியர் கதை ‘இதழியல் பற்றிய படைப்பாக’ இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

சென்னை மாகாணத்தில் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (நீதிக்கட்சி) தொடங்கப்பட்டு நூற்றாண்டு நெருங்கி வரும் வேளையில் திராவிட இயக்கத்தின் சாதனைகள் பற்றிப் பெருமை கொள்வதற்குப் பல காரணங்கள் இருப்பது போல கவலை கொள்வதற்கும் காரணங்கள் உள்ளன. பார்ப்பனரல்லாதார் வாழ்வியல் உரிமைக்காக தொடர்ந்து விடுதலைக் கோரிய இவ்வியக்க இதழியல் பரப்பு வெகுவாக சுருங்கி இன்று ஒரு சில குரல்களாக மெலிந்துஒலிப்பது ஏன்? இந்த இதழ்களில் எழுதிய படைப்பிலக்கிய எழுத்தாளர்கள் தொடர்ந்து எழுதாததும் பார்ப்பனரல்லாதாருக்கான மாற்று அவைதீக, பகுத்தறிவு இலக்கிய மரபை உருவாக்கர்தது ஏன்? இக்கருத்தியலுக்குகென உழைத்த பன்முகத்தன்மை கொண்ட பல்துறை அறிவாளர் கூட்டத்தை இந்த இயக்கங்கள் இழந்தது எங்ஙனம்? என்ற விடைதெரியாத கேள்விகள் பழைய வரலாற்றை அறிந்த பின்பு எழுவது இயற்கை.

சான்று பட்டியல்

தமிழ்

அலாய்சியஸ், ஞான., *அயோத்திதாசர் சிந்தனைகள், தொகுதி I, II*, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் பாளையங் கோட்டை, 1998.

ஆசான், கு.வெ.கி., *மனித உரிமைப் போரில் பெரியார் பேணிய அடையாளம்*, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை, 1989.

ஆனைமுத்து, வே. (பதி.), *பார்ப்பாரும் வேளாளரும் பறித்துக் கொண்ட வன்னியரின் மன்னவேடு ஊர்கள்*, மார்க்சிய பெரியாரியப் பொதுவுடமைக் கட்சி, சென்னை, 1993.

இராசதுரை, பு., *சுயமரியாதை இயக்கத்திற்கு நாடார்கள் ஆற்றிய தொண்டு*, இளமாறன் பதிப்பகம், விருதுநகர், 1992.

இறையன், அ., *இதழாளர் பெரியார்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2005.

சதாசிவம், டி., *சென்னை மாகாணத்தில் பொதுமக்கள் கருத்து வளர்ச்சி*, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1983.

சம்பந்தன், மா.சு., *தமிழ் இதழியல் வரலாறு*, தமிழர் பதிப்பகம், சென்னை, 1987.

______, *தமிழ் இதழியல் சுவடுகள்*, தமிழர் பதிப்பகம், சென்னை, 1990.

சாமி, அ.மா., *19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள்*, நவமணி பதிப்பகம், சென்னை, 1992.

______, *திராவிடர் இயக்க இதழ்கள்*, நவமணி பதிப்பகம், சென்னை, 2003.

சுந்தரம்பிள்ளை, குருமலை, *ஜி.சுப்பிரமணிய ஐயர் சரித்திரம்*, சுதேசமித்திரன் அச்சுக்கூடம், சென்னை, 1907.

சுந்தரமூர்த்தி, இ., மா.ரா., (பதி.ஆ) அரசு, இந்திய விடுதலைக்கு முந்தைய இதழ்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தொகுதி I, II, சென்னை, *1998*.

______, திராவிடர் இயக்க இதழ்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தொகுதி I, II, சென்னை, *2003*.

சுந்தரவடிவேலு, நெ.து., புரட்சியாளர் பெரியார், எஸ்.சந்த் அண்டு கம்பெனி, சென்னை, *1979*.

செங்கல்பட்டு (முதல்) தமிழ் மாகாண சுயமரியாதை மாநாடு *(1929)*, பெரியார் ஆவணக் காப்பக வெளியீடு, சென்னை, *2008*.

தங்கவேலு, கோ., தமிழ்த் தேசிய உணர்வின் முன்னோடி தமிழன் அயோத்திதாசப் பண்டிதர், நளினி பதிப்பகம், சென்னை, *1999*.

தமிழ்நாடன், என் மொழி என் நாடு என் மக்கள், சேலம் ஓவியர் எழுத்தாளர் மன்றம், சேலம், *1998*

திருநாவுக்கரசு, க., திராவிடர் இயக்க வேர்கள், நக்கீரன் பதிப்பகம், I, II, சென்னை, *1991*.

______, களத்தில் நின்ற காவலர்கள், நக்கீரன் பதிப்பகம், சென்னை, *1993*.

______, திராவிடர் இயக்க இதழ்கள் — ஒரு பார்வை, நக்கீரன் பதிப்பகம், சென்னை, *1998*.

______, திராவிடர் இயக்கத் தூண்கள், நக்கீரன் பதிப்பகம், I, II, சென்னை, *2007*.

நெடுஞ்செழியன், க., இரா., சக்குபாய், சமூக நீதி, மனிதம் பதிப்பகம், திருச்சி, *1996*.

பொன்னீலன், தற்காலத் தமிழ் இயக்கமும் திராவிடர் இயக்கச் சித்தாந்தங்களும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, *1988*.

வசந்தகுமார், திராவிட இயக்க கலாச்சாரம், மக்கள் கலாச்சாரக் கழகம், சென்னை, *1991*.

விவேகானந்தன், கு., அண்ணாயியம், குமரன் வெளியீடு, சென்னை, *1984*.

வேங்கடாசலபதி, ஆ.இரா., திராவிட இயக்கமும் வேளாளரும், சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை, *1994*.

வேணு, ஏ.எஸ்., சர்.பி. தியாகராயர், ஜஸ்டிஸ் பப்ளிகேஷன்ஸ், காஞ்சிபுரம், *1992.*

______, Dr. C. நடேசனார், ஜஸ்டிஸ் பப்ளிகேஷன்ஸ், காஞ்சிபுரம், *1991.*

மணி, பெ.சு., தமிழகத்தில் பிரம்ம சமாஜம், பூங்கொடி பதிப்பகம், சென்னை, *1992.*

______, நீதிக் கட்சியின் திராவிடன் நாளிதழ் ஓர் ஆய்வு, பூங்கொடி பதிப்பகம், சென்னை, *2007.*

மாறன் முரசொலி, திராவிடர் இயக்க வரலாறு தொகுதி—I, புத்தகச் சோலை, சென்னை, *1991.*

மார்க்ஸ், அ., தமிழில் அச்சுப் பண்பாடு சீர்திருத்த கிருஸ்தவர்களும் முஸ்லீம்களும், வம்சி வெளியீடு, சென்னை, *2006.*

ஆங்கிலம்

Hardgrave, Jr.R.L., The Dravidian Movement, Popular Publications, Bombay, 1965.

Irschick, F.Eugene, Politics and Social Conflict in South India, The Non-Brahmin Movement and Tamil Separatism, 1916-1929, University of California Press, Berkeley, 1969.

Mangala Murugesan, N.K., Self-Respect Movement in Tamil Nadu, 1920-1940, Kodal Publishers, Madurai, 1976.

Mohan, P.E., Scheduled Castes History of Elevation Tamil Nadu, 1900-1955, New Era Publications, Madras, 1993.

Mohanram, K., Tamil Press and the Colonel Rule, A Socio-Political Study, Prism Books, Madurai, 2003.

Kesavan, B.S., History of Printing and Publishing in India, A Story of Cultural Re-awakening, National Book Trust, 1985.

Saroja Sundararajan, March to Freedom in Madras Presidency (1916-1947), Lalitha Publications, Madras, 1989.

Suntharalingam, R., Politics and Nationalist Awakening in South India, 1825-1891, University of Arizona Press, Arizona, 1974.

Varadarajulu Naidu, T., The Justice Movement, Justice Publication, Madras, 1932. Dravidar Kazhagam, (Reprint)

நமது பத்திரிகையின் நோக்கங்கள்

இந்துக்களில் பெரும்பாலோர் பிராமணரல்லாதவர் களாயிருக்கிறார்கள். தென்னிந்தியாவின் ஜனத்தொகை சுமார் நான்குகோடியில் பிராமணரல்லாத இந்துக்களின் தொகை மூன்று கோடிக்கு அதிகமாகிறது. இவ்வளவு பெருந்தொகையினராகிய நம்மவர்களுடைய குறைபாடு களையும் முறைப்பாடுகளையும் ராஜாங்கத்தாருக்குத் தக்கபடி தெரிவித்து இவர்களுடைய செல்வாக்கை அபிவிருத்தி செய்துகொள்வதற்கு இதுவரைக்கும் இல்லாமற் போயிற்று. பொதுவாக இந்துக்களென்கிற மொத்த பெயரை வைத்துக்கொண்டே இந்துக்களுள் மிக மிகச் சிறிய பிரிவினராகிய சிலரே எல்லா நலன் களையும் எல்லா பலன்களையும் இதுவரைக்கும் அனுபவித்து வந்திருக்கிறார்கள். இப்போதும் அனுபவித்து வருகிறார்கள். முக்கியமாய் இதற்குக் காரணம் பத்திரிகை யென்கிற பலமுள்ள ஆயுதங்கள் அவர்களிடமிருப்பது தான்.

இவ்வாறாக பிராமணரல்லாத இதர இந்துக்கள் வரவரத் தமது செல்வாக்கையிழந்து ஈனஸ்திதிக்கு இறங்கிக் கொண்டிருப்பது நாளுக்கு நாள் பொறுக்க முடியாததா யிற்று. இந்தக் கொடிய நிலைமையினின்றும் தங்களைத் தப்புவித்துக் கொள்ளவும், இனிமேலாயினும் தாங்கள் அபிவிருத்தியடைய வழிகளைத் தேடிக்கொள்ளவும் வேண்டிய பிரயத்தனங்கள் செய்ய வேண்டுமென்கிற எண்ணமானது மெள்ள மெள்ள அவர்களது உள்ளத்தில் உதயமாகிக் கொண்டு வந்தது. தம்மைத் தாம் காத்துக்

கொண்டு தம்முடைய விடாமுயற்சியாலும் தளராத உழைப்பினாலும் தம்மைத் தாம் முன்னுக்கு கொண்டுவர வேண்டும்மென்றும் நியாயமான கோரிக்கை பிராமணரல்லாத இந்துக்களின் மனதில் திடமாக வேரூன்றிப் பலமான நோக்கமாய் விளங்க ஆரம்பித்துவிட்டது. இவ்விதமான எண்ணம் கண்மூடித் தனமான ஆத்திரத்திலாவது யோசனையில்லாத ஆவேசத்தினா லாவது உண்டானதன்று. நீர்க்குமிழ் போலும் மின்னல் போலும் கணத்தில் தோன்றி க்ஷணத்தில் மறைந்துபோகும் ஏற்றமில்லாத தோற்றமென்று இதனைக் கொள்ள எள்ளளவும் முடியாது. மிக நிதானமாகவும் வெகுசாவதானமாகவும் ஆரத்தீர யோசித்து தென்னிந்தியர்கள் பெரும்பாலோர் கொண்ட ஆலோசனைகள் முதிர்ச்சியினாலேயே இவ்வகையான எண்ணம் ஒவ்வொருவர் மனதிலும் உண்டானதென்று உறுதியாகக் கொள்ளலாம்.

மேற்கூறியவைகள் காரணமாக தென்இந்திய தேசிய மாஹாணங்களில் ஒன்று சென்னையில் ஸ்தாபிக்கப்பட்ட தென்பதையும், அச்சங்கத்தாலேயே ஜஸ்டிஸ் என்கிற ஆங்கிலப் பத்திரிகையொன்று நடத்தப்பட்டு வருகிறதென்பதையும் நம்மவர்கள் அனேகர் அறிந்திருக்கலாம். மேற்படி சபையாலேயே, மேலே விவரித்துள்ள நோக்கங்களை சாதித்தற்கு இன்று திராவிடன் என்கிற இத்தமிழ் தினசரி பத்திரிகையும், ஆந்திரப் பிரகாசா என்கிற தெலுங்குத் தினசரி பத்திரிகை ஆரம்பிக்கப்படுகின்றன.

முன்சொன்னபடி தென்னிந்தியர்களில் பெரும்பாலானோர் பிராமணரல்லாராகிய இந்துக்களேயாவர். பிராமணரென்பவர்கள் மிகக்குறைந்த எண்ணிக்கையினர். ஆகவே பிராமணர், பிராமண ரல்லாதார் என்ற இரு வகுப்பினருள் திராவிடர்களே தென்னிந்திய மஹாஜனங்கள் என்று திருத்தமாய் நாம் கூறலாம். இத்தனை நாள் இவர்கள் தாலாட்டித் தூங்க வைக்கப்பட்டிருந்து இப்பொழுதுதான் இவர்கள் உடம்பை உதறித் திடம்பெற்று எழுந்திருப்பதைக் கண்டு மனம்பொறாத சிலர் இவர்களுடைய நோக்கங்களைப் பூர்த்தியாய் ஆராய்ந்து பாராமல் மேற்வாரியாய் தோஷம் கூறத் தொடங்குவதுபோல் வேடம்போட்டு மேல் நாம் கூறியுள்ள அபிப்பிராயங்கள் சில தந்திரசாலிகள் பேராசையையோ அல்லது ஏமாற்றமடைந்த உத்தியோகஸ்தர்களின் விருப்பங்களையோ பறிப்பதாகச் சொல்லக்கூடும். அது சிறிதும் உண்மையன்று. முற்றிலும் பிசகான தென்றே முடிவாக நாம் கூறுவோம். ஆகவே, தேசிய திராவிடர்களாகிய நம்மோர் முன்னுக்கு வருவதற்கு தடையாயுள்ள தப்பபிப் பிராயங்களையும் விபரீதக் கொள்கைகளையும் பேசித் தெரிந்து உண்மையைச் சாதித்து நிலைநிறுத்துவதே திராவிடனாகிய இப் பத்திரிகையின் திருத்தமுள்ளதொரு நோக்கமாகும்.

கண்ணைக்கட்டிக் காட்டில் விடுவதுபோல் செய்யும் குருமார்களுடைய அதிகாரம் வெகுவாகப் பிரதிபலித்திருந்த காலங்களிலும் தேசங்களிலும் அவர்கள் சொல்லுவதே ஞாயம், அவர்கள் புகழுவதே போத நவநீதமென்று கொள்ளுவது சகஜமாயிருந்து சங்கடம் விளைவித்து வந்தது. அந்தக் கண்மூடி அகற்றப்பட்டவுடனே அந்தகாரமும் தொலைந்தது. சூரிய வெளிச்சமும் தெரிந்தது. மாட்சிமை தங்கிய ஆங்கில அரசாட்சி மாண்புடனே நம் தேசத்திற்கு எட்டினவுடன் இருட்டு எண்ணங்களும் குருட்டுக் கொள்கைளும் இடம் விட்டே எழுந்தோடிவிட்டன. சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளை யிடத்திற் போலவும், செய்ததையே செய்யும் வழக்க வேலைக் காரனிடத்திற் போலவும் நிலைமை பெற்றுத் தலைமையுற்றிருந்த கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக அறிவும் பிரகாசித்தது ஒழுக்கமுறையும் விசாலித்தது. சுயேச்சையாய்ப் பிரவர்த்திப்பதற்குச் சமயமும் வாய்த்தது. எவ்வளவோ அநியாயமாய் போலிக் குருபீடங்கள் நம்மை நடத்தியும் எல்லாம் வல்ல இறைவனது மகத்துவம் பொருந்திய கட்டளைபோல் பாவித்து அதற்கு உட்பட்டு வந்த அடிமைத்தனம் தொலைந்தது. இவ்விதமாக நமக்கு எவ்வளவோ நன்மை தந்துதவிய பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் மீது இடையறாத அன்பையும் தளர்வுறாத விஸ்வாஸத்தையும் என்றென்றும் காட்டிச் செல்வதே இணை யில்லாத நமது நோக்கமாயிருக்கும். ஆயினும் துரைத்தனத் தாருடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் அவர்கள் கொண்ட கோட்பாட்டையும் அனுசரிக்கும் ஏற்பாட்டையும் துரைத் தனத்திலுள்ள கீழ் உத்தியோகஸ்தர்கள் நடத்தும் சகல நடவடிக்கை முதலியவைகளையும் விரோதப் பான்மையின்றியும், நேச விஸ்வாசமானது சிறிதும் குறைவுபடாமலும் அவமதித்து, கேலி செய்யும் அகந்தையான எண்ணமில்லாமலும் எடுத்தெழுதி கூறி, நல்லவை கெட்டவைகளை நன்றாக விளக்கி, துரைத்தனத் தாருடைய வேலையைச் சுலபப்படுத்தவும் தேசத்திலுள்ளவர் களுக்கு முன்னிலும் நன்மை அதிகமாக உண்டாக்கவும் நம்மா லானவரைக்கும் நன்றாக உழைப்போம். பொதுவாக இவ்வுலகத் திலுள்ள பற்பல மனிதர்களைப் பற்றியும் விஷயங்களைப் பற்றியும் ஸ்தாபனங்களைப் பற்றியும் சரியான அபிப்பிராயங்கள் பரவும்படி செய்வதற்கு நம்மாலான முயற்சிகள் – நன்றாகச் செய்வோம்.

இப்பொழுது நடந்து வரும் மஹாயுத்தத்தில் நமது மாட்சுமை தாங்கிய இராஜாங்கத்தினரும் நேசராஜ்யங்களும் சம்பூரண ஜயமடைந்து, வெற்றிமாலைபூண்பதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். அந்த வெற்றியை அரசாங்கத்தினர் துரிதமாகவும் பூரணமாகவும் அடைவதற்குப் பொருளாதாரங்களுடைய மனித உதவிகளையும் ஏராளமாய்க்

கொடுக்க வேண்டும். ஆனால் பொதுவாக ஏகாதிபத்தியத்தை பாதிக்காமல் முழுவதும் ஸ்வதேச சம்பந்தமாகவே ஏற்படும் அவசரத் தன்மையான விஷயங்களை இம்மஹாயுத்தத்தின் காரணமாக ஆலோசிக்காமல் நிறுத்தி வைக்கமுடியாது. அப்போதிலும் அப்படிப்பட்ட விஷயங்கள் இந்திய பொது ஜனங்களில் சகலவிருப்பங்களுடைய நிரந்தரமான பிரயோசனத்தை உத்தேசித்தே முடிவு செய்யப்படவேண்டுமேயன்றி பொதுஜனங்கள் பேரால் ஒருசிறு வகுப்பினரே எல்லா லாபங்களையும் எடுத்துப் போகும்படி விடுதல் கூடாது.

இந்தியாவில் ஜாதிமத பிரிவுகள் அநேகமிருக்கின்றன. சாதி பேதங்கள் முற்றிலும் ஒழிய, தேசம் சீற்படுகிறவரைக்கும், சகல வகுப்பாருக்கும் நியாயம் கிடைப்பதற்கு, ஒவ்வொரு ஜாதியாரும் இனத்தாரும் சமயத்தாரும் தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாகவும் தேசத்தில் தங்கள் தங்களுக்குரிய மேன்மையையும் அந்தஸ்தையும் ஜனத்தொகையை அனுசரித்தும் செம்மைப்படுத்தப்பட வேண்டும்.

துரைத்தனத்தார் ஒவ்வொரு வகுப்பையும் ஒவ்வொரு ஜாதியையும் ஒவ்வொரு பிரிவையும் சேர்த்து பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகளுடனும் விவேகமுள்ளவர்களுடனும் கலந்துயோசித்து ஒரு ஏற்பாடு தயார் செய்வதே உசிதமானது. இல்லாவிட்டால் காரியத்திலேயே கண் நிலைக்க முடைய சிலரே பொதுஜனங்கள் பெயரால் சுயலாபமடைய நேரிடும். மேலும் ராஜ்யபரிபாலன விஷயங்களைப் பற்றி மாத்திரமே எழுதுவது நம்முடைய நோக்கமன்று. முன் சொன்னபடி பிராமணரல்லாத இந்துக்கள் பெரிய ஜன சமூகத்தாராயிருக்கின்றவர்கள். இவர்களும் நம்முடைய நேசப் பான்மைக்குரிய கிறிஸ்தவர்களும் முஹம் மதியர்களும் இந்தியாவின் செல்வநிலையைப் பெரிதும் வளர்த்தவர்களாயிருக்கிறார்கள். ஜனத்தொகையாலும், நில உரிமையாலும் வியாபார ரீதியாகவும், மிக்க மேம்பாடடைந்த நமது திராவிடர்கள் துரைத்தனத்தாருடைய ஆதரவினால் தங்கள் நியாயமாய்ப் பெறக்கூடிய உரிய அதிகார பாகத்தை தங்களுக்குக் கொடுக்கும்படிக் கேட்பதற்கு உரித்தானவர்கள். துரைத்தனத்தாருடைய வசத்திலுள்ள உத்தியோகங்களிலும் பெரும்பாலும் அடையப் பாத்தியமுடையவர் நம் தேசிய திராவிடரே. இவர்களுக்குச் சேரவேண்டிய ராஜிய அதிகாரத்தை இவர்கள் செலுத்தக் கூடியவர்களாயிருக்குற பட்சத்திலே இவர்களுக்கு நன்மை விளைவதுமல்லாமல் இவர்கள் இடைவிடாமல் பூர்த்தியான விஸ்வாஸத்துடன் சதாபணிந்து வரும் துரைத்தனத்தாருங்கூட ஒரே மாதிரியான நன்மையுண்டாகும். ஏனென்றால் ஆர்க்காட்டிலும் பிளாசியிலும் போர் புரிந்தவர்கள் இந்த ஜன சமூகங்களைச் சேர்ந்தவர்களே. ஹைதரலியும் திப்பு சுல்தானும்

பிரிடிஸ்ஷாருடன் பயங்கரமான கொடும்போர் விளைத்த காலத்திலும் பிராமண ரல்லாத இந்துக்களே உடன்நின்று மிகவும் உதவி புரிந்து ஜயக்கொடி நாட்டி அஸ்திவாரக்கல் அமைத்தவர்கள். நாளது வரைக்கும் ராணுவத்தில் ஏராளமாய்ச் சேவகம் புரிபவர்களும் இவர்களே. பிரான்சிலும், மேஸபொடோமியாவிலும் இவர்களுடைய வெற்றிகளும் எல்லோரும் வியக்கத் தக்கவையா யிருக்கின்றன. இவர்களுடைய மாதிரியை இவர்களுடைய சந்ததியார்களும் எக்காலத்தும் ராஜ விஸ்வாஸமுடையவர்களாய் சேவகம் புரிய சித்தமாயிக்கிறார்கள். இவ்விதமான பாத்தியதை யுடையவர்கள் பால் இந்தியாவிலுள்ள சர்க்கார் உத்தியோகங்கள் விஷயமாய் துரைத்தனத்தார் தங்கள் நோக்கத்தை செலுத்தும்படி மிகவும் வினயமாய்க் கேட்டுக்கொள்ளப்படுவார்கள். இவ்வாறு துரைத்தனத்தார் கண்ணோக்கம் செலுத்துவதாகிய சரித்திரம் பிரசித்தமாய் பூர்வீக மேன்மை வாய்ந்தவர்களாக இருக்கும் ஜனசமூகங்களின் உரிமைகளையும் சுதந்தரங்களையும் துரைத் தனத்தார் கவனிக்கத்தக்கவர்களாவார்கள். ஆயினும் இந்த ஜனசமூகங்கள் மேலும் மேலும் விருத்தியடைவதற்கு இவர்களது பிற்கால நிலைமை மேலும் மேலும் உன்னதமடைவதற்கும் தாங்களே கவனிக்க வேண்டிய விஷயங்களும் அனேகமிருக்கின்றன. விவசாய விஷயத்திலும் அதிக ஊக்கத்துடனும் மிக்க உற்சாகத்துடனும் இவர்கள் அதிகமாய் முயன்று வரவேண்டும். சயன்ஸ்களாகிற நவீன சாஸ்திரங்களின் ஆராய்ச்சிகளினாலும், அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசத்தவர்கள் மேற்படி விஷயங்களில் அபிவிருத்தியடைந்திருக்கிற மாதிரிகளைப் பின்பற்றியும் நாமும் அபிவிருத்தியடையப் பிரயத்தனப்படவேண்டும். பிரதம கல்வி, மத்திய தரக்கல்வி, உயர்தரக்கல்வி இவைகளிலும் நாம் முன்னுக்கு வர முயல வேண்டும். முக்கியமான இடங்களிலெல்லாம் சங்கங்கள் ஸ்தாபித்து இளைஞர்களுடைய கல்வி விஷயத்திலும் கைத்தொழில் விஷயத்திலும் இடைவிடாத கவனத்தைச் செலுத்த வேண்டும். இங்குக் கூறிய இந்த எல்லா விஷயங்களைப் பற்றியும் இந்தப் பத்திரிகை அவ்வப்போது விவரித்துப் பேசும். பற்பல கலைகளையும் சாஸ்திரங்களையும் நம்மில் அனேகர் கற்பது வெகு அவசியமும் உபயோகரமுமாயிருப்பதோடு கூட அறிவையும் உணர்ந்து தேக சுகத்தையும் அது ஏராளமாய்க் கொடுக்கு மென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இந்த தேசத்திலுள்ள ஒவ்வொரு ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் அவர்களுக்கு மாத்திரமேயல்லாமல் பொதுஜனங்களுக்கும் தேசத்துக்கும் ஒரே மாதிரி உபயோகப்படக்கூடிய ஒரு தொழில் அல்லது வியாபரத்தில் பழக்க வேண்டும். இவைகளைப் பற்றி ஏற்றபடி வற்புறுத்திப் பேசுவதும் இப்பத்திரிகையினுடைய இயைந்ததொரு நோக்கமாகும்.

இவ்விதமான பற்பல நோக்கங்களைக் கொண்டு இப் பத்திரிகை இன்று தொடங்கி உலாவ ஆரம்பிக்கிறது. பொதுவாக இந்தியர்களுடைய நன்மையை உத்தேசித்தும் முக்கியமான பிராமணரல்லாத மூன்றரை கோடி ஜனத்தொகையுள்ள இந்துக் களின் நன்மையை உத்தேசித்தும் ஆரம்பிக்கப்படும் இப் பத்திரிகையானது அவர்களில் பிரமுகர்களாயுள்ளவர்கள் பிரதிநிதிகளாயுள்ளவர்களுடைய அங்கீகாரத்தைப் பெற்று, இந்தப் புதிய முயற்சி சித்திபெறச் செய்யும் எனக் கோருகின்றோம். இதனால் உண்டாகும் பிரயோஜனமானது மேலும் மேலும் பெருகி, தேசத்துக்கு நன்மை விளைத்து ஜனங்களுக்கு க்ஷேமத்தைக் கொடுத்து, பிரிட்டிஷ் அரசாட்சிக்கும் மேன்மையைத் தருமென்பதில் சந்தேகமில்லை.

— **திராவிடன்**

01.06.1917

○○○

திராவிடர் அறிய வேண்டியது

இப்போது தென்னிந்திய திராவிடர்கள் தங்களுடைய பழைய உயர் நிலைமைகளை நன்கறிதல் அவசியம். இவர்களது முன்னோர் களிருந்த ஸ்திதியையும். இப்போதியவர்களின் ஸ்திதியையும் கவனிப்பவர்களுக்கு பரிதாபமாக விருக்குமென்பதறகு ஐயமில்லை. பூர்வத்தில் திராவிடர்களுக்கு சுதந்திரங்கள் இருந்தன. ஆரியவர்கள் திராவிடர்களது அபிமானங்களையும் தயயைகளை யும் விசேஷமாகப் பெற்று... திராவிடர்களையே ஆண்டுவரத் துணிந்துவிட்டமையால் தற்காலத்திய திராவிடர்கள் தங்களது அறிவுகளைத் தக்கவாறு உபயோகித்துத் தங்களுக்கு நேர்ந்த இடஞ்சல்களை ஒழிக்கவும் உரிமைகளைச் சுவாதினப்படுத்திக் கொள்ள வெளிவந்தார்கள். இவையாவும் ஞாயந்தானே? இதற்காக ஆரியர்கள் ஏன் ஆத்திரமும் கவலையும்பட வேண்டும்? இப்பெரு அவாக் கொண்டதினால்தான் மற்றோர் வட நாட்டாரியர்கள் வைதீகங்களினின்றும், லௌகீக ஆசாரங்களின்றும் ஆரியவேத சாஸ்திர ஞானவாயிலால் மறுத்தே வருகிறார்கள். அவ்வாறு தமிழ்வேத ஞானவாயிலாயும் சிறந்த திராவிடர்கள் மறுக்கிறார்கள்.

தற்காலத் திறமையால் திராவிடர்கள் தங்களுடையச் சுயார்ஜிதமான தருமச் சொத்துக்களைச் சுவாதினப்படுத்திக் கொள்ளவும் வைதிகச் சடங்குகளை தங்களின் சாத்திரிமார்களால் நடைபெறச் செய்து கொள்ளாமல் தங்கள் அறிவையும் பயன் படுத்தவும் முன்வந்திருக்கிறார்களே யொழிய வேறில்லை. இதற்காக ஏன் பொறாமைப் பட வேண்டும்? இது அறியாமையாலும் உள்ளதை

யறிந்த திராவிடர்கள் அன்னியர் மேலுள்ள அபிமானங்களை விட்டு தங்களது வைதீக, லௌதீக ஒழுக்கங்களைத் தங்களது தமிழ் வேதாகமப்படி தங்களவர்களாலே யியற்றிக்கொள்ளலாம். இவ்வாறு முடிவு செய்து கொண்டாலொழியத் திராவிடர்களுக்கும் பெருமையுண்டாகாததன்றோ? வெறும் சொற்களை உபயோகிப் பதைவிட சொல்லியவண்ணம் நடப்பதே உத்தமம். திராவிடர்கள் இச்சமயத்தில் தங்களது அறிவை ஊர்ஜிதமாக்கிக் கொள்ள வேண்டும்.

பிடித்த அறிவின் விளக்கை பிரகாசிக்க செய்ய வேண்டும். இவ்விளக்கை ஓர்கால் அணைக்கும் பெருங் காற்றாகிய வாயு தோன்றாதிராது. அப்போது திராவிடன் சளைக்காமல் என்றேற்படல் வேண்டும். ஆனால் நமது சிறந்த ஆங்கில அரசாட்சியாருடன் கலந்துறவாட வேண்டிய கடமை 'திராவிடர் களுக்குரிய தாகையால் அவர்களுக்கு பணிந்து கிடப்பதே உசிதமாகும்.

— திராவிடன்

25.06.1917

‘குடியரசு’ ஏடு

– தந்தை பெரியார்

நமது “குடிஅரசு”ப் பத்திரிகை ஆரம்பித்து ஆறு மாதங்களாகின்றது. அது முக்கியமாய் நமது நாட்டுக்கு சுயராஜ்யமாகிய மகாத்மாவின் நிர்மாணத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவும் தமிழர் களாகிய தீண்டாதார் முதலியோருடைய முன்னேற் றத்துக்கென்று உழைக்கவுமே ஏற்படுத்தப்பட்டது. இத்தொண்டில் “குடிஅரசு” சிறிதுங் கள்ளங் கபட மின்றி யாருடைய விருப்பு வெறுப்பையும் பொருட் படுத்தாது தனது ஆத்மாவையே படம் பிடித்தாற் போல் தைரியமாய் வெளிப்படுத்தி தொண்டு செய்து வந்திருக்கின்றது – வரவும் உத்தேசித்திருக்கின்றது. “குடிஅரசு” குறிப்பிட்ட கருத்தைக் கொண்ட பிரச் சாரப் பத்திரிகையேயல்லாமல் வெறும் வர்த்தமானப் பத்திரிகை அல்லவாதலால், வியாபார முறையையோ பொருள் சம்பாதிப்பதையோ தனது சுயவாழ்வுக்கு ஓர் தொழிலாகக் கருதியோ சுய நலத்திற்காக கீர்த்திபெற வேண்டுமென்பதையோ ஆதாரமாய்க் கொள்ளாமலும், வாசர்களுக்கு போலி ஊக்கமும், பொய்யான உற்சாகமும் உண்டாகும்படியாக வீணாய் கண்ட கண்ட விஷயங்களையெல்லாம் கூலிக்கு எழுதச் செய்வித்தும், குறிப்பிட்ட அபிப் பிராயமில்லாமல் சமயத்திற்கேற்றார்போல் ஜனங் களின் மனதைக் கலங்கச் செய்து வருவதுமான பொறுப்பில்லாத ஓர் வேடிக்கைப் பத்திரிகையுமன்று. பிரதிவாரமும் ‘குடிஅரசு’ தனது ஆத்மாவை வெளிப் படுத்தும்போது கண்ணீர் சொட்டாமலிருக்க

முடிவதேயில்லை. இதன் பலனாக, உயர்ந்தோரென்று சொல்லிக் கொள்வோராகிய பிராமணர் முதலிய சமூகத்தாருக்கும், ராஜீயத் தலைவர்களென்று சொல்லிக்கொள்ளுவோர்களாகிய பல ராஜ தந்திரிகளுக்கும், விரோதியாகவும் அவர்களுடைய சூழ்ச்சிப் பிரசாரங்களுக்கு நமது 'குடிஅரசு' ஆளாக வேண்டியதாகவும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வித நிலையில் 'குடிஅரசு' சீக்கிரத்தில் பாமர ஜனங்களின் செல்வாக்கைப் போதிய அளவு பெற முடியாமலிருப்பது ஓர் ஆச்சரியமல்ல.

பார்ப்பனரை எதிர்ப்பதேன்?

உண்மையில் 'குடி அரசுக்கு' எந்தப் பிராமணரிடத்திலும், குரோதமோ வெறுப்போ கிடையாதென்பதை உறுதியாகச் சொல்லுவோம். ஆனால், பிராமணன் உயர்ந்தவன் என எண்ணிக் கொண்டிருப்பதிலும், மற்றவர்கள் தீண்டத்தகாதவர்கள், பார்க்கக் கூடாதவர்கள், "இழிவான" மிருக உரிமைக்கும் பாத்திரமில்லா தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணத்தினிடத் திலும், தங்கள் வகுப்பார்தான் முன்னணியிலிருக்க வேண்டும், மேன்மையுடன் பிழைக்க வேண்டும், மற்றவர்கள் என்றென்றைக் கும் தங்களுக்கு அடிமையாகவே இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டும், அதற்காக மற்றவர்களை உபயோகித்துக் கொண்டும் செய்யும் கொடுமையான சூழ்ச்சிகளிடத்திலுந்தான், "குடிஅரசு"க்கு வெறுப்பு இருப்பதுடன், அதை அடியோடே களைந்தெறிய வேண்டுமென்று ஆவல் கொண்டு உழைத்து வருகிறது.

பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்வோரிடத்தில் 'குடிஅரசி'ன் தற்காலப் பத்திரதிபர் எவ்வளவோ அன்புடனும் பக்தியுடனும், நட்புடனும் வெகுகாலமாக நடந்து கொண்டு வந்திருக்கிறார். அநேக பிராமணர்களுடைய அன்புக்கும் பாத்திரமாயிருந்திருக்கிறார். இன்னும் இருந்து வருகிறார். தேசிய வேலையிலும், பல தேசிய பிராமணர்களுடன் ஒன்றுபடக் கலந்தே ஒத்துழைத்தும் வந்திருக்கிறார்.

ஒரு உதாரணம்

உதாரணமாக, ஒத்துழையாமைக்கு முன்பு சட்டசபைப் பிரவேசங்களுக்கு தனது குடும்ப சகோதரர்கள் போன்ற ஆப்த நண்பர்களான ஸ்ரீமான்கள் கோவை. எம். சம்பந்த முதலியார், டி.ஏ. ராமலிங்கம் செட்டியார், எம். வேணு கோபால் பிள்ளை முதலியோர்களுக்கு விரோதமாகவும், அதற்கு முன் அதிகப் பழக்கமில்லாத ஸ்ரீமான். பி.வி. நரசிம்மய்யருக்கு 'தீவிர தேசியவாதி' என்கிற ஒரு காரணத்திற்காகவே அவருக்கு சட்டசபை அங்கத்தினர் பதவி கிடைக்க வேண்டிய வேலை செய்திருக்கிறார்.

இதில் ஒரு விஷயத்தை மாத்திரம் இங்கு சொல்வது குற்ற மாகாதென்று நினைக்கிறோம். அதாவது ஸ்ரீமான் வேணுகோபால் பிள்ளைக்காக ஸ்ரீமான். நரசிம்மய்யரை தம் அபேட்சகர் ஸ்தானத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளும்படி ஒரு சட்டசபைத் தேர்தலில் கேட்கப்பட்டபோது, ஸ்ரீமான். பி.வி. நரசிம்மய்யர், ஸ்ரீமான். வேணுகோபால் பிள்ளை தாம் காங்கிரஸ் வாதியென்றும், ஹோம்ரூல் கட்சியைச் சேர்ந்தவரென்றும், வெளிப்படையாகப் பத்திரிகைகளுக்கு எழுதினால் தாம் அபேட்சகர் ஸ்தானத்திலிருந்து விலகிக் கொள்வதாகப் பகிரங்கமாகச் சொன்னார். அந்தப்படியே ஸ்ரீமான். வேணுகோபால் பிள்ளையும், தாம் காங்கிரஸ் வாதியென்றும் ஹோம்ரூல் கட்சியைச் சேர்ந்தவரென்றும் பத்திரிகைகளுக்கு எழுதிவிட்டார். பேச்சுப்படி ஸ்ரீமான். நரசிம்மய்யர் பின்வாங்கிக்கொள்ள வேண்டுமென்று சொன்ன காலத்தில், முடியாதென்று சொல்லிவிட்டார். இது விஷயங்களைப் பத்திரிகைகளுக்கு எழுதின காலத்தில், "நியூ இந்தியா", "ஹிந்து", "சுதேசமித்திரன்" இம்மூன்றும் பிரசுரிக்கவேயில்லை. இம்மாதிரி நாணயத்தவறுதல் ஏற்பட்ட சந்தர்ப்பத்திலுங்கூட ஸ்ரீமான் நாயக்கர், தம்முடைய ஆப்த நண்பராயிருந்துகொண்டு வந்த ஸ்ரீமான் வேணுகோபால் பிள்ளையவர்களுக்கு விரோதமாகவும், ஸ்ரீமான். நரசிம்மய்யருக்கு அனுகூலமாகவுமிருந்து தம்முடைய வோட்டுகளையும், தம் நண்பர்களுடைய ஓட்டுகளையும் ஸ்ரீமான் நரசிம்மய்யருக்கே கொடுத்து அவரை சட்டசபை மெம்பராக இருப்பதற்கும் உதவி செய்தார்.

கிடைத்த அனுபவம் பேசுகிறது!

அல்லாமலும், ஒத்துழையாமை காலத்திலும், தேசீய பிராமணர்களுடன் ஒன்று படக்கலந்தே, பரிசுத்தமாய் சில பிராமணர்களைப் பின்பற்றியும், அவர்களைத் தலைவர்களாக் கியும், அவர்களைத் தலைவர்களாகக் கொண்டும், உழைத்து வந்திருக்கிறார். இவையெல்லாம், தேசத்தையும், தேசக்ஷேமத்தையும் முன்னிட்டேயல்லாமல் வேறெவ்வித சுயநலத்திற்காகவும் அல்ல என்பதை ஸ்ரீமான் நாயக்கரின் எதிரிகளும், –கூட அறிவார்கள். இப்படியிருக்க இப்பொழுது, திடீரென்று, சில தேசீயவாதிகளென் போரிடமும் முக்கியமாய் பிராமண சமூகத்தில் பலரிடமும் அருவருப்புத் தோன்றக் காரணமென்னவென்பதை வாசகர்கள் அறிய ஆவல் கொள்ளுவது சுபாவமேயாகும். நமக்கு இதுவரை ஏற்பட்ட அனுபவத்தில், பிராமண தேசீயவாதிகளென் போரில் பெரும்பாலோர், தங்கள் சுயநலத்திற்கும், தங்கள் வகுப்பு முன்னேற்றத்திற்கும், பிராமணரல்லாத மற்ற எல்லா சமூகத்திற்கும் துரோகம் செய்வதற்குமே உழைத்து வந்திருக்கின்றார்களென்றும் ஸ்ரீமான் நாயக்கர் போன்றோரை உபயோகப்படுத்திக்கொண்டு

வந்திருக்கின்றார்களென்றும் நினைக்கும்படியாகவே ஏற்பட்டுப் போய்விட்டது.

பார்ப்பனரின் தியாகம் எதற்குப் பயன்படுகிறது?

பிராமணர்களின் தியாகமென்று சொல்லப்படுவதும், பிராமணரல்லாதாரின் கெடுதிக்காகவே செய்யப்படுவதாய்க் காணப்படுகிறது. இந்நிலையில், தேசத்தின் பெரிய சமூகத் தாரான, பிராமணரல்லா தாரைப் பலி கொடுத்து பிராமணர்களுக்கு நல்ல பிள்ளைகளாய் நடக்க வேண்டும் என்கிற எண்ணம் கொஞ்சமும் தோன்ற மாட்டேனென்கிறது. அல்லாமல், இவற்றைப் பற்றிய கவலை எடுத்துக் கொள்ளாமல் எப்படியோ போகட்டும் என விட்டுவிடுவதற்கும் மனம் ஒருப்படுவதில்லை. என்றைக் கிருந்தாலும் இரு சமூகத்தினரும் ஒன்றுபட்டுத்தானாக வேண்டும். அங்ஙனம் ஒன்றுபடுதவற்கு அவரவர்களுடைய குற்றங்குறைகளை எடுத்துச் சொல்லப் பயந்துகொண்டு மேற்பூச்சுக்கு மாத்திரம் பிராமணர்களிடம் அன்பர்களாய் நடந்து கொள்ளுவதில் ஒரு சமுகத்தாருக்கு ஒரு பிரயோஜனமுமேற்படாது எனக் கருதியே, யாருடைய நிஷ்டூரம் ஏற்பட்டாலும் அதைப்பற்றிக் கவலை யில்லாமல் உண்மையை எடுத்துக்கூறி, குற்றங்களைக் கூறி ஆற்றி திருத்துப் பாடடையச் செய்து இருசமூகமும் உண்மையான சகோதர அன்பில் கட்டுப்பட்டு, நமது நாடு உண்மையான விடுதலை பெறவே, உழைத்து வரப்படுகிறது. இதை ஆரம்பத்திலேயே "குடிஅரசு'வின் முதலாவது இதழ் தலையங்கத்தில் 'மக்களுக்குள் தன் மதிப்பும், சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளரல் வேண்டும். மக்கள் அனைவரும் அன்பின் மயமாதல் வேண்டும். உயர்வு, தாழ்வு என்ற உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் சாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாக இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணும் உண்மையறிவு மக்களிடம் வளர்தல் வேண்டும். சமயச் சண்டைகள் ஒழிய வேண்டும், ஆனது பற்றியே, "நகுதற் பொருட்ன்று நட்டல் மிகுதிக்கண்மேற் சென்றிடித்தற் பொருட்டு'' எனும் தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் வாக்கை கடைப்பிடித்து, "நண்பரே யாயினுமாகுக, அவர்தம் சொல்லும், செயலும் தேச விடுதலைக்குக் கேடு சூழ்வதாயின் அஞ்சாது கண்டித்தொதுக்கப்படும்'' என நமது அபிப்பிராயத்தைத் தீர்க்கமாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

பாமர மக்களின் ஆதரவு சுலபமல்ல!

இந்நிலையில், நமது 'குடிஅரசு' பாமர ஜனங்களின் ஆதரவைப் பூரணமாக பெறுவது சுலபத்தில் எதிர்பார்க்க கூடிய காரியமல்ல. உதாரணமாக, 'குடிஅரசு' ஏற்பட்டு ஆறுமாத காலமாகியும் இதுவரை ஆயிரத்துச் சில்லரை சந்தாதாரர்களே சேர்ந்திருக்கிறார்கள்.

இது நஷ்டத்தில்தான் நடைபெற்று வருகின்றதெனச் சொல்ல வருந்துகிறோம். அதனைப் படிக்க வேண்டிய அளவு ஜனங்கள் படிக்கவில்லை என்பதே நமது அபிப்பிராயம். பெரும்பாலும், பிராமணர், செல்வந்தர், முதலாளிகள், வைதீகர் முதலியோருடைய குற்றங்களை எடுத்துச் சொல்லி வருவதால் அவர்கள் நமது பத்திரிகையை ஆதரிப்பார்களென்று எதிர்பார்ப்பது பயித்தியக் காரத்தனமாகவே முடியும். ஆதலால், நமது பத்திரிகையை ஆதரிக்க வேண்டியது பிராமணரல்லாதார், ஏழைகள், தொழிலாளிகள், தீண்டாதாரென்னப்படுவோர் முதலிய ஒடுக்கப்பட்ட சமூகத் தாருக்கு ஏற்பட்ட முக்கிய கடனாகும். அந்தப்படி இக்கூட்டத்தார் நமது 'குடிஅரசு'வை ஆதரிக்கவில்லையானால், 'குடிஅரசு' தானாகவே மறைந்து போக வேண்டியதுதான் அதனுடைய கடமையே யல்லாமல். முன் சொன்னதுபோல் சுயநலம் முதலியவைகளுக் கென்று இப்பத்திரிகையை நடத்துவதில் பிரயோஜனமில்லை. ஏனெனில், 'குடிஅரசு'வானது தன்னுழைப்பினாலும், தனது தியாகத்தினாலும் மக்கள், சிறப்பாய் பிராமணரல்லாதார், தீண்டாதார் முதலியோர் விடுதலைபெற்று சுயமதிப்புடன் வாழ்ந்து தேசம் உண்மையான சுயராஜ்யமடைய வேண்டுமென்றும், சகலரும் சமமாய் வாழவேண்டுமானால், தாழ்த்தப்பட்டவர் களெல்லாம் சம நிலைக்கு வரவேண்டுமானால் – வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இன்றியமையாதெனக் கருதி, அதையெல்லா வகுப்பாரும் அடைய வேண்டுமென எதிர்பார்க்கிறதே யொழிய, பொதுமக்கள் வாழ்வால் 'குடிஅரசு' வாழவேண்டு மென்று அது கருதவேயில்லை. ஆதலால் 'குடிஅரசு'வின் வாழ்வைக் கோருகிற ஒவ்வொருவரும் தங்களாலியன்ற அளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்து, மற்றும் தங்களால் கூடிய உதவி செய்தும் இதனை ஆதரிக்க வேண்டுகிறோம்.

— குடிஅரசு

01.11.1925

சுதேசமித்திரனின் ஜாதிபுத்தி

– தந்தை பெரியார்

சுதேசமித்திரன் பத்திரிகை “அதிகார வர்க்கத்திற்கு ஒரு யோசனை” என்கிற தலைப்பின் கீழ் “ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பாட்னா முடிவுக்கு விரோதமாய் தஞ்சையில் சுயராச்யக் கக்ஷியார் தேசத்திற்கு நன்மை செய்ய ஏற்பட்டவர்கள் அல்ல வென்றும் சுயராச்சியக் கக்ஷியாரும் இதரர்களும் கோருகிற சுயராச்யம் இந்தியாவுக்கு வேண்டியதில்லை என்று சொன்னாராம் என்றும், காங்கிரஸ்காரரர் இப்படிச் சொல்லுவது அழகல்ல வென்றும் சென்னை கீழ்ப்பாக்கம் தேர்தல் ஸ்ரீமான் நாயக்கர் மனதை வாட்டி வருகிறதென்றும் இப்படிப்பட்டவர் ஜஸ்டிஸ் கட்சியிலோ வேறு கட்சியிலோ சேர்ந்து கொள்ளலாம் என்றும் எழுதி, நாயக்கர் சுயராச்யமே வேண்டாமென்று பேசியதாக பொது ஜனங்கள் நினைக்கும்படி எழுதியிருக்கிறது. இவ்வெழுத்துக்களில் எவ்வளவு அயோக்கியத்தனமும் அற்பத் தனமும் நிறைந்திருக்கிறது என்பதை வாசகர்களே கவனித்துக்கொள்வார்கள்.

இதற்கு முன் பல தடவைகளில் நாம் குறிப்பிட்டிருப்பதை, இந்த பிராமண பத்திரிகை கவனிக்காமல் மானம் ஈனமின்றி மறுபடி அதே காரியத்தைச் செய்கிறது. தஞ்சையில் நமக்கு வேண்டிய சுயராச்யம் என்ன என்பதைப் பற்றியும், நமக்கு வேண்டாத சுயராச்யம் என்ன என்பதைப் பற்றியும், கதர் தீண்டாமையைப் பற்றி பேசும்பொழுது, 2, 3 மணி நேரம் விவரமாய் பேசியிருக்கிறார். அந்த

பேச்சுக்களை கிரமமாய் எடுத்துப் போடாமல் அவர் பேசிய பேச்சிலுள்ள எழுத்துக்களைப் பிரித்து தனக்கு வேண்டியபடி வார்த்தைகளைக் கோர்த்துக்கொண்டு தங்கள் ஜாதிபுத்தியைக் காட்டியிருக்கிறது. சுயராச்யம் வேண்டாமென்று இந்தியாவில் ஒரு கட்சியும் சொல்லவேயில்லை. சுயராச்யம் என்பது என்ன என்பதுதான் இப்போது தகராறிலிருக்கிறது. பிராமணர்கள் படிப்பதும் சர்க்காரில் உத்தியோகம் உண்டாக்குவதும் தம்பிக்கும் மகனுக்கும் தங்கள் கூட்டத்தாருக்கும் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பதும் தான் சுயராச்யம் என்று சிலரும் சில கட்சிக்காரரும் நினைக்கிறார்கள். ஏழைகள் வயிறாரச் சாப்பிடுவதும், நாட்டில் கைத் தொழில்கள் ஓங்கி தொழிலாளர் பிழைப்பதும் நாட்டில் தரித்திரம் ஒழிவதும் மனிதர் எல்லோரும் சமம் என்ற உணர்ச்சியில் சுயமரியாதையுடன் வாழ்வதும் தான் சுயராச்யம் என்று மகாத்மா உள்பட சிலர் நினைக்கிறார்கள். அதைத்தான் நாம் தேடுகிறோம். இரண்டாவது தான் சுயராச்யம் சுயராச்யக் கட்சியாரால் வருமானால் நான் அதை ஏற்றுக்கொள்வேன் என்று மகாத்மா சொல்வது உண்மைதான். ஆனால், சுயராச்யக் கட்சி யார் திட்டத்தில் இவ்வித சுயராச்யம் வருமென்கிற நம்பிக்கை எனக்கில்லை. அதனால்தான் நான் அதில் சேரவில்லை என்கிறார். இந்த இரண்டாவது பாகத்தை விட்டுவிட்டு முதல் பாகத்தை மாத்திரம் தங்கள் பத்திரிகைக்குள் புகுத்தி ஏமாற்றப்பார்த்தால் யார் ஒப்புக்கொள்வார்கள்.

— குடி அரசு
25.10.1925

‘பிராமணப்’ பத்திரிகைகளின் பிரச்சாரம்: உஷார்! உஷார்! உஷார்!!

– சித்திரபுத்திரன்

பொது ஜனங்கள் தேசத்தின் உண்மை நிலையை உணருவதற்கு ஆதாரமாயிருப்பது வர்த்தமானப் பத்திரிகைகள் என்று சொல்லுவார்கள். ஆனால் அவை நமது நாட்டின் உண்மை நிலையை மறைத்துப் பொய்யைச் சொல்லிப் பாமர ஜனங்களை ஏமாற்றி, ஒருவரைக்கெடுத்து ஒருவர் பிழைப்பதற்குத்தான் அவை முழுவதும் ஆதாரமாயிருந்து வருகிறது. நமது நாட்டைப் பொறுத்தவரையில், பெரும்பான்மை யான மக்கள் தங்கள் முன்னோர்கள் எவ்வளவு பெருமை உடையவர்களாயும், இத்தேசத்தையே ஆண்டவர்களாயும், பராக்கிரமசாலிகளாகவும் இருந்து வந்திருந்த போதிலும், இன்றைய தினம் “பிற்பட்டவர்”களாகவும், “சூத்திரர்”களாகவும் இருப்பது ஏன்? இதற்கு பொறுப்பாளி யார் என்று பார்த்தால் அது நமது நாட்டுப் பத்திரிகைகளே யாகும்.

தற்காலம் நமது நாட்டில் செல்வாக்குப் பெற்றும், பெரும்பாலோர் கையிலும் ஊசலாடுவது, பிராமணப் பத்திரிகைகளே அல்லவா? அப்பத்திரி கைகளுக்கு அவ்விடங்களின் சமாச்சாரங்களை எழுதியனுப்பும் நிருபர்களும் பிராமணர்களே அல்லவா? அப்பத்திரிகைகளுக்கு ஏஜண்டுகளா யிருந்து விற்றுக் கொடுப்பவர்களும் பெரும்பாலும் பிராமணர்களே அல்லவா? அப்படி இருந்தும், அதற்குப் பணம் கொடுத்து வாங்கிப் படித்து கெட்டுப் போகிறவர்கள் மாத்திரம் பிராமணரல்லாதார்

களாகவே இருக்கிறார்கள். பிராமணப் பத்திரிகைகள் இதுசமயம் நமது நாட்டில் ஒவ்வொரு பட்டணங்களிலும், கிராமங்களிலும் பிரவேசித்திருக்கின்றது. அங்குள்ள படிக்கத் தகுந்த ஒவ்வொருவரும் அப்பத்திரிகைகளைப் படிப்பதும், அவற்றை உண்மை என்று நம்புவதும், மற்றவர்களுக்கு அவற்றை எடுத்துச் சொல்லுவதுமான வழிகளில் பிராமணப் பத்திரிகைகளின் அபிப்பிராயத்தை தேசமெல்லாம் பரப்பச் செய்துவிடுகின்றன. சாதாரணமாய் நமது கிராமங்களிலுள்ள பாமர ஜனங்களும் “சுதேசமித்திரன்” என்னும் பிராமணப் பத்திரிகையின் அபிப்பிராயத்தைத்தான் உண்மையென ராஜீய அபிப்பிராயமென்றும், அது யார் யாரைத் தலைவர் என்று சொல்லுகிறதோ, அவர்களைத் தலைவர்கள் என்றும், அது யார் யாரைத் தேசத் துரோகியென்று சொல்லு கிறதோ அவர்களைத் தேசத் துரோகிகள் என்றும், அது சொல்லுகிறபடியெல்லாம் நடப்பதும், நினைப்பதும்தான் தேச கைங்கரியமென்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது போலவே, மற்றும் “சுயராஜ்யா” என்னும் ஒரு தமிழ் தினசரிப் பத்திரிகையும் பிராமணர்களால் நடத்தப்பட்டாலும், பிராமண ரல்லாதாரை ஏமாற்றுவதற்காக வேண்டி அதன் உண்மைப் பத்திராதிபர்கள் பெயரை மறைத்து பிராமணரல்லாதார் பெயரைப் போட்டு ஏமாற்றி வருகிறார்கள். உண்மையில் அதன் ஆசிரியர்கள் ஒரு அய்யங்கார் பிராமணரும், ஒரு விபூதி பிராமணருமாயிருக்க அது வெளியில் தெரிந்தால் அப்பத்திரிகை யைப் பிராமணப் பத்திரிகையென்று பாமர ஜனங்கள் நினைத்துவிடுவார்கள் என்று வேண்டுமென்றே மறைத்துவிட்டு ஒத்துழையாமையில் ஈடுபட்டுத் தங்கள் உத்தியோகங்களை விட்டு கஷ்டப்பட்டதால் செல்வாக்கு ஏற்பட்டிருக்கும், ஸ்ரீமான்கள் கிருபாநிதி, திரிகூட சுந்தரம் பிள்ளை ஆகிய இருவர் பெயர்களைக் காட்டித் தங்கள் நன்மைக்கான அபிப்பிராயங்களை மேற்படியார் கள் அபிப்பிராயமென்று நினைக்கும்படி ஜனங்களுக்குள் புகுத்தி வருகிறார்கள். இந்த பிராமணரல்லாத கனவான்களும், கொஞ்சமும் கவலையில்லாமல் இவ்வித செய்கைக்குத் தங்கள் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள்.

பெரும்பாலும் இப்பத்திரிகைகளுக்கு மூலதனம் ஏறக்குறைய முக்கால் பாகம் பிராமணரல்லாதர்களுடையதே. அதை வாங்கி வாசித்து அவர்களுக்கு லாபம் கொடுக்கிறவர்களும் பிராமண ரல்லாதார்களே. இவ்வளவு இருந்தாலும், இப்பத்திரிகைகளைக் கண்டால் பிராமணரல்லாத தலைவர்கள் என்போர்களிலும், பத்திராதிபர்கள் என்போர்களிலும் பெரும்பாலோர் பூனையைக் கண்ட எலிபோல் நடுங்குகிறார்கள். தங்கள் ஜாதகத்தையே அவர்களிடம் ஒப்படைத்து விட்டு, அந்தப் பிராமணப் பத்திரிகை

களையே தங்களுக்கு பலன் எழுதும்படி பல்லைக் காட்டி கெஞ்சிக் கொண்டு திரிகிறார்கள். மகாத்மா போன்றவர்களே இப்பிராமணப் பத்திரிகைகளைக் கண்டால் சில சமயங்களில் பயப்பட்டு சமயோசிதமாய் நடக்க வேண்டியிருக்கிறதென்றால், அய்யோ பாவம் மற்ற ஆகாசக் கோட்டைகளைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அப்புறம் குட்டித் தலைவர்கள், தொண்டர்கள் என்போர்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

இம்மாதிரி ஒரு பெரிய சமூகத்தையே – அதன் தலைவர்கள் என்போரையே இப்பத்திரிகைகள் அடக்கி ஆண்டு கொண்டு, தங்கள் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொண்டு வருவதை எத்தனை நாளுக்குத்தான் சகித்துக் கொண்டு வருவதென நினைத்து சரியான மனிதர்கள் என்போர் யாராவது துணிந்து இதன் தந்திரத்தை வெளிப்படுத்த கொஞ்சம் பிரயத்தனப்பட்டால், அவர்களை அடியோடு ஒழிக்க பிராமணப் பத்திரிகைகளும், பிராமணத் தலைவர்களும், பிராமண அதிகாரிகளும் எல்லாரும் ஒன்று சேர்ந்துவிடுகிறார்கள். அந்த சமயங்களில் அய்யர் அய்யங்கார் ஆச்சார் ராவு என்கிற பேதமே இல்லாமலும், மிதவாதி சுயராஜ்யக் கட்சி ஒத்துழையாக் கட்சி காந்தி சிஷ்யக்கட்சி சர்க்கார் உத்தியோகஸ்தர் என்கிற வித்தியாசமே இல்லாமலும், ஒரே கட்டுப்பாடு – கம்பியில்லாத தந்திபோல் ஒரே அபிப்பிராயம்; ஆளுக்கொருவேலை; அதாவது பத்திரிகையில் வைவது ஒருவர். பிரசங்கம் மூலம் வைவதொருவர்; பணம் கொடுத்து வையச் சொல்லுவது ஒருவர்; காந்தியிடம் சாடி சொல்வது ஒருவர், சர்க்காருக்குக் காட்டிக் கொடுப்பது ஒருவர்; அதிகாரத்தைக் கொண்டு நசுக்குபவர் ஒருவர்; ஆக ஒவ்வொருவரும் தங்களாலானதை உடனே செய்யப் புறப்படுவதன் மூலம் எப்பேர்ப்பட்டவரையும் நடுங்கச் செய்துவிடுகிறார்கள். உதாரணமாக ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் நிலைமையைப் பார்த்தாலே இதன் உண்மை பொது ஜனங்களுக்கு நன்றாய் விளங்கும்.

ஆதலால் ஆங்காங்குள்ள பிராமணரல்லாத பிரமுகர்கள் தங்கள் சமூகத்திற்கு நன்மை செய்ய வேண்டுமென்றிருந்தால் தங்கள் சமூகம் இம்மாதிரியவர்கள் ஆகாமல் இருக்க வேண்டு மென்று விரும்பினால், ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு குடிசையிலும் "திராவிடன்", "குடிஅரசு" முதலியவைகள் போன்ற உண்மை உரைக்கும் பத்திரிகைகளைச் செலுத்த வேண்டும். உண்மை உரைப்பதன் மூலம் அதன் ஆசிரியர்கள் பிராமண அதிகாரத்தால் ஜெயிலுக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் தயாராய்த்தான் இருப்பார்கள். ஆதலால் வஞ்சகப் பத்திரிகைகளைப் பார்த்து மோசம் போகாமலிருக்கச் செய்ய வேண்டும்.

இந்தக் காரியங்களை நீங்கள் செய்யாமலிருந்தால், வரப் போகும் சட்டசபை எலெக்ஷனில் பிராமணரல்லாதார் கண்டிப்பாய் தோற்கடிக்கப்பட்டுப் போவார்கள். ஸ்ரீமான்கள் டி.எம். நாயரும், ஸர். பிட்டி. செட்டியாரும் எவ்வளவோ அரும்பாடுபட்டுப் பிடித்துக் கொடுத்த கோட்டையை மறுபடியும் பிராமணர்கள் சுவாதீனப்படுத்திக்கொண்டு உங்களை வெளியாக்கி விடப் போகிறார்கள். அப்புறம் 10 வருடமோ, 100 வருடமோ 'கடவுளுக்குத்தான்' தெரியும்; வீணாய்ச் சர்க்காரை நம்பிக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. சர்க்கார் எந்தக் கை வலுக்குமோ, அந்தக் கையில் சேர்ந்துவிடுவார்கள். இப்பொழுதே சர்க்காருக்குப் பிராமணர்களிடத்தில் பயம் வந்துவிட்டது. அவர்கள்தான் அடுத்த சட்டசபையில் ஜெயிக்கப்போகிறார்கள் என்று எண்ணிக்கொண்டு அவர்களை இப்பொழுது இருந்தே தடவிக்கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். பிராமணரல்லாதாரே எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!!

— குடிஅரசு

28.02.1926

ஆபத்தான பார்ப்பன ஏடுகள்

-தந்தை பெரியார்

நமது நாட்டுப் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கென்று வெகு காலமாகவே அதாவது, ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே மதம், வேதம், கடவுள், மோட்சம் என்னும் பெயர் களால் பலவித ஆதாரங்களையும் ஏற்படுத்திக் கொண்டு, அதன்மூலம் தாங்கள் உயர்ந்தோராயிருந்து கொண்டு, நம்மை ஏய்த்துத் தாழ்த்தி வயிறு வளர்ப்பதல்லாமல் அரசியல் சுயராஜ்யம், தேசியம், தேசியப் பத்திரிகை, தேச சேவை என்கிற பெயராலும் பலவித இயக்கங்களையும் பத்திரிகைகளையும் உண்டாக்கிக்கொண்டு, அதன் மூலம் தாங்களே தேசபக்தி உள்ளவர்கள் என்றும், தங்களுடைய பத்திரிகைகளே தேசியப் பத்திரிகைகள் என்றும் நமது பணத்திலேயே விளம்பரப்படுத்திக் கொண்டு நம்மைத் தாழ்த்தி, மிதித்து, மேலேறி பல வழிகளிலும் வயிறு வளர்க்க ஆதிக்கம் தேடி வைத்துக் கொண்டு விட்டார்கள். இவை எல்லாவற்றையும்விட நமக்குப் பெரிய ஆபத்தாயிருப்பது பார்ப்பனப் பத்திரிகைகளே!

அப்பத்திரிகைகளின் செல்வாக்கு நம் நாட்டை அடியோடு முற்றுகை போட்டுக் கொண்டிருக்கிறது. பாமர மக்கள் மட்டுமல்லாமல், தங்களைப் போதிய அறிவுள்ள மக்கள் என்று சொல்லிக்கொள்ளும் பலரும் அப்பத்திரிகைகளின்மூலம் ஏமாறுவதும், அப்பத்திரிகைகளின் மூலம் பார்ப்பனர்களுக்கு அடிமைகளாவதும் வளர்ந்துகொண்டே வருகிறது. தமிழ்நாட்டு மக்கள் இப்பார்ப்பனர்களுக்கு

அடிமைகளாவதும் வளர்ந்துகொண்டே வருகிறது. தமிழ்நாட்டு மக்கள் இப்பார்ப்பனக் கொடுமை முற்றுகையிலிருந்தும் அன்னிய ஆட்சிக் கொடுமை முறைகளிலிருந்தும் தப்பவேண்டுமானால் இப்பார்ப்பனப் பத்திரிகைகளைப் பார்த்து ஏமாறுவதையும் அவற்றிற்கு அடிமைகளாவதையும் ஒழித்தாலல்லது கண்டிப்பாய் முடியவே முடியாத நிலையில் இருக்கிறோம். அவைகள் செய்யும் அக்கிரமங்களை நினைக்கும்போது நமது மக்கள் மனிதர்கள் தானா? மனிதப் பிறவிகள்தானா? இப்பிறப்புக்கு மானம், வெட்கம் என்கிற தன்மைகள் இருக்கின்றனவா? என்று சந்தேகப்பட வேண்டியிருக்கின்றது. நமது கெடுதிக்காகவே இப்பார்ப்பனப் பத்திரிகைகள் நடந்து வருவதையும், பார்ப்பன ஆதிக்கப் பிரச்சாரமே அதன் கொள்கைகளாக இருப்பதையும் நாம் சந்தேகமற மனப்பூர்வமாகத் தெரிந்திருந்தும், இப்பிரச்சாரங்களுக்குப் பணம் கொடுத்து நாம் நாசமாய்ப் போவதற்காக இப்பத்திரிகைகளை வாங்கிப் படிப்பதென்றால் யாரால் நம்மை அறிவு, புத்தி, ஒழுக்கம், மானம், வெட்கம், சுயமரியாதை உள்ள சமூகம் என்று சொல்லக்கூடுமா என்பதை நன்றாய் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. பிறரைக் குற்றம் சொல்லும்போது மாத்திரம் 'கள், சாராயம் குடிப்பது கெடுதி என்று தெரிந்திருந்தும் அதைக் குடிக்கிறார்களே! என்ன புத்தி கெட்ட ஜனங்கள்; மானங்கெட்ட ஜனங்கள்!' என்கிறோம். ஆனால் அந்த புத்தியும் மானமும் நமக்கு இருக்கிறதா என்பதைப் பார்ப்பவர்கள், நம்மில் 1,000–த்துக்கும் ஒருவரைக்கூட காணோம். பார்ப்பனப் பத்திரிகைகள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு மட்டுமல்ல, நம்முடைய இழிவுக்கும் தாழ்மைக்கும் அழிவுக்கும் நடத்தப்படு கின்றன' என்பதனை அறிந்திருந்தும் அதைப் பணங்கொடுத்து வாங்கிப் படிப்பவர்களுக்குப் புத்தியும் மானமும் இருக்கின்றதா என்பதைக் கவனிப்பதில்லை. உதாரணத்திற்காக ஒரு பத்திரிகையை எடுத்துக்கொள்வோம்:

சாதாரணமாக 'சுதேசமித்திரன்' என்னும் பத்திரிகை பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாருடைய பணத்தையே மூலதனமாகக் கொண்டது. அதன் பத்திராதிபர்கள், உபபத்திராதிபர்கள், மேனேஜர்கள் முதலியவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள். அவர்கள் சம்பளமோ மாதம் ரூ. 1,500, ரூ. 1,000, ரூ. 800, ரூ. 600 – இப்படி அனுபவிக்கிறார்கள். அப்பத்திராதிபர் பார்ப்பனரல்லாதாரை ஒழித்துப் பார்ப்பனராதிக்கம் தேடுகிற பிரச்சாரம் தவிர, வேறு வேலை ஏதாவது செய்வதைப் பார்த்திருக்கிறீர்களா? நம்மை நாமே கெடுத்துக்கொள்ள நமது பணமே உதவ வேண்டுமா? அதற்கு விளம்பரம் கொடுப்பவர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார்களே! அதை வாங்கிப் படித்துக் கெடுகிறவர்களும் பார்ப்பன ரல்லாதவர்களே! இதில் ஏதாவது இரகசியம் இருக்கிறதா? அல்லது, இப்பார்ப்பனர்கள் எதையாவது

இரகசியமாகச் செய்கிறார்களா? நேருக்கு நேராக நம்மைப் பார்த்து, 'நீங்கள் முட்டாள்கள்; உங்களுக்கு மானம், வெட்கம், சுயமரியாதை, அறிவு, புத்தி இவைகள் கிடையாது; ஆதலால் நாங்கள் உங்களை ஏமாற்றுகிறோம். உங்களால் என்ன செய்ய முடியும்? உங்களில் யாரோ சிலர் கத்தினால் கத்தட்டும் எங்களுக்குக் கவலை இல்லை; இதற்காக நாங்கள் கொஞ்சமும் பயப்பட்டு எங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்ளப்போவ தில்லை. உங்களிலேயே சில அயோக்கியர்களையும் முட்டாள் களையும் நாங்கள் சுவாதீனம் செய்து கொண்டு உங்கள் கத்தல்களை ஒழிக்க எங்களுக்குத் தெரியும். ஒருகை பார்க்கலாம், வாருங்கள்!' என்று தைரியமாகச் சொல்லுகிறார்கள். இதற் கொன்றும் மார்க்கமில்லையா என்றுதான் கேட்கிறோம்.

'குடிஅரசு' தோன்றிய பிறகு 'மித்திரன்' சுமார் 2000 சந்தா தாரர்களுக்கு மேலாக இழக்க நேரிட்டும் – இன்னமும் பார்ப்பன ரல்லாதாரிலேயே பல பங்குதாரர்களை இரகசியமாகச் சேர்த்துப் பணம் சம்பாதிக்கப்பட்டு வருகிறது. நம்மவர்கள் முன்னேற்றத்திற் கென்றே நடத்தப்பட்டு வருகிற பத்திரிகைகளைக் கையில் தொடு வதற்கும் நமது மக்கள் அஞ்சுகிறார்கள் என்றால், நமது யோக்கியதையை என்னென்று சொல்லுவது? சாதாரணமாக 'திராவிடன்' பத்திரிகை எவ்வளவு கஷ்ட, நஷ்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வருகிறது என்பதை யாராவது உணருகிறார்களா? இது யாருடைய நன்மைக்கு நடத்தப்படுகிறது என்பதை யாராவது அறிகிறார்களா? யாரையாவது போய், 'அய்யா, திராவிடன் பத்திரிகை தங்களுக்கு வருகிறதா? இல்லையானால், ஒன்று வரவழையுங்கள்; அதைப் படித்துப் பார்ப்பனர்கள் சூழ்ச்சியையும் அதனால் நம்மவர்களுக்கு ஏற்படும் கஷ்டத்தையும் உணர்ந்து அதிலிருந்து தப்புவதற்கு வேண்டியது செய்யுங்கள்' என்றால் 'திராவிடனா? அதிலென்ன இருக்கிறது? அதைப் பார்த்தாலே என்னமோபோல இருக்கிறது! அந்தப் பெயரே நமக்குப் பிடிக்கவில்லையே!' என்று சொல்லி விடுகிறார்கள்.

இதைத் தங்களுக்குத் தோன்றுகின்றபடி வாஸ்தவமாகத்தான் சொல்லுகிறார்கள் என்றே வைத்துக் கொள்ளுவோம். கட்டின பெண்சாதியை விட்டு, தாசி வீட்டுக்குப் போய்ச் சொத்தைப் பாழாக்கி வியாதி கொள்கிறவர்களைப் பார்த்து, 'என்னப்பா, கட்டின பெண்சாதியை வீட்டில் வைத்துவிட்டு, தாசி வீட்டுக்குப் போய்ச் சொத்தையும் பாழாக்கி வியாதியும் கொள்கிறாய்?' என்றால்,

'வீட்டில் என்ன இருக்கிறது? அவளைப் பார்த்தாலே எனக்குப் பிடிப்பதில்லை. அவள் நடந்துகொள்கிற மாதிரியே மனத்திற்கு

அசிங்கமாகப்படுகிறது. கட்டிலுண்டா? மெத்தையுண்டா? வாசனையுண்டா? கடிப்பதுண்டா? கிள்ளுவதுண்டா? சட்டிபானை கழுவுகிறவர்கள்தானே' என்று ஆரம்பித்து விடுகிறானேயல்லாமல் –இதெல்லாம் எதற்காகச் செய்யப்படுகிறது, பின்னால் நம்முடைய கதி என்னாகும் என்கிற கவலையே இல்லாமல் அறிவீனமாய் நடந்துகொள்கிறான். அப்படிபோல் நம்மை மயக்கி, ஏய்த்து, நம்மைப் பாழாக்கி, கொள்ளை கொள்ள நடக்கும் பத்திரிகைகள் நாம் ஏமாறத் தகுந்த மாதிரியாகத்தான் நடத்தப்படும். ஒருநாள் பூரா படிப்பதற்கு விஷயமிருக்கலாம். ஆனால், அது பெரும்பாலும் என்ன விஷயம்? நம்மைக் கழுத்தறுக்கும் விஷயமும் பொழுது போக்கு விஷயமுமாகத்தானே இருக்கும்! அதனால் மானமுள்ள மக்கள் நமது சொந்தப் பெண்டை அன்னியன் குற்றம் சொல்லும் படியாகவும், கஞ்சிக்குத் திண்டாடும்படியும் விடாமல் காப்பது எப்படித் தனது கடமையாக நினைப்பார்களோ அதுபோல, 'திராவிடன்' பத்திரிகையை ஆதரிப்பதோடு, கட்டின பெண்டைத் தெருவில் அலையவிட்டு, தாசிவீடு காத்துத் திரிவதுபோல் 'திராவிடனை' விட்டுப் பார்ப்பன பத்திரிகைகளைக் கட்டி அழுவதை மறந்து – நமது மானத்தைக் காப்பாற்ற உதவி செய்ய வேண்டுமென்ப தாகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளு கிறோம். இந்த மார்க்கந்தான் நமது பாமர மக்களைக் காப்பாற்றவும் நமது மக்கள் எல்லோருக்கும் சுயமரியாதை ஏற்படவும் சரியான மார்க்கமாகும்.

— *குடிஅரசு 30.01.1927*

திராவிடன் 07.05.1927

எழுத்தாளர் மாநாடு

-பரதன்

"நான் என்ன செய்யட்டும் வீரா!"

"நீ, எதற்குத்தான், எப்போதுதான், என்னதான் செய்தாய், இப்போது இதற்கு ஏதாவது செய்ய!"

"சரிதான், என்னால்தான் ஒன்றும் முடியாது என்றுதான் நீதான் ஒரு முடிவுக்குத்தான் வந்துதான் ஆகித்தான் விட்டதே, மேற்கொண்டுதான் என்ன தான் பேச்சுத்தான் இருக்கிறது?"

"போதும், உன்னுடைய தான்கள்."

"நீதானே துவக்கினாய் "தான்"களை"

"ஒன்றுமே செய்யப்போவதில்லையா?"

"என்ன செய்ய, சொல்லு, முயற்சிக்கிறேன்"

"நல்லவேளை, முயற்சிக்கிறேன் என்றாவது சொன்னாயே, முயற்சிக்கலாமா என்று யோசிக்கி றேன் என்று சொல்லாமல், நீ ஏதாவது செய்துதா னாக வேண்டும், ஆமாம், இதற்கு வழக்கம்போலச் சும்மா இருந்தால் அழகில்லை, நியாயமில்லை, தர்மமில்லை, ஆமாம், அவ்வளவுதான் நான் சொல்லுவேன், ஏதாவது செய்யத்தான் வேண்டும்."

கோவையிலே, நடைபெற்றதாம், எழுத்தாளர் மாநாடு, இதற்கு வீரன் போகவில்லை, அதனாலே பிடித்தது எனக்குத் தொல்லை. எழுத்தாளர் மாநாட்டின் நோக்கம் என்ன? விளைவு என்னவாக இருக்கும்? எழுத்தாளர் என்றால் யார்? அவர்களால்

நாட்டுக்குக் கிடைக்கும் பலன் என்ன? என்றெல்லாம், நான் விளக்கிவிட வேண்டும் என்று வற்புறுத்துகிறான், வீரன். உடையாடலைக் கேளுங்கள்.

"வீரா! நாட்டிலே, எழுத்தாளர்கள் தொகை வளருகிறது, அது ஒரு நற்குறி. அவர்களுக்குள் ஒரு நல்ல தொடர்பு கிடையாது, அக்குறைபோக இம்மாநாடு ஒருவழி என்று நான் எண்ணுகிறேன், எழுத்தாளர்களை, ஆலை முதலாளிகள் கூலிகளை நடத்துவது போல, முதலாளிகள், நடத்திவருகின்றனர். எண்ணத்தை ஏழு கடலைத் தாண்டியும் செலுத்தி இளவரசனின் இருதயத்தையும் இடுப்பு முறிந்தவனின் எண்ணத்தையும், எதையும், எடுத்து எழுதும், எழுத்தாளர்களுக்கு இப்போக்கு கோபத்தை மூட்டுவது இயற்கை. எனவே அவர்கள் மாநாடு கூடினர், எழுத்தாளர்களின் நிலைமை பற்றிய பிரச்னைகளைப் பேசினர், அவர்களின் வாழ்க்கையிலே, நிம்மதியும் பாதுகாப்பும் தேவை என்பது உணர்ந்து, அதற்கான திட்டம் தீட்டினர், கழகம் அமைத்தனர், ஒரு எழுத்தாளரின் தலைமையிலே," என்று நான் வீரனுக்குக் கூறினேன்.

"பரதா! எழுத்தாளர் என்றால் யார்?" என்று கேட்டான் வீரன்.

"விசித்திரமான கேள்வியாக இருக்கிறதே?" என்று நான் சொன்னேன்.

"வேலி அமைத்துக் கொள்ளாதே, விஷயத்தை விளக்கு, எழுத்தாளர் என்றால் யார்? போர்வீரன், இசைவாணன், நடிகன், வணிகன் என்று ஒவ்வொருவரைக் குறிக்கின்றார்களே, பொருளோடு, அதுபோல எழுத்தாளர் என்றால் யாரைக் குறிக்கும் சொல் அது, நீ சொல்" என்று கொஞ்சம் கோபக் குரலிலே பேசினான் வீரன்.

"எழுதுபவர்கள் எழுத்தாளர்கள்."

"எதை எழுதுபவர்கள்?"

"கதை, கவிதை, கட்டுரை, காவியம், பத்திரிகைகள், புத்தகங்கள், ஆகிய இவைகளெல்லாம் எழுதுபவர்கள், எழுத்தாளர். இது என்ன, மிகமிக இலேசான பதந்தானே, வெள்ளையாகத் தெரியக் கூடியதுதானே,"

"இவ்வளவுதானா, இன்னமும் ஏதாவது உண்டா?"

"பூகோளம், சரித்திரம், சாஸ்திரம், வேதாந்தம் முதலிய பல பொருள்களைப் பற்றி எல்லாம் எழுதுபவர்களும் எழுத்தாளர்கள் தான். ஏன் நீ இவ்விதமாகக் கேள்வி கேட்கிறாய்?

எதையோ மனதிலே வைத்துக்கொண்டல்லவா பேசுகிறதுபோல் தோன்றுகிறது.''

"நீயும் ஒரு எழுத்தாளிதான். ஆகவேதான் கூட்டாளிகளைப் பற்றிக் கொண்டாட்டமாகப் பேசுகிறாய், ஆனால் நீ ஒரு ஏமாளி; ஏன் பெரும்பாலான எழுத்தாளர்கள் ஏமாளிகள்தான்!''

"எழுத்தாளி ஏமாளியா? என்ன துடுக்கு வீரா உனக்கு?''

"ஏமாளி மட்டுமல்ல, நோயாளியுங்கூட. ஏன் கோபமாக இருக்கிறதா? அது நோயின் குணம்! புத்தகப்பூச்சி ஊட்டிடும் நச்சு, நோய் மூட்டிவிடுகிறது, முதலாளித்தனத்திலே சிக்கி, ஏமாளி யாகிறார்கள், ஆக நான் சொன்ன, ஏமாளி, நோயாளி என்ற இரண்டு அடைமொழிகளும் உன் கூட்டத்துக்குப் பொருத்த மானவைகளே."

"போதும் போதும், உன் கோமாளிப் பேச்சு, இனிமேல், எழுத்தாளர்களை ஏளனம் செய்ய முடியாது. முன்பு அவர்களுக்குள் – எங்களுக்குள் – கட்டுப்பாடு கிடையாது, ஒற்றுமை கிடையாது, தோழமை கிடையாது, இனி எழுத்தாளர்கள் எஃகுக்கோட்டை, தெரியுமா?''

"கோட்டை எஃகு, அகழியிலே தங்கம் உருக்கிவார்த்து விட்டிருக்கும், சுவர்களிலே இரத்தினக்கற்கள் புதைத்திருக்கும், வெள்ளிமணியிருக்கும், அடுக்கு, அடுக்கப்பா பதங்களை! எழுத்தாளனல்லவா, எதுவும் சொல்லுவாய்."

"அப்படியானால், ஒற்றுமை கிடையாதா? முடியாதா?''

"ஒற்றுமையா? கோதுமைக்கே வடநாடு தேவை நமக்கு, ஒற்றுமை ஏது இங்கே? கோவை மாநாட்டுக்குப் பிறகு, எழுத்தாளர்களின் பேச்சு எப்படி இருந்திருக்கும் தெரியுமோ?

தினசரி, தினமணியுடன் போட்டியிட்டுச் சமாளிக்க முடியுமா? என்று கேட்டிருப்பார் ஒரு எழுத்தாளர்.

முடியாது என்ற பதமே என் அகராதியிலே கிடையாது என்று நெப்போலியன் சொன்னான் பாருங்கோ? என்று சரிதச் சுவையைப் புகுத்திப் பேசியிருப்பார் மற்றொருவர்.

சொக்கலிங்கம் பிரன்சு இலக்கியத்தைப் படித்திருக்கிறாராம் என்பார் மற்றொருவர்.

படித்தது மட்டுமா, கரைத்துக்குடித்துமிருப்பார் என்று வேறொருவர் கேலிசெய்திருப்பார்.

குடித்திருப்பார், ஆனால் ஜீரணம் ஆகியிராது என்று ஹாஸ்ய எழுத்தாளர் ஒருவர் பேசியிருப்பார்,

வ.ரா.வின் நடை இருக்கிறதே... என்று ஒருவர் புகழத் தொடங்கியிருப்பார்.

கலைந்த ஜடைபோல இருக்கும் என்று சினிமாவிமர்சன எழுத்தாளர் கூறியிருப்பார்.

கதை எழுதுவதிலே, கல்கியின் திறமை இருக்கிறதே... என்று பேச்சை வேறு பக்கம் திருப்பி இருப்பார் ஒருவர்.

இருக்கிறதே என்று சொல்லாதே, இருந்ததே என்று சொல்லும், என்று இலக்கணத்தோடு பேசுவார் மற்றொருவர், ஆனந்த விகடனை விட்டுக் கல்கி விலகியபோது, எழுதும் திறமையை அங்கேயே கல்கி வைத்துவிட்டுப் போய்விட்டார் என்ற நம்பிக்கையுடன்.

விகடனிலே போனமாதம் விரகதாபம் என்று ஒருகதை வந்ததைப் படித்தீரோ, என்று கேட்பார், அதை எழுதியவர்.

"ஆஹா! படித்தேன்! எழுத்தாளர்களுக்கு மதிப்பு வரவில்லை என்றால், எப்படிவரும்" என்று ஆத்திரத்தோடு ஒருவர் பேசுவார்.

ஏன் கதை நன்றாக இல்லையோ? என்று எழுதியவர் பயத்தோடு கேட்பார்.

"கதை ஏ 1. சார், முதல்தரமான கதை. நான் போன வருஷம் 'சித்ரா'விலே எழுதினேன், பெயர்களை மட்டும் மாற்றிவிட்டு, விகடனிலே ஒரு காவாலிப்பயல் வெளியிட்டிருக் கிறான். இப்படித் திருட்டுத் தொழில் நடக்கிறது சார், எழுத்தாளர் உலகிலே, என்னசார் செய்வது, வெளியே சொன்னால் வெட்கக்கேடு" என்று அழுகுரலோடு பேசியிருப்பார் சித்ராவுக்குக் கதை தீட்டுபவர்,

இப்படிப்பட்ட பேச்சுக்கள்தான் எழுத்தாளர் மாநாடு முடிந்த பிறகு இருந்திருக்கும், இவர்களுக்குள் ஒற்றுமையாம் ஒற்றுமை, காகிதத்திலே கோட்டை!"

"இது சகஜம் வீரா! ஒட்டக்கூத்தருக்கும் கம்பருக்கும் இந்தப் பொறாமை இருந்து வந்ததாம், எழுத்தாளர்களுக்குள் இருக்கும் இக்குறை, யாரிடமும் காணக்கிடப்பதுதான், ஆனால் இதனால் போட்டி ஏற்பட்டு, ஒவ்வொருவரும் தத்தமது திறமையை விளக்கத் தொடங்கி மொத்தத்திலே மக்களுக்கு மதுரமான விருந்து அளிப்பார்கள். இலாபமே தவிர நஷ்டமில்லை; என்ன நான் சொல்வது?"

“சாது அச்சுக்கூடத்துப்பாணி நீ பேசுவது. நான், அவர்களுக் குள்ளே நடைபெறும் உரசல்களைப் பிரமாதப்படுத்த வில்லை. ஒழியட்டும், மனிதசுபாவம். நான் சொல்ல வந்தது அதுவல்ல, எழுத்தாளர் என்றால், எழுதுபவர்கள் எழுத்தாளர்கள் என்று பொருள் கொண்டால் போதாது, எழுதுவது, – குழந்தை பிறப்பது போல. கருவுறுவது போன்றது எண்ணம். கருவுக்கு, ஆண் பெண் இருத்தல்போல் எண்ணம் பிறக்க, காலமும் நோக்கமும் கூட வேண்டும். பிறகே எழுத்து. எழுத்தாளர் என்றால் இந்த இடை புருஷனாக இருக்க வேண்டும்.”

“அதாவது, ஒரிஜினல், தானாகக்கண்டு பிடித்து எழுத வேண்டும் என்கிறாயோ?”

“அல்ல! தானாகக் கண்டு பிடித்தது, மற்றவர் கண்டது என்பதல்ல, உரைகல்”

“நீ என்ன சொல்ல விரும்புகிறாய்? எழுத்தாளர் என்றால் பலவகை என்கிறாயா?”

“ஏன் இல்லை?”

“கதை எழுதுபவர், கட்டுரை எழுதுபவர், கவி... என்று பிரித்துப் பேசுகிறாயா?”

“இல்லை. முதலிலே ஒரு பெரிய பிரிவு. எழுத்தாளர் இருவகை. உள்ளதை எழுதுபவர் ஒருவகை, இல்லாததை எழுதுபவர் மற்றோர் வகை.”

“கற்பனைக் கதை எழுதுபவருக்கும் கட்டுரைகள் எழுதுபவருக் கும் உள்ள வித்யாசத்தைக் குறிக்கிறாயா?”

“அல்ல, அல்ல! கதைகள் கற்பனைகளானாலும், உலகிலே எங்காவது ஓரிடத்திலே உள்ளதைத்தான், கதையிலே காண்கிறோம். இருப்பது, இருக்கூடியது என்ற இரண்டும் கதைகளிலே காணக் கிடைக்கும். நான் செல்வது அதனையல்ல, இருக்கவே முடியாதது, நடந்திருக்க முடியாதது, அறிவுக்கு முரணானது, சில. அவைபற்றியே தீட்டும் எழுத்தாளர்கள் உண்டு. இருப்பது, நடப்பது, நடக்கக்கூடியது, அறிவுக்கு ஒத்தது, அனுபவபூர்வமானது ஆகியவற்றை எழுதுபவர் சிலர். இருவரும் எழுத்தாளர்களே, ஆனால் பாம்பும் தேரையும் ஜீவராசிகளிலே, ஒன்று என்று கூறுவது போலத்தான் இருவரையும் எழுத்தாளர்களென்று ஒன்று கூட்டிச் சொன்னேன், ஒன்றுக் கொன்று பகைதான்! இந்த இருவகை எழுத்தாளரின் போர் நடந்தபடி இருக்கிறது. சரி, பரதா! குதிரை என்ற தலைப்பிலே ஒரு கட்டுரை தீட்டச் சொன்னால் உங்கள் கூட்டம் என்ன எழுதும்?”

‘‘இதென்னப்பா வேடிக்கை! நீ என்ன அவ்வளவு கேவலமாகவா எழுத்தாளர்களை மதிப்பிடுகிறாய்? குதிரையைப் பற்றி எழுதவா தெரியாது,’’

‘‘தெரிந்த விஷயந்தான், ஆனால் இதனை ஒவ்வோர் எழுத்தாளர் ஒவ்வோர் விதமாக எழுதுவர்.

ஒருவர், ப்யூசிப்பாலஸ் காலமுதற்கொண்டு பெருமை அடைந்தன குதிரைகள் – என்று எழுதுவார், அவர் அலெக்சாண்டர் எனும் கிரேக்க வீரன் ஏறிவந்த குதிரையின் பெயரைத் தெரிந்து கொண்டவர், மேனாட்டுச்சரித நிகழ்ச்சி அறிவு படைத்தவராக இருப்பார்.

நீலவேணியை நினைவிலே கொண்டு வருவார், தேசிங்கு ராஜாகதை தெரிந்த எழுத்தாளர், குதிரைகளிடம் எனக்கோ கோபம், தாங்கொணாக்கோபம், என் மணிவாசகன், இந்தப்பாழும் குதிரைகளாலன்றோ, சிறைப்பட்டான், துயர்ப்பட்டான், துன்புற்றான், என்று சைவமெய்யன்பை நகைச்சுவையுடன் தீட்டிப் பிறகு சமரசஞானத்தைக் காட்டவேண்டி, “மறுகணம் யோசிக்கின், பரியினிடம் பரிவே பிறக்கிறது. மணிவாசகரின் மந்திரிப் பதவிபோகவும் இடர் மிகவும் இறைவன் அருள்வந்து சேரவும் குதிரைகளே காரணம். மாணிக்கவாசகர் குதிரை வாங்கச் சென்றார், அப்பணத்தைக் கோயில் கட்டினார், மன்னன் தண்டித் தான், பின்னரே பெருமானின் பேரருள் கிட்டிற்று, மணிவாசகம் பெற்றோம், எனவே மணிவாசகத்தை நாம்பெறக் குதிரையன்றோ காரணமாயிற்று. குதிரையே! உன்னைக்கும்பிடுகிறேன் என்று முடிப்பார் ஒரு எழுத்தாளி.

தாலி அறுக்கும் பிசாசே! தந்தைக்கும் தனயனுக்கும் பகைமூட்டும் சனியனே! சூதுசூட்சியிலே மக்களைச் சிக்க வைக்கும் சகுனியே! உன்னால் கெட்டன குடும்பங்கள்! கொழுத்தனர் மார்வாடிகள்! குடித்தனத்திலே தீமூட்டினாய்! கொலைக்கும் களவுக்கும் காரணமானாய்! குதிரையே! கோரத்தின் சொரூபமே! பாவத்தின் கருவியே! பாதகத்தின் பங்காளியே! உன்குலம் அழிக, கூண்டோடு அழிக, பூண்டின்றி ஒழிக – என்று ஒருவர் எழுதுவார், கிண்டிக் குதிரைப்பந்தயத்தால் விளையும் கொடுமைபற்றிய கோபக்கொதிப்பினால். இப்படிப் பலவகை இருக்கும். ஆனால் நான் குறிப்பிடுவது இருவகைதானே, உள்ளது, இல்லாதது என்ற தலைப்புடன். இந்த இருவகை எழுத்தாளர் விஷயமே முக்கியமானது. உள்ளதை எழுதுபவர், குதிரை நாற்காற்பிராணி என்று துவக்கி, அங்க அடையாளம், இயல்பு, பல நாடுகளிலே உள்ள வகைகள், ஆகியவற்றை எழுதுவார்; இல்லாததை எழுதும் இயல்பினர் என்ன எழுதுவார்

தெரியுமோ? என்ன எழுதியிருக்கிறார் தெரியுமோ? குதிரை சாம வேதத்தின் நாக்கிலே பிறந்தது என்று எழுதியிருக்கிறார், நகைச்சுவைக்கு அல்ல! பிரம்மதேவன் ஓர் ஓமம் செய்தாராம், புகையினால் கண்கசங்கிற்றாம், நீர்ஒழுகிட, அதிலிருந்தும் குதிரை பிறந்ததாம்! மற்றோர் சமயம் பிரம்மதேவனை இலட்சுமிதேவியார், கோட்டானாகப் பிறக்கும்படி சபித்துவிட்டாராம். பிரமன் கோட்டானாகப் பிறந்தானாம். அந்தக் கோட்டான் முட்டையிலே குதிரைபிறந்ததாம்!! குதிரைபற்றி இதுபோல எழுதி வைக்கப் பட்டிருக்கிறது ஏடுகளிலே, அந்தக் காலத்து எழுத்தாளனால்! இவ்விதம் நடவாத, அறிவுக்கு ஏற்காதபடி எழுதுபவர் ஒருவகை. அறிவுடன் பொருந்தும் விஷயமாக எழுதுபவர் மற்றோர்வகை, என இருபெரும் பிரிவு எழுத்தாளர்களில், பலகாலமாக இருந்து வருகிறது. இன்றுவரை இல்லாததைத் தீட்டும் எழுத்தாளர்களே ஆதிக்கத்திலிருந்து வருகிறார்கள், அவர்கள் தெய்வீகக்கவிகள், காவியகர்த்தாக்கள், ரிஷிகள், ஆண்டவன் அவதாரங்கள், அருள்மொழி பெற்றவர்கள், என்று பூஜிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களின் எழுத்தினால் ஏற்பட்டுள்ள நிலைமை, உள்ளதை எழுதும் எழுத்தாளர்களால் மாற்றப்பட வேண்டும். அந்த மாறுதலை எதிர்த்து, இல்லாததை எழுதியவர்களின் "வாரிசுகள்" "தத்துப்பிள்ளைகள்" "தாசர்கள்" எழுதுகின்றனர், புதிய மொந்தையிலே பழைய கள் ஊற்றித்தருகின்றனர். பரதா! இந்த இருபெரும்பிரிவு, எழுத்தாளர் உலகிலே உண்டு. கோவை எழுத்தாளர் மாநாடு, இதுபற்றி இம்மியளவு கவனமும் செலுத்தவில்லை, அவர்கள் கூடினது அதற்காகவுமல்ல!''

"வீரா! நீ சொல்வது உண்மைதான். பழமை புதுமை என்ற இரு சக்திகளுக்கும் போர் நடக்கிறது. எழுத்தாளர்களின் பேனா முனைகளே அப்போரிலே உபயோகமாகும் போர்க்கருவிகள்''

"ஆமாம்! அறிவாஸ்திரத்தை, உண்மையைத் தீட்டும் எழுத்தாளி ஏவுகிறான், இல்லாததைத் தீட்டும் எழுத்தாளி மதாஸ்திரத்தால் அதனை அழிக்கமுனைகிறான்."

"உண்மைதான்!"

"எழுத்தாளர்களிடையே, புதுஎழுச்சி, உண்டாகும் என்று எண்ணினேன் கோவை மாநாட்டிலே. நாட்டை நலியச் செய்யும், சமுதாயத்தைச் செல்லென அரிக்கும், ஒற்றுமையை ஒழிக்கும், பகைமையையும் துவேஷத்தையும் மூடத்தனத்தையும் வளர்க்கும், பழய கருத்துகளை, எழுத்தாளர்கள் சாடுவர், தமது திறமையை இனி, அத்துறையிலே உபயோகிப்பது என்று தீர்மானிப்பர், புராணப் புரட்டுகளிலிருந்தும், வைதிகச்சுழலிலிருந்தும், சாதி அகம்பாவத்திலிருந்தும் மக்கள் விடுபடக் கணைதொடுக்க,

எழுத்தாளர்கள் திட்டம் தீட்டுவர் என்று நினைத்தேன், எழுத்தாளர்களின் சம்பள எண்ணிக்கை பற்றியும், அவர்களுக்கு இன்ஷியூர் செய்வது பற்றியும் பேசிக்கலைந்தனர் என்று கேள்விப் பட்டேன், திகைத்தேன். எழுத்தாளர்கள் –கூடினரா, வறுமை யாளர் கூடினரா என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன்''

"வீரா! நீ குறிப்பிடுகிறபடி, பழமைக்கும் புதுமைக்கும் நடக்கும் போர் பற்றி அவர்கள் கவனித்திருக்க வேண்டியதுதான், ஆனால் தங்களைப்பற்றிப் பேசினது தவறல்லவே. வறுமையாளராகவே எழுத்தாளர் இருப்பதா? முறையா?''

"நிலைமைக்கும் நினைப்புக்கும் தொடர்பு இருக்கும் விஷயம் நான் அறிந்ததுதான் நண்பா! ஆனால் எழுத்தாளர்கள் மாநாட்டிலே, புதிய சமுதாய அமைப்பு பற்றி, மக்களிடை புதிய மனோபாவத்தை ஊட்ட வேண்டிய முறை பற்றி, ஏன் பேசவில்லை! பேசாதது சரியா? போர் வீரர்கள் மாநாட்டிலே, ரொட்டித் துண்டுகளின் அளவு பெரிதாக்கப்படவேண்டியது பற்றி மட்டும் தீர்மானித்தால், போதுமா?

"இதுதானே முதல் மாநாடு! அடுத்த மாநாட்டிலே, இவ்விஷயம் பேசப்படும், ஒருவேளை.''

"பேசப்படலாம், அடுத்த மாநாட்டிலே எழுத்தாளர்கள், மக்களை எண்ணிக்கொண்டு கூடினால்!! இப்போது எழுத்தாளர் கள் ஏராளமாக, பலப்பலவிதமான பக்குவமுடைய எழுத்தாளாகள் உள்ளனர். நடையைக் குறிப்பிடுகிறேன்''

"ஆமாம்! கவிதாநடை, சித்திரநடை, காவியநடை, புலமை நடை . . .''

"நடையுடன் விஷயத்தையும் இணைத்துப்பேசு பரதா! சுருக்கெழுத்தாளர், பொறுக்கெழுத்தாளர், கிறுக்கெழுத்தாளர், முறுக்கெழுத்தாளர், சருக்கெழுத்தாளர், தருக்கெழுத்தாளர், நறுக் கெழுத்தாளர், உருக்கெழுத்தாளர், என்று பல "ரக'' எழுத்தாளர்கள் உள்ளனர்.''

"வேடிக்கையாக இருக்கிறதே வீரா! எழுத்தாளர்களிலே இவ்வளவு வகையா?''

"இன்னமும் உண்டு. சிலர், சுருக்கி எழுதிவிடுவார்கள், ஏற்கனவே உள்ளதை, இவர்கள் சுருக்கெழுத்தாளர்கள். சிலர் ஏடுகளிலே உள்ளவற்றையும் பிறர் எழுதியுள்ளதையும் படித்து, பொறுக்கி எழுதுவார்கள், சிலர் கிறுக்குத்தனமாக எழுதுவார்கள். 'நாம் கூறுகிறோம், மறுப்பவரைக் கண்டு அறிவாளர் சிரிக்க!' என்று எழுதுவர் முறுக்கெழுத்தாளர். சருக்கெழுத்தாளர்

இருக்கின்றனரே, அவர்களின் எழுத்திலிருந்து எண்ணத்தைக் கண்டுபிடிக்கச் சென்றால் படிப்பவர்சருக்கிவிழுவர்; அன்பர் திரு.வி.க. குழாம் அது.

''மோட்சலோகமென்றும், நரகலோகமென்றும் ஒன்று மில்லை!'' என்று ஆரம்பமிருக்கும். ஓஹோ! பழமையை எழுத்தாளர் கண்டிக்கிறார் போலும் என்று மகிழ்ந்தாலோ, படிப்பவர் அடுத்த வரியிலே சருக்கிவிழவேண்டும். ''அருளே மோட்சம், மருளே நரகம்'' என்றிருக்கும் அடுத்தவரி, மோட்ச நரகம் என்ற பழய எண்ணத்துக்குப் புதியபொருள் கொடுத்து காப்பாற்றப்பட்டிருக்கும்.

''மோட்சமே நரகம்'' என்று எழுதுவார் சருக்கெழுத்தாளர். இதேது விபரீதம் என்று பயப்படுவோம். சிலர் மோட்சத்திலே சேரவும் வேறு பலர் நரகம்புகவுமான நிலைமை இருக்கக்கண்டால், உலகிலே தர்மம் குறைந்து அதர்மமல்லவா மேலிடுகிறது என்று வருந்தி, மோட்சலோகத்திலுள்ளவர்கள் மனோ வேதனைப்படுவர், அந்த வேதனையால் மோட்சமே அவர்களுக்கு நரகமாக இருக்கும் என்று விளக்கமுரைப்பார் சருக்கெழுத்தாளர்.

''நாம் எழுதியிருப்பதன் உண்மையை உணர, மனப்பக்குவம் வேண்டும், அப்பக்குவம் பிறக்க நம்பிக்கை தேவை, நம்பிக்கையூட்ட நாதன் அருள்தேவை, அதுபெற பூர்வபுண்ய வாசனை தேவை'' என்று தீட்டுவார் தருக்கு எழுத்தாளர். வசைமொழியின் வளத்தைக் காட்டுவார் நறுக்கெழுத்தாளர். பல ஏடுகளை உருக்கி ஊற்றுவார், உருக்கெழுத்தாளர். இப்படிப் பலவித எழுத்தாளர்கள் உண்டு. இவர்களின் பிரதிநிதிகள் யாவரும், கோவை எழுத்தாளர் மாநாட்டிலே இருந்தனர். ஆனால், அங்கு, எது எழுத்தாளர் என்பவர்களுக்குள் இருக்க வேண்டிய இலட்சியம் என்று நான் கருதுகிறேனோ அது இல்லை. தமிழகத்தில் தலை எழுத்தாளர்கள் உள்ளனர், சிரிக்காதே பரதா! நமது விதி, வேறே ஒரு நல்லவேலை கிடைக்காமல் எழுத்தாளனானோமே என்ற நினைப்புள்ளவர்கள் இருக்கின்றனர். மனதிலே தோன்றுவதை எல்லாம் தீட்டுவோம் யாருக்கு எது தேவையோ அதை எடுத்துக்கொள்ளட்டும் என்று எழுதித்தள்ளும் அலை எழுத்தாளர் உண்டு. சீதையின் முகத்திலே பூர்ணச்சந்திரனையும், அனுமனின் வாலிலே அண்டத்தின் சக்தியையும் கண்டு மக்களுக்குக் கூறும் கலை எழுத்தாளர் உள்ளனர். இன்னின்ன ''ரேட்டுக்கு'' இப்படி இப்படி எழுதித் தருவது என்ற விலை எழுத்தாளர்கள் உள்ளனர். இன்று ஏதாவது எழுதாவிட்டால் ஊதியம் இல்லையே என்று வருத்தத்துடன் எழுதும் உலைஎழுத்தாளர்கள் உயிருடன் ஊசலாடுகின்றனர். சித்திரநடையாலும் சித்திரங்களாலும் படிப்போரின் சிந்தையைக் கவர்ந்து தமது கட்சிக்கு ஆள்பிடிக்கும், வலைஎழுத்தாளர்கள்

வாழ்கின்றனர். ஆனால் உண்மையை உரைப்போம், இல்லாததை உரைத்து இடர்விளைவித்த எழுத்தாளரின் பிடியிலிருந்து மக்களை விடுவிப்போம் என்ற கருத்துடன் உள்ள நிலைஎழுத்தாளர்களின் எண்ணிக்கை மிகமிகக்குறைவு. இந்த எழுத்தாளர்கள் தொகை, பழமையைச்சாடி, புதுமையைநாடும் எழுத்தாளர்கள், ஜாதியை ஒழித்து நீதியை நிலைநாட்டும் நோக்கமுடைய எழுத்தாளர்கள், மடைமையை மாய்த்துக் கொடுமையைக் களைந்து சிறுமையைச் சாய்த்து மக்களின் பெருமையை, வாழ்வின் அருமையை விளக்கும் எழுத்தாளர்கள், கோபுர அளவு குவிந்திருக்கும் பழையகுப்பையைத் தமது சிந்தனை எனும் சண்டமாருதத்தால் அழித்தொழிக்கும் எழுத்தாளர்கள், அவர் சொன்னார் இவர் சொன்னார் என்ற அரண் அமைத்துப் பதுங்காது, எவர் எப்படிச் சொல்லிருந்தால் எனக்கென்ன, என் கருத்து இது என்று எடுத்துரைக்கும் எழுத்தாளர்கள், எண்ணிக்கையில், பெருக வேண்டும், வளம்பெற வேண்டும். அவர்களால் அநீதியை அகற்ற முடியும், அறியாமையை அழிக்க முடியும், ஆணவத்தை இடுப்பொடித்து ஈனவாழ்வை உருக்குலைத்து ஊரார் எண்ணத்திலே புதியமுறுக்கு ஏற்றி, ஐயம் அகற்றி, ஒப்பற்ற ஓர் வெற்றியைக் காட்ட முடியும். ஆனால் அவர்கள், எண்ணத்திற்கு முதலிடமும் எழுத்திற்கு இரண்டாமிடமும், மக்களுக்கு முதலிடமும் தமது மனைக்கு இரண்டாவதிடமும், தரும் இயல்பு பெற வேண்டும். மந்தை மனப்பான்மை வயிறு நிரப்பும், புதுவழி காண அதுபோதாது! அலங்காரநடை புகழுரை வாங்கித் தரும், ஆனால் அந்த வானவில் அதிகநேரம் இராது! நடையைவிட நினைப்பு, நோக்கம், முக்கியம். இலட்சியமில்லா எழுத்து மணமில்லா மலர்! கோவை எழுத்தாளர் கள், நாட்டுக்குப் புதிய நிலைவளரும் விதமாகத் தமது பணி அமையவேண்டும் என்று எண்ணி ஒரு திட்டம் வகுத்துக் கொள்ளவில்லை.''

''வீரா! எழுத்தாளர் மாநாட்டுக்கு உன்னை யாரும் அழைக்காததன் காரணம் இப்போது நன்றாகத் தெரிகிறது. நீ இவ்வளவு கண்டனங்களையும் கொட்டிவிட்டிருப்பாய், கூட்டத் தின் நோக்கமே கெட்டுவிட்டிருந்திருக்கும். அதைத்தெரிந்துதான், உன்னை அழைக்கவில்லைபோலும்''

"ஆமாம் பரதா! உண்மைதான். கோவைக்கு நான் போயிருந் தால் கேட்டிருப்பேன் அவர்களுடைய செவியும் சிந்தையும் அதிர; புராண இதிகாசங்களைச் சுவையுள்ள கனிகள் என்று கருதி, உள்ளே நெளியும் புழுவை எடுத்தெறியாது மக்களை உண்ணச் செய்கிறீர்களே, நீங்கள் எழுத்தாளிகளா, எண்ணத்தின் கொலையாளிகளா? என்று கேட்டிருப்பேன். மக்களிடை மமதையை, மடமையை, மாச்சரியத்தை வளர்க்கும் பழைய கதைகளைக்

கட்டி அழுகிறீர்களே எழுத்தாளர்களா நீவிர் என்று கேட்டிருப்பேன், ஏழையின் கண்ணீரைப் பற்றிக் கதைதீட்டி விட்டு இறைவன் மீது பழிபோடுகிறீர்களே, முறையா என்று கேட்டிருப்பேன். மந்திரம், தந்திரம், தலைவிதி முதலிய கொள்கை களை முறியடிக்கும் சம்மட்டியை இரவல் பெற்றுக்கொள்ளவும் முடியவில்லையா என்று கேட்பேன், பரதா! என் கோபத்தைக் கிளறாதே, நான் என்னென்னமோ, கேட்டிருப்பேன்.''

''வீரா! நீ கூறினது உண்மை, எழுத்தாளர்கள் பட்டியிலே இல்லாமல், நடையழகு, மனை உயர்வு, புகழுரை ஆகியவற்றைக் கவனியாமல் எண்ணத்தை ஒருசிலர் எடுத்து எழுதிக் கொண்டிருக் கின்றனர். அவர்கள் ஒதுக்கப்படுவர், எழுத்தாளர்களால், அவர்களுக்கு இலக்கியப் பூங்காவிலே அதன் பாதுகாவலர் இடந்தரமாட்டார்கள். அவர்களைக் கண்டதும், எழுத்தாளர் கடிந்துரைப்பர், ஆனால் அவர்களின் எழுத்து, அவர்கள் வெளியிடும் எண்ணம், நீ விவரித்த எல்லா வகையான எழுத் தாளர்கள் உள்ளத்திலும் மெல்ல, மெல்லச் சென்று சேர்ந்து வருகிறது. படுபாவி இப்படிச் சொன்னானே என்ற கண்டனத் துடன் நமது எண்ணத்தை அவர்கள் வரவேற்றுக், கடைசியில் இதிலென்ன தவறு என்று தம்மையும் அறியாமல் கூறுவர், ஆகவே, எழுத்தாளர்கள் எழுத்தைக் கவனிக்கட்டும், நாம் நமது இலட்சியத்தைக் கவனிப்போம் என்று வேலை செய்தால் எழுத் தாளர்கள் நமது எண்ணங்களை எடுத்தாள்பவர்களாகி விடுவர். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஒரு எடுத்துக்காட்டு, கேள், நாம், பண்டிகைகளின் புரட்டுகளை விளக்கி எழுதுகிறோ மல்லவா? மற்ற எழுத்தாளர்கள் நமக்கு வேறு வேலையில்லை, நமது எண்ணத்தால் விளையும் பலன் ஒன்றுமில்லை என்று கேலி செய்கின்றனரல்லவா. அவர்கள் அறியார்கள் பாவம், எழுத்தி லேயே தமது எண்ணத்தைப்பதிய வைத்துவிடுவதால், நமது எண்ணம் அவர்தம் உள்ளத்திலே புகுந்து இடம்பெற்றுவிடுவது கூட அவர்களுக்குத் தெரியவில்லை,''

''நீ என்ன சொல்கிறாய் என்று தெரியவில்லையே''

''இதேபோலத்தான் அவர்கள், நாம் என்ன சொல்கிறோம் என்பதையே முதலில் தெரிந்துகொள்வதில்லை. பிறகு தம்மையும் அறியாமல் நாம் கூறுவதை ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் வெட்கம் காரணமாக வெளியே சொல்வதில்லை, நாம் தீபாவளிப் பண்டிகை அநாவசியமானது, அநாகரிகக் கருத்துள்ளது என்றும், தமிழர் அதனைக் கொண்டாடக்கூடாது என்றும் எழுதி வந்தோமல்லவா?''

''ஆமாம்! ஆனால் எழுத்தாளர்கள் தீபாவளி மலர்களிலே கவனம் செலுத்தினர், நமது பேச்சை ஏற்கவில்லை''

“நீ கூறுவது தவறு, அவர்கள் தீபாவளி மலர்களையும் வெளியிட்டனர், அதிலே நமது கருத்துக்களையும் வெளியிட்டுவிட்டனர்.”

“தீபாவளி மலரிலே தீபாவளி மறுப்பா?”

“ஆமாம்! விசித்திரம் ஆனால் உண்மை!!”

“எதிலே? என்ன விஷயம்? எடுத்துச் சொல்”

“பஞ்சமும் நோயும் மக்களைப் பாழ்படுத்துகிறதே, பண்டிகையாம் பண்டிகை, இது ஏனய்யா வீணாட்டம் என்று நாம் பலதடவை சொல்லி வந்திருக்கிறோமல்லவா?”

“ஆமாம் சொன்னோம்”

சரி இதோ படி, இக்கவிதையை.

ஏனோ வந்தாய், ஏனோ வந்தாய்,
தீபாவளியே, ஏனோ வந்தாய்,
வானம் பொழியும் மழையின் வாடைச்
சீற்றம் தனக்கு ஆற்றா மேனியை
மூடச் சிறுதுணி கூட இல்லாத
ஏழை என் வீட்டிற் கேனோ வந்தாய்?
அடைமழை ஒழுக்கால் தரையது நனைந்து
படைச்சுவர் ஓர்புறம் பாழாகிறது.
பொதும்பிய அடுப்பில் பூனை தூங்க
வெதும்பிய உளத்தோடு மனையாள் ஏங்க,
ஊரார் உடுத்திய ஆடைகள் கண்டும்,
பட்சணம் செய்யும் வாடை நுகர்ந்தும்,
வெடியின் சப்தம் இடியெனக் கேட்டும்
பிள்ளைகள் என்னை அல்லற் படுத்தி
தம்சிறு கன்னம் கண்ணீர் புரளப்
பார்த்தும் உயிரோடு இருக்கும் என்மனைக்
கேனோ வந்தாய்? ஏனோ வந்தாய்?

வறுமை யரக்கன் மாய்ந்தானில்லை
சிறுமை யரக்கன் தீய்ந்தா னில்லை
மடமை யரக்கன் மடிந்தா னில்லை
கொடுமை யரக்கன் குலைந்தா னில்லை
அவைஎமை ஆட்டி அழிக்கும் போது
எவனிறப் பிற்கோ இத்தீ பாவளி?

வைகறைப் புட்கள் வானிற் பாட
மையறு மலர்கள் மலரும் போதில்
கண்மலர் விரித்து, எண்ணெய்நீ ராடி
புதுவுடை யணிந்து, குதுகலத் தோடு
உண்டி யுண்டு களிக்கும் மாந்தரீர்,
எம்போ லுள்ளோர் நும்போல் மகிழ்வுறும்
அன்னாள் என்னாள்? அன்னாள்
நன்னாள். பண்டிகை நாளும் அதுவே!

“பரதா, அருமை, அருமை, இதுவல்லவோ எழுத்தாளன் வேலை, இது எங்கே கிடைத்தது.”

“தீபாவளி சமயத்திலே நவயுவன் என்ற வாரப்பத்திரிகை வெளியிட்ட பாட்டு இது, இது மட்டுந்தானா? தீபாவளி கொண்டாடச் சொல்பவன் ஒரு வீணன், கோமாளி என்றெல்லாம் கண்டித்துக் கூறுவோமல்லவா நாம்?”

“ஆமாம், அவன் ஓர் வீணன் என்பதிலே சந்தேகமென்ன”

இதோ இதைப்படித்துப்பார்.
கூதிர்வாடையில் கொட்டும் மழையில் வீட்டில்
கொலுவுற்ற ஓர் விளக்கணையுமென்று
வீதிய தெங்கும் விளக்கெரித்து அதை
விந்தை தீபாவளி என்றவன் யார்?

ஓடி அலுத்தவரும் வழியில் – சேறு
ஒட்டிய கந்தைத்துணி விலக்க
கோடியுடுத்தி குளிர் தணித்து – அதைக்
கொண்டாட்டமாக்கிய கோமாளி யார்?

ஆடுகோழியும் பலிகொடுத்து – எங்கோ
அசுரன் மடித்தனன் என்று சொல்லி
வீடெல்லாம் வெடிகள் முழங்கச் செய்து – அதை
வேடிக்கையாக்கிய வீணனும் யார்?

“பலே, சரியான சவுக்கடி, இது யார் எழுதியது,”

“இது கலையைக் காப்பாற்றும் கலாரசிகர் சிதம்பரநாதரை ஆசிரியராகக் கொண்டிருக்கம் கௌரவம் வாய்ந்த வசந்தம் பத்திரிகையிலே இருப்பது. அதுமட்டுமல்ல வீரா, சொர்க்கமாவது நரகமாவது, அந்தப் புராணப் புளுகை நம்பாதே, நரகன் என்ற

அசுரனைக் கண்ணன் கொன்றான் என்று எவனோ எதற்கோ எழுதிய கட்டுக்கதையை வைத்துக்கொண்டு ஒரு விழா, இது வீணல்லவா என்றெல்லாம் நாம் கண்டிக்கிறோமல்லவா?''

"ஆமாம், அதை இந்த எழுத்தாளர்கள் கேட்டால்தானே?''

"கேட்டதுமட்டுமல்ல, பாட்டாகத் தீட்டியு மிருக்கின்றனர். படி இதனை,''

கண்காணா இடத்திலே சொர்க்கமென்றோர்
கட்டுக்குள் அடங்கி நிற்கும் எல்லை உண்டு
மண்காணாததனை யென்னும் புராணப் பேச்சை
மனத்துக்குள் வாங்காதே, தமிழா: இங்கே
எண்காணாவள மெல்லாம் படைத்து வாழ்ந்தால்
இதுவேதான் சொர்க்கமடா தம்பீ, வீணே
விண்காணாய், அமரர்களைக் காணாயென்று
மின்னல் தவழ் வானகத்தைப்பார்க்க வேண்டாம்
இருள் நிறைந்து மனிதருள்ளம் ஞானம் நீங்கி
எழிலழிந்தும்மனைகளெல்லாம் புழுதிபூத்து
மருள்செறிந்து நாட்டினிலே வளங்கள்மாய்ந்து
மக்களெல்லாம் தொழுமாடாய்விலங் காய்ப்போனால்
அருள்மிகுந்து தெய்வமெலாம் கூடிஇங்கே
ஆட்டங்கள்போட்டாலும் நரகம்ஈதே
இருளொழிந்து மனிதரெலாம் அறிவால் ஓங்கி
இன்பவாழ்வடைந்துவிட்டால் இதுவே சொர்க்கம்.
நரகனென்றோர் அசுரன் முன்னம் பெண்டிர் தம்மை
நலிந்து சிறை இருத்திவிட்டான்; கண்ணன் தோன்றி
உரமுடனே அவனையழித்துலகம் எல்லாம்
ஒளியாக்கி களிதேக்கிவைத்தான் என்பர்.
பரவுகின்ற இன்பத்தின் உருவம்பெண்மை:
பாரினிலே இன்பமின்றி அஞ்ஞானந்தான்
விரவிநின்று மனிதர்களை நலிவுசெய்ய
மேலெழுந்து மெஞ்ஞானம் வென்றதம்மா.
இதனையொரு கதையாக்கி விழாவுமாக்கி
இன்று தீபாவளியென்றொரு பேர்இட்டார்;
விதவிதமாய் வெடிசுட்டுப் புதியஆடை
மேலணிந்து வயிறுமுட்ட விருந்தைஉண்டு
அதனாலே தீவிளிதான் நிறைதல்இல்லை;
அன்பினோடுந் தெய்வவருள் நினைந்துநாட்டில்

பொதுவாக எங்கெங்கும்மலிந்த தீங்கைப்
போக்கிஒளி பரப்புதற்கே வழியைக்காண்பாய்.
எள்விளைக்க அறியாமல் எண்ணெய்தேய்த்தாய்;
இருள்கெடுக்க அறியாமல் விளக்கு வைத்தாய்;
கள்விளைக்கக்கலாம்விளைக்க வறுமைவாழ்வு
கால்கொள்ளும்படி விளைக்கக்கற்றாயன்றித்
துள்ளி விடுதலைவிளைக்க நாடுமுற்றும்
தூய்மையினைவிளைக்க என்ன தொண்டு செய்தாய்?
கொள்கையினைக் கடைப்பிடிக்கும் தீரம் இல்லைக்
கோழைக்குத் தீவிளிக்கொண்டாட்டம் ஏது?
சோராதே, பதறாதே பொறுமையொடு
தொண்டியற்றிக் கச்சைகட்டி முன்னேநிற்பாய்
ஆராலும் உனைவெல்ல இயலாதென்னும்
ஆண்மை நினைவினை நெஞ்சில் ஏற்றிவைப்பாய்:
பாராளுந்திறமையெனக் குண்டென்றேசொல்;
பாமரர்க்குச் சுதந்திரத்தில் ஊக்கம் ஊட்டு
சேராதார் யாவரையும் சேர்த்தொன்றாக்கு
தீவிளி நீ கொண்டாடுங்காலம் காண்பாய்!

“பரதா, எழுத்தாளர் என்ற இலட்சணம் எழிலுடன் இங்கே இருக்கிறது. இது கிடைத்த இடம்”

“இதுவா? இது “அனுமான்” என்ற வார இதழிலே, தீபாவளி வெளியீட்டிலே இருப்பதுதான்.”

“பரதா! இந்தப்பாடல்களை எல்லாம் பார்க்கும்போது, இவர்கள் நமது பகுத்தறிவுப் பள்ளிக்கூடத்திலே படித்துப் பரிசு பெற்ற மாணவர்கள் போலல்லவா தோன்றுகிறது!”

“மாணவர்களல்ல! பகுத்தறிவுப் பள்ளிக் கூடத்துப் பாதை வழியே சென்றவர்கள்!”

“ஆகவே பரதா, நாம் நமது காரியத்தைச் செய்தால், எழுத்தாளர்கள், நமது வழிக்கு வந்தே தீருவார்கள் என்று கூறுகிறாய்.”

“நிச்சயமாக! அதுமட்டுமல்ல, அவர்கள் ஆரம்பித்திருக்கும் எழுத்தாளர் சங்கம், முதலிலே எழுத்தாளர் நிலை பற்றிய அக்கரையுடன் திருப்தி அடையும், பிறகு அச்சங்கம், புரட்சிகரமான மாறுதலை எதிர்க்கும் சங்கமாகக்கூடும், எழுத்தாளர் சங்கம் நமது முயற்சிகளைத் தமது பேனா முனையினால் அடித்தாள்வோர்

சங்கமாகக்கூடும், ஆனால் இந்தக் கட்டம் முடிந்ததும், எழுத்தாளர் சங்கம், புதுமை அமைப்பாளர் சங்கமாக மாறும்''

"மாறுமா? மாற்றித் தீர்க்க வேண்டுமா?''

"காற்று அடிக்கும்போது, மரங்களை ஆட்டிவிடப்போகிறேன் என்று சொல்வதில்லையே வீரா, அதுபோல, கால வேகம் இருக்கிறதே அதுவேலை செய்யும், அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும்; எதிர்த்தாலுங்கூட.''

— திராவிட நாடு

26.11.1944

நிருபரின் நிலைமை

– பரதன்

“கூட்டம் அதிகமோ?” என்று கேட்டார் ஆசிரியர், தமது சுழல் நாற்காலியிலே அமர்ந்துகொண்டு.

“ஆமாம், செயின்ட் மேரி மண்டபம், நிரம்பி வழிந்து, வெளித்தாழ்வாரத்திலே ஓடி, தெருவிலே, வெள்ளம்போல் கூட்டமாக, ஜனங்கள். இந்தி எதிர்ப்புக்காரர்கள் போடுவார்களே கூட்டம், அதுபோல இருந்தது” என்று பதிலுரைத்தார் நிருபர். அக்கரையுடன் தனது வேலையைச் செய்து முடித்ததை ஆசிரியருக்குத் தெரிவிப்பதுடன், தனக்குச் செய்தியை வர்ணிக்கவும் திறமை உண்டு என்பதனை விளக்க, ஆசிரியர், சந்தோஷமடையவில்லை. “சுருக்கமாகப் பதில் சொல்வதென்ற வழக்கமே உனக்கு இல்லை. கூட்டம் அதிகமா என்று கேட்டால் எஸ், நோ (Yes. No) என்று ஒரே வார்த்தையிலே பதில் சொல்லாமல், நாவல் மாதிரி நீட்டினால், யார் கேட்டுக்கொண்டிருக்க முடியும்” என்று கண்டித்தார். முன்பெல்லாம் விரிவாக, விளக்கமாக ஒரு விஷயத்தைக்கூட விடாமல், தெளிவாகச் சொல்லும்படி கண்டிப்பான கட்டளையிட்ட ஆசிரியர், இப்போது கோபிப்பதன் காரணம் நிருபருக்குத் தெரியவில்லை. காரணமில்லாக் கோபமாக இருந்தாலும், நிருபர் பொறுத்துக்கொள்ளத் தானே வேண்டும்! சம்பளமில்லாச் சேவகமல்லவே!!

“கூட்டத்திலே என்ன விசேஷம்” என்று கேட்டார் ஆசிரியர். நிருபருக்கு என்ன சொல்வதென்று

தெரியவில்லை. எதை விடுவது எதைச் சொல்வது என்று தெரிய வில்லை. கூட்டமே ஒருவிஷேமாகத்தான் இருந்தது. ஜனத்திரளோ விசேஷம். அலங்காரங்களோ விசேஷம். மேடைமீது தலைவர்கள் அமர்ந்திருந்த காட்சியோ விசேஷம். தேசிகரென்ன தேவசேனாஎன்ன, பாகவதரென்ன அவரை ஒரே ஒரு பாட்டுப்பாடும்படி வற்புறுத்திய ரசிகர்கூட்டமென்ன, N.S.K. என்ன அவர்கூறிய "பொம்பளே, ஆம்பளே விவாதப் பாட்டென்ன", மதுவிலக்குப் பிரசாரத்தையும் ஒரு மாலை மறந்து அங்கு வந்திருந்த மாஜிகனங்களென்ன, எல்லாமே விசேஷமாகத்தான் இருந்தது. இவ்வளவையும் கூறினால், ஆசிரியர் கேட்பாரோ, கோபிப்பாரோ என்ற அச்சத்தால் அந்த நிருபர், கூட்டத்திலே என்ன விசேஷம் என்ற கேள்விக்கு, "ஒன்றுமில்லை' என்று பதில் கூறினார். "இடியட்! (Idiot) ஒரு விசேஷமும் இல்லை என்று கூறுகிறாயே, இதை வந்து சொல்லத்தானா நீ அங்கே போனாய்? பத்துமணிக்குள், மொத்த விஷயமும் விளக்கமாக, விரிவாக, எழுதி வீட்டிற்கு அனுப்ப வேண்டும். பத்து மணி என்றால் நாளைக்காலையில் அல்ல, இன்று இரவு. நான் ஒரு பார்ட்டிக்குப் போகிறேன், பத்தடிப்பதற் குள் பங்களாவுக்கு வந்துவிடுவேன்" என்று கோபமாகப் பேசிவிட்டு, ஆசிரியர் 'தமிழாம்! இசையாம்!' என்று முணமுணத்துக்கொண்டே மாடிப்படிக்கட்டை இரண்டு மூன்றாகத் தாண்டிக் கீழே இறங்கி, மோட்டாரின் கதவை இழுத்து அடித்தார். நிருபரின் மீது இருந்த கோபம் தீரவோ, இத்தனை ஜனங்களுக்கு வேறு வேலையில்லையா, ஏன் இப்படி இந்தத் தமிழ் இசை மாநாட்டுக்குப் போய்த் தொலைக்கிறார்கள் என்ற கோபத்தை அடக்க முடியாமலோ! மோட்டார் மறைந்ததும், நிருபர் தலையைச் சொரிந்தார் – எதை எழுதுவது என்ற கவலையால்.

நிருபர் படும்பாடு! ஆசிரியர்களின் ஆணவம்! பத்திரிகைத் தொழிலும் சுயமரியாதையும்! என்ற ஏதாவதொரு தலைப்பிலே, ஒரு புத்தகமே எழுதியிருக்க முடியும் அந்த நிருபரால். அன்றிரவு அவர் மனதிலே, அவ்வளவு எண்ணங்கள் தோன்றின. ஆனால் ஆசிரியர் எழுதி முடிக்கச் சொன்னது, தமிழிசை மாநாடு பற்றிய தகவல், ஆசிரியர் மீதிருந்த கோபத்தை, நிருபர், வீட்டிலே, அம்மையார் மீது பிரயோகிக்கத் தொடங்கினார். ஆனால் அவருடைய மகன், தெருத்திண்ணையிலே உட்கார்ந்துகொண்டு, "ஆம்பளைக்கீடோ, வேட்டிகட்டிய ஆம்பளைக்கீடோ" என்ற என்.எஸ்.கே. பாட்டைப் பாடிக்கொண்டிருந்தான், அவன் தமிழிசை மாநாட்டுக்குப் போய்வந்ததால், நிருபர், கோபத்தையும் கவலையையும் மறந்து சிரித்தார். சிரிப்போடு சிரிப்பாக அவருக்கு ஒரு சிந்தனையும் பிறந்தது. அவசர அவசரமாகக் குறிப்புப் புத்தகத்தைத் திறந்து பார்த்தார். "நான் பாடியது உங்களுக்கெல்லாம்

புரிந்தது, தமிழிலே பாடினதால். உங்களுக்குப் புரியவே நீங்கள் சந்தோஷமடைகிறீர்கள். இதனால்தான் தமிழிலே பாடினால் தமிழனுக்குத் தெரியும், புரியும் என்று தமிழிசை இயக்கம் கூறுகிறது" என்று காணப்பட்டது குறிப்பிலே. அது அன்று தோழர் என்.எஸ். கிருஷ்ணன் செய்த சொற்பொழிவிலே ஒரு பகுதி. நிருபர், சாப்பாட்டுக்குப் பிறகு, எழுத ஆரம்பித்தார், ஒரு மணி நேரத்திலே முடித்தார். பத்து மணிக்குப் பங்களா சென்றார், எடிடரைப் பார்க்க, முடியாது என்றுரைத்த பியூனிடம் ஒரு சினிமா காம்பிளி மெண்டரி டிக்கட்டை வீசினார், உள்ளே சென்றார் உரத்த குரலிலே குரைத்த நாயைக் கண்டு நடுங்கினார், ஜிம்மி, ஜிம்மி என்று அதன் பெயரை ஜெபித்து அதன் உக்கிரத்தை அடக்கினார், யாரது? என்ற ஆசிரியர் குரலுக்கு "நான்தான்" என்று சம்பிரதாய மான பதிலுரைத்தார். காகிதக்கட்டைக் கொடுத்தார், கனைத்தார், எடிட்டரின் கரம் பேசியது கண்டு, பங்களாவைவிட்டு வெளியே கிளம்பினார். வீடு சென்றார், எதிர்வீட்டிலே, பாகவதரின் ''உன்னைக்கண்டு மயங்காத பேர்களுண்டோ'' பிளேட் பிரம்மானந்தமாக நடப்பது கேட்டது, வீட்டிற்குள்ளே சென்றார்.

சென்னை *23–12–43*

(23–12–43 வியாழக்கிழமை) இன்று மாலை *4.30* மணிக்குச் சென்னை, செயின்ட் மேரி மண்டபத்திலே, தமிழிசை மாநாடு மிக விமரிசையாக நடைபெற்றது. விமானப்படையெடுப்புச் சங்கு ஊதினால், மக்கள் பயந்து, ஏர்.ஆர்.பி. பதுங்குமிடங்களுக்கு, ஒருவரை ஒருவர் நெட்டித் தள்ளிக்கொண்டு, நான் முந்தி நீ முந்தி என்று ஓடுவதுபோல ஏராளமான ஜனங்கள், மண்டபத்தை நோக்கி விரைந்தனர். மண்டபத்திலே எள் விழ இடமில்லை. மேடை மீதிருந்த தலைவர்கள் இருபதுக்கு மேல் இருக்குமென்றால் அன்று மாநாட்டுக்கு வந்திருந்த ஜனத்திரளும் இருபது தனித்தனி மாபெருங்கூட்டங்கள் போடக்கூடிய அளவு இருக்கும்! அவ்வளவு பிரமாதமான கூட்டம்! சைனா பஜார் வீதிவரையிலும் கூட்டம்! காணமுடியாவிட்டாலும், பேச்சைக் கேட்கலாம், என்று அவ்வளவு கூட்டம் வீதியிலே நின்றது, ஒலிபெருக்கி, அவர்களுடைய சிரமத்தை உணர்ந்து, வேலைசெய்ததுபோல, தெளிவாக இருந்தது! இரைச்சல் குடைச்சலின்றி.

சர்.ஆர்.கே. சண்முகம், திரு.வி. கலியாணசுந்தரனார், சி.ஆர்., டாக்டர் சுப்பராயன், குமாரராஜா வி.வி. இராமசாமி, கோவை பழனிச்சாமி நாயுடுகார், சர். வெங்கடசுப்பராவ் தம்பதிகள், டி.பி. மீனாட்சிசுந்தரனார், எஸ். முத்தையா முதலியார், அப்துல் அமீத்கான், சி. தாதுலிங்க முதலியார், கச்சாபகேச முதலியார், இந்திராணி பாலசுப்பிரமணியம், மீனாம்பாள் சிவராஜ், கல்கி

ஆசிரியர், குமரன் ஆசிரியர் முருகப்பா மற்றும் பலர் மேடையில் காணப்பட்டனர். மாகாணத்தின் பல பாகங்களிலிமிருந்து அனேக கலா ரசிகர்கள் மண்டபத்திலே குழுமியிருந்தனர். முத்தமிழ்க் கலா வித்வான் டி.கே. சண்முகம் அவர்களும், அவர்களின் எம்.எஸ்.பி.எஸ். சபை நடிகரும், தற்போது பூம்பாவை எனும் படத்திலே நடித்து வருபவருமான இராமசாமியும் வந்திருந்தனர்.

இடிபட்டுக் கொண்டும் இரைச்சலால் காது குடைச்சல் பட்டுக்கொண்டுமிருந்த கஷ்டம் மக்களுக்குப் போக, ஒரு விருந்து, மாநாடு துவங்கு முன்பே கிடைத்தது! தேசிகர் பாடினார்! தமிழில்! இனிமைத் தமிழ் மொழி எமது உயிர்க்கு வாய்த்த நல் அமுது, என்று கனகசுப்புரத்தினம் (பாரதிதாசன்) பாடினாரே, அது பொய்யா! அன்று தேசிகரின் பாடல் கேட்டோர், தமிழின் இனிமையில் தம்மை மறந்தனர். தேசிகருங்கூட, துக்கடாக்களுக்கு மட்டுமே உபயோகிக்கப்பட்டு வந்த தமிழ் இவ்வளவு மாபெருங் கூட்டத்தைத் தமிழிசைக்கு இழுத்து வந்ததை எண்ணிப் பூரித்துத் தம்மை மறந்து, தமிழைத் தழுவி, இசையைப் பொழிந்தார். மகாநாட்டிலே, நகைச்சுவை அரசர் என்.எஸ்.கே. பிறகு, ஆண்பெண் சமத்துவ போதனை செய்யப்போகிறார் என்பதைத் தெரிந்தோ என்னமோ, தேசிகர் பாடியதும், தேவசேனா அம்மையாரும், திருவனந்தபுரம் திருமதி ஒருவரும் பாடினர். இந்த இசை வரவேற்பு முடிந்ததும் மாநாடு ஆரம்பித்தது. முத்தமிழின்சுவையிலே மூழ்கி மகிழ்ந்துவரும், ராவ்சாகிப் பி. சம்பந்த முதலியார் அவர்கள், தமது வரவேற்புரையிலே, தமிழிசையின் வரலாற்றினை எடுத்துரைத்தார். ராவ்சாகிப் வெறும் ரசிகரல்ல என்பது தமிழருக்குத் தெரியும். நாடக ஆசிரியர், நடிகர், தமிழகமெங்கும் அவரது நாடக நூற்கள் காணப்படும். அரசியல் சுழலிலே சேராதவர், ஆனால் காலவேகத்தை உணராதவரல்ல கலாரசிகர், ஆனால் கற்காலத்துக்கலையே இக்காலத்துக்கும் ஏற்றது என்ற பிடிவாதக் காரரல்ல. எனவே அவருடைய கருத்துரைகள், வெறும் பேச்சாகா. நாம் எடுத்துக்கொண்ட காரியம் நல்லதாக இருப்பினும் நடக்கக் கூடியதா என்று தெரிந்துகொள்ளவே, பலரும் விரும்புவர். காரணம் ஒருசிலர் தவிர மற்றையோர், நடக்கக்கூடியதுதான் என்ற நம்பிக்கை பிறந்தாலன்றி, ஒரு காரியத்திலே பிரவேசிக்க மாட்டார்கள். அவர்களுக்கு, வரவேற்புக் கழகத் தலைவர் இம்மொழி கூறினார். “50 வருடங்களுக்கு முன் தமிழிசையானது எந்த நிலையிலிருந்தது? தற்காலம் எந்த நிலைமையிலிருக்கிறது? என்கிற விஷயத்தைப் பற்றிச் சிறிது நேரம் ஆராய்ந்து பார்த்த அளவிலேயே, தற்காலம் அதற்கு நற்காலம் வாய்த்திருக்கிறது என்று கூறிவிடுவார்கள்” ராவ்பகதூர் அவர்கள், தமிழிசைக் கச்சேரி, தமிழ்க் காலட்சேபம், தேவாரபாராயணம், தமிழ் நாடகமேடை, படக்காட்சி எனும் நான்கு துறைகளிலே தமிழிசை பரவி வருவதையும் குறிப்பிட்டு

தமிழ் நாடக மேடைகளிலே தெலுங்கிலே பாடும் போக்கையும் வருத்தத்தோடு கண்டித்தார். தமிழிசை அவசியம், அது அவசியம் என்ற கருத்து பரவிவிட்டது, ஆக்க வேலைகளும் நடை பெறுகின்றன, என்ற நற்செய்திகளைக்கூறி (மாநாட்டினரை அவர் வரவேற்றார்) மாநாட்டினைத் துவக்கியவர், செட்டி நாட்டரசர். மாநாடுமட்டுமென்ன தமிழ்இசை இய க்கத்தையுங் கூடத் துவக்கியவர் ராஜாசர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தானே! அவர் எண்ணித் துணிக கருமம், என்பதறிந்தவர், எடுத்த காரியம் வெற்றிபெற வழிவகை தெரிந்தவர். தமிழிசை இயக்கத்திலே அவருக்குள்ள ஆர்வம், தமிழரின் மறுமலர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கிறது.

தமிழ் இசை கேட்க வேண்டும், அதிலுள்ள இன்பத்தைப் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கம், செட்டிநாட்டரசருக்கு இருக்குமானால், அதைப்பெற, மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் தேவையில்லை மனதிலே வேறு ஏதோமாச்சரியத்தை வைத்திருக்கும் பேர்வழிகளின் மனத்தாங்கலை அவர் மனமுவந்து ஏற்றுக் கொள்ளவும் தேவையில்லை. தேசிகரையும் பாகவதரையும் துணைக்கு வைத்துக்கொண்டால், ராஜா. சர், சதாசர்வகாலமும் தமிழிசையைக் கேட்டு இன்புற்றபடி இருக்க முடியும். ஏன்? தமிழிசையை யாரோ சில சங்கீதரத்னாகாரங்கள் எதிர்ப்பதாகக் கூறுகிறார்களே, அவர்களுக்கே கூட ஐம்பது என்பதை நூறாகப் போட்டால், அருமையான தமிழ்ப் பாடல்களைப் பாடி அவரை அகமகிழச் செய்ய முன்வரமாட்டார்களா! ராஜா. சர். அவர்கள், தாம்மட்டுமே, தமிழிசையைக் கேட்டு இன்புறவேண்டும் என்று நினைக்கவில்லை. தமிழர் தமிழிசையைக் கேட்க வேண்டும் என்ற பொதுநோக்கம் கொண்டிருக்கிறார், ஆகவேதான், தமிழிசை இயக்கம் கண்டார். ராஜா சர் அவர்கள் தமது சொற்பொழிவிலே கூறியுள்ளபடி, "தமிழ் உணர்ச்சியுள்ள எல்லாத் தமிழரும் இதன் கலைத்தொண்டில் பங்கு கொள்வது கடமையும் உரிமையுமாகும்" அந்தக் கடமையைச் செய்யாதிருப்பது மடைமை! ஆனால், கடமையைச் செய்யாதிருப்பதுடன், கடமையைச் செய்பவரை எதிர்ப்பவர்களின் செயலை என்னென்பது! அது கேவலம், கொடுமை. அத்தகைய பிறவிகள் தமிழகத்திலே இருத்தல் முறையல்ல, என்பதனால்தான் "தமிழகத்திலே தமிழ் முழக்கம் செய்வதைத் தடைசெய்யும் தமிழன் இருக்க முடியாது" என்று ராஜா சர் கூறினார். இருக்க முடியாது என்ற அவர் உரையிலே தொக்கியுள்ள கருத்து, இருக்கக்கூடாது, என்பதாகும். "இதென்னையா புதிதாக ஒரு இயக்கம்; தமிழாம் இசையாம், இதெல்லாம் என்ன தொல்லை?" என்று கேட்கும் பேர்வழிகளும் தமிழகத்திலே உண்டல்லவா! இதனை உணர்ந்தே, கொடைவள்ளல், "தமிழிசை புதிதல்ல, தமிழிசை இயக்கம் படை எடுப்புமல்ல, அபசாரமாகாது

— தமிழ் இந்நாட்டிற்குரிய மொழி. தமிழ்இசை இந்நாட்டுக்குரிய இசைச்செல்வம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே தமிழிசை செழித்து வந்தது'' என்று கனிவுடன் கூறினார். இக்கருத்தினையே, மாநாட்டுக்குச் செய்தியனுப்பிய, ஸ்ரீ டைகர் வரதாச்சாரியார், "தமிழ்ப்பண் 1991 என்று கணக்கிட்டிருக் கின்றினர்'' என்று விளக்கியுமுள்ளார். புதிதல்லாததும், படை எடுப்பல்லாததும், பண்டையப் பண்பை மீண்டும் பொலிவுறச் செய்யும் மாண்புடையதுமான தமிழிசை இயக்கத்தையும் சிலர் எதிர்க்கின்றனரே, என்ற கோபம், திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம், அவர்களை, "இசையாளர் தமிழ் நாட்டில் தமிழிலேயே பாட வேண்டும், இல்லையேல் தக்க பாடம் கற்பிக்கப்படும் என்று எச்சரிக்கிறேன்'' என்று கூறச் செய்தது. ராஜா சர் அவர்களின் தெளிவான, கனிவான சொற்பொழிவுக்குப் பிறகும் தமிழிசையை எவரேனும் எதிர்ப்பதானால், அதனைக் கல்கி பத்திரிகையாசிரியர் தோழர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறியபடி, "அந்த அபஸ்வரப் பல்லவியை 1944ம் ஆண்டிருலிருந்து யாரும் பாட மாட்டார்கள்'' என்று கூறத்தான் வேண்டும். சங்கீதத்திற்கு மொழி முக்கியமில்லை என்று கூறினாராம் ஒரு சுப்பராவ்! அவரைப் பற்றி ராஜாசர், "சுப்பாராவ் அவர்களும் கட்சி வேகத்தால் சிறிது மயக்கம் அடைந்து, கோணலான ஒரு அளவுகோலால் சங்கீதத்தை அளந்ததின் பயனாக, அழகிற்கு அனுகுணமான விஷயம் அவர் கண்ணிற்கு அவலட்சணமாகப் படுகிறது'' என்று கூறினார். காமாலைக் கண்ணனுக்கு கண்ட தெல்லாம் மஞ்சள் என்ற பழமொழி, எவ்வளவு நாசுக்காக மலர்ந்திருக்கிறது பாருங்கள். தமிழிசை இயக்கம் தோன்ற வேண்டிய காரணத்தையும் ராஜாசர், தெளிவுபடுத்தினார். "பிறமொழிப் பாடல்கள் மிக்க சமீபத்திலேதான் தோன்றின. பிறமொழிப் பாடல்களில் மோகம்கொண்ட சிலர் தடைச்சுவர் எழுப்பினார்கள்'' இந்தத் தடைநில்லாது என்பதறிந்தே செட்டி நாட்டரசர், இயற்கைக்கு விரோதமான இத்தடை எத்தனைநாள் நிற்க முடியும்? தாயிடமிருந்து மக்களை எத்தனைநாள் பிரித்து வைக்க முடியும்'' என்று கேட்பதன் மூலம், தடை நிலைக்காது, தகர்ந்து போய்விடும் என்பதைத் தமிழகத்துக்குத் தெரிவிக்கிறார். தமிழிசைக்கு ஆதாரங்கள் பல கூறியபிறகு, எதிர்ப்பாளருக்கு இவைகளை எல்லாம் சரியாகக் கவனித்து ஆரஅமர யோசிக்க நேரங்கிடைக்குமோ கிடைக்காதோ, ஆத்திரக்காரருக்கு அவசரம் அதிகமாயிற்றே என்று கருதிப்போலும், ராஜாசர், அவர்களுக்குச் சுலபமான வழியொன்றையும் காட்டுகிறார். "கண்ணிருப்பவர் தமிழிசைக்குள்ள பொது ஜன ஆதரவைக் காணலாம். காதிருப்பவர் எத்திசையிலும் தமிழிசை கேட்டு இன்புறலாம்'' என்று செட்டி நாட்டரசர் கூறியபோது, மக்கள் காட்டிய உற்சாகம், கொஞ்சமல்ல.

ஆனால் கண்டும் கேட்டுங்கூட மனமொன்று சொல்ல வாயொன்று பேசச் சிலருக்கு வழக்கமுண்டு. அவர்களின் வாய்ப்பறை இசை மாநாட்டுக்குப் பிறகும் ஓயக்காணோம்.

தமிழ் இசைக்கு எதிரிடையாக இரைச்சலிடுபவர்களிடம், காரணங்காட்டி வாதிடவோ, மன்னிப்புக் கோரவோ, அவசிய மில்லை நான் நீதியைக் கேட்கும்போது, நிமிர்ந்து நின்று கேட்டிடின் குற்றமென்ன என்ற கருத்து, அன்று கோவைக்குமரன், சர். சண்முகம் அவர்கட்கு, 'தமிழ், இசைக்கு ஏற்றமொழியோ என்னவோ, அதிலே அருமையான கிருதிகள் உண்டோ இல்லையோ, தமிழ் இசை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இருந்ததோ இல்லையோ, அதெல்லாம் எனக்குத் தெரியாது. தெரியவேண்டிய அக்கரையுமில்லை. என்னுடைய தமிழிலே இருக்கும் அளவு இசை எனக்குப் போதும். எனக்கு என் தாய்மொழியாகிய தமிழிலே பாடல் கேட்டால்தான் ஆத்மதிருப்தி உண்டாகிறது. இதற்குக் காரணங்காட்டத் தேவையுமில்லை, மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியமுமில்லை', என்று, சர். சண்முகம், கூறினதும், மண்டபம் ஆடிற்று, மக்களின் ஆனந்த ஆரவாரத்தால், தமிழரின் உள்ளத்தை அவர் அம்மொழிகளால் படமெடுத்துக் காட்டினர். தமிழன் தமிழிலே பாடச் சொல்வதற்கும் தடையா, எதிர்ப்பா? என்று, கொதிப்புக்கொள்ளாத தமிழனில்லை. தமிழனின் இன்றைய நிலைமை என்ன? கேளுங்கள் சர். சண்முகத்தின் பேச்சினை. "உத்தியோகம் வேண்டுமென்றால் ஆங்கிலம் படிக்க வேண்டும். கலியாணம் கருமாதிகளுக்குச் சமஸ்கிருதம் வேண்டும். தேசபக்தன் என்ற பெயருக்கு இந்தி படிக்க வேண்டும். சங்கீதத்தை அனுபவிக்கத் தெலுங்கு வேண்டும். தமிழ் எங்கே?'' என்று அவர் சொல்லி முடித்ததும், மக்கள் கைதட்டியது, கேளாக்காதர் களுக்குக் கூடக் குடைச்சலைத் தந்திருக்கும். கேளாக்காதராக இருந்த அன்பர் ஆச்சாரியார், அருகே தான் இருந்தார். தமிழ் நிலைமையை, நகைச்சுவை ததும்ப, சர். சண்முகம் எடுத்துரைத்தார். "நேற்று நீங்கள் சொன்ன மேட்டரைக் கன்சிடர் செய்தேன், என் ஐடியாவைக் கூறுகிறேன்" என்ற தமிழைத்தானே கேட்கிறோம். இந்த விசித்திர நிலைமை மாற வேண்டாமா என்று கேட்பார். சாப்பாடும் சங்கீதமும், அவரவர்களுடையதுதான், அவரவர் களுக்குப் பிடிக்கும் என்று அமெரிக்காவிலே, சீனா நாட்டு அறிஞர் லின்யூடாங் என்பவர் கூறினார் என்று குறிப்பிட்டுவிட்டு, அமெரிக்காவிலே, அந்நாட்டு அருமையான உணவு வகைகளைத் தாம் உண்ட காலை, இட்லி சாம்பாரின்மீது தமக்கு நினைவு உண்டாயிற்று, என்று கூறினார். சர். சண்முகத்தின் சொற்பொழிவிலே, மற்றோர் விஷயம் விளக்கப்பட்டது. இந்த இயக்கத்திலே அரசியல் சூழ்ச்சி இல்லை. இருப்பதாகக் கொண்டாலும், என்னையும் சீமான் இராஜகோபாலாச்சாரியாரையும் ஒரே மேடையிலே

கொண்டுவர இச்சூழ்ச்சி உதவிற்று என்றால், அது நல்லதுதான். இத்தகைய அரசியல் சூழச்சிகள் இன்னும் அதிகமாக வேண்டும், என்று கூறி முடித்தார். இத்தகைய அரசியல் சூழ்ச்சிகள் வேண்டுமா வேண்டாமா என்பதுபற்றிக் கருத்து வேறுபாடு இருக்க முடியும், ஆனால், சர். சண்முகம் அன்று பேசியதுபோன்ற அழகிய, இனிமையான, தமிழ்ச் சொற்பொழிவுகள் அனேகம் வேண்டும், அடிக்கடி வேண்டும் என்பதிலே யாருக்கும் அபிப்பிராயபேதம் இருக்க முடியாது.

பல நாட்கள் உபயோகிக்கப்பட்டு, தேய்ந்துபோன கிராமபோன் பிளேட்டுகளைக் கொண்டு "கானம்" கேட்டால் எப்படி இருக்கும்? கீதம் கிணற்றுக்குள்ளிருந்து கிளம்பும் குரல்போன்றிருக்கும், பேச்சுத் திறமை கெட்டுவிட்டாலும், திறமை கெடாதிருந்தும் மனதிலே கருத்து திரிந்துவிட்டாலும், கருத்து கெடாதிருந்தபோதிலும் மனதிற் பட்டதை மறைக்காமல் குறைக்காமல் கூற இஷ்டமில்லா விட்டாலும், இரு கட்சிகளுக்கும் புன்னகை காட்டவேண்டு மென்றாலும், அந்தப் பேச்சின்தரம், பழைய கிராமபோன் பிளேட்டின் பாடலுக்குச் சமமாக இருக்கும். ஆச்சாரியாரின் பிரசங்கம் அன்று அப்படித்தான் இருந்தது. காரணம் யாதோ? எதையோ துவக்கி எதிலேயோ முடிப்பது. யாரையோ எண்ணிக் கொண்டு என்னவோ கூறுவது. ஒரு கருத்துரைப்பது, மறுகருத்தால் அதை வெட்டுவது, என்ற முறையிலே பேசலானார். இசைமொழி யிலே கூற வேண்டுமானால், அவர் அன்று சுருதியிலே சேரவில்லை! சுருதியிலே சேராதது மட்டுமல்ல, பக்கமேளமும் கட்டிவரவில்லை. பேசத்தொடங்கும்போதே, பலர், போ! போ! என்று கூவினர். மாநாட்டு வரவேற்பாளர் ராவ்பகதூர் சம்பந்த முதலியார் தமது உரையிலே, வள்ளி கலியாண நாடகத்திலே வரும் சுப்ரமணியர் ஜெயகோகுலபாலா என்ற தெலுங்குக் கிருதியைப் பாடுகிறாரே, இந்த ஆபாசம் அடுக்குமா என்று கேட்டார். தமிழிசைமாநாட்டிலே, தமிழ் மொழிக்காகப் பரிந்து பேசியதற்காக ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழரைச் சிறைக்குள் தள்ளிய 'ஆச்சாரியார் பேச முன்வந்தது, அதைவிட ஆபாசமாகப் பலருக்குத் தோன்றியிருக்கக்கூடும். குற்றம், கூவியவர்களுடையதாகாது. பேசவருபவரை உற்சாக மூட்டினால், மேளம்கட்டும். போ! போ! என்று கூவினால், பக்கமேளம் கட்டவில்லை என்றுதானே பொருள். ஆகவே பாடகருக்குப் பக்கமேளம் சரியில்லை, சுருதியில் சேராத சங்கீதமாக அன்று இருந்தது. வழக்கமான சில உருப்படிகளை வித்வான் பாடிவிடுகிற முறையிலே ஆச்சாரியாரும், அவருடைய காப்பிரைட்டான குட்டிக் கதை கூறினார். ஆனால் மொத்தத்திலே, ரொம்ப மட்டமான தரம்! அதிலும் சர். சண்முகத்தின் சுவையுள்ள பிரசங்கத்தைத் தொடர்ந்து இந்தச்

சுருதியிலே சேராச்சங்கீதம் நடைபெற்றது, விகாரத்தை அதிகப் படுத்திவிட்டது.

"என்னைப்போல 100 பேரை ராஜா சர். ஏமாற்ற முடியும், நானும் அவரைப்போல நூறுபேரை ஏமாற்றுவேன்'' என்று கூறினார், ஏன் இப்பேச்சு? இந்தப்பேச்சுக்கான சம்பவம் ஏதேனும் அங்கு நிகழ்ந்ததா என்றால் ஒன்றையுங் காணோம். சில வித்வான்கள் பாடும்போது உடலிலே சில சேஷ்டைகள் தங்களையு மறியாது ஏற்படும். பாடல்களிலே பாணி குறைந்தாலும்கூட, சேஷ்டை குறையாது. அதைப்போல, இத்தகைய உரைகள் ஆச்சாரியாரின் பிரசங்கச் சேஷ்டைகள் என்று கொள்வதன்றி வேறென்ன சொல்லமுடியும்! ஏமாற்றுவதில் யார் திறமைசாலி என்ற போட்டிப்பந்தயமா நடக்கிறது, இவர் தமது திறமையைக் கூற!

தமிழிசையை எதிர்ப்பவர்களின் மனோபாவத்தை, தமிழிசை யாளர்களுக்கு ஆச்சாரியார் அதிகசிரமப்பட்டு விளக்க ஆரம்பித்தார். தமிழிசையை எதிர்ப்பதிலிருந்தே அவர்களின் மனப்பான்மை தமிழருக்குத் தெரிகிறதே, அதை இவர் சிரமப்பட்டு விளக்குவானேன்? அவர்கள் அனுப்பி வைத்த தூதரா? என்றே மக்கள் யோசித்தனர். "இத்தனை காலமாகத் தெலுங்கே பாடிக்கொண்டிருந்தார்கள் வித்வான்கள். திடீரென்று அவர்களைத் தமிழிலே பாடும்படி வற்புறுத்தினால் முடியுமா, கஷ்டம். வற்புறுத்தக் கூடாது'' என்று கூறினார். ஆஹா! என்ன அருமையான உபதேசம்! தமிழே பரவாத தமிழ்நாட்டிலே, இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டாமய்யா என்று கூறிய குற்றத்திற்காக ஆண் பெண் குழந்தை அடங்கலையும் சிறைக்குள் தள்ளிய சீலர், செய்கிறாரே இந்த உபதேசம். நரி நயவஞ்சகம் கூடாது என்று பேசுவதுபோல! என்று மக்கள் நினைத்ததிலே தவறு என்ன? தமிழிசை இயக்கம் ஒற்றுமை இயக்கம் என்று ராஜாசர் கூறினார். இருவேறு அரசியல் கொள்கையினரை ஒன்றாக அமரச்செய்தது தமிழிசை இயக்கம் என்று சர். சண்முகம் கூறினார். ஆமாம், என்று சொன்னால், ஆச்சாரியாரின் பூர்வீகமா பறிபோகும். "அதெல்லாம் இல்லை! தம்பூரினால் ஒற்றுமை ஏற்படாது" என்று கூறிவிட்டார். தாரை தம்பட்டத்துடன் இந்தத் தாதர் தனியாகவே இருக்கட்டுமே, இங்கென்ன வேலை இவருக்கு என்று மக்கள் எண்ணியதிலே தவறென்ன? அவருடைய சொற்பொழிவு எப்போது முடியும் என்று மக்கள் சலித்துக் கொண்டதிலேயும் தவறென்ன! இவ்விதமான தொல்லைதரும் பேச்சைவிடத் தலைவர் டி.கே. சிதம்பரநாத முதலியார் பேசினது போலக் கேட்போம், மறப்போம் என்ற அளவிலே மக்கள் கொள்ளக்கூடிய சிலபல பேசி யிருந்தாலுங்கூடப் பாதகமில்லை. தலைமைபூண்டவர் "உலகத்திலே

எங்குமில்லாத காட்சி ஒன்றைத் தமிழ் நாட்டிலே பார்க்கிறோம், போனபோன இடங்களிலெல்லாம் கோயில்களும் கோபுரங்களும் எழுந்து நிற்கின்றன'' என்று கூறினார். அதுபோலக் கோயில் கோபுரம், கோயில் மணியோசை, கோபுரத்தின் மீது குதித்துக் கூத்தாடும் குரங்கு பரதநாட்டியத்தைப் பார்த்ததால் பயிற்சி அடைந்த பண்பாடு, முதலிய பல பொருளைப் பற்றிப் பேசி யிருந்தாலுங்கூட, மக்கள் சலித்திருக்கமாட்டார்கள். ஏதோ பாவம் அவருக்கு இந்தக் காட்சிகளிடம் அபாரமான பிரியம் போலும்! நல்ல மனுஷ்யர்! என்று கூறிவிட்டு வேறுகாரியத்தைப் பார்ப்பர். ஆச்சாரியாரின் பேச்சோ அந்த ரகமாகவும் இல்லை.

தமிழிசை வரலாற்றைத் தலைவர் டி.கே.சி. அவர்கள் குறிப்பாகக் கூறிய பகுதியே அவரது சொற்பொழிவிலே மிக்க பயனுள்ளதாக இருந்தது. பிற, அவருடைய பிரியமான பண்பாடுடன் பிணைந்திருந்ததால் அவர் அளவுபண்பட்டாலன்றிப் பிறரால், அவற்றின் பொருள் என்னவென்று தெரிந்துகொள்ள இயலாது, அவர் அளவு பண்பட, வாழ்க்கையிலே நிம்மதி வேண்டும். அது பெரும்பாலாருக்கு ஏது! அதுவேறு விஷயம். பெரிது.

3 வருஷத்திற்கு முன்பு (16–11–40) கனம் செட்டிநாட்டரசர் சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தமிழிசைக்கென்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாருக்குப் பதினாயிரம் ரூபாய் நன்கொடையைப் பட்டமளிப்பு விழாவில் வெளியிட்டபோது, அன்று ஒரு புதிய யுகத்தையே அந்தத் திருநாள் ஆரம்பித்துவிட்டது. அன்று முதல் நாடெங்கும் தமிழிசையுணர்ச்சி நாளுக்குநாள் அதிகமாகப் பரவி வந்திருக்கிறது'' என்று டி.கே.சி. கூறினார். மற்றும் புரொபசர் சாம்பமூர்த்தி, குமரன் ஆசிரியர் முருகப்பா, திருமதிகள் மீனாம்பாள் சிவராஜ், இந்திராணி அம்மையார், செங்கல்வராயன், அண்ணாத்துரை ஆகிய பலரும் பேசினர். தமிழிசை மாநாட்டைத் தொடர்ந்து நடைபெறும் இசை விருந்தினைப் பற்றிய பேச்சுடன், மக்கள் நாளைக்குத் தேசிகர் பாட்டு, மறுநாள் பாகவதர், பிறகு ராஜரெத்தினம் நாயனமாம், ஜெயராமன் பாட்டு கேட்கவேண்டிய பாட்டாம், எம்.எஸ். கூடவாமே, கே.பி.எஸ். கூடத்தான் பாடவருகிறார்களாம் என்று இசைவிருந்தின் தன்மை பற்றிய பேச்சுடன் வீடு திரும்பினர். தமிழிசையை வளர்க்க அரும்பாடுபடும் செட்டிநாட்டரசரை வாழ்த்தாதார் இல்லை.

தமிழிசை மாநாட்டிலே, கண்டதையும் அதனால் மனதிலே கொண்டதையும் மேற்கூறியபடி, நிருபர், கஷ்டப்பட்டு எழுதிக் கொடுத்தாரே தவிர, ஆசிரியருக்குக் கொஞ்சமும் இது பிடிக்கவில்லை. தமிழிசை இயக்கத்தை ஆதரிக்கக்கூடாது என்று தீர்மானித்திருந்த எடிடருக்கு, ஏற்றபடி, நிருபர், செய்தியைச்

சித்திரிக்காதது, கண்டிக்கத்தக்கது, முதலாளித்தனத்தை அடிப்படையாகக் கொண்ட பத்திரிகாலயத் தர்மப்படி! எனவே மறுதினம், எடிடருக்கும் நிருபருக்கும் வாக்குவாதம் ஆரம்பமாயிற்று.

"தமிழிசை மாநாட்டு ரிபோர்ட் யார் எழுதியது?"

"நான்தான்."

"இல்லை."

"சார், என் கைஎழுத்துக்கூடவா தெரியவில்லை. நான்தான் சார், எழுதினேன்."

"எழுத்து உன்னுடையதாக இருக்கலாம், எண்ணம் வேறுயாருடையதோ, உன்னுடையதல்ல."

"இதென்ன சார், எனக்குத் தோன்றியதை எழுதினேன்."

"இடியட்! (Idiot) நீ, அந்தப் பிரசங்கங்களைக் கேட்டு, அதே மோகத்திலே இப்படி எழுதிவிட்டாய். நம்ம பத்திரிகையின் பாலிசி (Policy) தெரியுமல்லவா? அதற்கேற்றபடி எழுத வேண்டாமா?''

"பாலிசியா? அது தெரியுமே எனக்கு. இந்த நான்—பிராமன் (Non Brahmin) கூட்டத்தைக் கண்டிக்க வேண்டும். அதுதான் நம்ம பாலிசி–தெரியுமே.''

"தெரிந்துமா இப்படி எழுதினாய்?''

"இது நான்–பிராமன் பார்ட்டி இல்லையே. நம்ம ராஜாஜி கூடத்தானே இருந்தார்.''

"ராஜாஜி அங்கு இருப்பார். நாம் இந்தத் தமிழிசையை எதிர்த்துத்தான் வருவோம். பிறாமன்ஸ் எல்லாம் தமிழிசையை எதிர்க்கிறான் என்ற பழிச் சொல் வராமே இருக்கத்தான் ராஜாஜி அங்கு இருக்கிறார், தெரியுமோ. இந்தத் தமிழ் இசைக்கு ஆரம்பத்திலேயே பிரேக் போடாவிட்டா, பாஷையை மாத்ரதோடு இல்லாமே, கருத்து இருக்கே அதையும் மாத்தி, சங்கிதத்தையே, மதத்திற்கு உதவாதபடி செய்தூடுவா. ஆகவே அவசியம் இதைக் கண்டிக்கணும். நான் எடிடோரியல் எழுதப்போறேன் இதைக் கண்டிச்சி. நீ இந்த ரிபோர்டை எடுத்துண்டுபோய், நான் எழுதப்போற எடிடோரியலுக்குத் தக்கபடி திருத்தி எழுதிண்டு சுருக்காவா, ரொம்பஷார்ட்டா இருந்தா போதும். ராஜா சர். பிரசங்கம் கால்கலம், ராஜாஜி பிரசங்கம் முக்கால் அல்லது ஒரு கலம் இருக்கலாம், மற்ற வாபேச்செல்லாம், Mr. So and So also spokeலே சேர்த்தூடு. போ''

ரிபோர்ட்டர், எடிட்டரின் கட்டளைப் படி, தமிழிசை மாநாட்டு நிகழ்ச்சியை மாற்றி எழுதிக்கொடுத்தார், அதுவே பத்திரிகையிலே வெளிவந்தது. எடிட்டர், இசையிலுமா வகுப்பு வாதம்? சங்கீதத்தைத் கெடுக்கலாமா? என்ற கேள்விகளும், கர்நாடக சங்கீதத்துக்கே அழிவு காலம் என்றுதான் நினைக்கவேண்டி இருக்கிறது என்ற பீதியுரைகளும் கொண்ட, லீடர் எழுதினார். வாசகர்களுக்கு, உண்மை நிகழ்ச்சியும், நிருபரின் நினைப்பும், அவர் முதலிலே எழுதிய நீண்ட உண்மை செய்தித் தொகுப்பும் தெரியாது!

இந்து, மித்திரன், பாரததேவி முதலியன தமிழிசையைத் தாக்குகின்றன. இவைகளிலே எந்த பத்திரிகாலயத்திலே, இந்த ரிபோர்ட்டர் எடிட்டர் சம்வாதமும், உண்மை சம்ஹாரமும், பொய்யும் புனைசுருட்டு ஜனனமும், நடைபெற்றது என்று கேட்கவும் விடையைத் தெரிந்து கொள்ளவும் தோழர்களுக்கு ஆசை இருக்கும். ஆனால், ஒரே ஒரு ஊரிலே, ஒரு பத்திரிகை, அதன் எடிடருக்கும் ரிபோர்ட்டருக்கும், நான் மேலே தீட்டியபடி சம்வாதம் நடந்தது என்று கூறுவதைத் தவிர, நான் மேற்கொண்டு எதுவும் கூறமுடியாது. அந்த ரிபோர்ட்டர், முதலிலே தயாரித்த செய்திச் சித்திரத்தை என்னிடம் கொடுத்து, தனக்கும் ஆசிரியருக்கும் நடந்த சச்சரவையும் கூறிப், புதிதாக ஒரு புளுகு ரிபோர்ட் தயாரித்ததையும் வருத்தத்தோடு என்னிடம் தெரிவித்ததோடு, என் பெயரை மட்டும் வெளியே கூறிவிடாதே வேலை போய்விடும் என்று கேட்டுக்கொண்டார். உண்மையிலேயே வேலை அவருக்குப் போய்விட்டால், அவரை ஆதரிக்கத் தமிழரிடம் தினசரியாவது உண்டா? இல்லை! யார் அந்த ரிபோர்ட்டர் என்று அறிய ஆவல்கொள்வதைவிட, இவ்வளவும் என் கற்பனை என்றே கருதிவிடுங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒன்று மட்டும் உறுதி. எந்தப் பத்திரிகை தமிழிசை மாநாட்டைப்பற்றிய உண்மைச் செய்தியை வெளியிடவேண்டுமானாலும், நான் குறிப்பிட்ட நிருபரின் செய்திச் சித்திரத்தைப் போன்றதாகத்தான் இருக்க முடியும். ஆனால் தமிழருக்கு ஒரு தினசரி இல்லாததால், 'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அரிது'' ஆகிவிட்டது!!

— திராவிட நாடு

02.01.1944

பேச்சு மேடை

– பரதன்

இதிலென்ன சார்! சங்கடம், நாட்டிலே உள்ள சம்பவங்களை, முற்போக்குக்கு அறிகுறிகளானவை பிற்போக்குச் சான்றுகள் என்று இரண்டாகப் பிரித்து எந்த 'அம்சம்' அதிகம் இருக்கிறது என்று கணக்கிட்டு, முற்போக்குச் சக்திகள் அதிகம் என்றால் நாடு முன்னேறிவிட்டது என்று சொல்லுவது; இல்லை என்றால் இல்லை என்று கூறுவது சுலபந்தானே இது என்று கணக்குப்படிப்பினர் கூறக்கூடும், அதிலே இருக்கும் சிரமம் அவர்களுக்குத் தெரிவதில்லை.

○○○

மகாகனம் சீனுவாசசாஸ்திரியார் மாண்டேடட் பிரச்னைபற்றியும் பேசுகிறார், மந்தரை சூழ்ச்சி பற்றியும் உபன்யாசம் செய்கிறார். திரு. வி. கலியாண சுந்தரனாரோ, இளையான்குடிமாறநாயனார் புராணத்தைப் பேசுகையிலேயே லெனின் கண்ட மார்க்கத்தை நாயனார் நெறியிலே நுழைத்துக் காட்டுகிறார். விமானம் ஏறிப் பறக்கிறார் தேதாந்தி சர். இராதாகிருஷ்ணன், அவரே பிறகு விஜயதசமி பண்டிகை விசேஷத்தையும் பேசுகிறார், "எனக்குக் கோயில் கட்டுவது பைத்யக்காரச் செயல்" என்று கண்டிக்கிறார் காந்தியார், ஆனால் அவரே, ராமநாம உச்சரிப்பே நோய் தீர்க்கும் மருந்துமாகுமென்கிறார், செங்கொடியே நம்கொடி என்கிறார் கம்யூனிஸ்டு பக்கத்திலுள்ள மூவர்ணக்கொடிக்கும் பணிவதே நமது கடன் என்றும் பாடுகிறார், இப்படி முரண்பாடு

மயமாக இருக்கிறதே, சொல், செயல், காட்சி, கருத்து, எதை எடுத்தாலும், என்ன செய்வது?

○○○

முற்போக்கான, முற்போக்குத்தரக்கூடிய விஷயங்கள் அதிகமாகப் பேசப்பட்டு, பழைமை அதிகமாகப் பேசப்படாமலிருக்குமானால், நமது நாட்டுப் பிரசங்கிகள், ஆசிரியர்கள், நடிகர்கள், கவிகள், ஓவியக்காரர் ஆகியோர் முற்போக்கான விஷயங்களை முன்னிலையில் கொண்டு வருவதற்கு மட்டுமே நமது திறமையை உபயோகப்படுத்துவது என்று தீர்மானித்து விட்டால், இந்தச்சிக்கல் தீர்ந்துவிடும், முன்னேற்றப் பாதையிலே போக நாட்டு மக்கள் விரும்புகிறார்களா, அல்லது பழைமையிலே மூழ்கிக் கிடக்க வேண்டுமென்று அசைக்க முடியாத தீர்மானத்தில் உள்ளனரா என்ற உண்மை தெரிந்துவிடும். ஆனால் இங்கு நம் நாட்டு அறிவு பரப்புவோரின் போக்கு, விசித்திரமாகவன்றோ இருக்கிறது.

சீனாக்காரர் ஒருவர் அமெரிக்கா சென்றார். அங்கு விருந்து, வைபவம், கேளிக்கை, எல்லாம் கண்டார். அமெரிக்கர்கள் விசித்திரமான பேர்வழிகள் என்று அவருக்குத் தோன்றிற்று, அந்தச் சீனர், "வேடிக்கைக்காரர்களய்யா நீங்கள், கண்ணாடிக் கோப்பையிலே சர்க்கரை போடுகிறீர்கள், பானம் இனிப்பாக இருக்கவேண்டுமென்று, அதனுடனேயே எலுமிச்சம் சாறு பிழிகிறீர்கள் புளிப்புத் தேவை என்று கூறி, சுறுசுறுப்புத் தரும் என்று சூடு பிறக்க ஜின் (சாராய வகை) ஊற்றுகிறீர்கள் கோப்பையில், அதிலேயே குளிர்ச்சி வேண்டுமென்று ஐஸ் போட்டுக் கொள்கிறீர்கள், எதிரே இருப்பவரிடம் பானக் கோப்பையைக் காட்டி, "உனக்காக இதோ" என்று கூறுகிறீர்கள், ஆனால், பானத்தை நீங்களே குடித்துவிடுகிறீர்கள். மகா விசித்திரப் பேர்வழிகளப்பா இந்த அமெரிக்கர்கள்!" என்று சொன்னாராம். அந்தச் சீனரின் ஆச்சரியத்துக்கு அளவே இராது, இங்கு நமதுநாட்டு அறிஞர் குழாம் தயாரித்துத் தரும் பானவகையின் தன்மையைக் கண்டால், அவர்கள் முற்போக்குத் துறைக்கு வேலை செய்கிறார்களா? பழைமைக்குப் பாடுபடுகிறார்களா? என்பதை மக்கள் புரிந்து கொள்ளக்கூடாது என்ற நோக்கம் கொண்டவர்கள் போலவே நடந்து கொள்வதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, ஏதாவது ஒரு பத்திரிகையின் சனி மலர், ஞாயிறு இதழ் எடுத்துப்பாருங்கள். ஒரு பக்கத்திலே, லூயிபிஷரின் கட்டுரை, அணுகுண்டு ஆராய்ச்சி, இருக்கும். இன்னொரு பக்கத்திலே இலுப்பையூர் பற்றிய ஸ்தலபுராணமும் இருக்கும். தலையங்கம், வீண்விரயம் விவேகமல்ல என்ற பொருள்பற்றி இருக்கும், நிருபசாரம், ஊரிலே பல

இடங்களில் நடைபெற்ற கும்பாபிஷேகச் செய்திகளாக இருக்கும். மக்களின் மனதிலே புதுக்கருத்து எழவேண்டியதன் அவசியத்தைப் பற்றிய சொற்பொழிவு ஒருபுறம் பிரசுரமாகி இருக்கும். மற்றோர் பக்கத்தில் மகாமகத்தின் பெருமை பற்றி மாங்காட்டுச் சாஸ்திரியார் கூறிய உபன்யாசம் வெளிவந்திருக்கும். நாடகமேடை யில் முன்னாளிலே பபூன் வேடக்காரன் உடைபோல, ஏடுகள் காட்சிதருகின்றன என்று கூறினால், அந்த ஏடு வெளியிடுபவர் கோபிப்பர், ஆனால் என்ன செய்வது? என்னால் சொல்லலா மலிருக்க முடியவில்லை. ஒரு சமயம் அந்தப் பத்திரிகைகள், புரட்சி ஏடுகளாகத் தோன்றும், மறு சமயம் வெறும் பஞ்சாங்கமாகி விடக் காண்கிறேன். வேறுவேறு சமயங்களிலே மட்டுமல்லவே! ஒரே சமயத்திலே, வேறுவேறு பக்கங்களிலே வேறுவேறு பத்திகளிலேகூட இந்த விசித்திர மாறுபாடுகளே உள்ளன. எப்படி, நாடு முன்னேற்றப் பாதைக்குப் போவதா, பழைமையிலேயே இருப்பதா என்று தீர்மானிக்க முடியும். நாடு திகைத்துக் கிடக்கிறது. வெளிஉலகு நகைத்துக்கொண்டு முன்னேறுகிறது.

மார்ச்சு 24ந்தேதி ‘இந்து’ பத்திரிகை இதழிலே; அன்று நகர நிகழ்ச்சிகள் என்ன என்ற அறிவிப்புகள் வெளியிடப் பட்டிருந்தன. அவை என் கவனத்தை இழுத்தன.

சென்னை பேசுகிறது, கேளுங்கள்.

‘தேவி பாகவதம்’ பற்றி, மாம்பலம் சன்மார்க்க சம்வர்த்தினி சபாவில், கல்லிடைக்குறிச்சி ராமகிருஷ்ண சாஸ்திரியார் பேசுகிறார்.

‘கிருஷ்ணோபதேசம்’ பற்றி, சுவாமி நிர்விகல்பானந்தர் பேசுகிறார்.

தசரதராம பாகவதர் ‘இந்திரஜித் வதம்’ பற்றிக் காலட்சேபம் செய்கிறார்.

புரசவாக்கம் வேதாந்த சங்கத்தில் “பஞ்சாதசி’ பிரகார்ணம் எனும் பொருள்பற்றி கோபாலகிருஷ்ண ஐயர் பேசுகிறார்.

ஸ்ரீரங்கம் ரங்கசாமி ஐயங்கார் திருவல்லிக்கேணியில் ‘சீதாகல்யாணம்’ நடத்தி வைக்கிறார்.

கச்சாபேஸ்வரர் அக்ரகாரத்தில் “ஞானவாசிட்டம்” நடத்துகிறார் கோபாலகிருஷ்ண ஐயர்.

‘ரிக்வேதம்’ விளக்கப்படுகிறது வைத்தியநாதஸ்வாமியால், எஸ்பிளனேட் அரவிந்தர் படிப்பகத்தில்.

வித்வான் அண்ணங்கரசாச்சாரியார், தொண்டைமண்டலப் பள்ளியில் ‘மாசறுசோதிபதிகம்’ பற்றி உபன்யாசிக்கிறார்.

‘திருக்கச்சிநம்பிவைபவம்’ பற்றி ஸ்ரீமான் ரங்கசாமி ஐயங்கார் பேசுகிறார்.

மயிலையில், ‘ராமாயணம்’ பிரசங்கம் செய்கிறார் சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

எழும்பூரில், நடேச ஐயர், ‘பாகவத’ உபன்யாசம் நடத்துகிறார்.

‘கடோபநிஷத்’தை விளக்கிவைக்கிறார் யதுநாதாச்சாரியார்.

ராமசேது சாஸ்திரிகள், ‘மகாபாரதம்’ பற்றிப் பேசுகிறார்.

வெங்கட சுப்பிரமணிய சாஸ்திரிகள் ‘விவேகசூடாமணி’ பற்றிப் பேசுகிறார்.

பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள் ‘பிரணவமந்திரங்களை’ப் பற்றி உபதேசிக்கிறார்.

கிருஷ்ணசாமி பாகவதர், ‘ராமபட்டாபிஷேக’ காலட்சேபம் நடத்துகிறார்.

வேறோர் பக்கம் நடராஜ பாகவதர் ‘சீதாகலியாணம்’ நடத்தி வைக்கிறார்.

கௌடியா மடத்தில் பக்தி சாஸ்திரி ‘சைதன்யர்’ பற்றி உபன்யாசம் செய்கிறார்.

ஆனந்தாஸ்ரமத்தில் ‘பஜனை’ நடக்கிறது.

பண்டிட் கன்னையா, ‘வேதம்’ பற்றி விளக்க உரை செய்கிறார்.

தியாகராய நகரில் காமாட்சிபுரம் சுவாமிநாத சாஸ்திரிகள் ‘பாகவத கதை’ நடத்துகிறார்.

‘லீலாவதிசுதன்’ என்ற புராண கதையை சிம்ஹாதிரி பார்த்தசாரதி பாகவதர், சிந்தாதிரிப்பேட்டையில் காலட்சேபம் செய்கிறார்.

பாலசுப்பிரமணிய ஐயர், ‘துருவ சரித்திரம்’ கூறுகிறார்.

அன்று ஒருநாளில் மட்டும் சுமார் 40 நிகழ்ச்சிகள். இவைகளிலே ஆறு இசை அரங்குகள்; மூன்று நாட்டியங்கள்; இரண்டு கமிட்டிக் கூட்டங்கள்; போக மிச்சமிருப்பதிலே 24 புராண சம்பந்தமான பிரசங்கங்கள். சென்னை பேசுவது, இவ்விதமிருந்தால் பிறகு, நாடு முன்னேறிவிட்டது என்று எப்படிக் கூற முடியும்? மக்களைத் துடிக்கச் செய்யும் பஞ்சத்தைப் போக்குவது பற்றிப் பேசுவார் காணோம், துருவ சரித்திரம் நடக்கிறது. உலகில் காணப்படும் விஞ்ஞான அற்புதங்களை மக்களுக்கு விளக்கும் உரை இல்லை, கடோபநிஷத், ரிக்வேதம் முதலியன விளக்கப்

படுகிறது. நாடு, முன்னேற்றமடைவதற்கா, பாகவதம், பாரதம், ராமாயணம், பிரபந்தம், பதிகம், முதலியன பற்றி, மாகாணத் தலைநகரில், மக்கள் ஒருவார முழுதும் வேலை செய்து ஓய்ந்த நேரத்தில் , பேசுவது? அறிவு பரப்பும் பேச்சு எங்கே! உலகைக் காட்டும் உரை எங்கே! பல்வேறு நாட்டு நிலைமை பற்றிய பேச்சாளியே இல்லையா? அமெரிக்கா போய்வந்த தினமணி ஆசிரியர், ஆங்கிலருக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுக்கக்கூடியவர் என்று அக்ரகாரம் புகழும் இந்து பத்திரிகைக் குழுவினர், ஏன் இவர்கள் எல்லாம், சென்னையைப் புராணிகர்களிடம் ஒப்படைத்துவிட்டுக் கிடக்கிறார்கள்.

கேட்பார் யார்? கேட்பவனைத்தான், துரோகி, நாத்தீகன் என்று தூற்றிவிடுகிறார்கள். நீங்கள் யோசியுங்கள், ஒரே நாளில் ஒரு ஊரில், இவ்வளவு புராணப் பிரச்சாரம் நடைபெறுமானால், மக்களுக்கு அனுமாரின் வாலின் அளவு தெரியக்கூடுமே தவிர அமெரிக்காவின் நிலைமையா விளங்கும், சைதன்யரின் பாசுரம் நினைவிற்கு வருமேயொழியச், சோவியத் சோபிதமாபுரியும்! உலகிலே வேறு எங்கேனும் இதுபோல, ஒரே புராண மயமாக்கப் பட்டிருக்கிறதா! எந்தக் காலத்தில் வாழ்கிறோம், என்னென்ன விதமான, புதுப்பிரச்னைகள் மக்கள் முன் தோன்றியுள்ளன, எவ்வளவு சிக்கல்கள் தீர வேண்டி இருக்கிறது; இவைகளை மறந்து, ஆனந்தாஸ்ரமத்திலே பஜனை நடத்துகிறார்களே.

சென்னை பேசுகிறது, இவ்விதம், தாளச்சத்தம், மேளச் சத்தம், சதங்கைச் சத்தம், புராணிகரின் சத்தம், இவையே எப் பக்கமும் கேட்கப்படுகிறது. இங்கே பல கல்லூரிகள், பலப்பல உயர்தரக் கலாசாலைகள், உலகம் சுற்றிய அறிவாளிகள், ஊராள்வோரை மிரட்டும் உரத்தகுரலினர், உயர்தரமான பத்திரிகைகள் உள்ளன. இருந்தும் ஒரே தினத்தில் ஒரு பக்கம் சீதைக்குக் கலியாணம், வேறொர் பக்கம் ராமருக்குப் பட்டாபிஷேகம், மற்றோர் பக்கம் தேவிக்குப் பூஜை, பிறிதோர் பக்கம் அம்பிகைக்கு ஆராதனை என்று இருக்கக் காண்கிறோமே அன்றி, பிரான்சு விடுதலை பெற்றது எவ்விதம், வானத்தில் பறக்கும்வழி எப்படி ஏற்பட்டது, வரிப்பளுவின்றி மக்கள் வாழ முடியுமா? வர்க்கப் போராட்டம் தீருமா? வல்லரசுகளின் ஆதிக்க வெறி அழியுமா? என்ற பிரச்னை பற்றி யார் பேசுகிறார்கள்? ராஜராஜ சோழன், ராணி மங்கம்மா, ரஞ்சித்சிங் என்று ஏதேனும் வீரக் கோட்டத்தவர் பற்றிய பேச்சு இருக்கக்கூடாதோ; தோடர்மால் போன்ற நிர்வாகிகள், இளங்கோ போன்ற புலவர்கள், ஓவியக்காரர்கள் ஆகியோர் பற்றிய பேச்சு இருக்கக்கூடாதோ, அடிமை வர்த்தகம் ஒழிந்த விதம் எப்படி என்று கூறலாகாதோ, அந்த நாள் தமிழன் யவணத்தில் வியாபாரம்

செய்த விதம் விளக்கப்படக்கூடாதோ, பேசப் பிரச்சனைகளா இல்லை? மக்கள், தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆவலுடன் உள்ள விஷயங்கள் ஆயிரமாயிரம் இருக்க, சாவடிச் சுப்பனும் தெரிந்து கொண்டிருக்கும் ராம—கிருஷ்ண கதைகளைத் தானா, அறிவுத்தாகம் அதிகரித்துள்ள இந்த நாளிலே பேசிக்கொண்டிருக்க வேண்டும்? ஜாவாவில் இன்று என்ன நடக்கிறது என்பதைப் பொதுமக்களுக்குக் கூற வேண்டிய இந்த நாளிலே ஜனக ராஜ்யத்திலே நடைபெற்ற சுயம்வரத்தைப் பற்றியா பேசிக் கொண்டிருப்பது? இப்படிப் பழைமைக்குப் பலமான பிரச்சாரம், பலரகமான பிரசாரம் நடைபெற்றால், புதுமைக்குப் புகலிடம் ஏது? தோடி இராக ஆலாபனையுடன் சேர்த்துத் தருவது எதனை? தாசரதியின் பெருமையை! இடையை வளைத்து, சடையைக் காட்டி, பூங்கொடி போலாடி, ஆடலழகிகள் காட்டுவது எதனை? ஐயன் ஆடிய ஆட்டத்தை. சினிமா நட்சத்திரங்கள், இசை வாணர்கள், நாட்டிய ராணிகள், பாகவதசிரோமணிகள், பிரம்மஸ்ரீகள், பிரசங்க பூஷணங்கள் ஆகியோர், பழைமைக்கே பிரச்சாரம் புரிபவர்களாக உள்ளனர். உலகின் இன்றைய அறிவுக்காகப் பேசுபவர் காணோம். இந்நிலையில், மக்கள் மனதிலே பூட்டப்பட்டுள்ள தடைகள் நீக்கும் வழி எங்கிருந்து ஏற்படும்? சிக்கலான பிரச்னை அல்லவா?

○○○

ஞாயிறு இதழில், நான் கண்ட மற்றோர் செய்தி, கருத்த மேகத்திடையே தோன்றும் மின்னல் போன்று இருந்தது. அது நிரந்தர ஒளியாகுமா, என்ற ஆசையால் தூண்டப்பட்டே இதனை எழுதுகிறேன்.

மைலாப்பூரில், பேச்சுமேடை ஒன்று அமைத்திருக்கிறார்கள், என்ற செய்தி வெளிவந்திருக்கிறது. ஆவலுடன் அதனைப் படித்தேன். தோழர்கள் சிவஞானகிராமணியார், ப. ஜீவானந்தம், என். ஜீவரத்னம், டி. செங்கல்வராயன், ஆகிய தோழர்கள் அந்த விழாவில் கலந்துகொள்ளுகின்றனர் என்று இருக்கக்கண்டு சந்தோஷித்தேன், நாட்டுவிடுதலை பற்றித் தோழர் சிவஞானமும், பாட்டாளிகளின் விடுதலை பற்றித் தோழர் ஜீவாவும், பார்ப்பனியத்திடமிருந்து திராவிடம் விடுதலை அடைவது பற்றி ஜீவரத்னமும், பாட்டு மொழியிலே நாட்டுப் போரைக்கூற நண்பர் செங்கல்வராயனும் ஒன்றுகூடும் பேச்சு மேடை தனிச்சிறப்புப் பெறுமல்லவா, என்று களித்தேன். பேச்சு மேடைக்கு யார் தலைவர் என்று பார்த்தேன், பயந்தேன்! நண்பர் ரா.பி. சேதுப்பிள்ளை தலைவர் என்று பொறிக்கப்பட்டிருந்தது. ஐயகோ! அவர் ஒரு சடையும் திரிசடையும், வேலும் வில்லும், வாலும்

காலும், கோசலைச் செல்வனும் மிதுலைச் செல்வியும் என்று, பழைமையை வழங்கும் இயல்பினராயிற்றே, பேச்சு மேடைக்கு அவரை அழைத்து வந்தால், ஜீவாவின் வர்க்கப் போராட்டத்தைக் குறைத்துவிட்டு, ஜானகியின் ஜடை அழகுபற்றியல்லவா அவர் பேசத் தொடங்குவார், என்ன செய்வது என்று ஏங்கினேன். அன்று என்ன நடந்ததோ தெரியாது. ஆனால், பேச்சுமேடைக் காரரை மட்டுமல்ல, பேசத் தெரிந்தவரையும் கேட்டுக்கொள்ளு கிறேன், இனியேனும் பழைமை பேசுவதை, புராணம் பேசுவதை நிறுத்துங்கள், உலக நிகழ்ச்சியை எடுத்துக் கூறுங்கள், வீரர் வாழ்க்கையைக் கதை ரூபமாக்கிப் பேசுங்கள், விடுதலைக் கிளர்ச்சி களைச் சொல்லுங்கள், விஞ்ஞானத்தை விளக்குங்கள், அறிவுபரவ உங்கள் ஆற்றலை உபயோகப்படுத்துங்கள், ஐயனின் பெருமையை யும் அம்மையின் அருமையையும் அனைவரும் தெரிந்து கொண்டார்கள், உலகின் நிலைமை தான் நமது மக்களுக்குத் தெரியாது. அது தெரியவிடாதுபடி இன்றும் புராணிகர்களின் சத்தம், சென்னை போன்ற இடத்திலேயே அதிகமாகிவிட்டது. இந்தச் சத்தம், நமது நாட்டைப் பிடித்தாட்டும் பழைமைப் பித்தத்தை அதிகரிக்கச் செய்யும், பசிபிக்கடலை அறிய மாட்டார்கள் பாற்கடலின் பெருமையை அறிந்தவர்போல் பேசுவர், எவரஸ்ட் சிகரம் எது என்றால் கூறார்கள், எம்பெருமானின் தூதுவன் ஏந்திச்சென்ற சஞ்சீவி பர்வதத்தின் சிறப்பைச் சொல்லுவார்கள், காவிரியின் பிறப்பிடம் கூறார்கள், யமபுரத்திலே ஓடும் நெருப்பாற்றின் நீளம் அகலம் கூறுவார்கள், டெலிவிஷன் என்றால் என்ன என்று கேட்டால் தெரியாது என்பார்கள்; ஆனால் ஞானதிருஷ்டியால் வசிஷ்டர் விஸ்வாமித்திரரின் நிலையை அறிந்தார் என்று பேசுவார்கள், மலடோவ் எங்கே போகிறார் என்று கூறத்தெரியாது, நாரதர் பிரம்ம லோகத்திலிருந்து கிளம்பிப் பூலோகம் வந்த கதையைக் கூறுவர், ராஜதந்திரக் கலகக்காரரின் பேச்சால் சமர் மூள்வதை அறிய மாட்டார்கள், நாரதர் கலக விசேஷத்தைப் பற்றிப் பேசுவார்கள்! உலகின் நடவடிக்கைகளை மறந்து, வாழ்க்கையின் பிரச்னைகளை அலட்சியப்படுத்திவிட்டுப், பிறகு எப்படி நாடு முன்னேற முடியும்? பேச்சு மேடையைப் புராணிகர்களிடமிருந்து கைப்பற்றி, அறிவு பரப்புவோர் அங்கு ஆட்சி செலுத்த வேண்டும்; இல்லையேல், நாட்டின் நலிவு நீங்காது. இப்போது நண்பர்கள் அமைத்துள்ள பேச்சுமேடை, இந்தத் தூய்மையான பணிபுரியுமா? சிக்கலான பிரச்னைதான், இதற்குப் பதில் கூறுவதும். ஆனாலும், நம்புவோம், நல்லறிவுக்காக நண்பர்கள் பாடுபடுவார்கள் என்று.

— **திராவிடநாடு**
07.04.1946

பத்திரிகைத் தொழில் பொதுச்சேவையா? சொந்தத் தொழிலா?

சி.என். அண்ணாதுரை - ம.பொ.சிவஞானம்

வானொலி உரையாடல்

அண்ணா: வணக்கம்! ம.பொ.சி; பத்திரிக்கைத் தொழில் பொதுச் சேவையா? சொந்தத் தொழிலா? என்பது பற்றி, இப்போது நாம் விவாதிக்கப் போகிறோம்.

ம.பொ.சி: ஆமாம் பயனுள்ள விவாதம். நாம் மட்டும் விவாதித்தால் போதுமா? நாட்டு மக்களும் விவாதிக்க வேண்டு மல்லவா?

அண்ணா: நாம் அதைத் துவக்கி வைப்போம். தங்கள் கருத்து என்ன? பத்திரிகைத் தொழில் எப்படிப்பட்டது. பொதுச் சேவையா, சொந்தத் தொழிலா?

ம.பொ.சி: பத்திரிகைத் தொழில் மட்டுமா, நாட்டிலே உள்ள எந்தத் தொழிலும் பொதுச் சேவையை நோக்கமாகக் கொண்டதாக இருக்க வேண்டுமே யொழிய, சொந்தத் தொழிலாக மட்டும் இருப்பது சரியல்ல.

அண்ணா: ஆமாம். சிறந்த இலட்சியம் தாங்கள் சொல்வது. நாட்டு மக்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் சொந்த நலனுக்காக மட்டும் அமைவது கூடாது.

ம.பொ.சி: பொது நலனுக்கு உகந்த முறையிலே ஒவ்வொருவர் செய்யும் காரியமும் இருக்க வேண்டும்.

அண்ணா: நடைமுறையைக் கவனிப்போம்.

ம.பொ.சி: கவனிப்போம் நண்பரே! ஆனால், நான் கூறிய அந்தச் சிறந்த இலட்சியம் நிறைவேறும் வகையிலே, நடைமுறை இருக்கிறதா என்று பார்த்து,

இல்லை என்றால் இலட்சியம் நிறைவேறும் விதத்தில் நடைமுறையைத் திருத்தி அமைக்க வேண்டும்.

அண்ணா: இந்த நல்ல நோக்கத்துடன் பத்திரிகைத் தொழில் பற்றிக் கவனித்தால் தங்களுக்கு என்ன தோன்றுகிறது?

ம.பொ.சி: பொதுச் சேவையா, சொந்தத் தொழிலா இந்தப் பத்திரிகைத் தொழில் என்று தானே கேட்கிறீர்கள்?

அண்ணா: நம்மைக் கேட்கிறார்கள் – இருவரையும்

ம.பொ.சி: ஆமாம்! ஆமாம்!! எந்தத் தொ[illegible] இலாபத்துக்காக மட்டும் அமைந்தால் நல்லதல்ல அல்லவா?

அண்ணா: நல்லதல்ல. அவ்விதம், சொந்த இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, தொழில்கள் அமைவதால், நாட்டிலே பொருளாதார பேதமும், சமூகத்தில் அமைதி யின்மையும், தலைவிரித்து ஆடுகிறது உலகெங்கும்.

ம.பொ.சி: அப்படிப்பட்ட உலகுக்கு உள்ளத்தில் பண்பை உண்டாக்கும் உயர்ந்த காரியத்தில் பத்திரிகைகள் ஈடுபட வேண்டும்.

அண்ணா:– ஆமாம்! அந்த நோக்கத்தைத் தளராது கைக் கொண்டால், அதைவிடச் சிறந்த பொதுச் சேவை வேறு கிடையாது.

ம.பொ.சி: நோக்கம் சிலாக்கியமானதாக இருக்க வேண்டும். காரியமும் அதுபோலவே அமைய வேண்டும். பொதுமக்கள் நலனுக்குப் பாதுகாவலன் என்று விளம்பரப் படுத்திக் கொண்டால் மட்டும் போதுமா?

அண்ணா:– நோக்கமும் நடைமுறையும் ஒன்றாக இருந்தால் தான் உயர்வு. இந்த முறையிலே பார்க்கும்பொழுது பத்திரிகைத் தொழில் சொந்தத் தொழில். அதாவது நடத்துபவரின் இலாபத்தைத் தேடித்தரும் சாதனம் என்று இருக்கக்கூடாது. பொதுச்சேவை புரியும் சந்தர்ப்பம் என்ற முறையில் அமையவேண்டும்.

ம.பொ.சி: ஆமாம்! இதை யார் மறுக்க முடியும்? பத்திரிகை யைப் பலசரக்குக் கடைபோல, இரும்புத் தொழிற் சாலையைப் போல, இலாபந் தரும் தொழிலாக என் சுகத்துக்கு என் வாழ்வுக்கு, என் குடும்பத்துக்கு, எனக்குச் சொத்து சுகம் தேடிக்கொள்ள, நிலபுலம் தேட உபயோகித்துக்கொள்கிறேன் என்று யார் கூறுவார்கள்.

அண்ணா: கூறமாட்டார்கள். ஆனால், பத்திரிகைத் தொழிலிலேயும் மற்றத் தொழில்களின் மூலம் பணம் குவிப்பது போல் குவிக்க முடியும் என்பது உண்மைதானே.

ம.பொ.சி: உண்மைதான். பத்திரிகைத் தொழிலின் மூலம் பணம் திரட்ட முடியும். திரட்டியு மிருக்கிறார்கள்.

அண்ணா: அது போலவே, பத்திரிகைத் தொழிலிலே, வேறு தொழில்களுக்குப் போடுவது போலவே பெரும் மூலதனம் போடுகிறார்கள். ஆயிரக்கணக்கில் ஆட்களை அமர்த்துகிறார்கள். நவீன விஞ்ஞான சாதனங்களை அமைக்கிறார்கள். வியாபார முறைகள் அனைத்தும் அந்தத் தொழிலுக்கு இருக்கக் காண்கிறோம்.

ம.பொ.சி: அமைப்பு, அளவு, ஆகிய எதைக் கவனித்தாலும், பெரிய தொழிற்சாலை போன்றே காணப்படும் பத்திரிகை நிலையங்கள் பல உள்ளன இந்த நாட்களில்.

அண்ணா: ஆமாம்! இந்தப் பத்திரிகை பல இலட்சம் பிரதிகள் விற்பனையாகின்றன. இதிலே விளம்பரம் செய்வ தென்றால், அங்குலத்துக்கு இருபது ரூபாய் தரவேண்டும். பன்னிரண்டு பக்கம் கொண்டதாகப் பத்திரிகை இருந்தால், அதிலே விஷயங்கள், கருத்துகள், ஆறு பக்கம் தேறும். மற்ற இடம், விளம்பரம் – என்று இதுபோன்ற நிலையிலே உள்ள பத்திரிகைகள் நடத்தப்படுகின்றனவே, இலட்சக் கணக்கான வரவு செலவுள்ள பெரிய தொழில் – ஆயிரக் கணக்கில் வேலை செய்வோர் உள்ள இடம், அப்படிப்பட்ட பத்திரிகைகளை – பொதுச் சேவை என்று கூற முடியுமா? அதன் உரிமையாளரின் வருவாயும், வாழ்க்கை நிலையும், அவருடைய நிலபுலங்களும், மோட்டார் வசதிகளும், இலாபத்தின் விளைவுகள் அல்லவா? அவ்வளவு இலாபகரமான தொழிலை – அவரை மாளிகைவாசியாக்கி சீமானாக்கி வைக்கும் தொழிலை – வாய் கூசாது எப்படிப் பொதுச் சேவை யென்று கூறுவது? கூறினால் பொதுமக்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? சேலை விற்றுச் சீமானாகிறான் ஓர் வியாபாரி. செய்தியை விற்றுச் சீமானாகிறான் இந்த வியாபாரி – பத்தாயிரம் முதல் போட்டுப் பட்டாடை கடை வைத்துப் பத்தின் மூலம் அறுபது வரை லாபம் கண்டான் ஒரு முதலாளி – அது போலவே, பத்தோ எட்டோ முதலாக வைத்துப் பத்திரிகையைத் துவக்கியவர் பத்தாயிர ரூபாய் மோட்டாரும், நாற்பது ஐம்பதாயிரத்தில் மாளிகையும், இலாபத்தின் மூலம் பெறுகிறார்கள். அவருடைய தொழிலை மட்டும் பொதுச்சேவை என்று எப்படிக் கூறுவது? எப்படிப் பொருத்தமாகும்?

ம.பொ.சி: எங்கள் சொந்தத் தறியில் தயாரித்தது; சாயத்துக்கு உத்தரவாதம் என்று ஜவுளிக் கடைக்காரர் தமது தொழிலுக்குச் சிறப்புரை கூறி, விற்பனையை அதிகப்படுத்துவது போலவேதான், எங்கள் பத்திரிகைக்கு விசேஷ, பிரத்தியேக நிருபர்கள் உண்டு: பாரிஸ் மாநாட்டுக்குத் தனி நிருபரை அனுப்புகிறோம். செய்திகள்

பூரணமாக வெளிவருவது எங்கள் பத்திரிகையில்தான் என்று சிறப்புரை கூறி பத்திரிகையைப் பரப்புகிறார் அந்த வியாபாரி. செய்திகளைப் பண்டமாகவே கருதுகிறார். செய்திகளைத் திரட்டுவதற்குச் செலவாகும் தொகை, மற்ற வியாபாரத்தில் பொருள் செய்வதற்கு ஆகும் தொகை போலத்தான்... இலாபத்துக்கே செய்திகளும் விற்கப்படுகின்றன. இது சொந்தத் தொழில்... இலாபந் தருந் தொழிலாகத்தான் ஆகிறது.

அண்ணா: மேல் நாடுகளிலே உள்ள பத்திரிகைகள் ஒவ்வொன்றும் பலப்பல இலட்சம் பிரதிகள் விற்பனையாகின்றன. இலாபம் ஏராளமாகத்தான் குவிகிறது.

ம.பொ.சி: பத்திரிகைகள் இலாபமான தொழில் என்பதறிந்து, பல சீமான்களே அங்குப் பத்திரிகைச் சொந்தக்காரர்களாகி உள்ளனர் – ஒரு சீமான் பல பத்திரிகைகளை நடத்துகிறார் சீமையில் – அமெரிக்காவில்.

அண்ணா: ஏன், இங்கே மட்டுமென்ன? நமது நாட்டிலும் முதலாளிகள் பல தொழில்களிலே பத்திரிகைத் தொழிலும் ஒன்று என்று கண்டு கொண்டார்கள். இலாப ருசி – அவர்களைப் பத்திரிகைத் தொழிலிலேயும் கொண்டு வந்துவிட்டது.

ம.பொ.சி: ஆமாம் இலாபம் வெண்ணெய் விற்றுச் சம்பாதித்தாலென்ன? சுண்ணாம்பு விற்றுச் சம்பாதித்தாலென்ன? இலாபம் இலாபந்தானே?

அண்ணா: பொதுமக்களுக்கான பணி, அறிவு பரப்பும் அரும்பணி; குடியரசுக்குத் தேவையான திருப்பணி – என்றெல் லாம் எண்ணி அல்ல. அதிலேயும் தந்திரமான வியாபார முறையைக் கையாண்டு, பத்திரிகையை நேரமும் நோக்கமும் அறிந்து, நேர்த்தியான வகையிலே வெளியிட்டு, மக்களின் சுவை, எதிலெதில் செல்லும் என்பதைக் கண்டறிந்து – அந்தப் பகுதிகளை அழகுற வெளியிட்டு, ஏராளமானவர்களை வாங்கும்படிசெய்து, இலாபம் பெறுவது என்று, தொழில் நிபுணர்கள் திட்டமிட்டு வேலை செய்கிறார்கள்.

ம.பொ.சி: உண்மைதான். இலாபம் பண அளவோடு மட்டுமல்ல. செல்வமும் சேருகிறது. செல்வாக்கும் பெருகுகிறது.

அண்ணா: ஆமாம். அதிகச் சிரமமில்லாமலே கூட முதல் போடுகிறான் ஆலை அரசன். தொழிலாளியின் திறமையினாலும், சிரமத்தினாலும் ஆடையின் தரம் உயருகிறது. மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். ஏராளமாக நாட்டிலே பரவுகிறது. இலாபம் குவிகிறது ஆலை அரசர்களுக்கு! அதுபோலவே, செய்திகளைத் திரட்டுவதில் நிபுணர்கள் – செய்திகளைச் சுவைப்படுத்தும்

நிபுணர்கள் – இலக்கிய நடை எழுதுவோர் – கனல் கக்கிகள் – புயல் வரச்செய்வோர் என்ற பலவித எழுத்தாளர்களையும், அவரவர் திறமைக்குத் தக்கபடி, எழுதவைத்து – இலாபம் திரட்டுகிறார் பத்திரிகைத் தொழில் அதிபர்! ஆலைத் தொழிலாளிக்கு ஆறணா என்றால், இவருக்குச் சற்று அதிகம் கிடைக்கும். அவ்வளவுதானே வித்தியாசம்?

ம.பொ.சி: தொழில் நிபுணர்களின் நோக்கமும் முறையும், நீங்கள் கூறுவது போலத்தான். அப்படிப்பட்டவர்களா பத்திரிகை நடத்துவார்கள்? துவக்கப்படும் பத்திரிகைகள் எல்லாம்; இந்த முறையிலே இலாபம் திரட்டும் சாதனங்களாகவே அமைந்து விடுகின்றனவா?

அண்ணா: அப்படியல்ல; மரம் பழுத்தால் வௌவால் வரும் என்பார்களல்லவா? முதலாளிகள் பத்திரிகைத் தொழில் துறையின் பக்கம் பார்வையைச் செலுத்துகிறார்கள் இப்பொழுது – இதிலிருந்து மரம் பழுக்கிறது என்று யூகிக்க வேண்டியதுதானே? இலாபகரமான தொழிலாகிறது என்று தானே பொருள்?

ம.பொ.சி: நடைமுறைச் செலவுக்கே திண்டாட்டமாகி, பத்திரிகையின் உருவம் இளைத்து, நடத்துபவரின் உள்ளம் ஒடிந்து போவதையும் பார்க்கிறோம்!

அண்ணா: அனுபவ பூர்வமாகவே பார்க்கிறோம் – உரிமையாளர், ஆசிரியர், நிருபர், தவறு திருத்துவோர், மானேஜர், கிளார்க் சகலமும் ஒருருவில் கூடியவர்களின் கதை. தாங்கள் கூறுவதில் இலாபம் கிடையாது. தொல்லைதான் அதிகம். அத்தகைய இதழ்களுக்கு ஆயுள் வளராது.

ம.பொ.சி: அதைத்தான் குறிப்பிடுகிறேன். இந் நிலையில், ஏராளமான பத்திரிகைகள் உள்ளனவே, எனினும், தொல்லை களைப் பொருட்படுத்தாமல் களிப்புடன் மல்லுக்கு நின்று, சதா சிரமப்பட்டுக்கொண்டு அவ்விதமான பத்திரிகைகளை நடத்துகிறார்களே, வேறு தொழில் இல்லையா நாட்டில் – அவர்களுக்கு வேறு தொழில் தெரியாதா? தெரிந்துகொள்ள முடியாதா? முடியுமே. சுலபத்தில் இருந்தும், இலாபம் இல்லாத நிலையிலும், பத்திரிகை நடத்திக்கொண்டுதானே வருகிறார்கள். பொதுச் சேவை செய்கிறோம் என்ற எண்ணந்தானே? ஆர்வந்தானே அதற்குக் காரணம்?

அண்ணா: ஆர்வந்தான்; தங்கள் சக்திக்கு மேற்பட்டது என்றாலும் சலிப்படையாது, பணிபுரிய வைக்கிறது.

ம.பொ.சி: இந்த ஆர்வம் பொதுச் சேவையாளரின் பண்பல்லவா?

அண்ணா: ஆமாம். அப்படிப்பட்ட பத்திரிகைகள் பொதுச் சேவைதான். சொந்தத் தொழிலல்ல. சுகவாச வழியல்ல.

ம.பொ.சி: அப்படிப்பட்ட பத்திரிகைகள் தானே நாட்டில் அதிகம்? பத்திரிகைத் தொழில், பொதுச் சேவை என்பதுதானே இதிலிருந்து ஏற்படுகிறது?

அண்ணா: உண்மைதான். ஆனால் நான் குறிப்பிட்டபடி, நடத்துபவர்களைச் சீமான்களாக்கி வைக்கும் பத்திரிகைகளும் பல உள்ளனவே.

ம.பொ.சி: அவைகளைக் கவனிக்கும்போது பத்திரிகைத் தொழில், சொந்தத் தொழில் என்றுதான் ஏற்படுகிறது.

அண்ணா: பொதுவாக ஒரு பாகுபாடு செய்யலாம். வெறும் செய்திகளைப் பண்டமாக்கும் பத்திரிகைகள், நடத்துபவரின் திறமை, தொழில், நிபுணத்துவம் ஆகியவற்றின் பயனாக, இலாபம் தரும் தொழிலாக வளர்ந்துவிட முடியும். கருத்துக்களைப் பரப்பும் ஏடுகள் விஷயத்தில் அவ்விதம் சொல்லிவிட முடியாது.

ம.பொ.சி: அதிலும் எதிர் நீச்சலாடுவது போலப் பொது மக்களின் நம்பிக்கைகளைக் குலுக்கிவிடக் கூடியதுமான கருத்துக் களைக் கொண்ட பத்திரிகைகள், இலாபத் தொழிலாக வளர முடியாது.

அண்ணா: இலாபமா? ஆள் தப்புவதே சிரமமல்லவா? சமூகத்திலே காணப்படும் மூட நம்பிக்கைகளை முறியடிக்க பழங்கால ஏற்பாடுகளிலே உள்ள கேடுகளைக் களைய, சுரண்டல் முறைகளை எதிர்க்க, மக்களின் பொது நலனைக் கெடுக்கும் புல்லர்களுக்கு எந்த இடத்திலும், எந்த வகையிலும் இல்லாதபடி செய்யத் துணிவு கொள்வதே கஷ்டம். துணிந்தாலும், அந்த முறையிலே பத்திரிகையை நடத்தினால், அப்படிப்பட்ட பத்திரிகைக்கு ஆதரவு கிடைப்பது மிகமிகக் கஷ்டம். நடத்துபவருக்கு அது ஒரு தொழிலாகாது; துயரமே தரும். இலாபங் கிட்டாது; பழியே கிடைக்கும். எதுவரினும் சரி என்று அஞ்சாது அந்த அரும்பணியாற்றும் சிலருக்கு, எவ்வளவோ இடையூறுகள் ஏற்படும்.

ம.பொ.சி: அவ்வளவையும் அவர்கள் ஆர்வத்துடன் சகித்துக்கொள்கிறார்கள்.

அண்ணா: ஆமாம். பத்திரிகையை இலாபம் தரும் சொந்தத் தொழிலாகக் கருதுவோர் ஆண்டுக்காண்டு இலாபத்தொகை எவ்வளவு அதிகரிக்கிறது என்ற கணக்கிலே களிப்படைகிறார்கள். கொள்கையைப் பரப்பும் கருவியாகப் பத்திரிகையைக் கொள்வோரோ? நாட்டு மக்களின் நடவடிக்கையைத் திருத்தத்

தமது பத்திரிகை எந்த அளவுக்குப் பயன்பட்டது என்று கணக்கெடுத்துக் களிப்படைகிறார்கள்.

ம.பொ.சி: பொதுவாகப் பத்திரிகைத் தொழிலைத் தொண்டு என்று கருதுபவருக்கு இன்பம் அதிலேதான் கிடைக்கிறது.

அண்ணா: கொள்கைக்காகப் போராடும் பண்பு கொண்டோ, பொதுநலனை வளர்க்கும் நோக்கம் கொண்டோ, நடத்துவதாகத் தானே, பெருத்த இலாபம் கிடைக்கும் அளவிலும், முறையிலும், பத்திரிகைத் தொழிலை நடத்துபவர்களெல்லாரும் கூடக் கூறிக் கொள்வார்கள்?

ம.பொ.சி: ஆமாம்! யாரும், தாங்கள் செய்யும் தொழில், கேவலம் இலாப நோக்கத்துக்காக அல்ல; பொது மக்களுக்காகவே செய்கிறோம் என்று தான் பேசுவர். ஆனால் ஆராய்ந்தால் விஷயம் விளங்கும்; உண்மை துலங்கும்.

அண்ணா: வெடி, வாணம், இவைகளை வியாபாரம் செய்கிறவர்கள் கூட, பக்தி மார்க்கத்தில் மக்களை ஈடுபடச் செய்யவும், கடவுளின் கருணையைப் பெறவுமேதான், எத்தனையோ ஆயிரம் தொழிலிருக்க, வெடி வாணம் தயாரித்துத் திருவிழாக்களுக்கு விற்கும் தொழிலில் ஈடுபட்டதாகக் கூறுகிறார்கள்.

ம.பொ.சி: அது போலத்தான், ஒவ்வொரு தொழிலுக்கும் கூறுவார்கள். ஆனால் உண்மையிலே பொது நலனுக்குப் பாடுபடும் விதமாகப் பல தொழில்கள் அமைவதில்லை. ஏராளமான விளம்பரங்களைச் சுமந்துகொண்டு, சொகுசாக வாழும் பத்திரிகைகள், அந்த விளம்பரங்களின் மூலம் இலாபம் பெறுகின்றனவே தவிர, பொதுமக்கள் அடையும் பிரதான பலன் என்ன?

அண்ணா: அப்படியானால், விளம்பரம் அதிகம் வெளியாகும் பத்திரிகைகள், பொதுச் சேவை புரிபவைகள் அல்ல என்று தீர்மானித்து விடலாமா?

ம.பொ.சி: அறுதியிட்டுக் கூறிவிட முடியுமா? பொதுவாக, இதனைக் கூறலாம். வெறும் செய்திகளை, அதிலும் மக்களுக்குள்ள குறைபாடுகளை ஒழிக்கப் பொதுநலனை வளர்க்கப் பயன்படும் செய்திகளைத் தாராமல், பொழுதுபோக்குக்கும், மனக்கிளர்ச்சிக்கும், வம்பளக்கும் பழமை மோசத்துக்கும் பயன்படும் செய்திகளையும், வருவாய் தரும் விளம்பரங்களையும் ஏராளமாகக் கொண்டு வெளிவரும் பத்திரிகைகள் நடத்துபவர்களுக்கு, இலாபம் தரும் சொந்தத் தொழில்தான்; சந்தேகமில்லை. செய்திகளைத் தருவதும், பொதுமக்களுக்கு ஒருவிதப் பணிதானே.

அண்ணா: அது, தரப்படும் செய்திகளைப் பொருத்திருக் கிறது. மன்னர்களின் கோலாகல வாழ்வு, ஆடையலங்காரம், அரண்மனை விசேஷம், அங்கு நடைபெறும் விருந்து, களியாட்டம் ஆகிய செய்திகளை விளக்கமாகவும், விதவிதமாகவும், வனப் புடனும், படங்களுடனும் வெளியிடுகிற முறையிலே மக்களின் மனதுக்குத் தெளிவோ அறிவுக்கு வளர்ச்சியோ ஏற்படப் போகிறதா? அவைகளைப் படிப்பதாலே, நாட்டு மக்களின் வாழ்விலே என்ன நற்பலன் காண முடியும்?

ம.பொ.சி: ஒன்றுமில்லை. பொழுது போக்குத்தான்; உல்லாசம் தான்.

அண்ணா: இவ்வகையிலே ஒரு பத்திரிகை வெளிவந்தால் ஏராளமான பிரதிகள் செலவாகக்கூடும். ஆனால் பொதுச் சேவை என்று இதனைக் கருத முடியாதல்லவா? மாந்திரிகம், சோதிடம், குறிபார்த்தல், கும்பாபிஷேக வைபவம், சாதுவின் மகத்துவம் இவைகளைப்பற்றி, இந்த ஜனநாயக நாட்களில், அறிவுபரவும் நாட்களிலே வெளியிட்டுக்கொண்டிருக்கும் பத்திரிகைகளைப் பொதுச்சேவை செய்வதாகக் கூறமுடியுமா? மக்களின் மந்த மதியையும், பொழுதுபோக்கும் சுபாவத்தையும் பயன்படுத்திக்கொண்டு இலாபம் சம்பாதிக்கும் சுயநலக் காரியந்தானே அது?

ம.பொ.சி: அப்படியானால், பகுத்தறிவுக்காகப் பரிந்து பேசும் பத்திரிகைகள், பொதுச்சேவை செய்வன; மற்றவை சொந்தத் தொழில் என்கிறீரா?

அண்ணா: ஏன் சொல்லக்கூடாது? பகுத்தறிவுக்காகப் பரிந்து பேசுவது என்றுகூடக் கூறவேண்டாம். நாட்டில் அவ்வப்போது காணப்படும் நிலைமைகளைக் கண்டு, நலனைப் பெருக்கும் வகையான யோசனைகளையும், திட்டங்களையும் வெளியிடும் பத்திரிகைகள் பொதுச்சேவை புரிகின்றன என்று திட்டமாகக் கூறலாம். அவை இலாபத்தைப் பற்றிய அக்கறை யற்று இருக்க வேண்டும்.

ம.பொ.சி: வயல்கள் வரண்டு கிடக்கின்றன. விவசாயம் நசித்துக் கிடக்கிறது. இந்த நிலைமையைப் படமாக்கி, பாட்டியற்றி வெளியிடலாம் ஒரு பத்திரிகை. இந்த நிலைமையை விளங்கச் செய்வதோடு திருப்திபடாமல், இந்த நிலைமைக்கும், ஆட்சி செய்யும் கட்சிக்கும் தொடர்பு ஏற்படுத்திக் காட்டலாம் மற்றொரு பத்திரிகை. இன்னொன்று இந்த வருஷம் இப்படித்தான் இருக்குமென்று, இருஷீகேச மலையில் இருபதாண்டு தவம் செய்த இன்பானந்த சுவாமிகள் பத்தாண்டுகளுக்கு முன்பே கூறினார் என்று எழுதி, வயல் வரண்டதையும் பயன்படுத்தி,

சுவாமிகளின் மடத்துக்கு இலாபம் தேடலாம். வேறோர் பத்திரிகை, அபிஷேகம், வருண ஜெபம் செய்தால் மழைபெய்யும் என்று எழுதி வைதீக சேவை செய்யலாம். இப்படி ஒரே ஒரு நிலைமையைப் பல்வேறு கருத்துக்களில் பயன்படுத்தலாமல்லவா?

அண்ணா: பயன்படுத்திக் கொண்டுதான் வருகிறார்கள். இவ்விதமான முறைகளைக் கையாள்வதைவிட வயல்களுக்கு நீர்ப்பாசனத்துக்குத் தேவையான முறைகளையும் மழை தவறினால் கையாள வேண்டிய முறைகளையும், மற்ற நாடுகளில், இவ் விதமான சமயத்தில் என்ன செய்து பஞ்சம் வராமல் தடுக் கிறார்கள் என்பதையும் எடுத்து எழுதினால், எழுதும் பத்திரிகை பொதுச்சேவை செய்கிறது என்று பாராட்டலாம்.

ம.பொ.சி: ஆமாம், ஆனால் ஜனங்கள் விரும்பிப் படிப்பார்களா அவ்விதமான திட்டங்களைப் பற்றி எழுதினால்?

அண்ணா: படிக்கமாட்டார்கள். புரிந்துகொள்வது சிரமமல்லவா? அவர்கள் பஞ்சத்தால் பத்துப் பேர் மடிந்ததற்கு ஒரு சிந்து வெளியிட்டால் படிப்பார்கள் – டென்மார்க் நாட்டு முறை இது, நார்வே நாட்டுத் திட்டம் இது என்றால் படிக்க மாட்டார்கள்.

....

அண்ணா: ஆகவே அவ்விதம் எழுதும் பத்திரிகைகள் அதிகம் விற்பனையாகாது.

ம.பொ.சி: ஆகாது; இலாபம் கிடைக்காது; ஆனால் பலன் இல்லாமல் போகாதே.

அண்ணா: பலனா? யாருக்கு? என்ன பலன்?

ம.பொ.சி: பத்திரிகை நடத்துபவருக்கு இலாபம் இராது. ஆனால் அதிலே வெளிவரும் திட்டத்தை அக்கறையுடன் அரசாள்வோர் கவனித்துப் புதுத் திட்டம் வகுத்தால் நாடு செழிக்கும் – மக்கள் சுகப்படுவார்களல்லவா?

அண்ணா: ஆமாம், அந்தச் சுகத்தைக் காண்பது தான் பொதுச் சேவை புரிபவன் படுகிற பாட்டுக்கெல்லாம் பரிசு.

ம.பொ.சி: அந்த நோக்கத்துடன் நடத்தப்படும் பத்திரிகைக ளெல்லாம், பொதுச்சேவை புரிபவை என்று தாராளமாகக் கூறலாம்.

— சென்னை வானொலி நிலையம் ஒலிபரப்பிய உரையாடலின் நூல் வடிவம், முத்தமிழ் நிலைய வெளியீடு

.... சில வரிகள் விடுபட்டுள்ளன.

கார்நீனாயணம்

– அண்ணாதுரை

பதவிப் பித்தம் கொண்டலையும் ஒரு சில அரசியல் வாதிகள், பொதுமக்களின் ஆதரவைப் பெற முடியாத பேர்வழிகள், ஏதாவது குறை கூறிக்கொண்டிருப் பதையே தொழிலாகக் கொண்டவர்கள், காங்கிர சாட்சியில் இது சொத்தை, இது சொள்ளை, இது ஓட்டை இது உடைசல் என்று பேசிக்கொண்டு திரிகிறார்கள். பொறுப்புள்ளவர்கள், கருத்துத் தெளி வுள்ளவர்கள் யாரும் காங்கிரசாட்சியைக் கண்டிப்ப தில்லை; மாறாக ஆதரிக்கிறார்கள், பாராட்டு கிறார்கள், வாழ்த்துகிறார்கள் – என்று கூறித் தம்மைத் தாமே தட்டிக் கொடுத்துக் கொள்வதிலே இன்றையக் காங்கிரஸ் ஆட்சியினர் வல்லவர்கள்.

அவர்கள் இதுபோலக் கூறக்கேட்டு, சிலரேனும், கழகமோ பிற கட்சிகளோ வேண்டுமென்றே குறை பேசித் திரிவதாக எண்ணிக்கொள்ளக்கூடும் என்பதால் காங்கிரசாட்சியைக் கண்டிக்கவும், அந்த ஆட்சியின் நடவடிக்கைகளிலே உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டவும், எதிர்க்கட்சியினர் மட்டுமின்றி, வேறு எவரெவர் முனைகின்றனர் என்பதனை எடுத்துக் காட்ட வேண்டி நேரிடுகிறது.

காங்கிரசிலே முன்பு மிக உயர்ந்த இடமும் பொறுப்பான பதவிகளும் வகித்திருந்தவர்கள், இன்றைய காங்கிரஸ் ஆட்சியைக் கண்டிக்கின்றனர். பொருளாதாரப் பேரறிஞர்கள், பல்கலைக் கழகத்தவர், நிர்வாகத்துறை நிபுணர்கள், கண்டிக்கின்றனர்.

இதழ்களிலே அவ்வப்போது ஆட்சியின் போக்கைக் கண்டித்து கட்டுரைகளும் தலையங்கங்களும் கேலிச் சித்திரங்களும் (Cartoon) வெளியிடப்படுகின்றன.

இவர்களைப் பதவி கிடைக்காததாலே ஏமாற்றமும் எரிச்சலும் கொண்டவர்களென்றோ, பதவி ஆசை கொண்டு அலைபவர்கள் என்றோ, துணிந்த பேர்வழிகளும் கூறிட முடியாது.

எந்தப் பதவியைப் பெற வேண்டுமென்று எண்ணியிருந்திடினும் பெறக்கூடிய நிலையினர்; செயப்பிரகாஷ் நாராயணன் என்பதை மறுத்திட மாட்டார்கள்.

ஆச்சார்ய வினோபாவுக்கு நாற்காலிப் பைத்தியம் வந்துவிட்டது என்று கூறிட மாட்டார்கள் – எத்தனை ஆணவம் பிடித்த ஆளவந்தாராக இருப்பினும்.

இதழாசிரியர்கள், பதவியில் இடம் பிடிக்க வேண்டுமென்பதற்காகவே எதை எதையோ எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆளவந்தார்கள் கூறிடின் ஏமாளிகூட அதனை நம்பமாட்டான். இதழாசிரியர்களில் மிகப் பெரும்பாலானவர்கள், தேசியப் போராட்டம் பற்றி எழுச்சிமிகக் கொண்டவர்கள், காங்கிரஸ் கட்சி இந்தப் போராட்டத்தை நடத்திற்று என்பதாலே அந்த அமைப்பினிடம் மட்டற்ற மரியாதை கொண்டவர்கள். பல ஆண்டுகளாகக் காங்கிரஸ் தலைவர்களுக்குப் புகழொளி தேடித் தருவதை தேசீயத் தொண்டு என்று கருதுபவர்.

அத்தகையோராலேயே, காங்கிரசாட்சியின் போக்கு மோசமாகிக் கொண்டு போவதைத் தாங்கிக் கொள்ளமுடிவதில்லை; குமுறுகின்றனர்; குற்றம் குறைகளைச் சுட்டிக் காட்டினால், ஆட்சி தன்னைத்தானே திருத்திக்கொள்ளும் என்ற நம்பிக்கையுடன், எழுதுகின்றனர்.

எதிர்க்கட்சியினரின் கண்டனத்தை – ஏமாற்றத்தின் விளைவு என்றும், நிபுணர்களின் கண்டனத்தை அனுபவமற்றோரின் அபத்தம் என்றும் கூறிடும் காங்கிரஸ் ஆட்சியினர், இதழாசிரியர்களின் கண்டனத்துக்கு என்ன கூறுகின்றனர்? துச்சமென்று கருதுகின்றனர்! இவர்களுக்கு என்ன தெரியும் என்று கேட்கின்றனர்!

இந்தியாவின் பிரதம மந்திரி இந்திராகாந்தி அம்மையாரே, இதழ்களை எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசி விட்டார்கள் என்றால், இடம் பிடித்தவர்கள், இலாபந்தேடிகள் என்னதான் பேச மாட்டார்கள்!

இதழ்களின் போக்கை இந்திரா காந்தி அவர்கள் கண்டித்தது

கண்டு மனம் நொந்து, அகில இந்திய பத்திரிகையாளர் சங்கமே, தன் வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறது.

சோவியத் நாட்டுக்குச் சென்றிருந்த காமராஜர், பத்திரிகைகளின் போக்கை அங்கு கண்டித்துப் பேசியதுடன், பத்திரிகைகளின் தயவினால் காங்கிரஸ் தேர்தல்களில் வெற்றி பெறவில்லை என்றே பேசிவிட்டார்! இதனால் மனம் வெதும்பிய 'டைம்ஸ் ஆப் இந்தியா' எனும் நாள் இதழ்கூட, இது அடுக்குமா என்று கேட்டிருக்கிறது. இன்றுவரை காமராஜர் சமாதானமோ, விளக்கமோ தரவில்லை.

எதிர்க்கட்சிகளைத் துச்சமென்று எண்ணுவது போலத்தான், இதழ்களைப் பற்றியும் ஆளவந்தார்கள் எண்ணுகின்றனர்; மதிப்பளிக்க மறுக்கின்றனர்.

இதழ் பலவற்றில், காங்கிரசாட்சியின் கேடுபாடுகள், எழுதப்படின், பொதுமக்களின் மனதிலே காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சி பரவுமே, அது நல்லதல்லவே, ஆபத்தாகிவிடக்கூடுமே என்ற கவலைகூடக் காங்கிரஸ் ஆட்சியினருக்கு எழவில்லை. எவராலும் அசைக்க முடியாத விதமாகத் தமது நிலைமை கெட்டிப்படுத்தப் பட்டு விட்டிருக்கிறது என்று நம்புகிறார்கள்.

இதழ்களோ, ஆளவந்தார்கள் மதிப்பளிப்பினும் தர மறுத்திடினும், மக்களுக்கு உண்மையைக் கூறிட வேண்டும் என்ற கடமை உணர்ச்சியுடன் நடந்திட முற்படுகின்றன; கேடான செயலில் ஆளவந்தார்கள் ஈடுபடும்போது, கண்டனம் தெரிவிப்பதன் மூலம், ஆட்சியின் போக்கைத் தடுத்திடலாம், திருத்தவும் செய்யலாம் என்று நம்புகின்றன.

இன்று வரையில், இதழ்கள் தெரிவித்துள்ள கருத்தினை மதித்து காங்கிரசாட்சியினர் தமது போக்கை மாற்றிக் கொள்ளவில்லை.

நாட்டு மக்களின் மனதை அறிந்து அதனை ஆட்சியினருக்கு எடுத்துக்கூறும் கடமை இதழ்களுக்கு. அந்தக் கடமை உணர்ச்சியை இதழ்கள் நிறைவேற்றும்போது, கடுங்கோபம் காட்டுகின்றனர் காங்கிர சாட்சியினர்.

தலையங்கம், கட்டுரை ஆகிய வடிவத்தில் தமது கண்டனத்தை அமைத்துத் தருவதுடன், நிலைமையை நன்கு விளக்கிட, இதழ்கள், கார்ட்டூன் – கேலிச்சித்திரம் – வெளியிட்டு வருகின்றன. கார்ட்டூன்கள், எடுப்பாக அமைந்து, காண்போருக்குக் காங்கிரசாட்சி எப்படிப் பட்டது என்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

இத்தனை ஆண்டுகளாக ஈடு எதிர்ப்பற்ற முறையில் அதிகாரம் செலுத்தி வரும்போது, ஏன் காங்கிரசாட்சியினால் மக்களின் ஏழ்மையைப் போக்க முடியவில்லை என்று நாம் கேட்கும்போது ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வருகிறது. ஆனால் நமக்குத் தோன்றுவது போலவே இதழ்களுக்கும் தோன்றுகின்றன.

16 ஆ மாச உங்களிடம் சர்வாதிகாரம் இருந்தும், மக்கள் ஏழ்மையில் உழல்வதேன்!



இதழ்கள் கொண்டுள்ள கருத்தை விளக்கிடவும், காங்கிரசாட்சியின் போக்கைக் கண்டிக்கவும், 'தேசிய பாரம்பரியத்துக்கும்' – காங்கிரஸ் பக்திக்கும் – நிதானத்துக்கும் பெயர் பெற்றுள்ள 'சுதேசமித்திரன்' வெளியிட்ட கார்ட்டூன் இது.

இன்றைய காங்கிரசாட்சி, மகாத்மா விரும்பிய முறையிலே ஆட்சி செய்யவில்லை; ஏழைகளுக்கு இதம் தந்திட முடியவில்லை என்ற கருத்துப்பட உள்ளதாகும் இந்தக் கார்ட்டூன்.

இதனைக் கண்ணுற்ற பல்லாயிரவர், இன்றைய காங்கிரசாட்சி, மகாத்மாவின் வழியிலே நடந்திடவில்லை; ஏழைகளுக்கு நல்வாழ்வு அளித்திடவில்லை என்ற கருத்தினை எப்படிப் பெறாமல் போக முடியும்? ஏழை எளியோரை இந்த ஆட்சி ஏமாற்றி விட்டது என்று எதிர்க் கட்சியினர் பேசும்போது இது கட்சி மாச்சரியத்தின் விளைவு என்று எண்ணிக் கொள்ளக்கூடத்தோன்றும்; 'மித்திரன்' கட்சி மாச்சரியம் கொண்டா இந்த கார்ட்டூனை வெளியிட்டிருக்கும்! இந்த இதழே

– வெகு நிதானமாக ஆனால் ஆழ்ந்த முறையிலே பிரச்சினைகளை கவனிக்கும் பொறுப்பு மிக்க மித்திரனே இன்றைய காங்கிரசாட்சி ஏழையின் இன்னலைப் போக்கத் தவறிவிட்டது என்று இடித்துரைக்க முற்படுகிறது என்றால் நிலைமை மோசமாகி விட்டது என்றுதானே பொருள்!

காங்கிரசையா குறைகூறுவது என்று எவரும் கொதித்தெழ முடியாத வகையில் மித்திரன் வெளியிட்டுள்ள கார்ட்டூனில் காங்கிரசை, மகாத்மாவே கண்டிப்பதாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

எத்தனையோ சங்கடங்கள், தொல்லைகள், தடைகள் அதனால்தான் எம்மாலே ஏழைகளுக்குப் போதுமான அளவு இதம் செய்திட முடியவில்லை என்று காங்கிரசாட்சியினர் சமாதானம் கூறித் தப்பித்துக்கொள்ள முடியாது. கார்ட்டூனில் காணப்படும் காந்தியார் கேட்கிறார் திட்டவட்டமாக, "16 வருடங்களாக உங்களிடம் சர்வாதிகாரம் இருந்தும் மக்கள் ஏழ்மையில் உழல்வதேன்?" என்று.

நீண்டகாலமாக ஆட்சி நடத்துகிறீர்கள், எவருடைய குறுக்கீடும் இல்லாத முறையில் எல்லா அதிகாரமும் பெற்றிருக்கிறீர்கள், இருந்தும் மக்கள் ஏழ்மையில் உழல்கிறார்கள், ஏன்? இந்தக் கேள்வியைக் கார்ட்டூன் மூலம் எழுப்புகிறது இதழ்.

எதிர்க்கட்சிகள் இதே கேள்வியை எழுப்பும்போது, மக்கள் கவனிப்பதை விடக் கூர்மையாகவே, 'இதழ்' எழுப்பும்போது கவனிப்பர்.

ஆளவந்தார்கள், இவ்விதமான கேள்விகளை எதிர்க்கட்சிகள் எழுப்பும்போது கொதிப்படையும் அளவு, இதழ்கள் கார்ட்டூன் போட்டுக் காட்டும்போது கொதிப்படைவதில்லை; காரணம் எதிர்க்கட்சிகள் காங்கிரசாட்சியைக் கண்டிப்பதுடன், 'ஓட்டு' கேட்கவும் செய்கின்றன; இதழ்கள் அப்படிக் கேட்பதில்லை. அதிலே ஒரு திருப்தி, ஒரு மகிழ்ச்சி காங்கிரசாட்சியினருக்கு.

ஆனால் பொதுமக்கள் காங்கிரசாட்சியிடம் கொண்டுள்ள 'பக்தி' இதழ்கள் வெளியிடும் இவ்விதமான கார்ட்டூன்கள் மூலம், மெள்ள மெள்ள துளைக்கப்படுகிறது. இது எதிர்க்கட்சிகளின் நேரடியான கண்டனத்தைவிட வலிவான தாக்குதல், என்பதை நுண்ணறிவினரே உணர்வர்.

மித்திரனே கேட்கிறதே! படமே போட்டுக் காட்டுகிறதே! என்று பல்லாயிரவர் பேசிடச் செய்கிறது கார்ட்டூன் – அந்தப் பேச்சு வலுவடைய வலுவடைய, பரவப் பரவ, நிச்சயமாகக்

காங்கிரசுக்கு மக்களிடம் உள்ள பிடி தளரத்தான் செய்யும்; தளர்ந்துவிட்டிருக்கிறது.

'இந்தி' ஆட்சிமொழி ஆக்கப்படுவதை எதிர்க்கட்சிகள் பல எதிர்க்கின்றன; நமது கழகம் 'இந்தி' ஆதிக்க ஒழிப்புக்காக அறப்போர் நடத்திற்று. காங்கிரசாட்சியினர் பிடிவாதத்தை விட மறுக்கின்றனர். காரணம் அவர்கள் இதர மொழியினரைத் துச்சமென்று கருதுகின்றனர். அவர்களின் உணர்ச்சியைக் கவனிக்க மறுக்கின்றனர்.

இந்தி வெறியர்கள்–இந்தி ஆதிக்கக்காரர்கள்–இந்தி ஏகாதிபத்தியம்–என்று கூறப்படுவதைக் கூட, எதிர்க்கட்சிகள், குறிப்பாக தி.மு.கழகம் கக்கிடும் பகை உணர்ச்சி என்று பொதுமக்களிடம் காங்கிரசாட்சி கூறிவருகிறது.

மற்ற மொழியினர் உரிமை இழந்திடுவர், வாழ்வு இழந்திடுவர், இந்தி ஆட்சிமொழி யாக்கப்பட்டுவிட்டால் என்று நாம் கூறும்போது, 'வீணான பீதி' என்று பேசுவது ஆட்சியினருக்கு வாடிக்கையாகிப் போய்விட்டது.

ஹிந்தி வெறியர்கள் விருப்பப்படி நடந்தால் இப்படியொரு நிலைதான் ஏற்படக்கூடுமென மற்ற மொழியினர் அஞ்சுவதில் ஆச்சரியமென்ன?

இந்த 'கார்ட்டூன்', மித்திரன் இதழில் காணப்படுவது. இதர மொழியினர் என்ன பாடுபடுவர் இந்தி ஆதிக்கம் பெற்றால் என்பதை இதைவிடத் தெளிவாகவும் மனதிலே தைக்கும் விதமாகவும், எந்த எதிர்க்கட்சிக்காரரும் பேசவோ எழுதவோ முடியாது. இந்த கார்ட்டூனைப் பார்த்த பிறகும், இந்தி ஆதிக்கத்தால் பிற மொழியாளர் நசுக்கப்படுவர், காலின் கீழ் போட்டுத் துவைக்கப்படுவர் என்ற உண்மையினை எவரேனும் உணர்ந்திட மறுத்திடின், அவர்களைக் காங்கிரஸ் சந்தையிலே விலைபோன சரக்கு! – என்று கூறி விடலாம்.

கார்ட்டூன் – மிகத் தெளிவான முறையில் இந்தி வெறியர் வெற்றி பெற்றால், பிற மொழியினருக்கு ஏற்படக்கூடிய நிலையைக் காட்டுகிறது.

கழகம், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்திடும்போது, "இதெல்லாம் ஓட்டு வேட்டைக்கு" என்று வெகு எளிதாகப் பேசித் தமது ஏமாளித்தனத்தைக் காட்டிக் கொள்கிறார்களே காங்கிரஸ் வட்டாரத்திலே சிலர், அவர்களேகூட, மித்திரன் இந்த கார்ட்டூன் வெளியிட்டிருப்பது, 'ஓட்டு வேட்டை'க்காக என்று கூற முற்பட மாட்டார்கள்! ஏமாளிகள்கூட, தமக்கென்று ஒரு எல்லையை ஏற்படுத்திக் கொள்வார்கள் அல்லவா?

காங்கிரசிடம் பல்வேறு காரணங்களுக்காக (நியாயமான காரணங்கள்) – பற்று கொண்டுள்ளவர்களுக்கு, இந்தி ஆதிக்கத்தைப் பற்றி கழகமோ வேறு எதிர்க் கட்சிகளோ கண்டனம் தெரிவிக்கும் போது, எரிச்சலாகவே இருக்கும்; நம்முடைய காங்கிரசா இப்படிச் செய்யும்!– என்று கேட்பர். ஆனால் அவர்களேகூட, நிலைமையை 'மித்திரன்' கார்ட்டூன் மூலம் படம் பிடித்துக் காட்டும்போது, எப்படி உண்மையை உணராமல் இருக்க முடியும்? இதுவரையில் நாம், கழகம் கட்சி மாச்சரியத்தாலும் ஓட்டு வேட்டைக்காகவும், காங்கிரசாட்சிமீது பழி கூறித் திரிகிறது என்று எண்ணிக் கொண்டிருந்தோம்; இப்போது 'மித்திரனே' கண்டிக்கிறதே; படமே போட்டுக் காட்டுகிறதே; வீண் பழி சுமத்துவதையா அந்த இதழ் தன் தொழிலாகக் கொள்ளும்! இருக்க முடியாதே. உண்மையைத் தான் இதழ் எடுத்துக் காட்டியிருக்கிறது. நாம்தான் இதுவரையில், காங்கிரசிடம் உள்ள 'பக்தி' காரணமாக, உண்மையை உணராம லிருந்து வந்தோம்; கார்ட்டூன் நமது கண்களைத் திறந்துவைத்தது என்றுதான் எண்ணம் கொள்வர். எதிர்க்கட்சியின் பேச்சைக் கேட்கக் கூட விருப்பம் காட்ட மறுத்துவந்த வட்டாரத்திலேயே, இவ்விதமான கார்ட்டூன்கள் மனமாற்றத்தை ஏற்படுத்துவன; ஏற்படுத்திவிட்டுள்ளன.

காங்கிரசாட்சியின் விளைவாக மக்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிவிட்டிருக்கிறது என்று எதிர்க்கட்சி கூறும்போது, புள்ளி விவரத்தைத் தயாரித்துக் கொட்டிக் காட்டுவதன் மூலமும் புருவத்தை நெறித்துக் காட்டுவதன் மூலமும் காங்கிரசாட்சித் தலைவர்கள் பதில் அளிக்கின்றனர்.



Peaceful co-existence

இந்த கார்ட்டூன், 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழுடையது. வேறு ஓர் பிரச்சனையை விளக்க இது வெளியிடப்பட்டுள்ளது என்றாலும், நாட்டு நிலைமை, ஆட்சித் திறமை எப்படி இருக்கிறது என்பதை, இதனைவிடத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்ட முடியாது. இளைத்துக் கிடக்கும் உருவங்களைக் காணும் எவருக்கும் மனம் பதறாமல் இருக்க முடியாது! மனிதனையும் மாட்டையும் இந்த நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டவர்களை, 'எனது கட்சியினர்' என்று கூறிக்கொள்ளக் கூட உண்மையான காங்கிரசார் கூசுவர்! காங்கிரசாட்சியிலே தேனும் பாலும் கலந்து ஓடும் என்று நம்பிக் கொண்டிருந்தவர்கள் கண்ணில், 'எலும்புக் கூடுகள்' தெரிகின்றன என்றால், இதயத்தில் ஈட்டி பாய்வது போன்ற நிலையினராவர்.

இந்த நிலைமைக்கு நாட்டைக் கொண்டுவந்திடவா பாடுபட்டு சுயராஜ்யம் பெற்றோம் என்று பதறுவர். நமது கட்சியினரை, நல்லவர் என்றும் வல்லவர் என்றும் நம்பிக் கிடந்தோமே, ஆட்சியின் கோளாறுகளை எதிர்க் கட்சியினர் எடுத்துக் காட்டிய போதெல்லாம் எரிந்து எரிந்து விழுந்தோமே, 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழ்,

எதிர்க்கட்சி இதழ் அல்லவே! கட்சிக் கண்ணோட்டம் கொள்வதல்லவே! மகாத்மாவின் திருமகனாம் தேவதாஸ் காந்தியை ஆசிரியராகக் கொண்டிருந்த ஏடாயிற்றே! நாட்டு நிலைமையை அந்த இதழ் படம் போட்டுக் காட்டுகிறதே பார்க்கவே பரிதாபமாக, பயங்கரமாக இருக்கிறதே என்று எண்ணிடாத நேர்மையாளர் இருந்திட முடியாது

இந்தக் கார்ட்டூன், 'ஸ்டேட்ஸ்மன்' நாளிதழில் வெளிவந்தது. எலும்புக்கூடுகள் பேசிக்கொள்கின்றன! உனக்கு என்ன வியாதி? டாக்டர் என்ன சொல்லுகிறார் என்று ஒரு எலும்புக்கூடு கேட்கிறது! மற்றோர் எலும்புக்கூடு சொல்லும் பதில்:

வாங்கும் சக்தி குறைந்துவிட்டது

பண்ட நடமாட்டம் பரவலாக்கப்படுவதிலே குறைபாடு

மாற்றப்பட முடியாத உணவுப் பழக்கம்.

இவை காரணம், இந்த நிலைக்கு என்று கூறுகிறது எலும்புக்கூடு! இந்துஸ்த்தான் டைம்ஸ் கார்ட்டூன் எலும்புக் கூடுகளை காட்டுகிறது; ஸ்டேட்ஸ்மன் எலும்புக்கூடு ஆகிவிட்டவர்களைப் பேசவைத்திருக்கிறது. காண்போர் என்ன எண்ணுவர்? ஓட்டு வேட்டைக்காகவா இந்த இதழ்கள் இவ்விதம் படம் போடுகின்றன? இல்லையே! நாட்டு நிலைமையை

எடுத்துரைப்பது இதழ்கள் மேற்கொண்டாக வேண்டிய 'அறம்' என்பதாலே. நாட்டிலே, காங்கிரசாட்சியினால் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை, மக்கள் பஞ்சத்தால் தாக்கப்பட்டுள்ளனர் என்று எதிர்க்கட்சிகள் கூறும்போது கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. இந்தப் படங்களைப் பார்க்கும்போது? எதிர்க்கட்சிகளின் பேச்சைக் கேட்பதே 'தேசியப்பாவம்' என்று எண்ணிக்கொண்டுள்ளவர்களும் கூட அல்லவா, இந்த கார்ட்டூன்களைக் கண்டதும் வெட்கத்தால் தலைகுனிந்து கொள்வர் வேதனையால் துடிப்பர்.

நாட்டை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து வைத்துள்ளவர்களை மறுபடியும் அரியாசனம் அமர விடுவது அக்ரமம், அநீதி என்று அவர்களுக்கே அவர்களின் உள்ளம் கூறிடாதா! கட்சிக் கட்டுப்பாடுகளையும் உடைத்தெறிந்துகொண்டு உள்ளத்துக்குள் உண்மையைப் புகுத்த வல்லன இந்தப் படங்கள்.

ஏழை மீதுள்ள சுமை



'மித்திரன்' – கார்ட்டூன்! மாடாக உழைத்து ஓடாகிப்போன ஏழை படும்பாட்டை எடுத்துக்காட்டுவது. வாழ்க்கைச் செலவு பெருத்துப்போகிறது; அதனை இழுத்துச் செல்லும்போது, பளு அழுத்துகிறது.

ஏழை எளியோர்களைக் காத்திடவே காங்கிரசாட்சி உளது; அந்த நோக்கத்துடனேயே பணியாற்றி வருகிறது என்று பறைசாற்றுகின்றனர்; பண்பாடுகின்றனர்.

இல்லையே, ஏழைக்கு அடுக்கடுக்காக இன்னல் வந்து தாக்குகிறதே; வாழ்க்கைச் செலவு ஏறிப்போய் அவன் தாங்க முடியாமல் தவிக்கிறானே; தற்கொலைகள் பெருகிவிட்டனவே

என்று எதிர்க்கட்சிகள் கூறும்போது, கோபத்தால் துடிக்கின்றனர் கோலேந்திகள்.

இந்தப் படம் காணும்போது? இது எதிர்க்கட்சி தயாரித்த படமா? எதிர்க்கட்சி நடத்தும் இதழிலே வெளிவந்ததா? இல்லையே! 'மித்திரன்' வெளியிட்ட படம்! ஏழையின் நிலைமையை விளக்கும் படம்! இந்த நிலைமைக்கு ஏழையைக் கொண்டுவந்து விட்டவர்கள், மீண்டும் ஆட்சிக்கு வந்திடவேண்டும் என்று கேட்பது எந்த நியாயத்தின் மீது? இந்த எண்ணத்தைத் தந்திடும் விதமாக அல்லவா, படம் அமைந்திருக்கிறது. எதிர்க்கட்சியைத் தாக்கிடலாம்; அவர்தம் பேச்சினைக் கேட்காதே என்று கட்டளை பிறப்பித்திடலாம்! ஆனால் இப்படிப்பட்ட படங்களையுமா மக்கள் பார்த்திடாமல் இருக்கச் செய்யப்போகிறார்கள்? பார்த்திடுவோர், இந்த ஆட்சியை வாழ்த்தியா வரவேற்பார்கள்!

நாட்டை எந்த நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டு இவர்கள் தேர்தல்களம் செல்லுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டும் இந்த கார்ட்டூன், 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில் வெளிவந்தது. இரத்தம் ஒழுகும் வாயுடன் புலி அவர்களைப் பின் தொடர்ந்து வருகிறது; ஆளவந்தார்களை.

நிலைமைகளைக் கூறிடும் பதங்களையே அமைத்து புலிவடிவம் கொடுத்துவிட்டிருக்கிறார், கார்ட்டூன் ஓவியர்!

கலவரங்கள்

பொருளாதார நெருக்கடி

பற்றாக்குறை

பஞ்சம்

மாணவர் கிளர்ச்சி

இவைகள் நாட்டிலே இன்று! இதற்கான பதங்களையே புலி வடிவமாக்கிவிட்டிருக்கிறார் ஓவியக்காரர்!

இந்த பயங்கரம், இவர்கள் உண்டாக்கியது! இந்தப் பயங்கரம் இவர்களைப் பின்தொடருகிறது. இதனை அறியாமல், 'தலைவர்கள்' தேர்தல் களம் செல்லுகிறார்கள்.

"திரும்பிப் பார்க்காதீர்கள்! ஒரு பயங்கர மிருகம் நம்மைப் பின்தொடர்ந்து வருகிறது" என்று ஒரு தலைவர் மற்றவர்களுக்குக் கூறுகிறார். நிலைமையைக் காட்ட மிருகம்! கவலை, கலக்கம், பீதி கொண்ட முகத்துடன் தலைவர்கள்!

நாட்டை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டவர்கள், தேர்தல் களம் செல்லுகிறார்களே இது என்ன விந்தை!—என்று கேட்க இந்தப் படம்.

இதனை எதிர்க் கட்சி காட்டிடும்போது! கடுங்கோபம் கொண்டிடும் பொதுமக்களிலே ஒரு பகுதியினர்கூட; இந்தப் படம் இதழில் வெளிவரக் காணும்போது, துக்கமும் வெட்கமும் கொள்வரன்றி கோபம் ஏன் கொள்ளப் போகிறார்கள்! கோபம் ஒருவேளை பிறந்திடினும் எதிர்க் கட்சிகளின்மீது இருக்க முடியாது, இவ்வளவு கோணலாட்சி நடத்துபவர்களுக்கு நாம் கொடிதூக்கி களாகிக் கிடக்கிறோமே என்பதை எண்ணி தம்மீதே கோபித்துக் கொள்ளக்கூடும். நாலு பேர் எதிரே தலைநிமிர்ந்து நிற்க ஒட்டாத விதமாக ஆட்சியை அலங்கோலமாக நடத்திக்கொண்டுள்ளனரே என்று காங்கிரஸ் கட்சியின்மீது கோபம் வரக்கூடும்.

ஆனந்த கீதமல்லவா பாடுகிறார்கள் அமைச்சர்கள்: அவ்வப்போது பஞ்சம் வராது! பட்டினிச் சாவு ஏற்படாது— என்றெல்லாம்.

உண்மை நிலைமை எப்படி இருக்கிறது என்பதை நாட்டினருக்குக் காட்டிட வெளிவந்துள்ள படம் இது; மித்திரனில்.

கழுகுகள் ஒருபுறம் வட்டமிடுகின்றன, கீழே வீழ்ந்துள்ள பிணங்களையும் குற்றுயிராக உள்ளோர்களையும் கொத்தி...! மற்றோர் புறமோ அமைச்சர்கள், விளம்பரப் பலகையைப் பொதுமக்களுக்கு காட்டுகின்றனர்! ஆனந்தம் ஆனந்தம் என்று பாடுகிறது பலகை!

'பொதுஜனம்'— நாட்டிலே என்ன நடக்கிறது என்பதை அறியாமல், இந்த அமைச்சர்கள் விளமபரப் பலகையைக் காட்டி உண்மையை மறைக்க முனைகிறார்களே என்று எண்ணி திரும்பிப் பாருங்கள்!— என்று வட்டமிடும் கழுகுகளைக் காட்டுகிறார். அமைச்சர்களின் போக்கை இதனைவிடக் கடுமையாகக் கண்டித்திட முடியாது! நாட்டு நிலைமையை விளக்கிட, இதனைவிட வேறோர் சித்திரம் தந்திட முடியாது. தந்தது மித்திரன்! அரசியல் காழ்ப்பா காரணம்? அற்பனும் கூறிட அஞ்சுவான்!



பதுக்கலை ஒழிப்போம்! பஞ்சத்தைத் துடைப்போம்! — இது ஆளவந்தார்களின் பரணி! பாடியபடி உள்ளனர்; ஆனால்

பதுக்கலை ஒழித்திட முடியவில்லை. அதனை விளக்கிட 'மெயில்' இதழ் வெளியிட்ட கார்ட்டூன் இது. ஒருபுறம் உற்பத்தியாளர்! மற்றோர் முனையில் வியாபாரி! நடுவிலே அமைச்சர்! அவர் நிலைமை சித்திரிக்கப்பட்டிருக்கிற விதத்தைப் பார்த்தால் அவரே சிரிப்பார்! இவர்களிடம் 'பந்தாக' ஆகிறது தானியப் பதுக்கல்!! இந்த 'விளையாட்டு' ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, பட்டினி கிடந்திடும் மக்கள், பாத்திரத்துடன் மற்றோர்புறம் நின்றுகொண்டிருக்கிறார்கள், உணவு கொடும்! என்று கேட்டபடி.

பதுக்கலை ஒழிக்க முடியவில்லை! பஞ்சத்தையும் பற்றாக் குறையையும் போக்க முடியவில்லை! இதனைத் தடுத்திடத்தக்க திறத்துடன் காங்கிரசாட்சி நடத்தப்படவில்லை என்று எதிர்க் கட்சிகள் கூறும்போது, வீண் கண்டனம்! – என்று அலட்சியம் காட்டிப் பேசுபவர்களும், மெயில் தரும் நிலைமை விளக்கப் படத்தைக் கண்டால், தமது போக்கை ஓரளவுக்காகிலும் மாற்றிக் கொண்டுதானே தீரவேண்டும். 'மெயில்' இதழ், அறிவகம்– அன்பகம் – ஆகிய இடமிருந்தா வெளிவருகிறது!

இந்தக் கார்ட்டூன், மித்திரனில் வெளிவந்தது! பட்டினி கிடந்திடும் மக்களுக்கு, அமைச்சர்கள் தந்திடும் பதில் எவ்வளவு பொறுப்பற்றதாக உள்ளது என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

வருங்காலத் திட்டம்! பசித்த வயிறுக்கு அதுதான் சமாதான மாகத் தரமுடிகிறது – திட்ட அமைச்சர் அசோக்மேத்தாவினால்.

விதைகள் முளைக்கட்டும், உமது பசி போக்கப்படும் என்கிறார்! அதுவரையில்: பீகார்! வேறென்ன!

இத்தனைப் பொறுப்பற்ற தன்மையுடன் நடந்துகொள்பவர் களையா மீண்டும் ஆட்சியில் அமர்த்துவது என்ற எண்ணத்தைக் கிளறத் தவறுமா, இந்தக் கார்ட்டூன்.

பஞ்சம் மிரட்டிக்கொண்டுள்ள நிலைமையிலேதான், ஆளுங் கட்சியான காங்கிரஸ் கட்சி, தனது கமிட்டிக் கூட்டத்தை நடத்திற்று. அதுபோது ஆங்கில இதழில் வெளிவந்த படம் இது:



பஞ்சமா! வீண்பீதி! யார் சொன்னது பஞ்சம் இருப்பதாக! வீண்புரளி!– என்று ஆளுங்கட்சியினர் பேசுகின்றனர் – உரத்த குரலில்! ஆனால் பஞ்சமோ, சூரியனை விழுங்கிடும் கிரஹணம் போல் இருக்கிறது என்று படம் காட்டுகிறது.

'மண்டை ஓடு'– பஞ்சத்தை விளக்கப் போட்டுக் காட்டப் பட்டிருக்கிறது. எந்த எதிர்க்கட்சியும் இது போலப் பேசிடின், காங்கிரசின் பூசாரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது! ஆனால், கட்சிக்காக நடத்தப்படாத, பொது இதழில் இந்தப்படம் வெளிவந்திருப்பதால், அவர்களும் தமது ஆத்திரத்தைக் கொட்ட முடிவதில்லை; எதிர்க்கட்சிகள் எதையாவது குறை கூறிக் கொண்டுதான் இருக்கும் என்ற அலட்சியப் போக்கு கொண்டுள்ளவர்களையும் ஓரளவு சிந்திக்கச் செய்திடும்.



விலைவாசியை கட்டுப்படுத்தத் தவறிவிட்டது காங்கிரசாட்சி என்பது; எதிர்க்கட்சிகள் 'இட்டுக்கட்டுவது' என்று இடிமுழக்கம் செய்கின்றனர் காங்கிரசின் பேச்சாளர்கள். விலைவாசியைக் கட்டுப் படுத்த முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாகவும் அமைச்சர்கள் பேசுகின்றனர். விலைகள் கட்டுப்படுத்தப்பட்டு விட்டதெனச் சில அமைச்சர்கள் பொய்யை மெய்போலாக்கிக் காட்டுகின்றனர். இன்னும் சில அமைச்சர்களோ, விலை ஏற்றம் வளர்ச்சியின் அறிகுறி என்று தெம்மாங்கே பாடுகின்றனர்.

மேலே உள்ள இரண்டு 'மித்திரன்' கார்ட்டூன்களும், விலைவாசிப் பிரச்சினை இந்த ஆட்சியினரால் எந்த நிலைமைக்குத் துரத்தப் பட்டிருக்கிறது என்பதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

உற்பத்தியாளர்–வியாபாரி–உபயோகிப்போர்– ஆகிய மூன்று தரத்தாருக்கும் இடையிலே, பொது நன்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு ஒரு நல்லரசுக்கு உண்டு.

இந்த ஒரு துறையில் எந்த அளவு வெற்றியை ஒரு அரசு பெறுகிறதோ அந்த அளவுக்குத்தான் ஆளுந்தகுதி பெற்றதாகப் பொருள்படும்.

இந்தத் தொடர்பைச் சரியான முறையிலே அமைத்திட காங்கிரஸ் அரசால் முடியவில்லை. அதற்குத் தேவையான திறமையைப் பெற்றுக்கொள்ளவில்லை; அதனால்தான் விலைவாசிப் பிரச்சனை நாளுக்குநாள், சிக்கல் நிறைந்ததாகி ஆபத்தான கட்டத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

அடிப்படைப் பிரச்சினை இது. இதிலே வெற்றிபெறத் தவறிவிட்ட ஒரு காரணம் போதும் மீண்டும் காங்கிரஸ்கட்சி அரசாளக் கூடாது என்பதற்கு.

எதிர்க்கட்சிகள் இதுபற்றிக் கூறிடும் பேச்சு அவ்வளவும், காங்கிரஸ் ஆட்சியினருக்கு, ஏதோ கட்சி மாச்சரியப் பேச்சுப் போலவே தென்படுகிறது. மித்திரன் காட்டிடும் படம் பற்றியும் காங்கிரசாட்சி அதே போக்கைக் கொள்ள முடியாது. இதழின் கருத்தை ஆட்சி அலட்சியப்படுத்திடினும் பொதுமக்கள், அலட்சியப்படுத்த மாட்டார்கள்.



'பாரத்ஜோதி' என்ற இதழில், விலைவாசியைக் கட்டுப்படுத்த எடுத்துக்கொள்ளப்படும் முயற்சியால் விளைந்துள்ள நிலைபற்றி வெளிவந்துள்ள கார்ட்டூன், வெறும் வேடிக்கையாக உள்ளதாகத்

தென்படவில்லை; மக்கள் எவ்வளவு இடுக்கணுக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

Holding The Price Line



விலைகளைக் கட்டுப்படுத்துவோம் என்று ஆட்சியாளர் கெம்பீரமாகப் பேசுவது கேட்ட மக்கள் பெருமிதம் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். உத்திரவு பிறப்பித்தால் போதும், விலைவாசி அஞ்சி கட்டுக்கடங்கிவிடும் என்ற நினைப்புடன் ஆட்சியாளர்கள் உள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டி அரசு ஆணை பிறப்பித்து அல்ல, தக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமே விலைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று எதிர்க் கட்சிகள் வாதாடும்போது காங்கிரசாட்சியினர் கோபம் கொள்கின்றனர்.

அலையை என் ஆணையால் அடக்கிடுவேன் என்று கூறி கடலோரம் தன் அரியாசனத்தைக் கொண்டுபோய்போடச் சொல்லி அதன்மீது அமர்ந்துகொண்டு, 'அலையே அடங்கு! என்று ஆணை பிறப்பித்தானாம் கன்யூட் என்ற பிரிட்டிஷ் மன்னன். அவன் கேலிக்குரியவனானான்!! அந்த நிலைக்கு ஒப்பாக இருக்கிறது, ஆணை பிறப்பித்து விலையை அடக்குவோம் என்று காங்கிரஸ் ஆட்சியினர் பேசுவது என்ற கருத்துப்பட 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஒரு கேலிச்சித்திரம் வெளியிட்டிருக்கிறது. அது இது.

விலைவாசியைக் கட்டுப்படுத்தத் தேவைப்படும் நட வடிக்கைகளை எடுக்கவேண்டுமானால், பெரிய முதலாளி

விலைவாசியைக் கட்டுப்படுத்தத் தேவைப்படும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமானால், பெரிய முதலாளிகள், பதுக்கல்காரர்கள், ஆகியோரிடம் பகைத்துக்கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும். அவ்விதமான துணிவு வரவேண்டுமானால், தேர்தல் நடைபெற அவர்களிடம் கை நீட்டாதிருக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி அதற்குத் தயாராக இல்லை.

கம்பெனிகள் தேர்தல் நன்கொடை தருவது தடுக்கப்பட வேண்டும் என்பதற்கான சட்டம் போட காங்கிரஸ் அரசு (எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியும்) மறுத்துவிட்டது.

கம்பெனிகளிடமிருந்து கொழுத்த தொகையைக் காங்கிரஸ் கட்சி தேர்தல் நன்கொடையாகப் பெற்ற விவரமே வெளி வந்திருக்கிறது.

இந்நிலையில், விலைகளைக் கட்டுப்படுத்தும் முறைகளை விட்டுவிட்டு, மக்களை மயக்கவும், கண் துடைக்கவும், 'சூபர் மார்க்கட்' அமைப்பது போன்று விளம்பர வேலைப்பாடுகளிலே காங்கிரஸ் அரசு ஈடுபடுவதை எதிர்க்கட்சிகள் கண்டிக்கும்போது, பதவி கிடைக்கவில்லையே என்ற எரிச்சல் காரணமாக இது, என்று கதைக்கிறார்கள்.

காங்கிரஸ் சர்க்காரின் அந்தப் போக்கையும் கண்டித்து, அதுபோன்றே, இன்று ஒரு 'சூபர் மார்க்கட்' ஆகிவிட்டது என்று கேலி செய்து வாங்கிட ஆள் வருமா, வருமா என்று முன் வாயிற்படியிலே இந்திராகாந்தி அவர்களும், அடுத்த வாயிற் படியில் அமைச்சர்கள் சுப்பிரமணியமும் அசோக்மேத்தாவும்

ஆவலுடன் காத்துக்கிடப்பதாகவும் அங்கு, இந்திராகாந்தியின் வாக்குறுதிகள், அசோக்மேத்தாவின் திட்டங்கள் என்ற சரக்குகள் மலிவான விலைக்குக் கிடைக்கும் என்று பலகைகள் தொங்குவ தாகவும் கேலி செய்து 'இந்துஸ்தான் டைம்ஸ்' கார்ட்டூன் வெளியிட்டிருக்கிறது. அது, இது.

"What line are we selling today, boss?"

இவ்வளவு குறைகளும் நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் தீர்க்கப்பட்டுவிடும் என்று பேசுவதிலே காங்கிரஸ் ஆட்சியினர் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் கதி என்ன? அவைகளால் யார் பயன்பெற்றனர் என்று நாம் கேட்கிறோம். உடனே கோபம் கொள்கின்றனர் ஆளவந்தார். நாலாவது ஐந்தாண்டுத் திட்டமும், தெளிவாக இல்லை. தேவையை உணர்ந்து தீட்டப்பட்டதாகத் தெரியவில்லை, மனம்போன போக்கிலே எழுதப்பட்டதாகத் தெரிகிறது என்றெல்லாம் கூறும்போது, பேதைகளே! திட்டத்தையா கேலி பேசுகிறீர்கள் என்று முழக்கமிடுகின்றனர்.

ஐந்தாண்டுத் திட்டம் எவ்வளவு தெளிவற்றதாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள கார்ட்டூன், இதோ.



'அசோக்மேத்தா–திட்ட அமைச்சர் அல்லவா? அவர் திட்டத்தைக் காட்டி விளக்குவதாகப் படம் அமைந்திருக்கிறது. திட்டம் எப்படி இருக்கிறது? கோடுகள்– சுற்றிச்சுற்றி ஒரு விளக்கமற்று! பார்த்ததும், ஏதோ கோணல்கோணலாகக் கோடுகளைப் போட்டிருப்பது போலத்தான் தோன்றுகிறது.

விளக்கமற்று இருக்கிறது திட்டம் என்பதனை இந்தக் கேலிப் படம் எடுத்துக்காட்டுகிறது.

அதே இதழில், நாலாவது திட்டம் மக்களின் தேவையைச் சரியாகக் கணக்கெடுக்காமல், அளவு பார்க்காமல் தைக்கப்பட்ட சட்டைபோல இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் முறையில் கார்ட்டூன் வெளியிடப்பட்டிருக்கிறது.



"But won't you be fattened enough in the next ten years!"

சட்டை தைத்துக்கொண்டு வந்த தையற்காரராக அசோக்மேதா காட்சிதருகிறார். யாருக்காக சட்டை தைக்கப்பட்டதோ, அந்த ஆள் இளைத்த உருவத்தினன்! சட்டையோ மிகப்பெரிது! அவனையே மறைத்துவிடக்கூடிய அளவு பெரிது. அவன் திகைக்கிறான் இத்தனைப் பெரிய சட்டையா என்று! அமைச்சர் சொல்கிறார் – அளவு பார்க்காமல் சட்டை தைத்தவர்– இருந்தால் என்ன! அடுத்த பத்து வருஷத்தில் பெருத்துவிடமாட்டாயா! இந்த சட்டை அப்போது சரியாக இருக்கும்!– என்று. அந்த இலட்சணத்தில் விவரம்புரியாமல் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்று இதழ் கேலி செய்கிறது, திட்டம் தீட்டிடும் காங்கிரசாட்சியினர்.



'இந்து' பத்திரிகை காங்கிரசின் தலைவர்கள் இருமினாலும், தும்மினாலும், டாக்டருடன் ஓடிச்சென்று சிகிச்சை செய்திடும் நண்பனாக இருந்து வருகிறது. அந்த இதழினாலேயே தாங்கிக் கொள்ள முடியவில்லை, நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்டுள்ள விதம். கேலிச்சித்திரம் வெளியிட்டிருக்கிறது.

நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விவரம் பொறித்த பலகையைக் காட்டி, ஆசிரியர் பாணியில் இந்திராகாந்தி அவர்கள், விளக்கம் அளிக்கிறார்கள். அசோக்மேதாவும், அமைச்சர் சசீன்சவுத்திரியும் உடன் நிற்கிறார்கள். கடுமையான வரிப்பளுவு, பணவீக்கம், போன்றவைகளைத் தோளில் தூக்கிக்கொண்டு 'சாமான்யனுடைய விருப்பம்' என்ற உருவில் காமராஜர் வந்து

நின்று இந்திரா அவர்களைக் கேட்கிறார், "அம்மா! இதிலே எனக்கு உள்ள இடம் எது?"–என்று.

இதனைவிடக் கடுமைமிக்க கண்டனம் எதிர்க்கட்சி எதனிடமிருந்தும் வரவில்லை என்று கூறலாம். நாலாவது திட்டம், சாதாரண மக்களுடைய நலனைக்கருதிப் போடப்படவில்லை; அவன் ஏற்கனவே பல்வேறு பாரத்தைச் சுமந்து தத்தளிக்கிறான். அவனுக்கு இதம் செய்வதாகத் திட்டம் அமையவில்லை என்பதனை இந்தப் படத்தின் மூலம் விளக்கி 'இந்து' இடித்துரைக்கிறது. 'இந்து' இதழ் இடம் பிடிக்கும் வேலையிலேயா இருக்கிறது? எதிர்க்கட்சியா நடத்துகிறது இல்லையே! ஆளுங்கட்சியை ஏத்தி ஏத்தித் தொழுது நிற்கிறது. எனினும் மக்களுக்கு உண்மையை எடுத்துக்கூறத் தவறிய குற்றம் சுமக்க வேண்டி ஏற்பட்டுவிடுமே என்ற எண்ணத்தால் இந்தப் படத்தை வெளியிட்டிருக்கிறது.

ரூபாயின் மதிப்பைக் குறைத்தது மானக்கேடான செயல் என்று எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவிக்கின்றன. அந்தப் பிரச்சனைபற்றி ஆளுங்கட்சி பேசுவது எவ்வளவு கேலிக்கூத்தாக இருக்கிறது என்பதை விளக்க,

"இந்துஸ்தான் டைம்ஸ்" இந்த கார்ட்டூனை வெளியிட்டிருக்கிறது. ஆளுங் கட்சியினரின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் திகைக்கின்றனர்; இது என்ன "கோஷ்டி கானமா"–அல்லது அமளி ஆலாபனையா! என்று. மிக முக்கியமான

பிரச்சினை, நாட்டுப் பொருளாதாரத்துடன் மிகத் தொடர்பு கொண்ட பிரச்சினை, நாணயமதிப்புக் குறைப்பு! இத்தகைய பிரச்சினையிலேகூட ஆளுங்கட்சிக்குள், ஒருமித்த கருத்து இல்லை. ஊருக்கெல்லாம் ஒருமைப்பாடு வேண்டுமென்று வலியுறுத்தும் ஆளும் கட்சியில் ஒருமித்த கருத்து இல்லை. ஆளாளுக்கு ஒரு ஆலாபனையாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது இந்த கார்ட்டூன்.

நாணய மதிப்புக் குறைப்பே கேடானது; அதிலும், அதைத் தொடர்ந்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிட்டால், நிலைமை மேலும் மோசமாகிவிடும் என்று எதிர்க்கட்சியினரும், பொருளாதார நிபுணர்களும் கூறுகின்றனர். அவர்கள் மீது ஆத்திரம் உமிழ்கின்றனர் ஆளவந்தார்கள். தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருவதாக எக்காளமிடுகின்றனர். ஆனால் நிலைமை எப்படி இருக்கிறது? இதோ ஒரு படம்!– அதே இதழில் வெளிவந்தது.

நாணய மதிப்பைக் குறைத்த பிறகு உள்ள பொருளாதார நிலைமையை, கட்டுக்கடங்க மறுக்கும் ஒரு குதிரையாகக் காட்டி, அதனை ஒரு கொட்டிலில் போட்டுப் பூட்டி வைத்திருந்தனர் என்றும் எடுத்துக்காட்டி, கொட்டிலில் பூட்டு போடப்பட்டதே தவிர, கதவு போதுமான அளவு இல்லாததையும் காட்டி, குதிரை கொட்டிலை விட்டு வெளியே ஓடிவிட்டதைக் காட்டி குதிரை பறிபோன பிறகு கொட்டிலைப் பார்வையிடும் புத்திசாலிகளாக, அசோக்மேத்தாவையும் சசீன் சவுத்ரியையும் சித்திரித்துக் காட்டி, காங்கிரசாட்சியின் போக்குக்கு பலத்த அடி கொடுத்திருக்கிறது இதழ்! ஏன்? எதிர்க்கட்சி என்பதாலா? இல்லை! நாட்டுக்கு

உண்மையை எடுத்துக்கூறியாக வேண்டும் என்ற பொறுப்பினை உணருவதால்.



அதே இதழில் இது. பணவீக்கம் வெறிநாயாகவும், அதைக்கட்டுப்படுத்த போடப்பட்டுள்ள சயிறாக விலைவாசியை யும் சித்திரித்துக் காட்டி, விலைவாசியைக் கட்டுப்படுத்தத் தவறியதால், காங்கிரசாட்சியைக் கீழே தள்ளிவிடும் அளவுக்குத் துள்ளி, பணவீக்கம் எனும் வெறிநாய், மக்களைக் கடிக்க ஓடுவது போலவும், ஆட்சியாளர், "கவலைப்படாதே! நான் கயிற்றைப் பிடித்துக்கொண்டிருக்கிறேன்" என்று கூறுவது போலவும், படம் தரப்பட்டிருக்கிறது.

பணவீக்கத்தால் மக்கள் தாக்கப்படுகிறார்கள், அதைத் தடுத்திடும் ஆற்றலை அரசு இழந்துவிட்டது என்பது கார்ட்டூனின் கருத்து. ஆற்றலை இழந்துவிடட அரசு மீண்டும் அரசாள என்ன உரிமை இருக்கிறது? என்ற கேள்வியை எவர் மனதிலும் எழுப்பிவிடக்கூடிய விதமான படம்! எதிர்க்கட்சி தீட்டியது அல்ல!

இந்நிலையில், பெரிய மோசடிகளைத் துணிந்து செய்து கொண்டு வருகின்றனர், முதலாளிகள். அவர்களை அடக்கிட காங்கிரஸ் அரசு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை போதுமானதாக இல்லை. 'ராட்சத' சுறா மீன் –கப்பலையே கவிழ்க்கத்தக்கதான பெரிய சுறா மீனைப் பிடிக்க சாதாரண கயிற்றை வீசுவது எப்படியோ அப்படி இருக்கிறது, மோசடி செய்திடும் முதலாளி களை அடக்கிட காங்கிரஸ் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை.

ஜெயந்தி கப்பல் கம்பெனி என்ற அமைப்பின் மூலம் சர்க்காரை மோசடி செய்யத் துணிந்த டாக்டர் தேஜா மீது நடவடிக்கை எடுக்க இந்த காங்கிரஸ் அரசு தவறிவிட்டது. பெரியதோர் மோசடி நடந்திருக்கிறது. என்றாலும், பழமொழி சொல்லுவார்களே, கடப்பாறையை விழுங்கிவிட்டு சுக்குக் கஷாயம் சாப்பிடுவது போல என்று, அதுபோல தேஜா பற்றிய

நடவடிக்கை இருக்கிறது என்பதைக் காட்ட வெளியிடப்பட்ட கார்ட்டுன், இங்கு தரப்படுகிறது.



இந்த கார்ட்டுன் கல்கத்தா 'அமிர்த பஜார் பத்திரிகா வில் வெளிவந்ததாகும்.

இந்த கார்ட்டுன் கல்கத்தா 'அமிர்த பஜார் பத்திரிகா'வில் வெளிவந்ததாகும்.

கயிறு வீசுபவர், அமைச்சர் சஞ்சீவி ரெட்டியார்!

உள்நாட்டிலே நிலைமை இவ்விதம் இருக்கிறது. உருப்படியான முறையிலே எந்தப் பிரச்சினையையும் தீர்த்துவைக்க இயலவில்லை. பற்றாக்குறை வளருகிறது. பஞ்சம் மிரட்டுகிறது. பிணம் விழுகிறது. கழுகு வட்டமிடுகிறது! இவைகளைக் கவனித்து, தக்க நடவடிக்கை எடுத்து, அதிலே வெற்றிகாண முயற்சிக்காமல், உலகுக்கு உபதேசங்களை வழங்கிக் கொண்டு வருகிறது. இந்தப் போக்கை எதிர்க்கட்சிகள் கண்டிக்கும்போது, நல்லது செய்தால் கூடவா கண்டிக்க வேண்டும்? உலக சமாதானம் வேண்டும்! ஒரு நாடு மற்றோர் நாட்டைத் தாக்கக்கூடாது என்று காங்கிரசாட்சி கூறுகிறது, தவறா? அமெரிக்கா தவறு செய்திடும்போது கண்டிப்பது குற்றமா? போர் நிறுத்தம் காண திட்டம் கண்டறிந்து கூறுவது தவறா?— என்று அடுக்கிக்கொண்டு போகின்றனர் ஆட்சியாளரின் அரவணைப்பிலே சுகம் காண்பவர்கள்.

எதிர்க் கட்சிகள் கேட்பதெல்லாம் நமது வார்த்தைக்கு, யோசனைக்கு, திட்டத்துக்கு, உலக நாடுகளிலே மதிப்பு ஏற்படத்தக்க விதமாக நாம் நடந்துகொள்கிறோமா என்பதுதான்.

நமது யோசனைகளை ஏற்றுக்கொள்ளவும், அதற்கு மதிப்பளிக்கவும், எந்த நாடாவது தயாராக இருக்கிறதா என்பதுதான்.

வியட்நாம் பிரச்சினை பற்றி, இந்திராகாந்தி அவர்கள் ஒரு யோசனை கூறினார்கள்.

அந்த யோசனையை அமெரிக்காவும் ஏற்கவில்லை, வியட்நாமும் அதற்கு மதிப்பளிக்கவில்லை.

போதாது என்று, அம்மையார் அவர்கள் தமது திட்டத்தை எடுத்துக்கொண்டு சோவியத் ரஷியா சென்றார்கள். அங்கு சென்று திட்டத்தை சோவியத் தலைவரிடம் நீட்டியபோது, அவர் காட்டிய மரியாதையை மிக நாசூக்காக 'இந்துஸ்தான் டைம்ஸ்' படம் போட்டுக் காட்டிற்று.



அம்மையார் தந்திடும் திட்டத்தை, மெத்த நன்றி! என்று கூறி, சோவியத் தலைவர் ஏற்றுக்கொள்கிறார்! எதிலே! குப்பைக் கூடையில்!! கவனித்தால், கேலி புரிகிறதல்லவா?

தேவையில்லாத விஷயங்களைக் கவனிப்பது, நிலைமையை உணராமல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது, செல்லுமா

என்பதறியாமல் செலுத்துவது போன்றவை, ஒரு அரசு பக்குவம் பெறவில்லை என்பதை எடுத்துக் காட்டுவனவாகி விடுகின்றன.

உலக நாடுகள் பலவற்றிலே, நம் நாட்டு பஞ்சம், கடன் தொல்லை, குழப்பம், ஆகியவை பற்றிய பேச்சு மிகுந்திருக்கும் நேரம். எல்லா நாடுகளிடமும் உணவும் பொருளும், கடனாகவும் மானியமாகவும் நாம் கேட்டுப் பெறும் நிலைமை. இந்த நிலைமையில், சர்வதேசப் பிரச்சினைகளிலே தலையிட்டாக வேண்டும், பல நாடுகளைக் கூட்டி மாநாடு நடத்த வேண்டும். திட்டங்களைத் தயாரித்துத் திக்கெட்டும் அனுப்பவேண்டும். நடுநிலைமைக் கொள்கைக்காக நாடு பலவற்றை இணைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வத்தை அடக்கிக்கொள்ள வேண்டாமா? காணோமே!

அமெரிக்காவிடம் கடனுக்கு மேல் கடனாக வாங்கியபடி இருப்பதால், பிரதம மந்திரி அம்மையாரின் நிலைமையே எப்படி ஆகிவிட்டிருக்கிறது என்பதை 'அமிர்தபஜார் பத்திரிகா' விளக்கி இருக்கிறது இந்த கார்ட்டூன் மூலம்.

கடன் மூட்டைக்குள்ளே அம்மையார் போட்டடைக்கப்பட்டு விட்டுள்ளார்கள். கை மட்டுமே வெளியே தெரிகிறது. அந்தக் கரத்திலே ஒரு அறிவிப்புப் பலகை கடன்களை எல்லாம்

ஒழித்துக்கட்ட அதிகக் கடன் கேட்கிறோம் – என்று அதிலே எழுதப்பட்டிருக்கிறது. நிலைமை இது! எதிர்க்கட்சிகள், காங்கிரசாட்சி, நாட்டைக் கடன்கார நாடாக்கி விட்டது என்று கூறும்போது எவ்வளவு ஆத்திரம் வருகிறது. பிரதமமந்திரியாரை, மூட்டைகட்டிவிட்டிருக்கிறது கேலிப்படத்தில்!! என்ன செய்வார்கள்? ஓ! ஓ! எதிர்க்கட்சியின் எதிர்ப்பு என்று இதற்குக் கூற முடியுமா!!

"You can come out sir, there is no firing — those are Diwali crackers!"

இன்றைய அமைச்சர்களைப் பற்றிய மதிப்பீடு எப்படி இருக்கிறது என்பதை விளக்கிட 'டைம்ஸ் ஆப் இந்தியா' வெளி யிட்ட படங்கள் இவை. நாட்டை ஆளும் தகுதி எமக்கன்றி வேறு எவருக்கு உண்டு என்று கேட்டு மார்தட்டுகின்றனர். இங்கு இதழ் தரும் குட்டுகளைப் பார்த்தால், பரிதாபமாகக் கூட இருக்கிறது.

வெடிச்சத்தம் கேட்டு அமைச்சர் மிரண்டு போய் மேஜைக்கு அடியிலே ஒளிந்து கொள்கிறாராம்! உயர் அதிகாரி சத்தத்திற்கான காரணத்தைக் கண்டறிந்த பிறகு, அமைச்சரை வெளியே வரச்சொல்லுகிறார்! "ஐயா தாங்கள் வெளியே வரலாம்! துப்பாக்கிச் சூடு ஒன்றும் இல்லை. கேட்ட சத்தம் தீபாவளி பட்டாசுச்சத்தம் வேறொன்றுமில்லை"– என்று அமைச்சருக்குத் தைரியம் கூறுகிறார்! அத்தனை அஞ்சா நெஞ்சம் அமைச்சருக்கு!!

பட்ட மரம்! அதன்கீழ் பஞ்சத்தால் அடிபட்ட மக்கள்! அதிகாரியும் பணியாளும் புடைசூழ அமைச்சர் வந்திருக்கிறார் மக்களைக்காண. இந்த ஆண்டு கொஞ்சம் கஷ்டமான ஆண்டு" என்று, விளக்கம் தந்து மக்களின் விசாரத்தை போக்கப் பேசுகிறார் அமைச்சர். "இல்லை ஐயா! இந்த ஆண்டு கெட்ட ஆண்டு அல்ல. நல்ல ஆண்டு! இந்த ஆண்டுதான், முதன் முதலாக மந்திரிகள் இந்தப் பக்கம் விஜயம் செய்திருக்கிறார்கள்" என்று பேசுகிறான்; ஏழை! பேச்சா அது? இடித்துக் காட்டுகிறான். தேர்தல் நேரமாகப் பார்த்துத்தானே இந்தத் திருவாளர்கள் தலை காட்டுவார்கள் என்பதனை.



He's the luckiest among us — there have been no charges at all against him except that he is incompetent and inefficient.



Don't jeer at me. Jeer at him— He wrote this speech!

அமைச்சர் சொற்பொழிவு ஆற்றுகிறார்! சொற்பொழிவைப் படிக்கிறார். கேட்போர் கேலிச் சிரிப்பொலி எழுப்புகின்றனர். கோபம் அமைச்சருக்கு! என் பேச்சையா கேலி செய்கிறீர்கள் என்று கேட்டாரா? இல்லை! என்னைக் கேலி செய்து சிரிக்காதீர்கள்; இந்த பிரசங்கத்தை எழுதிக்கொடுத்தாரே, அதோ அந்த ஆசாமி அவரைக் கிண்டல் செய்யுங்கள்!'' என்று கூறி, அதிகாரியைச் சுட்டிக்காட்டுகிறார். அத்தனை அறிவுத்தீட்சணியம்! சொந்தச் சிந்தனை! பேசுபவர் அமைச்சர்; பேச்சு தயாரிப்பவர் அதிகாரி!! இது ஆட்சியின் நிலைமை!!

நாலு மந்திரிமார் கூடி பேசுகின்றனர். அதிலே ஒரு அமைச்சரைக் காட்டி மற்றொருவர் சொல்லுகிறார், 'நம்மிலேயே இவர்தான் மிகுந்த அதிர்ஷ்டசாலி! இவர் மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லை; திறமையற்றவர் என்பது தவிர! திறமைக்குறைவு என்ற குற்றம் சாட்டப்பட்டவர்தான், எல்லோரைக் காட்டிலும் அதிர்ஷ்டக்காரர் என்றால், மற்ற மந்திரிகள் மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் இருந்திருக்கக்கூடும் என்பதை யூகித்துக்கொள்ளலாம் அல்லவா! அவ்வளவு ஒழுங்கானவர்கள் இன்றைய அமைச்சர்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது, கேலிப்படம்.



"Honestly, we still cherish your memory, Pop—er., Bapuji !"

முன்னதைவிட மோசமானது இந்தப் படம் காட்டிடும் நிலைமை. இது 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழில் உள்ளது.

அக்டோபர் 2! புனிதமான நாள்! மதுவிலக்கு அமுலாகும் நன்னாள்! மகாத்மாவின் திருஉருவப் படத்தின் முன்பு நிற்கிறார் ஒரு காங்கிரஸ் தலைவர்! ஒயிலாக நிற்பதாக எண்ணம்! ஆனால், பாவம் தள்ளாடும் நிலையிலே இருக்கிறார்! கையிலே டிரான்சிஸ்டர் ரேடியோ! ஜேபியில்? கீதை அல்ல! பெண் படம் போட்ட காம இச்சையைத் தூண்டும் இதழ். மேஜை மீது? நியூயார்க்! பாரிஸ்! ரோம்! இங்கெல்லாம் அவர் போய் வந்தவர் என்பதைக் காட்டும் தோல் பை! பக்கத்தில்? வெளியே சொல்லாதீர்கள் வெட்கக்கேடு! விஸ்கி பாட்டில்!!

அமெரிக்க நாட்டு நிருபரொருவர் பஞ்சம் தலைவிரித்தாடும் பீகார் பகுதி சென்றபோது காங்கிரசின் தலைவர்கள் சிலர் மதுபானம் அருந்திக்கொண்டு மந்தகாசமாகக் கிடந்தனர் என்று எழுதினாராம்! இந்திரா காந்தியாரிடம் நிருபர்கள் கேட்டதற்கு, நேரடியான பதில் கிடைக்கவில்லை! அவ்விதம் செய்தவர்கள் காங்கிரஸ்காரரராக இருக்க முடியாது என்று கூடச் சமாதானம் கூறவில்லை. அப்படி எழுதினவர் உண்மையையே எழுதுபவரா!– என்று ஒரு புதிர்போட்டு அனுப்பிவிட்டார்கள்.

காந்தியார் படத்தின் முன்பு நிற்கும் காங்கிரஸ்காரர் ஒருவருடைய நிலைமையைப் படம் போட்டுக் காட்டியிருப்பது அமெரிக்க இதழ் அல்ல!!

சுவற்றிலே தொங்க விடப்பட்டிருப்பது என்ன? குடி மிகப்பெரிய கேடு! காந்தியாரின் மணி மொழி! மேஜை மீது! விஸ்கி பாட்டில்! தலைசுற்றும்–அவருக்கு அல்ல–பழக்கப்

THE EMPTY BOWL



பட்டவராகவும் துணிந்த பேர்வழியாகவும் அவர் இருப்பார்—நமக்கு—இப்படிப்பட்ட நிலையில் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் இருக்கின்றனரே என்று! இருக்க முடியுமா என்றுகூடச் சந்தேகம் தோன்றும். ஆனால் இருக்கிறார்கள் என்பதால்தான் இந்துஸ்தான் டைம்ஸ் இந்தப் படம் போட்டுக் காட்டுகிறது.

நாட்டு நிலைமை இந்த இலட்சணத்தில் இருக்கிறது. பேச்சோ, பொறி பறப்பதாக! படுத்துக்கொண்டே ஜெயிப்போம் என்பதாக! எதைக்காட்டி? எடுத்துக்காட்டப்பட்டுள்ள இந்தப் படங்களைக் காட்டியா? இந்தப் படங்கள் காட்டிடும் நிலைமைகளைக் காட்டியா? இதோ ஓர் காட்சி! படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்று பேசுகிறாரே அமைச்சர் சுப்பிரமணியம் அவர் தெரியும் காட்சி. கப்பரையும் கையுமாக நிற்கிறார்!

ஐயோ! பசி—அவர் கெஞ்சுகிறார்! யார் எதிரே நின்றுகொண்டு? அமெரிக்க குடிஅரசுத் தலைவர் எதிரில். தலையைச் சொரிந்து கொண்டு கவலைப்படுகிறார் அமெரிக்கத் தலைவர்! ஏன்? பெரிய கொப்பரையிலிருந்து எடுத்தெடுத்து சுப்பிரமணியத்தின் கொப்பரையை நிரப்புகிறார்— பலதடவை! போதவில்லை போதவில்லை! பசி! பசி! என்றே அமைச்சர் கேட்டபடி இருக்கிறார். ஏன்? கொப்பரையைக் கவனித்தால்

"Not me—ask that Sahib first!"

காரணம் புரியும். அடியிலே ஓட்டை! ஊற்றுவது கீழே போய் விடுகிறது! ஓட்டைக் கொப்பரையிலே எவ்வளவு ஊற்றினால்தான் என்ன பலன் என்று அமெரிக்கத் தலைவர் திகைக்கிறார்.

அமெரிக்க உதவி மேலும் மேலும் கிடைத்தாலும், ஒழுங்கான நிர்வாகம் இல்லாததாலே, உருப்படியாகவில்லை என்ற பாடத்தைக் காட்டுகிறது, படம்!

இந்த மாபெரும் சாதனை இருக்கிறதே ஓட்டைக் கொப்பரையை ஏந்திக்கொண்டு, "ஐயா! பசி!" என்று கேட்டிடும் மகத்தான சாதனை இதற்காகப் பாராட்டித்தான் மக்கள் ஓட் அளிக்க வேண்டும் என்று அமைச்சர் எதிர்பார்த்து படுத்துக்கொண்டே ஜெயிப்போம் என்று பேசுகிறார் போலும்!

போகவிலாஸ் ஓட்டல் வாசற்படி! உள்ளே இருந்து வருகிறார் அமெரிக்க அதிபர் ஜான்சனும், சோவியத் தலைவர் கோசிஜினும்! கந்தல் உடை! நீட்டிய கரம்! பரிதாப நிலையுடன்! ஐயா! காசு!– கேட்டபடி நிற்பது யார்? படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்று பேசுகிறாரே, அமைச்சர்– அவரேதான்! என்ன பதில் கிடைக்கிறது? ஜான்சன், கோசிஜினைக் காட்டிக் கூறுகிறார் "முதலில் அதோ அந்த ஐயாவைக் கேள்!" – என்று. கோசிஜின் ஜான்சனைக் காட்டி, "இந்த ஐயாவை முதலிலே கேள்!" என்கிறார்.

நாட்டு நிலைமை இன்று இது. இந்த நிலைமைக்கு நாட்டைக் கொண்டு வந்து விட்டுவிட்டவர்கள்தான், நாடாளும் தகுதி எமக்கன்றி வேறு எவருக்கு உண்டு என்று கேட்கின்றனர்.

இவர்களின் தகுதி திறமை பற்றி எதிர்க்கட்சி ஏடுகள் அல்ல, காங்கிரசுக்கு ஆதரவு தேடிடும் ஏடுகளே கொடுத்திடும் நற்சான்றுகளிலே சிலவற்றைத்தான் இங்கு தர முடிந்திருக்கிறது.

நானும், ராஜாஜி, காயிதேமில்லத் ஆகியவர்களும் ஒரு கழுதை மீது சவாரி செய்வதாக, 'விகடன்' படம் போட்டுக் காட்டிற்று. நண்பர்கள் வருத்தப்பட்டார்கள்! நான் சமாதானம் சொன்னேன்–கழுதை மீது சவாரி செய்வதாகத்தானே படம்! கழுதையாக சித்திரிக்கவில்லையே!– என்று. இப்படி ஏதாவது ஒரு சமாதானம் சொல்லி விட்டால் போதுமா என்று சலித்துக் கொண்டார்கள்.

விகடன் அதிபர், காங்கிரஸ்காரர்! ராஜ்யசபை உறுப்பினர். அவர் எதிர்க்கட்சிகளைக் கேலிப்படம் மூலம் கேவலப் படுத்துகிறார், பண்பு அல்ல என்றாலும், அது அவர் தம்முடைய கட்சிக்காகச் செய்திடும் 'சேவை' என்று கருதிக் கொள்ளக்கூடும். அவர், என்னிடம் இதைத்தான் எதிர்பார்க்கலாம் என்று கூறும்போது, அவரிடம் வேறு எதிர்பார்க்க நமக்கு ஏது உரிமை!

மலக்குழி என்று போர்டு போடப்பட்டுள்ள இடத்திலே நின்று கொண்டு, மல்லிகை மணம் வீசக் கூடாதா என்று கூறுவதும் எதிர்ப்பார்ப்பதும் மிகப்பெரிய தவறு, மதியீனம் அல்லவா!

காங்கிரசுக்கு சேவை செய்வதாக எண்ணிக்கொண்டு நம்மைக் கேலி செய்திடுவது இருக்கட்டும். நாட்டுக்காக மக்களுக்காக உண்மையை உரைத்திடத்தான் வேண்டும் என்ற நோக்கத்துடன் காங்கிரசாட்சியின் கோணல்கள் பற்றி 'தேசிய' இதழ்கள் வெளியிட்டுள்ள கேலிச் சித்திரங்களைப் போட்டிருப்பதற்கு என்ன செய்வது என்று கேட்டுவிட்டு, அந்த கார்ட்டூன்களில் சிலவற்றை இங்கு வெளியிட்டிருக்கிறோம்.

— காஞ்சி

பொங்கல் மலர், *1967*

தேசீயப் பத்திரிகைகள்!

– பாரதிதாசன்

தமிழ்நாட்டின் தேசீயப் பத்திரிகைகளின் இன்றைய போக்கு எப்படி இருக்கிறது என்பதுபற்றி என் அபிப்பிராயத்தை விளக்கும்படி என் தோழர்கள் சிலர் என்னை கேட்டிருக்கிறார்கள்.

○○○

ஏற்கனவே போட்ட திட்டபபடி சங்கரன் வீட்டின் எதிரில் பஸ் வந்து நின்றது. இதில் சங்கரன் பந்துக்கள் சுமார் பத்துப் பேர்களும், சங்கரன் மனைவியும், சங்கரனின் தாயும், ஏறி உட்கார்ந் தார்கள். திருவிழா நடக்கும் ஊர் சுமார் 40 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. பஸ் புறப்பட்டது. சங்கரன் தன் தாயை நோக்கி ஆரம்பித்தான்.

ஏனம்மா எனக்குப் பால் கொண்டுவந்து வைத்தீர்களே, அந்தச் செம்பு பொத்தற் செம்பு என்பதை நீங்கள் கவனிக்கவே இல்லை போலிருக் கிறது என்று வெகு சாந்தமாகவும் மரியாதை கோணாத முறையிலும் கேட்டான்.

தாய்க்குத் திடுக்கென்று எடுத்துப் போட்டது. ஐயோ அப்பா நான் கவனிக்கவே இல்லையே, பால் எல்லாம் ஒழுகிவிட்டதா என்று வருந்தினாள் அவள்.

சங்கரன்:– பக்ஷணம் சாப்பிட்ட பின் பாலைப் பார்த்தேன். எல்லாம் மேஜைமேல் ஓடியிருந்தது. செம்பில் துளிகூட இல்லை. நான் பக்ஷணம் சாப்பிடுவது கொஞ்சம், என் பசிக்கு ஆதரவு பால்தான், ஏன் உங்களுக்குத் தெரியாதா? தெரிந்ததுதானே அம்மா.

தாய்:– ஆம் அப்பா நான் கவனிக்கவேயில்லை பசியாக இருக்கிறாயே என்ன பண்ணலாம்!

சங்கரன்:– முதலில், பிள்ளையின் நன்மையில் தாய்க்கு அக்கரையிருக்க வேண்டும். எப்போது பார்த்தாலும் மருமகள் மேலும், மற்றவர்கள் மேலும் வால் வால் என்று கத்தினால் மாத்திரம் போதுமா? இரண்டாவது, அடிக்கடி உபயோகிக்கும் பாத்திரத்தின் நிலையை கவனிக்க வேண்டும். அது சமுசாரிக்கு அழகு. ஏதோ குடும்பத்தில் பெரிய அநுபவசாலிபோல் நீட்டினால் மாத்திரம் போதுமா? மூன்றாவது, பிள்ளை சாப்பிட்டு முடித்தானா என்பதைக் கடைசி வரைக்கும் இருந்து கவனிக்க வேண்டும். அவன் சாப்பிட்டால் என்ன, ஒழிந்தால் என்ன என்ற மனோபாவம் கூடாது. பலகாரம் வைத்தீர்கள், அதில் ஓர் இட்லி கூடச் சாப்பிட வில்லை. பாலைப் பார்த்தேன், ஒரு துளி? பசி காதை அடைக்கிறது.

இந்த வார்த்தைகளை யெல்லாம் சங்கரன் பஸ்ஸிலிருந்த தன் பந்துக்களில் ஒவ்வொருவரையும் மாற்றி மாற்றி முன்னிலைப் படுத்திச் சொல்லிக்கொண்டிருந்தான். அனைவரும் சங்கரன் தாயை வெறுத்தார்கள். சங்கரனை ஆதரித்துப் பேசினார்கள். அப்போது சங்கரன் தாயார் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

பஸ் அடுத்த ஊரில் ஓர் விறகுக் கடையண்டை நிற்கும்படி சங்கரன் சொன்னான். அது விறகுக் கடை என்பது சங்கரனுக்கு நன்றாய்த் தெரியும்.

விறகுக் கடையில் மனிதர் நின்றார்கள். சங்கரன் கடைக்காரனைப் பார்த்துக் காப்பி இருக்கிறதா என்று கேட்டுவிட்டு, என் தாயார், எனக்குப் பொத்தற் செம்பில் பால் கொண்டுவந்து வைத்தார்கள். அந்த அநியாயக்காரி அப்படிச் செய்ய நினைத்தால் அந்த ஆபத்திலிருந்து எப்படி நான் தப்ப முடியும்! தாயை நம்பவேண்டுமா? நம்ப வேண்டாமா? பலகாரமும் சாப்பிடவில்லை பாலை நம்பி. செம்பில் பால் துளிகூட இல்லை என்று சொன்னான். அங்கிருந்த அனைவரும் சங்கரன் தாயைக் கொடுங் கண்ணால் ஒருமுறை பார்த்துவிட்டு, இந்தப் புண்ணியவதிதான் உமது தாயோ என்று கேட்டார்கள். தாய்க்கு இதயம் பிளந்து விடும் சமயம் பஸ் புறப்பட்டது.

சங்கரன் தாய் சொன்னாள்; நான் வேண்டுமென்று செய்யவில்லை அப்பா.

இந்த வார்த்தையை அவள், அடிமை ஒருவன் ஆண்டானிடம் மன்னிப்புக் கேட்கும் முறையில் சொன்னாள். சங்கரனும், அம்மா அதனால் இப்போது என்ன முழுகிப்போய்விட்டது என்று வெகு வினயமாகப் பதில் கூறினான்.

பஸ்ஸில் எண்ணெய் ஆகிவிட்டதால் அடுத்த நகரின் ஷெட்டில் இருந்த கடையில் பஸ்ஸை நிறுத்தினான் டிரைவர். சங்கரன் அங்கிருந்த கூட்டத்தை நோக்கி, இங்கே காப்பி அகப்படுமா என்று கேட்டான். சங்கரன் எதிர்பார்த்தபடியே "கிடைக்காது" என்ற பதில் கிடைத்தது. இதோ இந்தம்மாதான் என் தாயார். காலையில் என்னைப் பட்டினி போட்டு விட்டார்கள் என்று தொடங்கி வெகு உருக்கமாக முடித்தான். தன் தாய் ஓர் அன்பற்ற மிருகம் என்ற இந்தப் பிரசாரத்தின்பின் பஸ் புறப்பட்டது.

அடுத்த ஊர்ச் சத்திரத்தில் அனைவரும் இறங்கினார்கள். போஜனம் முடிந்தது. சங்கரன் நன்றாகச் சாப்பிட்டான். தான் சாப்பிடவே இல்லையென்றும், அதற்குக் காரணம் காலைப் பட்டினி என்றும், பட்டினிக்குக் காரணம் தன் தாயின் சூழ்ச்சி யென்றும் அடுக்காகப்பேசி அங்கிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு, ஓர் தீய அன்னைக்கு உதாரணமாகத் தன் அன்னை யைக் காட்டி நிரூபித்தான். பஸ் புறப்பட்டது.

பஸ்ஸிலிருந்த சொந்தக்காரர்கள் சங்கரனின் நிலைமைக்கு வருந்தினார்கள். நடுவழியில் அவனுக்கு மரணம் நேர்ந்துவிடு மல்லவா? தான் செய்தது தப்புத்தானே என்ன பண்ணுவாள் தாய்.

செம்பில் துவாரமிருந்ததைத் தாய் அறியவில்லை. இது உண்மையான சங்கதி, இதுபற்றித்தான் இத்தனை அவமானப்பட வேண்டுமா? என்று அவள் நினைத்தாள். மற்றவர்களிடம் இது பற்றிக்கூறி, அபவாதத்திலிருந்து தன்னை மீட்க நினைத்தாள். அதுதானே முடியாது. தன் பிள்ளைக்குத் தான் செய்தது குற்றமா அல்லவா? சும்மா இருந்துவிட்டாள் தன் சுபாவப்படி!

திருவிழாவுக்குத் தமது ஊரார் எல்லாரும் வந்திருந்தார்கள். அவர்கள் கட்டாக அனைவரும் ஒரு சத்திரத்தில் இறங்கி இருந்தார்கள்.

சங்கரன் தன் ஊராரை எல்லாம் ஒரு முகப்படுத்தி, ஒரு வைத்தியர் இங்கு கிடைப்பாரா என்று கேட்டான். "இல்லை", என்று மாத்திரம் அவர்கள் சொன்னார்கள்; ஏன் வைத்தியம் என்று அவர்கள் கேட்கவில்லை ஏன் என்று கேளுங்கள் என்று சங்கரன் சொன்னான். எதற்காக வைத்தியர் என்று அவர்கள் கேட்டார்கள். கதையை ஆரம்பித்தான் சங்கரன். ஒருவாறு முடித்தான். தன் தாய்மேற் பழியை சுருக்கமாக முடித்துவிட்டதாக நினைத்தான். மேலும் சொல்லுகிறான்; என்னைப் பட்டினி போட வேண்டும் என்ற நோக்கத்தோடு பொத்தற் செம்பில் பாலை வைத்தாள் தாய். பெற்றவளாயிருந்தால் அப்படிச் செய்வாளா, என் உடம்பின் நிலை இவளுக்குத் தெரியாததல்லவே?

காலைப் பட்டினியால் என் உடல் தத்துக் குத்தலாயிற்று. என் பந்துக்கள் இதோ இருக்கிறார்கள். இவர்களில் ஒருவராவது என் தாயின் அட்டூழியத்தை ஆதரிக்கிறார்களா? கேளுங்கள். அது போகட்டும்.

அங்கொரு கடையில் பலர் கூடி இருந்தார்கள். என் தாயார் செய்கையைக் கூறினேன். எவராவது அவள் செய்தது சரி என்று சொல்வார்களா? அந்த நகர மக்களில் யாராவது இவளைத் தூற்றாமல் இருந்தார்களா? சத்திரத்தில் ஆயிரக் கணக்கான மக்களிடம் சொல்லிக் காட்டினேனே, அவர்களில் இவளை எவன்தான் காறி உமிழவில்லை? உங்களில் யாருக்குத்தான் பிடிக்கிறது இவள் செய்கை. என்மீது உங்களுக்கெல்லாம் இத்தனை இரக்கம் ஏன் உண்டாகிறது

என்று கூறி முடித்தான். இதைக் கேட்டுக் கொண்டிருந்தவர் களில் சிலர், அந்தம்மாவின் வாக்குமூலம் என்ன என்று கேட்டார்கள்.

தாய்: பொத்தற் செம்பிலே பால் வைத்ததாகச் சொல்லுகிறான் பிள்ளை.

சிலர்: உங்கள் பிள்ளைதானே

தாய்: ஏன் கேட்கிறீர்கள்?

சிலர்: பின் என்ன? பெற்ற தாயாயிருந்தால் இந்தப் பிள்ளை சொந்தத் தாயைப் பற்றி இவ்வளவு பேர் அறிய – இத்தனை ஊர் அறிய உங்கள் மீது பழி கூறித் திரிவாரா?

தாய்: நான் பெற்றால் என்ன பெறாவிட்டால் என்ன அவன் என் பிள்ளைதான்.

சிலர்: உன் வயிற்றில் பிறந்த பிள்ளையா?

தாய்: இது என்ன கேள்வி?

சங்கரன்: இவள் என்னைப் பெற்றவளாயிருந்தால் இப்படிச் செய்வாளா? என் மாற்றாந்தாய் அவள்.

சிலர்: ஐயோ அந்தம்மா உன்னை விலக்கவில்லையே, அந்தம்மா உனக்குச் செய்ததுதான் என்ன? பொத்தற் செம்பில் பால்வைத்ததாய்ச் சொல்லுகிறாய். தாயினிடம் காட்டவேண்டிய மரியாதை, அன்பு, பொறுப்பு ஒன்றுமே கிடையாது.

சங்கரனுக்குக் கோபம் வந்துவிட்டது உங்களை எல்லாம் ஞாயம் கேட்க வரவில்லை என்று கூறினான். ஊராருக்கு உணர்ச்சி சிறிது உண்டாகி வருவது பற்றி அவனுக்கு ஏற்பட்ட வருத்தம் சொல்ல முடியாது.

பஸ் ஊருக்கு வந்து சேர்ந்தது. தாய் வீட்டில் நுழைந்தாள். அவள் தன் பிள்ளைக்குப் பால் வைத்த செம்பு அப்படியே மேஜைமேல் இருந்தது. அதில் தண்ணீரை ஊற்றிப் பரிசோதித்தாள். செம்பில் பொத்தல் இல்லை.

○○○

இனிமேலாவது தேசீயப் பத்திரிகைகள் சங்கரன்போல் இராமல் தமிழ்நாடு என்னும் தாயின் மடியில் பொறுப்போடும் அன்போடும் தொண்டு செய்க.

– போர்வாள்

02.11.1947

‘தமிழ்நாடு’ பத்திரிகையும் ஆதிதிராவிடர்களும்

பம்பாயிலிருந்து திரு. சுந்தரராமாநுஜம் அவர்கள் எழுதுவதாவது.

ஜனவரி மாதம் 8ந் தேதி சென்னையில் கூடிய ஆதிதிராவிட மகாநாடு தீர்மானித்த தீர்மானங்களும் விஷயங்களும் நேயர்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அம்மகாநாட்டில் ராயல் கமிஷனை ஆதரித்து தீர்மானங்கள் செய்திருப்பதை முன்னிட்டு ‘தமிழ்நாடு’ பத்திரிகை என்னவோ வாயில் வந்தபடி பேசி ஆதி திராவிடர்களை பயமுறுத்துகிறது. இந்தப் பயமுறுத்தலையும் அறிவோம்.

42வது காங்கிரஸ் மகாநாடு கூடி தீர்மானித்த தீர்மானத்தையும் அத்தீர்மானத்தை புகழ்ந்து பல்லவி பாடிய ஸ்ரீ வரதராஜுலுவையும் 42 வருட காலமாக காங்கிரஸ் ஏற்பட்டு செயத தேசத் தொண்டையும் காங்கிரசால் தேசத்திற்கு ஏற்பட்ட நன்மை தீமை களையும் தலைவர்கள் என்றும் அரசியல்வாதிகள் என்றும் சொல்லிக்கொண்டு திரியும் போலி தேச பக்தர்களையும் அவர்கள் எட்டினால் தலையைப் பிடி எட்டாவிடில் காலைப்பிடி என்று சமயத்துக்கு சமயம் நேரத்துக்க நேரம் வெளவால் இனத்தைப் போன்று மாறிக்கொண்டு வருவதின் யோக்கியதை யும் இன்னும் இவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்திருக்கும் நன்மைகளையும் அரசாங்கத்தார் ஆதி திராவிடர்களுக்கு செய்திருக்கும் நன்மைகளை யும் ஒழுங்கே ஆலோசனை செய்தே ஆதிதிராவிட தலைவர்கள் ராயல் கமிஷனை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். கோழைத்தனமாய் நிறைவேற்றவில்லை என்பதை ‘தமிழ்நாடு’ பத்திரிகை

அறியட்டும். 'தமிழ்நாடு பத்திரிகை தன்னைவிட சமர்த்தன் இல்லை என்றும் ஆதிதிராவிடர்களைப் பயமுறுத்த முன்வந்து விட்டது. 'தமிழ்நாடு' பத்திரிகையைப் போன்று நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக்கொண்டு வௌவாலைப் போன்று அங்கும் இங்கும் அலைந்து திரியும் நோக்கமுடையவர்கள் ஆதி திராவிடர்கள் அல்லவென்பதையும் ஸ்ரீ வரதராஜுலு அறியட்டும்.

இன்றைய தினம் தென்னாட்டில் வைக்கம் வீரர் திரு. கண்ணப்பர், ஜெ.என்.ராமநாதன் முதலிய ஜஸ்டிஸ் தலைவர்கள் செய்து வரும் அரிய பெரிய ஊழியத்தையும் ஆதி திராவிட சமூகமும் ஏனையோரும் அறிவார்கள். 'தமிழ்நாடு' பத்திரிகை வீண் பறைசாற்றிப் பூனையை வைத்துக்கொண்டு என்னிடத்தில் புலி இருக்கிறது விட்டு விடுவேன் என்று பயங்காட்டுகிறது. உண்மையில் இந்தப் பயமுறுத்தலுக்கு ஆதி திராவிடர்கள் கடுகளவும் பயப்படமாட்டார்கள் என்பது திண்ணம்.

பிராமணர்களின் நயவஞ்சகத்திற்கும் சூழ்ச்சிக்கும் பாமர மக்களை ஏமாற்றும் கபட நாடக சூஸ்திர சங்கீதத்திற்கும் கை தாளம் போடுமிவர் தன்னை மறந்து ஆட்டுக்குட்டியை முதுகின் மேல் போட்டுக்கொண்டு, 'ஆட்டைக் காணோம் குட்டியைக் காணோம்' என்று உளறுவது போல் அறியாமையால் ஆதி திராவிடர்கள் அரசாங்கத்திற்கு தாளம் போடுவதாக பிதற்று கின்றார்.

எதிரியைவிட காட்டிக் கொடுப்பவர்களாலேயே அதிக கேடு வருமென்று வருந்துகிறார், இந்திய தேசத்தையும் தமிழ் மக்களை யும் காட்டிக் கொடுத்தவர்களும் காட்டிக் கொடுக்கின்றவர்களும் அதன் மூலம் வெள்ளையர்க்கு தாசர்களாயிருந்து உத்தியோகமும் பதவியும் பெற்று ஐயாயிரம் ஆராயிரம் பத்தாயிரம் ரூபாய்கள் ஊதியம் பெற்று உயிர் வாழும் நயவஞ்சக கூட்டத்தார் ஆதி திராவிடர்கள் அல்லவென்பதையும் தேசத்தை காட்டிக்கொடுத்து சுயநல புலிகள் வேறு இருக்கும்போது ஆதி திராவிடர்கள் மீது வீண் பழி சாற்றுவது இவரின் அக்கிரமமென்று தான் சொல்வோம்.

ராஜ விசுவாசப் பல்லவி பாடுவது கேடான விஷயமென்றும் ஏளனம் செய்கிறார் தேசபக்தனென்ற முறையில் காங்கிரசின் பெயரால் பிராமணர்கள் செய்யும் அக்கிரமங்களுக்கு ஸ்ரீ வரதராஜுலு, தேசவிசுவாசப் பல்லவி பாடுவது வெட்கக் கேடாக இல்லையா என்றுதான் ஸ்ரீ வரதராஜுலுவைக் கேட்கின்றோம்.

மற்ற இந்துக்கள் ஆதி திராவிடர்களுக்காக சிறை சென்ற தாகவாய் பறை சாற்றுகின்றார் இதை நோக்குங்கால் வீண் பகல் கனவேயாகும். இவர்கள் தங்களை தேச பக்தர்கள் என்றும்

ஜெயிலுக்குச் சென்றவர்கள் என்றும் பாமர மக்களை ஏய்த்து தேசபக்தனென்ற பெயர் பெற்றுக் கொள்ளவும் காங்கிரசின் பேரால் ஏழை மக்களிடத்தில் லட்சக்கணக்கான பணங்களைப் பறித்து அமெரிக்கன் மோட்டார் வாங்கி சவாரி செய்யவும் தேசபக்தர்களென்ற பேரால் ஜனங்களிடத்தில் ஓட்டு பெற்று சட்டசபைக்குள் நுழைந்து அங்கு தன் சுயநலத்திற்கு வேண்டிய காரியாதிகளை முடிக்கவும் சென்றார்களே தவிர தேச நன்மைக்கு ஒன்றும் செய்துவிடவில்லை என்பதையும் ஆதி திராவிடர்களுக் காகச் சிறை செல்லவில்லை என்பதையும் 'தமிழ்நாடு' பத்திரிகைக்கு அறிவுறுத்துகிறோம்.

ராயல் கமிஷனை இந்தியா முழுமையும் பகிஷ்காரம் செய்கிறார் களென்று வீண்வாய்ப் பறைசாற்றுகின்றனர்.

எண்ணிறந்த ஏழை மக்கள் உடுக்க ஆடைகள் இன்றி குடிக்கக் கூழ் இன்றி படுக்க வீடு இன்றி பரிதவிக்கும் இக்காலத்தில் ராயல் கமிஷன் என்றால் என்ன வென்பதை அறியாத பாமர மக்கள் கமிஷனை பஹிஷ்காரம் செய்கிறார்கள் என்று ஓலமிடுவது இவரின் யோக்யதையை விளக்குகிறது.

இதர இந்துக்களுடன் சேர்ந்து வேலையைச் செய்யுங்கள் என்று வற்புறுத்துகிறார் நயவஞ்சகம் நிறைந்த பார்ப்பனர்களின் கொடுமைகளும் ஜாதிகர்வம் கொண்ட இந்துக்களின் இறுமாப்பும் இத்தேசத்தில் தலைவிரித்து தாண்டவமாடு மிக்காலத்தில் எங்ஙனம் சேர்ந்துழைப்பர் யார் சேர்ந்துழைப்பார் என்றுதான் கேட்கிறோம்.

ஆயிரக்கணக்கான துருப்புகளும் ஆகாயக் கப்பல்களும் வைத்திருக்கும் சர்க்கார் ஏன் ஆதிதிராவிடர்களுக்கு ஆலய தரிசனம் செய்ய அனுமதி யளிக்கக்கூடாது என்று கேட்கின்றார். திருவண்ணாமலை கோவில் விஷயமாய் திரு. கண்ணப்பர் தொடுத் திருக்கும் வழக்குக் காரணம் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளும் தர்மகர்த்தாக்கள் தானே. அரசாங்கத்தார் ஆதி திராவிடர்களுக்கு ஆலய பிரவேசம் வேணுமென்று சொன்ன மாத்திரத்திலேயே அரசாங்கத்தார் மதவிஷயத்தில் தலையிடக் கூடாது, மதம் கெட்டுப்போய் விடும், ஜாதி ஒழுக்கம் கெட்டுப் போய்விடும், கோவில் கெட்டுப் போய்விடும்' என்று சர்க்காரைக் கண்டிக்க முற்பட்டு வருவதை ஸ்ரீ வரதராஜலு அறிந்திருந்தும் அரசாங்கத்தார் மீது பழிபோடுவது என்னே.

ஏதோ கொஞ்சம் கல்வியை வெள்ளையர் பரவச் செய் கிறார்கள் என்பதை தான் ஒப்புக் கொள்ளுகிறதாகவும் சொல் கிறார் இவரின் அறியாமையை என்னென்று சொல்வது! இந்தியா தேசமே வெள்ளையர்கள் இந்த நாட்டுக்கு வந்த பின்னர் கல்வி வழங்கப்பட்டு பாமர மக்கள் கல்வி பயின்று வருவதையும்

இத்தேசத்திலுள்ள ஜாதிப் பேய் பிடித்த இந்துக்களும் பிராமணர்களும் அக்கல்விக்கு தடை செய்ய பல சூழ்ச்சிகள் செய்து வருதையும் பாமர மக்கள் அறிந்திருப்பதை இவர் அறியாதவர் போல பேசுவதானது இவரின் தேச பக்தியை விளக்குகின்றது. சுயராஜ்யமே கூடாதென்று ஆதிதிராவிடர்கள் நினைப்பதாக இவர் மனப்பால் குடிக்கிறார். இது வீண் பிதற்றேயாகும். ஆதிதிராவிடர்கள் அவ்விதம் நினைப்பதன்று. அன்னியர் ஆட்சி இருக்கும்போதே பஞ்சமா பாதகமாகிய தீண்டாமையும் ஜாதி துவேஷமும் தலைவிரித்து தாண்டவம் புரிந்தால் சுயராஜ்யம் வந்த பின்னர் எவ்விதமிருக்கும் மென்பதை யோசித்துப் பார்க்கட்டும். மக்கள் சுதந்திரமிழந்து நாயினும் கேடாய் நடத்தும் போது எந்த உண்மை சுதந்திரவாதியும் சுயராஜ்யத்தை ஒப்புக்கொள்வார் என்பது உண்மை. நாட்டில் மக்கள் சுதந்திரம் பெற்றால் அதுவே சுயராஜ்யமென்போம்.

ஆதிதிராவிடர்களின் பழைய செய்கையால் இந்தியாவில் அடிமைத்தனம் அதிகரித்திருக்கிறதென்று ஆகாயக்கோட்டை கட்டுகின்றனர். இந்தியாவின் அடிமைத்தனத்திற்குக் காரணம் மதமும் பகிஷ்காரமும் தீண்டாமையுமென்று உண்மை தேச பக்தர்களும் பெரியோர்களும் சொல்லி வரும்போது வீணே ஆதிதிராவிடர்கள் மீது பழியைச் சுமத்துவது இவரின் பிராமண கங்காணித்தன்மையைக் காட்டுகின்ற தென்றே சொல்லுவோம். தீண்டாமையைப் போக்க காங்கிரசைவிட எந்த சபையும் வேலை செய்துவிடவில்லை என்று சொல்கிறார். இது இவரின் காங்கிரஸ் மயக்கமென்று தான் சொல்லுவோம். காங்கிரஸ் ஏற்பட்டு சுமார் 42 வருடமாகியும் காங்கிரஸ் உண்மையோடு உழைத்திருக்குமாகில் இத்தீண்டாமை இன்னும் தேசத்தை விட்டு ஏன் போகவில்லை என்றுதான் கேட்கின்றோம். இவ்வருடம் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் தீண்டாமை விலக்கை ஒரு வேலையாக எடுத்து செய்ய வேணுமென்றும் ஸ்ரீ.ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் அனுப்பிய தீர்மானம் என்னவாயிற்று என்றும் அதற்கு வரதராஜுலு நாயுடு எவ்வித உதவி புரிந்தார் என்பதும் பார்ப்பனர்களுக்கு பயந்து எல்லோரையும் ஏமாற்றி விட்டார்கள் என்பதும் காங்கிரஸ்க்கு சென்றிருந்தவர் அறியார் போல் பிதற்றுவது ஆச்சரியப்படத்தக்கதாகும். காங்கிரசு இவ்வளவு யோக்கிய திலிருக்கும்போது தீண்டாமைக்கு காங்கிரஸ் பாடுபட்டதென்றால் மனதறிந்து மக்களை ஏமாற்றுவதாகுமா இல்லையா? இந்த நாட்டிலே நீங்கள் இருக்கப் போகிறீர்கள். சீமைக்குப் போய் குடியேற முடியாது என்று சொல்லுகின்றார். இதை நோக்குங்கால் சிரிப்புக்கிடம் தரக்கூடியது. இதுகாரும் ஆதிதிராவிடர்களை சீர்மைக்குப் போய் குடியேறப்போகிறார்கள் என்றுதான் ஸ்ரீ

வரதராஜலு எண்ணியிந்தார் போலும். இத்தேசத்திலுள்ள ஜாதிப் பேய் பிடித்த பித்தர்களையும் புரோகிதப் பிடிவாதம் கொண்ட பிராமணர்களையும் அவர்களின் அட்டூழியங்களையும் கொடுமை களையும் அடக்கி நாடு சுதந்திரம் பெற இரத்தம் சிந்த வேணுமானாலும் ஆதிதிராவிடர்கள் பின் வாங்கார்கள் என்பதையும் ஸ்ரீ வரதராஜுலு மனதில் பதிவு செய்வாராக.

— குடிஅரசு

29.04.1928

ஆளவந்தாருக்கு எச்சரிக்கை!

– புத்ததாசன்

“சுயராஜ்ஜிய சர்க்காருக்கும் அந்நிய சர்க்காருக்கும் உள்ள வித்தியாசத்தை யார் முதலில் உணர வேண்டுமோ அவர்கள் இன்னமும் உணராமல் இருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. ஜனங் களைப் பொறுத்தவரை இந்த வித்தியாசத்தை முன்பே உணர்ந்து விட்டார்கள். சர்க்கார்தான் இன்னும் உணரவில்லை என்பதற்கு “விடுதலை”ப் பத்திரிகைக்கு ரூ. 10,000 ஜாமீன் கேட்டிருக்கும் உத்தரவே ஒரு உதாரணமாகும்” இது ஆளவந்திருப்பவர்களின் அறியாத் தனத்திற்கு ஒரு விளக்கம்.

“தமிழ் நாட்டின் பத்திரிகை உலக சரித்திரத் திலேயே இதுவரை எந்தப் பத்திரிகைக்கும் இவ்வளவு அதிகமான ஜாமீன் தொகை கேட்டதில்லை. சரித்திரமே கண்டிராத சாதனையைத்தான் நம் சுயராஜ்ஜிய சர்க்கார் சாதித்திருக்கிறார்கள். ஏற்கனவே இந்தப் பத்திரிகை கட்டியிருந்த ரூ. 2000 ஜாமீன் வேறு பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது” – இது வெள்ளையன் ஆண்ட காலத்திலேகூட தமிழகம் காணாத அநீதி இன்று தலைவிரித்தாடுகிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

“அதிகாரத்தில் உள்ளவர்கள்தான் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு முன்னால் தயங்கவேண்டும். துஷ்பிரயோகம் ஆகிவிடக்கூடாதே என்று பயப்பட வேண்டும். சென்னை சர்க்காரின் உத்தரவில் இந்த தயக்கமோ, பயமோ இருப்பதாகத் தெரியவில்லை.

தங்கள் அதிகாரம் எது வேண்டுமானலும் செய்யுமென்ற எண்ணம்தான் இதில் தெரிகிறது" – இது ஆளவந்திருக்கும் அதிகார வர்க்கத்தின் எதேச்சாதிகாரப் போக்கையும், அதிகாரம் இருக்கிறது என்கிற ஆணவத்தையும், அதிகாரத்தை அவசியமற்ற விஷயங்களி லெல்லாம் அனாவசியமாக துர்வினியோகம் செய்கிறார்கள் – கள்ள மார்க்கட்டில் கொள்ளையடிக்கும் கதர்ச்சட்டைக்காரர் களுக்குச் சலுகை காட்டுவது முதல், வகுப்பு நீதிக்காகப் போராடும் "விடுதலை" மீது பாய்வது வரை பல வகைகளிலும் – என்பதற்கு ஒரு படப்பிடிப்பு.

"எந்தக் கட்சிப் பத்திரிகையாக இருந்தாலும் சரி, அதன் இடுப்பை ஒடிக்கும்படியான காரியத்தை இஷ்டம்போல் செய்வது என்பது ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைப்பதாகும்" – ஆட்சி பாசீசப்பாதையில் செல்கிறது. இறந்துபோன ஹிட்லரும், – முசோலினியும், புரட்சி அனலிட்டுப் பொசுக்கப்பட்ட ரஷ்ய ஜாரும், இன்றைய சென்னை அரசாங்கப் பொறுப்பை ஏற்று நடத்த முற்படுகிறார்கள் என்று ஓர் எச்சரிக்கை!

"விடுதலை இழைத்திருக்கும் தவறு பத்திரிகை உலகத்திற்குப் புதிதல்ல. "விடுதலை" விஷயத்தில் எந்த வகுப்புவாத உணர்ச்சி குற்றமாகக் கருதப்படுகின்றதோ அதே குற்றத்தைப் பிற பத்திரிகைகளும் செய்திருக்கின்றன....... எனவே 'விடுதலை' மீது மட்டும் நடவடிக்கை எடுக்கும் சர்க்கார் இதே குற்றத்தைச் செய்யும் மற்றவர்கள் விஷயத்தில் என்ன செய்யப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. மேலும் 'விடுதலை' பத்திரிகை இழைத்த தவறு இமயமளவு இருந்தாலும்கூட கோர்ட்டுக்குப் போவதுதான் ஜனநாயக தர்மம்" – இது ஆட்சியாளரின் ஓரவஞ்சனைப் போக்கிற்கும், நியாயமற்றதும், ஜனநாயகத்திற்கு அப்பாற்பட்டது மான செய்கைக்கு ஒரு விமர்சனம்.

"பத்திரிகை சுதந்திரம் என்பது வரும் போகும் மந்திரிமார்களின் விருப்பு வெறுப்புக்கு உள்ளடங்கிய அற்ப விஷயமாகிவிடும் ..... எனவே இந்த ரூ. 10,000 ஜாமீன் கெடுபிடி உத்திரவு புத்திசாலித்தனமானதுதானா என்பதை சென்னை சர்க்கார் புனராலோசனை செய்வார்களாக. இதற்கிடையில் பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று உண்மையில் நினைக்கிறவர்கள் பிரஸ்தாப சர்க்கார் உத்திரவைக் கண்டிக்க முன் வருவார்களாக, ஏனெனில் இந்த உத்திரவில் பத்திரிகை சுதந்திரம் படுகொலையாகியிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே பத்திரிகை சுதந்திரத்தைக் காப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் அகில இந்தியப் பத்திரிகாசிரிய மகாநாடும், சங்கங்களும், பெடரேஷன்களும் இதில் தீவிரக் கவனம் செலுத்த

வேண்டும். இந்த உத்திரவு ரத்தாகும் வரை கிளர்ச்சி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.''

மேலே கண்ட விளக்கம், எடுத்துக்காட்டு, படப்பிடிப்பு, போர் முரசு அடங்கிய தலையங்கம் ஒன்றை சென்னை 14-6-49 இதழில் 'தினசரி' தீட்டியிருக்கிறது. தினசரியின் இந்தத் தீவிரப் போக்கையும், நியாயத்திற்குப் பரிந்து பேசும் உள்ளப் பண்பையும் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். "விடுதலை" முன்னர் கட்டியிருந்த ரூ. 2000 ஜாமீன் தொகையைப் பறிமுதல் செய்துவிட்டு, மீண்டும் ரூ. 10,000 புதிய ஜாமீன் கட்டவேண்டு மென்று கேட்டிருக்கும் அரசாங்கத்தின் நீதிக்கு அப்பாற்பட்ட போக்கைக் கண்டு "தினசரி"யாரின் இரத்தம் கொதிப்பேறிவிட்டது என்பதை அவரது தலையங்கம் நன்கு எடுத்துக்காட்டுகிறது. அதுமட்டுமல்ல, 'பத்திரிகையாளர் மாநாடும், பெடரேஷனும், சங்கங்களும் இந்த உத்திரவு ரத்தாகும் வரை கிளர்ச்சி செய்ய வேண்டும்' என்று போர்முரசு கொட்டுகிறார். அவரது முரசின் ஒலி யார் காதில் விழாவிட்டாலும், ஆட்சியாளர் காதில் சுறுக்கெனப் பாய்ந்திருக்குமென்றே நம்புகிறோம். இந்த விஷயம் மீண்டும் புனராலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நீதி வழங்கப்படுமென்று நாம் எதிர்பார்க்கவுமில்லை. "தினசரி" ஒரு தேசீய ஏடு - அதுவும் இன்றையக் குமாரசாமி ராஜாவின் மந்திரிசபையைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பது. இப்படிப்பட்ட பத்திரிகை "விடுதலை" மீது சர்க்கார் அடக்குமுறை ஈட்டிகளை வீசுவதைக் கண்டு ஆர்ப்பரிக்கிறது என்றால், அதில் ஏதாவது அர்த்தமிருக்கத்தான் வேண்டும். ஆம், தினசரியார் தேசியவாதியாக இருக்கலாம், கதருடையில் காட்சியளிக்கலாம். ஆயினும் அவருடைய உடலில் இன்னமும் திராவிட இரத்தம் ஓடிக் கொண்டிருக்கிறது, அவருடைய உள்ளத்தில் திராவிட உணர்ச்சி மண்டிக் கிடக்கிறது என்பதை அவரது தலையங்கம் மக்களுக்குத் தெளிவுபடுத்தி விட்டது. இதைப்போல இன்னும் எத்தனையோ பேர்களுடைய உள்ளங்கள் வேதனையால் துடித்துக்கொண்டுதானிருக்கும். சமயம் வரும்பொழுது அவை கண்டிப்பாக வெளிவந்துதான் தீரும். எரிமலை வெடிப்பதையும், பயங்கரமான பூகம்பம் ஏற்படுவதையும், கொடூரமான புயல்காற்று வீச விருப்பதையும் அதனால் கடல் கொந்தளித்து குமுற விருப்பதையும் முன்கூட்டியே தெரிந்துகொள்ள முடியும் - விஞ்ஞானம் பரவியிருக்கும் காரணத்தால். ஆனால் அதைத்தடுத்து நிறுத்திவிட முடியாது. அதனால் பாதிக்கப்படாமல் விலகியிருக்க முடியும், கொஞ்சம் விவேகமிருந்தால், இதைப் போன்றது தான் இன உணர்ச்சியும். இது இயற்கையாக எழும் எழுச்சி. இதை எவராலும், எந்தவித அடக்கு முறைச் சட்டத்தைக் கொண்டும் அடக்க முடியாது என்பதை ஆளவந்தாருக்கு எச்சரிக்கிறேன்.

நாட்டு நலத்திலும், ஜனநாயகம் வளர்ச்சி பெற வேண்டும் என்பதில் அக்கறையும் உடைய எந்த பத்திரிகையும் – எழுத் தாளனும் இன்றைய அரசாங்கம் விடுதலை, திராவிடநாடு ஆகிய ஏடுகளின்மீது பாய்ந்திருக்கும் போக்கைத் தீவிரமாகக் கண்டித்தேயாக வேண்டும். எழுத்துரிமை பறிக்கப்படும்பொழுது எந்த எழுத்தாளனும் உறங்கிக்கொண்டிருக்க முடியாது. பத்திரிகை சுதந்திரம் காற்றில் பறக்கவிடப் படும்பொழுது, இலட்சியத்திற் காகப் பாடுபடும் எந்த பத்திரிகையும் பல்லிளித்துக்கொண்டு சும்மாவிருக்க முடியாது. காசுக்கு பேனா பிடிக்கும் எழுத்தாளனைப் பற்றியும், பிற்போக்கு வியாபாரப் பத்திரிகைகளைப் பற்றியும் நமக்கு கவலையில்லை. பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாக்கப் போவதாக பீத்திக்கொண்டிருக்கும் தென்னிந்திய பத்திரிகையாளர் சம்மேளனம், இந்த விஷயத்தில் வாய் மூடிக்கொண்டு இருக்கிறது! ஒருவேளை பத்திரிகைகளின் விளம்பரத்தின் மீது விதிக்கப்படும் வரி போன்றவைகளை எதிர்ப்பதுதான் பத்திரிகை சுதந்திரம் போலும். அது மட்டுமல்ல, இந்த பெடரேஷனின் தூண்டுதலால் தான் "விடுதலை"யின் ஜாமீன் பறிக்கப்பட்டு புது ஜாமீனும், திராவிட நாட்டிற்கு ஜாமீனும் கேட்டது போன்ற கேலிக்கூத்துகள் நடைபெற்றிருக்கின்றன. இதைப்பற்றி நாம் கவலைப்பட்டு என்ன செய்வது? தென்னிந்திய பத்திரிகையாளர் பெடரேஷன் என்ற திரையில் புகுந்துகொண்டு திராவிடர் கழகத்தையும், அதன் ஓயாத உழைப்பினால் நாட்டில் பரவியிருக்கும் இனஉணர்ச்சியை யும் ஒழித்துவிட முயற்சிக்கும் ஆரியமே! உனக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டதென்று எச்சரிக்கிறேன்.

ஆளவந்தார்களே! உங்களிடம் அதிகாரம் இருக்கிறது. அதை அமுல் நடத்த அடக்குமுறைச் சட்டங்களும், பட்டாளமும் வேண்டிய அளவு இருக்கிறது என்பதையும் தெரிந்துதான் உங்களை எதிர்க்கிறோம். ஆட்சி பீடத்தில் உங்களை ஏற்றிவைத்து, அதிகாரத்தை உங்களிடம் கொடுத்திருக்கும் மக்களையே அடக்கி ஒடுக்க அதிகாரத்தைப் பயன்படுத்துகிறீர்கள். இந்த விபரீதப் போக்கின் விளைவும் வேதனை தருவதாக முடிந்துவிடும் என்பதை இன்னமும் நீங்கள் உணரவில்லை என்பதையே 'விடுதலை', 'திராவிடநாடு' ஆகிய பத்திரிகைகளின் விஷயத்தில் நீங்கள் நடந்துகொண்டிருக்கும் போக்கிலிருந்து தெரிகிறது. எந்த மக்களின் சக்தி, உங்களை மந்திரிகளாக்கியதோ அதே சக்தி, நாளை உங்களை மந்திரி நாற்காலியினின்று தலைகீழாக உருட்டிக் கீழே தள்ளிவிடும் ஆற்றல் பெற்றது என்பதை இந்த ஜனநாயக யுகத்தில்கூட நீங்கள் உணராமலிருப்பது ஆச்சரியமாக விருக்கிறது. அதிகாரம் இருக்கிறது என்ற காரணத்தால் எதையும் செய்துவிட முடியும். யாராலும் தடுக்க முடியாது என்று கருதிக்கொண்டு

கொடுமையை கூத்தாடவிட்ட மன்னாதி மன்னர்களெல்லாம் மண்ணோடு மண்ணாக மறைந்து போனதைச் சரிதம் விளக்குகிறது. ஆனாலும், மதுவிலும் மயக்கமூட்டும் அதிகார போதையில் மூழ்கிக் கிடக்கும் நீங்கள் செய்யும் கொடுமைகளைக் கண்டு, இனியும் மக்கள் வாய்மூடி மௌனியாகச் சும்மா விருக்கமாட்டார்கள். இந்தப் போக்கை மாற்ற ஏதாவது வழி செய்தே தீருவார்கள் என்று எச்சரிக்கிறேன்.

ஆரியத்தின் புன்சிரிப்பைப் பெற திராவிட இன உணர்ச்சியை அழிக்க ஆரம்பித்திருக்கிறீர்கள். இந்தப் போக்கு எதிர்காலத்தில் ஏளனத்தையும், பழியையும் தான் பரிசாகப்பெற்றுத் தருமே தவிர, வீராதிவீரர்கள் என்ற விருது பெற்றுத் தராது. விழிப்புற்ற வீர இனத்தின் எழுச்சியைக் கிள்ளிவிடலாமென்று மனப்பால் குடிக்கிறீர்கள். வேண்டாம் இந்த விபரீதப்போக்கு. சமுதாயத்தைக் காட்டிக்கொடுத்த துரோகிகளென்று வருங்காலச் சந்ததியார்கள் தூற்றுவார்கள் என்று எச்சரிக்கிறேன்.

ஆளவந்தார்களே! சென்ற ஆண்டு "விடுதலை"ப் பத்திரிகை ரூ. 2000 ஜாமீன் கட்டவேண்டுமென்று கேட்டிருந்தீர்கள். அடக்குமுறை அம்பு திராவிட கழகத்தை நோக்கி வீசப்படுகிறது என்பதை உணர்ந்த மக்களின் உள்ளத்தில் பெரும் குமுறல் ஏற்பட்டது. அதன் எதிரொலியாக நீங்கள் கேட்டிருந்த தொகையை விட எட்டுமடங்கு அதிகமான பணத்தை மக்கள் அனுப்பி வைத்தார்கள். ஆம், பணக்காரர்களினாலும் பட்டதாரிகளாலும் அனாவசியமாக எழுதிக்கொடுத்த 'செக்'களினாலோ அல்லது கரன்சி நோட்டுகளாலோ கிடைத்ததல்ல அந்தத் தொகை. ஏழைப் பாட்டாளி மக்கள் கொடுத்த ஒரு ரூபாய்க்கு உள்பட்ட நாணயத்தினால்தான் அவ்வளவு பெரிய தொகை சேர்ந்தது. இந்த நிலைமை எதை எடுத்துக் காட்டுகிறது? ஏழைப் பாட்டாளி மக்களிடமும், நாட்டிலேயும் "விடுதலை"க்கு உள்ள செல்வாக்கை எடுத்துக்காட்டவில்லையா? மக்களிடம் இவ்வளவு பெரிய செல்வாக்கும், ஆதரவும் உள்ள பத்திரிகையிடம் ஜாமீன் கேட்டுவிட்டோமே என்று வருந்தி – வெட்கப்பட்டு – ஜாமீன் தொகையைத் திருப்பிக் கொடுத்திருக்க வேண்டாமா இந்த அரசாங்கம்? ஆளவந்திருப்பவர்களுக்கு நிலைமையைச் சீர்தூக்கிப் பார்க்கும் போக்கு இருந்திருந்தால் இதைத்தான் செய்திருப்பார்கள். ஆனால் இன்று நடந்திருப்பதென்ன?

"விடுதலை"க்கு ஜாமீனாக முன்னர் கட்டியிருந்த ரூபாய் 2000த்தையும் பறிமுதல் செய்துவிட்டு மீண்டும் 10,000 ரூபாய் ஜாமீன் கட்டவேண்டும் என்று கேட்டிருக்கிறது இந்த அரசாங்கம். "குதிரை ஆளைக் கீழே தள்ளியது மல்லாமல் குழிவேறு பறித்தது" என்பதைப்போல் இருக்கிறது இந்த ஜாமீன் பறிமுதலும், புதிய

ஜாமீன் கோரிக்கையும். உண்மையிலேயே அந்த ரூபாய் இரண்டா யிரத்துக்கும் பேசும் சக்தி இருந்திருந்தால், ஆளவந்தார்களே! எங்களை அநியாயமாக அபகரிக்காதீர்கள். பணக்காரர்களின் இரும்புப் பெட்டிகளிலோ அல்லது பாங்குகளிலோ தூங்கிக் கிடந்தவர்கள் அல்ல நாங்கள். ஏழையும் பாட்டாளியும் சிந்திய இரத்தம் உழைப்பாளிகளின் உடம்பிலிருந்து கொட்டிய வியர்வைத் துளிகள் நாங்கள்'' எங்களைப் பறிமுதல் செய்யாதீர்கள் என்று கூறியிருக்கும் பாவம்! பேசும் சக்தியற்ற பணம் இந்த அநியாயக் காரர்களின் செயல் கண்டு சலசலவென்று சிரித்திருக்கும்.

"விடுதலை" மீண்டும் பத்தாயிரம் புது ஜாமீன் கட்டவேண்டு மென்றும் முன்னர் கட்டியிருந்த ரூபாய் 2000 பறிமுதல் செய்துவிட்டதாகவும், இதற்குக் காரணம் இந்தப் பத்திரிகையின் போக்கு தவறானது என்றும் இன்றைய சர்க்கார் கூறுகிறது. ''விடுதலை'' இழைத்திருக்கும் தவறு பத்திரிகை உலகத்திற்குப் புதிதல்ல. ''விடுதலை'' விஷயத்தில் எந்த வகுப்புவாத உணர்ச்சி குற்றமாகக் கருதப்படுகிறதோ, அதே குற்றத்தைப் பிற பத்திரிகைகளும் செய்திருக்கின்றன'' என்று நிலைமையை விளக்கிக்காட்டி "விடுதலை" குற்றமற்றது என்று வாதிடுகிறார் "தினசரி"யார். விடுதலையில் ஜாமீன் கோரிக்கைக்குப் பணம் அனுப்புவதின் மூலம் ''விடுதலை''யின் கொள்கை சரியானது அதை நாங்கள் வரவேற்கிறோம் என்று மக்கள் கூறுகிறார்கள். அதுமட்டுமல்ல ''விடுதலை''யின் உழைப்பு நாட்டு நலனுக்கும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கும், குறிப்பாக ஜனநாயக வளர்ச்சிக்கும் இன்றியமையாதது என்று திராவிட சமுதாயம் முழங்குகிறது. "விடுதலை" திராவிட சமுதாயத்தின் வீரப் பிரதிநிதி. அது எங்கள் உயிருக்கு மேலாக நாங்கள் போற்றி வளர்க்கும் ஒப்பற்ற ஏடு. ஆகவே அதை அழிக்க முற்படுவீராயின் எங்கள் உயிரை கொடுத்தேனும் அதைக் காப்பாற்றியே தீருவோம் என்று நான் கூறுகிறேன். இந்த இடத்தில் ஆள்வோருக்கும் ஆளப்படு வோருக்கும் இடையில் அதிகமான பேதங்கள் வளர்ந்துவிட்டன என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆளவந்திருப்பவர்களின் அடக்குமுறைச் செயல்களையும் பாசீசப் போக்கையும் மக்கள் விரும்பவில்லை. எனவே திருந்துங்கள் அல்லது ஆட்சி பீடத்தை விட்டு வெளியேறுங்கள் என்று எச்சரிக்கிறேன்.

ஆளவந்தார்களே! உங்களின் செயல் கண்டு நீதியும் நேர்மையும் வெட்கப்பட்டு எங்கேயோ ஓடி மறைந்துவிட்டது. ஜனநாயகம் உங்கள் ஆட்சியில் வெறும் கேலிக்கூத்தாக்கப்பட்டு விட்டது. உங்களை ஆதரித்து தஸ்தாவேஜுக் கூற எண்ணற்ற ஏடுகள் உங்கள் கையில் இருக்கின்றன. உங்களது நேர்மையற்ற செயல் களையும், பொறுப்பற்ற போக்கையும், உலக மக்களின்

கண்களுக்குத் தெரியாமல் அவைகள் இருட்டடிப்பு வேலைகள் செய்து வருகின்றன. உங்களது திரைமறைவு இரகசியங்களையும், ஒரு குலத்துக்கு ஒரு நீதி வழங்கும் ஓரவஞ்சனைப் போக்கையும் மக்களுக்கு எடுத்துக் காட்டி கண்டிக்கிறது ''விடுதலை''. விடுதலையின் பேனாமுனைக்குப் பதில் சொல்ல யோக்கியதை யற்ற தென்னிந்திய பத்திரிகையாளர்கள் – தங்களை எழுத்துலக மேதைகள் என்று விளம்பரப்படுத்திக் கொண்டு திரியும் வீணர்கள் – விடுதலை திராவிடநாடு ஆகிய பத்திரிகைகளை மஞ்சள் பத்திரிகை என்று கூறி, அதன் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பத்திரிகையாளர் மாநாட்டில் பேசினார்கள் – தீர்மானம் செய்தார்கள். இந்தப் பிரகஸ்பதிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டுதான் சர்க்கார் இந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்றும் தெரிகிறது. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

திராவிடர்கழகப் பத்திரிகைகளை மஞ்சள் பத்திரிகை என்று கூறி அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பத்திரிகையாளர் பெடரேஷன் மூலம் வேண்டுகோள் விடுத்திருக் கிறார்கள். இவர்கள் – பத்திரிகை எழுத்தாளர்கள் என்று வெட்க மில்லாமல் கூறிக்கொண்டிருக்கும் யோக்கியர்கள் – ஏன் இந்த கேவலமான வழியைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்கிறேன். ஆரியத்திற்குப் பழக்கப்பட்ட இந்தக் கோணல் வழியும் குறுக்குப் புத்தியும்தான். உண்மையில் இவர்கள் தங்களை எழுத்தாளர்கள் என்று கூறிக்கொள்ள யோக்கியதை உடையவர்களானால் "விடுதலையின் எழுத்துக்களுக்கு மறுப்பு எழுதட்டும். அது காட்டும் புள்ளி விவரங்களிலோ, கொள்கையிலோ தவறு இருந்தால் மக்களிடம் எடுத்துக் கூறட்டும். மக்கள் தங்களின் அறிவைக் கொண்டு விஷயங்களைப் பரிசீலனை செய்து முடிவு கட்டிக் கொள்ளட்டும். இதற்கு யோக்கியதை இல்லாவிட்டால் தங்களின் பேனாக்களை எங்காவது வீசி எறிந்துவிட்டு வேறு ஏதாவது தொழில் பார்த்துக் கொள்வார்களாக. பாவம்! அவர்களைச் சொல்வதிலும் குற்றமில்லை. புல்லேந்தும் கையைப் பேனாப் பிடிக்க விட்டுவைத்திருப்பதே மிகவும் பெரிய தவறு. இந்தத் தவறை உணர்ந்து மக்கள் சரியான நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களாக. புல்லேந்தும் புல்லர்களின் போக்கை புன்சிரிப்புடன் வரவேற்பீர்களாயின் ஆட்சி பீடம் ஆட்டங் கொடுத்துவிடுமென்று ஆளவந்தார்களுக்கு எச்சரிக்கிறேன்.

பொதுமக்களே! ''விடுதலை'' முன்னர்க் கட்டியிருந்த ரூ. 2000–த்தையும் பறிமுதல் செய்துவிட்டு மீண்டும் 10,000 புதிய ஜாமீன் கேட்டிருப்பது மிகப் பெரிய தவறு என்று இந்த அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுகிறேன். ஜாமீன் பறிமுதல்,

புது ஜாமீன் கோரிக்கை ஆகியவைகளின் மூலம் ஏழைப் பாட்டாளி மக்களின் இரத்தத்தை உறிஞ்சுகிறது. உழைப்பாளிகளின் உழைப்பை இந்த அரசாங்கம் பறிமுதல் செய்துவிட்டு, இன்னமும் தனது பலி பீடத்திற்கு 'காவு' கேட்கிறது என்று குற்றம் சாட்டுகிறேன். ''தினசரி''யார் `கூறியிருப்பதுபோல பத்திரிகை சுதந்திரத்தை படுகொலை செய்துவிட்டது என்று குற்றம் சாட்டுகிறேன். அது மட்டுமல்ல உயரிய ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைக்கிறது என்று குற்றம் சாட்டுகிறேன். இந்த குற்றச்சாட்டுகளுக்கு அரசாங்கம் பதில் சொல்லியே தீரவேண்டும். நான் சாட்டி யிருக்கும் குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்திலில்லை, மக்கள் மன்றத்தில் தான். இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில்கூறும்படி ஆளவந்தார் களை மக்கள் வற்புறுத்துவார்களாக. குற்றவாளி நாங்களா? அல்லது அரசாங்கமா? என்பதை மக்கள் கண்டறிந்து நல்லதொரு தீர்ப்பு நல்குவார்களாக.

நெஞ்சிலே நேர்மையும், உள்ளத்தில் உறுதியும் படைத்த எந்த மனிதனும் இன்றைய அரசாங்கத்தின் படுபாதகச் செயலைக் கண்டித்தே தீருவான். ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு அதன்மீது பாசீச அரசமைக்க முயற்சிக்கும் இன்றைய ஆளவந்தார்களின் போக்கை ஒவ்வொரு மனிதனும் எந்தெந்த வகையில் கண்டிக்க முடியுமோ அத்தனை வழிகளிலும் கண்டிப்போமாக. திராவிட நாட்டு மக்களின் முன்னேற்றத்தையும், விடுதலையையும் குறிக்கோளாகக் கொண்டு உழைக்கும் திராவிடர் கழக அதிகாரபூர்வமான பத்திரிகையான ''விடுதலை'' மீது அரசாங்கம் கேட்டிருக்கும் ஜாமீன் தொகைக்குப் பண உதவி செய்வதன் மூலம் நமது கடமையை நிறைவேற்றுவதோடு, ஆளவந்தார்களே! உங்கள் அநீதியைக் கண்டு எங்கள் உள்ளம் குமுறுகிறது, உங்கள் ஆட்சிக்கு அழிவுகாலம் கிட்டுகிறது என்று எச்சரிப்போமாக.

– குடிஅரசு
25.06.1949

பழிவாங்கும் உணர்ச்சி!

'குடிஅரசு'க்கு ஜாமீனாக ஏன் 3000 ரூபாய் கட்ட வேண்டுமென்பதற்குக் காரணங்களை (!) சர்க்கார் நமக்குத் தெரிவித்துவிட்டார்கள்.

7–8–49ல் செய்தியும் – சிந்தனையும் என்ற தலைப்பில் காந்தியார் காலட்சேபம் பற்றி வந்த செய்தியையொட்டி எழுதிய ஒரு கிண்டல் குறிப்பு ஒரு குற்றமாம்.

அதே தேதியில் அதே தலைப்பில் சாந்தூர் சமஸ்தான நிர்வாகம் பற்றி வந்த செய்தியை ஒட்டிய ஒரு கிண்டல் குறிப்பு மற்றொரு குற்றமாம்.

ஷ தேதியில் கற்பனை என்ற வரிசையில், அக்கரகாரம் என்ற தலைப்பில், புதுமைப்பித்தனின் பொன்னகரம் என்ற கதையின் தழுவலாக அடிக் குறிப்புப் போட்டு எழுதப்பட்டிருக்கும் ஒரு கட்டுக் கதை இன்னொரு குற்றமாம்.

28–8–48ல் ஆச்சாரியார் தவிப்பு அம்மையார் மறுப்பு என்கிற தலைப்பில் எழுதியிருக்கும் ஒரு துணுக்குச் செய்தியும் அதன்கீழ் இதன் ரகசியம் என்ன? என்கிற தலைப்புப் போட்டு எழுதப்பட்டிருக்கும் துணுக்குச் செய்தியும் ஒரு குற்றமாம்.

4–9–48ல் பச்சிளங் கருவைச் சிதைக்கும் பாதகமான ஆட்சி என்கிற தலைப்பில், கர்ப்பிணியை கார் ஏற்றி நடுக்காட்டில் கொண்டுவிட்ட ஓமந்தூராரின் போலீஸ் ஆட்சியை கண்டித்திருப்பது ஒரு குற்றமாம்.

ஆக இந்தக் காரணங்களுக்காக எடுத்துவை 3000 ரூ. என்று கூறிவிட்டது நம் சுயராஜ்ஜிய சர்க்கார்.

இந்தக் காரணங்களைப் பார்க்கும்போது, சென்னை சர்க்காருடைய நடத்தையைப் பற்றி 'நீங்கள் என்ன நினைக் கிறீர்கள்?' என்றுதான் திராவிடத் தோழர்களைக் கேட்க வேண்டியதாய் இருக்கிறது.

காந்தியார் பார்ப்பனர்களைப் போற்றி, அவர்கள் நலத்தில் அக்கரை காட்டியபோது, அவர் மகாத்மாவாக ஆக்கப்பட்டார். பின்பு பார்ப்பனர்களுடைய தனி நலத்தைக் கருதாமல், மக்களுடைய பொதுநலம் என்கிற அடிப்படையில் பார்ப்பனர் களுடைய குறைபாட்டைப் பெரிதாக மதிக்கவில்லை. அவர் எப்போது பார்ப்பனர்களைக் குறித்துச் சற்று அலட்சியமாகப் பேச ஆரம்பித்தாரோ அப்போதே, அவர் துராத்மாவாகக் கருதப் பட்டு, ஒரு பார்ப்பனக் கும்பலால் சதி செய்யப்பட்டு பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த அக்கிரமத்தை மறைப்பதற்காக – நியாயமாக மனித உணர்ச்சியின்படி அல்லது வரலாற்று ஆதாரத்தின்படி, பார்ப்பனீயத்தின் மீது மக்களுக்கு எந்த அளவு வெறுப்பு உண்டாக வேண்டுமோ, அந்த வெறுப்பை மக்கள் மறப்பதற்காகப், பார்ப்பனத் தலைவர்கள் எவ்வளவோ காரியங்களைச் செய்தார்கள். "காந்தியார் இப்படிப் பரிதாபகரமான முடிவையடைந்தது கடவுளின் விருப்பம், கடவுளே அவரை அழைத்துக் கொண்டு விட்டார்" என்றெல்லாம் நாளுக்குநாள் புதுப்புதுவிதமாய் நாட்டில் 'கயிறு' திரித்தார்கள்.

இந்தத் துக்ககரமான வெறுக்கத்தகுந்த வெறிச் செயல் நடந்து, அதனால் மக்கள் வெதும்பிய நிலையில் இருக்கும்போது, காந்தியாரைப் பற்றிக் காலட்சேபம் செய்து, அவர் வாழ்க்கை வரலாறு ஒரு புண்ணிய கதை என்பதாக மக்கள் உள்ளத்தில் தவறான உணர்ச்சியைக் கிளப்பி, பார்ப்பனீயத்தின் மீதுள்ள வெறுப்புணர்ச்சியைப் போக்கிக்கொள்ள, கொல்லை வழி தேடப்படுகிறதே இது நியாயமா? என்பதாகக் கேட்ட கேள்வி ஒரு குற்றமாம்.

சாத்தூர் சமஸ்தானத்தில், மன்னர் தள்ளப்பட்டார், மக்களாட்சி பூத்தது என்கிற செய்தியில், ஆட்சி நிர்வாகத்தில் – அந்த வைபவத்தில் முழுக்க முழுக்கப் பார்ப்பனர்களே கலந்து கொண்டிருக்கிறார்களே, இதற்குப் பெயர்தானா மக்களாட்சி – இதுவா இந்திய யூனியன் ஆட்சி என்பதாகக் கேட்ட கேள்வி ஒரு குற்றமாம்.

உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொள்ள, எத்தனையோ ஊதாரிகள் மனைவிகள் தயவையும் ஒத்துழைப்பையும் பெறுவது நம் நாட்டில் புதிய ஒரு சங்கதியல்ல. 'ஸ்டாத்தம் அய்யங்கார்' சரித்திரம் உத்தியோகம் பார்க்கிற ஒவ்வொருவருக்கும், அதுவும் கல்வித் துறையில் வேலை பார்க்கிற ஒவ்வொருவருக்கும் மிகமிக நன்றாகத் தெரிந்த ஒரு சங்கதி. இந்த மாதிரி உத்தியோகத்தைக் காப்பாற்றிக்கொள்ள மானத்தை இழக்கலாமா? என்று கேட்பது போல, கற்பனை என்கிற தலைப்பைப் போட்டுக்கொண்டு இது பொன்னகரம் என்ற இன்னொரு கதையைத் தழுவியது என்று முடித்துக் காட்டியிருக்கும் கற்பனைக் கட்டுக்கதை ஒரு குற்றம் என்கிறது சர்க்கார்.

அப்படியானால் காந்தியார், ஒரு வெறி நாய் சுட்டுக்கொல்லப் படுவது போல் சுட்டுக்கொல்லப்பட்டதை நியாயம் என்று நினைக்கிறதா இந்த சர்க்கார்? இயற்கைக்கு மாறாகக் காந்தியாரைக் கடவுளோடு பிணைத்து, காந்தியார் படுகொலையை மக்கள் மறப்பதற்காகப், பார்ப்பனர்கள் காந்தியாரைப் பற்றி அளந்துவரும் புளுகு மூட்டைகளை யெல்லாம், அத்துணையும் உண்மை என்று சாதிக்கிறார்களா நம்ம சுயராஜ்ஜிய சர்க்கார்? ஒரு சமஸ்தான நிர்வாக மாற்றத்தில், நிர்வாகத்தில் கலந்துகொண்ட அத்தனை பேரும், 100க்கு 3 பேராக இருக்கும் பார்ப்பனர்களே கலந்து கொண்டிருக்கிறார்களே, இது என்ன அக்கிரமம்! இதற்குப் பெயர்தானா யூனியன் ஆட்சி என்று கேட்பது குற்றமென்றால், பார்ப்பனர்கள் தான் நாட்டை ஆளுவார்கள், நீ அதைப்பற்றிப் பேசக்கூடாது என்கிறார்களா நம்ம சுயராஜ்ஜிய மந்திரிமார்கள்? உத்தியோகமே பெரிது! மானம் பெரிதல்ல! உத்தியோகத்தைக் காப்பாற்றிக்கொள்ள மனைவியையும் கூட்டிக்கொடுக்கலாம்! ஆனால் அதைப்பற்றி பேசுவதற்கு – எழுதுவதற்கு நீ யார் என்கிறாரா நம்ம பவநகர் மகாராஜாவான கவர்னர் பிரபு அவர்கள்? என்று நாம் கேட்கிறோம்.

28–8–48ல், "மார்ச்" என்கிற வடநாட்டுப் பத்திரிகையில் ஆச்சாரியாரைப் பற்றி, கார்ட்டூன் போட்டு, கிண்டலாக எழுதப்பட்டிருந்ததுதான், "ஆச்சாரியார் தவிப்பும் அம்மையார் மறுப்பும்" என்று தலைப்புப்போட்டு மொழிபெயர்க்கப்பட்ட தாகும். இதைப்பற்றி 'மார்ச்' என்கிற பத்திரிகையின் மீது சர்க்கார் வழக்குத் தொடர, அது தள்ளுபடி செய்யப்பட்டிருந்தும், அந்த முடிவைத் தெரிந்துகொண்டே நம் சென்னை சர்க்கார் இந்த மொழிபெயர்ப்புக்குக் கொண்டா 3000 என்றால் இந்த சர்க்காருக்கு நீதியைப்பற்றி – நீதியின் முடிவைப் பற்றிச் சிறிதாவது கவலை இருக்கிறது என்று சொல்ல முடியுமா என்று கேட்கிறோம்.

பத்திரிகை ஆலோசனை போர்டில் பார்ப்பன ஆசிரியர்களான 'சகுனி மாமாக்கள்' இந்த விஷயத்தைப் பிரமாதப்படுத்திய நேரத்தில், ஒரு வெளிநாட்டுக்காரர் – சென்னை மாகாணப் பத்திரிகாசிரியர் மட்டும் "இதைக்குற்றமென்று சொல்லுவது தப்பு. இதைக்குற்றம் என்றால் 'மார்ச்' பத்திரிகையல்லவா குற்றவாளி? இதற்கு 'குடி அரசு' எப்படிப் பொறுப்பாகும்" என்றெல்லாம் சரமாரியாகக் கேள்வி கேட்டார் என்றுகூட ஒரு வதந்தி உலவுகிறது. இதற்குப் பிறகும் கூட இந்த மொழிபெயர்ப்பைக் குற்றம் என்றால் நீதிமன்றங்களை நம் சென்னை சர்க்கார் எந்த அளவு கேவலப்படுத்துகிறதெனக் கேட்கிறோம்.

அதே ரகத்தைச் சேர்ந்ததுதான் "இதன் ரகசியம் என்ன" என்கிற தலைப்பில் எழுதியிருக்கும் கிண்டல் செய்தியும்.

4–9–48 இந்தி எதிர்ப்புத் தொண்டர்களை 8 மாத கர்ப்பிணியும் கலந்திருக்க – அவர்களைச் காட்டுமிராண்டித் தனமாக நடத்தி – கர்ப்பத்திற்கும் ஊறு விளைவித்த ஓமந்தூராரின் போலீஸ் ஆட்சியைக் கண்டித்தது தவறு என்றால், நீதிபதி கொடியைப் பற்றிப் பேசியது நேர்மையற்றது என்று எடுத்துக் காட்டியது தவறு என்றால், போலீஸ் நிர்வாகத்தில் என்ன அட்டூழியம் நடந்தாலும் வாயைத் திறக்கக்கூடாது; நீதிபதிகள் எவ்வளவு நேர்மைத் தவறாக நடந்தாலும் அதை எடுத்துக் காட்டக்கூடாது என்பதுதானே நம்முடைய சுயராஜ்ஜிய சர்க்காரின் கட்டளை? இந்தக் கட்டளையை ஒரு சுதந்திர உணர்ச்சியுடைய – அநீதிக்கு அஞ்சுகிற – எந்த மனிதன்தான் எடுத்துக் காட்டாமல் இருக்க முடியும் என்று கேட்கிறோம்.

சர்க்காரால் சுமத்தப்பட்டிருக்கும் இக் குற்றச்சாட்டுகள், எப்படியாவது – எந்தக் காரணத்தைச் சொல்லியாவது 'குடிஅரசு' என்கிற பத்திரிகையிடத்திலும், அதன் பங்கு விகிதாச்சாரத்திற்கு 3000 ரூ. பறித்துவிட வேண்டுமென்கிற ஒரே நோக்கத்தோடு, கூறப்பட்டிருக்கிறதே தவிர, நீதிமன்றத்திலும் இது நீதிக்குப் பிழை என்று சாதித்துவிட முடியுமா என்று கேட்கிறோம்.

வகுப்புத் துவேஷத்தை உண்டாக்கும் குற்றங்கள், அவதூறை உண்டாக்கும் குற்றங்கள் என்பதாக எல்லாம், இந்தச் செய்திகளுக்குக் 'காதும் கண்ணும்' வைப்பதாக இருந்தால், இந்த வகுப்புத் துவேஷத்தால் எந்த வகுப்பினருக்குக் எப்படி எப்போது நஷ்டமுண்டாயிற்று? பார்ப்பனர்கள் மீது துவேஷத்தைக் கிளப்பியிருக்கிறதென்றால் எத்தனை பார்ப்பனர்கள் கொல்லப்பட்டார்கள்? அவமானம் செய்யப்பட்டார்கள்? என்பதைச் சர்க்கார் புள்ளி விபரத்தோடு கூறவேண்டாமா? என்று கேட்கிறோம்.

குடி அரசுக்கு ஜாமீன் கேட்ட நடத்தையிலிருந்து, அதுவும் ஜாமீனுக்கு ஆதாரமாகக் காட்டியிருக்கும் குற்றச் சாட்டுகளிலிருந்து, சென்னை சர்க்கார் பழிவாங்கும் உணர்ச்சியோடு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறுவதைத் தவிர, கொடுமைப்படுத்தி சித்திரவதை செய்ய வேண்டுமென்கிற ஒரு "பெருங்குணத்தை" கொண்டிருக்கிறார்கள் என்று கூறுவதைத் தவிர, வேறு என்ன நியாயத்தைச் சமாதானத்தைக் கூறிவிடமுடியும்?

இந்த அநாகரீகமான படலங்கள் நாட்டில் நடக்கவேண்டியதுதானா? அக்கிரமப் போக்குகள் எவ்வளவு காலத்திற்குத்தான் செல்லுபடியாகும்?

தோழர்களே! தீர்ப்பளியுங்கள்.

– குடி அரசு
09.07.1949

மித்திரனின் சித்திரம்

கறவை மாடு ஒன்று!

ஒருவர் தீனி வைத்துக்கொண்டிருக்கிறார்!!

ஆனால், பாலைக் கறப்பதோ வேறு சிலர்!!!

இவ்விதம் 7ந்தேதிய 'சுதேசமித்திரன்' இதழ் பிரசுரித்துள்ள சித்திரம் ஒன்றும், அதை விவரித்து தரப்பட்டுள்ள சிறியதொரு விளக்கமும் நம் சிந்தையைக் கவர்ந்தது. 'மித்திரன்' குணாதிசயங்களை, நாம் நன்கு அறிவோமாதலால் அதன் சித்திரமும் விளக்கமும் மிகமிகத் திகைப்பைத் தந்தது. சித்திரத்துக்கு அது தந்திருக்கும் விளக்கம், இது.

கறவைமாடு – தென்னிந்தியா

தீனிவைப்பது – ஆச்சாரியார்

பாலைக் கறப்போர் – வடஇந்திய வர்த்தகர்கள்.

இதனைப் பிரசுரிப்பது திருவந்தாதி பாடிடும் ஏடு – திகைப்பும் சிந்தனையும் அதிகரிக்காமலா இருக்க முடியும்? காணாத காட்சியாயிற்றே, இது! வடநாட்டினர் தென்னிந்தியா வெனும் பசுவைக் கறக்கிறார்கள்! அதுவும் எப்படி? தீனிவைத்து ஒருவன் போஷிக்க, 'திருட்டுத் தனமாக' பாலைக் கொள்ளையிடுகிறார்கள். இதைப் படமாக வரைந்து தருகிறது, மித்திரன்! அதோடு விட்டுவிடவில்லை. "இந்தச் சித்திரம் எதற்காகப் போட்டோம் தெரியுமா? எமது ராஜாஜி இவ்விதம் பேசியிருக்கிறார்" என்று நமக்கெல்லாம் கூறுகிறது – திகைப்புக்குமேல் திகைப்பு!

“வட இந்தியர் நமது செல்வத்தைப் பறித்துக்கொண்டு போவதாக எனது நண்பர் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் கூறுகிறார். அது உண்மைதானோவென்று எனக்குத் தோன்றுகிறது. அவர்கள் இங்குவந்து வியாபாரம் செய்து பணம் திரட்டுகின்றனர். ஆனால் நமக்கு அவர்களுடைய உதவி தேவையாயிருக்கும்போது அவர்கள் நம்முடன் ஒத்துழைப்பதில்லை.”

கூறியது, ஆச்சாரியார்! அதனை கட்டம்கட்டி, பிரமாதமாகப் பிரசுரிக்கிறது–மித்திரன்!! தென்னிந்திய வர்த்தக சபையினரின் ஆண்டு விழாக் கூட்டத்தில், பேசிய ஆச்சாரியார், வடநாட்டு அதிபர்களைக் குறித்து, இவ்விதம் வெளியிட்டிருக்கிறார். ஒத்துழைக்கவில்லை!!– இவ்விதம் கூறவில்லை அவர். ஒத்துழைப்ப தில்லை!!– இப்படிக் கூறுகிறார். இந்த இரண்டு வார்த்தை களுக்கும் வெவ்வேறு பொருளைக் காணலாம். “ஒத்துழைக்க வில்லை” என்றால், ஆச்சாரியார் ஆட்சி நன்கு நடைபெறுவதில் வடநாட்டதிபர்கள் கவலை கொள்ளவில்லை போலும் அதனால் ஆயாசப்பட்டு ‘ஒத்துழைக்கவில்லை சர்க்காருடன்’ எனக் கூறுகிறார் என்று கருதலாம். ஆனால் அவர் அப்படிக் கூறவில்லை. ஒத்துழைப்பதில்லை!! – என்கிறார். அப்படிச் சொன்னதாக ‘மித்திரன்’ வெளியிட்டிருக்கிறது.

அன்பர் ஆச்சாரியார் அவர்கள் இதுபோது கூறும் இதனைத்தான் நாம் அடிக்கடி காட்டி வருகிறோம்.

ஆனால், அதனை இன்று வெளியிடுவதை* வெகு நாளாகவே, கவனித்து வந்திருக்க வேண்டும் அவர். ஆனால், இதுவரை, அதை வெளியிடவில்லை. பிரச்னை, தன்னைக் கடித்ததும், ‘பார்! பார்! உண்மைதான் போலும்’ என்று, நொந்த மனதோடு கூறுகிறார். ‘தமது சுரண்டலே பிரதானம்’ என்று இங்கு உலவும் வடநாட்டுப் பணாதிபத்யக்காரர்களைப் பற்றி இவ்விதம் பேசச் செய்தது, வேறெதுவுமல்ல. ஆச்சாரியார் ஐந்து கோடி கடன் கேட்டார், சர்க்கார் சார்பில்! மக்களை–அதாவது பணாதிபத்யக் காரர்களைப்–பார்த்து கடன் கேட்டது, சென்னை அரசாங்கம். சில பணாதிபதிகளும், பாங்கிகளும், கம்பெனிகளும் தந்தன– ஆனால், வட நாட்டாரால் நடத்தப்படும் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் பேசாது இருந்துவிட்டனவாம்! “பணத்தோட்டம்” என்று கூறத்தக்க அளவில் இப்போதிருப்பவை, பாங்கிகளும், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளுந்தானே! இவைகளில்தானே, சேமிக்கப்படும் தொகை கோடிக்கணக்கில் புரள்கிறது. புரளும் கோடிகளில் சில லட்சங்களைத் தரவும்–இனாமாக அல்ல! கடனாக!!–வடநாட்டினர் ஆதிக்கத்திலுள்ளவை, இசையவில்லையாம்.

---

* சில சொற்கள் விடுபட்டுள்ளன.

இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளும், பாங்கிகளுமான ''பணத் தோட்டம்'' வடநாட்டவர் ஆதிக்கத்தில்தானே, இருக்கிறது!

இந்தப் பணத் தோட்டத்திலிருந்து ஒரு சிறு பழம்கூட கிடைக்க வில்லை, 'பசி! பசி!!' எனக் கதறிய அன்பர் ஆச்சாரியாருக்கு. எனவே, உண்மை விளக்கம் – ஆத்திரத்தின் விளைவால் உதடுகளைத் தாண்டி ஓடி வந்திருக்கிறது!! அதை, அவர், தென் இந்திய வர்த்தக சபையில் எப்படி வெளியிட்டிருக்கிறார் தெரியுமா?

''சென்னை மாகாணத்திலிருந்து ஆறுகோடி ரூபாய் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளுக்கென்று ஒவ்வொரு வருடமும் போகிறது. இந்த ஆறு கோடியும் நமது மக்களிடமிருந்து தான் செல்கிறது. இவைகளைப் பெறும் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் மிகப் பெரும்பாலானவை மாகாணத்துக்கு வெளியில் இருப்பவை தான் (Mostly out side companies). ஆனால் நாட்டின் முக்கிய தேவைகளான அணைக்கட்டு, மின்சாரம் ஆகிய திட்டங்களுக் கான பணத்துக்கோ நான் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. இந்தக் கம்பெனிகளைப் பார்த்து நான் கடன் கேட்கும்போது அவைகளை நான் ஒன்றும் தர்மம் கேட்கவில்லை. 'எனது மக்கள் உன்னிடம் சேர்த்து வைத்திருப்பதைக் கொடேன்' என்றுதான் கேட்கிறேன்''

ஆத்திரமும் சோகமும் தென்படுகிறது இந்த வார்த்தைகளில். அதனாலேயே 'மித்திரனும்' மேற்படி படத்தைப் போட்டுக் காட்டுகிறது! இன்று ஆச்சாரியார், 'பணமில்லாததால்' கதறும் காட்சியினைத்தான், நாம் அடிக்கடி சுட்டிக் காட்டி வந்திருக் கிறோம். 'வடநாட்டு வாணிப முதலைகளின் நோக்கம் சுரண்டுவதுதான்! அவர்களுக்கு நமது நாட்டைப்பற்றிக் கவலை சிறிதும் இல்லை!!' என்று நாம் கூறியபோதெல்லாம், மிரட்டியும் உருட்டு விழியைக்காட்டியும் சீறினரே அவர்கள் இப்போதென்ன கூறமுடியும்? அவர்கள் போற்றித்துதிக்கும் ஆச்சாரியார் கூறுகிறார்! வடநாட்டு வாணிப அதிபர்களுக்கு நமது மக்கள் நலனில் அக்கரையில்லை, என ஆவேசத்தோடு கூறுகிறார்!! பணநெருக்கடி யால் தாக்குண்டு, திகைத்து, செய்வகை தெரியாது விழித்து, கடன் கேட்டு, களைப்புற்று, திண்டாடிய பின் தெரிவிக்கிறார் இதனை அது* என்று. எப்போதும் அவர்கள் ஒத்துழைப்பதில்லை என்று தெரிவிக்கிறார். அதோடு நின்றுவிடவில்லை, அன்பர் ஆச்சாரியார். வடநாட்டு வணிகர்களின் கெடுமதியைச் சுட்டிக் காட்டியதோடு இருந்துவிடவில்லை. 'டில்லி' சர்க்காரைப் பற்றியும், சில முத்துக்களைச் சிந்தியுள்ளார் – அதனை வைத்து 'இந்து'

---

* சில சொற்கள் விடுபட்டுள்ளன.

இதழும் தலையங்கம் எழுதியுள்ளது. ஆனால் அது அத்தனையும், இத்தனை நாட்களாக நாம் கூவிவந்ததுதான். காட்டுக்கூச்சல் என்றனர் நமது கனவான்கள்! இன்று சித்திரமும் தலையங்கமும் தீட்டப் படுகிறது!! 'டில்லி' சர்க்காரைப்பார்த்து, ஆச்சாரியார் கோருகிறார்.

'நாங்கள் செலுத்தும் வருமான வரியில் அதிகப்பங்கு வேண்டும்.

கலால் வரியில் பங்குதர வேண்டும்.

இவைகளைத் தருவது மட்டுமல்ல. சுங்க வரியைச் சுரண்டிக் கொண்டே போகிறீர்கள். 80 கோடி; டில்லிக்குப் போகிறது. இதிலே பங்கில்லை என்று அரசியலமைப்பு கூறுகிறது.

நாங்கள் ஏற்றுமதி செய்யும் பொருள்கள் மூலம் கிடைக்கும் வரியில் எங்களுக்கும் பங்கு வேண்டும்.''

கேட்பது ஆச்சாரியார்! நாமல்ல! ஆச்சாரியார் இந்தக் கருத்தை வெளியிடுமுன், தென்னிந்திய வர்த்தக சபையின் தலைவராகயிருக்கும்–இருந்துவரும்! – செட்டிநாட்டுச் சீமான் M.A. சிதம்பரம் இந்த வரிப் பிரச்னை குறித்து கொஞ்சம் காரசாரமாகப் பேசியிருக்கிறார். இந்த 'சில்லரை' விஷயங்களில் இதுவரை கவனம் செலுத்தாத 'பிரபுக்கள் பீடம்' இப்போது கதறியிருக்கிறது. காரணம், நமது முரசொலி காதைக் குடைந்ததாலா அல்லது வடக்கின் சூடு இப்போதுதான் உரைத்ததாலா என்பதைக் கவனிக்குமுன், அந்தச் சீமான் பேசியதன் கருத்தை உங்கள் பார்வைக்கு வைக்கிறோம். சில்லரையென்று கருதப்பட்டனவே, முன்பு! இப்போது பாரீர்!!

''சென்னை வளமுள்ளது– ஆனால் தொழில் துறையில் முன்னேறவில்லை. நாம், மத்திய சர்க்காரிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கவில்லை. தெற்கில் ஒரு இரும்புத் தொழிற்சாலை உள்ளதா? தெற்கில் எவ்வளவு இரும்புச் சுரங்கங்கள் உள்ளன! எண்ணெய் பரிசோதனைச் சாலை ஒன்று ஏற்படுத்தக்கோரு கிறோம் இன்னும் பதிலில்லை. விஞ்ஞான ஆராய்ச்சி சாலை எதுவும் தெற்கில் இல்லை. நமது துறைமுகவளம் குறித்து, மத்தியசர்க்கார் சிறிதும் சிந்தித்தாரில்லை. இரும்பும், மாங்கனீசும், லிக்னைட்டும், நமது பூமியில் ஏராளமாக இருக்கிறது. ஆனால் அதைத் தோண்ட சிரத்தைகொள்ளவில்லை. மத்திய சர்க்கார் பாரபட்சத்தோடு நடக்கிறது. நாம் பின்தங்கிக் கிடக்கிறோம்.''

தெற்கு பாலைவனமாக இருப்பது குறித்து அவர் பேசியிருக்கிறார். அவர் பேசியதிலுள்ள நோக்கம் எதுவாயினும் இருக்கலாம்! ஆனால், அவர் கூற்று அத்தனையும் உண்மை தானே!! – அவர், வர்த்தகசபையின் தலைவர், லாபக்கழுகு.

ஆனால் அவரது கூற்றிலுள்ள உண்மை – நமது பூமியிலிருந்து விளைந்து செல்லும் பொருள்களுக்கு சுங்கவரி போட்டு, அதன்மூலம் கோடிக்கணக்கில் பணம் குவிக்கிறதே டில்லி!! இதை எவரே, மறுக்கமுடியும். நாம் கூறினால், சீறினர்! இப்போது 'காங்கிரசுக்கு' மோகினியாக விளங்குவோர் செப்புகிறார்கள்,

.... *

கொடுப்பதில்லை எதுவும்.
தெற்கு தேய்கிறது.

என்பதாக வர்த்தகசபையின் தலைவர் கூற, 'ஆம்' என்று ஆவேசத்தோடு ஆச்சாரியார் தேசீய இதழ்கள் ஆமோதித்து எழுதுகின்றன! அன்பர் ஆச்சாரியார் அவர்கள், வர்த்தகசபைத் தலைவரின் வார்த்தைகளைக் கேட்டபிறகு, முதலமைச்சர் என்கிற முறையில் இன்னும் சில உண்மைகளை வெளியிடுகிறார்– புத்திமதிகள் கூறுவதுபோல. அவை, மக்களைப் பார்த்து அல்ல கூறியது–வர்த்தகர்களுக்கு.

"வர்த்தக சபையினர் தாமிருக்கும் ராஜ்யங்களைப் பற்றி கவலை கொள்ள வேண்டும். அப்படியிருந்தால், 'மாகாண சர்க்காருக்கு ஏதாவது கிடைக்க முடியும்"

"வரிகளிலிருந்து தப்ப நினைக்கிறார்கள். அதனால் தொலைவிலே இருக்கும் மத்திய சர்க்காருடனே நமது விவகாரம் இருக்கட்டும் என்று எண்ணுகிறார்கள்"

"அதனாலேயே அவர்கள் மத்திய சர்க்காரைப்பற்றியே சிரத்தை கொள்கிறார்கள்"

"அருகிலிருக்கும் மாகாண சர்க்காரின் கட்டுப்பாட்டிலிருந்தால், தப்ப முடியாதல்லவா? அதனால் தொலைவிலிருப்பதும், எவ்வளவோ காரியங்களைக் கவனிக்க வேண்டிய நிலையிலிருப்பது மான மத்திய சர்க்காருக்கே கட்டுப்பட விரும்புகிறார்கள்!"

"இது நியாயமல்ல. ராஜ்யவருமானத்துக்கு உதவுங்கள். ராஜ்யத்துக்காக பாடுபடுங்கள்" தென்னிந்திய வர்த்தகர்களைப் பார்த்து செப்பியுள்ளார் இதனை. என்ன பொருள் இதற்கு?

இங்குள்ள வர்த்தகர்கள் மாகாண சர்க்காருக்கு கட்டுப் படாமல் தப்புகிறார்கள். காரணம், மத்திய சர்க்காரைச் சுலபத்தில் ஏமாற்ற முடியும். ஏனெனில்– அது தொலைவிலிருக்கிறது. பெரிய உபகண்டத்தையே கண்காணிக்க வேண்டியிருக்கிறது.

.... * சில வரிகள் விடுபட்டுள்ளன.

இதுதானே, ஆச்சாரியார் கூற்று தெரிவிக்கிறது நமக்கு! மாகாண சர்க்காரின் பொறுப்பில், வர்த்தகர்களின் வருமான வரியும், சுங்க வரியும் இருக்குமேயானால் எளிதில் தப்ப முடியாதென் கிறாரே, அவர். அப்படியானால் லாபவேட்டைக் காரர்களின் பணம் எவ்வளவு குவியும் சர்க்கார் பொக்கிஷத்தில்! – இதனை, எண்ணிப்பார்க்கக் கோருகிறோம். பிரிவினை யென்றால் சீறுவோரை.

பெரிய வர்த்தகர்கள் ஏமாற்றுகிறார்கள். அதனால் வருமானம் நஷ்டம். டில்லி வரிகளைக்கொண்டு செல்கின்றது.

வருமான நஷ்டம்.
வடநாட்டு கம்பெனிகள் சுரண்டுகின்றன.
நமக்கு உதவுவதில்லை.
டில்லி பீடம்– பாரபட்சம் காட்டுகிறது. தெற்கு தேய்கிறது.

இத்தனையையும் தாங்கிக்கொண்டு ஏன், நாம் அவதியுற வேண்டும்? நம்மை நாமே, பாதுகாத்துக்கொள்ளும் நிலை பெற்றால், கோடிக்கணக்கில் வருமானம் புரளும்! நமது சர்க்காரும் தாம் நினைத்ததைச் செய்ய முடியுமே! இருந்தும் ஏன், நாம் வளமிழந்து வாழ்விழந்து வதைபட வேண்டும்? முன்னாள் நிதியமைச்சர் கோபாலரெட்டி கூறினார்–சீதாராமரெட்டி செப்பினார்–ஓமந்தூரார் அண்மையில்கூட சென்னை மேல் சபையில் பேசினார். அத்தனைபேரும், சர்க்காரிலிருந்தபோது, கண்ட சஞ்சலத்தால், உண்மையை உரைத்தனர் – "மத்தியசர்க்கார் மாகாணங்களை மதிப்பதில்லை" என்பதாக – இப்போது ஆச்சாரியாரது 'ஆலாபனம்' ஆரம்பம்! அவர்கள் இருந்த 'பீடத்தில்' இவர் இருப்பதால்!! இதனால், உண்மை விளங்குகிறதே, எவர் சென்னையில் அதிகாரத்துக்கு வந்தாலும் இதே கதிதான் என்று. இந்த உண்மையைத் தோழர்கள் உணரவேண்டுகிறோம்.

ஆச்சாரியார், இத்தகைய கருத்துக்களை அறிவிப்பது, இன்று அவரே நெருக்கடியால் தாக்கப்பட்டதன் விளைவு தானாகும்.

இந்த நெருக்கடி எதுவுமின்றி, நமது தாயகம், சுகமாக வாழ வேண்டுமென்றால், டில்லியின் தொடர்பு துண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் நல்வாழ்வு மலரமுடியும்!

மித்திரனின் சித்திரத்தைக் கண்டபோது, நம் சிந்தனை ரதம் ஓடியதோடுகூட, சிரிப்பும் வந்தது நமக்கு. பசுவுக்குத் தீனி வைக்கிறார் ஒருவர்! ஆனால் பாலை; வேறு சிலர் கறக்கிறார்கள்!! இந்தக் 'கொள்ளை'யைக் கண்டதும், "அட! திருட்டுப் பசங்களே. தீனிவைப்பது நான். மாடு என்னுடையது. நீங்களா பாலைக் கறக்கிறீர்கள்" என்று, ஆத்திரத்தோடு,

கேட்கவில்லை—பாயவில்லை—தீனிவைப்பவர். உட்கார்ந்தபடியே பரிதாபத்தோடு கேட்கிறார்—திருடர்களை: **"எனக்குக்கூட கொஞ்சம் பங்கு கொடப்பா!"** என்று. மித்திரன், இந்த வார்த்தைகளை, தீனிவைக்கும் ஆச்சாரியார் கூறுவதுபோல, அச்சிட்டுள்ளது. மாடு நமது! காத்துவளர்ப்பது நமது சர்க்கார்!! கறந்து செல்வதோ திருடர்கள். அத்திருடர்களிடம் போய் பங்கா கேட்பர், எவரும்! கையில் கிடைத்ததைக்கொண்டு திருடரை விரட்டிவிட்டு, பாலைக் கறந்து புசிப்பர். ஆனால், 'மித்திரன்' பங்கு கேட்கிறது! மித்திரன் மட்டுமா, அது சார்ந்திருக்கும் தேசியத் தலைவர்களே (ஆச்சாரியார் உள்பட) டில்லியிடம் பங்குதானே கேட்கின்றனர். கேலிக்குரிய தாகத் தோன்றவில்லையா, இது! நாம் கேட்பது, பங்கு அல்ல; முழுபால். திருடனுக்கு பாலைக் கறக்கச் சொல்லிவிட்டு, பங்கு கேட்கும் காரியத்தில் இறங்குவது கோழைத்தனமன்றோ? ஆனாலும் பரவாயில்லை! திருட்டுப் போவதே தெரியாது இருந்தோர்க்கு 'பங்கு' கேட்கும் பக்குவம் இப்போது தானே வந்துள்ளது. போகப்போக தூக்கம் கலையும்! துணிவும் பிறக்கும்!! திராவிடநாடு திராவிடருக்கே என்ற முழக்கமும் அவர்தம் உதடுகளில் ஒலிக்கும்!!!

– திராவிட நாடு
10.05.1952

இந்தி எதிர்ப்பு முதற்போர் - 1938

'விடுதலை' நிருபரின் பழைய நினைவுகள்

- பேராசிரியர் அன்பு கணபதி

அந்தக் கால பிரிட்டிஷ் அரசின் அழைப்பினை ஏற்று, இலண்டனுக்கு விமானத்தில் செல்லும் வழியில், விபத்துக்குள்ளாகி எங்குச் சென்றார் என்றே அறியமுடியாத முறையில் 'ஓமான் கடல்' கொள்ளை கொண்ட கோமான் – நீதிக்கட்சியின் இணையிலாத் தலைவர் – தஞ்சை மண் தந்த தறுகணாளர் சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களின் நல்லன்பும் ஆளுமையும் நிறைந்து நின்றதன் பயனாக, வடமொழிக் கல்விக்கு மட்டுமே இடந்தந்து நின்ற திருவையாற்றிலுள்ள அரசர் கல்லூரியில் தாய்த் தமிழுக்கும் இடம் கிடைத்தது. ஆம், அன்று தஞ்சை மாவட்டம் நாட்டாண்மைக் கழகத்தின், அதாவது தஞ்சை ஜில்லா போர்டின் தலைவராக ஆட்சி செலுத்தி வந்தவர் பன்னீர் செல்வம் அவர்கள் ஆவார். அதே காலமாகிய 20–30களில் தஞ்சை வட்டக் கழகத்தின் (தாலுக்கா போர்டு ஆட்சித் தலைவராக விளங்கியவர்) கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவுமிருந்து தமிழ் வளர்த்து வந்தவர், தமிழவேள் த.வே. உமாமகேசுவரம் பிள்ளை ஆவார். இவர், நல்ல வழக்கறிஞராகவும் நீதிக் கட்சியின் பிறிதொரு தலைவராகவும் சிறந்து விளங்கினார். இவர்கள் இருவரின் இணைந்த முயற்சியின் பயனாகவே திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ் வித்துவான் படிப்புக்கு இடம் கிடைத்தது.

திருவையாறு சமஸ்கிருத கல்லூரியில் தமிழ் வித்துவான் வந்த வரலாறு

தஞ்சை சரபோசி மன்னர் ஏற்படுத்தி வைத்திருந்த கல்விக்கான அறக்கட்டளையின் கீழ் அய்யாற்றுக் கல்லூரியில் வடமொழிக்கு மட்டுமே அன்று இடம் இருந்தது. அதனால் ஒருசார் மாணவர்கள் மட்டுமே பயன்பெற்று வந்தனர். நான்கு ஆண்டுகள் இலவச உணவும், உறையுளும் பெற்று, 'சிரோன்மணி' முதலிய வடமொழிப் பட்டங்களைப் பெற்று வந்தனர், அந்த இனத்து இளைஞர்கள். தமிழினத்தைச் சேர்ந்த உண்மைத் தமிழர்களுக்கு அக்கல்லூரியில் இடமே இல்லை என்ற நிலை இருந்தது.

இருபதுகளின் இறுதி ஆண்டுகளில் அன்று சென்னைப் பல்கலைக்கழகம், பேராசிரியர் கா.ரா. நமசிவாய முதலியார் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் விளைவாக, 4 ஆண்டுகள் தமிழ் பயின்று வித்துவான் என்ற புலவர் தகுதியினை அக்காலத் தமிழ் இளைஞர்கள் பெறுவதற்கு ஏற்றவழி உண்டாயிற்று. அவ்வித்துவான் பட்டத்திற்கான பயிற்சி வகுப்பு; அய்யாற்றுக் கல்லூரியில் ஏற்படுத்தப்பெற்றது. பார்ப்பனர்களின் பெரிய எதிர்ப்புக்கு மத்தியில், மேற்குறித்த இரு தலைவர்களும் முயன்று, சட்டச் சிக்கலை எல்லாம் தங்கள் அறிவின் திறத்தால் வென்று, தமிழ் இளைஞர்கள் தமிழ் பயில வழி வகுத்தனர். அந்தக் காலம் முதலே பார்ப்பனரல்லாத இளைஞர்கள் மேற்குறித்த அய்யாற்று அரசர் கல்லூரியில் இலவச உணவும் உறையுளும் பெற்று, 4 ஆண்டுகள் தமிழ் பயின்று வித்துவான்களாக வெளிவந்தனர். அந்த முப்பதுகளில் தமிழ்ப் புலமைபெற, தமிழகத்திலே அந்த ஒரு கல்லூரி மட்டுமே இருந்தது. பிறகுதான் கரந்தை, மயிலம், தருமபுரம், மேலைச்சிவபுரி முதலான இடங்களில் தமிழ்க் கல்லூரிகள் ஏற்பட்டன.

அரசர் கல்லூரியில் தமிழ் படித்துப் பட்டம் பெற்ற ஆயிரக் கணக்கானோர், தமிழ் நாட்டு உயர்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் முறையே தமிழாசிரியர்களாகவும், தமிழ்ப் பேராசிரியர்களாகவும் விளங்கி வந்தனர்; இன்றும் விளங்கி வருகின்றனர்.

கட்டாய இந்தித் திணிப்பு!

1934–38 ஆகிய நான்கு ஆண்டுகள் கல்வி பயின்று, அந்த அய்யாற்று அரசர் கல்லூரியின் வழியே வித்துவான் பட்டம் பெற்றவர்களில் நானும் ஒருவன். அந்தக் காலகட்டத்தில்தான் பிரிட்டிஷாரின் இரட்டை ஆட்சி முறையில் தேர்தலில், அதுவரையில் நாடாண்டு கொண்டிருந்த நீதிக் கட்சியை வென்று, காங்கிரஸ் கட்சியின் சார்பில் தமிழக ஆட்சி முதல்வராக –

அன்று Premier என்பது அப்பதவிக்குரிய பெயர். பிற்காலத்தில் இராஜாஜி என்று அழைக்கப்பட்ட சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் பொறுப்பேற்றார். அவர் ஆட்சிக்கு வந்தவுடன் கல்வியில் சில சீர்திருத்தங்களைச் செய்தார். அவற்றுள் ஒன்று தமிழ்நாட்டு உயர்பள்ளிகளில், முதல் மூன்று படிவங்களில் அதாவது 6, 7, 8 ஆம் வகுப்பு மாணவர்கள் தங்கள் படிப்பில் ஒரு பிரிவாகக் கட்டாயம் இந்தி மொழியையும் பயின்றாக, வேண்டும் என்பது. இத் திட்டத்திற்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. கல்வி வல்ல தமிழகத்துப் பெருமக்கள் பலர் – மறைமலை அடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், ந.மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய பலர், கட்டாய இந்தித் திட்டத்தைக் கைவிடுமாறு ஆச்சாரியாருக்கு வேண்டுகோள் விடுத்தனர். சிறந்த சொல்லாற்றலும் வாதத் திறமையும் படைத்திருந்த நாவலர் பாரதியார் அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கினார். நல்ல காங்கிரஸ்காரர். ஆனால் 'இந்திக் கட்டாயம்' என்ற விஷயத்தில் மாறுபாடு கொண்டு Open letter to C. Rajagopala Acharar என்று ஆங்கிலத்தில் ஒரு கடிதம் எழுதினார்! அதனால் பேராசிரியர் பதவியை இழந்தார். ஆச்சாரியார் அதனைச் செவிமடுக்கவில்லை. மாறாக மாணவர்கள் கட்டாயம் இந்தியைப் படித்தாக வேண்டும் என்ற திட்டத்தினை, நடைமுறைப்படுத்தினார்.

ஆச்சாரியார் தம்முடைய நீண்டநாள் தோழர் என்பதையும் பாராது, கட்டாய இந்தித் திட்டத்தினை எதிர்த்துத் தந்தை பெரியார் அவர்கள் ஓர் இயக்கமே தொடங்கினார். நாடெங்கிலும் சென்று மக்களை ஆயிரக்கணக்கில் கூட்டி, அக் கூட்டங்களில் பேசினார். தாம் நடத்தி வந்த விடுதலை, குடிஅரசு ஆகிய பத்திரிகைகளில் எழுதினார். நாட்டில் மக்களிடையே மெல்ல மெல்ல ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படத் தொடங்கியது.

1938 ஏப்ரலில் வித்துவான் தேர்வு எழுதிய நான், சூன் மாதத்தில் தேர்வில் வெற்றி பெற்றுப் பட்டமும் பெற்றேன். நான் பிறந்த ஊர் தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டத்தில் அமைந்துள்ள பசுபதி கோயில் என்ற ஊராகும். எங்களூரில் அன்று வாழ்ந்து வந்த பெரியவர்கள் எல்லாம் நீதிக்கட்சி என்ற பார்ப்பனரல்லாதார் இயக்கமான 'ஜஸ்டிஸ்' பார்ட்டியில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த உழவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். என்னையொத்த இளைய தலைமுறையைச் சேர்ந்த பலரும் பகுத்தறிவு இயக்கமான தன்மானக் கொள்கையில் விருப்புடையவர்களாக இருந்தோம். என்னுடைய 10ஆம் வயதிலிருந்து நான் சுயமரியாதைக்காரன். இன்றைய

73ஆம் வயதிலும் சிறிதும் பாதை மாறாது, சுயமரியாதைக் கொள்கைகளை வாழ்க்கையில் கடைப்பிடித்து வருபவன்; பெரியாரிடம் தீராக் காதலும் பக்தியும் கொண்டு நடந்து வருபவன்.

பாபநாசத்தில் சுயமரியாதை இயக்க மாநாடு

அந்த ஆண்டு சூன் மாதத் தொடக்கத்தில் என்னையொத்த இளைஞர்கள் கூடிப்பேசி, பாபநாசம் தாலுக்கா சுயமரியாதை மாநாட்டினை எங்களூரில் நடத்தினோம். மிகச்சிறந்த பேச்சாளர் களில் ஒருவராகவும், இளைய உள்ளங்களின் நம்பிக்கை நட்சத்திர மாகவும் சுயமரியாதை இயக்கத்தில் அன்று சுடர்விட்டு விளங்கிவந்த தோழர் பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி அவர்களை, அந்த மாநாட்டின் தலைவராக அழைத்து மகிழ்ந்தோம். இயக்க வளர்ச்சிக்குப் பாடுபடும் தொண்டர்களில் முதன்மை பெற்று விளங்கி வந்த அவர், அன்று வரை மாநாடுகளிலும் பொதுக்கூட்ட மேடைகளிலும் பெரும் பேச்சாளராக இருந்து வந்தாரே தவிர, எதற்கும் தலைமை தாங்கியவர் அல்லர். முதலும் கடைசியுமாக, எங்களூர் மாநாட்டில்தான் தலைமை வகித்து பெரியாரின் முன்பு, நல்லதோர் தலைமையுரை ஆற்றினார். பெரியார் ஈ.வெ.ரா., கி.ஆ.பெ. விசுவநாதம், பட்டிவீரன்பட்டி ஊ.பு.அ. சவுந்தர பாண்டியன், விருதுநகர் வி.வி.இராமசாமி, இலட்சுமிரதன் பாரதி, மணவை ரெ. திருமலைசாமி முதலான சுயமரியாதை இயக்கத்தின் பெரும் தலைவர்கள் பலரும் பங்குகொண்ட மாநாடு அது. அம்மாநாட்டில் ஆச்சாரியாரின் கட்டாய இந்தியைக் கண்டித்துத் தீர்மானம் போட்டோம்.

திருச்சியிலிருந்து வீரநடைப் படை!

திருச்சியிலிருந்து தஞ்சை மாவட்டத்திலுள்ள வேதாரண்யத் திற்கு இராசகோபாலாச்சாரியார் தலைமையில் நடந்து சென்று, சத்தியாக்கிரம் செய்து கடலில் உப்பு எடுத்த நிகழ்ச்சி போல, கட்டாய இந்தியை எதிர்த்து ஊரூராகப் பிரச்சாரம் செய்துகொண்டு, சென்னையை நோக்கி, ஒரு தொண்டர் படை நடந்தே செல்ல வேண்டும் என்ற முடிவும் இம்மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டது. அதன் மூளையாக இருந்து தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தவர் அப்போது திருச்சியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த இயக்க வார ஏடான நகரதூதன் ஆசிரியராவார். திருச்சி மாவட்டத்து மணப்பாறையைப் பிறந்தவூராகக் கொண்டி ருந்த அப்பெரியவர், சிறந்த பேச்சாளர் அல்லர்; ஆனால் நல்ல வல்ல எழுத்தாளர்; சிறந்த நிர்வாகத் திறனும் படைத்தவராக இருந்தவர்.

இம்மாநாட்டுத் தீர்மானத்தை ஒட்டி, திருச்சியிலிருந்து 100 பேர் கொண்ட 'தமிழர் பெரும்படை' சென்னை நோக்கிக் கால்நடையாக ஆகஸ்ட் 1இல் புறப்பட்டது. தமிழார்வம் கொண்ட மக்கள் ஒவ்வோர் ஊரிலும், இப்படையினரை வரவேற்று உணவும் இரவில் தங்க இடமும் தந்து உபசரித்தனர். பகலெல்லாம் நடை, மாலையில் பொதுக்கூட்டம்; இரவில் அவ்வூரில் தங்குதல். இவ்வாறு 40 நாள்கள் நடந்து சென்று, செப்டம்பர் 11இல் சென்னையை அடைந்தனர். வழி நெடுக,

"இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே"

"எப் பக்கம் வந்து புகுந்துவிடும்? – இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?"

என்ற முழக்கங்களை எழுப்பிக்கொண்டே சென்றது, தமிழர் பெரும்படை.

அவர்கள்,

"ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்– நீ
தேடிவந்த பேடியுள்ள நாடி தல்லவே"

என்ற வழிநடைப் பாடலையும் பாடிக்கொண்டு சென்றனர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் அன்றைய தலைவராக விளங்கிய இராவ் சாகிப் அய். குமாரசாமிப்பிள்ளை தமிழர் பெரும் படையின் தலைமைப் பொறுப்பு ஏற்றார். பட்டுக்கோட்டை அழகிரிசாமி தளபதியாக இருந்து படையை நடத்தி வந்தார். அறுபது நிரம்பிய அன்னை மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் இப்படையின் தொண்டருள் ஒருவராக, 300 மைல் நடந்து வந்தார். திருப்பூர் மொய்தீன், குடந்தை ரவூப், பெரியகுளம் அரங்கசாமி பிள்ளை முதலியோர் இப்படையில் வந்தவருள் குறிக்கத்தக்க பெரியவர்கள் ஆவார். 'ஏனையோரெல்லாம் உணர்ச்சி மிகுந்த இளைஞர்கள். இப்படைக்கு எங்களூர் பசுபதி கோயிலில் வரவேற்பும் விருந்தும் அளித்துக் கூட்டம் நடத்தினோம்.

படையில் ஒரு தொண்டனானேன்:

அப்போது 21 வயது நிரம்பியிருந்த எனக்கு திருமணம் ஆகியிருந்தது. ஏன்? 1932இல் திருமணம் ஆனபிறகுதான் இரண்டாண்டு கழித்து 1934இல் திருவையாற்றுத் தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து வித்துவானுக்குப் படித்தேன். 1938இல் முடித்துப் பட்டமும் பெற்றுவிட்டேன். தமிழர் பெரும்படைக்கு எங்களூரில் வரவேற்பு அளித்தயான், படையில் ஒரு தொண்டனாகச் சேர்ந்து அங்கிருந்து தொடர்ந்து வந்து, சென்னை சேர்ந்தேன்.

அக்காலத்தில் இயக்கத்தின் நாளேடான 'விடுதலை' ஈரோட்டி லிருந்து வெளிவந்து கொண்டிருந்தது. அன்றன்று நடைபெறும் சென்னைச் செய்திகளைத் தொகுத்து எழுதி, விடுதலைக்கு அனுப்பி வருவது அன்று முதல் என் செயல்களில் ஒன்றாயிற்று. பத்திரிகைக்குச் செய்தி திரட்டி அனுப்பும் பணியை நான், மாணவனாக இருக்கும்போதே செய்து பழகியவன். அதனை இனிய பொழுதுபோக்காகச் செய்து மகிழ்ந்து வந்தவன்.

அணிவகுத்த தமிழறிஞர்கள்

ஆகஸ்டு 11ந் தேதி சென்னையடைந்த தமிழர் பெரும்படை யைச் சென்னை மாநகரம் உற்சாகமாக வரவேற்றது. சென்னைப் பெத்துநாயக்கன் பேட்டை இந்தி எதிர்ப்பின் கோட்டையாக அன்று விளங்கி வந்தது. அங்கு, தங்கசாலைத் தெரு, 330 எண்ணுள்ள வீட்டின் மாடியில் தங்கி, சித்த மருத்துவ டாக்டராகத் தொழிலாற்றிச் சித்தானந்த வைத்திய சாலையையை நடத்திவந்த சிறந்த சமூக சேவகியும் பெண்கள் முன்னேற்றத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு தொண்டாற்றி வந்தவருமான அன்னை டாக்டர் எஸ். தருமாம்பாள் அவர்கள், இப்படையினரை வரவேற்று விருந்தளித்து உபசரித்தார். செட்டிநாட்டுக் குமாரராஜா எம்.ஏ. முத்தையாச் செட்டியார், திருவொற்றியூர் டி.சண்முகம் பிள்ளை, பிற்காலத்தில் சென்னை மேயராக வந்த சுந்தர்ராவ் நாயுடு, தொழில்சங்கத் தலைவரில் ஒருவரான மேயர் பாசுதேவ் ஆல்பர்ட் ஜேசுதாசன், ரெவரண்ட் ஆ. அருள் தங்கையா முதலான பெரு மக்களின் உதவியைப் பெற்றே தருமாம்பாள், படையினரை உபசரித்தார். தமிழ்ப்பற்றுமிக்க துறவிகளான சாமி சண்முகானந்தா, அருணகிரிநாதர், ஈழத்துச் சிவானந்த அடிகள் முதலானோரும், பண்டித எஸ்.எஸ். அருணகிரிநாதர், பண்டித டி.எல். திருஞான சம்பந்த முதலியார், மயிலை சிவமுத்து, பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார், டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை, பண்டிதை நாராயணியம்மையார் முதலிய தமிழறிஞர்களும் உறுதுணையாக நின்று உதவினர். தியாகராய நகரில் வாழ்ந்து கொண்டிருந்த உண்மைத் தமிழர் செ.த. நாயகம், சிறந்த பேச்சாளர்களாகத் திகழ்ந்த அறிஞர் சி.என். அண்ணாதுரை, கே. எம். பாலசுப்பிர மணியம், மறை. திருநாவுக்கரசு ஆகியோர் இவ்விந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றனர்.

சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி காரியதரிசிகளில் ஒருவராக இருந்து தமிழ் பற்று காரணமாக, அதிலிருந்து விலகி இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குகொண்ட என்.வி. நடராசன், தொழிற்சங்கவாதியாக விளங்கிய டி.வி. முருகேசன், வி.எஸ். தேவசுந்தரம், காஞ்சி கணேசன், ஆர். அங்கமுத்து, பஞ்சாட்சரம், அம்பாள்பொடி சிவஞானம், ஆர் நாராயணி,

பார்வதி அம்மையார், வ. தாமரைக்கண்ணி முதலான இளைய அங்கத்தினரும் இத்தொண்டில் பெரும்பங்கு கொண்டனர்.

அண்மையில் காஞ்சியில் காலஞ்சென்ற மருத்துவ மேதை டாக்டர் ப. சிற்சபை, அன்னை தருமாம்பாளின் வளர்ப்பு மகனாக அவருடனேயே தங்கி, மருத்துவத் தொண்டு செய்து வந்தார். அம்மாவின் நிழலாகத் திரை மறைவில் இருந்து, டாக்டர் சிற்சபை இந்தி எதிர்ப்புப் போரில் பங்குகொண்டு பணி யாற்றினார்.

தினம் இரண்டு தொண்டர்கள் பெத்து நாக்கன் பேட்டை, காசி விசுவநாதர் கோயிலிருந்து, மக்கள் ஏராளமானோர் புடைசூழக் காலை 10 மணி அளவில் புறப்பட்டு ஊர்வலமாக 'இந்தி ஒழிக', 'தமிழ் வாழ்க' என்று முழங்கிக்கொண்டு தங்காசலைத் தெரு சவுக்கார்பேட்டையிலுள்ள இந்து தியாலாஜிகல் உயர்பள்ளி முன்பு வந்து நிற்பர். தொண்டர் இருவர் மட்டும் பள்ளியின் வாயில் அருகிலேயே சென்று 'இந்தி ஒழிக', தமிழ் வாழ்க' என உரத்த குரலில் இந்தி எதிர்ப்பு முழக்கம் செய்தனர். சற்று நேரத்திற்கெல்லாம், முன்னரே அங்கு வந்து காத்திருந்த போலீசார், அத் தொண்டர்களைக் கைது செய்து போலீஸ் வேனில் ஏற்றிக்கொண்டு, நேரே .... ரயில் நிலையம் எதிரே உள்ள ஜார்ஜ் டவுன் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு அழைத்து செல்வர். அங்குள்ள குற்றவியல் நீதிபதி, அவர்களை விசாரித்து ஆளுக்கு 6 மாதத்துக்குக் குறையாது கடுங்காவல் தண்டனை விதிப்பார். உடன் அத் தொண்டர்கள் சென்னை மத்திய சிறையில் சென்று அடைக்கப்பட்டனர்.

இந்த தியாலாஜிகல் பள்ளியின் முன்பு மறியல் செய்வோர் பெண்களாயின், மாலையில் அவர்களை இரயில் வழி வேலூர் சிறைக்கு இட்டுச் சென்றனர்.

செய்தி சேகரிக்கும் பணி

இத்தொண்டர்களை, ஊர்வலமாகச் செல்வதன் முன்பு, காலை 8 மணி வாக்கில் வழக்கமான ஒரு ஸ்டுடியோவுக்கு அழைத்துச் சென்று, 'பாஸ்போர்ட்' அளவில் போட்டோ எடுக்கச் செய்வதும், மறுநாள் அப்போட்டோக்களை ஈரோட்டிலுள்ள 'விடுதலை'க்குத் தபாலில் அனுப்புவதும் வழக்கமான என் பணிகளாகும். அதனோடு, தொண்டர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை, அவர்களின் பெயர் விவரம், ஏதேனும் சிறப்பான நிகழ்ச்சி நடந்தால் அதன் விவரச் சுருக்கம் ஆகியவற்றை எழுதித் தந்தி மூலம் அன்றன்று ஈரோட்டு விடுதலைக்கு அனுப்புவதும்,

.... சில சொற்கள் விடுபட்டுள்ளன.

அன்றைய இரவில் நிதானமாக நிகழ்ச்சிகளை விவரித்தெழுதி மறுநாள் 'புத்தக அஞ்சலில் 'விடுதலை'க்கு அனுப்புவதும் தினசரி நான் செய்து வந்த பணிகளாக இருந்தன. இதற்காக எனக்காகும் செலவுகளை, இந்தி எதிர்ப்பு நிலையத்தின் பொறுப்பினை – ஏற்றுப் பெரியார் அவர்களால் நேரிடையாக அவர் கண்காணிப்பில் சென்னையில் தங்கி நடத்தி வந்த நிர்வாகி கொடுத்து வந்தார்.

இந்தி எதிர்ப்பினை நடத்தச் சென்னையில் இந்தி எதிர்ப்புச் சர்வாதிகாரி என்ற பெயரில் ஒருவர் அந்நிலையத்தில் தங்கி யிருப்பார். ஒரு சர்வாதிகாரி கைது ஆகிவிட்டார். இன்னொருவர் நேரிடையாகப் பெரியார் அவர்களாலேயே நியமிக்கப் பெறுவர். நிலைய வரவு செலவில் அவருக்கு சர்வாதிகாரருக்கு எந்த அதிகாரமும் இல்லை. பெயருக்கு அவர் சர்வாதிகாரி. எல்லாச் செயல்களையும் பெரியாரின் பிரதிநிதியாக அவரால் நிர்வாகியாக அங்கு வைக்கப்பெற்றவரே கவனித்து வருவார். இந்த முறையில் பெரியார் இசைவு பெறாமல் எந்தச் செலவும் செய்ய முடியாது. அப்படி ஒரு கட்டுப்பாடு.

நான் திருச்சிப் பெரியார் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களால் டாக்டர் தர்மாம்பாளின் பரிந்துரைக்கு ஏற்ப, சென்னையின் 'விடுதலை' நிருபராக நியமிக்கப்பெற்றவன். திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 தருவதாக ஏற்பாடு. முதல் சில மாதங்கள் டாக்டர் தர்மாம்பாள் அவர்களே மாத ஊதியமாக ரூ. இருபத்தைந்து கொடுத்து வந்தார். நிலைய நிர்வாகி என் ஊதியத்தைக் கொடுப்பதில்லை. பெரியார் இசைவு இல்லாது தான் தருவதற்கில்லை எனக் கூறிவிட்டார். பெரியாரால் நியமிக்கப்பெற்ற ஈரோடு சண்முக வேலாயுதம் அப்போதைய நிர்வாகி. அவர் என்னிடம் நட்பு முறையில் பழகினாலும், "பெரியாருக்கு எழுதிக் கேளுங்கள்; அவர் சொன்னால் உங்கள் ஊதியத்தை நான் தருகிறேன்" என்றார். நான் அப்போது ஊரிலிருந்த என் மனைவி அன்பு வல்லியைச் சென்னைக்கு அழைத்துக்கொண்டேன். டாக்டர் தர்மாம்பாள் அவர்களின் 330 எண் வீட்டுக்கு அருகிலேயே 333 எண்ணுள்ள இல்லத்தில் ஒரு பகுதியில் ஒரு சிறிய அறையும் சிறு கூடமும் இணைந்த இடத்தில் குடியிருந்து வந்தேன்.

பெரியாருக்கு எழுதிய கடிதமும் பெரியாரின் பதில் கடிதமும்

பெரியார் அவர்களுக்கு நான் 'விடுதலை' நிருபராகப் பணியாற்றி வருவதற்கான ஊதியத்தைக் கோரி, ஒரு கடிதம் எழுதினேன். என்னுடைய எழுத்துக்களை அதாவது 'விடுதலை'யில் நான் எழுதி அனுப்பி வருவதைப் பலரிடமும் பாராட்டிச் சொல்லி வந்தார் பெரியார் என்ற செய்தி பலமுறை என் காதுகளுக்கு எட்டியது. என்றாலும் எனது முதல் கடிதத்திற்குப் பெரியாரிட

மிருந்து எந்த பதிலும் வராமையால், அடுத்து ஒரு கடிதம் எழுதினேன். அன்றைய என் இளமை வேகத்தில் அந்தக் கடிதத்தில் சற்றுக்காரமாக, 'குடும்பத்தோடு சென்னையில் தங்கி இருந்து பணியாற்றி வரும் நான், அதிலும் விடுதலைக்குச் செய்தி சேகரித்து சென்னையின் பல பகுதிகளுக்கும் சென்று முயன்று எழுதி வருபவன் வாழ வேண்டாமா? காற்றையா நான் சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியும்?" என்று எழுதியிருந்தேன். மறு தபாலிலேயே பெரியாரிடமிருந்து அவர் கைப்படவே, அஞ்சல் கவரின் முகவரி உட்பட எழுதப்பட்ட ஒரு கடிதம் எனக்கு வந்தது? அதில் என் செயலைக் கடுமையாகக் கண்டித்து எழுதியிருந்தார். இன்றைக்குச் சரியாக 50 ஆண்டுகளும் 40 நாள்களும் நிரம்பிய பெரியாரின் 27-7-39 தேதியிட்ட அக்கடிதத்தை ஒரு பொக்கிஷமாக எனக்குக் கிடைத்த ஒரு பெரும்பேறாக எண்ணி, இந்நாள் வரையில் பேணிக்காப்பாற்றி வந்துள்ளேன். இந்தக் கடிதம் 50 ஆண்டுகளுக்கு முன்பே காரியமாற்றுவதில் பெரியார் என்னென்ன நடைமுறைகளைக் கைக்கொண்டிருந்தார் என்பதும் அவரது சிக்கனமும் கண்டிப்பும் விளங்குகிறது அன்றோ?

நான் சென்னையில் வாழ்ந்த இந்த 50 ஆண்டுகளில் 10க்கு மேற்பட்ட வாடகை வீடுகளில் குடியிருந்து வந்துள்ளேன். சென்ற 35 ஆண்டுகளாகச் செனாய் நகரிலுள்ள என் சொந்த வீட்டில் இப்போது வாழ்ந்து வருகின்றேன். 2 வாரங்களுக்கு முன்பு என் வீட்டில் ஏதோ நினைவில் பழைய குப்பைகளைக் கிளறிக் கொண்டிருந்தவன் பார்வையில், இதுவரையில் நான் பாதுகாத்து வந்த பெரியாரின் இந்தக் கடிதம் கிடைத்தது! இனமானக் காவலர் விடுதலை ஆசிரியர் தோழர் வீரமணியைச் சென்ற வாரம் சந்தித்துப் பழைய விவரங்கள் சிலவற்றை அவருடன் பகிர்ந்து கொண்டேன். அவர் யோசனைக்கு இணங்க, பெரியாரின் அந்தக் கடிதத்தை அப்படியே நிழற்படமாக்கி, இதில் இணைத் திருப்பதுடன் என் பழைய நினைவுகளைத் தமிழக மக்களுடன் இங்கே பகிர்ந்துகொள்கிறேன்.

என் பொது வாழ்விலும் தமிழாசிரியனாகப் பச்சையப்பன் கல்லூரியில் பொறுப்பேற்று நான் ஆற்றி வந்துள்ள பணிகளையும் 1941ல் தமிழாசிரியர்களின் உயர்வுக்கு என் இனிய நண்பர்களான முருக இலக்குவனார், முத்து இராசாக்கண்ணனார், ம.ரா. மாணிக்கம், காபிரியேல் பள்ளிப் புலவர் பா. சொக்கலிங்கம் ஆகியவர்களுடன் இணைந்து இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபா மண்டபத்தில் தமிழ்த்தென்றல் திரு.வி.க. தென்பட்டினம் பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகிய இருவரின் முன்னிலையில் தொடங்கப்பெற்ற தமிழ் வித்துவான் சங்கமும்,



அன்புள்ள தோழர் அவர்களுக்கு உமது 2 ஆம் தேதி கடிதம் கிடைத்தது. அதைப் பற்றி எனக்கு எழுதியது ஒழுங்கீனம் என்றே கருதுகிறேன். அங்குள்ள பிரமுகர்களைக் கண்டு, உம்மை நேரில் பேசி வேலைக்கமர்த்தியவர்களைக் கொண்டு பேசி முடிவு செய்து அவர்கள் மூலம் எனக்கு எழுதியிருந்தால் ஒழுங்காய் இருந்திருக்கும். அதை விட்டு தாறுமாறாய் எழுதி இருப்பது சிறிதும் யோக்கியப் பொறுப்பான காரியம் என்று கருதமுடியாது.

- ஈ.வெ. ராமசாமி

அது மாகாணத் தமிழாசிரியர் சங்கம், மாநிலத் தமிழாசிரியர் கழகம், தமிழகத் தமிழாசிரியர் கழகம் எனப் பெயர்கள் மாற்றம் பெற்று, டாக்டர் அ.சி. செட்டியார், டாக்டர். மு.வ., சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழ் நெறிக் காவலர் மயிலை சிவமுத்து, பண்டித எஸ்.எஸ். அருணகிரிநாதர் ஆகிய சான்றோர் களுடன் இணைந்து தொடர்ந்து தொண்டாற்றியதன் பயனாக தமிழகக் கல்விக் கூடங்களில் பணி செய்து வந்த – வரும் தமிழாசிரியப் பெருமக்கள் அவ்வப்போது பெற்ற நலன்கள் ஏராளம். வருகின்ற 1990 இறுதியில் தமிழகத் தமிழாசிரியர் கழகம் ஆண்டுகள் 50 நிரம்பிப் பொன்விழா நடத்தும் முயற்சியில் முனைந்து நிற்கின்றது.

தலைவர்கள் பெரு முழக்கம்

இனி, 1938 செப்டம்பர் 11இல் சென்னை வந்து சேர்ந்த தமிழர் பெரும் படைக்குச் சிறப்பானதோர் வரவேற்புக் கொடுக்கப் பட்டது. அன்று திலகர் கட்டம் எனப் பெயர் வழங்கிவந்த திருவல்லிக்கேணியின் நெடிய கடற்கரை மணலில் மிகப்பெரிய கூட்டம் ஒன்று நடைபெற்றது. இப்போது உள்ளதுபோல் அறிஞர் அண்ணா அவர்கள் 1967இல் முதல்வராக அமைந்து, இன்றைய முதல்வர் அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சராகப் பணியாற்றிய கலைஞர் கருணாநிதி மூலம், கடற்கரையில் அழகிய மேடையொன்று ‘சீரணி அரங்கம்’ என்ற பெயரால் அமைந்துள்ளது போன்ற ஏற்பாடு அன்று இல்லை. கூட்டம் நடத்தும் போதெல்லாம் அவ்வப்போது சவுக்கு, பலகை முதலியவற்றால் முதல்நாள் மேடை அமைத்து, கூட்டம் முடிந்ததும் மறுநாள் பிரித்து எடுத்துச் செல்வதுமான நிலை இருந்தது. கூட்டம் நடத்துவோர்க்கு இதனால் மிகுந்த பொருட் செலவும், காலவிரயமும் ஆயின. ஒலிபெருக்கி, மின்விளக்கு ஆகியவை அமைத்திட அவ்வப்போது கடற்கரைச் சாலையிலிருந்து தொடர்பு கொண்டு செல்ல வேண்டும். ‘சீரணி அரங்கம்’ அமைக்கப் பெற்றப்பிறகு, அந்த வசதிகளெல்லாம் சுலபமாகக் கிடைக்கப்பெறுவதோடு, தண்ணீர் ஓரத்தில் கரையை நோக்கி அமைந்துள்ள மேடைக்குச் செல்ல, ... மணலில் இறங்கி நடந்தே செல்ல வேண்டும். கரையிலிருந்து சீரணி அரங்கிற்குச் செல்லும் சிமெண்ட்டுச் சாலை இப்போது உள்ளதால் வண்டியில் நேரே தலைவர்களும் பேச்சாளர்களும் மேடைக்கே சென்று விடலாம்.

பல்லாயிரக்கணக்கில் வந்து கூடியிருந்த அந்தக் கடற்கரைக் கூட்டத்திற்குத் தென்மொழி, வடமொழி, ஆங்கிலம் மூன்றிலுமாகப் பலரும் புலமைபெற்று விளங்கிய பல்லாவரத்து முனிவர் சுவாமி

.... சில சொற்கள் விடுபட்டுள்ளன.

வேதாசலம் எனும் மறைமலை அடிகள் தலைமை ஏற்றார். படைத்தலைவர் அய்.குமாரசாமிப் பிள்ளை, தளபதி பட்டுக்கோட்டை அழகிரிசாமி, தாழ்த்தப்பட்டோரின் தனித் தலைவர் என். சிவராஜ், மீனாம்பாள் சிவராஜ், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, சண்டே அப்சர்வர் பி. பாலசுப்பிரமணியம், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், பெரியார் ஈ.வெ.ரா. முதலான பெருமக்கள் பலர் பேசினர். மாலை 6 மணிக்குத் தொடங்கிய கூட்டம் நள்ளிரவு கடந்து இரவு 1 மணி அளவில் முடிந்தது. அதன் பின்னர்ப் பொதுமக்கள் பலரும், சென்னையின் பல பகுதிகளிலும் இருந்து வந்து கலந்து கொண்டவர்கள் நடந்தே வீடு சென்றனர்.

இந்த ஆண்டில்தான் பெரியார் அவர்களுக்கு மிகப்பெரிய அளவில் செப்டம்பர் 17இல் முதன்முதலாகத் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

''தமிழ்நாடு தமிழருக்கே!''

இந்தி எதிர்ப்புப் போரின் விளைவாகத் தமிழ் மக்களிடத்தில் பெரும் எழுச்சி ஏற்பட்டது. 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் நாடெங்கிலும் எழுந்தது. இயக்கத்தில் பெண்கள் பெரும்பங்கு கொள்ள வேண்டும் எனப் பெரியார் பெரிதும் விரும்பினார்; பல கூட்டங்களிலும் தனிப்பட்ட முறையிலும் இக்கருத்தினை வலியுறுத்தி வந்தார். பெரியாரின் இவ்வெண்ணத் திற்குச் செயல் வடிவம் தர எண்ணிய அன்னை டாக்டர் தருமாம்பாள், பெண்களைக் கூட்டிச் சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் மாநாடு ஒன்று நடத்தினார்.

'தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு' என்பது அதன் பெயர். 13–11–38ல் நடந்த இம் மாநாடுதான் முதன்முதலாக முழுவதும் பெண்களே கலந்துகொண்ட, பெண்களால் நடத்தப்பெற்ற மாநாடாகும். பெரியார் ஈ.வெ.ரா. ஒருவர் மட்டுமே சிறப்புப் பேருரை ஆற்ற அழைக்கப்பட்டார். மறைமலை அடிகளாரின் மூத்த மகள் பண்டிதை. திருவரங்க நீலாம்பிகை மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். எழுச்சி மிக்க ஓர் உரையினைத் தனித் தமிழில் ஆற்றினார். வல்லை பாலசுப்பிரமணியத்தின் துணைவியார் இளைய வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார் வரவேற்புத் தலைவராக இருந்து அரியதோர் உரையாற்றி அனைவரையும் வரவேற்றார். தொடக்கத்தில் தாழ்த்தப்பட்டோரினத் தலைவியான மீனாம்பாள் சிவராஜ், மாநாட்டில் வில் புலி கயல் பொறித்த தமிழ்க் கொடியை ஏற்றி வைத்தார். டாக்டர் தருமாம்பாள், பண்டிதை நாராயணியம்மையார், மூவலூர் இராமமிர்தத்தம்மையார் ஆகியோர் இந்தியை எதிர்த்தும், மொழி, இனம், நாடு, சமூகம்

இவற்றின் உயர்வு குறித்தும், பெண்கள் முன்னேற்றம் பற்றியும் உரையாற்றினார்.

பெண்கள் மாநாட்டில் ''பெரியார்'' பட்டம்

பகல் 1 மணி அளவில் பெத்துநாயக்கன் பேட்டைக் காசி விசுவநாதர் கோயில் முன்பிருந்து இந்தி எதிர்ப்பு, தமிழ் வாழ்த்து, பெண்ணடிமை ஒழிப்பு ஆகியவை கொண்ட கொடிகளையும் தமிழக மூவரசர்களின் சின்னம் பொறிக்கப்பெற்ற தமிழ்க்கொடி களையும் ஏந்தி, 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற ஒலி எழுப்பி பெத்தநாயக்கன்தெரு, தங்கசாலைத் தெரு, ஒற்றைவாடைத் தெரு ஆகியவற்றின் வழியாகப் பல்லாயிரக்கணக்கான பெண்கள் பின்வர, 3 மணியளவில் ஒற்றைவாடை நாடகக் கொட்டகை வந்தடைந்தனர்.

மாநாட்டில் சிறந்த தீர்மானங்கள் பல நிறைவேற்றப் பெற்றன. அவற்றிலுள்ள முக்கியமானவை பின்வருவன: 1. இந்தியாவில் இதுவரை தோன்றியுள்ள சீர்திருத்தத் தலைவர்களால் செய்ய முடியாமற் போன பணிகளைச் செய்துவருவதாலும், தென்னாட்டில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெருந்தலைவராக விளங்கு வதாலும், அவர் பெயரை இனி எழுத்திலும் சொல்லிலும் பெரியார் என்று சிறப்புப் பெயராலேயே வழங்குவது. 2. புரோகிதர்களையும் வீண் ஆடம்பரங்களையும் மணவிழா போன்றவற்றில் விலக்குவது. 3. கலப்பு மணத்தை ஆதரிப்பது. 4. விதவை மணத்தைப் போற்றி அவர்தம் கண்ணீர் துடைப்பது. 5. தமிழ்நாட்டுப் பள்ளிக் கூடங்களில் தமிழைக் கட்டாயப் பாடமாக வைப்பதுடன் பிற எந்த மொழியையும் கட்டாயமாக்கு வதைத் தவிர்ப்பது. 6. இந்தி எதிர்ப்பில் இதுவரை சிறை சென்ற பெரியார், செ. தெ. நாயகம், ஈழத்தடிகள், அருணகிரி அடிகள், கே.எம். பாலசுப்பிரமணியம், சி.என்.அண்ணாதுரை உள்ளிட்ட பெரிய தலைவர்களையும் தொண்டர்களையும் இம்மாநாடு போற்றிப் பாராட்டுகிறது. அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறது. 7. ஆச்சாரியார் கொண்டு வந்துள்ள கட்டாய இந்தித் திட்டத்தை எதிர்ப்பது. 8. பீச், போர்ட், பார்க் என்பன போன்று புகைவண்டி நிலையங்களின் பெயர்களைக் கடற்கரை, கோட்டை, பூங்கா என்றழைப்பது!

இத்தீர்மானங்களின் மீது பண்டிதை கண்ணம்மாள் (டாக்டர் மா. இராசமாணிக்கம் துணைவியார்), கலைமகள் அம்மையார் (டாக்டர் சிற்சபையின் துணைவி), மூவலூர் அம்மையார், ஆர். நாராயணி (பின்னர் இந்தி எதிர்ப்புச் சர்வாதிகாரிகளில் ஒருவராக இருந்தவர்), மலர் முகத்தம்மையார் (மயிலை முத்துவின் தமக்கை),

இராணி அம்மாள் (அண்ணா அவர்களின் துணைவி) ஆகியோர் பேசினர்.

முடிவில் பெரியார் அவர்கள் பெருத்த வாழ்த்தொலிகளுக்கு இடையே ஒரு மணி நேரம் எழுச்சிமிக்கதொரு உரை ஆற்றினார். 'நம் தாய்மொழிக்கு வந்துள்ள இடையூற்றினைக் களைந்தெறிய வாரீர்! தாய்மார்களைத் தமிழ்நாடு விரும்பி அழைக்கிறது' என்ற மையக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது பெரியார் அவர்களின் பேருரை.

மறக்குலப் பெண்கள் போர்க்கோலம்!

மிகச்சிறப்பாக நடைபெற்ற இம்மாநாட்டின் மறுநாள் 14–11–38 அன்று காலையில் காசி விசுவநாதர் கோயில் முன்பிருந்து டாக்டர் தருமாம்பாள், மூவலூர் இராமாமிர்தத்தம்மையார், பட்டம்மாள் (திருவாரூர் பாலசுந்தரப் பாவலரின் துணைவியார்), சீதம்மாள் (டாக்டர் தருமாம்பாளின் வளர்ப்பு மகன் சமரசத்தின் துணைவி, கையில் கைக் குழந்தையுடன்) பல்லாயிரக்கணக்கான பெண்களும் ஆண்களும் உடன்வர, தமிழ்க்கொடி பொறிக்கப் பெற்ற சேலைகளை இடையில் அணிந்தும் கையில் தமிழ்க்கொடி பிடித்தும் ஊர்வலமாகத் தங்கசாலை வீதி வழியே தமிழ்முழக்கம் எழுப்பிக்கொண்டு ஊர்வலமாகச் சென்று இந்திமொழி கட்டாயப்பாடமாக வைக்கப்பெற்றுள்ள இந்து தியாலாஜிகல் பள்ளி முன்பு சென்று நின்று இந்தி எதிர்ப்பு முழக்கமிட்டனர். தெருவில் வழிநெடுகிலும் ஏராளமானோர் இத்தாய்மார் அய்வர்க்கும் மாலையிட்டு வழியனுப்பினர். கூட்டத்தினைக் கட்டுப்படுத்த போலீசார் மிகவும் திணறினர்.

அய்வரும் கைது செய்யப்பெற்று நீதிமன்றம் அழைத்துச் செல்லப்பட்டனர். நீதிமன்றத்தில் "தமிழகத்தில் தமிழ் தலைக்க வேண்டும்; இந்தி ஒழிய வேண்டும். இதற்காக நாங்கள் எந்தத் தியாகமும் செய்யத் தயார்" என நீதிபதியிடம் கூறினர். அவர் எவ்வளவோ கேட்டுக்கொண்டும், முன்வைத்த காலைப் பின்வைக்கமாட்டோம்" என்று கூறி 6 வாரம் சிறை வாழ்வு பெற்றனர். அதுவரை இந்திப்போரில் சுமார் 400 பேர் மட்டுமே சிறை சென்றிருந்தனர்.

டாக்டர் தருமாம்பாள் முதலிய தாய்மார் அதிலும் கையில் குழந்தையுடனும் சிறை சென்ற காட்சி, மக்களிடையே பெரும் பரபரப்பையும் ஆவேசத்தையும் ஏற்படுத்தியது. மறு வாரத்தில் பெண்கள் எழுவர் பண்டித எஸ்.எஸ். அருணகிரிநாதரின் துணைவி உண்ணாமலையம்மையார் (தமிழரசி என்ற 1 வயது குழந்தை யுடன்), என்.வி.நடராசனின் துணைவி புவனேசுவரி (சோமசுந்தரம்

என்ற 2 வயது குழந்தையுடன்– அக்குழந்தையே இன்றைய என்.வி.என்.சோமு), டி.வி.முருகேசனின் துணைவி சிவசங்கரி (லோகநாயகி என்ற 2 வயது குழந்தையுடன்), வி.எஸ். தேவசுந்தரத்தின் துணைவி சரோஜினி (மார்த்தாண்டம் என்ற 2 வயதுக் குழந்தையுடன்) கலைமகள் அம்மையார் (டாக்டர் தருமாம்பாள் மருமகளும், டாக்டர் சிற்சபையின் துணைவியுமாவார்), ஞானசுந்தரி (விமலா என்ற 2 வயது குழந்தையுடன்) சதுரங்கப் பட்டினத்து தனக்கோட்டி அம்மையார் ஆகியோர், பள்ளி முன் நின்று மறியல் செய்து சிறை சென்றனர்.

அடுத்த வாரத்தில் 70 வயது கடந்த பாட்டி தேவாரம் இராசம்மாள் (திவான் பகதூர் கோபால்சாமி முதலியாரின் தமக்கையும், பண்டிதை நாராயணி அம்மையாரின் தாயும் ஆனவர்), சேக்காடு அங்கயற்கண்ணி, வேலூர் துளசிபாய் (பிராமணர்) ஆகியோர் சிறை சென்றனர்.

இவ்வாறு வாரத்தில் முதல் நாளாகிய திங்கள்தோறும் பெண்களும், ஏனைய 4 நாள்களில் ஆண் தொண்டர்களும் தொடர்ந்து இந்தியை எதிர்த்து ஆயிரக்கணக்கில் சிறைகளைச் சென்று நிரப்பினர்.

கோர்ட்டில் ஆசராகப் பெரியாருக்கு ஆணை

5–12–38இல் கோர்ட்டில் ஆசராகுமாறு பெரியாருக்கு சம்மன் வந்தது. அன்றும் மறுநாள் 6–12–38 அன்றும் விசாரணை நடந்தது. 3–11–38இல் நடந்த பெண்கள் மாநாட்டிலும் மறுநாள் நடந்த சிறை புகுந்த பெண்களுக்கான பாராட்டுக் கூட்டத்திலும் பெரியார் பெண்களைச் சிறைபுகுமாறு தூண்டினார் என்ற குற்றச்சாட்டு படிக்கப்பட்டது. விசாரணை முடிந்ததும் நீதி மன்றத்தில் பெரியார் ஒரு அறிக்கை படித்தார்.

"நான் சம்பந்தப்பட்டிருக்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஆளும் காங்கிரசிற்கு விரோதமானது; காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்க்க முயல்வது. பார்ப்பனத்துவேசம் கொண்டது" என்றெல்லாம் சட்டசபையிலும், பொதுக்கூட்டங்களிலும் முதலமைச்சர் ஆச்சாரியார் பேசியுள்ளார். எங்கள் கோரிக்கையில் நியாயம் உள்ளது. இந்த நீதிமன்றத்தில் எனக்கு நியாயம் கிடைக்காது. மந்திரிமார்கள் திருப்தி அடையும் வகையில் எவ்வளவு அதிகத் தண்டனை கொடுக்க முடியுமோ அதைக் கொடுங்கள்; சிறையில் எவ்வளவு தாழ்ந்த வகுப்புத் தர முடியுமோ அதனைத் தருக" என்ற கருத்தினைக் கொண்ட பெரியாரின் நீண்ட அறிக்கையைக் கேட்ட நீதிபதி மாலை 4 மணி அளவில், "பெரியார் செய்த குற்றம் இரண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோராண்டு கடுங்காவலும்

ஓராயிரம் அபராதமும் கட்டவேண்டும்" எனத் தீர்ப்பளித்து, இரண்டு தண்டனைகளையும் ஒரே சமயத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அபராதம் கட்டுவது பெரியார் சாதகத்தில் என்றும் கிடையாது. ஆதலால், அதற்காக மேலும் ஓராண்டு, ஆக 3 ஆண்டுகள் தண்டனை ஆயிற்று. ஆக மொத்தத்தில் மூன்றாண்டு களான தண்டனையை மொத்தத்தில் என்ற வகையில் ஒன்றரை ஆண்டு அனுபவிக்க வேண்டும் என்பதாயிற்று.

பெரியார் சென்னைச் சிறையிலும், பின்னர்ப் பெல்லாரி சிறையிலும், கடைசியாகக் கோவைச் சிறையிலும் இருந்து உடல் நலிவுற்றார். 167 நாள்கள் சிறையில் வாடிய பெரியாரை, எவ்விதக் காரணமும் காட்டாமலே திடீரென ஆச்சாரியார் ஆட்சி விடுதலை செய்தது!

சில அரசியல் காரணங்களால் 27–10–39இல் ஆச்சாரியார் ஆட்சி கவிழ்ந்தது. கவர்னரின் நேரிடை ஆட்சியில் அவரது ஆலோசகர் ஆட்சி நடத்தி வந்தனர். கட்டாய இந்தியும் ஒழிந்தது. இது நடந்தது 1940 ஜனவரியில்.

இவ்வாறு இந்தி எதிர்ப்பின் முதற்போர் 1937ல் தொடங்கி, 3 ஆண்டு காலம் பலரையும் சிறைக்கு அனுப்பி, துன்பங்கள் அனுபவிக்கச் செய்தபிறகு முடிவாக ஒழிந்தது.

இதே ஆச்சாரியார் 1967இல் இந்தி கூடாது என்று அறிஞர் அண்ணா அவர்களுடன் இணைந்து மேடைகளில் பேசியதும், நினைவுக்கு வருகிறது.

பேரறிஞர் அண்ணா தமிழக ஆட்சியின் முதல்வரானார். இன்றைய நம் முதல்வரான டாக்டர் கலைஞர் முதலான பதின்மர் ஆட்சிக் கட்டிலேறினர். இது தமிழக வரலாறு.

முதல் இந்தி எதிர்ப்புப் போரால் டாக்டர் தருமாம்பாள் கொண்ட பங்கினையும் ஆற்றிய தொண்டினையும் மதிக்கும் வகையில், அவர் பெயரால் ஏதேனும் அறக்கட்டளை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தமிழர்களின் பேரவா. அந்தக் காலத்தில் உடனிருந்து பணியாற்றியவன் என்ற வகையில் முதல்வர் கலைஞர் அவர்கட்கு என் அன்பு வேண்டுதல். கலைஞர் செய்வாராக என வேண்டி இதனை நிறைவு செய்கின்றேன்.

– விடுதலை

தந்தை பெரியார் 111வது ஆண்டு பிறந்த நாள் மலர், 1989

கலைஞர் மு. கருணாநிதி நடத்திய முரசொலி

– தி. வ. மெய்கண்டார்

1938ல் தமிழ் நாட்டில் இந்தி திணிக்கப்பெற்றபோது, திராவிட இயக்கம் புத்துணர்ச்சியும்–புது உற்சாகமும் பெற்று எழுச்சியுடன் விளங்கியது!

தந்தை பெரியார் அவர்களின் சீரிய தலைமையின் கீழ், தளபதி அண்ணா அவர்களின் அதிதீவிர அரசியல் நுழைவு, இளைஞர்களுக்கு அரசியல் ஆவேசத்தை ஏற்படுத்தியது!

தந்தை பெரியாரும்–அறிஞர் அண்ணாவும்–புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும்–சுயமரியாதைச் சுடர் அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமியும்–தமிழகத்தில் சுற்றிச் சுற்றி வந்து, 'தங்கள் பாதம் படாத சிற்றூர்களே இல்லை' என்று சொல்லத்தக்க அளவுக்குப் பயணம் செய்து– சுயமரியாதைக் கருத்துக்களைப் பரப்பி ஊக்கப்படுத்தினர்!

'தமிழ்நாடு தமிழருக்கே' என்னும் உரிமை முழக்கம், விண்ணைப் பிளந்தது! தமிழர்தம் விடுதலை இயக்கத்தை இளைஞர் மொய்த்தனர்!

அதன்விளைவாக, 1948ல் மீண்டும் இந்தி திணிக்கப் பெற்றபோது, திராவிடர் கழகத்தின் வெண்கொற்றக் குடையின் கீழ்த்தமிழர்கள் ஒன்று திரண்டனர்!

அவ்விதம் திரண்ட தமிழர்களுக்குக் கருத்துத் தெளிவும்– கொள்கை விளக்கமும் அளிக்க ஏராளமான இதழ்கள் தேவைப்பட்டன; பெரியாரின்

'குடியரசு' வார இதழும், 'பகுத்தறிவு' வார இதழும், 'விடுதலை' நாளிதழும் நீண்ட நாட்களாக இப்பணியில் ஈடுபட்டிருந்தன!

1942 மார்ச்சு எட்டாம் நாள் தொடங்கிய அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு' வார இதழ், தமிழர்கள் உள்ளத்தில் தனி இடம் பெற்றது; அரசியல், கலை, இலக்கியம், மதம் பற்றி எழுதிய அறிஞரின் இதழ், தமிழ் இளைஞர்களின் வைர வாளாக விளங்கிற்று!

இவ்விதழின் கருத்தழகில் ஈடுபட்ட அக்காலத்து இளைஞர்கள், 'தாங்களும் ஏடு நடத்த வேண்டும்–கொள்கை விளக்கம் தர வேண்டும்' என்னும் முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 16ஆம் நாள் தோன்றிய காஞ்சி மணிமொழியாரின் 'போர்வாள்' வார இதழும், ஏறத்தாழ அதே காலத்தில் தோன்றி–புதுவையிலிருந்து வெளிவந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'குயில்' (கவிதை) மாத இதழும், 'டார்பிடோ' ஏ.பி. சனார்த்தனம் அவர்களின் 'தோழன்' இதழும், என்.வி. நடராசனின் 'திராவிடன்' இதழும், புலவர் பு. செல்வராசன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'கதிரவன்' வார இதழும், மீ.சு. இளமுருகு அவர்களை ஆசிரியராகக் கொண்டு பெரியகுளத்திலிருந்து வந்த 'தமிழ்ச் சுடர்' மாத இதழும், ஏ.எஸ்.வேணு பி.ஏ. அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'நியூ ஜஸ்டிஸ்' ஆங்கில வார இதழும் முக்கியமானவைகளாகக் குறிக்கத்தக்கவையாகும்.

இவற்றுள், 'கதிரவன்' ஏடு, 'அவாள் ஏட்டுக்குச் சவால்' என்ற அளவுக்கு–அக்காலத்தில் திராவிடர் இயக்கத்தவர் பாராட்டும் அளவுக்கு–இன்றைய 'கல்கி' இதழ் அளவில்–சீரோடும் சிறப்போடும் வெளிவந்தது.

1947ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த முருகு. சுப்பிரமணியன்–நாரா. நாச்சியப்பன் ஆகியோரை ஆசிரியராகக் கொண்ட 'பொன்னி' மாத இதழ், புதுமை இலக்கியத்தில் புதுவேகம் காட்டித் தமிழர்களை மகிழ்வித்தது!

இதனையொட்டி, நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் 'மன்றம்' மாத இதழும், பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் 'புது வாழ்வு' மாத இதழும்–1948 பொங்கல் திருநாளன்று வெளிவந்தன!

இதே பொங்கல் புது நாளில் (1948–ல்), கலைஞர் மு. கருணாநிதியின் 'முரசொலி' இதழ், மாத இதழாக அன்று –

'வார இதழாக' வெளியாயிற்று! அப்போது கலைஞருக்கு வயது, இருபத்திமூன்று மட்டுமே முடிந்திருந்தது!

இதழ் நடத்திய திராவிட இயக்க அன்பர்கள் எவரும், பிறவிச் செல்வர்கள் அல்லர்; ஏழ்மையைத் தோழமையாகக் கொண்டவர்கள்; குன்று குன்றாகப் பொருளைக் குவித்துக் கொண்டு இப்பணியில் ஈடுபடவில்லை; கொள்கையையே மூலதனமாக்கி- குன்றிமணி யாகப் பொருளைத் திரட்டி இத்திருப்பணியில் ஈடுபட்டனர்!

அறிஞரின் 'திராவிட நாடு' இதழிலிருந்து கலைஞரின் 'முரசொலி' இதழ் உட்பட – இயக்கத்தவர்கள் ஏடு நடத்திட ஏற்றுக்கொண்ட இன்னல்கள், எவர் கண்களிலும் கண்ணீரை வரவழைக்கும் தன்மை வாய்ந்தனவாகும்!

'முரசொலி' தவிர ஏனைய ஏடுகளின் பெயர்களைக் கேட்பதுகூட, இன்றைய இளந் தமிழ்ச் சமுதாயத்துக்கு வியப்பைத் தரும்!

மேலே குறிப்பிட்ட ஏனைய இதழ்கள் அத்தனையும் – 21 ஆண்டுக்காலம் வெளிவந்த 'திராவிட நாடு' உட்பட – சோர்ந்துபோய் நின்று விட்டன.

'எப்படியோ' – 'முரசொலி' மட்டும் தப்பிப் பிழைத்துக் கொண்டது!

பேரறிஞர் அண்ணா அவர்கள், *1965* 'முரசொலி' பொங்கல் மலருக்கு வாழ்த்துக் கூறும்போது,

> "ஒவ்வொரு நாளும் 'முரசொலி' பரணி பாடுகிறது; அதிலே காணப்படும் திருப்பள்ளி எழுச்சி, தமிழகத்தவரைத் தட்டி எழுப்புகிறது; அது கேட்டிடும் வினாக்களுக்கு விடை கூற இயலாது, ஆதிக்கக்காரர்கள் திணறுகின்றனர்"

எனக் கூறி, 'முரசொலி'யின் நற்பணியைப் போற்றிப் புகழ்ந்தார்!

உண்மைதான்; ஆனால், இந்நிலை பெற 'முரசொலி' ஏற்றுக்கொண்ட துன்பங்களும்-தொல்லைகளும் எத்தனை, எத்தனை!

இன்று ஓரளவுக்கு நிலையாக வந்துகொண்டிருக்கும் 'முரசொலி', வார இதழாகத் தத்தித் தத்தித் தளர்நடையிட்டுத் தடுக்கி விழுந்து-சோர்ந்து எழுந்து- நிலையாக நிற்க ஏற்றுக் கொண்ட இன்னல்கள் ஏராளம், ஏராளம்!

ஆர்வத் துடிப்புடன் ஆற்றிய பணிகள்

*1948*ல் 'முரசொலி' வார இதழாக வெளிவரத் தொடங்கியது

உண்மைதான் என்றாலும், 'முரசொலி'யின் பிறப்பு, அதற்கு முன்னாலேயே நிகழ்ந்துவிட்ட ஒன்றாகும்.

இதை ஆராயுமுன், கலைஞர் கருணாநிதி பள்ளி மாணவராக இருக்கும்போதே எழுத்தாற்றல் உடையவராக விளங்கி – பத்திரிகைத் துறையில் காட்டிய ஆர்வத்தையும் உணர வேண்டும்.

*1938*ல் மாலை நேரத்தில் மாணவர் பலரை அணிவகுக்கச் செய்து, திருவாரூர் வீதிகளிலே ஊர்வலம் நடத்தியபோது, இளம் கவிஞரான அவரே எழுதி–மாணவர்கள் அவருடன் சேர்ந்து ஒலித்த பாடல் இது:–

"வாருங்கள் எல்லோரும்
இந்திப் போருக்குச் சென்றிடுவோம்
வந்திருக்கும் இந்திப் பேயை
விரட்டித் திருப்பிடுவோம்!"

எழுத்தாற்றல்மிக்க இளங்கவி கருணாநிதி, பத்திரிகைத் துறையிலும் ஆர்வம் காட்டியதில் வியப்பில்லை!

*1939*ல், திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும்போது, தம்முடைய *15*–வது வயதில், 'இளைஞர் சங்கங்கள்' பல அமைத்து – 'சிறுவர் சீர்திருத்தச் சங்க'த்தின் தலைவராக விளங்கிய கருணாநிதி, 'மாணவ நேசன்' என்னும் பத்திரிகையை ஏழெட்டு மாதங்கள் நடத்தினார்; அதனை அவரே விவரிக்கிறார்:–

"'மாணவ நேசன்' என்பது, நான் நடத்திய கையெழுத்து ஏடு; நான் பள்ளியில் நடத்திய கையெழுத்து ஏடுகளை – ஒரு சமயம் – ஒருவர்தான் படிக்க முடியும்.

"நான் நடத்திய ஏடு – மாதத்திற்கு இரண்டு வெளியீடு; ஒவ்வொரு வெளியீட்டிலும் – எட்டுப் பக்கங்கள்; பிரதிகளோ – ஐம்பதுக்குக் குறையாது.

"ஐம்பது பிரதிகளையும், நானும் – சில நண்பர்களும் மட்டுமே உட்கார்ந்து 'காப்பி' எடுப்போம்; 'டெம்மி பேப்பர்' செலவை மட்டும் வசூல் செய்து கொள்வோம்; உழைப்பும், கட்டுரையும் இனாம்!"

இளமைப் பருவம் ஏற்படுத்தும் 'தகுதி'

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், ஒருமுறை ஒரு மாணவர் தந்த கையெழுத்து ஏட்டைப் படித்துவிட்டு,

"கைராட்டையால் நாடு முன்னேறும் என்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ–அவ்வளவு பைத்தியக்காரத்தனம், இந்தக் கையெழுத்துப் பத்திரிகையும்"

என்று மதிப்புரை எழுதிக் கொடுத்தார்.

ஆயினும், பிற்காலத்தில் ‘முரசொலி’ என்னும் நாளேட்டை நடத்தும் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட கருணாநிதி மாணவர்கள் நடத்தும் ஏட்டைப் பற்றித் தன் கருத்தைக் கூறுகிறார்:–

“மாணவர்கள் நடத்தும் கையெழுத்து ஏட்டால், ‘நாடு ஒரேயடியாக முன்னேறிவிடும்’ என்று யாரும் கூறவில்லை; சிறு துளி பெருவெள்ளம்; பலர் சேர்ந்ததே நாடு; அந்த நாட்டின் எதிர்காலத்திற்குரியவர்கள் மாணவர்கள்; அவர்கள், தங்கள் எண்ணங்களைச் செம்மைபடுத்திக் கொள்ள–மெருகேற்றிக் கொள்ள–கையெழுத்துப் பிரதிகள் நல்ல வாய்ப்பு அளிக்கின்றன என்பதே என் நம்பிக்கை; இளமைப் பருவத்திலே எழுதுகின்றவைகளைப் பெரிய பத்திரிகைகள் எடுத்துக் கொள்வதில்லை; அந்தப் பத்திரிகைக்கு எழுதுவது போன்ற தகுதியைக் கையெழுத்துப் பிரதியில் ஏற்படும் பயிற்சி தாராளமாகத் தருகிறது என்பேன்.’’

– ‘மறவன் மடல்’ (13–7–69) ஏட்டில் ‘நெஞ்சுக்கு நீதி’ என்ற பகுதியில்

கருணாநிதி – அத்தகைய பயிற்சியினை முறையாக மேற்கொண்டவர்!

“ஐம்பது பிரதிகளைக் கையாலேயே எழுதி வழங்குவது துன்பமாய் இருக்கிறதே” என்று சிந்தித்தபோதுதான், கலைஞருக்கு, ‘முரசொலி’ பற்றிய சிந்தனை அரும்பியது; அதுவும், வாரப் பத்திரிகை – மாதப் பத்திரிகை என்ற அளவிலே அல்ல – துண்டு வெளியீடுகளாக!

எழுத்துக் கலையை வளர்த்துக் கொண்டேன்!

கலைஞர் அது பற்றிக் கூறுகிறார்:–

“இன்று தென்னகத்துப் பெருமக்களால் ஆர்வமுடன் ஆதரிக்கப்படுகின்ற ‘முரசொலி’ ஏடு, முன்பு, திருவாரூரில் துண்டு வெளியீடாக வெளியிடப்பட்டது; திங்கள்தோறும் ஆயிரக்கணக்கிலே அச்சிடப்பட்டு – ஊர்தோறுமுள்ள திராவிட இயக்கக் கிளைகளுக்கு அனுப்பப்பட்டன; அந்தக் கிளைக் கழகத்தினர் திரட்டித் தரும் நன்கொடையினால், ‘முரசொலி துண்டறிக்கை வெளியீட்டுக் கழகம்’ வளர்ந்தது; அதன் நிரந்தர எழுத்தாளன் – நான்தான்; கழகச் செயலாளர் – தென்னன்; பொருளாளர் – டி.எஸ்.

இராசகோபால்; 'சேரன்' என்பது என் புனைப் பெயர்; அந்தப் பெயரில் நான் வளர்த்துக் கொண்டேன் – எழுத்துக் கலையை!

– 'மறவன் மடல்' (27–7–69) ஏட்டில், 'நெஞ்சுக்கு நீதி' என்ற பகுதியில்.

அதற்காகக் கலைஞர் ஏற்றுக்கொண்ட சிரமங்கள் சொல்லுந்தரமன்று! 'முரசொலி' துண்டு வெளியீடு, 1942 முதல் வெளிவந்தது; 'சேரன்' என்னும் புனைப் பெயரில் எழுதிய கருணாநிதி, தம்மை, 'ஆசிரியர்' என்றுகூட அவ்வறிக்கையில் வெளியிடவில்லை; 'எழுத்தாளர் சேரன்' என்று மட்டுமே அடக்கத்துடன் வெளியிட்டுக் கொண்டார்.

புரட்சியின் சாயல் – புயல் வீசும் நடை

5–10–44ல் அச்சியற்றி வெளிவந்த 'முரசொலி' துண்டறிக்கையில், சிதம்பரத்தில் நடைபெறவிருந்த வருணாச்சிரம மாநாட்டைக் கண்டித்து எழுதிய கட்டுரை வெளிவந்தது!

கலைஞர் கருணாநிதியின் நடை, வசீகரமானது – புரட்சித் தன்மை வாய்ந்தது – புயல் போன்றது! இலட்சோப லட்சம் தமிழர்கள், அவர் நடையில் மயங்கினர்! பள்ளி மாணவர்களும், கல்லூரிக் காளையர்களும் அதை உருப்போட்டு ஒப்புவித்து மகிழ்ந்தனர்!

இளைஞர் கருணாநிதி இருபதாவது வயதில் எழுதிய கட்டுரை இது:–

தோற்றம்: 1942	**'முரசொலி'**	முரசு 2, ஒலி 7.

ஈ.வெ.ரா. ஆண்டு 67 –
புரட்டாசித் திங்கள் 20ஆம் நாள்

எழுத்தாளர்: சேரன்	**வருணமா? மரணமா?**	செயலாளர்: தென்னன்

"தில்லையிலே – ஆம் – தீட்சிதர் கோட்டையிலே – தீன தயாபரன், கான முழக்கத்துடன் காலைத் தூக்கிக் காளியிடம் நடனம் செய்த கைலைப் பகுதியிலே – புனிதர் மாநாடாம்! பூரி தட்சணையாம்! புண்ணியக் கூட்டமாம்! புல்லர்கள் உள்ளவரை நல்லது ஏது?

'தீண்டாமை ஒழிக' என வேண்டாவெறுப்பாகக் காங்கிரசு கூறிடும் வேளையிலே – சமதர்மச் சங்கநாதம், சனாதனிகளின் காதைத் துளைக்குமளவு சுயமரியாதைக்காரர்களால் ஒலிக்கப்படும்

நேரத்திலே – 'உயர்வென்று கூறினால், அது, உண்மைத் தமிழர்கள் வாழ்வு' எனப் பண்பாடி –அகம் பிடித்த வாழ்வை அழிக்க அரிமாக்கள் புறப்பட்ட காலையிலே, வருணாச்சிரம மாநாடு கூட்டுகின்ற வக்கிரங்கள் பல உள்ளன, நாட்டிலே!

வரப்போகும் கேட்டிலே – கவனம் செலுத்த வேண்டும் வீட்டிலே!

உண்டு – உருண்டு கிடக்கும் இந்த உயரிய கருத்தினர், பிராமண – க்ஷத்திரிய – வைசிய – சூத்திரர் எனப் பிரித்து, பிழைக்கும் வழிவகுத்தனர்! நான் கூறுவதல்ல – நாடறிந்த உண்மை!

சரித்திரம் சாற்றும் சான்றுகளுடன் மதப் பாத்திரத்திலே ஊற்றிக் கொடுத்த சூத்திர சுரபானம், மறத் தமிழர் வாழ்விலே மயக்கந் தரும் பொருளாயிற்று!''

கட்டுரை முடியவில்லை; மேலும் தொடர்கிறது!

படித்து மடித்தால் பொடியாகும் –
பிரித்து பார்த்தால் எழுத்து கலையும்

பிற்காலத்தில் அறிஞர் அண்ணா, *1959* 'முரசொலி' பொங்கல் மலருக்கு வாழ்த்துக் கூறும்போது, இம்'முரசொலி'த் துண்டுத் தாளைப் பற்றிக் கூறுகிறார்:–

"'முரசொலி' வண்ணம் கொண்டு உங்கள் இல்லம் வருகிறது; இதன் முன்னாள் வடிவம் அறிவீரா? – 'படித்து மடித்தால் பொடியாகும் – பிரித்துப் பார்த்தால் எழுத்து கலையும்' என்றெண்ணத் தக்க விதத்தில், துண்டு வெளியீடாகத் திருவாரூர் மாணவரிடை உலாவிற்று அன்று!''

கலைஞரை அடையாளம் தெரிந்துகொள்ள...

"திருவாரூர் முரசொலி எழுத்தாளர் தோழர் மு. கருணாநிதி'' என்று சொன்னால்தான் அக்காலத்தவர், கலைஞரை அடையாளம் கண்டு கொள்வர்!

பிற்காலத்தில், கலைஞர் 'குடியரசி'ல் துணை ஆசிரியராகப் பணியாற்றியபோதும், 'குடியரசி'ன் *13–10–45*ந் தேதி இதழில்,

"திருவாரூர் 'முரசொலி' எழுத்தாளர் தோழர் மு. கருணாநிதி அவர்களின் தற்கால முகவரி:–

மு. கருணாநிதி, c/o 'குடியரசு' ஆபீஸ், ஈரோடு'' என்றுதான் வெளியாகி யிருந்தது.

துண்டுத் தாளாக வெளிவந்து கொண்டிருந்த 'முரசொலி' வெளியீட்டு விழாவுக்காக, *1943*ல் நாவலர் அவர்களும்,

பேராசிரியர் அன்பழகன் அவர்களும் திருவாரூருக்கு அழைக்கப் பட்டார்கள்.

அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், 'நாராயணசாமி' என்ற இயற் பெயருடன் படித்து வந்த நாவலருக்கு, அதுதான் முதல் பொதுக்கூட்டம்; தமது பெயரை, 'நாராயணசாமி' என்பதற்குப் பதிலாக 'இரா. நெடுஞ்செழியன்' என்றே விளம்பரத் தாள்களில் வெளியிட வேண்டும் – என்று கலைஞருக்குக் கடிதம் எழுதினார்.

இப்போதும் நினைக்கிறேன் – இன்பம் அலைமோதுகி...

கருணாநிதியின் படைப்புகளைப் பிற பத்திரிகைகளும் ஏற்று – வெளியிட்டுச் சிறப்புச் செய்தன.

1942–ல் வெளியான 'திராவிட நாடு' வாரப் பத்திரிகையின் மூன்றாவது இதழுக்கோ அல்லது நான்காவது இதழுக்கோ – பதினேழு வயதே முடிந்திருந்த கருணாநிதி – 'இளமைப் பலி' என்னும் கட்டுரையை எழுதி அனுப்பினார். அனுப்பிய அந்த வாரமே அக்கட்டுரை வெளிவந்தது; அச்சு வாகனம் ஏறிய கலைஞரின் முதல் கட்டுரையும் அதுவே!

இதைப் பற்றிக் கலைஞர் கூறுகிறார்:–

"நானே எழுதி– நானே படித்து மகிழும் நிலை மாறி, பத்து – நூறு பேர் படித்துப் பாராட்டும் நிலைக்கு வளர்ந்தேன்; 'நாடெங்கும் நம் கட்டுரையைப் படித்து மகிழ்வார்கள்' என்று எனக்கு நானே புகழ்ந்து கொண்டேன்.

"எனக்கு உறுதுணையாக இருந்தவரும் – இயக்கத்தில் நீங்காப் பற்றுக்கொண்டவருமான இராஜகோபால் என்பவர், என் கட்டுரை கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

"ஒரு பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு திருவாரூர் முழுவதும் ஒரு வார காலம் சுற்றி வந்தேன்; அந்த மகிழ்ச்சியை வர்ணிக்கவே முடியவில்லை; நாலு பேர் உட்கார்ந்து பேசுமிடத்திற்கு அந்தப் பத்திரிகையுடன் போவேன்; பேசிக் கொண்டே, கையிலிருக்கும் பத்திரிகை யைக் கீழே வைப்பேன்; 'யாராவது எடுத்து நம் கட்டுரையைப் படிக்க மாட்டார்களா' என்று ஆவலோடு அமர்ந்திருப்பேன்; அவர்கள் அதைப் படித்து – என்னைப் பாராட்டிய பிறகே அதைவிட்டு அகலுவேன்; இப்படி என் வாழ்வில் பெருமகிழ்ச்சி அளித்த அந்த நாளை நினைத்தால், இப்போதும் இன்பம் அலைமோதுகிறது"

– 'மறவன் மடல்' (3–8–69) ஏட்டில் 'நெஞ்சுக்கு நீதி' என்ற பகுதியில்

அண்ணா வழங்கிய அறிவுரை

இக்கட்டுரைதான் கலைஞருக்கும் – அண்ணாவுக்கும் நெருக்கமான அண்ணன் – தம்பி உறவை ஏற்படுத்திக் கொடுத்தது.

'திராவிட நாடு' ஏட்டில் கட்டுரை வெளிவந்த இரண்டொரு வாரத்திற்குப் பிறகு திருவாரூரில் நடைபெற்ற நபிகள் நாயகம் விழாவிற்கு வருகை தந்திருந்த அண்ணா அவர்கள் – டி.என். இராமன் இல்லத்தில் தங்கி இருந்த போது – கருணாநிதியை அழைத்துவரச் செய்து சந்தித்தார்; 'உயர்நிலைப் பள்ளி மாணவர்' என்று அறிந்தபோது, பெரிதும் வியப்படைந்தார்; அருகில் அழைத்துத் தட்டிக் கொடுத்து, 'கட்டுரை எழுதுவதில் கவனம் செலுத்தாமல், நன்றாகப் படி' என்று அறிவுரை வழங்கினார்.

ஆயினும், இளைஞர் கருணாநிதிக்கு, எழுதுவதிலே இருந்த ஆர்வத்தை வார்த்தைகளில் வடிக்க இயலாது!

தனது எழுத்தையும் – கருத்தையும் பல்லாயிரவர் படித்துப் பயன்பெற்றுப் பாராட்டுகிறார்கள் – என்பதை அறிந்த அவர், இயக்கத்திற்காக மேலும் மெய்மறந்து உழைக்கலானார்.

ஃபிராங்க் மொரேஸ் (Frank Moraes) என்னும் அறிஞர்,

"கவிஞன்தான், பிறவியில் கவிஞனாக இருக்க வேண்டும் என்பதில்லை; பத்திரிகை ஆசிரியனும் பிறவியிலேயே திறன் வாய்ந்தவனாக விளங்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

இதற்குத் தக்கவாறு – பிறவியிலேயே கவிஞராக விளங்கிய கருணாநிதி, பிறவியிலேயே பத்திரிகையாளராகவும் விளங்கினார்!

"ஆம்; கருணாநிதி – ஒரு பிறவி எழுத்தாளர்! ஒரு பிறவிப் பத்திரிகையாளர்!"

பொறுப்பை ஏற்றார் – பெற வேண்டிய அனுபவத்தைப் பெற்றார் – ஏடு தொடங்கினார்!

கலைஞர் கருணாநிதி, 'எழுத்தாளர்' என்னும் தகுதியை மட்டுமே வைத்துக்கொண்டு, 1948–ல் 'முரசொலி' என்னும் வார இதழைத் தொடங்கிடவில்லை!

1942ல் 'திராவிடநாடு', 1945ல் காஞ்சி கல்யாணசுந்தரம் நடத்திய **'தொழிலாளர் மித்திரன்'** ஆகிய பத்திரிகைகளில் எழுதிய எழுத்தாளர்– என்னும் அனுபவத்தை மட்டும் வைத்துக்கொண்டு இதழாசிரியராக ஆக அவர் ஆர்வம் காட்டவில்லை!

மேலும், 1948ல் தமது 24வது வயதுக்குள், **'பெரிய இடத்துப் பெண்'** போன்ற நூல்களை எழுதிய நூலாசிரியராகவும், **'இராஜகுமாரி'** என்னும் திரைப்படத்துக்கு வசனம் எழுதிய வசனகர்த்தாவாகவும், **'சாந்தா அல்லது பழனியப்பன்'**, 'மந்திரிகுமாரி' என்னும் நாடகங்களை எழுதிய நாடக ஆசிரியராகவும் விளங்கியதைக் கொண்டும் அவர் பத்திரிகை ஆசிரியராக ஆகிவிடத் துணியவில்லை!

இவை தவிர, 'நாடு போற்றும் நல்ல பேச்சாளர்' என்னும் சிறப்பினைக் கொண்டும் இதழ் தொடங்கிட முடிவுக்கு வந்திடவில்லை!

1945–1946ல் தமிழர் தலைவர் தந்தை பெரியாரால் ஈரோட்டிலிருந்து நடத்தப்பட்ட 'குடியரசு' வார இதழில் துணை ஆசிரியராகப் பொறுப்பேற்று – பெற வேண்டிய அனுபவத்தைப் பெற்றார்; தந்தை பெரியாராலேயே அவர் எழுதிய கட்டுரைகளுக் காகவும், தலையங்கத்துக்காகவும் பாராட்டப் பெற்றார்; அவருக்கு மாதச் சம்பளம் ரூ. 40; அந்தக் காலத்தில் அது பெரிய விஷயம்!

அண்ணாமலைக்கு அரோகரா

அறிஞர் அண்ணாவை போன்றே பெரியாரின் பத்திரிகையில் ஆசிரியராகப் பணியாற்றிய பெருமை, கலைஞருக்கு உண்டு!

கலைஞர் எழுதிய 'அண்ணாமலைக்கு அரோகரா' என்னும் கட்டுரையைப் பெரியார் பெரிதும் பாராட்டினார்; இதனைக் கலைஞர் 'மூனா கானா' என்னும் புனைப் பெயரில் எழுதினார்.

இக்கட்டுரை, 17–11–45 'குடியரசு' வார இதழில் வெளிவந்தது; அதன் சில பகுதிகள் வருமாறு:–

"பாட்டாளி மக்களின் பச்சைக் குழந்தைகளின் வறண்ட தலைக்கு ஒரு துளி எண்ணெய் கிடையாது – திருவண்ணாமலைத் தீபத்திற்கு ஆயிரக்கணக்கான நெய் டின்கள் உடைக்கப் படுகின்றன!

மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள இந்த நாட்டு மாதர்களுக்கு ஒரு முழத் துணி கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது – ஆனால், அண்ணாமலைத் தீபத்திற்குப் பீஸ் பீஸ்ஸாகத் துணிகள் கொளுத்தப்படுகின்றன!

பசித்த மக்களுக்கு ஒரு பிடி சோறு கிடையாது – ஆனால், 'பரம பிதா'வுக்கு அன்னாபிஷேகம் நடைபெறுகிறது!

இங்கு வறுமையில் வாடும் மக்களுக்கு வயிறு எரிகிறது – அங்கு, அண்ணாமலையில் ஆடம்பரத்தோடு அறியாமை நெருப்பு எரிகிறது! அதற்கு நெய் வார்க்கப்படுகிறது!

அந்தோ – கொடுமை, கொடுமை!

உணருவரா திராவிடர்?

“திராவிட மக்களுடைய உணர்வுக் கழனியிலே அறியாமையை நீராகப் பாய்ச்சி – மூடப் புராணிகப் பழக்க வழக்கங்களைப் பயிராக வளர்த்து – அவ்வப்போது முளைக்கும் ஆராய்ச்சிகளைக் ‘களை’ என்று கருதி, ‘பய’மெனும் அரிவாளால் களைந்து – தங்கள் சுயநலத்துக்கேற்ற வசதிகளை விளைவாகப் பெற்று – பிழைப்பை அறுவடை செய்து – பார்ப்பனரும், பணக்காரரும் வாழ்கின்றனர்!

“இவர்களுடைய ஒப்பந்தம் குறைந்து – ‘கூட்டுச் சுரண்டல்’ முறை ஒழிய வேண்டுமானால், திராவிடர் தன்மானம் பெற வேண்டும்! திருவண்ணாமலைத் தீபங்கள் அணைக்கப்பட வேண்டும்!

‘அதுவன்றி, ‘அண்ணாமலைக்கு அரோகரா’ போட்டுக் கொண்டே இருந்தால், பழைய கற்காலத்தை நோக்கிக் கட்டை வண்டிப் பிரயாணத்தை – கட்டுக்கதை மூட்டையோடு – ஆரம்பிக்க வேண்டியதுதான்!

“உணருவார்களா திராவிடர்கள்? உணர்ந்து, ஆவன செய்வார்களா?”

அடிமைகளாக வாழ்ந்தனர் – அவமானத்தை ஏற்றனர்!

இதுபோன்றே, கலைஞர் எழுதிய **‘தீட்டாயிடுத்து’** என்னும் துணைத் தலையங்கமும் பெரியாரால் பாராட்டப்பெற்றது; (தலையங்கம் எழுதுவதற்கு பெரியார் யாரையும் அவ்வளவு எளிதில் அனுமதிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது); அத்துணைத் தலையங்கம் வருமாறு:–

“இந்த ஆண்டு திருவையாற்றில் நடைபெற்ற தியாகராஜ அய்யர் உற்சவத்தில், இசையரசு தண்டபாணி தேசிகர், ஆரம்பத்தில் **‘சித்தி விநாயகனே’** என்ற பாட்டைப் பாடினாராம்!

“அடுத்தபடி கச்சேரி செய்ய வந்த அரியக்குடி இராமானுஜ ஐயங்கார், ‘தேசிகர், தமிழ்பாடி சன்னிதானத்தைத் தீட்டுப்படுத்தி விட்டார்; நான் இந்த மேடையில் பாட மாட்டேன்”

என்று கூச்சலிட்டு, ‘தாம் தோம்’ என்று தாண்டிக் குதித்தாராம்!

“இது, இன்று – நேற்றல்ல; மனுமந்தாதா காலத்திலிருந்து – ‘தமிழ் பாஷை நீச்ச பாஷை’ என்றும், ‘பிராமணாள் ஸ்நானம் செய்து விட்டுச் சாப்பிடும்வரை தமிழ் பேசக்கூடாது’ என்றும், ‘வீட்டில் விசேஷ காலங்களில் தமிழ் வாயில் நுழையக் கூடாது’ என்றும் கூறிவந்ததோடு அனுஷ்டானத்திலும் இருந்துவந்த காலத்திலிருந்தே நிலவி வருகிறது.

"அகத்திலும், அக்கிரகாரத்திலும் இருந்து வந்த இந்த அகம்பாவம், அய்யர்வாள் உற்சவத்திலும் புகுந்து விட்டது!

"தமிழ் நாட்டிலே – தமிழர்கள் உயிரோடு வாழும் நாட்டிலே – தமிழர்களுடைய மொழிக்குத் தடையுத்தரவு! ஆங்கில அரசாங்கமல்ல – ஆரிய அரசாங்கத்தின் ஆணை!

"தமிழ் மொழியில் பாடியதால், 'மேடை தீட்டாகிவிட்டது' என்று ஆணவப் பேச்சு கிளம்பியதற்குக் காரணம், தமிழர்கள் அடிமைகளாக – அனுமார்களாக வாழ்வதுதான்!

"தமிழர் இனம் – சூத்திர இனமாகவும், தமிழர் மொழி – தீட்டுப்பட்ட மொழியாகவும் போய்விட்டது!

"தியாகராஜர் திருநாளுக்கு நன்கொடை வழங்கும் முட்டாள் தமிழர்களும், தொண்டர்க்குத் தொண்டராம் சிஷ்யகோடிகளின் வரிசையிலுள்ள அழகப்ப செட்டியார் போன்ற விபீஷணர்களும் உள்ளவரை, 'அரியக்குடி வர்க்கம்' அகம்பாவத்தோடுதான் வாழும்!

"அரியக்குடிகள் அங்கலாய்ப்புக்கு – அவர் இனபந்து காந்தி மகாத்மாவின் விஜயமும் ஒரு காரணமாகும்!"

– 'குடிஅரசு': 9–2–46

இத் துணைத் தலையங்கம், பெயரிடப்படாமலேயே வெளிவந்திருக்கிறது; ஆயினும், இதனைத் தாம் எழுதியதாகக் கலைஞரே வேறோர் இடத்தில் குறிப்பிட்டார்.

இவை தவிர, 'குண்டு வீச்சு' என்னும் பகுதியைத் தொடங்கி – 'விமானி' என்னும் புனைப் பெயரில் தொடர்ந்து வாரந்தோறும் எழுதிவந்தார்.

இளமையிலேயே இயற்கையாக எழுதி ஏற்றம் பெற்று – முறையாக அறிஞர் அண்ணா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு – தந்தை பெரியாரால் பயிற்சி அளிக்கப்பெற்ற பிறகே – கலைஞர் கருணாநிதி, அண்ணாவின் 'திராவிடநாடு' இதழ்போல் – பெரியாரின் 'குடியரசு' இதழ்போல் – பத்திரிகை தொடங்கத் துணிவு பெற்றார்.

குருதியைக் கொண்டே கொடி அமைப்பை உருவாக்கினார்!

சேலம் மாநாட்டிற்குப் பிறகு இயக்கத்திற்கென்று கொடி ஒன்றும் இல்லாமலிருந்தது; பின்னர் நடைபெற்ற திருச்சி மாநாட்டில் கொடியின் அமைப்புப் பற்றிப் பேசப்பட்டு முடிவாகாமலே இருந்தது.

இந்நிலையில், 'குடியரசு' துணை ஆசிரியராகப் பணியாற்றிய கருணாநிதி, ஒருநாள் – இரவு நேரத்தில் – கொடியின் அமைப்பைப் பற்றி அவருடைய நண்பருடன் (ஈரோடு ப. சண்முக வேலாயுதத்துடன்) விவாதித்தார். கருப்பும் சிவப்பும் கலந்த கொடி – கலைஞரின் கற்பனையில் உதித்தது! வெள்ளைத் தாளில் – கருப்பு மையில் – ஒரு கொடியினை எழுதினார்; சிவப்பு மை அவசரத்துக்குக் கிடைக்கவில்லை; எனவே, குண்டூசியால் தன் கையில் குத்திக்கொண்டு இரத்தத்தை வரவழைத்து அதையே சிவப்பு மை பூச வேண்டிய இடத்தில் பூசினார்.

இக்கொடியைப் பெரியாரிடம் காட்டி, அவர் ஒப்புதலையும் பெற்றார்!

கலைஞரின் சிவப்பு இரத்தத்தால் இடப்பட்ட பொட்டுதான், எங்கணும் அசைந்தாடிக் கொண்டிருக்கும் திராவிடர் கழகக் கொடிகளின் நடுவே காணப்படும் சிவப்பு வட்ட வடிவமாகும்!

இதனைக் கலைஞரே பல மேடைகளில் பேசியுள்ளார்.

மேலும் இந்நிகழ்ச்சி, 1953ல் வெளியான 'கலை மன்றம்' பதிப்பகத்தார் வெளியிட்ட '**கடமை வீரர் கருணாநிதி**' என்னும் கலைஞரின் வாழ்க்கை வரலாற்று நூலிலும் வெளிவந்துள்ளது.

கலைஞர் விடுத்த வேண்டுகோள்

கலைஞர், 'குடியரசில்' துணை ஆசிரியராக இருந்தபோது, 'குடியரசு' இதழில், திராவிடர் கழகத்தவருக்கு 'வேண்டுகோள்' விடக்கூடிய அளவுக்குப் பெரியாரிடமும் – கழகத் தொண்டர்களிடமும் செல்வாக்குப் பெற்றவராக விளங்கினார்.

29–12–45 'குடியரசு' ஏட்டில் கலைஞர் விடுத்த வேண்டுகோள் ஒன்று வெளிவந்துள்ளது:–

திராவிடர் கொண்டாட வேண்டிய நாட்கள்

"சென்னைத் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் திராவிடர் கொண்டாடுவதற்கென முக்கிய நாட்கள் சில குறிப்பிட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது; அதனையொட்டி, கீழ்க்கண்ட நாட்களைத் திராவிடர் நாட்களாகக் கொண்டாடலாமென்ற எண்ணத்தைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன் – 'திராவிடம் ஏற்கும்' என்ற காரணத்தால்!

நாடெங்கும் உள்ள கழகங்களும், தோழர்களும் இதனை ஆதரித்து, தங்கள் விருப்பங்களைத் திராவிடர் கழக மத்திய

காரியாலயத்திற்கும், 'குடியரசு'க்கும் அனுப்பிவைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு இதனைச் சமர்ப்பிக் கிறேன்.

தங்களன்புள்ள,

மு. கருணாநிதி

நாட்கள்

1. பெரியார் பிறந்த நாள்
2. பொங்கற் புத்தாண்டு நாள்
3. திராவிட நாட்டு விடுதலைக் கிளர்ச்சி நாள்
4. கொடி வணக்க நாள்
5. கறுப்புச் சட்டைப் படை அணிவகுப்பு நாள்
6. சேலம் புரட்சி நாள்
7. இந்தி ஒழித்த நாள்
8. இரயில்வே ஓட்டல் சாதி பேத ஒழிப்பு நாள்
9. தியாகராயர் – டி.எம். நாயர் – பானகல் நினைவு நாள்
10. பன்னீர்செல்வம் நினைவு நாள்
11. நாகம்மையார் நினைவு நாள்
12. தாளமுத்து – நடராசன் நினைவு நாள்

பொங்கற் புதுநாளில் வெளிவந்தது ஏடு!

'முரசொலி' வார இதழ் 14–1–48ல், பொங்கற் புது நாளில் வெளிவந்தது. 'முரசொலி' வெளியீட்டு விழாவில், பாவலர் பாலசுந்தரம், புலவர் குழந்தையா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பிற்காலத்தில், 'முரசொலி', தமிழர்கள் வியக்கத்தக்க அளவுக்குப் பிரமாதமான பொங்கல் மலர்களை வெளியிட்டது.

பொங்கல் விழா நாளன்று பொங்கல் மலராக வெளிவருகிறது என்பது மட்டும் காரணமன்று; 'முரசொலி' பிறந்த நாளும் அதுதான் என்பதும் ஒரு காரணமாகும்.

'முரசொலி' வார இதழின் ஆசிரியரும் வெளியிடுபவருமாக கருணாநிதி இருந்தார்; அச்சிட்டவர் – 'விசயபுரம் கருணாநிதி மின்னியக்க அச்சக' உரிமையாளர் கருணை எம். ஜமால் ஆவார். (இவர் தற்போது திருவாரூர் நகராட்சி மன்றத் தலைவராக உள்ளார்.)

'முரசொலி' திருவாரூரிலிருந்து 1/6 சிங்கல் டிம்மி அளவில் வெளிவந்தது; விலை ஓரணாவாக இருந்தது.

பெறவேண்டிய உரிமையைத் தமிழர்கள் பெற மறந்து நின்றுவிட்ட காலம்!

'முரசொலி' தோன்றிய காலம் – 'தமிழர்கள், புத்துணர்ச்சியும் புது எழுச்சியும் பெற வேண்டும்' எனத் தமிழினத் தலைவர்கள் வலியுறுத்திய காலம்! ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அனுபவித்து வந்த வைதீகம் வெறிபிடித்து தலைவிரித்து அலங்கோலமாக ஆடிய காலம்! 'இந்தி, தமிழர் வாழ்வை அழிக்க வந்த செந்தீ' என்பதை மூத்த தலைவர்கள் முனைந்து நின்று விளக்கிய காலம்! 'சுதந்திரம் வந்து விட்டது' என்று கூறி – வடவர்கள் – தென்னவர் மீது ஆதிக்கம் செலுத்திய காலம்! பெற்ற சுதந்திரத்தில் சிந்தையைப் பறிகொடுத்து – பெற வேண்டிய உரிமையைத் தமிழர்கள் பெற மறந்து நின்ற காலம்!

நகைநட்டுகளை அடகு வைத்தே பத்திரிகை நடத்தினார்!

இந்தக் காலத்திலேதான், கலைஞரின் 'முரசொலி' ஒலித்தது!

பகைவரின் செவிப்பறை கிழிந்தது!

கருணாநிதி பிறவியில் சீமான் அல்ல – பெருஞ் செல்வத்தைப் பத்திரிகைக்கு முதலீடு செய்ய!

இலட்சியப் பிடிப்புமிக்க அவர், 'நகைநட்டுக்களை' அடகு வைத்தே பத்திரிகையைத் தொடங்கினார்.

ஏடு நடத்த ஏற்ற இன்னல்களை, அவரே விவரிக்கிறார்:–

> "என் மனைவி போட்டிருந்த தாலிச் சங்கிலியைத் தாலிக் கயிறாக மாற்றிவிட்டு – அந்தச் சங்கிலியை விற்று இரண்டு வாரக் கடனை அடைத்து – மூன்றாவது வாரப் பத்திரிகையை 'டெலிவரி' எடுத்தேன்.
>
> "விசயபுரம் என்ற பகுதியில் அச்சகத்தில் அச்சடிக்கப் படுகின்ற பிரதிகளைத் திருவாரூர் அலுவலகத்திற்குக் கொண்டுவர ஆள் வைக்கவோ, வண்டி வைக்கவோ என்னிடம் வசதிகள் இருந்ததில்லை; இரவோடு இரவாக அவைகளை நானும் – பத்திரிகை மானேஜா கனகசுந்தரமும் 'தலையில் தூக்கி'க்கொண்டு வருவோம்!
>
> "நாங்கள் இரவெல்லாம் உட்கார்ந்து, விற்பனையாளர் களுக்கும் – சந்தாதாரர்களுக்கும் பத்திரிகைகளைக் கட்டி அனுப்புவோம்!"

– 'மறவன் மடல்' (31–8–69) ஏட்டில் 'நெஞ்சுக்கு நீதி' என்ற பகுதியில்.

''எவ்வளவு நியாயமான இலட்சியத்தை அடைய வேண்டுமானாலும், அதற்காக, 'கஷ்ட நஷ்டமடைதல்' என்னும் விலையைக் கொடுத்துத்தான் தீர வேண்டும்.''

இது, நம்மை விட்டுப் பிரிந்த தந்தை பெரியாரின் வீர உள்ளமாகும்; அவ்வுள்ளத்தைத் தந்தை பெரியாரிடம் பயிற்சி பெற்றிருந்த கலைஞரும் பெற்றிருந்தார்!

அலுத்துக் களைத்தவரின் அயர்வை அகற்றியது!

'முரசொலி' – தமிழினப் போராட்டத்தின்போது, தடுக்கி வீழ்பவரை நிமிர்ந்து நிற்க செய்தது!

அலுத்துக் களைத்தவரின் அயர்வை அகற்றியது! ஒடிந்து போன உள்ளங்களை ஒட்ட வைத்தது!

ஓயாத துன்பத்தினிடையே குன்றாத இன்பத்தை ஊட்டியது!

போராட்டத்தின்போது தமிழர்களுக்கு அலுப்புத் தட்டும் போதெல்லாம், புறநானூற்றைப் புரட்டிக் காட்டிப் புத்துணர்ச்சி ஊட்டியும் – புதுப் புறநானூறு படைத்தும் – குலையும் அமைதியை நிலைபெறவும் செய்தது!

கோழை வாழ்வை ஏற்காத ஏடாகியது!

'குடியரசு' இதழைச் சற்றேறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்னால் (2–5–1924ல்) துவக்கி வைத்தபோது, தமிழினத் தலைவர் தந்தை பெரியார் இராமசாமி குறிப்பிட்டார்:–

'''குடியரசு' – தயவுக்கோ சுயநல வாழ்விற்கோ, கீர்த்திக்கோ நடைபெறவில்லை; யோக்கியமாய் – உண்மையாய் நடக்கக்கூடிய காலம்வரை அது நடக்கும்; அவ்விதம் நடக்க அதற்கு யோக்கியதை இல்லையானால் – எப்போதாவது எந்தக் காரணத்தாலாவது நியாயத்தைக் கூற முடியாத நிலை ஏற்பட்டால் – அது தானே மறைந்து போகுமே அல்லாமல், மானங்கெட்ட சில விலங்குகளைப் போல கோழை வாழ்வு வாழ ஒருக்காலும் ஒப்புக் கொள்ளாது!''

இக்கொள்கையை, 'முரசொலி' பின்பற்றியது!

ஏடுகளின் பாராட்டு

'முரசொலி'யின் விளம்பரம், புதுவையிலிருந்து வெளிவந்த பாரதிதாசனின் 1–2–48 'குயில்' மாத இதழில் வெளிவந்தது:–

புயல் நடை! **புரட்சிக்கு அழைப்பு!**

போர் முழக்கம்!

'முரசொலி'

ஆசிரியர்: மு. கருணாநிதி

புதன்தோறும் வெளிவரும் புதிய ஏடு

"எழுதவில்லை"

'முரசொலி'யின் தனிச் சிறப்பு

கவிதைகள் – கட்டுரைகள்

எல்லாம் தேனாறுகள்

விலை: அணா 1 *ஆண்டு சந்தா: ரூ. 4*

முகவரி:

'முரசொலி' அலுவலகம்,

திருவாரூர்.

1-4-48 'குயில்' இதழில் இவ்விதம் வெளிவந்தது:-

முன்னேறும் திராவிடத்தின்

வெற்றி முழக்கம்!

'முரசொலி'

ஆசிரியர்: மு. கருணாநிதி

அச்சமற்ற கண்டனங்கள்–

ஆணித்தரமான கட்டுரைகள்–

அறிவு நல்கும் கற்பனைகள்!

தனிப்பிரதி அணா ஒன்று

ஆண்டுக் கட்டணம் ரூ. 3-4-0

விவரங்கட்கு:

நிர்வாகி, 'முரசொலி',

திருவாரூர்.

'முரசொலி' பற்றிய மதிப்புரைகள் பல இதழ்களில் வெளிவந்தன !

நாவலரின் 1–3–1948 'மன்றம்' மாத இதழில்,

> " 'முரசொலி' – வார வெளியீடு; காளைகளைக் களம் புக வைக்க – அவர்களை வீறிட்டெழச் செய்யும் கருவி முரசு! அதுபோல, வீழ்ச்சியுற்ற திராவிடத்தை எழுச்சி யூட்டி எழச் செய்ய 'முரசொலி' ஒலிக்கத் துவங்கி உள்ளது"

என்று விமர்சிக்கப்பட்டிருந்தது.

> "திராவிடர் இயக்கத்திற்கெனத் தொண்டாற்றவும், தன்மானக் கொள்கைகளை நாட்டிலே பரப்பவும், திராவிட மக்களை எழுச்சியுறச் செய்யவும் 'முரசொலி' தோன்றி யுள்ளது"

என்று பேராசிரியர் அன்பழகனின், 'புது வாழ்வு' (15–2–48) இதழில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

தத்தி நடக்கத் தொடங்கியது

பெரியாரின் 'குடியரசு' வார இதழ், 1948–ல், சனிக்கிழமை தோறும் வெளிவந்தது.

அண்ணாவின் 'திராவிடநாடு' ஞாயிறு தோறும் வெளிவந்தது!

கலைஞரின் 'முரசொலி' – புதன்கிழமை தோறும் வெளிவரலாயிற்று.

12 இதழ்வரை ஒழுங்காக வெளிவந்த 'முரசொலி' தத்தி நடக்கத் தொடங்கியது; 13வது இதழ், சில வாரங்கள் இடைவெளிவிட்டு வெளிவந்தது; அதனுடைய 20வது இதழ், 24–8–48 அன்று வெளியாயிற்று; 1948–ல் வெளியான 'முரசொலி' ஏட்டின் கடைசி இதழ் இதுவாகவே இருந்திருக்க வேண்டும்.

சில இதழ்கள் நான்கு பக்கங்களுடனும் – 12 பக்கங்களுடனும் வெளிவந்தது; அவற்றின் விலை அரையணாவாகவும், ஒன்றரையணாவாகவும்இருந்தது; 'வாரம் ஒருமுறை' என்பது, 'இரண்டு வாரத்துக்கு ஒருமுறை' என்றாயிற்று!

14–4–48ல் வெளியான இதழ், 12 பக்கங்களாக வெளிவந்ததோடல்லாமல், சிற்சில மாற்றங்களுடனும் – கவர்ச்சியுடனும் வெளிவந்தது. தளபதி அண்ணா அவர்களைப் பாயும் குதிரையின் மேலேற்றி – திராவிடர் கழகக் கொடி பறக்கும் கோட்டையை விட்டுப் போருக்குப் புறப்படும் தானைத்

தலைவராகச் சித்திரித்துச் சித்திரம் தீட்டி – முழுப் பக்க அளவில் படத்துடன் வெளியிட்டது!

பின்னர் வெளிவந்த மூன்று 'முரசொலி' இதழ்களும், தொடர்ந்து இதே படத்துடன் வெளிவந்தன; இச்சித்திரத்தைத் தீட்டியவர் – எஸ். வீரையா ஆவார்.

அண்ணனுக்கு அரசியலில் சிக்கலான நேரம் அது!

முதல் 12 இதழ்களில் அநேகமாக 'பாஸ்போர்ட்' அளவில் – தலைப்புப் பக்கத்தில் – இயக்க வீரர்களின் படத்தை எளிய முறையில் வெளியிட்டது.

பெரியார், பாரதிதாசன், பன்னீர்செல்வம், அன்னை நாகம்மையார், மூவாலூர் இராமாமிர்தத்தம்மையார், என்.வி. நடராாசன், தி.பொ. வேதாசலம் ஆகியோரின் படங்கள் அதில் இடம்பெற்றிருந்தன.

தில்லை வில்லாளனின் படம், 'முரசொலி' இதழ் ஒன்றின் இறுதிப் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்தது.

'முரசொலி' என்னும் இதழ்த் தலைப்பு, முரசிலிருந்து ஒலி கிளம்புவதுபோல சித்திரிக்கப்பட்டு – அதிலேயே 'தமிழ் வார வெளியீடு; ஆசிரியர்: மு. கருணாநிதி' என்று 'பிளாக்' செய்யப் பட்டிருந்தது!

சேய் பிறந்த செய்தியினூடே துணைவியாரை இழந்தார்

13வது இதழ் வெளியாகும்போது, பத்திரிகை, 'வாழ்வதா– சாவதா' என்னும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது.

7வது இதழில் '25–2–1948 காலை 11 மணிக்கு ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களுக்கு ஆண் மகவு பிறந்தது; தாயும் – சேயும் நலம்' என்னும் செய்தியை மகிழ்வுடன் வெளியிட்ட 'முரசொலி', 13வது இதழில், 12–4–48ல், 'கலைஞரின் துணைவியார் பத்மாவதி அம்மையார் மறைந்தார்' என்னும் செய்தியைத் துயரத்து டன் வெளியிட்டது.

14–4–48 'முரசொலி' இதழின் கடைசிப் பக்கத்தில் இச்செய்தியைக் கறுப்புக் கட்டம் கட்டி – கலைஞரின் துணைவியார் படத்துடன் – 'தோழியர் பத்மா கருணாநிதி பிரிவு' என்னும் தலைப்புடன் வெளியாயிற்று:–

"12–4–48 திங்கள் இரவு 9.30 மணிக்குத் தோழர் மு. கருணாநிதியின் துணைவியார் பத்மாவதி அவர்கள் உயிர் நீத்தார்.

13–4–48 செவ்வாய் காலை 10 மணிக்கு இயக்கத் தோழர்கள் இருநூறு பேர் கறுப்பு உடை அணிந்தும் – உள்ளூர் – வெளியூர் அன்பர்கள் திரளாகச் சூழ்ந்துவர அன்னாரது சவம், மௌன ஊர்வலமாக இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வழிநெடுக திராவிடர் கழகம், சுயமரியாதைச் சங்கம் ஆகிய பல சங்கங்களின் சார்பில் மலர் மாலைகள் சூட்டப் பட்டன. கறுப்புக் கொடி தாங்கிய தொண்டர்கள் முன்சென்றார்கள்.

தகனக் காரியங்கள் முடிந்த பின்னர், தோழர் தங்கராசு தலைமையில் இரங்கற் கூட்டம் இடுகாட்டிலேயே கூட்டப் பட்டது; அதுபோது – திருவாரூர் திராவிடர் கழகம், பாரதிதாசன் படிப்பகம், மருதம் பட்டணம் திராவிடர் கழகம், வேலங்குடி ஆதிதிராவிடர் கழகம், மேல விசயபுரம் ஆதிதிராவிடர் கழகம், காப்பாவூர் ஆதிதிராவிடர் கழகம், இளவல் காருகுடி ஆதிதிராவிடர் கழகம் ஆகியவைகளின் செயலாளர்களும் – பொது மக்கள் சார்பாகத் திரு. இராஜசந்தானம், கருணை எம். ஜமால், தங்கவேல் ஆகியோரும், முரசொலி நடிகர் கழகம் சார்பில் சதாசிவம், ஆர். சிங்கம், டி.என்.லெட்சப்பா, கிருஷ்ணசாமி, கரந்தை என்.எஸ். சண்முகவடிவேல், புலவர் குழந்தையா, என்.வி. சீனிவாசன் ஆகியோரும் – அன்னாரின் மறைவு குறித்துக் குமுறும் குரலில் – கண்ணீர் வடியக் கலங்கிய உள்ளத்தின ராய்த் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.''

கலங்கிய உள்ளம் கண்ணீர் உகுத்தது!

ஆறுதல் கூறிக் கடிதங்கள் குவிந்தன; அவர்களுக்கெல்லாம் கலைஞர், 21–4–48 இதழில் நன்றி கூறினார்:–

''என் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் பத்மா, 12–4–48ல் இயற்கையெய்தினார்கள். இடுகாட்டில் கண்ணீர் வழிய வழிய இயக்கத் தோழர்கள் பலர் எனக்கு ஆறுதல் கூறினார்கள்; அந்தக் கண்ணீர், என் துணைவியின் உடலில் பற்றிய தீயை அணைக்காவிட்டாலும் கூட, என் நெஞ்சில் மூண்ட தீயை அணைக்க உதவிற்று!

''அதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான ஆறுதல் கடிதங்கள் என் அமைதி நாடி வந்தவண்ணம் உள்ளன; 'கலங்காதே' எனத் தேறுதல் மொழி பேசுகின்றன அவை!

"என்பால் அன்பு கொண்ட ஏடுகள் என்னையும் – என் குடும்பத்தாரையும், 'துயர் விடுக' எனத் தேற்றுகின்றன!

"அனுதாபத்தோடு கலந்து, 'பொதுப் பணிக்கு வருக' என்ற அன்பர்கள் ஆணையை நான் சிரமேற்கொண்டேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, ஆறுதல் எழுதிய அன்பர்களுக்கு நன்றி அறிவிக்கிறேன்; வணக்கம்."

– மு. கருணாநிதி

'முரசொலி'யின் சுவாசம் நின்று நின்று வந்தது; ஏஜெண்டுத் தோழர்கள் ஏமாற்றினர்!

"ஏஜெண்டுகளின் மௌனம், வாசகர்களுக்கு, 'முரசொலி' வளர்ச்சியில் தவறான எண்ணத்தை உண்டாக்க உதவுகிறதே என்பதை எண்ணி வருந்துகிறோம்"

என்று 21–4–48ம் நாள் இதழில், கவலையுடன் கலைஞர் எழுதினார்.

'பாக்கிப் பணத்தைப் பூட்டிப் பதைக்கச் செய்கின்றனர்' என்று அண்ணா அவர்கள்கூட ஒருமுறை 'திராவிட நாடு' இதழிலே இந்த ஏஜெண்டுகளைப் பற்றி எழுதியிருந்தார்.

ஆக்கத்தை மட்டும் வாரியிறைத்தால்...

'முரசொலி' 16வது இதழில், 19–5–48ல் கலைஞர், இயக்க அன்பர்களுக்கு ஆதரவு கேட்டு ஒரு வேண்டுகோள் விடுத்தார்:–

"முரசொலிக்கு என ஒரு தனி அச்சகம் அமைக்கும் ஏற்பாடுகள் நடைபெறுவதால், அந்த ஏற்பாட்டையும் – 'முரசொலி' வேலைகளையும் – கூட்ட நிகழ்ச்சிகளையும் ஏககாலத்தில் கவனித்துக் கொள்ள முடியாமையால், வார வெளியீடாக இருக்கும் நமது 'முரசொலி'யைத் தற்காலிகமாக இரண்டொரு மாதங்கள் வரையில், மாதமிரு முறையாக (ஒன்றுவிட்ட ஞாயிறுதோறும்) வெளியிட முடிவு செய்துள்ளோம்.

"சென்னை போன்ற நகராக இல்லாததால், அச்சிடும் தாள் கிடைக்கத் தாமதம்; அதனால், அலுவல்களைக் கவனிக்கத் தாமதம்; விற்பனையாளர்களுக்கும் கிடைக்கத் தாமதம்; இத்தகைய குறைபாடுகள், தவிர்க்க முடியாதவைகள் ஆகிவிட்டன!

"சொந்த அச்சகம் அமைத்துக் கொண்டால்.... 'முரசொலி' வாரந்தோறும் – குறித்த நாள் தவறாமல் வர ஏதுவாகும்; அது வரையில் 'முரசொலி' வளர்ச்சியில் உண்டான இந்தத் தேக்கத்தைப் பொருட்படுத்தாது, என்றும்போல் ஆதரவு தருவீர்களானால்....

தேக்கம் தேனாற்று வெள்ளமாகக் கூடப் பெருக்கெடுத்துப் பாய முடியும்!

"'எல்லோரும், மாதத்தை வாரமாக்குகிறார்கள்; நீங்கள் குறைக்கிறீர்களே' என்பீர்கள்; ஆம்; நிலா தேய்கிறது; தேயும் நிலா, வளர்பிறை ஆகுமல்லவா?

"உங்கள் ஆக்கத்தை மட்டும் வாரி இறைத்தால் .... வளர்பிறை என்ன... வானத்துச் சூரியனாக வாழும் 'முரசொலி'!"

கலைநயம் சொட்டியது

'முரசொலி' நின்றுவிட்டது!

ஆயினும், *1954* ஏப்ரலில் – கலைஞர் குறிப்பிட்டதுபோல் – சென்னை இராயப்பேட்டையிலிருந்து (முரசொலி' அலுவலகம்) ஆறு ஆண்டுகளாகத் தேக்கம் பெற்றிருந்த 'முரசொலி' 'தேனாற்று வெள்ள'மாகப் பெருக்கெடுத்துப் பாயத் தொடங்கியது!

கலைஞர் எழுதிய சிறிய அறிக்கைகளிலேகூட, கலை நயம் சொட்டியது!

1948–ல் வெளியான 'முரசொலி' வார இதழில் – தில்லை வில்லாளன், டி.கே.சீனிவாசன், என்.எஸ். இளங்கோ, பி.வி.லிங்கம், நா. பாண்டுரங்கன், கரந்தை என்.எஸ். சண்முகவடிவேல், இராவணன், சீனிவாசராகவன், ரவி, மன்னன், மணிமொழி, ஆகியோரின் 'கருத்தோவியங்கள்' இடம் பெற்றன!

தில்லை வில்லாளன் தொடர்ந்து வாரா வாரம் எழுதினார்.

தில்லை வில்லாளனின் – 'கருங்குழி பார்சல்', 'ஸ்ரீமான் மகாலிங்க சாஸ்திரிகள்', 'வெள்ளிப் பணம்', 'பெயர் பொருத்தம்', 'பேனா–ஓர் போர்வாள்', 'விநோத வியாதி' ஆகிய படைப்பும் வெளியாயின!

'ஆரூரான்' என்னும் புனை பெயரில்; அரங்கண்ணல் – 'பெவின் கனவு', 'இரத்த ஞாயிறு', 'பரத்துவாஜர்' என்னும் படைப்புக்களைப் படைத்திருந்தார்.

டி.கே. சீனிவாசனின் – 'ஐயோ அம்மா'வும், என்.எஸ். இளங்கோவின் – 'ஒரு கோப்பை நஞ்சு' என்னும் படைப்புக்களும் குறிப்பிடத்தக்கனவாகும்.

பாரதிதாசன், நாரா.நாச்சியப்பன், கவி.கா.மு.ஷெரீப், மாவெண்கோ, கருணா ஆகியோரின் கவிதைகள் இடம்பெற்றிருந்தன!

தந்தை பெரியாரின் பேச்சும், சிங்காரவேலரின் கட்டுரையும் இவ்விதழ்களில் வெளியாயின.

'கதை' முடியவில்லை – பத்திரிகையின் வாழ்வு தற்காலிகமாக முடிந்துவிட்டது

கலைஞர் மு. கருணாநிதி, 'மூனாகானா' – 'சேரன்' – 'பேனாமுள்' – என்னும் புனை பெயர்களில் எழுதினார்; பெயர் போடாமல், தலையங்கங்களும் எழுதினார்.

13–வது இதழில் (14–4–48) கலைஞர் எழுதிய 'இரத்தக் கண்ணீர்' தொடர்கதை தொடங்கியது; கதை முடியுமுன்னே பத்திரிகையின் வாழ்வு தற்காலிகமாக முடிந்துவிட்டது!

விபரீத விளக்கத்திற்கு விந்தையான பதில்

'மூனாகானா' என்னும் புனை பெயரில், 'ஒரிஜனலில் உள்ளபடி' (18–2–48) என்னும் சிறுகதையும், 'கண்டதும் காதல் ஒழிக' (24–3–48) என்னும் சிறு கதையையும் எழுதி இருந்தார்.

முதல் இதழ் வெளியான நாள், பெரியார் ஆண்டு 69 – தை 1 (14–1–48) எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அன்று வெளியான 'முரசொலி'யின் முதல் இதழில், 'பேனாமுள்' என்னும் புனை பெயரில் கலைஞர் மு. கருணாநிதி – 'ஜனநாயகம்' என்னும் இதழில், 'ஈரோட்டுப் பாதை' என்னும் தலைப்பில் ஜீவானந்தம் எழுதிய கட்டுரைக்கு, 'எழுதவில்லை' என்னும் தலைப்பில் – மறுப்பு எழுதத் தொடங்கினார், இம் மறுப்புக் கட்டுரை மூன்று இதழ்களில் வெளிவந்தது!

இக்கட்டுரை, புதுமையாக அமைந்திருந்தது!

சுயமரியாதை இயக்கத்திலிருந்து விலகி கம்யூனிஸ்டுக் கட்சிக்குச் சென்றுவிட்ட ஜீவானந்தம், **'தன் மனச்சான்றுப்படி எழுதி இருந்தால் எப்படி எழுதி இருப்பார்'** என்பதை – கடித வடிவில் – கற்பனையாக எழுதி இருந்தார் கலைஞர்!

கட்டுரையின் முடிவில், 'இப்படிக்கு, தோழன் ப. ஜீவானந்தம்' என்று வெளியிட்டிருந்தார்; அது வருமாறு:–

"நான் 'ஜனநாயகத்தில்' 'ஈரோட்டுப் பாதை'யைப் பற்றி விபரீத விளக்கம் தந்தது போதும்; இந்தத் திராவிடர் கழகத்துப் பேனா முனைகளிடம் சிக்கி வேதனைப்படுவதும் போதும்; நான், மனத்தில் என்ன நினைத்துக்கொண்டு சொன்னேன் – எழுதினேன் என்பதே இவர்களுக்குப் புரிய மாட்டேன் என்கிறது; நாடகத்தில் தாசி வேடம் போட்டுக் கொள்பவர், வாழ்க்கையிலும் தாசியாகவா இருப்பார்? அல்லது, கண்ணகியாக நடிப்பவர் கற்புக்கரசியாகத்தான் இருக்கிறாரா! அதைப் போலத்தான் என் கதையும்!

"பத்திரிகை – மேடை இவைகளில், நான், திராவிடர் இயக்கத்தைக் கண்டித்தால்தான், என் அரசியல் பிழைப்பு நடைபெறும் என்பதற்காக அந்த 'அரிதாரம்' பூசிக்கொள்கிறேன்; அந்தப் 'பாஷை' பேசுகிறேன்; இன்னும் விலக்குகிறேன் என் முக்காட்டை – இதோ பாருங்கள் –

"சுயமரியாதை இயக்கம் தனி சமூகச் சீர்திருத்த இயக்கம் அல்ல என்பதும், ஜஸ்டிஸ் கட்சிக்கு மக்களிடையில் செல்வாக்குப் பெறச் சந்தர்ப்பம் அளிக்கும் இயக்கம் என்பதும் தெளிவாகும்."

"ஈரோட்டுப் பாதையில், என் கட்டுரை போகும் போக்கு இப்படி! இதற்கடுத்த வரியில் நான் தருகிற ஆதாரமே என் குற்றச்சாட்டுக்குத் தக்க பதிலாக அமைகிறது:–

"1929 செங்கற்பட்டு முதல் மாகாண சுயமரியாதை மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் பல, ஜஸ்டிஸ் கட்சி வைதீகர்க்குப் பிடிக்கவில்லை; அதனால் அவர்கள், சமுதாய சீர்திருத்தத்தில் மேம்போக்காகவே நடந்துகொண்டனர்."

"இந்த மேற்கோளும், என் ஈரோட்டுப் பாதையில்தான்! இம்மாநாட்டுக்குப் பின் ஈ.வெ.ரா.வுக்குப் பல எதிர்ப்புக்கள் தோன்றின என்பதை நான் என் கட்டுரையில் குறிப்பிடவில்லை; காரணம்... காரணமா கேட்கிறீர்கள்? உண்மையை மறைப்பது தானே என் கொள்கை".

இதயங்களை ஈர்த்தது – உண்மை தெரிந்தது!

கட்டுரை, இந்தப் பாணியில் அமைந்திருந்தது; இது, இயக்கத்தவர்களைப் பெரிதும் ஈர்த்தது!

இதனைப் படித்த தோழர்கள், 'உண்மையில் ஜீவானந்தமே இவ்விதம் எழுதி இருப்பதாக'க் கருதிக்கொண்டு, கலைஞருக்குக் கடிதம் எழுதிக் கேட்டனர்.

கலைஞர், இரண்டாவது இதழில், 'ஜீவானந்தம் கடிதம்' என்னும் தலைப்பில், பதில் எழுதினார்:–

" 'முரசொலி'யில் 'எழுதவில்லை' என்ற தலைப்பில் வெளியான 'ஜீவானந்தம் கடிதம்', 'அவர் எழுதியதுதானா' எனப் பல நண்பர்கள் கேட்கிறார்கள்.

"இல்லை, இல்லை; ஜீவானந்தம் எழுதவில்லை; 'ஜனநாயகம்' பத்திரிகையில் தோழர் ஜீவானந்தம் 'ஈரோட்ப் பாதை' என்ற தலைப்பில் பெரியாரைப் பற்றி எழுதியுள்ள கட்டுரைக்கு மறுப்பு அளிக்கும் முறையில், நமது 'பேனாமுள்' எழுதும் கடிதம் அது! ஜீவா உண்மை உள்ளத்தோடு

எழுதினால், 'இப்படித்தான் எழுதுவார்' என்பது நம் கருத்தும்கூட! ஆனால் அவர் எழுதவில்லை!''

– 'முரசொலி' 21–1–48

பூரிப்பு விழாவில் சோற்றுப் பொங்கலா?

'முரசொலி' முதல் இதழில், 'திடு திடும்' என்னும் தலைப்பில் கலைஞர் தலையங்கம் தீட்டி இருந்தார்; அதில் தன் குறிக்கோளை யும் காட்டி இருந்தார்:–

'' 'வாளை எடு; வாழ்வா–சாவா என்பதைப் போரில் புரிந்து கொள்வோம்' என்பதற்கு மட்டுமல்ல; 'வாழ்விலோர் திருநாள்' பாடி – வளமார் நாட்டை வாழ்த்திடவும் முரசு முழங்குவது உண்டு!

''ஆரியர் உருட்டி விளையாடும் உருட்டுச் சட்டிப் பொம்மைகளால் – ஆங்கில ஏகாதிபத்தியத்தைவிடக் கொடிய வடவர் ஏகாதிபத்தியத்தின் வால் பிடிப்பவர் களாய் – சீரிளமைத் தமிழ் அழித்துச் செந்தமிழ் நாடழிக்க இந்தி மொழிக்குப் பராக்குக் கூறும் சிப்பாய்களாய் இங்குள்ள தோழர் இருக்குங் காலத்திலேயே, 'பொங்கல் விழா' கண்டு நமக்குப் பூரிப்புத் தாங்கவில்லை என்றால், காமராசர்கள்–சண்முகங்கள்–ஜீவாக்கள் தோன்றியிராத அந்தக் காலத்தில் – மானத்துக்கும் தமிழனுக்கும் நீங்காத தொடர்பு இருந்த அந்தக் காலத்தில் – களத்தில் ஈட்டியைச் சுவைத்துக் காதற் பரிசாக இதழ் சுவைத்துக் கிடந்த வீரப் பரம்பரை வாழ்ந்த அந்தக் காலத்தில் – பொங்கல், இப்படிச் சோற்றுப் பொங்கலாகவா இருந்திருக்கும்?

''கிரேக்க – ரோமானிய நாடுகள், உன் நாட்டுப் பொருளுக்கு வாய் பிளந்து கிடந்தனவே – நீ, ஒரு பிடி சோற்றுக்கும், முழத் துணிக்கும் வாய் பிளந்து கிடக்கிறாயே!

''அந்நிலை மீளாதா – புது வாழ்வு மலராதா – மலரும்! மலர வேண்டுமானால், திராவிடா – இந்தப் பொங்கலில் உன் உள்ளம் பொங்கட்டும்! குன்றெடுக்கும் நெடுந்தோளான் குலத்தினனே – குள்ள நரிக் கூட்டத்தின் குணமறுக்கும் கூர்வாள் எடு! சாணிப் பிள்ளையாரும், சீனிப் பாயசமும் பொங்கலின் குறிக்கோள் அல்ல! கோணிக் கிடக்கும் சமுதாயத்தின் குறை தவிர்க்க முரசறை வாய்! போர் முரசறைவாய்!

'' 'திடு திடும்' – எழுந்தது முரசொலி! எம்மினத்தவரே – முரசொலிக்கு உங்கள் ஆதரவு பொங்கட்டும்!''

புரட்சிக் கவிஞரின் வாழ்த்து

'முரசொலி' முதல் இதழில், பாரதிதாசன், திருவாரூரில் தொடங்கிய மாணவர் மன்றத்திற்காக 21–11–42ல் எழுதிய வாழ்த்தினை வெளியிட்டார்:–

"தண்பொழிலில் குயில் பாடும்
திருவாரூரில்
தமிழ்நாடு, தமிழ் மாணவர்
மன்றங்காண்!
வண்மையோடும் உண்மையோடும்
வாழ்ந்திடுங்காண்!
மக்களிடை எழுச்சிக்கு
மருந்தாகுங்காண்!

எனத் தொடங்கும் பாடல் அது!

இது தவிர, புரட்சிக் கவிஞர், 'முரசொலி'க்காகவே தனியாக அனுப்பிய வாழ்த்தையும் – 'முரசொலி'க்குக் கவிஞரின் வாழ்த்து என்ற தலைப்பிட்டு – அவ்வித ழில், கலைஞர், பெருமகிழ்வுடன் வெளியிட்டிருந்தார்:–

"திரைகடல் மீது
பரிதி எழுந்தே
அரசுவீற் றிருந்தான்
அழகொளி வீசி!
வாழிய பரிதி
வண்மைத் திருநாள்
இந்நாள் பொங்கல்
இட்டு மகிழும்
தென்னாட்டு மக்களின்
திருவென ஓங்கி
'முரசொலி' நாளும்
முன்னேற்றம் எய்திட
என்மன மார
யான் வாழ்த்துகின்றேன்
என்றும் 'முரசொலி'
இனிது வாழியவே!

வீழிய பகைவர்!

நாளும்

வாழிய திராவிட

மக்கள் நன்றே!

– பாரதிதாசன்

மூதாட்டியார் மகிழ்ச்சி

மூவாலூர் மூதாட்டி ஆ. இராமாமிர்தத்தம்மையார் அவர்களும் 'முரசொலி'க்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்; இவ்வாழ்த்து 'முரசொலி'யின் நான்காவது இதழில் (14–2–48) வெளியாயிற்று –

" 'எப்பொழுது – கங்கை கொண்ட சோழன் வம்சத்தாரின் முரசின் பேரொலியைக் கேட்போம்? எப்பொழுது – வீரமகள் கண்ணகியின் சிலைக்கு இமயத்தில் கல் எடுத்த சேரன் – செங்குட்டுவன் சந்ததி வெற்றி முரசு அடிப்பதைக் காண்போம்?' – என்கின்ற நிலையில் இருந்த எனக்கு, பேச்சாலும் எழுத்தாலும் – நாடக நடிப்பாலும் – நாட்டுக்குத் தொண்டு செய்து, பகுத்தறிவைப் பரப்புகின்ற வீரத் தமிழ் இளைஞர் கருணாநிதி அவர்கள், 'முரசொலி' முழங்கி – பத்திரிகையிலும் பணிபுரிய வந்துள்ளார் என்பது கேட்டு மகிழ்ச்சிப் பெருகாமல் இருக்குமா?

"நாட்டிலே பணம் உண்டு – பணி செய்ய மனமில்லை! வாய்ப் பேச்சு உண்டு – முயற்சி இல்லை! உணர்ச்சி உண்டு– ஊக்கமில்லை! கூட்டம் உண்டு – கூட்டுறவு இல்லை! இந்நிலையில், 'முரசொலி' வெளி வருகிறது; இந்நிலை மாற, ஒலி திக்கெட்டும் முழங்கட்டும்!"

மூவாலூர்

ஆ. இராமாமிர்தத்தம்மாள்

ஆர்த்தெழும் பாடல்

கவி.கா.மு. ஷெரீப், 'முரசொலி' பற்றி எழுதிய பாடல் ஒன்றினைக் கலைஞர் இதே இதழில் வெளியிட்டிருந்தார்:–

"முரசொலி! முரசொலி! முரசொலி!

அரசனென்றும் ஆண்டியென்றும்

அவதியுறும் மக்களை

அல்லல்நீக்கி ஒன்றுசேர்க்க

ஆர்த்தெழுந்தே முரசொலி

மேலுலக வாழ்வு என்றும்
மோட்சமென்றும் நம்பியே
கீழ்நிலையில் வீழ்ந்தநாமும்
கெட்டுவிட்ட தன்மையில்
வாழுகின்றோம் மூன்று கோடி
மக்களிங்கு தமிழர்கள்
ஆள்வதற்கோ உரிமையில்லை
அவ நிலையைப் போக்கிட
கூழுமின்றி மக்களெல்லாம்
குறையுமிந்த நாளிலும்
ஆள்சுமக்க ஆறுவேளை
அன்னமுண்ணும் சாமிகள்
பாழ்படுத்தி மக்கள் தம்மை
பரிதவிக்கச் செய்துமே
வாழ்ந்திருக்கும் நிலைதகர்த்து
மாய்ந்தொழியச் சொல்லியே!''

கவி.கா.மு. ஷெரீப்

கிண்டல் பகுதியில்

'குண்டு வீச்சு' என்னும் சிறு பகுதியையும், கலைஞர், 'முரசொலி' இதழில் தொடங்கி இருந்தார்; மாற்றார் கருத்தைக் கிண்டல் செய்யும் பகுதி அது; அவற்றில் சில:–

''சுய விளம்பரம் தமிழருக்கு இருந்திருந்தால் – பண்பு குறைந்த மாகாண அபிமானம் இருந்திருந்தால் – தமிழரை மற்ற மாகாணத்தார்கள், இன்று பிரமாதமாய் நினைப்பார்கள்.''

– (திரு. சொக்கலிங்கம் ஆசிரியராக இருந்த 'தினசரி' ஏட்டின் தலையங்கத்தில்: 1948)

''மற்ற மாகாணத்தவர் நம்மை மட்டமாக நினைக்கிறார்கள் என்பது மனதில் பட்டவரையில் மகிழ்ச்சி; ஆனால், மாகாண அபிமானத்தை 'பண்பு குறைந்தது' என்கிறீரே – அட, இன உணர்ச்சியற்ற பரந்த மனப்பான்மையே!''

***

"ஜனவரி 8ந் தேதி, 'சமயபுரம்' என்ற ஊரில், 'தாயை மகன் கொலை செய்தான்.''

— பத்திரிகைச் செய்தி: 10–1–48

"மகாவிஷ்ணு அம்சம் பரசுராமரே தாயைக் கொன்றிருக்கும் போது, 'மனிதனாகிய நமக்கென்ன' என்ற தைரியந்தான்!''

இவற்றைத் தவிர 'பத்தினியே உன்போல்' என்னும் தலைப்பில் ஒரு பக்கக் கட்டுரையைக் கலைஞர் எழுதி இருந்தார்.

தில்லை வில்லாளனின் – 'கருங்குழி பார்சல்' என்னும் சிறுகதை இம் முதலிதழிலேயே வெளியாயிற்று!

***

விமரிசனப் பகுதி

புத்தக விமரிசனம், 'சுவைத்ததில்' என்னும் தலைப்பில் வெளிவந்தது; 'குத்தூசி'யின் 'பல சரக்கு மூட்டை' என்னும் நூலுக்குக் கலைஞர் இனங்கண்டு எழுதிய விமரிசனம் இது:–

"வைதீகக் கோணிகளைக் குத்தி – அரசியல் சாக்கு மூட்டை களை ஆராய்ச்சி செய்து பல சரக்குகளை நமக்குத் தந்திருக்கிறார், தோழர் 'கு' அவர்கள்; குத்தூசியார் எவ்வளவு நாளைக்குத்தான் பெயரை மறைத்துக் கொண்டிருக்கிறார் பார்ப்போம்!

"குத்தூசி அண்ணாச்சி – உங்களை நான் கண்டு பிடித்து விட்டேன்; ஆனால், அந்த உளுத்தம் பருப்பும் – உருப்படா உளுந்தும், உங்களை யாரென்று தெரியாமல் விழிக்கின்றன!

"திராவிடரே – உங்கள் கையில் ஒரு 'குத்தூசி' இருக்கட்டும் எனச் சிபாரிசு செய்கிறேன்.''

— 'முரசொலி' வார இதழ்: 20–6–48

கருத்துக்களைப் பரப்ப நாடக மன்றம்

கலைஞரின் 'தூக்குமேடை' நாடக விளம்பரங்களும், 'முரசொலி' இதழில் வெளிவந்தன; இதில் – மு. கருணாநிதி, என்.எஸ். இளங்கோ, புலவர் குழந்தையா, தோழியர் கே. இராஜம், என்.எஸ். சண்முகவடிவேல், கருணை எம். ஜமால் முதலியோர் நடித்தனர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் – கழகக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வதற்காகக் காஞ்சியில் 'திராவிட நடிகர் கழக'த்தை அமைத்துத் தாமே வேடந் தாங்கி நடித்தது போன்று கலைஞரும் திருவாரூரில் – 'முரசொலி' பெயரால் – 'முரசொலி நாடக

மன்றம்' எனும் ஒரு மன்றத்தை நிறுவி தாமே வேடந்தாங்கி – கழகக் கொள்கைகளைப் பரப்பினார்!

இக் கழகங்களை ஒட்டித் தமிழகமெங்கணும் இயக்கத் தோழர்கள் ஏராளமான நாடக மன்றங்களை அமைத்துக் கொள்கைப் பிரச்சாரம் செய்ததுடன், நாடகத் தமிழுக்கும் பெருந் தொண்டாற்றினர்!

***

விதவைத் திருமணத்திலும் அக்கறை செலுத்தியது

'முரசொலி' ஏடு 'விதவா விவாக'த்திலும் அக்கறை செலுத்தியது; 11–2–48 'முரசொலி' இதழில் வெளியான விளம்பரம் இது:–

> "விதவைப் பெண் தேவை; ஆயிரம் ரூபாய் சொத்துடையவரும் – மாதம் ரூ. 50 வருமானமுடையவரும் – 25 வயதுடைய மருத்துவ வகுப்புத் தோழருக்கு விதவைப் பெண் தேவை.
>
> "விபரத்திற்கு:– ச. பரசுராமன், பார்பர் ஷாப், விஜயபுரம் அஞ்சல்"

புரட்சிக் கவிஞரின் 'குயில்' பத்திரிகைக்கான விளம்பரமும் 'முரசொலி' இதழில் வெளியாயிற்று.

***

சீர்திருத்தக் கட்டுரைகளை எழுதிக் குவித்தார்

இலக்கிய–அரசியல்–சீர்திருத்தக் கட்டுரைகளை 'முரசொலி' இதழ்களில் கலைஞர் ஏராளமாக எழுதிக் குவித்தார்.

'சொர்க்க லோகத்தில்' என்னும் சீர்திருத்தக் கட்டுரை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கண்ணப்ப நாயனார், சிறுத்தொண்டர், நந்தனார், காரைக்காலம்மையார், அப்பர், இயற்பகை நாயனார் ஆகியோர் சொர்க்கத்தில் கூடிப் பேசுகிறார்கள்; அவர்கள் பேச்சு – சொர்க்கலோகத்துக்கு வந்ததைப் பற்றி!

கலைஞர் எழுதுகிறார்:–

> இயற்பகை நாயனார் கூறுகிறார்:— "மனிதனுக்கு மானம் பெரிது; அந்த மானத்தை அடகு வைத்து, என் மனைவியைப் பரமசிவனோடு பள்ளியறைக்கு அனுப்பி

வைத்தேன்; அந்தத் தியாகத்தின் பரிசாகத்தான், இந்தப் பரமண்டல வாசத்தை, பரமன், எனக்கு அளித்தார்.''

எறிபத்த நாயனார்:– "அப்பப்பா! இந்த லோகத்திற்கு வர எத்தனை எத்தனை பேரைக் கொலை செய்திருக்கிறேன் தெரியுமா? சிவனைத் துவேஷித்தவர்களை எல்லாம் மழுவால் வதைத்துக் கொன்றுபோட்டேன்; அந்தப் பிணங்களையெல்லாம் பிறை சூடும் பித்தரிடம் காட்டிய பிறகுதான் இந்தப் பேறு கிட்டியது!''

– 'முரசொலி': *25–2–48*

இந் நாயன்மார்களை, 'காங்கிரசுத் தியாகி' ஆச்சாரியாரோடு (இராஜாஜி) இணைத்துக் கிண்டல் செய்திருந்தார் கலைஞர்!

இத்தகைய கிண்டல் தாக்குதல்கள், மதச் சேற்றில் சிக்கி மௌடீகத்தில் மூழ்கிக் கிடந்த தமிழருக்குத் தெளிவேற்படுத்தி இருக்கும் என்பது திண்ணம்!

*

வினா எழுப்பி – தமிழரை சிந்திக்க வைத்தார்

மாதவி, கண்ணகி, இளங்கோவடிகள் போன்றோர், தமிழினப் பகைவர்களால் – 'தமிழர்' என்பதற்காக மறைக்கப் படுகிறார்கள் அல்லவா? இதை, 'காரணமென்ன', என்னும் வினாவின் மூலம், கலைஞர், தமிழர்களைச் சிந்திக்க வைத்தார்!

"காதலுக்கு உதாரணம், இந்திரனைக்கூடிய கௌதம ரிஷி மனைவி அகல்யாவும் – சந்திரனைக் காமுற்ற பிரகஸ்பதி முனிவர் பத்தினி தாரையும் என்று... அதைக் கூறுவார்கள்; காதலுக்காக வாழ்வையே தியாகம் செய்த என்னைச் சொல்லமாட்டார்கள்; காரணம் என்ன?'' – **மாதவி!**

"ஆனால், தமிழச்சியைக் கேளுங்கள் – 'கற்புக்குப் பேர் போனவள் யாரம்மா' என்று, எங்களைச் சொல்ல மாட்டாள் – ஐவரை மணந்து ஆறாவது புருடனை மாலையிட எண்ணிய திரௌபதியை 'அழியாத பத்தினி' என்பாள்; காரணம் என்ன?'' – **கண்ணகி!**

" 'எனக்கு ஆட்சியா – இல்லை, இல்லை; ஜோஸ் யத்தைப் பொய்யாக்குகிறேன்' என சபதம் எடுத்து உடனே

துறவறம் பூண்டேன்; அண்ணனையே அரியணையில் அமர்த்தி அகமகிழ்ந்தேன்; இது நான் சகோதரனுக்காக செய்த தியாகம்; ஆனால், தமிழனைக் கேளுங்கள் – 'சகோதர வாஞ்சையுள்ள ஒருவன் பெயரைச் சொல்ல முடியுமா' என்று, உடனே பதில் வரும் – 'இராமன் தம்பி பரதன்' என்று; என் பெயரும் – நான் தந்த சிலப்பதிகாரமும் தமிழனுக்குச் சரியாகத் தெரியாது; காரணம் என்ன?'' – **இளங்கோவடிகள்**.

இவை அனைத்தும், 'சேரன்' என்னும் புனைபெயரில் 'இனமுழக்கம்' என்னும் தலைப்பில் கலைஞர் எழுதினார்.

'கருஞ்சட்டை' படம் போட்டு – அதிலேயே, 'இனமுழக்கம்' என்றெழுதி 'பிளாக்' செய்து இப்பகுதிக்குத் தலைப்பாக அச்சிட்டிருந்தார்!

பிற்காலத்தில், 'இன முழக்கம்' என்னும் தலைப்பில், ஒரு இதழ்கூட வெளிவந்தது.

'இராவணன் – நம்ப பாட்டன்' என்னும் கட்டுரை, 'குமுதம்' இதழில் இதே தலைப்பில் எழுதிய இன்னொரு கட்டுரைக்குக் கண்டனமாகக் கலைஞர் எழுதியதாகும்!

'ஆரியம் பேசுகிறது' – என்னும் கட்டுரையும், குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

'முரசொலி'யில் வெளிவந்த தலையங்கங்கள் சிறப்பானவை யாகும்; படித்தவர்களுக்கு இன்றளவும் நினைவில் நிற்கக் கூடியவையுமாகும்.

மோகனப் புன்னகையார் மோகன்தாஸ் காந்தி

4–2–48 'முரசொலி' வார இதழில் – காந்தியார் சுடப்பட்ட போது – கலைஞர், '*30–1–48*' என்று தலைப்பிட்டுத் தலையங்கம் எழுதினார்:–

"திரு. காந்தியார் சுடப்பட்டார்! மும்முறை சுடப்பட்டார்! ஐயகோ – சுடப்பட்டார்!

சுடப்பட்டார் .... சுடப்பட்டார்..... சுக்கு நூறாக்கப்பட்டார்!

30–ந் தேதி – மோகனப் புன்னகையார் மோகன்தாஸ் காந்தி! .... *31*–ந் தேதி – அய்யய்யோ! முறிந்தும் எரிந்தும் போன எலும்புத் துண்டுகள்! ஒரு முட்டாள் வீசிய குண்டுகள், மூடத்தனத்தையும் – மௌடீக மதவெறியையும் போக்குவதற்கு முயன்ற ஒரு தியாகியின் வாழ்வை முடித்தன!"

'பரந்தாமன் அவதார'த்தைப் 'பாடை'யில் ஏற்றியதேன்?

"பெரியார் அவர்கள், 'தீர்க்க தரிசனம்' போல் சொன்னார்கள் – 'காந்தியாரைக் கொன்றது, மதமும் – வைதீகமும்' என்று; மறுநாள் செய்தியாக வந்தது – 'காந்தியாரைக் கொன்றது, ஒரு மராட்டியப் பார்ப்பனன்' என்று!

மதத்திற்குச் சவக்குழி வெட்டியவரல்லர் காந்தியார்; ஆனாலும், மரணம் அவருக்குப் பரிசாகக் கிடைத்தது!

காந்தியார் – பெரியார் தொடர்பு, வெறும் மின்னல் அல்ல; 'ஈரோட்டு இராமசாமியையும் – நாகம்மாவையும் கேட்டுச் செய்யுங்கள்' என்று தமிழ்நாட்டுக் காங்கிரசுக்கு, காந்தியார் புத்தி சொல்லிய காலம்கூட ஒன்று இருந்தது!

அந்தக் காலத்தை மலையேறச் செய்ததும் பார்ப்பனீயம்! அட – பாம்பினும் கொடிய பார்ப்பனீயமே! காந்தியாரை, 'பரந்தாமன் அவதாரம்' என்று கூறியதும் நீதான் – அவரைப் பாடையில் ஏற்றியதும் நீதான்; இது உனக்கு அடுக்குமா?

30–1–1948! ஆமாம்! வரலாற்றையே வீணாக்கிய நாள்!"

'வடநாட்டுத் தலைவர்'களின் ஒப்புதல் கிடைக்குமா?

காந்தியார் மறைந்தபோது பெரியார், 'காந்தியாருக்கு நினைவுச் சின்னமாக, இந்தியாவை – 'காந்தி தேச'மென்றும், இந்து மதத்தை – 'காந்தி மத'மென்றும் பெயர் மாற்றலாம்" எனப் பண்டித நேரு முதலிய தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

கலைஞர், *25–2–48* 'முரசொலி' இதழில், "காந்தி பிறந்த நாட்டுக்கு – 'காந்திஸ்தான்' என்றும், இந்து மதத்திற்கு – 'காந்தி மதம்' என்றும் பெயர் வைக்கலாம் என்னும் கருத்துக்கு எதிராக இருப்பது, காந்தியைப் போற்றிய பார்ப்பனர்களே" என்பதை எடுத்துகாட்டி, 'பெரியார் யோசனைக்கு வடநாட்டுத் தலைவர்கள் சம்மதம்' எனும் தலையங்கம் தீட்டினார்.

தலையங்கத்தின் முடிவில், 'வருமா – பெரியார் யோசனைக்கு வடநாட்டுத் தலைவர்கள் சம்மதம் என்ற செய்தி?' என்னும் வினாவினைத் தொடுத்தார்!

வசீகரத் தலைப்புக்கள் தருவதில் வல்லவர்

'சிக்கலில் சுப்பராயன்' என்னும் தலையங்கம் *24–3–48*ல் வெளியாயிற்று.

இந்தத் தலைப்பைக் கண்டதும் சிலர் 'திருவாரூருக்கு அண்மையிலுள்ள 'சிக்கல்' என்னும் ஊரில் சுப்பராயன் பேசிய பேச்சுக்குத்தான் கலைஞர் இவ்வாறு தலைப்புக் கொடுத்திருக் கிறாரோ' என்று ஐயமுற்றனர்; கட்டுரையைப் படிக்கத் தொடங்கியதும், 'சிக்கலான பிரச்சினையில் சுப்பராயன் சிக்கி இருந்தார்' என்பது தெரியவந்தது!

வாசகர்களை ஈர்க்கத்தக்க வகையில், வசீகரமான தலைப்புக் களைத் தருவதிலே வல்லமை படைத்த பத்திரிகையாளராகக் கலைஞர் விளங்கினார்!

அந்தத் தலையங்கத்தில் கலைஞர், இப்படி எழுதியிருந்தார்:-

"சுப்பராயன் சூரப் புலியாயிருந்தாலும் – சுந்தராங்கத மனமோகனராக இருந்தாலும் – 'சுட்டு விரல் ஆட்டினால் சுட்டுத் தள்ளு' என்ற அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும் அமைச்சராயிருந்தாலும், 'சூத்திரர்தான்' என்ற மனுநீதி அமைந்துள்ள அந்த மாமிச மலைகள் வகுப்பு வாதிகளா?

"அல்லது, மாடென உழைத்து – மண்டை போடும் வரையில் தொண்டு செய்யும் அடிமைகளாய் உழன்று அல்லற்படும் திராவிட சமுதாயம் அரசு பெறப் பணிபுரியும் கருஞ்சட்டையினர் வகுப்பு வாதிகளா?

"அமைச்சர் ஏறே! அருள்கூர்ந்து பதில் கூறுங்கள்!

"சிக்கலான கேள்விதான்! சரியான பதில் சொன்னால், சிம்மாசனம் போய்விடும்! என் செய்வீர்கள் – பாபம்"

*

கண்ணீர்க் கடலில் கலைஞரின் கவிதை

கலைஞர் மு. கருணாநிதி முதலமைச்சராக ஆனதற்குப் பிறகே, கவி அரங்குகளில் சென்று கவிதை எழுதுவதாகப் பலர் கருதுகிறார்கள்! அது சரியன்று; அவர், 'பள்ளி மாணவராக இருந்தபோதே கவிதை எழுதத் தொடங்கி விட்டார்' என்பதுதான் உண்மையாகும்.

ஆண்டுதோறும் வெளியான 'முரசொலி' பொங்கல் மலர்களில், அவருடைய புதுமை நிரம்பிய புரட்சிக் கவிதைகளைக் காணலாம்.

இம்முறையில், *24–3–48* இதழில், 'தன் தோளுக்கு இட்ட மாலையைப் பெரியாரின் தாளுக்கு இட்ட சர்.ஏ.டி. பன்னீர்செல்வம்' மறைந்ததன் நினைவாக நீண்ட கவிதை ஒன்றை,

'மு.க.' என்ற பெயரிட்டுக் கலைஞர் எழுதினார்; 'கவிதையல்ல – கண்ணீர்க் கடல்' என்று தலைப்பும் கொடுத்தார்:–

இருட்டறையில் இருகண்கள் மூடிக்கொண்டு
உருட்டுகின்றார் உலகத்தார் என்று சொல்வோர்
அழுந்தட்டும் அறியாமை அதையுணர்த்த
முழங்கிற்று பெரியாரின் முரசஒலி
அவ்வழி வந்தோன் – அன்பன் – தோழன்
அருமைச் செல்வம் – அறிவியக்க வீரன்
ஞாயிற்றின் நல்லொளியில்
ஆயிற்று காலமென்று அகன்றுவிடக் கருக்கல்!
அங்கே....
கிழக்கினில் கிளம்பிய காலைக் கதிரவன்
வெடுக்கென வீழ்ந்தான் கடலில் என்றால்
வையம் கலங்காதோ? வாடி வதங்காதோ?
இருள் நீங்கி ஒளிபெறவே இந்நாடு முந்துங்காலை
மருள் சூழ்ந்த சாவு மேகம் இளங்கதிரை மறைத்ததுவே!
குன்றெடுக்கும் நெடுந்தோளன் குலத்தினனே!
கொன்றொழிக்கும் கொடுவாளால்– குள்ளநரி ஆரியத்தைக்
குலைபிடுங்கக் குகைவிட்டு வெளிவந்த சிங்கஏறே!
மலைத்தோளா! மாணிக்கக் குன்றே!
பழச்சுளை உன் பேச்சு! பார்வையிலே பனிவீச்சு!
பார்ப்பனீயம் உனைப் பார்த்துவிட்டால்
படைகண்ட கோழைபோல் நிலைகுலைந்து போகுமே!
நீ போய்விட்டாய்....... நின்னொடு நின் புகழ்போமோ?
தீ வைத்தாய் ஆரியக்காட்டில்!
அது–படபடவென வெடிக்கையிலே பார்க்காமல் மறைந்து விட்டாய்!
பன்னீர்செல்வமே! உன் பால்வடியும்
முகமெங்கே? பாண்டியன் மீசையெங்கே?
பசியேறிய வெறிக்கடலின் பாழலைகள்
ஓய்ந்தனவா உனைத் தின்று?
தின்னட்டும்! தின்று மகிழட்டும்....
என்னை எண்ணட்டும் திருவிடத்தா ரென்றே எங்கொளிந்தாய்?

பணத்தில் பிறந்து பணத்தினில் வளர்ந்தும்
பாட்டாளிக் குணத்தினை எங்ஙனம் கற்றாய்?
கோமானே! யாம் அழுதழுது உகுத்த கண்ணீர்
ஓமான்கடல் ஆயிரத்தை வெற்றி கொள்ளும்
பழுதற்ற திராவிடப் பொன்னாடு! ஆரிய
மதுவுண்ட மக்களெல்லாம் விழித்தெழுதல்
இது காண்டல்.... நின்பணிக்குக் காணிக்கையாம்
சுற்றி எதிர்ப்புக்கள் சூறாவளியாய்ச் சீறிடினும்
வெற்றி எமக்கென்றே வெளிக்கிளம்பி விட்டோம்!
பஞ்சைகளல்ல நாங்கள்...
தஞ்சைக் காவலன் சந்ததியார்!
வீழ்ந்திட நேரிடினும் நின்செயல் பாடி
வீழ்ந்திடுவோம்!

இதுபோன்றே, அன்னை நாகம்மையாரையும் நினைவு கூர்ந்து ஒரு கட்டுரையை 18–2–48 இதழில் எழுதியிருந்தார்.

*

'அரசியல்' நெருக்கடி அண்ணாவுக்கு ஏற்பட்டபோது!

பிற்காலத்தில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்ட போதெல்லாம், நெருக்கமாக நின்று தோள் கொடுத்துத் தாங்கிய கலைஞரவர்கள் 1948 முதலே அறிஞர் அண்ணா அவர்களை அதிதீவிரமாக ஆதரிக்கத் தொடங்கினார்!

திராவிடர் கழகத்தில் அண்ணாவுக்கு இடர்பாடு ஏற்பட்ட போதெல்லாம், கலைஞர், அண்ணாவின் பக்கமே நின்றார்! கலைஞரின் 'முரசொலி' இதழும், அண்ணாவுக்கு ஆதரவான குரலையே ஒலித்து வந்தது!

1947–ல் இந்தியாவுக்குக் கிடைத்த 'சுதந்தர நாள்', 'துக்க நாளா – இன்ப நாளா' என்பதனை ஒட்டி, அறிஞர் அண்ணா அவர்களுக்கும் – தந்தை பெரியார் அவர்களுக்கும் கருத்து மாறுபாடு ஏற்பட்டிருந்த காலம்; அறிஞர் அண்ணா, திராவிடர் கழக நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கி நின்ற நேரம்!

அப்போதுதான், தூத்துக்குடியில் மிகப்பெரிய அளவில் திராவிடர் கழக மாநாடு நடைபெற ஏற்பாடாகி இருந்தது!

இம் மாநாட்டுக்கு அண்ணா செல்லவில்லை!

இரு பெரும் தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட கசப்பையொட்டி, இயக்கத்தவர்கள், இரு கூறாகப் பிரிந்து நின்றனர்!

அதைப் பற்றிக் கலைஞர் எழுதுகிறார்:–

"அண்ணாவைக் கட்சியிலிருந்து விலக்க வேண்டும் – என்று ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள்; தூத்துக்குடி மாநாட்டில், அண்ணாவின் படத்தைக்கூட – ஆத்திரப்பட்ட சில அவசரக் காரர்கள் – கொளுத்தினர்!

"பெரியாருக்கும் – அண்ணாவுக்கும் இடையே பாலம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் 'முரசொலி' வார இதழில் 'கடைசி நாட்கள்' என்ற தலைப்பில் ஒரு நீண்ட கட்டுரை எழுதினேன்; பெரியாரையும் – அண்ணாவையும் ஒன்றுசேர்க்கும் முயற்சிக்கு இடையூறாக நிற்கின்ற சந்தர்ப்பவாதிகளைப் பற்றியெல்லாம் அதில் விமர்சித்திருந்தேன்; அந்தக் கட்டுரைக்கு, திராவிடர் கழகத்தில் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது; 'முரசொலி' இதழைப் பல இடங்களில் கொளுத்தினர்; பயமுறுத்தல் கடிதங்கள் பல வந்தன; அடுத்த இதழ் அச்சேற்ற முடியாதபடி அங்கேயுள்ள திராவிடர் கழகத்தினர் எனக்கு இடையூறு விளைவித்தனர்!"

இந்த முக்கியத்துவம் நிரம்பிய 'இறுதி நாட்கள்' என்னும் கட்டுரை, 19–5–48 'முரசொலி' வார இதழில் வெளிவந்தது; முற்றிலும் புதுமையான முறையில், இக்கட்டுரைக்கு – விறுவிறுப்பான துணைத் தலைப்புகளை – பக்கத்திற்குப் பக்கம் கலைஞர் கொடுத்தார்:–

"வீரச் சிரிப்பிலே – வெண்தாடி அசைவிலே!"

"புலிக்குட்டிகளின் புரட்சி முழக்கம்"!

"அண்ணா பாதை! அவர்கள் பாதை இல்லை"!

"நடிகவேள் – மாநாட்டில் நஞ்சு கலந்தார்!"

"ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான்!"

"பித்தம் தெளிந்திடுவீர் – இரத்தம் கொதிப்பேறு முன்னே"!

இக்கட்டுரை, தூத்துக்குடி மாநாட்டைப் பற்றிய நிலைமை விளக்கக் கட்டுரையாகவும் – வர்ணனைக் கட்டுரையாகவும் – விமரிசனக் கட்டுரையாகவும் – அண்ணனுக்கு ஆதரவான கட்டுரையாகவும் அமைந்திருந்தது!

'குமுறல்' கட்டுரை

"அண்ணா, வேறு கட்சிக்குப் போய்விடுவார்" என்று சிலர் பிரச்சாரம் செய்ததைக் கேட்டு குமுறி எழுந்த கலைஞர், இக்கட்டுரையில் எழுதுகிறார்:–

'நமக்கு நம்பிக்கை இருக்கிறது – உறுதி இருக்கிறது! அண்ணா போகும் பாதை, ஜீவாவின் பாதையல்ல – வல்லத்தரசு வழியல்ல – விசுவநாதம் சாலையல்ல!

"....திராவிடத் தோழர்கள் நம்ப வேண்டிய ஓர் உறுதிச் செய்தியுமாகும்.

"அண்ணா – எதிரிகள் கோடி இட்டழைத்தாலும், தொடார்!

"திராவிடர் மேன்மையை இகழ்ந்தவனை, தாய் தடுத்தாலும் விடார்.

திராவிடத்தைக் காக்கப் போரிடுவார்!

அண்ணாவின் பெருமையையும் கலைஞர் வர்ணிக்கிறார்:–

"அண்ணா அவர்கள் பெரியாரின் புரட்சிக் கீதத்திற்குப் புது மெருகு அமைத்து, பல்கலைக் கழகங்களைப் பகுத்தறிவு நிலையங்களாக ஆக்கித் தந்தவர்' தலைவர் தோண்டிக்கொடுத்த பொன்கட்டிகளுக்குப் புது மெருகு கொடுத்து, புலவர் கூட்டத்தை இயக்க வீரர்களாக்கியவர்! 'கம்ப ராமாயணத்தில் கலை வந்து சொட்டுதண்ணே' என்று பாடிக் கிடந்த ரசிகமணிகளின் வாய்களுக்குப் பூட்டு மாட்டியவர்! சரிகைத் தொப்பிகளை – 'சர்'களைச் சாய்க்கும் சேலத்துத் தீர்மானத்தைச் சங்கநாதம் ஆக்கியவர்! 'கனம்'களின் கை குலுக்கல்களை அலட்சியப்படுத்தி, சுயமரியாதைச் சோலையிலே கருத்தை உலவ விட்டவர்!

"அத்தகைய ஆற்றல் பெற்ற அண்ணாவின் சேவை, கழகத்திற்குத் தேவை"

என்று வாதிட்டார்!

நடிகவேள் எம்.ஆர்.இராதா மேற்படி மாநாட்டில் நடைபெற்ற நாடகத்தில், "நான் சொல்லுகிறேன் – தளபதியை இனி எந்தக் கூட்டத்திற்கும், நாடகத் தலைமைகளுக்கும், விழாவுக்கும் அழைக்காதீர்கள்" என்று வசனம் பேசினார்!

எழுத்தாற்றலுக்குச் சான்று

கலைஞர், இக்கட்டுரையிலேயே இதற்கும் பதில் கொடுத்தார்:–

"திராவிடர் கழகத்திற்கு, மின்னல் நடிகர் இராதா அவர்களின் நடிப்புத் தொண்டு எவ்வளவு தேவையோ – அவருடைய புரட்சி நாடகங்கள் எவ்வளவு தேவையோ – அதைவிட, அண்ணா தரும் அறிவுக் கருவூலங்கள் இன்னும் அதிகமாகத் தேவை! அந்தத் தேவையை 'தேள் கடி' என்று கூறுவதா? தேனை – 'நஞ்சு'

என்பதா? தென்றலை – 'சூறைக் காற்று' என்பதா? தித்திக்கும் தீந்தமிழை வெறுக்க உபதேசிப்பதா? அதுவும் தலைவர் பெரியார் (பேசி முடித்ததும்) பேசாத வார்த்தைகளை ...... அண்ணாவையே ஒழித்துக் கட்டும் வகையில் வாரி இறைப்பதா?''

இக்கட்டுரை திராவிடர் இயக்கத்தில், 1948ல் பெரும் பூகம்பத்தைக் கிளப்பி விட்டது! 'முரசொலி'யும் தாக்குதலுக் குள்ளானது!

கலைஞரின் எழுத்தாற்றல் முழுமையையும் – அரசியல் மேதைமையையும் இக்கட்டுரையிலிருந்து உணரலாம்!

*

'சாவுமுனை' நோக்கிச் சென்ற தளபதிக்கு வாழ்த்து

1948–ல் இந்தி, கட்டாயமாகத் திணிக்கப்பட்டது?

அரசியலில் ஒதுங்கி நின்ற அண்ணா, திருவாரூரில் நடைபெற்ற தமிழிசைச் செல்வர் டி.வி. நமச்சிவாயம் திருமணத்தில் கலந்துகொண்டபோது, 17–6–48ல் பேசியதாக, 10–8–48 'முரசொலி' இதழில் ஒரு செய்தி வெளிவந்தது:–

> "அண்ணாத்துரை பாரத காலத்துப் பாண்டவர்போல் அஞ்ஞாதவாசம் புரிகிறாரே ஒழிய, விதுரனைப் போல் வில்லை ஒடித்துவிடவில்லை!
>
> "நாளைக்கே 'விடுதலை'யில் ஒரு அறிக்கை வெளிவந்து, 'போருக்குப் புறப்படுக' என்றால், முதல் வரிசையில் அண்ணாதுரையின் பெயர்தான் இருக்கும்!''

1948 சூலை 10ல், இந்தியை எதிர்த்துத் தொடங்கிய முதற்படைத் தலைவராக (சர்வாதிகாரியாக) இருந்து மறியலைத் துவக்கி நடத்தும்படி, தோழர் சி.என்.அண்ணாதுரை எம்.ஏ. அவர்களை மத்திய திராவிடர் கழக நிர்வாகக் குழு நியமித்தது!

இதனால் மனம் மகிழ்ந்த கலைஞர், 'அண்ணாவுக்கு வாழ்த்து' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார்; இக்கட்டுரை வெளியான 10–8–48 'முரசொலி'யிலேயும் – முன்னர் குறிப்பிட்டது போன்று – அண்ணாவை, அட்டையில் முழுப்பக்க அளவில் குதிரை மீதேற்றி, திராவிடர்க் கழகக் கொடி பறக்கும் கோட்டையை விட்டுப் போருக்குப் புறப்படும் தளபதியாகச் சித்திரம் தீட்டப்பட்டிருந்தது:–

"எழுத்தின் வேந்தரே! இளந்தலைவா! 'போர் வந்தால், பட்டாளத்தார் பட்டியலில், அண்ணாத்துரையின் பெயர்தான்

முதலில் எழுதப்படும்' எனத் திருவாரூரில் முழக்கமிட்டீர்! மாதமிரண்டு மறையவில்லை! மறக்குல மகிபா! இதோ — களத்திலே உங்களைக் காண்கிறோம்!

"அண்ணா! அறிஞரே! தளபதியே! அடக்குமுறையை எதிர்த்துச் செல்கிறீர்! இன்னும் மனம்விட்டுச் சொல்ல வேண்டுமானால், 'சாவுமுனை நோக்கிச் செல்கிறீர்! ஆ! எழுதவே கை நடுங்குகிறது! உள்ளம் குலுங்குகிறது! கண்ணீர் பெருகுகிறது! வெற்றியுடன் திரும்பி வருமாறு வாழ்த்துகிறோம்! வாகை சூடி வருமாறு வாழ்த்துகிறோம்! ஆயிரம் முறை வணங்கி அனுப்புகிறோம்! அண்ணா — திரும்பி வருக!"

இக்கட்டுரை, 'முரசொலி'யின் 19வது இதழில் வெளிவந்தது!

*

அறிஞரின் புகழை அவனி அறியச் செய்தார்

திராவிடர் முன்னேற்றம் கருதி, திருவாரூரிலிருந்து மு. கருணாநிதியால் நடத்தப்பெற்றுத் தேக்கம் அடைந்து 1948ல் நிறுத்தப்பட்ட 'முரசொலி' — கலைஞர் குறிப்பிட்டதைப் போல், தேனாற்று வெள்ளமாக — வார இதழாக — நாள் இதழாக — சென்னையில் இருந்து 1954 ஏப்ரல் முதல் தமிழகத்தில் பாய ஆரம்பித்தது!

'முத்தாரம்' — 'மறவன் மடல்' — 'ரைசிங் சன்' என்று கிளைத்து நடக்கவும் தொடங்கியது; அண்ணாவுக்கு ஆண்டு தோறும் மலர் வெளியிட்டு — அவரின் புகழை அவனி அறியச் செய்தது! இயக்கத்தவர் மனம் பூரித்தனர்!

தமிழ்க்குடிப் பெருமக்களைக் கவர்ந்த ஏடு

எளிய கழகத் தொண்டர்களை மட்டுமல்ல — தமிழ்க்குடிப் பெருமக்களை மட்டுமல்ல — ஆச்சாரியார் (இராஜாஜி) போன்ற அரசியல் பெருந்தலைவர்களையும், பிற்காலத்தில் நாளிதழாக வெளிவந்த 'முரசொலி' கவர்ந்தது! அதன் தலைப்புக்களையும் — பெட்டிச் செய்திகளையும் படித்து மகிழ்ந்து வியப்படைந்த அவர், 'முரசொலி'யை, 'கொட்டை எழுத்துப் பத்திரிகை' எனக் கூறிப் புகழ்ந்தார்!

பல்லாயிரக்கணக்கான வாசகர்களை உருவாக்கிய 'முரசொலி', நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களையும் உருவாக்கியுள்ளது!

டாக்டர் கலைஞர், இவ்விதழ்களில் நாள்தோறும் எழுதிக் குவித்தார்!

'முரசொலி'யின் திருத்தொண்டினை, தமிழின உணர்வுடைய தமிழர்கள் – நாள்தோறும் சிந்தையிலேயும், சென்னியிலேயும் வைத்துப் போற்றுகின்றனர்!

அங்குலம் அங்குலமாக முன்னேறி ஏற்றம் பெற்றார்

கலைஞரின் அரசியல் துறைச் சாதனைகளை அல்ல – இலக்கியக் கர்த்தாவாக விளங்கி எழுத்துத் துறையில் செய்த சாதனைகளையும், பத்திரிகையாளராக விளங்கிப் பத்திரிகைத் துறையில் செய்த சாதனைகளையும் எண்ணிப் பார்க்கும்போது, ஐம்பதே வயதான கலைஞர் குறைந்தது பத்தாண்டுகள், வயதால் கூடியவராகவே தோற்றம் தருகிறார்.

இத்துறையில் கலைஞர், பட்டம்–பணம்–பதவிகளை வைத்துக்கொண்டு, வளர்ச்சியும் முன்னேற்றமும் பெறவில்லை! கடினமான உழைப்பாலும், இயற்கையாக இருந்த ஒருசில ஆற்றல்களாலுமே அங்குலம் அங்குலமாக முன்னேறி இத்தகு ஏற்ற நிலை பெற்றார் என்றே இயம்ப வேண்டி உள்ளது!

*

'ஆசிரியர்' பதவியைப் பறித்தது 'அமைச்சர்' பதவி

தன்னை வளர்த்து ஆளாக்கி விட்ட 'முரசொலி' இதழிடம், கலைஞர், அளவற்ற பாசம் கொண்டுள்ளார்!

கலைஞர் அமைச்சரான பிறகு, 'முரசொலி'யின் பொறுப்பை, 4–3–67 முதல், மாறனிடம் தரவேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டதையொட்டி மனங்கலங்கி இவ்விதம் எழுதினார்:–

"பள்ளியில் பயின்ற காலத்திலேயே துண்டுப் பிரசுரமாய் 'முரசொலி'யை நான் தோற்றுவித்தேன். 1947–ல், அதற்குப் பத்திரிகை வடிவம் தந்தேன்; பின்னர் இருபதாண்டுக் காலம், அதனைப் பேணி வளர்த்திட – பெரிய ஏடாய் – கழக முரசாய் ஆக்கிட – நான் பட்டிருக்கும் பாடுகள் கொஞ்சமல்ல! ஒரு வெள்ளி விழாக் காலம், என் மடியிலே 'முரசொலி' தவழ்ந்து கிடந்தது! அமைச்சர் பதவியோ – அதன் ஆசிரியர் பதவியைப் பறித்துக் கொண்டது!"

*

அண்ணா பெற்ற இன்பம்!

அறிஞர் அண்ணா வாழ்ந்த காலம் முழுவதும் – 'முரசொலி', பொங்கல் மலர் வெளியாகும் திருநாள்தோறும் – மனம் மகிழ்ந்து 'முரசொலி'க்கு வாழ்த்துக் கூறினார்!

‘திராவிட நாடு’ இதழ் நடத்தியும் ஏராளமான பொங்கல் மலர்களை வெளியிட்டும் அனுபவம் பெற்றிருந்த அறிஞர் அண்ணா அவர்கள், கலைஞரின் இதழ் நடத்தும் திறமை கண்டு – ‘இதன் திறம், இயக்கத்திற்கே’ என்பதை எண்ணி இன்பம் கொண்டார்:–

“ ‘முரசொலி’ மலர், ஆண்டுதோறும் புதிய சிறப்பும் – எழிலும் பெற்றுத் தமிழர்களை மகிழ்விக்கிறது! விடுதலை கீதம் பாடுகிறது!

“ ‘எழிலேடு வெளியிடும் திறம் எமக்கே உண்டு’ எனக்கூறி வந்தவர்க்கு, ‘இதோ – எம் ஏடு பாரீர்’ எனப் பெருமையுடன் பதில் தர, நம்மவருக்கு ஊக்கம் அளிக்கிறது!”

– *அறிஞர் அண்ணா*

‘முரசொலி’ பொங்கல் மலர்: *1958*

“நித்த நித்தம் போர்ப் பரணி பாடிடும் ‘முரசொலி’, பொங்கல் திருநாளன்று புதியதோர் எழிலையும் – புன்னகையையும் கொண்டு – தமிழரின் உள்ளத்துக்குச் சுவையும் பயனும் மிகுந்திடும் கருத்தோவியங்களையும், கண்களைக் கவர்ந்திடும் வனப்போவியங் களையும் இணைத்துத் தருகிறது!

“தமிழரின் இல்லங்களிலே இவ்விதம் பூங்காற்றால் புது இன்பம் கண்டிடும் நிலையினராக மக்கள் இருந்திடச் செய்கிறது!

“முரசு ஒலிக்கிறது! படை நடக்கிறது! பகைவர் காண்கின்றனர்!”

– ‘முரசொலி’ மலர்: *1965*

1962 ‘முரசொலி’ பொங்கல் மலரில் பேரறிஞர் அண்ணா அவர்கள் இவ்விதம் ‘முரசொலி’யையும் – அதன் ஆசிரியரையும் வாழ்த்தினார்:–

“ ‘முரசொலி’ வாழ்க – வளர்க! தம்பி கருணாநிதியின் தொண்டு

வெல்க – வளர்க!”

—*கழகக்குரல்*

13.10.1974, 20.10.1974, 27.10.1974, 03.11.1974

இவர் செய்யும் தொண்டு

– தமிழ் மறவன்

சுயமரியாதை இயக்கம் – திராவிடர் கழகம் – திராவிட முன்னேற்றக் கழகம் – ஆகிய திராவிடர் இயக்க நூல்களின் விற்பனையாளராக – புத்தகக் கடைக்காரராக விளங்கி வரும் திரு. அன்புமணி, 30 ஆண்டுக்காலமாக இந்தத் தொழிலைச் செய்து வருகிறார்!

இவர் இயக்க இலக்கியங்களை மட்டுமே விற்பனை செய்கிறார்; இவருக்கு, இயக்க இலக்கியங்களின் பெயர்களெல்லாம் தலைகீழ் மனப்பாடம்!

இயக்க இலக்கியங்களின் வெளியீட்டாளர்கள் – எழுத்தாளர்களின் பெயர்கள் – வெளியிட்ட பதிப்பகங்கள் – வெளியிட்ட ஆண்டு – இவைகளையெல்லாம் நினைவிலேயே வைத்திருக்கிறார்! சிறந்த இலக்கியங்களின் முக்கியமான பகுதிகளை அப்படியே ஒப்புவிக்கிறார்!

ஐம்பதாவது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் அன்புமணி, 4 பெண்களும் – 3 ஆண்களுமாக ஏழு குழந்தைச் செல்வங்களைப் பெற்றிருக்கிறார்!

எளிமை, அடக்கம் ஆகிய பண்புகளுடன் விளங்கும் இவர், நீண்டகாலமாக இயக்கத்திலிருப்பவர்கள்' என்று யாரேனும் அறிமுகப்படுத்திக் கொண்டால், அவர்களை அன்புடன் தழுவி மகிழ்ந்து வரவேற்று – இனிமையாகப் பேசுகிறார்!

இயக்கச் செய்திகளைப் பற்றிப் பேசும்போது, குழந்தைகள் குடும்பம் எல்லாவற்றையும் மறந்து, பல மணி நேரம் பேசத் தொடங்கிவிடுகிறார்!

இவரோடு பேசும்போதே, '50 வயது வரை இவர் இதே உணர்ச்சியுடன்தான் வாழ்ந்து வந்திருக்கிறார்' என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

கழகம் இன்றைக்கும் பொதுமக்களிடையே வளர்ந்து வெற்றிகரமாக வெள்ளி விழாக் கொண்டாடுகிறது என்றால் அதற்கு அன்புமணி போன்ற அடிமட்டத் தொண்டர்களின் பயன் கருதாத – இடைவிடாத உழைப்பே காரணமாகும்!

அன்புமணி புத்தக விற்பனையாளராக மட்டுமின்றி, இயக்கக் கருத்துக்களை எடுத்து விளக்கும் பேச்சாளராகவும்--சிறந்த எழுத்தாளராகவும் இருக்கிறார்!

'யார் அழிவுக்காரி' – 'மனைவி மாற்றம்' – 'வாழ்விலே ஒளி' முதலிய நூல்கள் இவர் எழுதியனவாகும்.

அன்புமணி அவர்களை, கழகக் கூட்டங்களிலேயும் -- கழக மாநாடுகளிலேயும் நம்முடைய இயக்கத் தோழர்கள் சந்தித்திருக்கலாம்.

"சுயமரியாதை இயக்கக் காலந்தொட்டே நான் கழகத்தில் இருந்து வருகிறேன்" என்று பெருமையுடன் கூறும் இவரிடம், 'எப்படி இந்த இயக்கத்துக்கு வந்து சேர்ந்தீர்கள்?' என்று கேட்டபோது, ஆர்வத்துடன் சொன்னார்:–

"1938ஆம் ஆண்டு – ஆச்சாரியார், இந்தியைத் தமிழகத்தில் திணிக்கத் தொடங்கினாரல்லவா? அப்போது எனக்கு வயது 14; வண்ணாரப்பேட்டை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில், 6ம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தேன்; என் வீட்டு மாடியில், சுயமரியாதைக்காரர்கள் சிலர் குடியிருந்தனர்; அவர்களுடைய தமிழ்ப் பற்று நிறைந்த பேச்சுகளும்–இந்தியை எதிர்க்கும் அவர்தம் விளக்கங்களும், என்னுடைய இளம் நெஞ்சிலே சுயமரியாதை எண்ணத்தையும், இந்தி எதிர்ப்பு உணர்ச்சியினையும் ஊட்டி விட்டன!

நான் தினசரி பள்ளிக்குச் செல்லும்போது, என் சட்டைப் பையிலும், கால் சட்டைப் பையிலும், கரித் துண்டுகளும் சாக்குக் கட்டிகளும் வைத்திருப்பேன்; பள்ளிக்குப் போய் வரும் வழியில் உள்ள ...... 'இந்தி ஒழிக–தமிழ் வாழ்க' போன்ற முழக்கங்களை

... சில சொற்கள் விடுபட்டுள்ளன.

எழுதுவேன்; இதற்காக, என் வட்டத்திலுள்ள பலரிடம் அடி-உதைபட்டிருக்கிறேன்-இப்படி ஆரம்பமானதுதான் என் இயக்கத் தொடர்பு!

"அண்ணா, பெரியார், அழகிரிசாமி, இராமாமிருதத்தம்மையார் ஆகியோர் பேச்சுக்களைக் கேட்பதில் ஆர்வம் கொண்டேன்; இவர்களில் அண்ணாவின் பேச்சுதான் என்னை அதிகமாக ஈர்த்தது; கட்சியில் இன்றைய வரையிலும் இருக்கவும் செய்தது...."

பழைய நினைவுகளிலேயே ஆழ்ந்துவிட்ட அன்புமணியை, 'எப்படிப் புத்தக வியாபாரம் செய்யத் தொடங்கினீர்கள்" என்று கேள்வி கேட்டுத் திசை திருப்ப வேண்டியிருந்தது!

"அப்போது எனக்கு வருமானம் கிடையாது; எங்கே கூட்டம் நடந்தாலும் போவேன்; அரையணா கொடுத்து டீ குடிக்கக்கூடக் காசின்றி- சென்னை நகரில் சுற்றுப்புறத்திலுள்ள 12 மைல் வரை நடந்தே நானும், நண்பர்களும் செல்வோம்; ரெட்ஹில்சு'க்குக் கூட நடந்து போய் வந்திருக்கிறேன்; வீடு திரும்பும்போது 2 மணி .... பயந்துகொண்டு, பட்டினியோடு திண்ணையில் படுத்து விடுவோம்!

"இந்த நிலையில், செலவுக்குக் காசு சம்பாதிக்க ஒரு வழி தென்பட்டது; கூட்டங்களில் சில தோழர்கள், இயக்கப் புத்தகங்களை விற்றுப் பொருளீட்டுவார்கள்; 'அதுபோல் நாமும் செய்தால், அந்தப் பணத்தைக் கொண்டு எல்லா நிகழ்ச்சிகளுக்கும் செல்லலாமே' என்ற உணர்வு தோன்றிற்று; அந்த எண்ணம் செயல்வடிவம் பெற்றது; குறைந்த முதலில் விற்பனையைத் தொடங்கினேன்; போகவர வண்டிச் செலவுகள்- சிற்றுண்டி மற்றும் வழிச் செலவுகள் இவற்றிற்குப் பணம் கிடைத்ததோடன்றி, இயக்க மாத வார – நாள் இதழ்களை வாங்கிப் படிக்கவும், படித்ததை மற்றவருக்கு எடுத்துச் சொல்லவும் வாய்ப்பும் – வசதியும் ஏற்பட்டன; விற்பனை செய்யும் இயக்கப் புத்தகங்களை எல்லாம் காசில்லாமல் படிக்கவும் முடிந்தது.

"புத்தக வியாபாரம் தொடங்கும்போது சூளையில் இருந்தேன்; புத்தக வியாபாரம் தொடங்கிய பிறகு, இயக்கத்தைப் பற்றித் தெரியாத தோழர்களை இயக்கக் கூட்டத்திற்கு அழைத்துச் செல்வேன்; இயக்கக் கருத்துக்களைப் பற்றியெல்லாம் கூறுவேன்; புத்தகங்களை வாங்கச் செய்வேன்; இதன் காரணமாகக் காங்கிரசிலிருந்த ரவுடிகள் அந்த வட்டத்தில் நான் ஒருவன்தான் இயக்கப் பிரச்சாரம் செய்வதால் – இரவு வேளைகளில் என்னை அடிக்க வேண்டும்- துன்புறுத்த வேண்டும் என்று முயற்சி

... சில சொற்கள் விடுபட்டுள்ளன.

செய்தார்கள்; அவர்களையெல்லாம் சந்தித்து விவாதித்து – பேசி இயக்கத்துக்கு இழுத்தேன்; சிலர் மனம் மாறி, இயக்கக் கருத்துக்களை ஏற்று – சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்டார்கள்; சிலர், மேடையில் பேசும் பேச்சாளர்களாகவும் ஆனார்கள்; அவர்கள் இன்றைக்கும் சூளையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!'' மீண்டும் அவரது பேச்சு இயக்கப் பணிகளைப் பற்றியே செல்கிறது!

“அந்தக் காலத்தில் புத்தகம் வாங்கும் இயக்கத்தவர்களின் தன்மை எப்படி இருந்தது!'' என்று கேட்டபோது, அன்புமணி மீண்டும் புத்தகத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார்: – “தொடக்கக் காலத்தில் இயக்க எழுத்தாளர்களுடைய அத்தனைப் புத்தகங்களையும் வாங்கி விற்பனை செய்வோர், ‘இயக்கத்திலுள்ள விளம்பரம் பெற்ற எழுத்தாளர்கள் – முன்னணித் தலைவர்கள் எழுதிய புத்தகங்களைத்தான் வாங்குவது’ என்ற எண்ணம், அக்கால இயக்கத்தவருக்குக் கிடையாது; ‘கூட்டத்தில் புத்தகக் கடை இருக்கிறது’ என்றால், புத்தகம் வாங்குபவர்கள், அக்கடையில் உள்ள புத்தகம் எதுவானாலும் – நாடகம், நாவல், பேச்சு, கட்டுரை முதலியன – யார் எழுதியதாக இருந்தாலும் அது அன்றைய இயக்கத்தின் கருத்துக்கள் அடங்கிய இலட்சியப் புத்தகமாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையோடு வாங்குவார்கள்; ‘அப்படி இல்லாத இயக்கத்திற்குப் பயன்படாத இயக்கக் கருத்துக்கள் அற்ற இயக்கத் தோழர்களாக அல்லாத ஆசிரியர்கள் எழுதிய புத்தகங்களை, இயக்கக் கூட்டத்தில் இயக்கத் தோழன் விற்கமாட்டான்’ என்ற நம்பிக்கை, வாங்கிடும் தோழர்கள் அனைவருக்கும் இருந்தது; அதனால்தான் சில முக்கியமான எழுத்தாளர்களின் நூல்கள் புனைபெயரில் வந்தபோதும், அப்புத்தகங்கள் ஏராளமாக விற்பனையாயின!

“இயக்கக் கூட்டத்தில், ‘புதிதாக வந்த புத்தகங்கள் இவை’ என்று அடுக்கிக் கொடுத்தால், மறுக்காமல் வாங்கிக் கொள்ளும் மனோபாவம் அவர்களுக்கிருந்தது; அதனால் நாங்களும், முக்கியமான பெரிய கூட்டங்களென்றால், புதிய புத்தகங்களைப் ‘பைண்டு’ செய்து – ஈரமான நிலையிலேயும்கூட – நூற்றுக்கணக்காக மாலை 5 மணிக்கே கொண்டு செல்வோம்; அவை அப்படியே விற்றுப்போகும்; அந்த அளவுக்குப் புத்தகம் வாங்கும் ஆர்வம் இயக்கத் தோழர்களுக்கு நிறைய இருந்தது.

“சிறிய கூட்டமாக இருந்தால்கூட, நாலு–ஐந்து புத்தகக் கடைகள் இருக்கும்; அண்ணா, பெரியார், கலைஞர், நாவலர், பேராசிரியர் போன்றவர்கள் பேசக்கூடிய முக்கியம் வாய்ந்த கூட்டமாக இருந்தால், பத்துப் பதினைந்து கடைகள் கூட இருக்கும்; அவ்வளவு பேருக்கும் நல்ல விற்பனையும் இருக்கும்.''

“பத்துப் பதினைந்து கடைகள் ஒரு கூட்டத்திற்கு ஏற்பட்டால், உங்கள் விற்பனை பாதிக்காதா?” என்று வினவியபோது, ‘இல்லை’ என்று மறுத்தார் அவர்!

“அந்தக் காலத்தில் – என்னைப் பொறுத்தவரையில் – மற்றவர்கள் எல்லாரையும்விட ஏராளமான புத்தகங்களை நான்தான் விற்றிருக்கிறேன்; காரணம், புத்தகங்களிலுள்ள முக்கியமான கட்டங்களை–பகுதிகளை –மனப்பாடம் செய்து, அந்தப் பக்கங்களை விரித்துப் புத்தகத்தை வாங்குபவர்கள் கையிலேயே கொடுத்துவிட்டு, அப்பக்கங்களிலுள்ள பகுதிகளை ஒப்புவிப்பது போல் உணர்ச்சியோடு சொல்லுவேன்; நூலின் கருத்தால் ஈர்க்கப்பட்ட தோழர்கள் அவற்றை ஏராளமாக வாங்குவார்கள்; அப்படி விற்ற புத்தகங்களுள் அண்ணாவின், ‘ரோமாபுரி இராணிகள்’, ‘ஆரிய மாயை’, ‘தேவ லீலைகள்’ ஆகியனவும் – கலைஞரின் ‘தூக்குமேடை’, ‘பலிபீடம் நோக்கி’, ‘கயிற்றில் தொங்கிய கணபதி’, ‘அறப்போர்’, ‘பெரிய இடத்துப் பெண்’ ஆகியனவும் ஆசைத்தம்பியின் ‘அன்பழகன் ஆட்சி’, ‘காந்தியார் சாந்தியடைய’ ஆகியனவும் இராதாமணாளனின் ‘பொற்சிலை’, ‘மனப்புயல்’ ஆகியனவும் தில்லைவில்லாளனின் ‘கண்ணீர்க்கோட்டை’, ‘கோயிற்பெருச்சாளிகள்’ ஆகியனவும், நாவலரின் ‘மொழிப் போராட்டம்’, ‘களஞ்சியம்’ ஆகியனவும் டி.கே.சீனிவாசனின் ‘துன்பக்கேணி’, ‘எல்லைக்கப்பால்’, ‘கடவுளாலாகாதது’, ‘ஆடும், மாடும்’ ஆகியனவும் பெரியாரின் ‘தத்துவ விளக்கம்’, ‘பொன்மொழிகள்’ ஆகியனவும் அன்பழகனின் ‘வகுப்புரிமைப் போராட்டம்’ துறையூர் து.வி.நாராயணனின் ‘அழியட்டுமே திராவிடம்’, வியாழன் (புலவர் செல்வராஜ்) எழுதிய ‘கடவுளா காமுகனா’ ஆகியனவும் குறிப்பிடத் தக்கனவாகும்.”

“நீங்கள் உங்கள் வாழ்நாளிலேயே அதிக விற்பனை செய்த பொதுக்கூட்டம் அல்லது மாநாடு எது?” என்று கேட்டபோது, அன்புமணி உற்சாகத்தோடு, அந்தக் காலத்தில் ஒரு கூட்டத்தில் ஆயிரம் ரூபாய்க்கு மேல் புத்தகங்கள் விற்பனை செய்ததை விவரித்தார்.

“பெரியார்–பேரறிஞர் அண்ணா ஆகியவர்களுடைய கூட்டத்தில் ஏராளமாக விற்பது வழக்கம்; ‘அதிகம்’ என்று சொல்லும்போது, ‘வாழ்நாளில் மறக்க முடியாத மாபெரும் கூட்டமான மே தினக் கூட்டத்தைத்தான் கூற வேண்டும்; தீவுத் திடலில் (ஐலண்டு கிரவுண்டிலுள்ள) ....* சுற்றுலாப் பொருட்காட்சி நடைபெற்ற மைதானத்தில் வி.க. தலைமையில் ** பிரம்மாண்டமான கூட்டம்; தீவுத் திடல் நிரம்பி–

---

* சில சொற்கள் விடுபட்டுள்ளன. ** சில வரிகள் விடுபட்டுள்ளன

நடைபாதையெல்லாம் மக்கள் நின்றனர்; மக்கள் தொகை குறைந்த அந்த நாளையக் கூட்டத்தைப்போல் --மக்கள் தொகை நிறைந்த சென்னையில் – இந்த நாளில்கூட காணமுடியவில்லை; அந்தக் கூட்டத்தைக் கண்டு மிரண்ட காங்கிரசாட்சி, அதன் விளைவாக அந்த இடத்திற்கு வேலி அடைத்து, வேறு கூட்டங்களுக்கு அந்த இடத்தைத் தருவதில்லை' என்று முடிவு செய்தது; அதன்பிறகு வேறு கூட்டம் அந்த இடத்தில் நடந்ததில்லை என்பதே என் நினைவு!''

"1949ல் தி.மு.கழகம் தோன்றியபோது, நீங்கள் எந்தப் பக்கத்தில் இருந்தீர்கள்?'' என்று வினவியதும், கட்சியில் தன் பணியின் பங்கு என்ன என்பது பற்றி ஆர்வத்தோடு கூறினார்:–

"பெரியாரின் திருமணச் செய்தி வந்தபோது, பெரியாரை எதிர்த்தேன்; சூளையில் – பழைய நாற்பதாவது வட்டத்தில் – முன்னேற்றக் கழகத்தைத் துவக்கியவர்களுள் நானும் ஒருவன்; 'முன்னேற்றக் கழகக் கிளை' என்று இடம் ஏதும் அப்போது இல்லை; என்னுடைய 'செல்வநிலையம்' பதிப்பகம்தான், கழகக் குழுக்கள் கூடவும் – இயக்க நண்பர்கள் கூடிப்பேசவும் ஏற்ற இடமாக அமைந்தது!

"நான் சொந்தமாகப் பதிப்பகம் தொடங்கி தைரியமாகப் புத்தகம் போடத் தொடங்கியதும் அந்தக் காலத்திலேதான்! "'செல்வநிலையத்தின்' முதல் புத்தகமாக நானே எழுதிய 'யார் அழிவுக்காரி?' என்னும் குறுநாவல் வெளிவந்தது; அதைத் தொடர்ந்து, 'மனைவிமாற்றம்', 'வாழ்விலே ஒளி' ஆகிய புத்தகங்களை எழுதி வெளியிட்டேன்; வேறு சில தொகுப்பு நூல்களையும் வெளியிட்டேன்; இதற்குப் பின்னர் ஏராளமான புத்தகங்கள் செல்வ நிலைய வெளியீடாக வெளியிட்டேன்.''*
"தலைவர்களுடைய படைப்புகளை – அவர்கள் அனுமதி பெறாம லேயே வெளியிட்டுப் பணம் சம்பாதிப்பதாகச் சிலர் குற்றம் சாட்டுகின்றனரே; அப்படி நீங்கள் வெளியிட்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டபோது அன்புமணி உடனே, "நான் அப்படிச் செய்ததில்லை'' என்று மறுத்துவிட்டார்.

"அப்படி இதுவரை நான் எந்தப் புத்தகத்தையும் வெளியிட்ட தில்லை; பலபேர் அந்த மாதிரி செய்ததுண்டு; அண்ணாவைப் போன்றவர்கள், 'பிழைத்துப் போகட்டும்' என்று விட்டுக் கொடுத்தும் வந்தனர்; இது அதிகமாகப் போனதற்குப் பிறகு, இவ்விதம் செய்த இரண்டு முக்கியமானவர்கள் மீது அண்ணாவே நடவடிக்கை எடுத்து, கேட்காமல் போட்டதற்காக எச்சரிக்கை செய்தார்; அதன்பின்னரே அந்தச் செயல் குறைந்தது!

* சில சொற்கள் விடுபட்டுள்ளன.

"என்னைப் பொறுத்தவரையில் யாருடைய அனுமதி இல்லாமலும் நான் வெளியிட்டதில்லை; கலைஞருடைய 'போர்முழக்கம்' என்ற புத்தகத்தை வெளியிட்டபோதும் – முறையான அனுமதி பெற்றே வெளியிட்டேன்; அண்ணாவினுடைய சில வானொலிச் சொற்பொழிவுகளை வெளியிட்ட போதும்கூட, வானொலி நிலையத்தின் அனுமதி பெற்றே வெளியிட்டேன்....."

"திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய 1949க்குப் பிறகு உங்கள் வியாபாரம் எப்படி?" – இந்த வினா, அன்புமணிக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது; பல விவரங்களை சொல்லத் தொடங்கினார்:–

"1949லிருந்து 1957 வரை புத்தக வியாபாரம் மிக நல்ல முறையில் நடந்து கொண்டிருந்தது; இயக்கத் தோழர்கள், ஒரு கூட்டத்தில் கடனாகப் பெற்று – அடுத்த கூட்டத்தில் தேடிப் பணம் தரக்கூடிய அளவுக்கு நம்பிக்கையோடு நடைபெற்றது; அப்படிப்பட்டவர்களுள், குத்துச் சண்டை வீரரான 'கித்தேரி முத்து'வும் ஒருவராவார்.

1949ல் தி.மு.க. மாவட்ட மாநாடு, திருச்சியில் – ஒரே நாள் மாநாடாக – நடந்தது; அண்ணா, 'நமக்குக் கூட்டம் கூடுமா' என்ற அச்சத்தோடு ஒரு நாள் மட்டும் நடத்திய மாநாடு அது; எதிர்பார்த்ததைவிட ஏராளமான கூட்டம் நிரம்பி வழிந்தது; எனக்கும் எதிர்பார்த்ததைவிடப் புத்தக வியாபாரம் நன்றாக நடைபெற்றது. அந்த முதல் மாநாட்டிலிருந்து கடைசியாக விழுப்புரத்தில் நடைபெற்ற 5வது மாநாடுவரை நான் விற்பனைக்காகப் போகாத மாநாடுகளே அநேகமாக இல்லை. 1949–க்கு முன்னாலும்சரி 1949க்குப் பின்னாலும் சரி – அண்ணா, கலைஞர் புத்தகங்கள்தான் ஏராளமாக விற்பனையாகி வருகின்றன!

"மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் மட்டுமல்ல; கல்லூரிகளின் கூட்டங்கள் – அலுவலகங்களில் நடைபெறும் இலக்கிய விழாக்கள் – இரங்கற் கூட்டங்கள் – திருமணக் கூட்டங்கள் போன்றவற்றில் – எங்கு நம்முடைய இயக்கத் தோழர்கள் கலந்துகொண்டாலும் – என் புத்தகக் கடை அங்கே இருக்கும்!

அண்ணா ஒரு மாநாட்டில் இவருடைய புத்தகக் கடைக்கு வருகை புரிந்து, இவரைப் பாராட்டியிருக்கிறார். *"ஒருமுறை அண்ணா அவர்கள், (சிவகெங்கை மாநாடு நடைபெற்றபோது) நாடகமெல்லாம் முடிந்த பிறகு நள்ளிரவில் – தம் தோழர்களுடன்

* சில வரிகள் விடுபட்டுள்ளன.

மாநாட்டுக் கடைகளையெல்லாம் பார்வையிட்டுக்கொண்டு வந்தார்கள்; என்னுடைய கடைக்கு வரும்போது, அண்ணாவுடன் வந்த எனக்கு வேண்டிய தோழர் ஒருவர், 'அண்ணா–இவரை உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டார்; உடனே அண்ணா, 'நான் பேசுகிற எந்தக் கூட்டமாக இருந்தாலும், இவருடைய புத்தகக் கடையைத் தாண்டித்தானே மேடைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது; அப்படியே விரித்து வைத்திருக்கிற புத்தகங்கள்மீது கண்ணோட்டமிட்டபடிதான் செல்வேன்; இவரை நன்றாக எனக்குத் தெரியும்' என்றார்!

"ஆரம்பத்தில் சொன்னதைப் போல், எல்லா இயக்க நிகழச்சி களிலும் கலந்துகொண்டதால்தான், அண்ணாவின் பார்வையில் படும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது'' என்று பெருமித மடைந்தார் – அன்புமணி!

"நாங்கள் பெரும்பாலும் மாநாட்டுக்குச் செல்வதற்கு இலாப நோக்கம் காரணமன்று; தமிழகத்தின் எந்த மூலையில் மாநாடு நடந்தாலும் செல்லுகிறோமென்றால், வியாபாரத்துக்காக நாங்கள் இருவராவது சென்றாக வேண்டும்; வெளியூர்களில் நான்கைந்து நாட்களாவது தங்க வேண்டும்; போக–வர, தங்க ஆகும் செலவுகளுக்குக்கூட வருமானமில்லாத மாநாடுகளும் உண்டு; ஆயினும், மாநாடுகளுக்குச் செல்ல வேண்டும்; இயக்கப் புத்தகங் களைப் பரப்ப வேண்டும்' என்ற 'வெறி' உணர்ச்சி காரணமாகவே, எவ்வளவு தொலைவு வேண்டுமானாலும் செல்லுவோம்!''

"இயக்கப் புத்தகங்களை மட்டும் விற்பதாகச் சொல்லுகிறீர்கள்; இயக்க இதழ்களை–பத்திரிகைகளை விற்பதில்லையா?''

"மாநாடுகளில் 'ஸ்டால்' போடும்போது மட்டும் இயக்க ஏடுகளை வாங்கி விற்பதுண்டு.''

"1957க்குப் பிறகு புத்தக வியாபாரம் எப்படி?''

"சுகமில்லை.''

"காரணம்?''

"புத்தகம் எழுதுவதை இயக்கத்தவர்கள் குறைத்துக் கொண்டார்கள்; முன்னிருந்த பதிப்பகத்தார்களும் அந்தத் தொழிலை விட்டுவிட்டார்கள்; இதனால், கழகத்தின் புதிய உறுப்பினர்களுக்குப் புத்தகம் படிக்கும் ஆர்வம் இல்லாமற் போய்விட்டது; ஆளும் கட்சியான பிறகு, மறுபடியும் ஓரளவுக்கு இயக்கப் புத்தகங்கள் விற்பனையாகிறது; எனினும் 1957க்கு முன் விற்பனையானதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 'குறைவு' என்றுதான் சொல்ல வேண்டும்!

“அந்தக் காலத்தில், பாரி நிலையத்தைத் தவிர வேறு பெரிய பதிப்பகத்தார் யாரும் இயக்கப் புத்தகங்களை வெளியிட்டதில்லை; ‘திராவிடப் பண்ணை’ யாரும் – மற்ற இயக்கத் தோழர்களும்தான் பதிப்பகங்களைத் தொடங்கிச் சிறுசிறு அளவில் முதலீடு செய்து– –சொற்ப விலையில் ஏராளமான புத்தகங்களை வெளியிட்டனர்.

“இப்போது பெரிய பெரிய பதிப்பாளர்கள், பெரும் செலவு செய்து நமது புத்தகங்களை வெளியிடுகிறார்கள்; அவர்கள் எங்களைப் போல் பொதுமக்கள் மத்தியில் விற்கும் எண்ணம் கொண்டிருக்கிறார்கள்; இதனால் நமது புத்தகங்கள், கழகத் தோழர்களிடையே வராமலேயே போய்விடுகின்றன!

“இயக்கத் தலைவர்கள் எழுதிய பழைய புத்தகங்களை இன்றைக்கும் வாங்கும் ஆர்வம் இயக்கத்தவர்களிடையேயும், பொதுமக்களிடையேயும் இருக்கிறது; புதிய நூல்களைவிடப் பழைய நூல்களின் தலைப்புகளைச் சொல்லிக் கேட்கக்கூடிய வாசகர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்!

“எனக்குச் சொந்தமாகப் புத்தகங்களை வெளியிடுவதில் ஆர்வம் இருப்பதைவிட, யார்யார் இயக்கப் புத்தகங்களை வெளியிட்டார்களோ – அவர்களையெல்லாம் தேடிச்சென்று – வாங்கி விற்பதிலேயே ஆர்வம் அதிகம்; இப்பொழுதுகூட கூட்டங்களில் – மாநாடுகளில் கணிசமான அளவிற்குப் பரப்பி விற்க, ‘பல தலைப்புகளில் புத்தகங்கள் கிடைக்கவில்லையே’ என்ற கவலைதான் எனக்கு! பழைய புத்தகங்களையெல்லாம் தோழர்கள் பதிப்பித்து வெளிக்கொணர்ந்தால், இயக்கத் தோழர்களுக்குப் படிப்பதற்கு ஏராளமான புத்தகங்கள் கிடைக்கும்!

“இயக்க வரலாறுகள் – இயக்கப் பிரச்சினைகள் – இயக்க இலட்சிய விளக்கம் – அதனை அடக்கிய கதைகள் ஏராளமாக வெளிவந்தால், அதனைப் படித்து இயக்கத் தோழர்கள் தெளிவு பெற்று – கொள்கை உரம் பெற்று – வைரம் பாய்ந்த உள்ளத்தினராகத் திகழ்வர் என்பது உறுதி!

“இயக்கப் புத்தகங்களைப் போலவே, கலைஞரின் ‘முத்தாரம்’ –புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த ‘பொன்னி’ போன்ற இலக்கிய இதழ்களும் வெளிவர வேண்டும்”

“கழகக் குரல்” வருகிறதே – படிக்கிறீர்களா?”

“நீண்டகாலமாக இயக்க ஏடுகள் அதிகமாக வெளிவராத சூழ்நிலையில் – ‘நல்ல ஏடுகள் இல்லை’ என்ற நிலைமையை மாற்றி – கழகத் தலைமை நிலைய ஏடாக கழகத் தலைவர் முதற்கொண்டு முக்கியமானவர்கள் கருத்துரைகளை ஏந்தி ‘கழகக் குரல்’ வெளிவருவது குறித்து, மற்றவர்களைவிட நான் பெரிதும்

மகிழ்ச்சியடைகிறேன்; கழக வளர்ச்சிக்கு நிச்சயமாகப் புதிய ஊன்றுகோலாக இது இருக்கும்!''

''இப்போது கழகக் கூட்டங்களில், புத்தகக் கடைகளை உங்களைப் போன்று எத்தனை பேர் வைக்கிறார்கள்?''

''அநேகமாக என்னைத் தவிர மாநாடுகளிலும், பொதுக் கூட்டங்களிலும், வேறு யாரும் புத்தகக் கடை போடுவது கிடையாது; பலரும், இதைவிட இலாபமான தொழிலை நாடிச் சென்றுவிட்டார்கள்; எனக்குள் – எனக்கே ஒரு பெரிய மகிழ்ச்சி – 30 ஆண்டுகளாக இத் தொழிலை விடாமல் செய்து வருவதுதான்; இது எனக்குப் பெருமையாக இருக்கிறது; இதை மற்றவர்கள் நேரில் சொல்லி என்னைப் பாராட்டும்போது, அளவு கடந்த மகிழ்ச்சி உண்டாகிறது. ஏ.பி. ஜனார்த்தனம் – முரசொலி மாறன்– தென்னரசு, பி.எஸ். இளங்கோ – டி.கே.சீனிவாசன் – மறைந்த ஜலகண்டபுரம் ப. கண்ணன் போன்ற முன்னணியினர், இதற்காக என்னை அடிக்கடி பாராட்டுவதுண்டு!''

''புத்தகக்கடை மூலம் கிடைக்கும் வருமானம், குடும்பம் நடத்தப் போதுமானதாக இருக்கிறதா?''

''புத்தகத்தை வைத்துக்கொண்டே வாழ்க்கை நடத்தியது 1957 வரையில்தான்; அதற்குப் பிறகு, புத்தகத்தை நம்பியே வாழ்க்கை நடத்த முடியவில்லை; இடையில் நானும் ஏதேதோ வியாபாரங்கள் செய்து பார்த்தேன்; ஒன்றும் ஒத்துவரவில்லை; இன்றைய நிலையில், புத்தகங்களை மட்டுமே நம்பி வாழ முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.''

''இதுவரையில், புத்தக வாழ்க்கையைப் பற்றி மட்டுமே கேட்டு வந்தேன்; உங்கள் இயக்கத் தொண்டு எப்படி? அதைப் பற்றிச் சிறிது சொல்லுங்கள்.''

''1949லிருந்தே இன்றுவரை புத்தக விற்பனையாளராக மட்டுமன்று – கழகத் தொண்டனாகவும் இருந்து, அத்தனைப் போராட்டக் காலத்திலேயும் – அத்தனைத் தேர்தல் காலத்திலேயும் தீவிரமாகப் பணியாற்றி இருக்கிறேன்; தேர்தல் காலங்களில், இரவும் பகலும் கடுமையாக உழைப்பேன்; திவாகருக்குக் கறுப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சியின்போது, பருந்துகளின் கால்களில் கறுப்புத் துணியைக் கட்டிப் பறக்கவிட்ட பெருமைக்குரிய சம்பவங்கள் என் வாழ்க்கையில் உண்டு; 'Go back diwakar. we want communal G.O.' என்று எழுதப்பெற்ற நீண்ட துணியைப் பருந்துகளின் கால்களில் கட்டி நான் பறக்கவிட்ட நிகழ்ச்சி, அனைவராலும் பாராட்டப்பெற்றது; அரங்கண்ணல் அவர்கள், 'திராவிடநாடு' இதழில் இதைப்பற்றிச் சிறப்பாக எழுதியிருந்தார்கள்.''

“ஆந்திர மாநிலத்தில் – பொதட்டூர்பேட்டையில் நடைபெற்ற ஒரே ஒரு ஆந்திர மாநாட்டில், நானும் –என்னுடன் வந்த ஒரு தோழரும் சேர்ந்து, மாநாட்டுப் பந்தலையொட்டி இருந்த – ஏராளமான பாம்புகள் உலவும் பெரிய மலையில் குறுக்கு வழியில் ஏறி – உயரே சென்று உச்சியிலிருந்த மண்டபத்தில் ஏறி அதன்மீது இரு வண்ணக்கொடியை ஏற்றிப் பறக்கவிட்டோம்! அதைப்பற்றியும், ‘திராவிடநாடு’ இதழில் அரங்கண்ணல் சிறப்பாகப் பாராட்டி எழுதி இருந்தார்!”

“நீங்கள் கழகம் நடத்திய போராட்டங்களில் கலந்துகொண்டிருக்கிறீர்களா? சிறை சென்றதுண்டா?” என்று கேட்டபோது, ஒரு விளக்கத்துடன் விடையளிக்கிறார், அன்புமணி:–

“எல்லாப் போராட்டத்திலும் கலந்து கொண்டிருக்கிறேன்; ஆனால், சிறை சென்றதில்லை; ஆச்சாரியாருக்குக் கறுப்புக் கொடி காட்டுவதாக முடிவு செய்திருந்த நாளன்று என்னையும்––என் தோழர்கள் இருவரையும் அண்ணா அழைத்து, ‘மாலையில் கறுப்புக்கொடி காட்டும் நிகழ்ச்சியில் நீங்கள் மூவரும் எந்தக் காரணத்தைக் கொண்டும் காவல் துறையினரிடம் சிக்காமல் இருந்து–அங்கு ஏதேனும் அசம்பாவிதம் நடைபெற்றால் உடனுக்குடன் தங்கசாலையிலுள்ள 202 இல்லத்துக்கு (அப்போதைய தலைமைக் கழகம்) தகவல் தெரிவிக்க வேண்டும்’ என்று கட்டளையிட்டார்; என் உடன் இருந்த தோழர்களில் ஒருவர், ‘இல்லை, இல்லை; நாங்கள் கறுப்புக் கொடி காட்ட வேண்டும் என்ற ஆர்வத்தோடு இருக்கிறோம்’ என்றார்; அதற்கு அண்ணா அவர்கள், ‘எல்லோரும் சிறை செல்ல வேண்டும்; எல்லோரும் தடியடி பட வேண்டும்; அதில்தான் சாதனை இருக்கிறது’ என்று கருதினால், அந்த முறை தவறு; ஒரு சிலராவது இப்படிக் காவல் துறையினரிடம் அகப்படாமல், காரியத்தை மட்டுமே சாதித்துக் கொண்டு இருக்க வேண்டும்’ என்று கண்டிப்பாகச் சொன்னார்!

அறிஞர் அண்ணாவின் இந்த அறிவுரையை ஏற்று – பல போராட்டங்களில் முன்கூட்டியே காவல் துறையினர் கழகத்தவர்களைக் கைது செய்தபோதெல்லாம் சிக்காமல் தலைமறைவாகி – போராட்ட நேரத்தில் மட்டும் அந்த இடத்தில் வந்து கலந்து கொள்வேன்; எந்தச் சந்தர்ப்பங்களிலும் நான் கைது செய்யப்படும் வாய்ப்பைப் பெற்றதில்லை – இப்படி ஏராளமான நிகழ்ச்சிகளை என்னால் சொல்ல முடியும்!”

அன்புமணி, இயக்க எழுத்தாளர்களிடமிருந்து இயக்க கருத்துக்களைப் பரப்பும் ஏராளமான புத்தகங்களை எதிர்பார்க்கிறார்!

– கழகக் குரல்
ஆண்டுமலர், *1975*

ஏடுகள் வளர்த்த இயக்கம்

– மா. செங்குட்டுவன்

இவ்வளவு குறுகிய காலத்தில் கழகம் இவ்வளவு பெரிய சக்தியாக வளர்ந்தது எப்படி? – எல்லாம் வல்ல காங்கிரசுக் கட்சியை முறியடித்துக் கழகம் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தது எப்படி?

1967ல் நாம் வெற்றிபெற்றபோது, இந்தக் கேள்விகளைத்தான் உலகம் வியப்புடன் கேட்டது!

இதற்கு, நம்முடைய நாவலர் அவர்கள், மிக அழகாகப் பதிலளித்தார்கள்:–

"வாய்மையே வெல்லும்; வாய்மையே வென்றது"

இதுதான், நாவலர் அளித்த இரத்தினச் சுருக்கமான பதில்!

ஆம்; 1949 செப்டம்பர் 17ம் நாள், நம் கழகம் தோன்றியபோது, நம்மிடத்திலே எந்த வசதியும் கிடையாது; கையிலே காசில்லை – ஆனால் மனதிலே மாசில்லை!

வாய்மைதான் நமது மூலதனமாக இருந்தது. மேடைகளிலே இலட்சிய முழக்கமிடுவதற்கு வாயும் – ஏடுகளிலே இலட்சிய விளக்கம் செய்வதற்கு மையும் நமக்குப் பயன்பட்டன; இதைத்தான் நாவலர் அவர்கள், வாய்மை (வாய்+மை) என்று விளக்கினார்கள்!

திராவிடர் கழகமானாலும் சரி – திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி – அது நம்பி இருந்ததெல்லாம் மேடையையும் –ஏடுகளையும்தான்!

திராவிட இயக்கத் துவக்கக் காலத்தில், மேடைபோடுவதோ, ஏடு நடத்துவதோகூட அவ்வளவு எளிதான காரியமன்று!

திராவிட இயக்க – சுயமரியாதைப் பிரச்சாரத்துக்கென, யாரும் ஊருக்குள் நுழைய முடியாத இடங்கள்கூட இருந்தன; எதிர்ப்பு களையெல்லாம் சமாளித்துக்கொண்டு மேடை அமைத்துக் கூட்டம் நடத்தினாலும், மேடை நோக்கிக் கற்கள் பறக்கும்; கூட்டத்தை நடத்தவொட்டாமல் தடுப்பார்கள்! 'சு.ம. கூட்டத்துக்கு யாரும் போகக்கூடாது' என்று 'ஊர்க்கட்டுப்பாடு' வேறு விதிக்கப்படும்!

இப்படி, கல்லடியையும் – சொல்லடியையும் தாங்கித் தாங்கித்தான், நமது இயக்கம் இந்த அளவுக்கு உயர்ந்தது!

'மேடைப் பேச்சு' என்றால், அது, 'திராவிட இயக்கத்துக்கே உரிய சொத்து' என்ற நிலையும் பின்னாலே உருவாயிற்று!

யாராவது நல்ல தமிழில் பேசினால் – அடுக்குச் சொல்லில் பேசினால் – அவர் 'திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவராகத்தான் இருக்க முடியும்' என்ற நிலையும் ஏற்பட்டது!

அதேபோலத்தான், நல்ல தமிழ் எழுத்து நடையையும், நமக்கே உரிமையாக்கிவிட்டார்கள்!

தமிழில் புலமை வாய்ந்தவர்கள்கூட, நல்ல தமிழில் பேசினாலோ – எழுதினாலோ – தங்களை, 'திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்' என்று சந்தேகப்படக்கூடும் எனக் கருதி – வேண்டுமென்றே பிற மொழி கலந்து – பேசவும், எழுதவும் செய்தனர்.

ஆனால் ஒரு காலத்தில், நம்முடைய கழகச் செய்திகளையும் கொள்கை விளக்கங்களையும் வெளியிடுவதற்கு, நமக்கென்று ஏடுகள் கிடையா! '**இந்து**'வும், '**மித்திரனும்**', அன்றையத் 'தேசிய' ஏடுகளும், வேண்டுமென்றே, நமது இயக்கச் செய்திகளை இருட்டடிப்புச் செய்துவந்தன!

"பேறறிஞர் அண்ணா அவர்களைப் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும் ஏதேனும் ஒரு செய்தி போட்டால்தான் பத்திரிகை விற்கும்" என்ற நிலையும் கழகம் வளர்ந்த பிறகுதான் வந்தது; பத்திரிகைகள் போட்டி போட்டுக் கொண்டு – பத்தி பத்தியாக நமது செய்திகளை வெளியிடத் தொடங்கின!

ஆனால் ஒரு காலத்தில், தப்பித் தவறி ஏதேனும் இரண்டு வரிச் செய்தி வந்தாலும், அதில் விஷமத்தனமும் கலந்திருக்கும்!

''கடற்கரையில் திராவிடக் கட்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது, அதில் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் பிராமணர் களையும், கடவுள்களையும் கடுமையாகத் தாக்கிப் பேசினார்; அண்ணாதுரையும் பேசினார்'' என்று **'சுதேசமித்திரன்'** செய்தி போடும்; ஆங்கிலப் பத்திரிகையானால், 'Annadurai also spoke' என்று – ஒரே வரியில் அண்ணாவின் பேச்சை அடக்கி விடுவார்கள்!

தந்தை பெரியார் அவர்கள் தன்னந்தனியாக நின்று, தன்மான இயக்கத்தைத் தொடங்கிய நேரத்தில், அவரது பேச்சையோ– கொள்கையையோ வெளியிட ஏடு இல்லை; அதற்காகவே பெரியார் அவர்கள் – தமது சொந்தப் பணத்தைக் கொண்டு, 'குடியரசு' என்ற வார இதழைத் தொடங்கினார்கள்; 'உண்மை விளக்கம் பிரஸ்' என்ற அச்சகத்தையும் நிறுவினார்கள்; அந்த அச்சகத்தில் பல கொள்கை விளக்கப் புத்தகங்களை அச்சிட்டு, அடக்க விலைக்கே விற்றார்கள்!

'குடியரசு' இதழை, பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்காக, 'ஐயா' அவர்கள் தொடங்கினார்கள்; அதனைத் தொடங்கி வைத்தவர் யார் தெரியுமா? – திருப்பாதிரிப்புலியூர் மடாதிபதியான அருள்திரு ஞானியார் அடிகள்!

அவர் மடாதிபதியாக இருந்தாலும், 'தமிழ்–தமிழன்' என்ற உணர்ச்சியும், தமிழில் தனிப் பெரும் புலமையும், சீர்திருத்த எண்ணமும் கொண்டவர்!

இன்று குன்றக்குடி அடிகளார் இருப்பதுபோல் அன்று ஞானியாரடிகள், ஐயாவிடம் அன்பும்–மதிப்பும் கொண்டிருந்தார். ஐயா அவர்களும், 'ஞானியாரடிகள் கையாலேயே தமது ஏட்டைத் தொடங்கி வைக்க வேண்டும்' என்று விரும்பி அழைத்தார்!

'குடிஅரசு' இதழில் கிழமை தோறும், ஐயா அவர்களின் சொற்பொழிவுகளின் சுருக்கமும் – ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வெளிவந்து கொண்டிருந்தன!

திராவிட இயக்கத்தின் தாய் இயக்கமான தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்திற்காகத் **'திராவிடன்'** என்ற நாளிதழும், **'ஜஸ்டிஸ்'** என்ற ஆங்கில இதழும் நடத்தப்பட்டன.

'திராவிடன்' நாளிதழுக்கு ஜனக சங்கர கண்ணப்பர் அவர்கள் ஆசிரியராக இருந்தார்.

நீதிக் கட்சிப் பெருந்தலைவர்களில் ஒருவரான டி.எம். நாயரும், பிறகு சர்.ஏ. இராமசாமி முதலியாரும், டி.ஏ.வி.நாதனும், **'ஜஸ்டிஸ்'** இதழில் ஆசிரியப் பொறுப்பேற்று எழுதி வந்தனர்.

'**ஜஸ்டிஸ்**' என்ற பத்திரிகையின் பெயரே – பிற்காலத்தில், தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் மாற்றுப் பெயராகி, 'ஜஸ்டிஸ் கட்சி – நீதிக்கட்சி' என்று வழங்கலாயிற்று!

சேரன்மாதேவி, குருகுலப் போராட்டத்துக்குப் பிறகு பெரியார் அவர்கள், காஞ்சிபுரம் மாநாட்டில் காங்கிரசிலிருந்து வெளியேறினார்; பிறகு, நீதிக் கட்சியில் சேர்ந்தார்; பின்னர் நீதிக் கட்சியின் தலைமைப் பொறுப்பும் அவரை வந்தடைந்தது.

பார்ப்பனரல்லாதார் இயக்கமான நீதிக்கட்சியின் தலைவராகவும் – தன்மான இயக்கத் தந்தையாகவும் திகழ்ந்த பெரியார் அவர்கள், பொப்பிலி அரசரின் உதவியுடன் '**விடுதலை**' என்ற நாளிதழையும் துவக்கினார்கள்.

'**விடுதலை**' – முதலில் சென்னையிலிருந்தும், பிறகு ஈரோட்டி லிருந்தும் வெளியாயிற்று.

பண்டித முத்துசாமிப் பிள்ளையை ஆசிரியராகவும் – திரு.ஈ.வெ. கிருஷ்ணசாமி (பெரியாரின் தமையனார்) அவர்களை வெளியிடுபவராகவும் கொண்டு, 'விடுதலை' நாளேடு ஈரோட்டி லிருந்து வெளிவந்தது.

பின்னர், '**விடுதலை**' அலுவலகம் சென்னைக்கு மாற்றப் பட்டது. (இடையில் சிறிது காலம் போர்ச் செய்திகளை வெளியிடுவதற்காக, ஆங்கிலேய அரசு 'விடுதலை'யைக் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தது).

சாமி சிதம்பரனார் – பூவாளூர் அ.பொன்னம்பலனார் – அறிஞர் அண்ணா – குத்தூசி குருசாமி ஆகியோர், '**விடுதலை**' இதழுக்கு ஆசிரியர்களாக இருந்திருக்கிறார்கள்!

இதற்கிடையில் பெரியார் அவர்கள், '**சமதர்மம்**' என்ற மாத இதழையும், '**ரிவோல்ட்**' என்ற ஆங்கில இதழையும் துவக்கி நடத்தி வந்தார்கள்.

நாளடைவில் பெரியார் பாசறையின் கொள்கைப் பிரச்சாரத்துக்கென, வேறு சில புதிய ஏடுகளும் தொடங்கப் பட்டன.

திருச்சியிலிருந்து – மணவை ரெ. திருமலைசாமி, '**நகர தூதன்**' என்ற வார இதழை நடத்தினார்.

கும்பகோணத்திலிருந்து, '**அறிவுக்கொடி**' என்ற இதழை, சாமி சிதம்பரனார் வெளியிட்டு வந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள், 1942ல், காஞ்சியிலிருந்து '**திராவிடநாடு**' வார இதழைத் தொடங்கினார்கள். (அண்ணா

அவர்கள் இதற்கு முன்பு '**நவயுவன்**' என்ற இதழை நடத்தியதும் நினைவுகூரத்தக்கது.)

சென்னையிலிருந்து நீதிக்கட்சிக்கு ஆதரவாக, '**சண்டே அப்சர்வர்**' என்னும் ஆங்கில வார இதழை, அண்ணாவின் நண்பர் பி. பாலசுப்பிரமணியம் நடத்தி வந்தார்.

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமியை ஆசிரியராகக் கொண்டு சென்னையிலிருந்து '**லிபரேட்டர்**' என்ற ஆங்கில நாளிதழ் வெளி வந்தது. (பிறகு '**எங்கள் நாடு**' என்ற தமிழ் நாளிதழும் டாக்டர் கிருஷ்ணசாமியால் நடத்தப்பட்டது.)

புதுவையிலிருந்து '**தொழிலாளர் மித்திரன்**' என்ற வார இதழை, வழக்கறிஞர் பெருமாள் துவக்கினார்; அதன் ஆசிரியராக, காஞ்சி கலியாணசுந்தரம் பொறுப்பேற்றார்.

1944ஆம் ஆண்டு, சேலத்தில் நடந்த மாநாட்டில், நீதிக் கட்சியின் பெயர், 'திராவிடர் கழகம்' என்று மாற்றப்பட்டபின், அறிஞர் அண்ணா அவர்கள், திராவிடர் கழகப் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார்கள்.

அண்ணா அவர்களின் எழுத்தும்–பேச்சும், இளைஞர்களை யெல்லாம் கவர்ந்தன! இயக்கப் பிரச்சாரத்திலும் விறுவிறுப்பு ஏறியது! அதன் விளைவாகப் பல ஏடுகள் புதிது புதிதாகத் தோன்றின!

திருச்சியிலிருந்து டி.எம். முத்து என்பவர், '**திராவிடமணி**' என்ற வார ஏட்டைத் துவக்கினார்; அதே திருச்சியிலிருந்து திரு. சுல்தான் பக்தாதி என்பவர், '**சமரசம்**' என்ற ஏட்டை நடத்தி வந்தார்; சென்னையிலிருந்து டி.எம். பார்த்தசாரதி, '**தமிழ் உலகம்**' என்ற வார இதழைத் துவக்கினார்.

1945ஆம் ஆண்டுக்கும் – 1949ம் ஆண்டுக்குமிடையே பல்வேறு இடங்களிலிருந்தும் இயக்க ஏடுகள் வெளிவரத் தலைப்பட்டன. பெரும்பாலும், இளைஞர்களே ஆர்வத்துடன் ஏடு நடத்தும் பணியில் ஈடுபடலாயினர்.

நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், திருவாரூரில் உயர்நிலைப் பள்ளி மாணவராக இருந்த காலத்தில், '**முரசொலி**' என்ற பெயரில் – துண்டறிக்கை வடிவில் – வெளியீடு ஒன்றை வெளியிட்டு வந்தார்; சில ஆண்டுகளுக்குப் பிறகு அதே '**முரசொலி**', இயக்க வார இதழாக வெளிவரத் தொடங்கியது; கலைஞரின் எழுத்துக்கள் – இளைஞர்களின் உள்ளங்களைச் சுண்டி இழுத்தன! (கலைஞர் அவர்கள், ஐயாவின் '**குடிஅரசு**' இதழின் துணை ஆசிரியராகவும் பணியாற்றி இருக்கிறார்.)

சென்னையிலிருந்து திரு. காஞ்சி மணிமொழியார் – அவர் மகன் திரு.மா. இளஞ்செழியன் ஆகிய இருவரையும் ஆசிரியர் களாகக் கொண்டு **'போர்வாள்'** வெளிவந்தது.

திரு.என்.வி.நடராஜன் அவர்கள், **'திராவிடன்'** என்ற வார இதழைத் துவக்கினார்.

புதுக்கோட்டையிலிருந்து திரு. அரு.பெரியண்ணன், முருகு. சுப்பிரமணியம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு – **'பொன்னி'** என்ற எழில்மிகு திங்கள் இதழைத் தொடங்கினார். (இந்த முருகு.சுப்பிரமணியம்தான் இப்போது, மலேசியாவில் புகழ்பெற்ற தமிழ் நாளேடாக வெளிவந்து கொண்டிருக்கும் **'தமிழ் நேசன்'** இதழுக்கு ஆசிரியராக இருக்கிறார்).

புதுவையிலிருந்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், **'குயில்'** என்ற கவிதை இதழைத் துவக்கினார்.

'குயில்' என்ற பெயரிலேயே – சென்னையிலிருந்து டி.என். இராமனும், ஜலகண்டபுரம் ப.கண்ணனும் வார இதழை நடத்தினார்கள்; **'குயில்'** என்ற மாத இதழும் வெளிவந்தது (சலகை ப. கண்ணன், பிறகு ஜலகண்டபுரத்திலிருந்து **'பகுத்தறிவு'** என்ற ஏட்டை நடத்தினார்).

'பூந்தோட்டம்' என்ற பெயரில், சேலத்திலிருந்து வை. திருநாவுக்கரசு என்பவர், மாத இதழ் ஒன்றைத் தொடங்கினார். (வை. திருநாவுக்கரசு இப்போது மலேசியா அரசின் மக்கள் தொடர்பு அதிகாரியாக இருந்து வருகிறார்.)

'விடுதலை'யில் துணை ஆசிரியராக இருந்து வந்த திரு.பூ.கணேசன், **'நிலவு'**; என்ற திங்கள் இதழைத் தொடங்கி (இவர் இப்போது தமிழக அரசின் குடும்ப நலத் துறை விளம்பரத் துணை இயக்குநராக சென்னையில் இருந்து வருகிறார்.)

புலவர் பு. செல்வராசன், **'கதிரவன்'** என்ற திங்கள் இதழை வெளியிட்டார். (அந்தக் காலத்தில் **'கல்கி'** இதழுக்கு ஈடாக இது வெளிவந்தது); புலவர் செல்வராசன், சென்னை இந்து– முஸ்லிம் ஹக்கீம் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்று அண்மையில் இயற்கையெய்தினார்.

தமிழகச் சட்டமன்ற மேலவைத் தலைவராக இப்பொழுதுள்ள சிந்தனைச் சிற்பி சி.பி.சிற்றரசு அவர்கள், வேலூரிலிருந்து, **'தீப்பொறி'** என்ற இதழைத் துவக்கினார்.

தி.மு.கழகம் தொடங்கியபின் திருச்சியிலிருந்து வெளியான **'தமிழ் மன்றம்'** – சென்னையிலிருந்து வெளியான **'தீச்சுடர்'** –

'இனமுழக்கம்' ஆகிய இதழ்களுக்கும் சி.பி.சி. அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்தினார்.

அதே நேரத்தில், சென்னையிலிருந்து எம்.கே.டி. சுப்பிரமணியம்; **'தீப்பொறி'** என்ற வார இதழைத் துவக்கினார்.

இன்றைய கல்வியமைச்சரும்–நமது பொதுச்செயலாளருமான டாக்டர் நாவலர் அவர்கள், 1948–ல், **'மன்றம்'** என்ற திங்கள் இதழைத் துவக்கினார்; அது, பின்னர், திங்களிருமுறை இதழாகவும்–வார இதழாகவும் வெளிவந்தது.

பேராசிரியர் அன்பழகன் அவர்கள், பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியராக இருந்துகொண்டே **'புது வாழ்வு'** என்ற திங்கள் இதழை நடத்தினார்.

'டார்பிடோ' என்ற பெயரில், டார்பிடோ ஏ.பி. சனார்த்தனமும் **'தோழன்'** என்ற பெயரில் என். சீவரத்தினமும், வார இதழ்களைத் துவக்கினர்.

விருதுநகரிலிருந்து, பெரியவர் வி.வி.இராமசாமி அவர்கள், **'தமிழ்த் தென்றல்'** என்ற பெயரில் மாத இதழையும், திரு.ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள், **'தனி அரசு'** என்ற வார இதழையும், சதானந்தம் என்பவர், **'மகிழ்ச்சி'** என்ற இதழையும் நடத்தினார்கள். (ஏ.வி.பி. ஆசைத்தம்பி, பின்னர் சென்னையிலிருந்து 'தனி அரசு' ஏட்டை நாளிதழாக வெளியிட்டது தெரிந்ததே).

தஞ்சையிலிருந்து **'எரிமலை'** என்ற வார இதழை ஏ.கே.வேலன் நடத்தினார்; அவரே பிறகு **'ஞாயிறு'** என்ற இதழைத் துவக்கினார். (பிற்காலத்தில், இன்றைய 'கழகக் குரல்' ஆசிரியர் திரு. சிட்டிபாபு அவர்கள், 'ஞாயிறு' என்ற இதழை நடத்தினார்).

தோழர் ஏ.எஸ். வேணு, **'நியூ ஜஸ்டீஸ்'** என்ற ஆங்கில வார இதழைத் துவக்கி நடத்தினார்; அவரே பிறகு, **'களஞ்சியம்'** என்ற தமிழ் வார இதழையும் நடத்தினார்.

அண்ணாவின் நண்பர் திரு.எஸ்.வேதரத்தினம் என்பவர், **'ஸ்பார்க்'** என்ற ஆங்கில வார இதழை நடத்தினார்; அவரே பிறகு, டி.எம். பார்த்தசாரதி நடத்திய **'பிராக்ரஸ்'** என்ற ஆங்கில வார இதழுக்கும் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

காரைக்கால் திருமலைராயன் பட்டினத்திலிருந்து தட்சிணாமூர்த்தி என்பவர், **'சூறாவளி'** என்ற வார ஏட்டை நடத்தினார்.

சாத்தூரிலிருந்து பா. இராசமணி என்பவர், 'வைப்பாறு' என்ற திங்களிதழைத் தொடங்கினார்.

அண்மையில் இயற்கையெய்திய இரா.சு. தங்கப்பழமும் – இன்றைய நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினரான எம்.எஸ். சிவசாமியும் சேர்ந்து, **'கிளர்ச்சி'** என்ற வார இதழைத் தூத்துக்குடியிலிருந்து வெளியிட்டனர்.

சென்னையிலிருந்து ந.அறிவழகன் என்பவர், **'முருகு'** என்ற இதழை வெளியிட்டார்.

அண்ணா அவர்கள், **'திராவிட நாடு'** *(28–7–47)* இதழில், அன்றைய இயக்க ஏடுகளின் பட்டியல் ஒன்றை வெளியிட்டிருந்தார்கள்; அதில் மொத்தம் *40* இதழ்களின் பெயர்கள் இருந்தன.

மேல்குறிப்பிட்டுள்ள ஏடுகள் தவிர மற்றவை வருமாறு:–

'திராவிட அரசு', **'திராவிட முரசு'**, **'அழகு'**, **'இன ஒலி'**, **'மறுமலர்ச்சி'**, **'தமிழ்நாடு' (சென்னை)**, **'தமிழகம்'**, **'திராவிடம்'**, **'திருவிடம்'**, **'கோவை முரசு'**, **'சேலம் டைம்ஸ்'**, **'வழிகாட்டி'**, **'சமத்துவம்'**, **'தமிழ் ஏடு'**, **'குரல்'** ஆகியவையாகும்.

இவையல்லாமல், இன்னும் சில ஏடுகளும் வெளிவந்தன; உடுமலை பி.வி. இராமசாமி என்பவரை ஆசிரியராகக் கொண்டு, **'உடுமலை பீரங்கி'** என்ற இதழ் சென்னையிலிருந்து வெளியாயிற்று.

குடியேற்றத்திலிருந்து கு.மு. அண்ணல்தங்கோ, **'தமிழ் நிலம்'** இதழை நடத்தினார்.

திருவத்திபுரம் மா.ந. இராசமாணிக்கம், **'போராட்டம்'** என்ற இதழை நடத்தினார்.

இந்த ஏடுகளெல்லாம், திராவிடர் கழக வளர்ச்சிக்கு உரமாக அமைந்தன.

*1949*ல் தி.மு.கழகம் தோன்றிய பிறகு, தி.மு.கழகக் கொள்கைகளை ஆதரித்துப் பல ஏடுகள் புதிதாக வெளிவரத் தொடங்கின.

தி.மு.கழகத்தின் அதிகாரபூர்வமான கொள்கைப் பிரச்சார நாளிதழாக, **'மாலை மணி'** என்ற இதழ் முதன்முதலில் வெளிவந்தது; திரு.டி.எம்.பார்த்தசாரதி அவர்களால் துவக்கப்பட்ட இந்த நாளிதழுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்கள்; நாவலர் பொறுப்பாசிரியராக இருந்தார்; அதன்பிறகு கலைஞர் அவர்கள் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்கள்.

'நேஷனல் கால்' என்ற ஆங்கில வார இதழை இலட்சுமண ராவ் என்பவர் நடத்தினார்.

பத்மன் செல்லப்பன், **'தீ'** என்ற வார இதழைத் துவக்கினார்.

கோ. இறைமுடி மணியை ஆசிரியராகக் கொண்டு, **'தளபதி'** என்ற வார இதழ் வந்தது.

பி.வி. முத்துசாமியை ஆசிரியராகக் கொண்டு, **'முன்னேற்ற முரசு'** என்ற வார இதழ் வெளிவந்தது.

1953 சூன் 15–ஆம் நாள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரபூர்வமான நாளேடாக, அறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு, **'நம் நாடு'** இதழ் வெளிவரத் தொடங்கியது; அதன் பொறுப்பாசிரியராக காஞ்சி கல்யாணசுந்தரம் பொறுப் பேற்றார்; பின்னர், நாவலரும் – சி.பி. சிற்றரசு அவர்களும்– இரா. செழியனும், **'நம்நாடு'** ஆசிரியர் பொறுப்பை வகித்தார்கள்.

மாயூரத்திலிருந்து மா.செங்குட்டுவனும்–என். கிட்டப்பாவும் இணைந்து, **'எழுச்சி'** என்ற இதழைத் துவக்கி நடத்தினார்கள்.

சிதம்பரத்திலிருந்து தில்லைவில்லாளனை ஆசிரியராகக் கொண்டு **'தம்பி'** என்ற வார இதழும், **'பூமாலை'** என்ற திங்கள் இதழும் வெளிவந்தன!

நிறுத்தப்பட்டிருந்த நாவலரின் **'மன்றம்'** இதழ் மீண்டும் வெளிவரத் தொடங்கியது.

கலைஞரின் **'முரசொலி'**யும் சென்னையிலிருந்து வார இதழாக ஒலிக்கத் தொடங்கியது; பிறகு அது நாளிதழாக மாறியது.

கவிஞர் கண்ணதாசன், **'தென்றல்'** என்ற வார இதழையும், **'தென்றல் திரை'** என்ற இதழையும் துவக்கி நடத்தினார்.

திரு. கே.ஏ. மதியழகன் **'தென்னகம்'** என்ற வார இதழை நடத்தினார்.

இன்றையக் குடிசை மாற்று வாரியத் தலைவரான இராம. அரங்கண்ணல், **'அறப்போர்'** என்ற வார இதழைத் துவக்கினார்.

கவிஞர் சுரதா, **'காவியம்'** என்ற கவிதை வார இதழை நடத்தினார்.

'கலை மன்றம்' என்ற இதழை பால்வண்ணன் நடத்தினார்.

கலைஞர் அவர்களின் **'முத்தாரம்'**, **'மறவன் மடல்'** ஆகியவை யும் வெளிவரத் தொடங்கின.

அறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு, **'ஹோம்லண்ட்'** என்ற ஆங்கில வார இதழ் வெளியாயிற்று; அதன்பிறகு, **'ஹோம் ரூல்'** என்ற பெயரில், அண்ணா அவர்கள், ஆங்கில வார இதழை நடத்தினார்கள்.

காஞ்சியிலிருந்து அண்ணாவின் **'காஞ்சி'** இதழ் வெளிவரத் தொடங்கியது.

டாக்டர் இலக்குவனார், '**குறள்நெறி**' என்ற கிழமை இதழை மதுரையிலிருந்து நடத்தினார்; பிறகு அது, நாளிதழாகவும் வெளிவந்தது; '**இலக்கியம்**' என்ற பெயரிலும், '**பெரியாரிசம்**' என்ற பெயரிலும், முன்பு இலக்குவனார், இதழ் நடத்தியிருக்கிறார்.

இன்றைய அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள், '**திருவிளக்கு**' என்ற வார இதழைத் தொடங்கினார்.

திருவை அண்ணாமலை, '**கழகக் குரல்**' என்ற வார இதழைத் திருவைகுண்டத்திலிருந்து வெளியிட்டார்.

பி.எஸ். இளங்கோவை ஆசிரியராகக் கொண்டு, '**மாலைமணி**' சென்னையிலிருந்து வார இதழாக வெளிவந்தது; பின்னர் அது, நாளிதழாகவும் வெளிவந்தது.

மதுரையிலிருந்து '**தென்னரசு**' என்ற வார இதழை, திரு. எஸ்.எஸ். தென்னரசு துவக்கினார்.

ஏ.கே. வில்வம், '**தன்னாட்சி**' இதழைத் தொடங்கினார்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு '**தென்புலம்**' என்ற இதழ் வேலூரிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

திரு. உ. கணபதி இராம சுப்பையாவை ஆசிரியராகக் கொண்டு, '**உரிமை வேட்கை**' என்ற வார இதழ் சென்னையிலிருந்து – 'இராமச்சந்திரன் தொழிற்சங்க அறக்கட்டளை' சார்பில் வெளியிடப்படுகிறது.

இவ்வளவு ஏடுகளும், இந்தப் பட்டியலில் (நினைவுக்கு வராமல்) விடுபட்டுப்போன இன்னும் பல ஏடுகளும் செய்த பிரச்சாரத்தால்தான், நமது இயக்கம், மாற்றாரும் பார்த்து வியக்கத்தக்க வகையில் வளர்ந்தது; ஆண்ட காங்கிரசை வென்று, ஆட்சியைக் கைப்பற்றியது.

ஒரு முனையிலே–நாவன்மை மிக்க பேச்சாளர்களாலும், இன்னொரு முனையிலே–எழுத்தாற்றல்மிக்க எழுத்தாளர்களின் ஏடுகளாலும் வளர்க்கப்பட்ட இயக்கம்தான் நமது கழகம்!

'இவ்வளவு ஏடுகளும் இப்போது எங்கே?' என்ற கேள்வி எவருக்கும் எழத்தான் செய்யும்!

எதிர்க் கட்சியாகத் தி.மு.கழகம் இருந்த காலத்தில்–இயக்கத்தை வளர்த்த அத்துணை ஏடுகளும், ஆளுங்கட்சியான பிறகு இல்லை என்பது உண்மைதான்!

பொதுவாக, ஒரு பத்திரிகையை, தொடர்ந்து–தொய்வில்லாமல் நடத்துவது என்பது எல்லோராலும் இயலாத ஒன்றாகும்.

எவ்வளவுதான் பண வசதி படைத்தவர்களானாலும் அது இயலாத காரியம்; சாதாரண நிலையில் உள்ள கழகத்தவரால், ஆர்வம் ஒன்றையே மூலதனமாகக்கொண்டு தொடங்கப்பட்ட ஏடுகள் அத்தனையும் அப்படியே நிலைத்து நின்றிருக்க முடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

விரல்விட்டு எண்ணக்கூடிய சில ஏடுகளைத் தவிர, மற்ற ஏடுகளெல்லாம் இன்று நின்று போய்விட்டன!

பொதுவாக இன்றைக்கு 'நமது இயக்க ஏடுகள்' என்று இருப்பவை மிகமிகக் குறைவே ஆகும்.

'ஏடுகளைக் காசு கொடுத்து வாங்கிப் படிக்க வேண்டும்' என்ற ஆர்வம் இன்றைய இளந்தலைமுறையினரிடையே குன்றிப்போய்விட்டது!

மாணவர்களும்–இளைஞர்களும், நமது இயக்க இலட்சியத்தின்பால் காட்டிய ஆர்வமும், இயக்க ஏடுகளைப் படிப்பதிலே காட்டிய பரபரப்பும், புதுப்புது ஏடுகள் வெளிவரத் தூண்டுகோலாக அமைந்தன; ஆனால், ஏனோ அந்த ஆர்வம், இப்போது மங்கி மறைந்தே போய்விட்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

— கழகக் குரல்

15.09.1974

பத்திரிகையாளரே! பத்திரிகையாளரே!

நம் சோதிடர் பேசுகிறார்!
சோதிடப் பலன்
கோசாரப் பலன்
நாளை நடப்பது என்ன?
நமது சோதிடர்
இந்த வாரம்
இன்று நாள் எப்படி?
வருங்காலம்
சோதிடக் குறிப்பு

இப்படி ஆயிரம் தலைப்புகள் – அடுக்கடுக்காக! நாட்டின் நரம்புகள் போன்ற ஏடுகளில் – மக்களின் மனதை உழுது பயிரிடும் பேனாக்கலப்பைகளின் விளையாட்டு பூமியான மடல்களில் இருள் மதியை விரட்டி, பகுத்தறிவொளியைப் பரவச் செய்யும் – செய்ய வேண்டிய தின, வார, திங்கள் மலர்களில் – இந்தக் கோரக் கூத்து! தேனில் கசப்பு, மனதைக் கவரும் மணத்தை வீசும் மலரில் மலத்தின் வாடை, பருகும் பொழுதே பரசவந்தரும் பாலில் உயிர் குடிக்கும் நஞ்சின் தன்மை இருக்கிறது – இருப்பதைக் காண்கிறோம். ஐயையோ, சொல்ல வெட்கமாகுதே, இந்த அறிவிழந்த ஏடுகள் மீது கோபம், கோபமாகுதே! – என்று ஆவேசப் பாடலிசைத்து ஆத்திரக் கூத்தாடுகிறது நம் மனம் – வெந்து தணிகிறது, வேதனையை உமிழ்கிறது, இந்த நாட்டு நல்லறி வாளரின் சிந்தனை!

நம் நாட்டில் வருகிற எந்த ஏட்டை எடுத்து புரட்டினாலும் இந்த அலங்கோலத்தை – அவலட்சணத்தைப் பார்க்கிறோம். அழுகுரலில் நாம் கேட்கிறோம், அடுக்கமா, இந்த அநீதி, ஆகுமா, இந்த அக்ரமப் போக்கு, அடிக்குமேல் அடி, வெட்டுக்குமேல் வெட்டு, குத்துக்கு மேல் குத்து கொடுத்து மீசையை, முறுக்கினா னாமே ஒரு முரடன், எதிர்த்து வந்தவன் இறந்து விழுந்த பிறகுங்கூட, அதுபோல அறிவிழந்து அல்லல் குகையில் அல்லாடித் திரியும் மக்களை மேலும் அதே தொல்லைக்காளாக்கலாமா? இதுதான் 'பேனாக்களின்' வேலையா? ஏட்டுப் பறைகளின் இன்றி யமையாத தொண்டா? உரத்த குரலரும், ஊரறிந்த ஊற்றுமைக் குழலரும் இந்த மௌடீகப் பாதையில் மக்களை இழுத்துக்கொண்டு சென்றால் இந்த மக்களின் கூட்டம் உருப்படும் நாள் எந்நாள்?

சோதிடமாம், வரப்போகிற நன்மை தீமைகளை, நாளால், நட்சத்திரத்தின் துணை கொண்டு, லக்கினத்தின் போக்கினை யறிந்து முன்னரே சொல்லுந்திறன் கொண்ட வல்லவர்கள் உள்ளனராம், அவர்கள் தருகிறார்களாம் செய்திகளை, அதைப் போடுகிறதுகளாம். இந்தக் குணங்கெட்டு, நாட்டு மக்களின் நல்வாழ்வில் துளியும் எண்ணமில்லாத, தங்கள் பண வீக்கத்திற்கும், அதற்கான ஆக்கவேலைகளில், தவக்கமின்றி, தயக்கத்தை நீக்கி, துவக்கத்திலிருந்து முடிவுவரை மும்முரமாக ஈடுபட்டு வேலை செய்வதில் கொஞ்சம் இளைக்காத ஏடுகள் – இரும்புப் பெட்டிகளின் இதய கீதமான ஏடுகள் – முதலாளிகளின் முணு முணுப்பை மட்டும் ஒலிபரப்பும் தந்திரக் காகித வாயாடிகள் – ஏழைக்கு உழைப்பதாக பகல்வேடம் போடும் பசப்புக்காரத் தங்கங்கள் – பதிவிரதையெனப் பாசாங்கு செய்யும் 'பச்சைகள்'!

நட்சத்திரம், லக்கினம், திதி இப்படி, அப்படியெனக் கூறி, சுயசிந்தனையைச் சோரம் போகவிட்டு, சோம்பேறியாய், சொந்த புத்திக்குத் துளியும் மதிப்பளிக்காமல் மக்கள் நாள் பார்த்துக் கொண்டேயிருக்கவும், மற்ற நாடுகள் கேலி செய்து, கெக்கொலி கொட்டி நகைக்கவும் தான் இடமேற்படுத்திவிட்டன, இந்த இரக்கமில்லா ஏடுகள், கொஞ்சமும் நாட்டு நன்மையில் நாட்ட மில்லாத பத்திரிகைகள்! சோதிடப் பகுதியைக் கொண்டே சோற்றுக்கு வழி தேடுகின்றனவாம் இந்த 'சொரணைகெட்ட' எழுத்துக் கூச்சல்கள்!

இன்று மரண யோகத்தின் காரணமாக சுபகாரியங்கள் செய்யவோ, அல்லது புதிய முயற்சிகள் செய்யவோ ஏற்ற நாளாக இல்லை.

பகல் 12 மணிக்கு மேல் முக்கிய இடங்களுக்குச் செல்லவும், பண வசூலில் ஈடுபடவும் ஏற்ற சமயமாக உள்ளது.

இப்படிக் காலத்தைப் பற்றியக் கண்காணிப்பை, ஒரு 'பஞ்சாங்கம் புரட்டி' நடத்துவதை நாம் பார்க்கிறபொழுது சிரிக்கிறோம் ஒரு சமயம், அழுகிறோம் மற்றொரு சமயம்!

நிமிடத்தை, மணியை, நாளை, வாரத்தை, மாதத்தை, ஆண்டைப் பற்றி மற்றைய உலக நாடுகளில் பேசுகின்ற பொழுதெல்லாம் வீணாக்காதே, கழிந்த காலம் திரும்ப வராது என்று பேசுவர்.

நேரத்தை வீணாக்காதே, மீண்டும் வராது போனபொழுது! முயற்சி செய், விடாது, அலுக்காது, சலிக்காது! வெற்றி நிச்சயம்! தோல்வி கண்டு துவண்டு விடாதே, அவைகள் வெற்றி மாடிக்கு இட்டுச் செல்லும் படிகள்... இப்படிக் காலத்தைப் பொன்னாக்கும் கருத்துரைகளைத் தந்து மக்களை மாக்களாக்காமல் வாழவ்ழி தந்தார்கள் – தருகிறார்கள் மேலைநாடுகளில்.

நம் நாட்டவருக்கு இந்தக் கருத்துகள் புதியனவல்ல, புரியாத போதனைகளுமில்லை. தெரியும் – மறந்துவிட்டார்கள்! புரிந்தும் பின்பற்றி நடவாத உண்மைகளாகிவிட்டன! உழைப்பில் வாரா உறுதிகள் உளவோ? நாளும் கேட்கிறோம், இந்த நற்கருத்தை! முயற்சித் திருவினையாக்கும், முயற்சியின்மை இன்மை புகுத்தி விடும், ஊழையும் உட்பக்கம் காண்பர், தாழாது உஞற்றுபவர், இத்தகைய குறள்வரிகளை கேட்டசெவிகள்தாம் நம் தாயகத்தில் உலவுகின்றன.

ஆனாலும் இன்று இந்தப் பஞ்சாங்கத் தாங்கிகளின் பக்கம் சாய்ந்துள்ளனர் மக்கள், பகுத்தறிவினிடம் பகைத்துக்கொண்டு!

இன்றைய சந்திரன் குரு சாரத்தில் வருவதால் தங்கம், வெள்ளி, கடலை, மொச்சை முதலியவைகளின் விலை உயரக் கூடும்! சணல், பருத்தி, கருப்புநிறச் சாமான்கள் முதலியவைகளின் விலை குறையலாம்! உத்தியோகத் துறைகளிலுள்ளவர்களுக்கு சில நன்மைகள் உண்டாகலாம்....

இப்படி, ஆரூடக்காரர்களாக, வியாபாரிகள் மாறிட ஏவுகிறார்கள் புராண அறிவுக்காரர்கள். உற்பத்தி நிலையை மறந்துவிட்டு, எடுத்துச் செல்லும் வாகன வசதியைக் கவனிக்காது விட்டு விட்டு, வெளிநாட்டு இறக்குமதி, ஏற்றுமதி பற்றி கவலையுமின்றி, சந்திரன் போக்கிலே தங்கள் வணிகத் தொழிலை வைத்துக்கொள்ளத் தூண்டும் பித்தலாட்டப் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

பாமரரைப் பழி வாங்கும் பகிரங்க புளுகுகளைப் பயமின்றிப் போட்டுத் தங்கள் 'வயிறு நிறைக்கும்' வகைகெட்ட வேலைகளில் ஈடுபடுகிறார்களே, இந்த நாட்டு ஏட்டு வேந்தர்கள்! மக்களை

வீரர்களாக, விவேகிகளாக மாற்ற வேண்டிய எழுத்து மன்னர்கள் இப்படி மூடமதியினராக, முன்னேற்றம் என்பதை கண்டு தரிசிக்கும் நிலையைக் கூட நினைக்காத, எண்ணிப் பார்க்கவும் எட்டாத பயங்கரப் படுகுழியில், மூடநம்பிக்கையென்னும் இருட் கிடங்கில் தள்ளுகிறார்களே என்று எண்ணும்பொழுது திகைக் கிறோம், திணறுகிறோம் – மூச்சடைத்து, பேச்சற்று பிம்பங்களாக நிற்கிறோம்.

மேஷ ராசிக்காரர்களுக்கு சில காரியங்களில் விசேஷ பலன்கள் ஏற்படக் கூடும். ஸ்தீரிகள் உதவியால் நன்மைகளும் உண்டாகும்.

மிதுன ராசிக்காரர்களுக்கு இன்றைய சந்திரன் இருக்கும் நிலையால் பண நெருக்கடி அதிகமாகத் தென்படும்.

இப்படி எழுதி ஏழை எளியதுகளை உழைப்பவர்களைக் கெடுத்து அவர்கள், மேஷத்தை, மிதுனத்தை, துலாவை, தனுசுவைத் துருவித் துருவி ஆராய்ந்து, காலத்தை கவைக்குதவாதக் காரியத்திலே கழித்திடும் கோரக் காட்சியை காணும் பொழுது எப்படியிருக்கும் அறிவியக்க ஆர்வலர்களுக்கு! இந்த சோதிடப் பகுதியைப் போடும் வானா, மூனாக்கள் மீது ஆத்திரம் பிறக்காதா?

அறுபது ஆண்டுகளுக்கும், அர்த்தமற்ற கதைகள்! – ஆபாசமான விளக்கவுரைகள் – நாரதர் பெண்ணாகி, கோகுலவாசி, குழல் ஊதி, கோதையர்களுடன் கூடிப்பாடிடும் கோபால கிருஷ்ணனுடன் அறுபது ஆண்டுகள் அனுபவித்த இன்பத்தின் அறுவடைகள்தாம் அறுபதாண்டுகள்! பன்னிரண்டு மாதங் களுக்கும் பக்குவமான விரிவுரைகள் – நாட்களிலேயே கோளாறுகள்! வெள்ளி கலகநாள், சனி, நளனைப் பிடித்த ஏழரை நாட்டுச் சனியனை நினைப்பூட்டும் ஆகாதநாள், செவ்வாயோ வெறுவாயோ, வியாழன் விடியாது – இப்படி ஒரு 'ஓட்டை' சொல்லுவார்கள்! பொன் கிடைத்தாலும், புதன் கிடைக்காது என்று சில நாட்களுக்குச் 'சப்பைக்கட்டு!' இவர்களே பேசுவார்கள், ஆண்டவன் வைத்த நாளிலே எது கெட்டது, எது நல்லது என்று!

நிமிடத்திற்கு நிமிடம் முட்டுக் கட்டைகள், முன்னேற்றத்திற்கு எதிரான தடைக்கற்கள்! எமகண்டம், குளிகை, இராகுகாலம் என்று பேசிக்காலத்தைப் பாழக்கப் பழகிவிட்டார்கள். அதை மாற்றவேண்டிய "ஏடு தரும்" எழுத்துச் செல்வர்களோ, அதை விளக்கினார்கள் மேலும், மேலும் – அதுவும் இன்னும் ஆழமாக, அகலமாக!

வடக்கே சூலம், தெற்கே சூலம் – என்று கட்டைப் போடுவார்கள்! அஷ்டமி, நவமியில் ஆகாது கூடாது எந்தக்

காரியமும்! – இப்படி ஓலமிடும் குரல் இன்னமும் ஒலிக்கிறது – அதன் குரலும் பலிக்கிறது!

கல்லூரிக் கட்டிடங்களை, காலட்சேப மண்டபங்களாக்கி, பொதுமேடையை பூசாரிக்கூடமாக்கி, பேச்சை, நாவணிகரின் நல்ல கடையாக்கி இந்த நாட்டு மக்களின் அறிவை ஆழமான சவக்குழிக்கு அனுப்பியபடியே இருக்கின்றனர் – சிலர் – அவர்களின் வாழ்விற்கு அந்தப் பழையகால எண்ணங்கள், ஏற்பாடுகள் நிலைத்திருக்க வேண்டியதால்! சடசடவென சரியுது பார், இந்த சாரமற்ற பேச்சுக்காரரின் தந்திரத் திட்டங்கள்! மடமடவென வளர்ந்தோங்கி இருள் போக்கி திரியுது பார் பகுத்தறிவு பகலவனின் கதிரொளிகள்!... என்று இந்நாட்டுப் பாவலர்கள் பாடிடும் நிலை பிறக்க வேண்டும்.

சோதிடப் பகுதிக்கென்று, தமிழிலில் வெளிவரும் மாத, வார இதழ்கள் மட்டுமல்ல; அன்றன்றாட செய்திகளை மக்கள் மன்றத்திற்கு அளித்து அறிவொளி பரப்ப வேண்டிய பொறுப்பும், கடமையும் நிரம்பிய தினசரி இதழ்களில்கூட இன்று சோதிடப் பகுதிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

தினசரி

தினத்தந்தி

காண்டீபம்

பிரசண்டவிகடன்

சுதேசமித்திரன்

பாரததேவி

தினமணி கதிர்

முதலாய முக்கிய தினசரி, வார இதழ்களில் இன்று சோதிடத்துக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் மிக மிக அதிகமானது. இந்த இதழ்களை ஏற்று நடத்தும் பொறுப்பு கொண்டவர்களில் பலர் பகுத்தறிவு மிக்கவர்கள் – மூடக் கொள்கைகள் முறியடிக்கப்பட வேண்டுமென்பதில் மங்கா ஆர்வம் படைத்தவர்கள், இளைஞர்கள் – எனினும் இந்த இதழ்களில் 'சோதிடப்பகுதி'தான் தங்கள் பத்திரிகை விற்பனையாகும் வழியெனக் கருதுகின்றனர்.

சில பத்திரிகையாசிரியர்களை இது சம்பந்தமாகக் கேட்ட போது, அவர்கள் சிறிதும் கலக்கமின்றி சிரித்தபடியே பதில் சொல்லினர், 'என்னங்க! சோதிடத்தில் எங்களுக்கு மட்டும் நம்பிக்கையோ? என்னவோ, அது இல்லையென்றால் பலர்

குறைபடுகின்றனர், விற்பனை குறைகிறது. என் செய்வது!'' என்று பதில் தந்தனர் – தங்களது சேவை இவ்வளவு 'சில்லரை' யாகச் சிதறுகிறதே என்று சித்தங்கலங்காமல்!

மக்களுக்குச் சேவை செய்து அவர்களை மடைமைப் பாதையிலிருந்து மீட்கவேண்டியதை கடமையெனக் கொண்ட எழுத்துச் சிற்பிகள் கூறுகிறார்கள் 'பத்திரிகை விற்பனையாக சோதிடப் பகுதி தேவைப்படுகிறதாம்'!

சோதிடப் பகுதி இல்லாத பத்திரிகைகள் காற்றில் பறந்துவிட வில்லை! 'கல்கி', 'ஆனந்தவிடகன்', 'கலைமகள்' முதலான சஞ்சிகைகளும், 'இந்து'வும், 'மெயிலும்' எடுப்பாரற்ற தாட்களாகவும் ஆகிவிடவில்லை! சோதிடத்தையும், சூதுக் கொள்கைகளையும் மட்டந்தட்டும் நமதியக்கப் பத்திரிகைகள் நாட்டில் நடமாடவே செய்கின்றன – எல்லோரும் வியக்கும் அளவில், பெருமிதமாக!

எனினும் 'எழுத்தைத் தொழிலாகக் கொண்டோர்', தங்கள் எழுத்தில் நம்பிக்கை வைக்காது 'சோதிடத்தைத்' தேடுகின்றனர்!!!

''மாய மோதிரம் இது மங்கையரை வசீகரிக்கும்.''

''மந்திர உச்சாடனம் செய்யப்பட்ட தாயத்து – சகல சம்பத்துக்களையும் தரும்''

''ஜாலக் கண்ணாடி – ஈரேழு பதினான்கு உலகங்களையும் காணலாம்''

இதுபோன்ற விளம்பரங்கள் பெரிய பெரிய அளவுகளில்!

மக்கள் மனதை எளிதில் மயக்கச் செய்யவும் இதுபோன்ற விளம்பரங்களும், வேடிக்கைச் செய்திகளும், 'நமது நிருபர்' அளிக்கும் 'அதிர்வேட்டுத்' தகவல்களும் இன்று கிட்டத்தட்ட எல்லா இதழ்களிலும், அதிகரிக்கத் துவங்கிவிட்டன.

எந்தெந்தச் செய்திகள் மக்களிடை பரபரப்பையும், 'அப்படியா, சங்கதி?' என்ற ஆச்சர்யத்தையும் எழுப்புமோ அவைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன.

ஆத்தூர்

வால் முளைத்த சாமியார் வருகிறார் என்ற வதந்தியால் ஒவ்வொரு வீட்டிலும் வேப்பிலை கட்டப்பட்டிருக்கிறது. பெண்கள் கையில் வேப்பிலை தாங்கியவண்ணமே நடக்கின்றனர். குழந்தைகள் சட்டைப்பையிலும் வேப்பிலை வைத்திருக்கின்றனர்.

செய்யார்

கொம்பும் வாலும் முளைத்த சாமியார் வருகிறார் என்ற

பயத்தினால் மக்கள் வீடுகளின் இருபுறங்களிலும் வேப்பிலைகளை சொருகி இருக்கின்றனர்.

சென்னை

"நான் நள்ளிரவில் தேகவியோகம் அடையப் போகிறேன்" என்று ஜோஸ்யம் கூறிய ஒரு சாமியார் பரலோக யாத்திரைக்குத் தயாராகி வருகிறார். கோடம்பாக்கத்தில் ஒரு காளி கோயிலின் அருகில் ஏழடிப் பள்ளத்திற்கருகில் அவர் தியானத்தில் இருக்கிறார்.

சீதாராமராஜு என்ற இச்சாமியாரை உயிருடன் புதைத்துவிடாதபடி போலீசார் கண்காணித்து வருகின்றனர்.

சபரிமலை

துஷ்டர்களால் சுட்டெரிக்கப்பட்ட சபரிமலை அய்யப்பன் கோயிலின் கர்ப்பக் கிரகத்தில், புரோகிதர் சென்று நாசமடைந்து அலங்கோலமாகக் கிடந்தவற்றை எடுக்கையில் 12 அடி நீளமுள்ள பெரிய பாம்பு ஒன்று உடைந்துபோன விக்ரகத்தின் கீழ் படுத்துக் கொண்டிருந்தது. சுற்றியிருந்தவர்கள் அப்பாம்பைத் தாக்க கற்களை எடுத்தனர். ஆனால் திருவாங்கூர் தேவஸ்தானம் போர்டின் தலைவர் பி.ஜி.என். உன்னித்தன், மெல்ல அந்தப் பாம்பினிடம் சென்று அதன் படத்தைத் தட்டிக் கொடுத்து "அய்யப்பா, தயவு செய்து போ" என்று உரத்தகுரலில் சொன்னார். அந்தப் பாம்பும் அவர் காட்டிய திசையில் மெல்ல நகர்ந்து சென்றது.

இதுபோன்ற செய்திகள்! பிரமாதமான தலைப்புகளுடன் பிரசுரிக்கப்படுகின்றன – கட்டம் கட்டியும், பெரிய எழுத்தில் அச்சு கோர்த்தும், இந்தச் செய்திகளுக்கு முக்க்கியத்துவம் தரப்பட்டு வருகிறது.

திடீர் வேட்டுகள், புரியாத புதிர்கள், நடக்க முடியாத தகவல்கள் – இவைகளைப் பிரசுரிப்பதில் இந்தப் பத்திரிகைகளுக் குள்ள பேரார்வத்தைக் கண்டால் பித்தனும் நகைப்பான்!

அதிசயச் செய்திகள் என்றால் மக்கள் ஆர்வங்கொண்டு பார்ப்பர், அதோடு 'அறிவுக்கு முரண்பாடானவை – நிச்சயம் நடக்க முடியாதவை' என்று நம் போன்றார் செய்துவரும் அறிவுப் பிரச்சாரத்துக்கும் ஒரு சவுக்கடியாகவிருக்கும் என்ற ஒரே எண்ணத்தின் மீதே இதுபோன்ற செய்திகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

சுயமரியாதை இயக்கத்தினரின் புயல்வேகப் பிரச்சாரத்தைப் புதைத்துவிடலாம் இதுபோன்ற பொய் மூட்டைகளைப் பிரசுரிப்பதன் மூலம் என்ற பொல்லா நோக்கும், எப்படியாவது

காசு கிடைத்தால் போதும் என்ற கீழ்த்தர நோக்கமும் இவைகளைச் 'சில்லரை'களாக்கி விடுகின்றன.

அய்யப்பன் கோவிலில் பாம்பு வந்துபோன செய்திக்கு அவ்வளவு பிரமாதமான முக்கியத்துவம் தரப்பட்டது. ஆனால் செய்தி வந்த இரு தினங்களுக்கெல்லாம் திருவாங்கூர் பிரதமரே அந்தச் செய்தி ஆதாரமற்றது என்று அறிக்கை விடுத்துள்ளார்.

அதேபோலவே, கோடம்பாக்கம் சாமியார் தான் குறிப்பிட்ட தினத்தன்று இந்த இலோகத்தை துறந்து பரலோகம் போய்வி— வில்லை! சாமியார் சாகப் போவதைக் காண மக்கள் கூடியிருந் தனராம் – ஆனால் அவர் குறிப்பிட்ட நள்ளிரவு கடநது வெகு நேரமாகியும் 'தேகவியோகம்' ஆகவில்லை! சீறியிருக்கின்றனர் மக்கள் 'தெகிடுதத்தக்காரா! ஜோதியில் ஐக்கியமாகப் போவதாகச் சொன்னாயே – ஏன் இன்னும் சமாதி அடையவில்லை!'' என்று சாமியாரை நோக்கிப் பாய்ந்திருக்கின்றனர். சாமியாரோ, ''ஆத்மாவை அய்யன்பால் வைத்து அசையாது மோனநிலை யிலிருப்பேன் என்று சொன்னேனேயொழிய, செத்துவிடப் போவதாகச் சொல்லவில்லையே'' என்று ஏதேதோ ஏமாற்று வார்த்தைகளைக் கொட்டியிருக்கிறார் – வேஷதாரியின் ரோசப் பேச்சில் மயங்கிய மக்களோ, கொதித்து எழுந்திருக்கின்றனர். அக்கோவணாண்டியை நோக்கி மக்களுக்கும் – சாமியாருக்கு மிடையே போலீசார் வந்ததால் நிலைமை கட்டுக்கடங்கியிருக்கிறது.

சபரிமலை அய்யப்பன் ஆலயத்தில் தீ பிடித்தற்குக் காரணம் அக்கினி தேவனின் கோபந்தான். ஏனெனில் எல்லா ஆலய விக்கிரகங்களும் கிழக்கு திசையை நோக்கியிருக்க இந்த ஆலய அய்யப்பன் தென்திசை நோக்கிப் பிரதிஷ்டை செய்யப் பட்டிருந்தது.

அய்யப்பன் கோவில் தீ மூட்டப்பட்டு, சிலைகள் சின்னாபின்னமாக்கப் பட்டதற்கு, இதுதான் காரணமாம்! யாரோ 'புண்யாத்மாக்கள்' கூறினவென்று பத்திரிகையாளர் பிரசுரித்திருக் கின்றனர். ஆனால் திருவாங்கூர் சர்க்காரோ விசேஷ போலீஸ் அதிகாரியை அனுப்பியிருக்கின்றனர், புலன் விசாரணைக்கு! அக்கினி தேவனின் கோபத்தால் ஆலயத்தில் தீ மூண்டதென்றால் 'சாமியே சரணம் அய்யப்பா' என்று சகலரும் தொழும் அய்யப்பனின் சக்தி 'அந்தர்த்யானமாகி' விட்டதோ என்று மக்கள் எண்ணமாட்டார்களா என்ற நினைப்புக்கூட வரவில்லை – செய்தியைச் சிங்காரமாகப் போட்டிருக்கின்றனர்!

அச்சுக் கோர்ப்பவர்கூடச் சிரித்திருப்பார், பிழை திருத்துபவர் 'இதென்னப்பா கேலிக்கூத்து' என்று எண்ணியிருப்பார்! அத்தகைய வேடிக்கையான விசித்திரச் செய்தி – எனினும் 'சப்–எடிட்டர்கள்'

தந்திருக்கின்றனர், ஆசிரியர் அகமகிழ்வார் நம் திறமை கண்டு என்ற சபல நினைவுடன்!

பத்திரிகை – மக்களின் அறிவுத் தூதுவன்! தன்செய்திக் கதிர்களால் அகில உலகத்தையும் அன்றாடம் மக்களுக்குத் தரும் அளவிலா பெருமை வாய்ந்தது. அதில் இதுபோன்ற விசித்திரச் செய்திகள்! பிறந்ததும் சாகும் குழந்தைபோல, இதுபோன்ற 'அதிர்வேட்டு'ச் செய்திகள் பிரசுரமாகிய நாலைந்து நாட்களுக்குள்ளேயே இவைகளின் 'குட்டு' சந்தி சிரிக்கிறது! எனினும், சஞ்சலமில்லாது பிரசுரிக்கின்றனர் – பத்திரிகையாளர்கள்.

மாத இதழ், வார இதழ், தின இதழ் இப்படிப் பலப்பல ஏடுகள் படுகுழியில் தள்ளும் பயங்கரப் பகுதிகளைப் போட்டு வாழ்வைப் பாழாக்கி மக்களைச் சோம்பேறிச் சோணாசலங்களாக, கொட்டாவிக் குப்பன்களாக, தூங்குமூஞ்சிகளாக, துயர பிம்பங்களாக ஆக்கும் திருச்சேவையில் ஈடுபட்டு வருகின்றன – பண ஆசையாலும், சுயநல எண்ணத்தாலும்!

இத்தகைய வேதனைக் காட்சி விரிவது கூடாது – நாட்டின் எதிர்காலத்தை இடர்மிகுந்ததாக்கும்.

மூடநம்பிக்கை தன் கோரத்தாண்டவம் நடத்த வழியமைத்துத் தரும்.

மக்கள் மனதை மாய்த்துச் சாய்க்கும் மடைமை ஒழிந்து மறுமலர்ச்சி தனது வேக முத்திரையைப் பொறித்துக் கொண்டிருக்கிறது – உலகில். மூடநம்பிக்கை, முறியடிக்கப்பட்டு, முன்னேற்ற எண்ணங்கள் முகிழத்துக்கொண்டு வருகின்றன – நாள்தோறும்.

இத்தகைய சூழ்நிலையை வளமாக்கி பாதையைச் செப்பனிடும் பொறுப்பு பத்திரிகையாளர்களுடையது.

கட்சிப்பற்றோ, கொள்கைக்கு தர்க்கமோ, மாச்சரிய மனப்பான்மையோ, 'சமுதாயம் முன்னேற வேண்டும்' என்ற குறிக்கோளுக்கு தடைக்கல்லாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது, பத்திரிகையாளர்களுக்கு.

பத்திரிகையாளர்கள் எழுத்துச் சிற்பிகள் மட்டுமல்ல, புதுயுகப் பூங்காவை நிர்மாணிக்கும் கொத்தர்கள்!

ஆகவே, கடமையும் பொறுப்பும் கலந்த அவர்கள் 'அற்ப' ஆசைக்காக கொள்கையில் வழுக்கி விழுவது கூடாது; அடாது; ஆகாது.

எனவே, மூட நம்பிக்கையை விரட்டியோட்டும் விவேகப் பணியில் ஈடுபடுங்கள். சமுதாயம் – சாக்கடையாக இருப்பது

மாறி சந்தனக்காடாக முன்வாருங்கள்! அறிவைக் கெடுக்கும் புரட்டுச் சோதிடமும் முரட்டுப் பிடிவாதமும் மூடவெறியும் நாசமாக்கப்பட முனைந்து வேலை செய்யுங்கள்.

உள்ளத்தில் வீரமும், எண்ணத்தில் தூய்மையும் உலராம லிருக்கட்டும். இயன்றவரை சமுதாயத்தை மறுமலர்ச்சிச் சோலையாக்க முனையுங்கள்.

"சூழ்நிலை சரியில்லை, ஆகவே இயலவில்லை" என்று எண்ணினால் ஒதுங்கி நில்லுங்கள் - ஓடிக்கொண்டிருக்கும் அறிவுப் பிரச்சார அருவிக்கு அணைபோடும் 'அபாய' வேலை களில் ஈடுபடாதீர்கள்.

இந்த வேண்டுகோளை நாட்டில் மலரும் எல்லாப் பத்திரிகையாளர்களுக்கும் அன்போடு சமர்ப்பிக்கிறோம் - ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறோம் முற்போக்கு எண்ணமும் இளமை இதயமும் கொண்ட வாலிபர்களை, ஆசிரியர் - துணை யாசிரியர்களாகக் கொண்ட தமிழகச் செல்வர்களை!

— திராவிடநாடு
02.07.1950

தேசியத் தாள்களின் தெகிடுதத்தம்

சென்னைத் திராவிடக் கழகத்தின் சார்பாக நகைச்சுவையரசர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு, சென்ற 24ந்தேதி நடந்த பாராட்டு விழாக் கூட்டத்தை யொட்டி ஒரு ஊர்வலம் நடைபெற்றதாகவும், அந்த ஊர்வலத்திற் கலந்து கொண்ட தொண்டர்களும் பொதுமக்களில் பலரும் ஊர்வலம் முடிந்து கலைந்து வரும்போது கொல்லவார் அக்கிரகாரம் தெரு விலுள்ள கணேசர் அலுமினியத் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள், முன் ஜாக்கிரதையுடன் எல்லாவிதமான ஆயுதங்களுடலுமிருந்து தாக்கிப் படுகாயப்படுத்தினர் என்பதாகவும், இக்கலவரத்தைத் தடுத்து மக்களைக் காப்பாற்ற வந்த போலீஸ் அதிகாரி களையும் தாக்கி அவர்களின் மோட்டார்க்காரையும் பழுதாக்கி ஏக அட்டகாசம் செய்தனர் என்பதாகவும், இந்தத் தொழிற்சாலை ஒரு வடநாட்டானுக்குச் சொந்தமானது என்பதாகவும் நாம் அறிகின்றோம். தொழிலாளத் தோழர்கள் வடநாட்டானுக்குச் சொந்தமான தொழிற்சாலையில் வேலை செய் கிறவர்கள் என்பதை அறிகிறபோது, அத்தோழர்கள் குழப்பமும் காலித்தனமும் செய்தது பற்றி யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

ஆனால் இந்த நாடகத்தைப் பற்றிக் காங்கிரஸ் பத்திரிகைகள் நடந்து கொண்டிருக்கும், யோக்கியதை யும் நாணயமும் இல்லாத போக்கைப் பற்றிப் பொது மக்கள் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். காங்கிரஸ் பத்திரிகைகள் என்பது

பார்ப்பனப் பத்திரிகைகள் – பார்ப்பன அடிமைப் பத்திரிகை களாகவே இருந்து வருகின்றன என்பது ஒரு பக்கமிருந்தாலும் அவர்கள் நடந்து கொள்ளும் நேர்மையற்ற காரியங்களுக்கு ஏதாவது எல்லை இருக்கிறதா? என்பதைப் பொது மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே இவற்றை எடுத்துக்காட்ட வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

சுதேசமித்திரன்:–

நேற்று மாலை ராபின்சன் பார்க்கில் நடந்த கூட்டத்திற்கு கலந்துகொள்ள சுமார் 1000 கருப்புச் சட்டையினர் ஊர்வலமாகச் சென்று கொண்டிருக்கையில் ஒரு கலவரம் நடந்தது. அவர்கள் எழுப்பிய கோஷங்களால் சிலர் ஆத்திரமடைந்ததால் அக்கலவரம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. கற்களும் சோடாபுட்டிகளும் உபயோகிக்கப்பட்டனவாம். 5 கறுப்புச் சட்டைக்காரர்களுக்கு காயம் ஏற்பட்டது. ஒருவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இருவரை போலீசார் கைது செய்துள்ளனர்.

மேற்படி கலவரம் வண்ணாரப்பேட்டையில் 5.30 மணிக்கு நடந்தது. கறுப்புச்சட்டை ஊர்வலத்தினர் கணேசர் அலுமினியத் தொழிலாளர் சங்கத்திற்கு முன் போகையில் அக் கூட்டத்தின் கோஷங்களை கேட்டு ஆத்திரமடைந்து சிலர் கறுப்புச் சட்டையினர் மீது கற்கள் எறிந்ததாகக்கூறப்படுகிறது. இரு தரப்பினரும் கற்கள், சோடாபுட்டிகள் முதலியவற்றை வீசிய தாகவும் சொல்லப்படுகிறது.

பந்தோபஸ்துக்காகச் சென்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ.ஏ.ஆர்.பாபாவுடைய கார் தாக்கப்பட்டு கண்ணாடியும் விளக்குகளும் உடைந்து விட்டன. உடைந்த கண்ணாடி துண்டால் இன்ஸ்பெக்டர் காலில் சிறிது காயம் ஏற்பட்டதாம்.

மணிகார் சத்திரம் தெருவின் ஒரு வீட்டிலிருந்து கற்கள் வீசியதாக ஏகாம்பரம், சின்னப்பன் என்னுமிருவரை போலீசார் கைது செய்துள்ளனர்.

கறுப்பு சட்டையினரில் சாய்பு தம்பிபாய் என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு ராயபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளார்.

போலீஸ் டெபுடி கமிஷனரும் உதவி கமிஷனரும் ஸ்தலத்தை பார்வையிட்டனர்.

என்று 25ந்தேதி பத்திரிகையில் 2வது பக்கத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது.

பாரததேவி:–

“காங்கிரசை ஆதரிப்பவர்களுக்கும் கருப்புச் சட்டைக்காரர்களுக்கும் கைகலப்பு; கற்கள் சோடாபுட்டி பறந்தன; 5 கருப்புச் சட்டைக்காரர்களுக்கு பலத்த காயம் .... காங்கிரஸ் எதிர்ப்பு கோஷம் போட்டுக்கொண்டு சிறுசிறு கோஷ்டிகளாகச் சென்றனர்! அலுமினியம் தொழிலாளர் யூனியன் கட்டிடத்தை அணுகும்போது அங்கிருந்த காங்கிரஸ் ஆதரவாளர்கள், காங்கிரஸ் எதிர்ப்புக் கோஷங்களை கேட்டு கோபமடைந்து அவர்களும் எதிர்க்கோஷம் போட்டனர். பேச்சுகள் முற்றவே கற்களும் சோடாபுட்டிகளும் வீசப்பட்டன. கருப்புச் சட்டைக்காரர்கள் மீது கற்களை வீசியெறிந்தனர். போலீஸ் இன்ஸ்பெக்டருக்குக் காயம் அவர் காருக்குச் சேதம். இருவர் கைதாகி ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

என்ற கருத்துக்களை மட்டும் 25ந் தேதி பத்திரிகையில் 5வது பக்கத்தில் வெளியிட்டிருக்கிறது.

இந்தியன் எக்ஸ்பிரஸ், தினசரி முதலிய பத்திரிகைகளும் இச்செய்தியை ‘மித்திரன்’, ‘தேவி’ முதலியவற்றைப் போலவே வெளிப்படுத்தியிருக்கின்றன என்றாலும் கருப்புச் சட்டையினரின் கோஷத்தை விவரிக்கும்போது பார்ப்பான் ஒழிக, மந்திரி ராஜன் ஒழிக என்று கோஷித்ததாக மற்றவைகளில் காணப்படாததை தினசரி வெளியிடுகிறது; கல், செங்கல், கண்ணாடித் துண்டு, ஒடுகள், சோடாபுட்டிகள் ஆகியவை இரண்டு கட்சியினராலும் தாராளமாக ஒரு மணி நேரம் வரை பரிமாறிக்கொள்ளப்பட்டது என்று வற்புறுத்திக் கூறுகிறது இந்தியன் எக்ஸ்பிரஸ்.

இந்து பத்திரிகை இச்செய்தியையே போடாமல் ஒரே இருட்டடிப்புச் செய்திருக்கிறது.

மெயில், 26 தேதி 3ம் பக்கம் 4ம் பத்தியின் கடைசி பாராவில் சங்கத்திலிருந்து தடிகள் கைப்பற்றப்பட்டன என்ற தலைப்பில்,

“ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கருப்புச் சட்டை ஊர்வலத்தில் தொண்டர்கள் மீது கல்லெறிந்த இடமாகிய பாத்திரத் தொழிலாளர் சங்கக் கட்டிடத்திலிருந்து ஏராளமான மூங்கில் தடிகளை வண்ணாரப்பேட்டை டிவிஷன் போலீசார் கைப்பற்றியதாகக் கூறப்படுகின்றது”

என்று வெளியிடுகிறது.

விடுதலை:–

ஊர்வலம், நடந்துவரும் வழியில், ஊர்வலத்தில் பற்பல பகுதியில் பெரியார் வாழ்க! திராவிட நாடு திராவிடருக்கே! வடநாட்டு, பாசிச பட்டேலிசம் ஒழிக! குதிரைப் பந்தயம்

ஒழிக! மார்வாடியே வெளியே போ! குஜராத்தியே வெளியே போ! சீக்கியனே வெளியே போ! பஞ்சாபியே வெளியே போ! உயிரைக் கொடுத்தேனும் திராவிட நாட்டை அடைந்தே தீருவோம்'' என்ற சுலோகங்களை மட்டும் கோஷித்துக்கொண்டு சென்றனர்.

ஊர்வலம் கலைந்து, பொதுகூட்டத்திற்கு வரும் வழியில் கொல்லவார் அக்ரஹாரம் தெருவில், கணேசர் அலுமினியப் பாக்டரி தொழிலாளர் சங்கம் இருக்கின்ற கட்டிடத்தின் ஓடுகள் போட்ட மேல்கூரையில் முன் ஏற்பாட்டின் படியே, சில காங்கிரஸ் கூலிகள் தயாராக உட்கார்ந்திருந்தனர். வழியே சென்று கொண்டிருந்த தோழர்களை ''படேலிசம் வாழ்க'' என்றும், ''திராவிடனே ஒழிக'', ''காந்திக்கு ஜே'' என்றும், கோஷித்துக்கொண்டும் கட்டியிருந்த துணிகளை விலக்கிக்கொண்டு நிர்வாண கோலத்தையும் காட்டினார்கள். ஓட்டின் மீதிருந்த அவர்களது நண்பர்கள் சரமாரியாக ஓடுகளை சும்மா தெருவில் சென்றுகொண்டிருந்த தோழர்கள் மீது வீசினர். அவ்வட்டத்து இன்ஸ்பெக்டரும், நாலைந்து போலீசாரும் எவ்வளவோ தடுத்தும், ஓட்டு வீச்சும், கல்வீச்சும், சோடாபாட்டில் வீச்சும், நிறுத்தப்பட முடியாமல் போய்விட்டது. இதற்குள் ஐம்பது காலிகள் நூறு காலிகளாகப் பெருகிவிட்டனர். போலீசாருக்கும், இன்ஸ்பெக்டருக்கும் காங்கிரஸ் காலிகளால் நல்ல கல்வீச்சுக் காயங்கள்; அதுமட்டுமல்ல இன்ஸ்பெக்டரின் காருக்குப் பலத்த சேதம். தன்மானத் திராவிடத் தோழர்கள் ஆறுபேருக்கு பலத்த காயம். நமது தோழர்களைப் பொறுத்துக்கொள்ளுமாறும் ஆத்திரப்பட வேண்டாமென்றும் தோழர் கோவிந்தசாமி வேண்டிக்கொண்டார். தோழர் தங்கவேலரும் தோழர்களை வேண்டிக்கொண்டு பொதுக்கூட்டத்திற்கு வற்புறுத்தி அழைத்து வந்து விட்டனர். கழகக் கொடிகள் பல காலிகளால் கிழிக்கப்பட்டன. காங்கிரஸ் காலிகள் செய்த அட்டகாசம் இரண்டு பர்லாங்கு அளவுக்கு தெருவெல்லாம் ஓடுகளும், கற்களும், சோடாபாட்டில் துண்டுகளும் சிதறிக் கிடந்தன.

போலீஸ் இன்ஸ்பெக்டர் பாபா, டெலிபோன் செய்து ரிசர்வ் பட்டாளம் வரும்படி ஏற்பாடு செய்துவிட்டு பல போலீசாருடன், அலுமினியம் தொழிலாளர் சங்கத்திற்குச் சென்று அங்கு வைத்திருந்த பெருவாரியான எண்ணிக்கையுள்ள தடிகள் ஆயுதங்களை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுவந்தார். மேலும் வேறொரு வீட்டின் மீதிருந்து கல்வீச்சு செய்த இரண்டு காலிகளை போலீசார் பிடித்து கைது செய்துள்ளனர். மற்றைய காலிகளைத் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

என்று 24ம் நாள் பத்திரிகையில் முதல் பக்கத்தில் இக்கலவரச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

1. தொழிற்சங்கத்தினர் முன்னேற்பாட்டின் மீது கருஞ் சட்டையினரைத் தாக்கினர்.

2. அதற்கு அடையாளமாகப் பல ஆயுதங்களைத் தொழிற் சங்கத்திலிருந்து கைப்பற்றினர்.

இது விடுதலை தரும் செய்தியின் சாராம்சம். இதை அப்படியே ஆதரிக்கிறது மெயில் பத்திரிகை. ஆனால் காங்கிரஸ் பத்திரிகைகளோ,

1. பார்ப்பான் ஒழிக! பனியா ஒழிக! மந்திரி ராஜன் ஒழிக! என்று கோஷித்த எதிர்ப்புக் கோஷங்கள் கலவரத்திற்குக் காரணம். இரு தரப்பினரும் ஆயுதங்கொண்டு பறிமாறிக் கொண்டார்கள் என்று கூறுகின்றன.

ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதை இவைகளில் ஒன்றுகூட வெளியிடவே இல்லை.

கருப்புச் சட்டையினரின் கோஷங்கள் ஆத்திரத்தை யூட்டி அதனால் கலவரம் விளைந்தது என்றால், அதாவது எதிர்பாராத நிலையில் கலவரம் நடந்தது என்றால் சங்கத்தில் ஆயுதங்களிருந்து அவைகள் போலீசாரால் கைப்பற்றப்பட்டதற்குக் காரணம் என்ன? எப்பொழுதுமே அங்கு ஆயுதங்களிருக்குமா? அதைக் கையாளுவதற்காக ஐம்பது நூறு ஆசாமிகள் அங்கேயே யிருப்பார்களா? அப்படியானால் அவர்களுக்கு அதே தொழிலா?

காங்கிரஸ் பத்திரிகைகள், தங்களின் ஆட்சி இப்பொழுது நடைபெற்று வருகின்றது; அதை எதிர்ப்பவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்களே என்ற ஒரே முடிவிற்கு வந்து கட்டுப்பாடாக இக்காரியத்தைச் செய்திருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டவே இங்கு பத்திரிகைகளின் செய்திகளை விளக்கமாக எடுத்துக் காட்டினோம்.

நாட்டிலுள்ள பொதுமக்கள் கருஞ்சட்டையினரை வெறுக்க வேண்டும். அப்படி வெறுத்தால்தான் தங்களுக்கு வாழ்வு என்று உறுதியாய் நம்புகின்றன காங்கிரஸ் ஏடுகள்.

கருஞ்சட்டையினர் கலவரத்தை எழுப்பியதினால் அதாவது ஆத்திரத்தை உண்டுபண்ணத்தக்க சுலோகங்களை கோஷித்ததால் கலவரம் விளைந்தது என்று ஒரு முகமாக மக்களுக்குக் கூறி, அரசாங்கமும் அவ்வாறே இதை ஏற்கவேண்டும் என்பது இவை களின் கருத்தாகும் என்று இவைகளிலிருந்து எவரும் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம்.

பெரியாரவர்கள் எந்த மாநாட்டில் கலந்துகொண்டாலும் எந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டாலும் முதலாவதாகவும்

முக்கியமாகவும், "ஒழிக கோஷங்களை ஒலிக்க வேண்டாம்" என்றே வற்புறுத்தி வருகின்றார்கள் என்பதையும் அந்த வற்புறுத்தலுக்கிணங்கவே தொண்டர்கள் நடந்து வருகிறார்கள் என்பதையும் தப்பித்தவறி யாரேனும் ஒருவரிருவர் எங்கேனும் கோஷித்தாலும் உடனே கோபங்கொண்டு ஊர்வலத்தில் கலந்துகொள்ள விருப்பமின்றி, காரைவிட்டு இறங்க முயலு வதையும், தொண்டர்கள் தங்கள் செயலுக்கு வெட்கப்பட்டு உடனே மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, இனி ஒலிக்கமாட்டோம் என்று உறுதிகூறி அவ்வாறே நடந்து வருவதையும் இந்த நேரத்தில் நாம் வற்புறுத்திக்கூற ஆசைப்படுகின்றோம்.

மேலும் எங்காவது கலவரம் குழப்பம் என்ற பேச்சு வந்தாலும், அவ்வப்போது இயக்கத் தோழர்களுக்கு, நீங்களும் கலவரத்தில் இறங்கிவிடாதீர்கள் என்றும், நீங்களும் அவர்களைப் போலவே மூடத்தனமாய் அயோக்கிய முறையில் நடந்து கொண்டால் திராவிட இனத்திற்குத்தான் நஷ்டம் என்றும், உங்களோடு கலவரத் திற்கு வருகின்றவர்கள், பார்ப்பனர்களால் தூண்டிவிடப்பட்ட நம்மவர்களே தவிரப் பார்ப்பனர்கள் அல்ல என்றும் மற்றவர்கள் செய்யும் காலித்தனத்தைப் போல் நீங்களும் செய்ய விரும்பினால் உங்களுக்குத் திராவிடர் கழகத்தில் இடமில்லை என்றும் வற்புறுத்திக் கூறி வந்திருக்கிறார்கள் என்பதையும் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறோம்.

விடுதலையும் மெயிலும் கூறுவதுபோல முன்னேற்பாடாக இக்காரியம் நடக்கவில்லை என்றே வைத்துக்கொள்ளுவோம். கருப்புச் சட்டையினர் பார்ப்பான் ஒழிக! பனியா ஒழிக! என்று கோஷித்ததாகவே வைத்துக் கொள்ளுவோம். பார்ப்பானையும் பனியாவையும் ஒழிக என்று கூறியதினால் ஆத்திரம் உண்டாயிற்று என்றால் ஆத்திரம் யாருக்கு உண்டாக வேண்டும்? பார்ப்பானுக்கோ பனியாவுக்கோ ஆத்திரமுண்டாகி அவர்கள் கலவரஞ் செய்தார்கள் என்றல்லவா நடப்பு இருக்க வேண்டும்? அலுமீனியத் தொழிலாளர்களுக்கு இக்கோஷங்கள் ஏன் ஆத்திரத்தை யுண்டாக்க வேண்டும்? ஆத்திரம் அடைந் தவர்கள் தொழிலாளர்கள். அவர்கள் ஆயுதங்களைச் சங்கத்தில் குவித்து வைத்திருந்தார்கள் என்ற இவைகளைப் பொது மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

'சங்கத்தில் சில தொழிலாளர்கள் இருந்தனர். ஊர்வலம் கலைந்து சிலர் அவ்வழியாக வந்தனர். ஒருவருக்கொருவர் எதிர்ப்புக் கோஷங்களைக் கோஷித்து முடிவில் கை கலந்தனர். கைகலப்பில் கல், செங்கல், கழி, கண்ணாடித் துண்டு, ஓடு, சோடாபுட்டி முதலியவைகள் இருதரப்பிலும் கையாளப்பட்டன" இது காங்கிரஸ் பத்திரிகைகள் கூறும் சாராம்சம்.

இவைகள் கூறுகின்ற செய்திப்படியே தொழிற்சங்க தொழிலாளர் எண்ணிக்கையைக் காட்டிலும் தொண்டர்கள் பொதுமக்கள் எண்ணிக்கை அதிகமென்றே தெரிகின்றது. இந் நிலையில் இரு கட்சியாரும் ஆயுதங்களைப் பரிமாறிக் கொண்டார்கள் என்று கூறுவதை உண்மையாகக் கொண்டால், காலிகளில் எத்தனை பேருக்குக் காயம்? என்ற கேள்விக்கு இவைகள் ஒன்றுமே சொல்லவில்லை. கருப்புச்சட்டையினர் அதிகமான ஆட்களாக இருந்தும், காலிகளைப் போலவே ஆயுதங்களைக் கொண்டு தாக்கியும்கூட, தொழிலாளர்களுக்குக் காயமுண்டாகவில்லை; ஆனால் கருப்புச் சட்டையினரில் ஐந்து பேருக்குப் படுகாயம், பலபேருக்குச் சிறு காயம் என்றால், ஒன்று கருஞ்சட்டையினர் தாக்கிய குறிகள் எல்லாம் தவறிப் போயிருக்க வேண்டும். அல்லது புராணங்களில் சொல்லப்படுவது போல தொழிலாளரின் உடம்புகள் காயமே படாத இரும்புத் தேகங்களாயிருக்க வேண்டும் என்ற உண்மையையும் பொதுமக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

வடநாட்டானின் கூலியாட்களாகப் பார்ப்பனீயத்தின் கையாட்களாக இருக்கும் சில திராவிடத் தோழர்களுக்கு பணத்தாசை காட்டி அவர்களின் அறிவை மயக்கிய காரணத்தால் நம் உடன்பிறப்பான திராவிடர்கள் என்ற உண்மையையும் கண்டுகொள்ள முடியாதவாறு, வெறுப்பு வார்த்தைகள் என்ற திரையைப் போட்டுக் கண்ணை மறைத்துவிட்டதினாலேயே இந்த அநியாயம் நடந்திருக்கிறதென்றும், இதற்கு காங்கிரஸ் ஆட்சி நடப்பதினால் நாம் என்ன செய்தாலும் நமக்குத் தண்டனை கிடைக்கமாட்டாது என்ற நம்பிக்கை மிகப் பலமாக உண்டாக்கப்பட்டிருக்கின்ற தென்றும், அந்நம்பிக்கையை வளர்க்கும் முறையிலேயே பத்திரிகைகளின் செய்திகள் காணப்படுகின்றன என்றும், காங்கிரஸ் பத்திரிகைகளிலிருந்தே நாம் தெளிவாக அறிகிறோம். இதைச் சிந்தனைத் திறமுடைய பொதுமக்களும் அவ்வாறே அறிவார்கள்.

நாம் காங்கிரஸ் பத்திரிகைகளுக்குக் கூறுகிறோம். நடக்கின்ற ஆட்சியில் உங்களுக்கு எந்தெந்த விதத்தில் சலுகை காட்ட வேண்டுமோ, அவ்வாறெல்லாம் சலுகை காட்டப்படுகிறது. உங்களுக்குப் பத்திரிகை கோட்டாக்களையும் கொடுத்து நீங்கள் பகற் கொள்ளையடித்துக் கொண்டிருப்பதை சர்க்கார் பார்த்துக் கொண்டிருக்கிறது. காரணம் உங்கள் கட்சி சர்க்கார். அதற்கு நன்றியறிதலாக அதாவது நீங்கள் அடைந்துவரும் நன்மைகளுக்குப் பிரதியுபகாரமாக நாணயத்தையும் யோக்கியதையையும் கைவிட்டு, காங்கிரஸ் சர்க்காரையும் அதற்கு ஆதரவான பனியாக் கொள்ளையையும் பார்ப்பனீயச் சுரண்டலையும் கண்ணை

மூடிக்கொண்டு ஆதரிக்கின்றது; மறுத்துப் பேசுபவர்களை, மக்கள் வெறுப்படையும் படியாகத் துவேஷப் பிரசாரம் செய்வது, என்கிற போக்கை வளர்க்கிறீர்களே, இப்போக்கு நல்லதல்ல என்று கூறுகின்றோம். இப்போக்கினால் மற்ற நாடுகளில் உண்டான அழிவுகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லி வருகின்ற நீங்கள், இதை உணராமல் இப்போக்கைக் கையாளுவது நல்லதா? இப்போக்கினால் இந்த நாட்டில் பெருங் கலவரத்திற்கு – பெரிய அழிவிற்கு விதை தூவி வருகின்றீர்கள். இதைத் தயவு செய்து உணருவீர்களா!

பாசிசப் பட்டேலாட்சிக்கும் கூறுகிறோம். ஐயா! ஆட்சியாளர்களே! திராவிடக் கழகத்தின் நடவடிக்கைகளை எப்படி எப்படி ஒடுக்க வேண்டுமோ அப்படியெல்லாம் ஒடுக்கி வருகின்றீர்கள். திராவிடத் தோழர்கள் என்றால் அவர்கள் சீரழிக்கப்பட வேண்டுமென்று எண்ணுகிறீர்கள். கலவரச் செயலுக்கும் காலித்தனத்திற்கும் பேர்போன கம்யூனிஸ்ட் காங்கரஸ்காரர்களையெல்லாம், சிறையிலிருந்து விடுதலை செய்கிறீர்கள். அதே நேரத்தில், அதே காரணத்திற்காக என்று கூறி உங்களால் சிறையில் அடைக்கப்பட்டவர்களை இன்னும் உள்ளுக்குள்ளேயே வைத்துத் தொல்லை தருகிறீர்கள். திராவிடர் கூட்டத்தை – அதன் நடவடிக்கைகளைத் தடுத்துக் கலவரம் செய்யும் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் காலிகளைக் குறித்துப் பொது மக்கள் கிளர்ச்சி என்று ஒரே புளுகாய் புளுகுகிறீர்கள். உலகத்தில் சில நாடுகளில் உரிமைப் போரை ஒடுக்குவதற்கு ராணுவம் போதாமல் ஜெயிலிருக்கும் கைதிகளையெல்லாம் கட்டவிழ்த்துப் பொதுமக்கள் மேல் சில சர்க்கார் ஏவியிருக்கிறார்கள். ஏவிய சர்க்கார் இறுதியில் அழிந்தொழிந்து பூண்டற்றுப் போனது என்பதை நீங்களும் படித்திருக்கிறீர்கள். அப்படியிருந்தும் தாங்கள் இருந்து ஆட்சி புரியும் தலைநகரிலேயே இந்த அக்கிரமம் இப்போது நடந்திருக்கின்றன. மற்ற இடங்களில் நடந்த போதெல்லாம் திராவிடக் கழகத்தின் மீதே குற்றத்தைச் சுமத்தி, பின் வாய்மூடி மௌனிகளாக இருந்து விட்டீர்கள். இப்பொழுது என்ன செய்யப்போகிறீர்கள்? பழைய பாடங்களைத்தான் திருப்பிப் படிக்கப்போகின்றீர்களா? இவ்வாறு நீங்கள் படித்துவரும் போக்கு கடைசியில் உங்களுக்கே தொல்லையை, துயரத்தை, அழிவை நிச்சயமாகத் தந்துவிடும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

காயமடைந்த நம் தோழர்களுக்குக் கூறுகின்றோம். நீங்கள் ஏன் திராவிடராகப் பிறந்தீர்கள்? பிறந்திருந்தாலும் மற்றவர்களைப் போலில்லாமல் ஏன் திராவிட இன உணர்ச்சியைக் கொண்டீர்கள்? இந்தப் பெரிய குற்றத்தைச் செய்த நீங்கள் இப்பொழுது கிடைத்திருக்கிற வெகுமதியைத் தாராளமாக வரவேற்றுக்கொள்ள

வேண்டுமே தவிர நீங்கள் வருந்துவதோ அதற்கு மற்றவர்கள் அநுதாபம் கூறுவதோ, இந்தக் காங்கிரஸ் ராமராஜ்ஜியமான ஆபத்தான சுயராஜ்ஜியத்தின் அங்கீகரிக்கப்படாத பெரும் பிழையாகும்.

இன்னும் எத்தனை நாளைக்கு, இந்த அக்கிரம அநியாயப் போக்கையும், மானஈனமற்ற நடத்தையையும் அநுமதிக்கப் போகின்றாய்? என்பதுதான் கடைசியாகத் திராவிட இனத்தை நாம் கேட்டுக் கொள்ளும் கேள்வியாகும்.

— குடிஅரசு

29.11.1947

மித்திரன் தலையங்கம் – சித்திரவிளக்கம்

ஒரு தேச சமுதாயத்துள்ளேயே மிக அபத்தமான வாதங்களின் பேரில் பிளவுகள் பெருக்கப்படுவதைப் பார்க்கிறோம். இதற்கு அடிப்படையாகவுள்ள மௌடீகத்தைக் களைந்தெறிந்து, மக்களின் சிந்தனையை நேரான வழியில் திருப்புவதில் எழுத்தாளர்களுக்குள்ள சக்தியும், பொறுப்பும் மகத்தானவை. ஆனால் இந்த சக்தியை துஷ்பிரயோகம் செய்யும் ஈன புத்தி படைத்த சிலரும் எழுத்தாளர் கூட்டத்தில் பதுங்கியிருப்பது பகிரங்க ரகசியம்.''

தில்லையிலே நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டைப் பற்றி தலையங்கம் எழுதவந்த சுதேசமித்திரன் ஏடு, ஏப்ரல் 17ம் நாள் இதழில் மேலே காணும் சத்தான கருத்துக்களை முத்தான எழுத்துக்களால் கோர்த்து அளித்திருக்கிறது. சுதேசமித்திரனா இத்தகைய அரிய கருத்துக்களை–மறுக்க முடியாத உண்மைகளை வழங்கியிருக்கிறது என்று கேட்கத் தோன்றும்! ஆமாம் தோழர்களே, ஆமாம்! அக்கிரகாரத்தின் கேடயம் – அகில இந்திய பிராமணீயக்குரல்– ஆரியகான சபாவின் ஆலவட்டம்–என்றெல்லாம் புகழப்படும் மித்திரன் ஏடுதான் இது போலத் தீட்டியிருக்கிறது.

தில்லையிலே மாநாடு நடந்தது! முல்லையிலே சிரித்த – தமிழ்க் கொல்லையிலே வந்து –வசைபாடித் திரும்பும் வடக்கத்தி இசைவாணர் நேரு, மாநாட்டைத் திறந்து வைத்தார். எழுத்தாளரே இந்த அவனியின் காவலர்–நாவலர்–பாவலர் என்றெல்லாம் வர்ணித்தனர்.

ஒரு நாட்டை வளப்படுத்தும் ஆற்றலும் வகைப்படுத்தும் திறமையும் எழுத்தாளருக்கு உண்டு எனப்போற்றினர்– புகழ்ந்தனர். அதன் தொடர்ச்சியாகத்தான் மித்திரன் தலையங்கமும் எழுதியிருக்கிறது.

ஒரு தேச சமுதாயத்தில் பிளவுகள் பெருக்கப்படுகின்றன என்ற விஷயத்தை எவ்வளவு வேதனையோடு வெளியிட்டிருக்கிறது மித்திரன்! அரசர்– அந்தணர்–வணிகர்– வேளாளர் என தொழில் முறையிலே பிரிக்கப்பட்டாலும் சமுதாயத்திலே அனைவரும் சமத்துவமுள்ள மனிதர்களே என்ற உண்மையை ஜகமதிரக் கூறுகிற திருக்குறள் நம்மிடத்திலே ஆட்சி செய்தது ஒரு காலத்திலே! வள்ளுவன் என்ற வாய்மையும் வலிமையும் கொண்ட எழுத்து வேந்தன், தெள்ளு தமிழில் தீட்டித் தந்த நீதிப் பெட்டகம் குறள். அந்தக் குறளை ஒடுக்கிடும் விதத்திலே எழுத்தாணி பிடித்தோரின் அணி வகுப்புத்தான் மித்திரன் ஆசிரியர் வருத்தமுடன் கூறுகிறாரே; சமுதாயத்திலே பிளவுகள் பெருக்கப்பட்டிருக்கின்றன என்று; அந்தப் பிளவுகளுக்குக் காரணமாக இருந்த அணிவகுப்பு! ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றே வாழ்ந்த பெரிய சமுதாயத்தினிடையே நச்சு



"எழுத்தாளர்களுக்குள்ள சக்தியும், பொறுப்பும் மகத்தானவை. ஆனால் இந்த சக்தியை துஷ்பிரயோகம் செய்யும் ஈன புத்தி படைத்த சிலரும் எழுத்தாளர் கூட்டத்தில் பதுங்கியிருப்பது பகிரங்க ரகசியம்".

– மித்திரன் ஏப். 17

விதைகளைத் தூவி, கோடிக்கணக்கிலே தெய்வங்களைக் குவித்து சாதிகளை இறைத்து, பிளவுகளைப் பெருக்க அந்த எழுத்தாளர் அணிவகுப்புத்தான் காரணமாயிருந்தது.

பிராமணர்–க்ஷத்திரியர்–வைசியர்–சூத்திரர்–அவர்களின் கிளைகள்–கிளைகளில் பிரிவுகள் என்ற நிலையை உண்டுபண்ணி– அதற்கெல்லாம் ஆண்டவனை இழுத்து வந்து நிறுத்தி ஆகமங்களை வேதங்களை கிறுக்கிக் காட்டி பெரும் குற்றம் புரிந்தனர் அந்த எழுத்தாளர்கள். திருவிளையாடல் புரிவதிலே வல்லவர் திரிபுரம் எரித்தவர் என்று ஒருவர் திருவிளையாடல் புராணம் எழுதினார் – அதிலே தாயைத் தாரமாக்கி, தந்தையைக் கொன்ற மாபாவிக்கு மதுரை சொக்கநாதர் காட்சி தந்து மன்னித்தார் என்று ஒரு திருவிளையாடலைத் தீட்டினார். இயற்பகையின் இல்லக் கிழத்தியையே இடபமேறும் இறைவன் பள்ளியறைக்கு கூப்பிட்டான் என இன்னொரு எழுத்தாளர் காவியம் வரைந்தார். சிதம்பரம் தீக்ஷதர் அனைவருமே கடவுளின் அருள் பெற்றவர்கள். – தில்லை மூவாயிரவர் என தெய்வப் பிரிவு ஒன்றுண்டு – என்பதாக இன்னொருவரின் எழுத்தாணி கூறியது.

“தேச சமுதாயத்திலே ஏற்படும் பிளவுகளுக்கு அடிப்படை, மௌடீகம்தான்” என்று சுதேசமித்திரன் குறிப்பிடுகிறது முற்றிலும் உண்மை. அந்த மௌடீகத்தின் விளைவால்தான் சமுதாயம் பலவாறாகப் பிரிந்து சிதைந்து கிடக்கிறது. பாரத, ராமாயண, கந்த லீலாக்கள் நாட்டிலே மௌடீகத்தைத்தான் பரப்புகின்றன. அந்த மௌடீகந்தான் சமுதாயத்தின் பிளவுகளுக்கு அடிப்படை யென்கிறார் மித்திரன் ஆசிரியர். நமது கருத்தோடு ஒத்துவரும் அவருக்கு அறிவுலகத்தின் சார்பாக பாராட்டுக்களை தெரிவிக்க வேண்டியதுதான். எழுத்தாளன்தான் ஒரு நாட்டை சிருஷ்டிக் கிறான், ஒரு சமுதாயத்தை உருவாக்குகிறான் என்பதை யாரும் மறுக்க முடியாது. சங்க காலத்திலே தமிழகத்தின் எழுத்தாளர்கள் எழுதிக் குவித்த ஓவியங்கள் தான் தமிழருக்குப் பெரும் சொத்தாகயிருக்கிறது. அந்தச் சொத்தைச் சூரையாட எண்ணிய சூதர்கள்தான் சொத்தை இலக்கியங்களை சொக்க வைக்கும் வித்தை காட்டி தமிழகத்தில் நுழைத்தனர். அப்படி வந்த அணிவகுப்பிலேதான், வியாசர்; மனு போன்றவர்களும், இன்றைய தினம் அவர்களின் நிழல்களாக வாழ்ந்து வருகிற வஞ்சகர்களும் இருந்தார்கள்– இப்போதும் இருக்கிறார்கள். மக்களின் சிந்தனையை நேரான வழியில் திருப்பாமல், சொர்க்க மென்றும் நரகமென்றும், தேவலோகம், தபோலோகம் என்றும் பற்பல அற்புத வழிகளிலே திருப்பிய தீயவர்கள் அந்த எழுத்தாளர்கள். மக்கள் சமுதாயமென்ற யானையைக் கீழே தள்ள மதப் படுகுழியமைத்து அதைப் புராண இலக்கியமெனும் இலை சருகுகளால் மறைத்து நின்ற

இழிதகையோர் அந்தப் பேனா ஏந்திகள். அத்தகையவர்களைத்தான் மித்திரனார், ஈனபுத்தி படைத்தவர்கள் என்று குறிப்பிடுகிறார். ஆமாம், முழுவதும் உண்மை! மௌடீக அடிப்படையிலே வளரும் சமுதாயப் பிளவுகளை அதிகமாக்கி, மக்களின் சிந்தனையை நேரான வழியில் செலுத்தாமல் துஷ்பிரயோகம் செய்யும் எழுத்தாளர்கள் ஈனபுத்தி படைத்தவர்கள் என்பதுதான் சுதேசமித்திரன் தலையங்கம் தீட்டியவரின் குற்றச்சாட்டு! குற்றச்சாட்டுடன் முடிக்கவில்லை அவர்! அந்த ஈனபுத்தி படைத்த சிலரும் எழுத்தாளர் கூட்டத்தில் பதுங்கியிருக்கிறார்கள் என்று எச்சரிக்கை செய்கிறார். அவரது எச்சரிக்கையைத்தான் இந்த இதழ் கேலிச்சித்திரம் விளக்கிக் காட்டுகிறது.

– முரசொலி

23.04.1954

திராவிட ஓவியம்

– சாதுவன்

திராவிடர்க்கு எனத் தனித் திராவிட ஓவியம் என்று ஒன்று உண்டா? அல்லது எல்லாம் வட நாட்டின் வழி வந்தவைதாமா? என்ற ஐயப்பாட்டிற்குத் தெளிவு காண மாட்டாமல் திகைக்கும் நிலையில், சிலர், ஏன், பலர், இன்னமும் இந்த நாட்டில் இருந்து வருகின்றனர்.

அந்த ஐயப்பாட்டிற்குத் தெளிவு காண முயலுவது, நாம் உண்மையை அறியவும், ஊக்கத்தைப் பெறவும், உயர்வை அடையவும் வழி செய்வதாக அமையக்கூடும்.

உலக ஓவியத்தை இரண்டு வகையாகப் பிரிக்கின்றனர் கலை வல்லுநர்கள். அவை 1. மேற்கத்திய ஓவியம் (Western Art) ; 2. கிழக்கத்திய ஓவியம் (Eastern Art) ஆகும்.

மேற்கத்திய ஓவியம் (Western Art) நிழலொளிகளாலேயே (Light and Shading) வரையப்பட்டிருக்கும். இதைப் பின்பற்றியவை மேலைநாடுகள்.

கிழக்கத்திய ஓவியம் (Eastern Art) வெளிக்கோடுகளாலேயே (Outline Drawing) வரையப்பட்டிருக்கும். இதைப் பின்பற்றியவை கீழைநாடுகள்.

கிழக்கத்திய ஓவியத்திலும் சீனா, சப்பான், பர்மா, இந்தியா போன்ற பல உட்பிரிவுகள் உண்டு.

இந்திய ஓவியத்தை வடநாட்டு ஓவியம், தென்னாட்டுத் திராவிட ஓவியம் என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

இரசபுத்திர – வங்க – மொகலாய ஓவியங்களும், சாஞ்சி – சிற்பங்களும் வட இந்திய ஓவியத்தைச் சார்ந்தவையாகும்.

சித்தன்ன வாசல் – தஞ்சைப் பெரிய கோயில் ஓவியங்களும், மாமல்லபுரம் – அமராவதி – ஆவுடையார் கோயில் சிற்பங்களும் தென்னாட்டுத் திராவிட ஓவியத்தைச் சேர்ந்தவையாகும்.

வடநாட்டு ஓவியத்தில் எடுத்துக்காட்டாக வங்க ஓவியத்தை எடுத்துக்கொண்டு அதன் சில சிறு குறிப்புக்களைக் காணலாம்.

கண்கள்: மூடிய, ஆனால் அரை விழிப்போடு கூடிய நிலை எப்போதும் – சிரிக்கும் போதும், சினங்கொள்ளும் போதும், அழும்போதும் இருக்கும்.

கைகள்: நீண்டு மிக மெல்லியனவாகக் காணப்படும்.

கை விரல்கள்: ஊசிகளைப்போல் நீண்டு கூர்மையாக வரையப்பட்டிருக்கும்.

உடல்: மெல்லியதாக நீண்டு (காச நோய் பிடித்ததைப் போன்று) உள்ள தோற்றம்.

இடுப்பு: உடுக்கையைவிட மிக மெல்லியதாக இருக்கும்.

கால்கள்: குறிப்பிட்ட அளவைவிட நீண்டும், மிக மெல்லிய விரல்களைக் கொண்டும் இருக்கும். சுருங்கக் கூறினால் சரியான அளவோடு உறுப்புக்கள் (Correct Anatomy Drawing) அமைந்திருக்கா.

நடை: உறுப்பு அசைவுகளில் அளவுக்கு மீறிய உண்மை யல்லாத வளைவுகள், நெளிவுகள் இருக்கும்.

உடை: இரவிக்கை போடப்படாமல் மார்பகங்களைப் பெரும்பாலும் அப்படியே காட்டும் நிலை. புடவை இடுப்பில் சற்று கீழே கட்டப்பட்டு, வயிற்றில் பாதி தெரிந்து, உடல் சரியாக மூடப்படாமல், தலையில் முக்காடிட்டு, உறுப்புக்கள் அப்படியே தெரியும் நிலை.

நடிப்புக்கள்: காமநிர்வாண பாவனைகள் இருக்கும். அரை நிர்வாணமாவது இல்லாமல் இருக்கும் ஓவியமே இருக்காது.

இந்த வங்க ஓவியம் போன்றேதான், பிற வடநாட்டு ஓவியங்களெல்லாம் பெரும்பாலும் ஒத்தும், சிறிது சிறிது மட்டும் ஒன்றிற்கொன்று வேறுபட்டும் விளங்கும்.

மொகலாய ஓவியங்களில் எகிப்திய – அராபிய – பாரசீக – ஆப்கனிஸ்தான கட்டிடக்கலையின் (Architecture) சாயலையும், பாலைவனம் – ஈச்சமரம் – பிறைமதி – ஒட்டகம் ஆகியவற்றையும்

காணலாம். தாஜ்மகால், குதுப்மினார் போன்ற கட்டிடங்கள் மொகலாய ஓவியத்தின் அடிப்படையில் தோன்றியவையாகும்.

ரஜபுத்திர – வங்க ஓவியங்களில் மொகலாய – திராவிட ஓவியங்களின் சாயல் பெரிதும் கலந்து படிந்திருப்பதைக் காணலாம்.

தென்னாட்டுத் திராவிட ஓவியம் உண்மைக்குப் புறம்பான கற்பனை நிலையையே முழுக்க முழுக்கக் காட்டிக் கொண்டிராமல், உள்ளதை உள்ளவாறு எடுத்தியம்பும் தன்மை வாய்ந்ததாக இருக்கும். திராவிட ஓவியத்தில் காமத்தைவிட காதல்தான் மிகவாக ஆட்சி செய்யும்.

வடநாட்டு ஓவியங்களில் வட நாட்டில் காணப்படும் மரங்கள், இலைகள், காய்கள், பூக்கள், பறவைகள், விலங்குகள், இயற்கைத் தோற்றங்கள் காணப்படும். அவை போன்றே தென்னாட்டு ஓவியங்களில் தென்னாடு பற்றியவை சிறப்பாகக் காணப்பெறும். தென்னாட்டுச் சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றில் வடநாட்டு இதிகாசம், புராணம் ஆகியவற்றின் கருத்துக்கள் குடிபுகுந்திருந்தாலும், அவ்வோவியங்கள் – சிற்பங்கள் திராவிட ஓவியம் – சிற்பம் ஆகியவற்றின் தனிப் பண்புகளைத் தான் பெரும்பாலும் கொண்டிருக்கும். மதத்துறையில் ஆதிக்கம் செலுத்திய வடநாட்டு இதிகாசப் புராணக் கருத்துக்கள், திராவிட ஓவியத்துறையிலும் புகுந்துவிட்டன என்பதுதான் அதற்கு முக்கிய காரணமாகும்.

மாமல்லபுரம், காஞ்சி, சித்தன்னவாசல், அம்பி, நாகார்ஜுன கொண்டா போன்ற இடங்களில் வரைந்த ஓவியங்களும், செதுக்கிய சிற்பங்களும் இராமாயணம், பாரதம் போன்ற புராணக் கருத்துக்களைக் கொண்டிருத்தலால், திராவிடர்க்கென்று தனி ஓவியக்கலை இருந்திருக்க முடியாதோ என்ற ஐயப்பாடு சிலரிடத்து எழக் காரணமாகிறது. வள்ளுவனாரின் குறளின் கருத்துக்களும், அகநானூறு– புறநானூறு – நற்றிணை – ஐங்குறுநூறு – பதிற்றுப்பத்து – பத்துப்பாட்டு – சிலப்பதிகாரம் – மணிமேகலை ஆகியவற்றின் காட்சிகளும், சேர–சோழ–பாண்டிய மன்னர்களின் வீரச் செயல்களும், வெற்றி வரலாறுகளும் ஓவியங்களாகவும், சிற்பங்களாகவும் சமைத்துத் தந்திருக்கப்பட்டிருக்குமேயானால், திராவிட ஓவியத்தின் தனிச் சிறப்பைப் பலரால் எளிதில் புரிந்துகொண்டிருக்க முடியும். திராவிட ஓவியம் என்னும் பொற்கிண்ணத்தில் வடநாட்டவர் கருத்துக்கள் என்னும் பாலை வார்த்துக் கொடுக்க இடைக் காலத் திராவிட ஓவியர்களும், சிற்பிகளும் முயன்று விட்டதால், அந்தப் பாலையே பருகிக் கொண்டிருக்கும் திராவிடர்கள் பொற்கிண்ணம்

திராவிடருடையதுதான் என்பதை அறிந்துகொள்ள மாட்டாமல், அதுவும் வடவருடையதோ என்று எண்ணி மயங்குகின்றனர்.

திராவிடர்கள் முதன்முதலில் மட்குடத்தில்தான் ஓவியம் வரையக் கற்றுக்கொண்டனர். மொகொஞ்சதரோ, அரப்பா ஆகிய இடங்களிலும், தமிழகத்தின் பல இடங்களிலும் அகழ்ந்து எடுக்கப்பட்ட புதை பொருள்களில் மட்குடங்கள் முக்கியமானவை யாகும். அவைகளில் வரையப்பட்டிருக்கும் ஓவியங்கள், திராவிட ஓவியத்தின் தனித்தன்மையை மட்டுமல்லாமல், தனிச் சிறப்பையும் எடுத்துக் காட்டுவனவாக அமைந்திருக்கின்றன. சுட்டபானையைப் பயன்படுத்த முதன்முதல் திராவிடர்கள்தான் முற்பட்டார்கள் என்றும், அதில் சோற்றை வேக வைத்து உணவு ஆக்கிக் கொள்ள அவர்களே முனைந்தார்கள் என்றும், அப்பானையை அழகு படுத்தும் முறையில் அதன்மீது ஓவியம் வரையக் கற்றுக் கொண்டனர் என்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். திராவிடர்க்குப் பிறகுதான் மற்ற நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள் சுட்ட பானையைப் பயன்படுத்தத் தொடங்கினர் என்றும் அவர்கள் கூறுவர். வடநாட்டு ஆரியர்கள் பச்சைக் காய் – கறி – கிழங்கு – இறைச்சி ஆகியவற்றை வேக வைக்காமல் அப்படியே தின்றனர் என்றும், அவர்கள் மிக நீண்ட காலம் வரையில் சமைக்கவோ, மட்குடத்தைப் பயன்படுத்தவோ கற்றுக் கொள்ள வில்லை என்றும் வரலாற்று வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். மட்குட நாகரிகம் திராவிடர்க்கே உரிய தனி நாகரிகமாகும் என்பது பெறப்படும். எனவே பண்டைக் கால மட்குட ஓவியங்கள், திராவிட ஓவியத்தின் தனிச் சிறப்பைக் காட்டி நிற்பனவாகும் என்பதைத் தெளிவாக அறியலாம்.

வடநாட்டு ஆரியர்கள் நீண்ட நாட்கள் வரையில் வீடு கட்டத் தெரியாமல், மரப் பொந்துகளிலும், குகைகளிலும் தங்கியதோடல்லாமல், பெரும்பாலும் நாடோடிகளாகத் திரிந்தனர் என்றும் கூறுவதால் சுவரோவியமோ, கோல ஓவியமோ அவர் களுக்குப் பல நாட்கள் வரையில் தெரியா என்று வரலாற்றாசிரி யர்கள் கூறுகின்றனர். சுவரிலே ஓவியம் வரையும் பழக்கமும், வீட்டின் முன்வாசலில் கோலமிடும் பழக்கமும் மிக நீண்ட காலமாகவே திராவிடர்க்கு உண்டு என்று வரலாற்று வல்லுநர்கள் கூறுவதால், திராவிட ஓவியம் தனித்தன்மை பூண்டு விளங்கியதை உணரலாம். புள்ளி வைத்து மாக்கோலம் இடும் பழக்கம் இன்னமும் தென்னாட்டு மக்களிடையே மட்டும் நிலவிவருவதிலிருந்து மேற்கண்ட உண்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

இவை தவிர, வடநாட்டு வங்க – இரஜபுத்திர ஓவியங்களுக்கும் திராவிட ஓவியத்திற்கும் உள்ள பெருத்த வேறுபாட்டை உறுப்பளவு மதிப்பில் (Anatomy Value) கண்டுகொள்ளலாம். வடநாட்டு

ஓவியங்கள் உறுப்பளவுகள் குறைபாடுகளோடு காணப்படும்; ஆனால் திராவிட ஓவியத்திலோ என்றால், உறுப்பளவில் குறை பாட்டைக் காண முடியாது.

வடநாட்டு ஓவியத்தினின்றும், தென்னாட்டுத் திராவிட ஓவியம் தனித்தன்மை பூண்டு விலகி நிற்பதாகும் என்பதற்கு மொழியின் எழுத்துக்களும் சீரிய எடுத்துக் காட்டுக்களாகும். முதன்முதல் மொழியை வரிவடிவில் காட்ட முயன்றவர்கள் ஓவியங்கள் மூலந்தான் காட்டினார்கள். மொகொஞ்சதரோ, அரப்பா ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக் களில் ஓவியங்களே மொழியைக் குறிக்கும் குறியீடுகளாக இருந்து வந்திருக்கின்றன என்பதை அறியலாம். மொகொஞ்சதரோ – அரப்பா நாகரிகம் திராவிட நாகரிகம் என்பதாலும், வடநாட்டு ஆரியர்கள் மிக நீண்டகாலம் வரையில் எழுதக் கற்றுக்கொள்ளத் தெரியாமல் வெறும் பேச்சு வழக்கு மொழியான பிராகிருத மொழியைப் பேசி வந்தனர் என்பதாலும் திராவிட ஓவியம் மிகத் தொன்மையானதும், தனித்தன்மை பூண்டதும் ஆகும் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மிகப் பழைமையான திராவிடர்கள்,

1. போர் நிகழ்ச்சிகளை உணர்த்த வில், வேல், வாள், ஈட்டி, கேடயம், துந்துபி, முரசு போன்றவைகளையும்;

2. கோட்டை அல்லது அரண்மனை தீக்கிரையாயின என்பதை உணர்த்த எரியும் தீவட்டி, எரியும் கொடி, எரியும் அரச முடி ஆகியவற்றையும்;

3. பிணங்கள் குவிகின்றன என்பதை உணர்த்த எலும்புக் கூடுகள், எலும்புருவங்கள் ஆகியவற்றையும்;

4. தோல்வியை உணர்த்த நரி, ஓணாய், ஆடு, கழுதை, எலி, கோட்டான், கூளி, பெட்டைக் கோழி, எருக்கமலர், உடைந்த போர்க் கருவிகள், கிழிந்த முரசு போன்றவைகளையும்;

5. போரில் வெற்றியை உணர்த்த சிங்கம், யானை, புலி, காளை மாடு, சேவல், நல்ல பாம்பு, உடையாத போர்க் கருவிகள், குயில், உயர்ந்த நறுமண மலர்கள் போன்றவைகளையும்;

6. சமாதானத்தை உணர்த்த வெண்தாமரை, வெண்சங்கு, அன்னம், புறா, வெண்ணிறக் கொடி போன்றவைகளையும்;

7. காதல் நிகழ்ச்சிகளை உணர்த்த மான், மயில், குயில், புறா, பச்சைக் கிளி, தென்னை, வெண்ணிலவு, வீணை, குழல், குளம், தாமரை, நல்ல மலர்கள் போன்றவைகளையும்;

8. காதல் வெற்றி நிகழ்ச்சிகளை உணர்த்த கணையாழி, நாட்டின் சின்னம், வாள் போன்றவைகளையும்;

9. திருமண நிகழ்ச்சியை உணர்த்த அகல் விளக்கு, செந்தாமரை, வாழை, தென்னை, மா, பலா, கமுகு, மலர்கள், கனிகள் போன்றவைகளையும் வரைந்ததாக ஆராய்ச்சியறிஞர்கள் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டியுள்ளார்கள். இத்தகைய ஓவியங்களே நாள் ஏற ஏற பல்வேறு மாறுபாடுகள் அடைந்து திராவிட எழுத்துக்களாக மாறின என்று கூறுவர்.

அந்தந்த நாட்டு ஓவியங்கள் எப்படி அந்தந்த நாட்டு எழுத்துக்களாக மாறின என்பதைக் காட்டுகின்றனவோ, அப்படி அந்தந்த நாட்டு எழுத்துக்களும் அந்தந்த நாட்டுத் தனி ஓவியங்களை நினைவூட்டி நிற்பனவாகும். திராவிட எழுத்துக்கள் பிறநாட்டு எழுத்துக்களினின்றும் எப்படி வேறு பிரிந்து நிற்கின்றனவோ, அப்படியே திராவிட ஓவியமும் பிறநாட்டு ஓவியத்தினின்றும் தனித்துப் பிரிந்து நிற்பதை உணரலாம்.

பிற நாட்டு ஓவியங்கள் – சிற்பங்கள் ஆகியவற்றில் காண முடியாத சில சீரிய தன்மைகளை அஜந்தா, சித்தன்னவாசல், தஞ்சைக் கோயில் ஆகியவற்றிலுள்ள ஓவியங்களிலும் மதுரைக் கோயில், ஆவுடையார் கோவில் ஆகியவற்றிலுள்ள சிற்பங்களிலும் காணலாம். இவற்றில் ஆரியரது உடை, கண், மூக்கு–கை–கால் ஆகியவற்றையோ அல்லது சீனரது சப்பையான மூக்கு முகங்களையோ, அல்லது ஆங்கிலேயரின் உடுப்புக்களையோ அல்லது வடநாட்டு முக்காடு – அரை நிர்வாண ரவிக்கை – நகைகள் ஆகியவற்றையோ காணமுடியாது. ஆரியர்களின் கடவுள்களான இராமன், கிருட்டினன், ருத்திரன், விட்ணு, பிர்மா, ஆகியவை திராவிட சிற்பங்களின் மூலமாகத் திராவிடர்கள் ஆக்கப்பட்டனர். அவற்றில் திராவிட ஓவியக்கலையின் தனிச் சிறப்புதான் மிகுந்து காணப்படும். எப்படி வடவரது பாரதம், இராமாயணம் தமிழரது எழுத்துருவங்களில் இடம்பெற்றதனால், அந்தத் தமிழ் எழுத்துக்கள் வடவருக்கு உரிமையுடையன ஆகாவோ, அதுபோலவே, இதிகாசக் கருத்துக்களைப் பெற்றுள்ள தமிழ்நாட்டு ஓவியங்கள் – சிற்பங்கள் ஆரியருடையன ஆகா.

இந்த நாட்களில் திராவிட ஓவியத்தில் பல்வேறு கீழைநாட்டு ஓவியங்களும், மேலைநாட்டு ஓவியங்களும் மோதி ஒருவகைக் கதம்ப நிலையை உண்டாக்கியிருப்பினும், திராவிட ஓவியம் தனக்குரிய தனித்தன்மையைப் பூண்டிருக்கத்தான் செய்கிறது. நெருங்கி நின்று ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால், திராவிடத்திற்குரிய ஓவியங்களில், வேறு எந்த ஓவியத்திலும் காணப்படாத சில சிறப்பியல்புகள் தோன்றவே செய்யும். அப்படிப்பட்ட சில

இற்றைக் கால ஓவியங்கள் இலண்டனிலுள்ள ஓவியக் கண்காட்சிக் கூடத்தில் (Royal Academy of Fine Art Exhibition) புகழேணியின் உச்சியில் வைக்கப்பட்டுள்ளன. அவை ரூ. 15000, ரூ. 20000 என்று விலை மதிக்கப்பெறுகின்றன. ஆனால் அதை இன்று பயன்படுத்திக் கொள்ளுபவர் ஒரு வடநாட்டு ஓவியர் ஆவார். அவர்தான் ஜெமினிராய் சௌத்ரி. திராவிட ஓவியத்தின் தனித்தன்மைகளைப் பயன்படுத்தும் அவர், தாமே புதிதாகக் கண்டுபிடித்த ஓவியம் என்று கூறிக்கொள்ளுகிறாராம்.

அவர் பழைய மட்குடங்களில் காணப்படும் ஓவியங்களையும், சித்தன்னவாசல், தஞ்சைப் பெரிய கோவில் ஆகியவற்றில் காணப்படும் ஓவியங்களையும் பார்த்து, அவற்றிலுள்ள சிறப்பியல்புகளை எடுத்துக்கொண்டு, அவற்றைத் தமதாக்கிக் கொண்டார் என்றுதான் கூறவேண்டும்.

இந்தத் திராவிட ஓவியம் தென்னாட்டிலும் இருவரால் வளர்க்கப்பட்டுக் கொண்டுதான் வருகின்றன. அவர்கள் 1. அடையாறு சீனிவாசலு 2. நரசிம்மமூர்த்தி ஆகிய இருவருமாவர். அவர்கள் பெரும்பாலும் ஆரிய இதிகாசக் காட்சிகளையே திராவிட ஓவியத்தில் வரைந்து வருகின்றனர். ராஜராஜவர்மா, ராஜா ரவி வர்மா, ராமவர்மா போன்ற வர்மாக் குடும்பத்தினர் வரைந்த ஓவியங்களும் இதிகாசப் புராணக் காட்சிகளையே பின்பற்றிப் பெரும்பாலும் வரையப் பெற்றனவாகும். அவைகளில் பல உலகப் புகழ் பெற்றவையாகும். அவைகள் இந்நாட்டின் முழுத்தன்மையையும் புலப்படுத்துவன அல்ல என்றும், ரபேல், ரூபன்ஸ், ரெனால்ட்ஸ், ரெம்ப்ரண்ட் போன்ற மேலைநாட்டு ஓவியர்களின் முறையைப் பெரும்பகுதி தழுவியன என்றும் கூறி அவற்றிற்கு உரிய மதிப்பு அளிக்கச் சிலர் முற்படுவதில்லை.

ராஜா ரவி வர்மாவின் ஓவியத்தில் காணப்படும் சிறப்பியல்பு இருந்ததை இருந்தபடியே வரைவது (Natural Art or Model Art or Still life) ஆகும். சென்னை ஓவியக் கல்லூரிப் பேராசிரியராகத் திகழும் டி.பி. ராய் சௌத்ரி "ஒருமுறை ஒரு பொருளை நேரில் கண்டு, அப்படியே இருக்கும் உண்மைத் தோற்றத்தை வரைவதைக் காட்டிலும், ஆயிரம் மடங்கு மிக்க ஆற்றல் படைத்தது, நேரில் காணாமல் கற்பனையில் அங்கக் குறைகளோடு வரையக்கூடிய ஓவியம் (Memory Art) ஆகும்" என்று கூறி ரவிவர்மா ஓவியங்களைப் பழித்துப் புறக்கணித்தாராம், நண்பர் ஒருவரோடு அவர் பேசிக்கொண்டிருந்தபோது.

உள்ளது உள்ளபடி வரையும் ஓவியத்தைப் பழித்துக் கற்பனை ஓவியத்தைப் போற்றும் ராய் சௌத்ரி தம் படங்களையும், மண் உருவங்களையும் எப்படி உருவாக்குகிறார் என்று பார்த்தால்,

அவரும் எல்லா நாடுகளிலும் பின்பற்றும் மாடல் முறையையே கையாண்டு வருகிறார். அதனை ஓவியக் கல்லூரியிலுள்ள பல மாணவர்களும் நேரில் நன்கு அறிவார்கள். அதையே பின்பற்றும் படி மாணவர்களுக்கும் போதிப்பார். எல்லா நாடுகளிலும் பின்பற்றும் முறையும் அதுவாகத்தான் இருந்து வருகிறது. திராவிடத்திலுள்ள ஓவியங்கள் சிற்பங்கள் எல்லாம் இந்த மாடல் முறையிலேயேதான் படைக்கப்பட்டுள்ளன. தொன்று தொட்டு இங்கு கையாண்டுவரும் இந்த முறையைத் தான் மேல்நாட்டார் கவர்ந்து சென்றார்கள் என்று ஊகிக்க இடமிருக்கிறது; ஆனால் அதற்கான சான்றுகள் திட்டவட்டமாகக் கிடைக்கப்பெறவில்லை.

திராவிட ஓவியத்தின் தனிச்சிறப்புகளை நன்கு அறிந்து அவற்றை மேன்மேலும் சிறக்கவும் செழிக்கவும் வளர்க்க வேண்டும் என்பதிலே அக்கறை காட்டாமல், ரஜபுத்திர, வங்க ஓவியத்திற்கும், வடநாட்டு இதிகாசப் புராணக் கருத்துக்களுக்கும் ஆக்கந்தேடும் வகையில் இங்குள்ள சில இதழ்கள் வேண்டுமென்றே முயன்று வருகின்றன. அவைகளின் முக்கிய நோக்கம் திராவிட ஓவியத்தை வாழவைக்கவோ வளரவிடவோ கூடாது என்பதாகும். திராவிட ஓவியம் என்று ஒருவகை ஓவியம் இருக்கக்கூடாது என்பதைக் கட்டுப்பாடாக நிறைவேற்றி வைப்பதிலே, அந்த ஏடுகள் மிக மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன. திராவிட சிற்பக்கலையின் எடுத்துக்காட்டுக்களாகப் பல சிற்பங்கள் நாடெங்கணும் நிறைந் திருப்பதால், அந்தக் கலையை அழிக்க அந்த இதழ்களால் இயலவில்லை.

திராவிட ஓவியத்தைப் புதிய முறையில் வளர்க்கும் பணியில் ஈடுபட்டுப், பல புதுமைகள் கண்டுபிடிக்கும் இளம் ஓவியர்கள் பலர் திராவிடத்தில் தோன்றி வருவது, எதிர்காலத்தின் நல்ல அறிகுறியாகும். திராவிட ஓவியத்தைப் புதிய முறையில் உருவாக்கு பவரில் தோழர் ஆர்.எம்.கோபால் அவர்கள் தலை சிறந்தவராவார். அவரது ஓவியங்கள் புரட்சிகரமான அறிவு ஓவியங்களாகும். அவற்றை அப்பழுக்கற்ற திராவிட ஓவியங்கள் ஆகும் என்று கூறிடலாம். அவரது ஓவியங்கள் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநில மாநாட்டின் கலைக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்ததைப் பலரும் பார்த்திருக்கக் கூடும். அத்தகைய ஓவியம் இந்தியத் துணைக் கண்டத்திற்குள் வேறு எங்கும் இருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. அதுவேறு நாடுகளில் இல்லாத – காணமுடியாத ஒன்றாகும். அது ரஜபுத்திர வங்க ஓவியத்தில் கலக்காத ஒன்று. இது மற்ற எந்த வகை ஓவியத்தையும் தழுவாது தனித்தியங்கும் தனிப்பண்பு கொண்ட தாகும். திராவிடத்திற்கென்று தனிப்புகழைத் தேடித்தரும் நவீன ஓவியத்தைத் (Modern Art) தோழர் ஆர்.எம். கோபால் வளர்த்து

வருவது போற்றி வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். தோழர் ஆர். எம். கோபால் ஆரம்பத்திலேயே மிக உயர்ந்த படிக்குப் போய்விட்டார். அவரது ஓவியம் எல்லோராலும் அவ்வளவு எளிதில் புரிந்து கொள்ளமுடியாத ஒன்றாகக் காணப்பட்டாலும், அதில் ஆழ்ந்த கருத்தும், புரட்சித் தன்மையும் செறிந்திருக்கக் காணலாம்.

கைத்திறமும், கருத்துவளமும் கொண்டு திராவிடத்தின் தனி ஓவியக்கலையைத் திராவிடத்திற்கே உரிய முறையில் வளர்க்கக்கூடிய ஆற்றல் பெற்றோர் திராவிடத்தில் ஏராளமாக இருந்து வருகிறார்கள். அவர்களெல்லாம் புழுதிபடிந்த ஒளி மணிகளாகப் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் வாய்ப்பும், வசதியும் அளித்துத், திராவிட ஓவியத்தின் ஓங்கு புகழை உலகில் நிலைநாட்ட வேண்டியது திராவிடப் பெருங்குடி மக்களின் நீங்காக் கடமையாகும்.

மைக்கேல் ஏன்ஜில்லோவும், லயனார்டோ–டி–வின்சியும் இயேசுவையும், அவர் தந்த கருத்துரைகளையும் மேனாட்டு ஓவிய முறையில் வரைந்து காட்டியுள்ளதைப்போல, பண்டைய மொகலாய ஓவியர்களும், லாகூர் ரஹீமான் சுக்தாயும் மொகலாய அரசர்களையும், அவர்களது வாழ்க்கை வரலாறுகளையும் மொகலாய ஓவிய முறையில் தீட்டிக்காட்டியிருப்பதைப் போல, அபீந்திரநாத தாகூரும், நந்தலால் போசும் இராமன், கிருஷ்ணன் போன்ற ஆரியக் கடவுள்களையும், இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களின் கருத்துக்களையும் வட இந்திய ஓவிய முறையில் எழுதியிருப்பதைப்போல, திராவிடத்திலுள்ள திராவிட ஓவியர்கள் திருக்குறளின் கருத்துக்களையும், அகநானூறு–புறநானூறு போன்ற பண்டை இலக்கியங்களிலுள்ள காட்சி களையும், சேர–சோழ–பாண்டிய வரலாறுகளையும் திராவிடத் திற்கே உரிய திராவிட ஓவிய முறையில் வரைந்து உலகிற்குக் காட்ட முன்வர வேண்டும். திராவிடத்தின் எழிலையும், ஏற்றத்தை யும், இயற்கையையும், செயற்கையையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும், அறிவையும், ஆற்றலையும், வாழ்வையும், வரலாற்றையும், வளத்தையும், நலத்தையும், புகழையும், பெருமையையும், உழைப்பையும், உண்மையையும் ஓவியங்களிலே எடுத்துக்காட்டுவது தான் திராவிட ஓவியர்களின் உள்ளம்! வளர்க திராவிட ஓவியம்!

– மன்றம்

பொங்கல் மலர், *1957*

புனை பெயர்கள் ஏன்?

– செங்கோடன்

(சென்ற திங்கள், நண்பர் இராஜரத்தினம், எழுத்தாளர்கள் புனை பெயர் என்னும் முகமூடி அணிவதன் மர்மம் என்ன என்னும் கேள்வியை எழுப்பி, "மர்மம் என்ன? எல்லாம் பித்தலாட்டம்தான்" என்று சொல்லி முடித்துவிட்டார். அது தவறு என்று காரசாரமாகக் கூறுகிறார் 'செங்கோடன்' என்னும் புனை பெயருக்குள் மறைந்திருக்கும் தோழர், இம்முறை.)

அவன் ஒரு சிறந்த எழுத்தாளன், நாட்டில் நடக்கும் நானாவித நிகழ்ச்சிகளை, ஏட்டிலே தீட்டிக் காட்டும் ஆற்றல் அவனுக்குண்டு. அவனது உணர்ச்சி யூட்டும் கட்டுரைகள், நாட்டு மக்கள் படித்துப் பயன்பெற வேண்டியவை. அவனது அண்ணன் ஒரு பத்திரிகா சிரியன். ஆனாலும், அவனுடைய கட்டுரைகள் வெளி யிடப்படவில்லை. காரணம் "அண்ணனுக்கு" தானி ருக்கத் தம்பியின் பெயரை உலகுக்குக் காட்டுமளவுக்கு உன்னத மனப்பான்மையில்லை. தம்பிக்கோ, எழுதா மலிருக்கவும் முடியவில்லை. எழுதினால் வெளியிடு வோருமில்லை. சிக்கலான நிலை, சிந்திக்கத் தொடங்கி னான். ஒரு முடிவுக்கு வந்தான். முகமூடி யிட்டுக் கொண்டான். எவரும் அறிந்திராத புதிய பெயர், கட்டுரைகள் தபாலில் அனுப்பப்பட்டன.

"சிறந்த அறிவாளி. நல்ல எழுத்தாளன்"

"உணர்ச்சி யூட்டும் எழுத்து, அழகான சொல்லடுக்கு. சரமான நடை."

“அது வல்ல! ஒவ்வொன்றும் ஒரு பேனாச்சித்திரம்! உயிருள்ள ஓவியம்!!”

“அது சரி... இவ்வளவு அற்புதமாக எழுதும் அந்த ஆள் யார்?”

“அது தானே தெரியவில்லை. பெரிய புதிராக வல்லவா இருக்கிறது”

“யாராயிருந்தாலென்ன! அருமையான எழுத்து. அவசியம் வெளியிட வேண்டும்”

இது, அண்ணனது பத்திரிகாலயத்தில், உதவியாசிரியர்களின் உரையாடல்

நாட்டிலே பரவிய அவனுடைய கருத்துரைகள் பலராலும் பாராட்டப்பட்டன. புகழ் மலை மலையாக வந்து குவிந்தது – அவனுக்கல்ல – அவன் சூட்டிக்கொண்ட புனை பெயருக்கு. இருந்தாலென்ன! அவன் விரும்பியது கீர்த்தியல்ல – கடமை; அது நிறைவேறிவிட்டது.

– இங்கே குறிப்பிடப்பட்டவர் பெஞ்சமின் ப்ராங்கலின்.

மற்றும் ஒருவர். இவரும் ஒரு சிறந்த எழுத்தாளர். உரையாடல், என்பது வெறும் பொழுதுபோக்குக்காக ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் வெறும் சொற்றொடர்கள் என்றில்லாமல், அதனைத் தனியொரு கலையாக ஆக்கிய கலைஞன்! முதன் முதலாக ஆங்கில அகராதி தொகுத்த அறிஞன்! ஆமாம் – மிகப் பெரிய மனிதர். அவருடைய அறிவுத் திறனும் திடீரென்று வளர்ந்து விடவில்லை. தொடக்க காலத்திலும், அவருடைய எழுத்தில் அழகும் பொருளும் அளவே இல்லாமல் இருந்திருக்க முடியாது. ஆனால் அவர், தன்னுடைய முதல் கட்டுரையை வெளியிட பட்டபாடு சொல்லி முடியாது! தனக்காக, தானே பிறரைக் கெஞ்சுவது தன் சுயமரியாதைக்கு இழுக்கென நினைத்தார். ஆகையால் கட்டுரையோடு கீழ்க்கண்டமாதிரியான ஒரு கடிதத்தை யும் வைத்தனுப்பினார் பத்திரிகாசிரியர்க்கு.

> “அன்புள்ள ஐயா, இத்துடன் அனுப்பியுள்ள கட்டுரை என் நண்பர் எழுதியது. அது எவ்வளவு அருமையாயிருக்கிற தென்பதைத் தாங்களே தெரிந்து கொள்வீரென நினைக் கிறேன். ஆகையால், தயவு செய்து இதனை அவசியம் வெளியிடவேண்டும் என மிகுந்த தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.
>
> தங்கள் நன்றியை என்றும் மறவாத ஜான்சன்.

முன்னவர் முக மூடியிட்டார், பின்னவர் பொய் சொன்னார்,

மேற்சொன்னவை மேல் நாட்டிலே நிகழ்ந்தவை – பற்பல ஆண்டுகளுக்கு முன்பு. தமிழ்நாட்டிற்கு வருவோம். இவர் ஒரு கவிஞர். அதுமட்டுமல்ல, இவர்தான் இன்றைய தமிழ்நாட்டின் தலைசிறந்த கவிஞர், புரட்சிக் கவிஞர், செந்தமிழ்ச் செல்வர் – இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் அடுக்கிக்கொண்டே போகலாம், ஆனாலும் முழுமையும் சொன்னதாகாது அவ்வளவு சிறப்புடையவர். ஆமாம் பாரதிதாஸன் அவர்கள்தான். அவரது கவிதைகளின் வெளியீட்டு உரிமை கொடுத்தால் போதும் என்று ஏங்கிக் கிடக்கின்றனர் இன்றைய பதிப்பக உரிமையாளர்கள்; ஆனால் அன்று? அவர் எழுதிய பாம்புப் பாட்டு அவருடைய பெயரிலே வெளியிடப்படவில்லை. அவருடைய புனை பெயரில்கூட வெளிவரவில்லை. ஆனால்; பாரதியார் பெயரிலேயே வெளிவந்தது.

இவைகளுக்கெல்லாம் காரணம்? இன்றைய நாள் வரையிலே மேல்நாட்டிலோ, கீழ் நாட்டிலோ அல்லது உலகத்தின் மற்றைய எந்தப் பாகத்திலோ, உண்மை அறிவுக்கும் ஆற்றலுக்கும் மக்கள் மன்றத்திலே மதிப்பு இருந்ததாகத் தெரியவில்லை. ஆகையால், பல அரிய கருத்துக்களை மக்களுக்குக் கூற வேண்டும் என்ற எண்ணமும் எண்ணியதை ஏற்ற முறையிலே எடுத்துக் கூறும் ஆற்றலும் படைத்திருந்த அறிஞர் பலரும், நாட்டிலே பரப்ப வசதியற்றிருந்த நிலையிலே தேடிக்கொண்ட சாதனங்கள் – குறுக்கு வழிகள்தான் பொய்யும், மறைவும், புனைபெயரும். அவர்கள் சென்றது குறுக்கு வழியாக இருக்கலாம் ஆனால் தவறென்று சொல்ல முடியாது. நல்லதைச் செய்வதற்காக எதையும் செய்யலாம். நோக்கம் உயர்ந்ததாயிருக்க வேண்டும். அதை அடைவதற்கு எந்த வழியில் சென்றால் என்ன?

கொலைத் தண்டனைக் குட்பட்டு கொடுஞ்சிறையிலே அடைபட்டு உள்ளங் குமுறிக்கிடந்தான் நண்பன். வேதனைத் தீயிலே விடுதலை தர எண்ணினான் சிட்னி கார்டன்.

கார்டன் உள்ளத்திலே தோன்றியது கருணை. அதற்காக அவன் செய்யவிருந்தது தியாகம். தன் நண்பனுக்காக தன் உயிரையே பணயம் வைத்தான் – பலி பீடத்தில், அவன் எண்ணம் போற்றற்குரியது, ஆனால் செய்யும் வழி? "என் நண்பனுக்குப் பதில் என்னை கைதியாக வையுங்கள்" என்று வெளிப்படையாக சொல்லியிருந்தால், சிறையதிகாரிகள் ஒப்பியிருப்பார்களா? நினைத்ததையெல்லாம் நேர்வழியிலேயே செய்ய முடியுமா ஆகையால், அவன் இறுதியில் செய்தது என்ன? சிறையதிகாரிகளை ஏமாற்றினான். சிறைக்குள் சென்றான். நண்பனிடம் செய்தியைக் கூறினான், உடைமாற்றிக் கொண்டான். கைதியானான் நண்பனுக்குப் பதில், நண்பனுடைய நடை உடை பாவனையில், நண்பனைப் போலவே நடித்து நண்பனுக்குத் தூக்குமேடை

சென்று தான் இறந்தான். நண்பன் தப்பினான். இருவருக்கும் மகிழ்ச்சி. ''மரண வாயிலிருந்து தப்பினோம்'' என்றதால் நண்பனுக்கு மகிழ்ச்சி. ''நண்பன் மகிழ்ந்தான் அதுபோதும்'' என்று இவனுக்கு மகிழ்ச்சி.

இவன் செய்ததிலே குற்றம் என்ன?

– இது சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய 'இரு நகரங்களின் கதை'யில்.

இவ்வாறு பற்பல நிகழ்ச்சிகள் சரித்திரத்திலே நடைபெற்றிருக்கின்றன.

ஷேக்ஸ்பியர் தீட்டிய, "வெனிஸ் நகர வியாபாரி" என்ற நாடகத்தில் தன்னுடைய கணவனது நண்பரைக் காப்பாற்ற எண்ணிய போர்ஷியா, சாதாரண பெண் வேடத்தில் சென்றிருந்தால், நீதி மன்றத்திலே நின்று வாதிக்கும் வாய்ப்பு கிடைத்திருக்குமா? ஆண் ரூபத்தில், வக்கீல் வேடத்தில் செல்வது தவறென்றோ ஏமாற்றல் என்றோ எண்ணியிருந்தால், அண்டோனியோ உயிர் காப்பாற்றப்பட்டு இருக்க முடியுமா? வீறுகொண்ட மகனாக போர்க்கோலம் பூணாது, மலைச்சாரல்களிலே திரிந்துலாவும் இடைப் பெண்ணாகச் சென்றிருந்தால், ஜோன் ஆப் ஆர்க், போர்க்களப் பக்கம் அடிவைத்திருக்க முடியுமா? ப்ரெஞ்சு நாட்டு மக்களுக்கு செய்ய எண்ணிய சேவையைத்தான் அவள் செய்திருக்க முடியுமா?–

ஆகையால், ஏமாற்றலாம் பொய் சொல்லலாம், மாறுவேடங்கொள்ளலாம், ஒளியலாம், மறையலாம், சதி செய்யலாம் – ஆனால் செய்ய வேண்டும் என்று நினைக்கும் செயல் பயன்தரக்கூடியதாயிருக்க வேண்டும், அவ்வளவுதான். அந்த முறையிலே, நாட்டுக்கு நல்லதைச் சொல்ல எண்ணும் எழுத்தாளன், தான் சூட்டிக் கொள்ளும் புனைபெயரை ஒரு முகமூடியாக உபயோகிக்க எண்ணினாலுங்கூட, அதைக் கோழைத்தனம், தைரியமின்மை என்று சொல்லி, கண்டித்து விட முடியாது.

புரட்சிகரமான கருத்துக்களை எழுத எண்ணுவோர், சொந்தப் பெயரிலே எழுத அஞ்சலாம். ஆனால் இந்த உப்பு சப்பற்ற காதற் கதைகளை எழுதுவோர் புனைபெயர் போட்டுக் கொள்வதின் அர்த்தம் புரியவில்லை என்கிறார் தோழர் ராஜரத்தினம். இது நான் கேட்க வேண்டிய கேள்வி. காதற்கதைகள் புனைபெயர்களிலே வெளியிடப்படுவது பயத்தின் காரணமாக வல்ல. புனைபெயர்கள் வைத்துக்கொண்டு எழுதுவது இக் காலமுறை, என்பதாலு மல்ல. அவைகளிலே தனியொரு கவர்ச்சி

இருக்கிறது என்பதால்தான். சில புனைபெயர்களிலே தோழர் ராஜரத்தினம் ரசிக்கும் அளவுக்கு அழகு இல்லாமலிருக்கலாம். ஆனால் சாதாரணப் பெயர்களோடு எழுதுவதைவிட, ஒரு புது மாதிரியான பெயரோடு – அந்தப் பெயருக்கு அர்த்த மில்லாமல்கூட இருக்கட்டும் – எழுதினால் படிப்போர் கவனத்தை சற்று அதிகமாக இழுக்கத்தான் செய்யும். பலருடைய கவனம் கவரப்பெற்று, அவர்கள் யாவரும் படித்து பயன்பெற வேண்டும் என்பதுதான், பெரும்பாலான எழுத்தாளருடைய ஆவலும் ஆசையும். வேண்டுமானால், மேற்குறித்த தோழருக்கு தன் சொந்தப்பெயரே பலரிடை அடிபடவேண்டுமென்று எண்ண மிருக்கலாம். அதை பிறரிடமும் எதிர்பார்ப்பது தவறு.

உண்மையில் பார்க்கப்போனால், புனைபெயர்களிலே அறவே அழகு இல்லை என்று சொல்லிவிட முடியாது. உதாரணமாக, 'திராவிடநாடு' பத்திரிகையிலே, 'பரதன்' என்ற புனைபெயரோடு பல கட்டுரைகள் வெளிவருகின்றன. அவைகளிலே, பரதனுக்கும் வீரனுக்கும் நடைபெறும் உரையாடல்கள் தீட்டப்படும் வீரன் ஒரு தீவிர சீர்திருத்தவாதி. அவன் பரதனிடம் ஓடோடி வருவான். "கேட்டாயா பரதா" என்று பதைபதைக்கும் உள்ளத்தோடு பேசத்தொடங்குவான். "பதறாதே" என்பான் பரதன். வீரன் கேட்கமாட்டான்: புரட்சிகரமான கருத்துக்களை எரிமலையென கக்கத் தொடங்கிவிடுவான். மறுப்புகள் வீசப்படும் பரதனால். பலத்த வாதம் இருவருக்குமிடையே, இறுதியில் பரதன் வீரன்பக்கம் சாய்வான்.

பரதன் யார்? வீரன் யார்? இருவரும் அண்ணாத்துரைதானே. அவர் ஏன் தனது புரட்சிக் கருத்துக்களை நேராகச் சொல்லக் கூடாது? ஏன் இந்த ஏமாற்றல் என்று கேட்க முடியுமா? நாட்டிலே, சீர்திருத்தவாதியின் வார்த்தைக்கு முதலில் எவ்வளவு மறுப்பு எழுகிறது, பிறகு எப்படி அத்தனை மறுப்புகளும் மடிந்து, சாய்ந்து வீழ்கின்றன என்பதின் நல்லதோர் படப்பிடிப்பல்லவா வீரன் பரதன் உரையாடல்?

இதுபோன்றே, 'தமிழ் மணி' என்ற பத்திரிகையில், 'உண்மை உலவுகிறது' என்ற தலைப்பில், 'துப்பறிவோன்' என்ற புனை பெயரோடு எழுதப்படுவதிலே அர்த்தமில்லையா? அல்லது அந்தக் கட்டுரைகளினால் நாட்டிலே யாதொரு பலனும் ஏற்படவில்லையா?

மேலும், 'அழகு' என்ற பத்திரிகையிலே, கொய்த மலர்கள், என்ற தலைப்பில், 'கத்தரிக்கோல்' என்ற புனைபெயரோடு எழுதுவதிலே ஒரு புது அழகு காணப்படவில்லையா? ஆகையால்,

அழகுள்ள புனைபெயர்களையாவது அனுமதிப்பாரா தோழர் ராஜரத்தினம்.

மேடையிலே வீரா வேசத்தோடு பேசும் தோழர்கள்கூட, எழுதும் போது ஏனோ புனை பெயர்களோடு எழுதுகிறார்கள் என கேட்கிறார். இதுவும் நான் கேட்க வேண்டிய கேள்வி. அவர் கேட்பதில் அர்த்தமேயில்லை. புனைபெயர்களோடு கட்டுரை தீட்டுவோர் மீது, அரசாங்கமோ அல்லது தனிப்பட்ட ஆளோ நடவடிக்கையெடுக்கவோ, வஞ்சம் தீர்த்துக்கொள்ளவோ எண்ணினால், கட்டுரையை வெளியிட்ட பத்திரிகாசிரியரைக் கேட்டால், எழுதினவரது உண்மைப்பெயரும் முகவரியும் கிடைத்துவிடும் என்பது தோழர்க்கு நினைவிருந்தால், புனைபெயர் சூட்டிக்கொள்வது கோழைத்தனம் என்று சொல்லியிருக்க நியாயமில்லை.

தோழர் ராஜரத்தினம் அவர்களது கருத்துக்களில் ஒன்று மட்டும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்படவேண்டியது. சில எழுத்தாளர்கள் பல புனைபெயர்கள் வைத்துக்கொண்டு, புத்தக ஆசிரியர் ஒருவர் போலவும், மதிப்புரை எழுதுவது வேறொருவர் போலவும் ஏமாற்றல் வித்தை செய்து, எழுத்துத் துறையிலே பித்தலாட்டம் செய்வதைத்தான் குறிப்பிடுகிறேன். இத்தகைய பித்தலாட்டம் மிகவும் தீவிரமாக கண்டிக்கப்பட வேண்டியது.

பற்பல பெயர்களோடு பற்பல “தில்லுமுல்லு”கள் செய்து வருவதிலே தோழர் வல்லிக்கண்ணன் கைதேர்ந்தவராக இப்போது காட்சியளிக்கிறார். ஏதோ சிறிது எழுதத் தெரிந்துவிடுவதாலேயே எதையும் செய்துவிடலாமென நினைக்கிறார். சில ஆண்டுகளுக்கு முன்வரை, வெறும் வல்லிக்கண்ணனாக இருந்து வந்தார். இப்போதோ, அவர் ‘கோரனாதன்’, ‘மிவாஸ்கி’, ‘நையாண்டி பாரதி’,. ‘அசோகன்’, ‘சொக்கலிங்கம்’ ஆகிய பற்பல ரூபங்களிலே தோற்றமளிக்கிறார். “இது என்ன அதிசயம்! ஒருவருக்கா இத்தனை பெயர்கள். ஏன் இவ்வளவு?” என்கிறீர்களா?

“ஒரு பெண் ஒருவனுக்குத்தான் மனைவியாமே இந்தியாவில்! என்ன சுயநலம்!” என்றானாம் ஒரு திபேத்தியன். அதைப்போலவே இவரும், “என்னுடைய எழுத்து, ஒரு கட்சிக்கு மட்டுமா. இல்லை. எந்த கட்சிக்கு வேண்டுமானாலும் பயன்படுத்துவேன்” என்று சொல்வார் போல் தெரிகிறது. “என்ன? அவ்வளவு பரந்த மனப்பான்மையா” என்றல்லவா கேட்கிறீர்கள். அதெல்லாம் ஒன்றும் இல்லை. பரந்த மனப்பான்மையாவது, மண்ணாங் கட்டியாவது. ஏதோ தன்னிடம் சிக்கிக்கொண்ட சிறிது எழுத்துத் திறமையை முதலாக வைத்து நடத்தும் வியாபரமில்லாது வேறென்ன அது? ஏன்? நான் சொல்வது புரியவில்லையா?

காங்கிரசை ஆதரிக்கும்போது 'வல்லிக்கண்ணன்.' திராவிட கழகக் கொள்கைக்கு இறங்கும்போது 'கோரநாதன்.' கம்யூனிஸ்ட் தோழர்களையும், 'காகா' பிடித்து வைக்கலாமென்று எண்ணும் போது 'மிவாஸ்கி'. பொதுவாக சில நிகழ்ச்சிகளையோ, கொள்கை களையோ 'கிண்டல்' செய்ய நினைக்கும்போதும், சினிமாத் துறையைப் பற்றி எனக்கும் கொஞ்சம் தெரியும் என்பதைக் காட்ட ஆசைப்படும்போதும், 'நையாண்டி பாரதி', 'அசோகன்' ஆகிய பெயர்கள். 'தந்தை தன் மகனிடமே புணர்ந்தான்' என்பன போன்ற மட்டரக கதைகளையும் இன்னும் ஆபாசமான வர்ணனைகளையும், காமக் களஞ்சியங்களையும் எழுதும்போது 'சொக்கலிங்கம்' என்ற ரீதியிலே, அவருடைய அந்தப் பெயர்கள் பற்பல நகரங்களிலே மிளிர்கின்றன. "என்ன? உண்மையாகவா?" என்கிறீர்களா; அதை ஏன் கேட்கிறீர்கள், விட்டுத் தொலையுங்கள்.

ஆகையால், புனை பெயர்கள் ஆளை மறைக்கும் மர்மப் பெயர்கள் என்ற காரணத்தால், அவைகளின் உதவியைக் கொண்டு பல கட்சிகளுக்காகவும் பரிந்து பேசி, தீப்பொறி பறக்கவும் எழுதலாம் சிலர். ஆனால் எழுத்துத் துறையிலே, அவர்கள் நடத்த நினைக்கும் வியாபாரம் அதிக நாட்களுக்குச் செல்லு படியாகது.

ஆனால், ஒரே கொள்கைக்காக, ஒரே இலட்சியத்துக்காக உழைக்க எண்ணும் எழுத்தாளன், அழகுக்காக, கவர்ச்சிக்காக, வசதிக்காக, பலர் கவனத்தை இழுப்பதற்காக நாட்டிலே நல்லலொரு பலனை யுண்டாக்குவதற்காக எத்தனைப் புனைப் பெயர்களில் வேண்டுமானாலும் தங்கள் கருத்தோவியங்களைத் தீட்டிக் குவிக்கலாம்; தவறில்லை.

— போர்வாள்

11.10.1947

இயக்கம் போட்ட எதிர்நீச்சல்கள்

கருஞ்சட்டையும் தடை உத்தரவும்

பெரியார் ஈ.வெ.ரா. அறிக்கை

கருஞ்சட்டை பற்றி சர்க்காரின் தடையுத்தரவு சம்பந்தமாகப் பெரியார் ஈ.வெ.ராமசாமி அடியிற் கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்.

"நம் இயக்கத்தில், திராவிடர் கழகத்தில் உள்ளோருக்கு கருஞ்சட்டை அணிய வேண்டுமென்று வேண்டுகோள் விட்டதானது, திராவிட சமுதாயத்துக்கு இருந்து வரும் சமுதாய இழிவு நீக்கிக்கொள்ளும் உணர்ச்சியை ஞாபகப்படுத்த வேண்டும் என்பதற்கு ஆகும். இதைக் கழக அங்கத்தினர் பலரும் மற்றும் சில திராவிடர்களும் ஆணும் பெண்ணும் ஆதரித்து அணிந்து வருகிறார்கள்.

இந்தப்படியாக, கருஞ்சட்டை அணிபவர்களுக்கு எந்தவித நிபந்தனையோ, எந்தவித ரிஜிஸ்டரோ, சேனை போன்ற உடையோ, யூனிபாரமோ, அணிவகுப்போ, ஆயுதமோ மற்றும் இவை போன்ற ஓர் சேனைக்கோ, படைக்கோ, உள்ள பயிற்சிகளோ மேற்கொண்டது கிடையாது.

இருப்பினும் சென்னை அரசாங்கம் இதை ஒரு அமைப்பாகக் கருதிச் சட்ட விரோதமாக்கியிருக்கின்றது என்ற போதிலும், நான் திராவிடப் பொது மக்களுக்கு அடிக்கடி தெரிவித்து வருவது போல் இது விஷயத்தில் நம் கழக அங்கத்தினரும்

திராவிடப் பொது மக்களும் பொறுமையைக் கையாண்டு சாந்தமும், சமாதானமுமாய் நடந்துவர வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். இதற்கு மாறாக "எங்காவது பயிற்சி அணிவகுப்பு இருக்குமானால் அதைக் கண்டிப்பாக நிறுத்திவிட வேண்டும் என்பதைத் தவிர, இந்த உத்தரவினால் நமக்குள் எவ்வித மாறுதலும் ஏற்பட்டு விட்டதாகக் கருத வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

ஈ.வெ. ராமசாமி

– சென்னை, 4–3–48.

''திராவிட நாடு'' (அண்ணா) 7-3-48 தலையங்கம்

தடை உத்தரவு

திராவிடப் பெருங்குடி மக்கள், பல காலமாகச் சமுதாயத் துறையில் மிகவும் இழிவுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்த்தும் முறையில், திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்கள் எல்லாரும் கருப்புச் சட்டை அணிந்துகொள்ள வேண்டுமென்று திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதன் பேரில் இப்போது சில காலமாகத் திராவிடர் கழகத்தைச் சார்ந்த பலர், தங்கள் குறைபாட்டைத் தெரிவிக்கும் முறையில் கருப்புச் சட்டை அணியும் வழக்கத்தை மேற்கொண்டு வந்தனர்.

இதனை, இப்போது சர்க்கார் சட்ட விரோத ஸ்தாபனம் என்று தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

கருப்புச் சட்டைக்கென ஒரு தனி ஸ்தாபனமே கிடையாது. திராவிடர் கழகத் திட்டங்களிலும் கருப்புச் சட்டை அணிவதை ஒரு ஸ்தாபனமாகக் கொள்ள வேண்டுமென்ற விதியும் கிடையாது. திராவிடர்கள் தங்களுக்குள்ள குறைகளைத் தெரிவிக்கும் முறையில், கருப்புச் சட்டை அணிவதை ஒரு அடையாளமாகக் கொள்ள வேண்டுமென்பதே அதன் நோக்கமாகும்.

கருப்புச் சட்டை அணிபவர்களுக்கென ஒரு தனிப் பயிற்சி முகாமோ, படை அணி வகுப்போ, ஆயுதம் தாங்கும் முறையோ, பலாத்கார முறைகளைக் கையாள வேண்டுமென்ற திட்டமோ எதுவும் கிடையாது.

திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்கள் கருப்புச் சட்டை போட்டுக்கொள்ள வேண்டுமென்று, பெரியார் அவர்கள் எப்போது சொன்னாரோ, அன்றே சர்க்காருக்கும் இது சம்பந்தமாக எல்லாம்

தெரிந்தே இருக்கும். ஆனால், இவ்வளவு காலமும் சர்க்கார் அது சம்பந்தமான நடவடிக்கை ஒன்றும் எடுக்காமல், இப்போது திடீரென்று கருப்புச் சட்டைப்படை என்பதாக ஒரு 'ஸ்தாபனம்' இருப்பதாகவும், அது, சட்ட விரோதமானதென்றும் கருதும் படியான நிலைமை ஏற்பட காரணம் என்ன என்பது தெரியவில்லை.

ஒரு சமுதாயம், தனக்குள்ள குறைகளைக் கூடத் தெரிவிக்கக் கூடாதென்ற முறையில் ஒரு சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமாயின், அதனை ஜனநாயக அடிப்படையைக் கொண்ட சர்க்கார் என்று எப்படி கூற முடியும்? ஒரு சமுதாயம், தன்னுடைய குறைகளை எடுத்துக்காட்டி, அவைகளை நிவர்த்தி செய்து கொள்வது கூடத் தவறு என்பதைத் தானே சர்க்காரின் இந்த தடை உத்தரவு எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இல்லையேல், எந்தவிதமான பலாத்காரச் செயலையும் அடிப்படையாகக் கொள்ளாத கருப்புச் சட்டையினர்மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்கக் காரணம் என்ன?

கருப்புச் சட்டை அணிவது என்பது ஒரு ஒழுங்கு முறை; அதாவது தாங்கள் திராவிடர்கள், தங்களுடைய குறைகள் போக்கப்பட வேண்டும், அவை போக்கப்படும் வரையில் துக்க அறிகுறியாகக் கருப்பு சட்டை அணிந்துகொள்ள வேண்டுமென் பதைத் தவிர, கருப்புச் சட்டை அணிவதற்கு வேறு காரணம் எதுவும் இல்லை. என்றாலும் இதனை சர்க்கார் ஒரு சட்ட விரோதமான 'ஸ்தாபனம்' என்று கருதக்கூடிய அளவுக்குக் கருப்புச் சட்டை அணிவதைப் பற்றிச் சர்க்கார் தெரிந்திருக்கிற தென்றால், யாரோ சொன்னதைக் கேட்டுக்கொண்டு, இந்தக் காரியத்தைச் சர்க்கார் செய்திருக்கிறதென்று பொருள் படுமேயன்றி, உண்மையாகவே சர்க்கார் கருப்புச் சட்டையைத் திராவிடர்கள் ஏன் அணிய முற்பட்டனர் என்பதனை அறியவோ, அல்லது அதன் அமைப்பு முறை எப்படி, என்னென்ன காரணங்களுக்காக அந்த முறை ஏற்பட்டதென்பதைத் தெரிந்து அதன்படி இந்தத் தடை உத்தரவை விதித்துள்ளதென்று கூறவோ முடியாது.

பெரியார் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கருப்புச் சட்டை அணிவதன் காரணத்தை வெளிப்படையாகக் கூறி யுள்ளார். இந்த அறிக்கையில் கூறப்பட்ட காரணத்தையே, கருப்புச் சட்டையைத் திராவிடர்கள் அணிந்து கொள்ள வேண்டுமென்று சொன்ன காலத்திலும் பெரியார் அவர்கள் கூறியுள்ளார்.

ஒரு பெரும் பொறுப்பைத் தன் மீது போட்டுக்கொண்டு, அதிகார பீடத்தில் அமர்ந்துள்ள ஒரு சர்க்கார், விஷய விளக்கம் இல்லாத முறையில் ஏதோச்சாதிகார மனப்பான்மையோடு

காரியங்களைச் செய்வது, பொதுமக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் இழப்பதற்கு அடிகோலுவதாகவே முடியும்.

எனவே, சர்க்காரின் இந்தப் போக்கைக் கண்டு, திராவிடர்கள் தங்கள் பொறுப்பை மறந்து அமைதி குறைவுக்கும், கிளர்ச்சிக்கும் இடமளிக்காமல், தங்களுடைய பெருந்தன்மையைக் காட்டிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

பெரியார் வீடும், ''குடியரசு'' ஆபீசும் சோதனையிடப்பட்டது

3–3–48 இரவு, ஈரோட்டில், திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்கள் வீட்டைப் போலீசார் சோதனையிட்டுச் சில புகைப் படங்களை எடுத்துச் சென்றதோடு, 'குடியரசு' ஆபீசையும் சோதனை போட்டுச் சில பைல்களையும் எடுத்துச் சென்றனர்.

காஞ்சிபுரத்தில் சோதனை

3–3–48ல் பெரிய காஞ்சிபுரம் திராவிடர் கழகத் தலைவர் தோழர் வி. கண்ணப்பர் அவர்களையும், தோழர் சி.வி.எம். அண்ணாமலை அவர்களையும், உள்ளூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், சப்–இன்ஸ்பெக்டரும், சில கான்ஸ்டேபிள்களுடன் சந்தித்து, நகரிலுள்ள திராவிடர் கழகங்களைச் சோதனையிட்டு, கருப்புச் சட்டை சம்பந்தமான ரிக்கார்டுகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் ஆட்சேபனையில்லை என்று கூறவே புத்தேரித் தெருவிலுள்ள திராவிடர் கழகத்தையும், பிள்ளையார்பாளையத்திலுள்ள திராவிடர் கழகத்தையும், சின்ன காஞ்சிபுரம் திராவிடர் மறுமலர்ச்சி கழகத்தையும் சோதனையிட்டுக், கருப்புச் சட்டைகளையும், கழக ரசீதுப் புத்தகங்களையும் எடுத்துச் சென்றனர்.

திராவிடர் ஆராய்ச்சிக் கழகத்தில் சோதனை

சின்னக் காஞ்சிபுரத்திலுள்ள திராவிடர் ஆராய்ச்சிக் கழகமும் சோதனையிடப்பட்டு, கழக மினிட் புத்தகத்தைத் தோழர் டி.பி.எஸ். பொன்னப்பா அவர்களிடமிருந்து வாங்கிச் சென்றனர்.

கருஞ்சட்டைக்குச் சர்க்கார் தடை உத்தரவு

பல இடங்களில் சோதனை

(7–3–48 திராவிட நாடு)

2–3–48ல் சென்னை சர்க்கார், இம்மாகாணத்திலுள்ள 'கருஞ்சட்டை ஸ்தாபனத்தையும், ராஷ்ட்ரீய சேவாதளத்தையும் தடை விதித்து, கிரிமினல் சட்ட திருத்தத்தின் 16வது பிரிவின்கீழ் அறிக்கை விட்டுள்ளனர்.

நகரில் சோதனை

சென்னை சுங்குராமச் செட்டித் தெரு 6ம் எண்ணுள்ள கட்டிடத்தில் இருக்கும் 'திராவிடன்' பத்திரிகாலயத்தைப் போலீசார் 2–3–48 மாலை 4.30 மணிக்கு சோதனையிட்டு, சில கடிதங்களையும், 'திராவிடன்' பத்திரிகைப் பைலையும் எடுத்துச் சென்றனர்.

பார்க் டவுன், பொம்மு செட்டித் தெருவிலுள்ள தோழர் C.D.T. அரசு அவர்கள் வீட்டையும், வண்ணாரப்பேட்டை மாடசாமி நாடார் தெருவில் இருக்கும் தோழர் கே. அண்ணாமலை அவர்கள் வீட்டையும், வட சென்னைத் திராவிடர் கழகத்தையும், மயிலாப்பூர், பிராடீஸ் தெருவிலுள்ள தோழர் எம்.கே. தங்கவேலர் அவர்களுடைய வீட்டையும், பெரியமெட்டு ஏகாம்பர குமரகுரு தெருவிலுள்ள தோழர் கே. ஆரியசங்காரன் அவர்கள் வீட்டையும், சைதாப்பேட்டை, கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள திராவிட இளைஞர் கழகத்தையும் போலீசார் சோதனையிட்டு, கருப்புச் சட்டைகளையும், கழக மினிட் புத்தகங்களையும் எடுத்துச் சென்றனர்.

கோவில்பட்டியில்

2–3–48ல் காலை 4 மணிக்கு டி.எஸ்.பி. அவர்களும், சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், சில கான்ஸ்டேபிள்களும் கோவில்பட்டியிலுள்ள திராவிடர் கழகச் செயலாளர் தோழர் எஸ். அருணாசலம் வீட்டையும், தோழர் வள்ளமுத்து பால்ராஜ் அவர்கள் வீட்டையும் சோதனை செய்து, திராவிடர் கழக சம்பந்தமான புத்தகங்களை எடுத்துச் சென்றனர்.

மதுரையில்

3–3–48ல் மதுரையிலுள்ள திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகளை சோதனை செய்ததோடு, தோழர்கள் செந்தியப்பன், எஸ். முத்து, எஸ். பழனிவேலு, கே.எஸ். இராசமான், எம்.எஸ். இராமய்யா, ஆ. சங்கரய்யா, தங்கராஜ், ல.வ. கிருஷ்ணன் ஆகியோரைப் போலீஸ் அழைத்து சென்று, கருப்புச் சட்டை சம்பந்தமாக விசாரித்த பின்னர் விட்டு விட்டனர் என்று தெரிகிறது.

திருச்சியில்

2–3–48 இரவு, திருச்சியிலுள்ள ஜில்லாத் திராவிடர் கழகக் காரியதரிசி தோழர் எஸ். பிரான்ஸிஸ் வீட்டை ரிசர்வ் போலீசார் சோதனையிட்டு, கருப்புச் சட்டைகளும், அங்கத்தினர்கள் சேர்க்கும் பாரங்களையும் எடுத்துச் சென்றனர்.

பொன்மலையில்

2–3–48ல் இரவு 12 மணிக்கு பொன்மலைத் திராவிடர் வாலிப கழக அங்கத்தினர் தோழர் கைலாசம் வீட்டில் போலீசார் சோதனையிட்டனர்.

சேலத்தில்

3–3–48ல் சேலம் டி.எஸ்.பி. அவர்கள், சேலம் செவ்வாய்ப்பேட்டையிலுள்ள சுயமரியாதைச் சங்கத்திற்கு வந்து, கருப்புச் சட்டை சம்பந்தமான ரிக்கார்டுகள் ஏதாவது இருக்கிறதா என்று சோதனையிட்டதில், அது சம்பந்தமாக ஒன்றுமே இல்லையென்று ரிபோர்ட் எழுதிக்கொண்டு போய்விட்டனர்.

அரிசிப்பாளையத்தில்

3–3–48ல் சேலம் அரிசிப்பாளையத்திலுள்ள திராவிடர் கழகத்தைச் சோதனையிட்ட போலீசார், அங்கு எந்தவிதமான ரிக்கார்டுகளும் கிடைக்கவில்லை யென்று ரிப்போர்ட் எழுதிக்கொண்டு போய்விட்டனர்.

விருதுநகரில்

3–3–48ல் விருதுநகரிலுள்ள தோழகள் ஏ.வி.பி. ஆசைத்தம்பி, என். ராமசாமி, வி.ஏ.எம். வெள்ளையப்பன், பி. இரத்னசாமி ஆகியோர்களின் வீடுகளைச் சோதனையிட்டதில், தோழர்கள் ஆசைத்தம்பி, இராமசாமி ஆகியோர் வீடுகளிலிருந்து மட்டும் சில கடிதங்களைக் கைப்பற்றிச் சென்றனர்.

கடலூரில்

3–3–48ல் கடலூர் ஓ.டி.யிலுள்ள பகுத்தறிவுக் கழகத்தைச் சோதனையிட்ட போலீசார், கழகத் தலைவர் தோழர் எம்.கே.வேலு அவர்கள் பெயரையும், செயலாளர் தோழர் பி.ஏ. இளங்கோ அவர்கள் பெயரையும் குறித்துக்கொண்டு சென்றனர்.

வேலூரில்

4–3–48ல் வேலூரிலுள்ள தோழர் வி. திருநாவுக்கரசு அவர்கள் வீட்டைப் போலீசார் சோதனையிட்டு, சில கருப்புச் சட்டைகளை எடுத்துச் சென்றதோடு, தோழர் சி.பி.சின்னராசு அவர்கள் வீட்டையும் சோதனையிட்டு, கருப்புச்சட்டையையும், 'தீப்பொறி' பத்திரிகையையும் எடுத்துச் சென்றனர்.

செங்கற்பட்டில்

4–3–48ல் செங்கற்பட்டிலுள்ள தோழர் எம். சின்னையா அவர்கள் வீட்டை போலீசார் சோதனையிட்டு, அங்கு எதுவும்

கிடைக்காமல் போகவே, பிறகு தமிழர் உணவு விடுதியிலுள்ள ஒரு அறையைச் சோதனையிட்டதில், ஒரு கருப்புச் சட்டையையும் சில புத்தகங்களையும் எடுத்துச் சென்றனர்.

சோழவந்தானில்

*4–3–48*ல் சோழவந்தானிலுள்ள தோழர் டி. ஆவுடையப்பன் அவர்கள் வீட்டில் போலீசார் சோதனையிட்டதில் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஆலந்தூரில்

*4–3–48*ல் ஆலந்தூரிலுள்ள திராவிடர் கழகச் செயலாளர் தோழர் எம். கண்ணப்பன் அவர்கள் வீட்டைச் சோதனை யிட்டதில், போலீசார், கருப்புச் சட்டைகளையும் கழகக் கொடிகளையும் சந்தாப் புத்தகங்களையும் எடுத்துச் சென்றனர்.

துறையூரில்

*3–3–48*ல் துறையூரில் தோழர்கள் தூ.வி. நாராயணன் அவர்கள் வீட்டையும், டி.எம். பாலசுந்தரம் வீட்டையும், கு. கிருஷ்ணசாமி வீட்டையும், டி.ஆர். வீரண்ணன் வீட்டையும் சோதனையிட்டனர்.

திருப்பூரில்

*3–3–48*ல் திருப்பூர்த் திராவிடர் கழகத்தைப் போலீசார் சோதனையிட்டு, அங்கு ஒன்றும் கிடைக்கவில்லை என்று எழுதிக்கொண்டு போய்விட்டனர்.

திண்டிவனத்தில்

*4–3–48*ல் திண்டிவனத்திலுள்ள திராவிடர் கழகத்தையும், தோழர்கள் அப்பாண்டநாதன், பழனி ஆகியவர்கள் வீடுகளையும், சோதனையிட்டு கழக சம்பந்தமான புத்தகங்களை எடுத்துச் சென்றனர்.

வாணியம்பாடியில்

போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தனது பரிவாரத்துடன் வாணியம்பாடி 'திராவிடர் கழகம்' கட்டிடத்தில் சோதனை செய்தார். அவ்விடமிருந்து யாதொன்றும் பறிமுதல் செய்யப்பட வில்லை. அதன் பிறகு மாலை *5* மணிக்கு தோழர் சி. கோவிந்த ராஜன் வீட்டில் சோதனை போடப்பட்டதில் ஒன்றும் கிடைக்க வில்லை.

விழுப்புரத்தில்

விழுப்புரம் டாக்டர் தியாகராசன் வீடு–போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்–இன்ஸ்பெக்டர் மூவர், போலீஸ் கான்ஸ்டேபிள்

சிலருடன் சோதனை இடப்பட்டது. கழக சம்பந்தமான ரசீதுகள், சில கடிதங்கள், மாநாட்டு சம்பந்தமான குறிப்புகள் ஆகியவற்றை எடுத்துச் சென்றனர். *1–15* மணி நேரம் சோதனையிட்டார்கள்.

நடராசன் வீடு சோதனை இடப்பட்டது; ஒன்றும் கிடைக்கவில்லை.

ப. நடராசன் வீடும் சோதனையிடப்பட்டது.

இராசிபுரத்தில்

*3–3–48*ல் இரவு சுமார் *7* மணிக்கு இராசிபுரம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், 'பெரியார் மாளிகை' என்ற வீட்டுக்கு வந்து இயக்க கமிட்டி உறுப்பினர்கள் யார் யார் என்பதை விசாரித்துச் சென்றார்.

சேலம் குகையில்

சேலம் – குகை திராவிடர் கழகத்தை *3–3–48*ல் சேலம் நகர போலீஸ் அதிகாரிகள் சோதனையிட்டனர். இயக்க புத்தகங் களும் பத்திரிகைகளும் மட்டும் இருந்தன. ஒன்றும் எடுத்துக் கொண்டு போகப்படவில்லை.

தர்மபுரியில்

தர்மபுரி நகர திராவிடர் கழக தலைவர் திரு. பி.பொன்னுசாமி வீட்டையும் அச்சகத்தையும் உள்ளூர் போலீஸ் அதிகாரிகள் சோதனையிட்டார்கள்.

திராவிடர் கழக மினிட் புத்தகத்தையும் சில கழக மீட்டிங் விளம்பரத் துண்டுகளையும் எடுத்துச் சென்றனர்.

சிதம்பரத்தில்

4–3–48 காலை *8* மணிக்கு சிதம்பரம் திராவிடர் கழகத்தை சோதனை செய்வதாய் போலீசார் டவுன் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள எம்.கே. சுந்தரம் வீட்டையும், பக்கத்தில் *4* மைலில் உள்ள சாலியந்தோப்பு கிராமத்தில் சிதம்பரம் திராவிடர் கழகத் தலைவர் தோழர் கு. கிருஷ்ணசாமி வீட்டையும் போலீஸ் இன்ஸ்பெக்டர் போதிய சகாக்களுடன் வந்து சோதனைபோட்டு, விசாரித்துச் சென்றார்கள். யாதொரு ஆட்சேபகரமான பொருளும் கிடைக்கவில்லை.

– விடுதலை

தந்தை பெரியார் *93*வது பிறந்தநாள் விழாமலர் *1971*

உயர்நீதி மன்றத்தில் கருணாநிதி அபிடவிட்!

மனுதாரர் மு. கருணாநிதி

பிரதிவாதிகள்

1. எம். ராமன்

உதவி போலீஸ் கமிஷனர் சென்னை

2. போலீஸ் கமிஷனர்

சென்னை

3. பிரதம காரியதரிசி

சென்னை அரசு

4. எம். பக்தவத்சலம்

சென்னை முதலமைச்சர்

நான் 16.2.65 இரவு முதல் பிரதிவாதியால் கைது செய்யப்பட்டேன். என்னைக் கைது செய்வதற்கு முன் முதல் பிரதிவாதி 17ந் தேதி காலை வெளிவரும் முரசொலி தலையங்கம் குறித்துக் கேள்வி கேட்டார். முதல் பிரதிவாதி அது சம்பந்தமான 'புருப்'களைக் கேட்டார்; நான் மறுத்து விட்டேன். எழுத்துபூர்வமாக எழுதிக் கொடுத்தால் நான் அவற்றைக் காட்டுவதாகவும் கூறினேன். சென்னை நகரில் வேறுபாடின்றிச் சிறுவர்கள் கைது செய்யப்படும் செய்தி முரசொலியில் வெளிவந்தது குறித்து அவர் ஆட்சேபித்தார். 17ம் தேதி (சென்னைப் பதிப்பு) இதழில் நான் எழுதிய 'நீட்டோலை' பற்றியும், 'ஒரு கண்ணில் சுண்ணாம்பு' என்னும் தலையங்கம் பற்றியும் கேட்டார். நான் தர மறுத்து விட்டேன்.

அந்தத் தலையங்கம் நான் 16ம் தேதி பிற்பகல் எழுதியதாகும். நான் அந்தத் தலையங்க 'புரூப்'–ஐயும் பிரதிவாதிக்குத் தரவில்லை. 17ம் தேதி வரவிருக்கும் தலையங்கத்தின் 'புரூப்'பையும், செய்திகளின் – 'புரூப்'களையும் நான் காட்ட மறுத்ததால் அவர் என்னைக் கைது செய்து இரண்டாவது பிரதிவாதியின் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். என்னைக் கைது செய்ததற்கான காரணம் கேட்டேன். நான் போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். முதல் பிரதிவாதி முதலமைச்சர் திரு.பக்தவத்சலம் பற்றி முரசொலியில் எழுதிய தலையங்கம் பற்றிக் கேள்வி கேட்டார். 'சுழல் விளக்கு' பற்றி பற்றியும் நள்ளிரவு 12 முதல் 1.30 வரை கேட்டார்.

1.30க்குப் பிறகு நான் தூங்கினேன். விடியற்காலை 4 மணிக்கும் 4.30க்கும் இடையில் என்னை எழுப்பி போலீஸ் வேனில் ஏற்றினர். எங்கு கொண்டு போகிறார்கள் என்பது பற்றி என்னிடம் எதுவும் சொல்ல வில்லை. 17ம் தேதி காலை 8.30 மணிக்கு நான் திண்டிவனத்தில் இருப்பதை உணர்ந்தேன். திருச்சியிலும் மதுரையிலும் தங்க வைக்கப்பட்டு 18ம் தேதி காலை 8.45 மணிக்கு பாளையங்கோட்டைக்கு கொண்டு வரப்பட்டேன். வழியில் திருச்சியிலும், மதுரையிலும் நான் நெஞ்சுவலியால் அவதிப்பட்டேன்; எனக்கு மருத்துவ உதவி வழங்கப்பட்டது.

பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு என்னைக் கைது செய்த உத்தரவு எனக்குத் தரப்பட்டது.

3. நான் சென்னை சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவன். நான் தி.மு.க.வின் பொருளாளன்; தி.மு.க.வின் செயற்குழு உறுப்பினன்.

4. தனது லட்சியங்களும் திட்டங்களும் ஈடேற தி.மு.கழகம் அறவழியும், அரசியற் சட்டத்திற்கு உட்பட்ட வழியையும் கடைப்பிடிக்கிறது. கட்சி மேற்கொள்ளும் அறவழிகளிலிருந்து நான் மீறியதே இல்லை.

5. நான் காவலில் வைக்கப்பட்டிருப்பது தவறான நோக்கத்தின் மீதானதாகும்.

6. 14.1.65 அன்று நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டதில் மொழிப் பிரச்சினை மீது முதலமைச்சர் திரு. பக்தவத்சலத்தைத் தாக்கிப் பேசினேன். குறிப்பாக சென்ற முதலமைச்சர் மாநாட்டில் அவர் திறமைக் குறைவாக நடந்து கொண்ட விதத்தைத் தாக்கிப் பேசினேன். இந்த அரசாங்கத்தின் மீதுள்ள குறைகளை எடுத்துச் சொல்லி 1967ல் தி.மு.க. – ஆட்சியைக் கைப்பற்றும் என்றும் கூறினேன். இந்தி ஆட்சி மொழியாகும் 1965 – சனவரி 26ஐ

துக்க நாளாகக் கொண்டாடும் தி.மு.க. செயற்குழு தீர்மானத்தில் கையெழுத்திட்டவர்களில் நானும் ஒருவன். இந்தி ஆட்சி மொழியாவதைக் கண்டித்துக் கூட்டங்கள் நடத்துவதும், கறுப்புச் சின்னம் அணிவதும் அவரவர் வீடுகளில் கறுப்புக் கொடி கட்டுவதும்தான் வகுக்கப்பட்ட செயல் முறையாகும். ஊர்வலம் நடத்துவதை கட்சி அங்கீகரிக்கவில்லை. வன்முறைபிரயோகிப்பது என்பது கிடையாது. *26.1.65* ல் துக்க நாள் கொண்டாடினால் பயங்கர விளைவுகள் ஏற்படும் என்று முதலமைச்சர் திரு.பக்தவத்சலம் கட்சியை எச்சரித்தார்.

தி.மு.க. உறுப்பினர்களுக்கு எதிராக காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், அவர்களது கூட்டாளிகளும் தி.மு.க. உறுப்பினர்களுக்கு எதிராக ஆத்திரப் பேச்சுக்களைப் பேசினர். குடியரசு நாளுக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் பொது இடங்களில் கறுப்புக் கொடி கட்டக் கூடாது என்ற போலீஸ் கமிஷனர் சொல்லியிருக்கிறார். ஜனவரி *20*ம் தேதி மாதா கவுடர் என்னும் சட்டமன்ற உறுப்பினர் இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளைப் போல தி.மு.க.வினரையும் கைது செய்ய வேண்டும் என்று சட்டமன்றத்திலேயே பேசியிருக்கிறார். தி.மு.கழகம் அமைதிக்குப் புறம்பாக நடக்காமலிருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்ட சபையிலேயே முதலமைச்சர் திரு.பக்தவத்சலம் பேசியுள்ளார். சன. *26*ஐத் துக்க நாளாகக் கொண்டாடினால் தி.மு.க.வினருக்கு பயங்கர விளைவுகள் ஏற்படும் என்று *23.1.65*ல் பெரிய மேட் பொதுக் கூட்டத்தில் ஆத்திரமாகப் பேசியிருக்கிறார். சன. *26*–ந் தேதியன்று கலவரம் செய்வதற்காக ரவுடிக் கும்பல் காங்கிரசாரால் ஊக்குவிக்கப்படுகிறதா என்ற சட்ட சபையில் *23.1.65* வாக்கில் கேட்டேன். சபையில் சல சலப்பு எழுந்தது. துக்க நாள் கொண்டாடுவதற்குப் போலீஸ் பாதுகாப்பு இருக்காது என்று முதலமைச்சர் திரு.பக்தவத்சலம் கூறினார்.

எங்களிருவருக்கும் வாக்குவாதமும் நடந்தது. பிரஜைகளின் அடிப்படை உரிமைக்கு உட்பட்ட காரியங்களில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது அரசாங்கத்தின் முழு முதற்கடமை என்பதை திரு.பக்தவத்சலம் மறந்து விட்டார். *25.1.65* அன்று எனது தலைவர் ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதில் எதிர்க்கட்சியினர் வன்முறையை நாடினாலும் கழகத்தவர்கள் முழுக்க முழுக்க அறவழியையே கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டிருந்தார். *25.1.65* 'முரசொலி'யும் தலையங்க வாயிலாக தலைவரது அறிவுரைப்படி நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது. சன. *26*ம் தேதி நான் கோயம்புத்தூரில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவதாக இருந்தேன். போகும் வழியில் கரூரில் கைது செய்யப்பட்டேன். பின்னர் திருச்சி

துணைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். பிப்ரவரி 2ம் தேதி வாக்கில்தான் விடுதலை செய்யப்பட்டேன். நான் உட்பட எல்லா முக்கியத் தலைவர்களும் சன. 25லிருந்து பிப்ரவரி 1 அல்லது 2 வரை கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தோம். பிப்ரவரி 2ம் தேதி வாக்கில் அண்ணா அவர்கள் விடுதலையானதும் பத்திரிகைகளில் ஓர் அறிக்கை வெளியிட்டார். நீதிமன்றத்தில் வழக்குத் தொடரக்கூடிய குற்றங்களையோ, அல்லாத குற்றங்களையோ செய்யும் நோக்கமோ திட்டமோ எங்களுக்கு இல்லை. அடிப்படை உரிமைகளுக்கு உட்பட்ட அமைதியாக எதிர்ப்புக் காட்டுவதுதான் எங்கள் திட்டம் என்று அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

7. நான் 'முரசொலி' ஏட்டின் ஆசிரியர். 14.2.65 தேதிய 'முரசொலி' தலையங்கம் வன்முறையைக் கண்டித்திருக்கிறது. போலீஸ் அதிகாரிகள் மீது தவறில்லையென்றும் அவர்கள் ஆளுங்கட்சியின் குறிப்புப்படி நடக்கிறார்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அமைதியைக் காப்பாற்ற வேண்டுமென்று 16.2.65 முரசொலியில் மீண்டும் ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறேன். அந்தத் தலையங்கத்தில் முதலமைச்சரின் போக்கைக் கண்டித்திருக்கிறேன். பொது ஜன அமைதிக்கோ சட்டத்திற்கோ புறம்பான வகையில் நான் செயல்பட விரும்பியதுமில்லை – செயல்பட்டதுமில்லை எனக் கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

8. முரசொலியில் வெளியான கார்ட்டூன்கள் முதலமைச்சரை ஆத்திரமடையச் செய்திருக்க வேண்டுமென்று நான் கூறிக் கொள்கிறேன்.

19.1.65 'முரசொலி'யில் வெளியான கார்ட்டூன் தமிழ்த்தாயை முதலமைச்சர் பக்தவத்சலம் சுட எத்தனிப்பதாகச் சித்தரிக்கிறது. 29.1.65 முரசொலி கார்ட்டூன் தமிழுக்காக இந்தித் திணிப்பை எதிர்த்து சுய தியாகம் செய்து கொண்ட நால்வரது நரபலியில் முதலமைச்சர் பக்தவத்சலம் திருப்திப்படுவதாகச் சித்தரிக்கிறது. 5.2.65 முரசொலி கார்ட்டூன் முதலமைச்சர் பதவியை பக்தவத்சலம் கேலி செய்வதாக சித்திரிக்கிறது. 3.2.65 கார்ட்டூன் பக்தவத்சலத்தை ஜெயிலராகக் காட்டுகிறது. 7.2.65 கார்ட்டூன் முதலமைச்சர் பக்தவத்சலம் பழைய 'இந்தி – மதுவையே பரிமாறுவததாகக் காட்டுகிறது. 12.2.65 கார்ட்டூன் முதலமைச்சர் பக்தவத்சலம் ஒரு போலீஸ்காரராக மக்களைச் சுடுவது போலவும் அதைப் பார்த்து 'ஜாலியன் வாலாபாக்' புகழ் ஜெனரல் டையரின் ஆவி புகழ்வதாகக் காட்டுகிறது. இராணுவம் வரவழைக்கப் பட்டதையொட்டி வெளியான இன்னொரு கார்ட்டூன் முதலமைச்சரை ஒரு மேஜர் ஜெனரலாகக் காட்டுகிறது. 16.2.65 முரசொலி தலையங்கத்தில் நான் முதலமைச்சரது அடக்கு

முறையை வன்மையாகக் கண்டித்து அவர் இட்லரையும், முசோலினியையும் மிஞ்சிவிட்டதாக எழுதியிருக்கிறேன். இந்தத் தலையங்கம் மட்டுமே முதலமைச்சர் பக்தவத்சலத்தை எனக்கு எதிராக ஆத்திரமடையச் செய்திருக்கும். நான் தற்போது சிறையில் முழுக்க முழுக்க தனிமையில் அடைக்கப்பட்டிருப்பதால் எனக்கு அந்தப் பத்திரிகைகள் கிடைக்கவில்லை. எனது சார்பாக வாதம் நடைபெறும்போது அவை தாக்கல் செய்யப்படும்.

9. நானோ எனது கட்சியோ மாணவர் கிளர்ச்சித் திட்டம் பற்றி எதுவும் சொன்னதில்லை. சனவரி 26–ம் தேதி 'துக்க நாள்' கடைபிடித்ததோடு எங்கள் செயல்முறை முற்றுப் பெற்றுவிட்டது. காங்கிரசின் தலைவர்கள் சிலரே கூட மாணவர் கிளர்ச்சி பற்றி எழுந்த சம்பவங்களுக்கு தி.மு.க. பொறுப்பல்ல என்றும் இது பொது மக்கள் எழுச்சி அல்லது திடீரென்று எழுந்த பொது மக்களின் நடவடிக்கையென்றும் கூறியிருக் கிறார்கள். நான் காவலில் வைக்கப்படுவதற்கு முன்பாகக் கூட எனது தலைவர் அண்ணா அவர்கள் மாணவர்கள் கிளர்ச்சியை நிறுத்த வேண்டும் என்றும், அமைதி நிலவ உதவ வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

10. நானும் எனது கட்சியும் தேசப் பாதுகாப்பு முயற்சிகளுக்கு ஒத்துழைத்திருக்கிறோம். நானும் எனது கட்சியும் பாதுகாப்பு நிதிக்கு உதவியிருக்கிறோம். கழகத்தின் பொருளாளர் என்ற முறையில் நான் நிதி வசூலித்து அப்போதைய முதலமைச்சரிடம் தந்துள்ளேன்.

11. இந்தியப் பாதுகாப்புச் சட்டம் *30 (1)* பிரிவுக்கு உட்பட்ட எந்தவிதமான காரியங்கள் செய்யும் உத்தேசமோ, திட்டமோ எனக்கு இல்லை.

12. பாதுகாப்புச் சட்டப்படி என்னைக் காவலில் வைத்திருக்கும் உத்திரவு அரசியல் காரணங்களுக்காகப் பிறப்பிக்கப்பட்டதாகும். அதனால் இது தவறான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். நான் மேலே சொன்ன உண்மைகளின்படி முதலமைச்சருக்கு என் மீதுள்ள சொந்த விரோதத்தின் காரணமாக பிறப்பிக்கப்பட்டதாகும். பொதுவாக ஆளுங் கட்சியும், குறிப்பாக முதலமைச்சர் பக்தவத்சலமும் என்னிடமிருந்து எழும் அரசியல் எதிர்ப்பை நசுக்குவதற்காக இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

13. பிப்ரவரி 14ம் தேதி வாக்கிலேயே சென்னையைல் அமைதி நிலவ ஆரம்பித்தது. இந்தச் சூழ்நிலையில் இப்படியொரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது தவறான நோக்கத்துடனேயாகும்.

14. முதலமைச்சர் பக்தவத்சலம் என் மீது அரசியல் பழி தீர்ப்பதற்காகவே இந்த உத்திரவைப் பிறப்பித்து இருக்கிறார். நான் முன் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளின்படியும், கார்ட்டூன்களின் படியும், தலையங்கங்கள், பேச்சுக்கள், உண்மை ஆகியவற்றினால் ஆத்திரமடைந்தும் முதலமைச்சர் பக்தவத்சலம் சட்ட உத்திரவின் போர்வையில் தவறான நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு என்னைக் காவலில் வைக்க எனக்கு எதிராக உத்திரவிட்டுள்ளார்.

15. அரசாங்கம் என் மீது தடுப்புக் காவல் சட்டத்தைப் பிரயோகித்திருந்தால் நான் உரிமைகளை இழக்காத நிலைமையில் இருப்பேன். எனவே இந்தப் பாதுகாப்புச் சட்டத்தை நாடியிருப்பது அதிகாரத்தை மோசடியான வழியில் பிரயோகித்ததாகும். அதனால் இந்த உத்திரவு தவறான நோக்கத்தினதாகும. இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி என்னைக் காவலில் வைக்க எந்தவித முகாந்திரமும் இல்லை. நான் பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பேன் என்று கருதினால் மாநில அரசாங்கம் தடுப்புக் காவல் சட்டத்தைப் பிரயோகப்படுத்தியிருக்கலாம்; என்னைவேறு வழியில் காவலில் வைக்கக் காரணமில்லையாதலால் இந்தியப் பாதுகாப்பு சட்டம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

16. முதலமைச்சர் பக்தவத்சலம் என்னை அரசியல் பழிவாங்குவதற்கு முனைந்திருக்கிறார். அதனால் பொது அமைதி குலைத்ததாக தண்டனை வழங்கக்கூடிய வேறு சட்டங்களின்படி நான் விசாரிக்கப்படவில்லை. நீதிமன்றத்தில் குற்றம் சாட்டக்கூடிய அல்லது கூடாத எந்தக் குற்றத்தையும் செய்யும் நோக்கமோ திட்டமோ எனக்கு இல்லை. என்னுடைய எல்லா உரிமைகளையும் சேர்த்துப் பறிக்கும் கெடுபிடி உத்திரவைப் பிறப்பித்திருக்கிறது.

பக்தவத்சலம் அரசியல் துர் எண்ணத்தில் தூண்டப்பட்டு என் மீது அரசியல் பழி வாங்கும் நோக்கத்தோடு இந்த உத்திரவைப் பிறப்பித்திருக்கிறார்.

17. என்னைக் கைது செய்யவேண்டுமென்ற நோக்கத்தை சூடேற்ற இந்த அரசாங்கம் தடுப்புக் காவல் சட்டத்தையோ அல்லது வேறு சட்டங்களையோ பயன்படுத்தியிருக்கலாம். அப்படி பயன்படுத்தாததே இந்த உத்திரவு தவறான நோக்கத்தினது ஆகும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

18. சனவரி 26 துக்க நாள் பக்தவத்சலத்தால் துரோகம் என்று வர்ணிக்கப்பட்டது. அந்த நெருக்கடியான நேரத்தில் கூட இ.பி.கோ. 151வது பிரிவின் கீழ்தான் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தேன். இப்போது என் மீது பாதுகாப்புச்

சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பது தவறான நோக்கத்துடன்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

19. இந்த உத்திரவு சென்னை அரசாங்கம் நான் பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பேன் என்பதே போதுமான காரணமாக எண்ணி கூறுகிறது. ஆனால் தனி நபர்கள் யாரும் அப்படி நம்புவதாகக் கூறவில்லை. அதனால் இந்த உத்திரவு சட்ட விரோதமானதாகும்.

20. முதலமைச்சர் பக்தவத்சலம் அண்மையில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு தி.மு.க. பிரச்னையில் தனது தோல்வியை மறைப்பதற்காகவும், தன்னுடைய தவறான விமரிசனத்தை நிலை நாட்டுவதற்காகவும் என் மீது நேரடி குரோதம் கொண்ட பக்தவத்சலம் இந்த உத்திரவு பிறப்பிப்பதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்.

21. தருமபுரி உபதேர்தல் வரும் ஏப்ரலில் நடக்கவிருக்கிறது. திருவண்ணாமலை உபதேர்தலில் சென்னை மந்திரிகளும், முன்னாள் மந்திரிகளும், ஆளுங் கட்சிக்குள்ள எல்லா வசதிகளோடும் காங்கிரசை வீழ்த்தக் காரணமாக இருந்த மிக முக்கிய சக்திகளில் நானும் ஒருவன். தருமபுரி தேர்தலில் தி.மு.க. வேட்பாளரின் வெற்றிக்காக நான் பாடுபடாமலிருக்கத் தடுப்பதற்காகவே முதலமைச்சர் இந்த உத்திரவை என் மீது தவறாகப் பிரயோகித்து இருக்கிறார்.

இந்த மனு விசாரிக்கப்படும்பொழுது எனது வழக்கறிஞருக்கு உதவியாக இருக்கும் பொருட்டு என்னைக் கோர்ட்டுக்கு வர அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். என்னை விடுதலை செய்வதாக இருந்தால் என்னை இந்த நீதிமன்றத்தில் வைத்தே விடுவிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிடில் பாளையங்கோட்டையிலிருந்து நான் சென்னைக்கு வரும் வழியிலேயே மீண்டும் கைது செய்யப்படலாம்.

— முரசொலி

பொன்விழா மலர், *02.03.1965*

கிண்டலா? தாக்குதலா?

– கண்ணதாசன்

இரண்டு இதழ்களைக் கண்ட தோழர்களின் கைக்கு இந்த மூன்றாவது 'தென்றல்' வருகிறது. வரவேற்பும் வாழ்த்தும் தென்றலுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டுகின்றன. வரவேற்றவர்களிலும் வாழ்த்தியவர் களிலும் சிலர் குறைகளும் கூறியுள்ளார்கள். உதாரணமாக சென்னையைச் சேர்ந்த தோழர் என். நாராயணன் என்பவர், முதல் இதழைப் பாராட்டி விட்டு, இரண்டாவது இதழைப் பற்றிக் குறிப்பிடுகையில், "நேரடித் தாக்குதல் வேண்டாம்: அது அண்ணா அவர்களின் கொள்கைக்கு முற்றும் புறம்பானது" என்று கூறுகிறார். தோழர் கருணாநிதியும் இதே கருத்தைக் கூறினார். மற்றும் சிலர் இதுபற்றிக் குறிப்பிட்டு எழுதியுள்ளனர்.

* * *

இதைப் பார்க்கும்போது உண்மையிலேயே நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. மக்கள் எந்தப் பாதையை விரும்புகிறார்கள்: எதற்குப் பண்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டோம். நயமான வழியில் நாட்டமா, அல்லது கோபாவேசத்தை விரும்புகிறார்களா என்று புரியாமல் இருந்தோம். நாம் பயந்தபடி இல்லை; மக்கள் அண்ணாவின் நளினத்துக்கு முற்றும் பண்பட்டுவிட்டார்கள் என்பதை அறிய உண்மையில் மகிழ்கிறோம். மேடையையும் பத்திரிகையை யும் குடுகுடுப்பைக்காரன் சட்டை மாதிரி ஆக்கி விட்டிருக்கிறார்களே எதிர்க்கட்சிக்காரர்கள். அவர் களுக்கு உண்மையில் நாட்டு மக்களிடையே மதிப்பு

இருக்கிறதா, இல்லையா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை என்பது தெரிகிறது. தாக்குதல், நேரடியாகக் கூடாது என்பதே இதுவரை நமக்கு வந்துள்ள கடிதங்களின் கருத்தாகும்.

* * *

உண்மையில் இரண்டாவது இதழில் வெளிவந்த தாக்குதல்கள் – நேரடியானவை – மக்களின் மனப்பான்மையை அறிந்து கொள்ளச் செய்யப்பட்ட முயற்சியே தவிர வேறில்லை. முதல் இதழ் நளினமாகவும், இரண்டாவது இதழ் கோபாவேசமாகவும் இருந்ததற்கு இதுதான் காரணம். நயமும் நளினமும் நமக்கே உரித்தானவை; எனவே தென்றலின் பாதையும் நிச்சயமாக அப்படித்தான் இருக்கும்.

* * *

மக்கள், தாக்குதலை விரும்பியிருந்தாலும்கூட நாம் அதைப் பின்பற்றுவதாக இல்லை. ஏனென்றால் அரசியல் நாகரீகம் கற்றுத்தந்த அண்ணாவுக்கு தம்பியாக இருக்கும் தகுதியை அது கெடுத்துவிடும். உண்மையைச் சொன்னால், இவ்வளவு நாட்களாக அண்ணா அவர்கள் சொல்லி வந்த, 'கண்ணியம்' நாட்டு மக்களால் எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கப் பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்தறிய எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிதான், சென்ற இதழில் வந்த தாக்குதல். அடேயப்பா!எவ்வளவு ஒழுங்காக நமது மக்கள்அதைப் பின்பற்றி வருகிறார்கள்! சிறு சொல்லும் தவறாக விழுவதை "ரசிக்க மாட்டோம்" என்று கூறும்வரை அல்லவா பண்பட்டிருக்கிறார்கள்! நல்ல பதிலைக் கொடுத்து, நம்பிக்கையூட்டிய நண்பர்களுக்கு என் நன்றி.

* * *

தாக்குதல் கொடுக்கும் பலனைக் காட்டிலும், கிண்டல் முறை பலன் தரும் என்பதை நான் பல ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்து கொண்டேன்.

அப்போது 1946–ம் ஆண்டு என்று நினைவு – இரண்டாவது எழுத்தாளர் மகாநாடு நடந்து கொண்டிருந்தது. காலையிலிருந்து மாநாடு சகிக்க முடியாத 'போர்' அடித்துக் கொண்டிருந்தது. நாமக்கல் ராமலிங்கம், டி.எஸ்.சொக்கலிங்கம், தினமணி வெங்கடாச்சாரி, ஹிந்து ரகுநாதன், சுதேசமித்திரன் சீனிவாசன், நாரண துரைக்கண்ணன், ரா. நாராயணன், பெ. தூரன்; அப்போது கல்வி அமைச்சராக இருந்த அவினாசிலிங்கம், ப.ஜீவானந்தம், ம.பொ. சிவஞானம், கல்கிப் பத்திரிகையின் உதவி ஆசிரியர்கள் மற்றும் பல எழுத்தாளர்களும் அந்த மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டனர். எல்லோரும் வழவழவென்று வெண்டைக்காயோடு

விளக்கெண்ணையைச் சேர்த்தது மாதிரி பேசி தலைவலியை வரவழைத்தனர். தோழர் நாமக்கல் ராமலிங்கம், 'ராகவன் என்பவன் ராஸ்கேல் ஆனான்' என்று பாட்டு எழுதுகிற 'தனக்கே உரித்தான' பாணியிலே 'ஆரியமாவது திராவிடமாவது' என்று, தான் எழுதியதைப் படித்து, எழுத்தாளர்கள் "போதும்!" என்று சப்தம் போட்டபிறகே நிறுத்தினார். திடீரென்று கொட்டகை அதிர்ந்தது. கைதட்டல் ஓய பத்து நிமிடம் பிடித்தது. ஒருவேளை நாமக்கல்லாருக்குத்தான் இந்தக் கைதட்டுதலோ என்று நான் ஆச்சரியப்படும் சமயம், அண்ணா வந்தது தெரிந்தது. அதுவரை அண்ணாவை நான் நேரில் பார்த்தது கிடையாது. நான் இயக்க ஆதரவாளன்கூட அல்ல. ஆனால் இவ்வளவு ஆரியர்கள் இருக்கிற இடத்திலே நமக்கொரு தலைவர் வந்து விட்டார் என்கிற மாதிரி ஒரு தெம்பு ஏற்பட்டது. மனதில் ஒரே உற்சாகம். கைதட்டுவதில் முன்னின்று உற்சாகம் காட்டியவர், தோழர் சிவஞானம்தான் என்றால் யூகித்துக் கொள்ளுங்களேன். (அப்போதுதான் நாரதர் சீனிவாசராவுடன் சண்டை போட்டு "இழிந்த பார்ப்பான்! பார்ப்பான்!" என்று திட்டிவிட்டு ஓய்ந்திருந்தார், மா.பொ.சி.)

அண்ணாவைப் பேசச் சொல்வார்களா, மாட்டார்களா என்று மாநாட்டில் இருந்த பார்ப்பனரல்லாத எழுத்தாளர்களுக்குள் சலசலப்பு வந்தது. விஷயம் என்ன முடிவுக்கு வந்திருக்கிறது என்று தெரிந்து கொள்ளாமலேயே "அண்ணா பேச வேண்டும்! பேசச் சொல்லுங்கள்!" என்று சப்தம் போட ஆரம்பித்தோம். ஹிந்துஸ்தான் நாராயணன் உடனே 'மைக்' அருகில் வந்து "அண்ணாத்துரை கண்டிப்பாகப் பேசுவார்" என்று அறிவித்தார். ஒரே கைத்தட்டல்! (இத்தனைக்கும் திராவிட இயக்கத்து எழுத்தாளர்களே அதில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.)

பிறகு தோழர் அவினாசிலிங்கம் "ஆண்டவன் அருளாலே ... ..." என்று ஆரம்பித்து, ஆயிரம் ஆண்டவன் போட்டுப்பேசி முடித்தார். பிறகு அண்ணா பேச வந்தார்.

"தோழர்களே! பெரியோர்களே! தலைவர் அமைச்சரைக் கூப்பிட்டுவிட்டு அமர்ந்தார்: அமைச்சர் ஆண்டவனைக் கூப்பிட்டுவிட்டு அமர்ந்து விட்டார். அமைச்சர் விரும்பும் ஆண்டவன் அருள், வேண்டி வருவதல்ல. ஏன், நாமக்கல் கவிஞர்கள் போன்ற பக்தர்கள் இருக்கும் இடத்தில் ஆண்டவன் அருளுக்குக் குறைவா என்ன! ......

.... எழுதுவதென்றால், இனி வியாசரைப்போல் எழுதினான் என்று கூறிவிடாதீர்கள்: டி.எஸ். சொக்கலிங்கத்தைப் போல் வீரமாக உணர்ச்சியோடு – எழுதினான் என்று கூறுங்கள்....."

குறைந்த வரிகளே கூறியுள்ளேன், அவர் பேசியதில். ஒவ்வொரு வரியையும் படித்துப் பாருங்கள். நயமான சூடு–கிண்டல்–யார் இதில் தவறான வார்த்தைகளைக் காணமுடியும்?

நாமக்கல்லார் தலையைக் குனிந்தபடி இருந்தார்: சொக்கலிங்கம் உச்சி குளிர்ந்து உட்கார்ந்திருந்தார்: அமைச்சர் அவினாசி ஓடிவந்து அண்ணாவைக் கட்டிக்கொண்டார்! (இதிலிருந்துதான் சிவஞானத்தின் பொறாமையும் ஆரம்பம் என்பதையும் கூறாமல் முடியாது)

* * *

இதுபற்றி 'சக்தி' காரியாலயத்தில் பேசிக்கொண்டிருக்கும் போது பெரியார் வ.ரா. குறிப்பிட்டார், "சண்டாளனையா அண்ணாத்துரை! ஒவ்வொரு வரியிலேயும் கொன்னு கொன்னு தூக்கி எறிஞ்சான்!" என்று. இப்போது 'மஞ்சரி' ஆசிரியராயிருக்கும் தி.ஜ.ர. மஞ்சரி ஈஸ்வரன் ஆகிய எழுத்தாள நண்பர்கள் அப்போது உடனிருந்தனர்.,

* * *

ஆக, கிண்டல் அளிக்கும் பலனைக் கண்ணாலே கண்டவன் நான். எத்தனை பேர் மனதை அது மாற்றியது என்பதையும் அறிவேன். தாக்குதலில் நேரடி முறை, பலவீனத்தைக் குறிக்கும் என்பது எனக்குப் புரியும். "அண்ணாவழியே திண்ணிய வழி" எனத் தொடர்வதற்கு, நண்பர்களின் கடிதங்கள் எனக்கு வழிகாட்டிவிட்டன.

* * *

நிற்க: முதலாவது இதழில் நமது இயக்கப் பத்திரிகைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது முக்கியமான மூன்று பத்திரிகைகளை மறந்து விட்டமை குறித்து வருந்துகிறேன்.

வில்லாளனின் 'தம்பி'–பூமாலை, தூத்துக்குடி 'கிளர்ச்சி' தோழர் கண்ணனின் 'பகுத்தறிவு' ஆகியவையே அப்பத்திரிகைகள். இந்தப் பத்திரிகைகளின் சிறப்புப் பற்றி அதிகம் கூறுவது, "பூக்கடைக்கு விளம்பரம்" போடுவதாக முடியும். காரணம் எல்லாத் தோழர்களும் ஆவலோடு படிக்கும் பத்திரிகைகள் மேற்கண்டவை. இயக்கத்தின் முன்னோடும் பிள்ளைகளில் இவை முக்கியமானவை என்பதை மறுக்க முடியாது.

– **தென்றல்**

06.07.1954

மூலிகை, மலைமீது

பத்திரிகை உலகம் பார்ப்பனரிடமே பெரிதும் இருக்கிறது, இதனால் திராவிடர்களுக்கு மனக்குறைவு ஏற்படுவதும், தமக்கு ஒரு உயர்நிலை தேவை என்ற எண்ணமுண்டாவதும், இந்தத் துறையிலே இருப்பதுபோலவே, மற்றத் துறைகளிலுமிருப்பதால், திராவிட நாடு திராவிடருக்கானால்தான் இந்தக் குறை தீர்க்கப்பட முடியும் என்று எண்ணமுண்டாவதும் இயற்கை. எனவேதான் திராவிடஸ்தான் கோரிக்கை உண்டாகி இருக்கிறது.

என்று, காசா சுப்பாராவ் என்ற பார்ப்பன ஆசிரியரே சின்னாட்களுக்கு முன்பு, ஒரு பொதுக் கூட்டத்திலே பேசினார். அவர் இதுபோது பத்திரிகை ஆசிரியர் வேலையிலே இருந்து விலகவும் நேரிட்டதாகக் கேள்விப்படுகிறோம். உண்மையை அவர் எடுத்துக் கூறியதற்காக நாம் மிகப் பாராட்டுகிறோம்.

பத்திரிகைகள், ஆரியரிடம் சிக்கிக் கொண்டிருப்பதனால், நேரிட்டுள்ள கேடுகள் கொஞ்சமல்ல! உண்மை உருக்குலைக்கப்பட்டு, நேர்மை கெட்டு, நச்சு நினைப்புகளும் நாசகால நிந்தனைகளும் கிளம்பி, ஒற்றுமை குலைந்து, வேற்றுமை மிகுந்து போயிருப்பதற்குள்ள முக்கியமான காரணம், ஆரியரின் ஆதிக்கத்திலே உள்ள ஏடுகள், கட்டுப்பாடாகவும், சாதாரண, மிகச் சாதாரண மரியாதையை மறந்தும், திராவிடரின் நிலைக்கு ஊறுதேடும் காரியத்தையே செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதுதான். "போர்க்கருவி எம்மிடம் இருக்கும்போது, நாங்கள் அவைகளை உபயோகியாமல் இருப்போமா?'' என்று ஆரியர் ஆணவத்தோடு

கேட்கவுங்கூடும். இந்த ஆணவத்தால், திராவிடர் பல இன்னல் களை அடைகின்றனர். நல்ல பிரச்னைகள் நலிகின்றன, பொய்ம்மைக்குப் பீடமும், உண்மைக்குக் கல்லறையும் கிடைக்கிறது. என்றபோதிலும், இதனால் திராவிடருக்கு உண்டாகும் கேடுகளைவிட, ஆரியருக்கே கேடு அதிகம் என்று நாம் அறிந்து கூறுகிறோம். மாற்றார் என்று திராவிடரைக் கருதிக் கொண்டு, அவர்கள் வெட்டும் படுகுழி ஆழமானது, பயங்கரமானது வீழ்வோரை மாய்க்கக்கூடியது, ஆனால் அந்த ஆழக்குழியை அவர்கள் அதிக கஷ்டப்பட்டு வெட்டி வெட்டி, ஓயாது வேலை செய்து, மெலிந்து, களைத்து அதன் ஓரத்திலே ஓய்வுக்காக உட்காரும் சமயம், அப்படுகுழியிலே வீழ்வதற்காக, விரட்டப்பட்டு வரும் திராவிடத் தோழர்கள் கிளப்பும் கால்தூசு புயலெனக் கிளம்பி, படுகுழி வெட்டியவர்களைக் குழியிலே வீழச்செய்து விடும்! இதனை உணரவில்லை, ஏடுமூலம் நாடு கெடும் தீயச் செயலைச் செய்யும் திருப்பிரமங்கள். இன்று திராவிடர், ஆரியர் போராட்டம், இந்த அளவுக்குவந்திருப்பதற்குக் காரணமே, பத்திரிகை உலகிலிருந்து கொண்டு ஆரியர்கள் வளர்த்த துவேஷந்தான்.

முஸ்லீம்கள் விஷயத்திலே, பத்திரிகைகள் இவ்விதம் நடந்துகொண்டதன் விளைவு, காந்தியாரை, ஜின்னா மாளிகைக்குச் சென்று பேசச் செய்திருக்கிறது, அந்தப் பேச்சு வெற்றி பெற வேண்டுமென்று பிரார்த்தனை செய்ய வேண்டிய நிலைமைக்கு, "நாட்டின் நாயகர் நாங்களே" என்று நவின்றவர் களைக் கொண்டு வந்துவிட்டது, எழுதுகோலுக்கும் அறிவுக்கும் பொருத்தமேற்படுத்திக் கொண்டால், இந்த ஆரியர்கள், முஸ்லீம்கள் விஷயமாக நடந்துகொண்டதன் விளைவை உணர்ந்து இனியேனும், திராவிடர் சம்பந்தப்பட்ட விஷயத்தில் சரியாக நடக்க வேண்டும் என்ற எண்ணத்தைப் பெறலாம். இல்லை, எமது இயல்பை மாற்றிக்கொள்ள மாட்டோம் என்றே அவர்கள் கூறுவரேல், கேடுவருமுன் மதிகெட்டுத்தானே விடும் என்று நாம் இருப்போம், நாளை நடப்பதை யாரறிவார்! என்று தெரியும் நமக்கு, இன்று திராவிடன் என்ற உணர்ச்சி பெற்றவர்கள், ஆரிய ஆதிக்கத்திலிருக்கும் ஏடுகளை, நாட்டின் களைகள் என்று கருதுகிறார்கள். அவர்களின் தொகை குறைவாக இருக்கலாம். குறைமதியினர் நிறைய இருக்கலாம் இந்தக் குணங்கெட்டவர் களின் குறுநகையில் சொக்கி, ஆரிய ஏடுகளை வேதமென நம்பிக்கொண்டு! வேதத்தையே பேதமெனும்– பித்தத்தை வளர்த்த ஓலை என்று கருதும் கூட்டம் இருக்கிறது இந்நாளில். அவர்கள் இந்த ஆரிய ஏடுகளை, வீரிய முடையோரைக் கெடுக்க, குலுக்கி மினுக்கி, கடை இடை காட்டி, காமத்தீ மூட்டி, கண்ணியத்தை ஓட்டி, அறிவைக் கருக்கி, ஆண்மையைச் சுருக்கி, பாசமெனும்

படுகுழியில் வீழ்த்திடும், நாசகால நாரி எனவே மதிக்கின்றனர். இங்ஙனம் கருதுவோரின் தொகை மிகக் குறைவாக இருக்கலாம். ஆனால் அந்தத் தொகை வளர்ந்துகொண்டு வருகிறது, அதனை உணராதார், அறிவை இழந்தார் என்போம்.

சேலத்திலே கூடிய ஜஸ்டிஸ் மாநாட்டிலே, செவ்விள நீர் பருகச் சென்ற மந்தியைச் செந்தேள் தீண்டினால், அது எங்ஙனம், தக தகவென ஆடித், தாவித் தவிக்குமோ அது போலப் பெரியாரை வீழ்த்த வலை வீசி, அவ்வலையிலே தாமே வீழ்ந்து, பின்னர் அடைக்கலப்பத்தும், அபயஅகவலும், துதிமாலையும் பாடி, தப்பினரோ, அவர்களின், தப்புரைகளை, இன்று, ஆரிய ஏடுகள், தாராளமாக எடுத்து எழுதுகின்றன. திராவிடரிடையே "பிளவு" என்று கூறிப்பூரிப்பதும், பெரியாருக்கு ''எதிர்ப்பு'' என்று எழுதுவதும், பெரியார் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து ஓடிவிட்டார் என்று உளறுவதும், இன்று அவர்களுக்கு, இனிப்பாக இருக்கிறது. இந்தச் சமயத்திலாவது இந்த ஏடுகளுக்கு அறிவுத் தெளிவும், நீதியில் நாட்டமும் ஏற்பட்டிருக்கலாகாதா என்பதே நமது கவலை.

பட்டம் பதவி கூடாது, என்று தீர்மானித்து, அதன் பலனாகப், பல பங்களாக்களின் பகையை வரவேற்றுக்கொண்டிருக்கிறது கட்சி. தேர்தலுக்குத் தம்பட்டம் தயாரிக்கும் இடமாகக்கருதப்பட்ட இடம், திராவிடநாட்டு விடுதலைக்குப் பாசறையாக்கப்பட்டிருக்கிறது. ஆரிய ஏடுகளுக்குப் பட்டம் பதவியிலே வெறுப்பும், அரசியல் சூதாடிகளிடத்திலே அருவருப்பும் இருப்பது உண்மையானால், எந்தக் கட்சியை அதே ஏடுகள் பட்டம் பதவிக்காகவே உள்ள கட்சி என்று கண்டித்தனவோ, அதே கட்சியிலே பட்டம் பதவி கூடாது என்று தீர்மானம் செய்திருப்பதை, வரவேற்றுப் பாராட்டியிருக்க வேண்டாமா, நீதியிலே நினைப்பு இருந்தால், நீதி வேண்டாம், அதை மறந்து நெடுங்காலமாகிவிட்டிருக்கக்கூடும், யூகமாவது இருக்க வேண்டாமா? பட்டம் பதவிகளை விட்டுவிட வேண்டுமென்று கூறும் கூட்டத்தை ஆதரித்து எழுதி, அதன்மூலம், நாட்டை ஆளுவோருக்கு, அவர்கள் மீது, ஜஸ்டிஸ் கட்சிக்கும் விருப்பம் இல்லை, என்பதை எடுத்துக்காட்ட வேண்டாமா? நாட்டிலே பிளவுகூடாது என்று பெருங்குரலிலே பேசும் இவர்கள், ஒரு கட்சியின் நினைப்பிலும் நிலையிலும் ஒரு பெரியமாறுதல் நேரிடுகிற இந்தச் சமயத்திலே, பட்டம் பதவிக்குப் பல்லிளிக்கும் ஒரு சிறுகும்பலையா ஆதரிப்பது! இது நேர்மையா, அறிவுடைமையா, யூகத்தின் பாற்பட்டதா! இல்லை! ஆணவத்தால் விளையும் அறிவீனம் என்போம். ஒரு ஏடு, பெரியாருக்கு இந்தத் தள்ளாத வயதிலாவது இந்த ஞானோதயம் வந்ததே அதுவரையிலே சந்தோஷம் என்று எழுதியிருக்கிறது. பெரியாருக்கு "ஞானோதயம்"

இந்த ஆரியக்கும்பலைவிட்டு வெளியேற வேண்டுமென்று என்று நினைத்தாரோ அன்றே ஏற்பட்டது. குருகுலப் போராட்ட காலத்திலேயே அவருக்கு 'ஞானோதயம்' ஏற்பட்டது. இன்று ஏற்பட்டதாக எழுதும் "பாரததேவி" என்ற ஏடு, அதுபோது கருவிலே கூட இல்லை, அதன் தாய்க்குத் திருமணப் பருவம்கூட இல்லாதபோதே பெரியார், உண்மையை அறிந்து, ஊருக்கு உரைக்க ஆரம்பித்து, தள்ளாத வயதிலே தன்னைச்சுற்றித் திராவிடர் பெருங்கூட்டமாக நின்று, 'எமது தலைவர் பெரியாரே!' என்று, ஏத்தி ஏத்தித்தொழும் காட்சியைக் காண்கிறார்! இது பாரததேவியின் கண்களுக்குத் தெரியக் காரணம் இல்லை! எப்படி இருக்கும், "அன்னையே, பாரததேவியே! உன்னை வெட்டுவதற்குச் சிலர் முனைகிறார்கள். நான் அதனைத் தடுப்பேன்" என்று உறுதிகூறித் தன்முன்னே உடைவாளோடு நின்று காவல்புரிந்த காந்தியாரும் ஆச்சாரியாரும், பாரதமாதாவை வெட்டுவது, மயக்க மருந்து (குளோரோபாரம்) கொடுத்தா, கொடுக்காமலா? குறுக்குவாட்டிலா, நீளவாட்டிலா, என்று விவரம் விசாரிக்க, ஆருடம் சகுனம்பார்த்து, ஆசிகேட்டுப்பெற்றுச் சென்றிருப்பதைக் கண்டு, கண்ணீர் கலங்கி இருக்கிற பாரததேவிக்குப், பெரியாரின் உயர்நிலை தெரியாதிருக்கலாம், நமக்கு அது பற்றிக் கவலையில்லை. ஆரிய ஏடுகள், தமது விஷமத் தனமான செயலால், திராவிடருக்கு மனப்புண் உண்டாகும் படி செய்கின்றன. அந்தப் புண் தீரும் மூலிகை, விந்தியமலை உச்சியிலே இருப்பதை நாம் அறிவோம். அந்த மலையையே எல்லையாகவும் அரணாகவும் கொண்ட "திராவிடநாடு" அமையத், திராவிடப் பெருங்குடிமக்கள், தளராது உழைக்கத் தொடங்கிவிட்டனர். ஆரியம் அஸ்தமித்துத் திராவிடம் உதயமாகும் காலம் இது. குருடனுக்குக் கதிரவனின் இளங்கதிர் தெரியாது, செவிடனுக்குச் சேவல்கூவுவதும் கேட்காது, திராவிடரின் எழுச்சியை அகந்தைக்கொண்ட ஆரியர் அறியார், அறிவுள்ளோர் அறிவர்.

– **திராவிட நாடு**
17.09.1944

ஏடுகளே புரட்சி ஆயுதங்கள்: தடை போட்டால் படையாகும்

ராமராஜ்ய தர்பார் ஆரம்பமாகி விட்டது. அவர்கள் ஆட்சிக்கு வந்து விட்டார்கள் என்பதை எப்படி காட்டுவது? அனுமார் இலங்கைக்கு வந்திருப்பதை எப்படிக் காட்டியதாக கதையிருக்கிறது, அதுபோல!

காங்கிரஸ் ஆட்சி பீடம் ஏறியிருக்கிறது என்றால், சர்வாதிகாரம் முடி சூடிக்கொண்டிருக்கிறது என்று அர்த்தம் – அவர்கள் பதவியில் அமர்ந்திருக்கிறார்கள் என்ற சேதியே, அடக்குமுறைக்கு ஆனந்தத்தையும், ஆர்பாட்ட வெறிச் செயல்களுக்கு கும்மாளத்தையும்தான் கொடுக்கும்.

அவர்கள் வந்து மாதம் ஒன்று கூட முடியவில்லை காலண்டரில் ஒரு சீட்டு கிழிந்து விழுவதற்கு முன்னாலே, அடக்குமுறை குதியாட்டம் போட ஆரம்பித்துவிட்டது.

சோவியத் சம்மந்தமான புத்தகங்களை, பத்திரிகைகளை, புகைவண்டி நிலையங்களில் விற்கக் கூடாது என்று தடுத்திருக்கின்றனர், இந்த ஆட்சியார்கள்.

ஏடுகளைப் படிக்காதே, எங்களோடு சேர்ந்து, போடு எதற்கும் பஜகோவிந்தம் என்று கூறுகிறார்கள்.

படிப்பதை தடுக்கிறது, ஒரு பரிபாலனம் – இவர்கள் வேறு வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்கிறார்கள், இந்த ஆட்சிக்குப் பெயர் ஜனநாயகமென்று – வெட்கம்! வெட்கம்!!

நம் இயக்க ஏடுகள் பலவற்றை இப்படித்தான் தடுத்தார்கள். ஆனால் நீதிமன்றத்திற்குப் போய் முகத்தில் கரியைப் பூசிக்கொண்டார்கள், இந்த ஆட்சியாளர்கள்.

நம் இயக்க எழுத்தாளர்களையெல்லாம் தொல்லைமேல் தொல்லை அனுபவிக்க வைத்தார்கள்.

இப்பொழுது மீண்டும், கொடி கட்டிவிட்டார்கள், தங்கள் அடக்குமுறை ஆர்ப்பாட்டத்திற்கு!

ரஷ்ய இலக்கியங்கள், மறுமலர்ச்சி மலர்கள். அம்மலர்களை கசக்கி யெறியும் மந்தியாகிறார்கள்.

ஆனால் அதே நேரத்தில் அமெரிக்க இலக்கியங்களும், ஏடுகளும், விற்கப்படுகின்றன. அமெரிக்காவுக்கு அடிபணிந்து கிடக்கும் ஆட்சியாளர் ஓரவஞ்சனையோடு நடந்துகொள்வதுதான் வேதனை தருகிறது.

இந்திய சர்க்கார், உலக நாடுகளோடு நட்புறவு கொண்டுள்ள தாக வேறு பெருமை பேசுகிறது – இதுதான் நட்பின் இலட்சணமா? நேச மனப்பான்மைக்கு அடையாளமா?

திராவிட இயக்கம் ஒரு மறுமலர்ச்சி இயக்கம், அதன் அறிவுப் பிரச்சாரம் கனவேகமாகப் பரவுகிறது. ஆகவே, அதன் அறிவாயுதத்தைப் பிடுங்கிவிட வேண்டும் என்றுதான், முயற்சி செய்தார்கள். ஆனால், அவர்களின் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டது, அறிவியக்கம் என்பதை அவர்கள் உணரும்படிச் செய்துவிட்டது காலம். அவர்கள் இப்போது தங்கள் முடிமீட்சிக்குப் பிறகு பொதுவுடைமை இயக்கத்தின் மீது பாய்வதன் மூலம், மறுபடியும் தங்கள் இழிகுணத்தைக் காட்டியிருக்கிறார்கள்.

மறுமலர்ச்சி எண்ணத்தைத் தூவும், சோவியத் ஏடுகளை தடுத்துவிட்டு, முதலாளித்துவ வெறியை ஊட்டும் அமெரிக்க ஏடுகளுக்கு ஆதரவு காட்டும் இந்த போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

புத்தகங்களுக்குத் தடை விதித்தல், எழுத்தாளர்களைக் கட்டுப்படுத்தல், எண்ணங்களுக்கு கூட தடைபோடல் – இம்மாதிரி அடக்குமுறைகளை, நெறிகெட்ட வகையில் ஏவுவதை, மக்கள் உரிமையில் நம்பிக்கை கொண்டோர் எதிர்க்காமலிருக்க முடியாது – நாம், சர்க்காரின் போக்குகண்டு வெறுக்கிறோம் – எதிர்க்கிறோம். ஏடுளுக்கு தடை போடாதீர், போட்டால், அவைகளே, படைக் கலங்களாக மாறிவிடும் என்று ஆணவத்தால், அறிவு கலங்கித் திரியும் ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

படிப்பதை தடுக்காதீர்கள்! பயங்கர எச்சரிக்கை இது!!

– திராவிட நாடு

08.06.1952

நாடும், ஏடும்!

"அறிஞர் தம் இதய ஓடை ஆழநீர் தன்னைமொண்டு

செறிதரும் மக்கள் எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றிக்

குறுகிய செயல்கள் தீர்த்துக் குவலயம் ஓங்கச் செய்வாய்!

நறுமண இதழ்ப் பெண்ணே! உன் நலம் காணார் ஞாலம் காணார்."

ஏடுகளின் பயன்பற்றிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்கள் இதுபோன்ற எழில்மிகு வரிகளைத் தந்துள்ளார்கள். ஒரு நாட்டின் கலையுயர – நிலை உயர – நாகரீகம் உயர – அரசியல் – சமுதாய – பொருளாதார விழிப்பு ஏற்பட ஏடுகள் இன்றியமை யாதவை என்பதை யாரே மறுக்க வல்லார். ஒரு சமுதாயத்தின் சரித்திரத்தைச் சொல்லி, பெற்றிருந்த வளப்பங்களைச் சொல்லி இன்றுள்ள நிலைகூறி, நன்னிலை யெய்தப் புதுவழி கூறி நடைபோட வேண்டிய தலையாய கடமைகளை மறந்து, இன்றைய ஏடுகள் பல, கேடுசூழ் குப்பை மேடுகளாகக் காட்சி தருகின்றன. காரிருள் அகத்திலே கதிரொளி பாய்ச்ச வேண்டிய அந்தக் காலக்கண்ணாடிகள், உடைந்து சிதறி காலைக் குத்தி, கையைக் கிழிக்கும் துகள்களாக மாறிக் கிடக்கின்றன.

நமது தென்னகத்தைப் பொறுத்த வரையிலே, காங்கிரஸ் ஆதரிப்பு ஏடுகள் பல நாட்களாக பலவித

பலங்களோடு நடைபெற்று வருகின்றன. கம்யூனிஸ்டு கட்சியின் ஏடுகள் நடைபெறுகின்றன. திராவிட இயக்கத்தின் ஏடுகள் நடைபெறுகின்றன. இவையனைத்தும் தத்தமது கொள்கைகளை, திட்டங்களை, அரசியல் தத்துவங்களை வெளியிட்டு வருகின்றன. அவரவர் இலட்சிய நோக்குகளுக்கு இடமளித்து, அந்த ஏடுகள் மூலமாக மக்கள் உள்ளத்திலே இடம்பெற அனைவருக்கும் உரிமையிருக்கிறது.

கொள்கைகளை வைத்து காரசாரமாக விவாதிக்கவோ எழுத்துப்போர் நடத்தவோ – மற்றவர் கூற்றுக்களை ஆதாரங் காட்டி மறுக்கவோ – பிழைகாணுமிடத்து கண்டனக் குரல் எழுப்பவோ – எல்லா ஏடுகளுக்கும் உரிமையுண்டு. அதை நல்லோர் மறுக்கமாட்டார்கள். நாகரீகப் பாதையிலேயிருந்து வழுக்கி விழுந்து, எதிர்க் கட்சிக்காரர்களை எப்படி யெப்படித் திட்டினால் வாய் ருசிக்கும் என்று எண்ணமிட்டு, அன்னமிட்ட வீட்டிலே கன்னமிடும் பண்பினோர் பலர் இன்றைய தினம் ஏடுகளைத் தூக்கிக் கொண்டு திரிக்கிறார்கள். அத்தகைய இழிதகையோரின் பெருக்கம், தி.மு.கழக எதிர்ப்புப் பாசறையிலேதான் இன்று பெரிதும் காணப்படுகிறது! தி.மு.கழகத்தின் வளர்ச்சி கண்டு, வயிற்றிலே தீமூண்டு, வாயிலே வந்ததெல்லாம் பேசுவதோடு நில்லாது, மனதிலே தோன்றியதையெல்லாம் மட்டமான மொழியில் கொட்டித் தீர்த்துக் கொள்ளவும் துணிகிறார்கள். எந்த இயக்கமாயினும் சரி; எந்த இயக்கத்தைச் சேர்ந்தவராயினும் சரி; எந்த இயக்க சார்பிலே நடைபெறுகிற ஏடாயிருந்தாலும் சரி; அனுசரிக்கிற மொழி யிலே–நடையிலே–கண்டனக்குரல் எழுப்புகிற வகையிலே – கண்ணியம், கட்டுப்பாடு, மிகமிகத் தேவை!

காங்கிரசின் ஏடுகள் எனப்படும் ஒருசில முதல்தர ஏடுகள், நம் கழகத்தின் செய்திகளை இருட்டடிப்பு செய்தும், தேவையற்ற பஜனை மடச் செய்திகளுக்குப் பெரும் இடம் தந்தும், நமது இலட்சியங்களை ஆதாரமின்றிக் கண்டித்தும் வருகின்றன என்றாலும், அவைகள் நாகரீகக் குறைவாய் நடந்துகொண்டன என்று கூறமுடியாது! வஞ்சகத்தோடு நடந்திருக்கலாம்; அப்போதும் அவைகள் சாக்கடையிலே வழுக்கிவிழுந்தது கிடையாது!–கம்யூனிஸ்டு கட்சி சார்பில் நடைபெறும் ‘ஜனசக்தி’ என்ற ஏடும், முன்னுக்குப் பின் முரணாக பல நேரங்களில் எழுதியும், கழகத்தைத் தேவையில்லாமல் கண்டித்தும், கொள்கைகளைப் பழித்தும் வந்திருக்கிறது என்றாலும், அந்த ஏடும், நாலாந்தர நடையிலே தன் பயணத்தை நடத்தியது கிடையாது! ஆனால், இன்று காங்கிரசை ஆதரிக்கவும், கம்யூனிஸ்டை ஆதரிக்கவும் கங்கணம் கட்டிக்கொண்டு –

அதே நேரத்தில் தி.மு.கழகத்தை ஒழிக்க வேண்டுமென்று கனவும் கண்டுகொண்டு நாட்டிலே நடமாடும் ஏடுகள் பல, அந்தக் கட்சிகளிலே உள்ள கடைசித்தர ஆட்களால் நடத்தப்படுகின்றன. எம்.எல்.ஏக்கள் சிலர் அந்த ஏடுகளின் ஆசிரியராக இருக்கிறார் களே; அவர்கள் எல்லாம் கடைசித்தர மனிதர்களா? என்று வியப்போடு கேட்கலாம்—இந்தக் கேள்விக்கு சரியான பதிலை, அவர்கள் நடத்துகிற ஏடுகளே சொல்லும்! நினைக்கவும் நெஞ்சு நாணுகிற அத்துணைக் கேவலமான மொழிகள்! அந்தோ— தமிழ்த் தாயை நிர்வாணக் கோலத்திலே நிறுத்தி ரசிப்பதற்கும், அந்தக் கோணங்கிகள் எழுதுகிற நடைக்கும் வேறுபாடே கிடையாது!

தமிழன் மீது வேல் பாய்ச்சும் கொடியோர், தமிழ் எழுத்துக்களை இழிவு தரும் நிலையில் அச்சுக்கோர்த்து அவை களை தமிழ்மக்கள் மத்தியிலே நடமாடவும் விடுகிறார்கள் என்றால்; என்னே கொடுமை! என்னே கொடுமை!

தி.மு.கழகத்தின் கொள்கைகள் தீயவை என்று இடித்துக் காட்டல் தவறு என்று யாம் கூறவில்லையே! நன்றாகக் கூறட்டுமே! "திருத்து ... அல்லது திருந்து!" என்றுதானே, தி.மு.கழகம் முழங்கி வருகிறது. அதைவிடுத்து, தி.மு.கழகத் தலைவர்களையும், முன்னணி வீரர்களையும், தொண்டர்களையும், ஆபாசமான முறையிலும், அருவறுக்கத்தக்க முறையிலும் தாக்குவது ஏன்? கூவம் நதியிலே பேனாவை நனைத்து எழுதும் இந்தக் கொடுமைக்கு முடிவே கிடையாதா? கிடையாது என்றுதான் பதில்வரும். அந்தப் பதிலைப் பற்றி, தி.மு.கழகம் கவலைப்படப்போவதில்லை.

சரித்திரத்தின் பயங்கரம் நிறைந்த பாதைகளை தி.மு.கழகம் படித்திருக்கிறது. இலட்சிய வீரர்களுக்கு, விடுதலை விரும்பிகளுக்கு, புதுமை எண்ணம் கொண்டவர்களுக்கு தரப்பட்ட பரிசு என்ன? தாக்குதல்கள் எத்தகையவை? கேலிக் கணைகளும், கண்டன ஈட்டிகளும் எவ்வளவு? எவ்வளவு? என்பது தி.மு.கழகத் தோழர் களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், கழகம்—நாட்டிலே வளர்க்க வேண்டிய நல்ல பண்புகளிலே, ஏடு நடத்தும் பண்பும் ஒன்றெனக் கருதுகிறது! சமுதாய, அரசியல் சீர்திருத்தங்கள்— காளி, மாரி முதலிய ஆயிரக்கணக்கான கடவுள்களை ஒழித்து, ஜாதியை, மதவெறியை ஒழித்து, தனித் திராவிடம் பெற்றுவிட வேண்டுமென்பது மட்டுமல்ல; எல்லாத் துறைகளிலும் கண்ணியம் வளரவேண்டும்—நாணயம் வளர வேண்டும்— ஒழுங்கு வளர வேண்டும்— நல்ல பண்பு வளரவேண்டும் — என்றும் தி.மு.கழகம் விரும்புகிறது. அதனால்தான் எல்லாக் கட்சியிலும் உள்ள நல்லவர்களை நாம் கேட்டுக் கொள்கிறோம்: உங்கள் கட்சியின் சார்பிலே ஒரு ஏடு ஒழுக்கக் குறைவாக நடைபெறு மானால், தகாப் பதங்களை எழுதி, தமிழுக்கே இழுக்கு ஏற்படுத்துமானால்,

அத்தகைய கீழ்த்தர ஏடுகளை அடக்கி, அழிப்பதற்கு உடனே ஆவன செய்ய முன்வாருங்கள்! அந்தக் கீழான ஏடுகளுக்கும், உங்கள் கட்சிக்கும் சம்பந்தமில்லையென்று பகிரங்கமாகக் கூறி விடுங்கள்!

எதிரியின் மீது வீச கையிலே பல ஆதாரங்களை எடுத்துச் செல்வது; இன்றைய உலகில் அரசியல் நாகரீகம்! எதிரியின் மீது வீச கையிலே கல் எடுத்துச் செல்வது அரசியல் அநாகரீகம்! எதிரியின் மீது வீச கையிலே மலம் எடுத்தச் செல்வது; ஆபாசமான அரசியல் நாகரீகமும், தன்னைத் தானே அசிங்கப்படுத்திக் கொள்வதுமாகும்!

இந்த உண்மையை, இழிமொழி உமிழும் ஏடுகள் உணர வேண்டும். ஆயிரம் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம்–அவை களை கண்ணியமான முறையில் போராடித் தீர்த்துக் கொள்ளலாம். கடை கெட்ட தன்மையால் கருத்து வேற்றுமை ஒழியாது; வளரும்!

தாக்கி எழுதுவதாக எண்ணி, தமிழ் மொழியையே ஆபாசப் படுத்துவது–தற்கொலைச் செயலாகும். இதை, தி.மு.க. எதிரிகளும், அவர் தம் நாலாந்தர ஏடுகளும் அறிய வேண்டுகிறோம்.

– முரசொலி

31.12.1954

ஏடுகள் போட்ட எதிர்நீச்சல்!

"குடிஅரசு" வார இதழ் 2–5–1925 அன்று துவக்கப்பட்டது. அதன் ஆசிரியர் தந்தை பெரியார். ஒவ்வொரு ஞாயிறன்றும் ஈரோட்டிலிருந்து வெளிவந்தது–. தனி இதழ் விலை ஓரணா. ஆண்டு சந்தா ரூபாய் மூன்று. இவ்விதழ் 2–5–1925 முதல் 19–11–1933 வரை தொடர்ச்சியாக வார இதழாக வெளிவந்தது சமூகத்தின் அடிவயிற்றிலே பெரும் புரட்சிப் புயலை எழுப்பியது.

29–10–33 'குடிஅரசு' இதழிலே "இன்றைய ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும்?" என்ற தலையங்கத்தை தந்தை பெரியார் தீட்டியிருந்தார்கள். இதில் தீவிர சமதர்ம வாடை வீசுவதாகக் கருதப்பட்டு, கட்டுரை எழுதியவர் என்ற முறையில் தந்தை பெரியார் மீதும், இதழ் வெளியீட்டாளர் என்ற முறையில் தந்தை பெரியாரின் தங்கை எஸ்.ஆர். கண்ணம்மாள் மீதும் ஆங்கில அரசு இ.பி.கோ. 124–ஏ பிரிவுப்படி ராஜதுவேஷ குற்றம் சாட்டப்பட்டது.

இதில் எதிர் வழக்காடாமல் தமது சார்பில் அறிக்கை ஒன்றினை தந்தை பெரியார் அவர்கள் கொடுத்தார்கள்.

இதில் தந்தை பெரியார் அவர்கட்கு ஒன்பது மாத தண்டனையும் 300 ரூபாய் அபராதமும், கட்டத் தவறினால் மேலும் ஒரு மாதம் – சிறை. எஸ்.ஆர். கண்ணம்மாள் அவர்களுக்கு ஆறு மாதம் தண்டனை, 300 ரூபாய் அபராதம்; கட்டத் தவறினால் மேலும் ஒரு மாதம் சிறை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

1933 ஜூலை 30ஆம் தேதி 'குடிஅரசு' இதழிலே வெளிவந்த கட்டுரையில் ஆட்சேபகரமான வார்த்தைகள் இடம் பெற்றுள்ளதால் 1931ஆம் வருடத்திய இந்தியப் பத்திரிகைச் சட்டம் (அவசர அதிகார) (XXIII of 1931) 7வது பிரிவு (3)வது துணைப் பிரிவுப்படி, 'குடிஅரசு' ஏட்டின் வெளியீட்டாளராகிய எஸ்.ஆர். கண்ணம்மாள் (தந்தை பெரியாரின் தங்கையார்) 1933 நவம்பர் 20ந் தேதி அல்லது அதற்கு முன்னதாக ரூ. 1000 கோயமுத்தூர் மாவட்ட மாஜிஸ்டிரேட்டிடம் செக்யூரிட்டி கட்ட வேண்டும். அதேபோல 'குடிஅரசு' அச்சடிக்கப்பட்ட "உண்மை விளக்கம்" அச்சுக்கூட உரிமையாளர் என்ற முறையிலும் தோழர் எஸ்.ஆர். கண்ணம்மாள் அதற்குத் தனியே ரூபாய் ஆயிரம் ஜாமீன் கட்ட வேண்டும் என்று ஆங்கிலேயே துரைத்தனத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக இவ்விதழ் நிறுத்தப்பட நேர்ந்தது.

19–11–33 'குடிஅரசு' இதழ் தலையங்கத்திற்கு மேலே கீழ்க்கண்ட ஒரு பெட்டிச் செய்தி வெளியாகி இருந்தது.

"அடுத்த வாரம் 'குடிஅரசு' பத்திரிகை வரத் தவறும் பக்ஷத்தில் வேறு பத்திரிகை வெளிவரும்."

''புரட்சி வெடித்தது!''

சந்தேகம் சரியாகவே ஆகிவிட்டது. 'புரட்சி' வார இதழ் 26–11–1933 அன்று தோன்றியது. ஆம்! 'குடிஅரசு' போய் 'புரட்சி' பூத்தது! அதன் ஆசிரியர் தந்தை பெரியார் அவர்களின் அண்ணன் ஈ.வெ.கிருஷ்ணசாமி, வெளியீட்டாளர் அவரது தங்கையார் எஸ்.ஆர். கண்ணம்மாள், வெளிவந்த இடம் ஈரோடு. விலை ஓரணா.

"புரட்சி"யின் வீச்சை அரசால் தாங்க முடியுமா? அரசின் அடக்குமுறை ஆயுதம் "புரட்சி" மீது பாய்ந்தது.

''பகுத்தறிவு'' மலர்ந்தது!

உடனே "பகுத்தறிவு" தினத்தாள் கிளைத்தது. அத்தாள் 15–3–1934 தோன்றி அவ்வாண்டு மே திங்கள் 4வது வாரத்திலேயே மறையும்படி நேரிட்டது.

(ஆதாரம்: "குடிஅரசு" 27–51934)

"பகுத்தறிவு" நாளேடு மறைந்தாலும் "பகுத்தறிவு" வார இதழாகக் கம்பீரமாக வெளிவந்தது. 26–8–34ல் தந்தை பெரியார் அவர்களது அண்ணார் ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஈரோட்டிலிருந்து ஓரணா விலையில் வெளிவந்தது இந்த வார இதழ் 26–8–34 முதல் 6–1–35 வரை தமிழ்நாட்டில் வீரநடை போட்டது.

முதன் முதல் "பகுத்தறிவு" வார இதழில் (6-1-1935) தான் தந்தை பெரியார் அவர்கள் தமது எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள்.

வார இதழ் நின்றாலும் "பகுத்தறிவு" மாத இதழாக 1-5-35 முதல் நான்காண்டுகள் நடைபெற்றன. பகுத்தறிவு நூற்பதிப்புக் கழக ஆதரவில் ஈரோடு "குடிஅரசு" பதிப்பகத்தில் வெளியான இவ்விதழின் ஆண்டு சந்தா ரூபாய் ஒன்று. பொறுப்பாசிரியர் ஈ.வெ. கிருஷ்ணசாமி. பிரதான ஆசிரியர் சாமி - சிதம்பரனார்.

மீண்டும் ''குடிஅரசு''

ஆங்கில அரசின் அடக்குமுறை காரணமாக 19-11-33 இதழோடு நின்றுபோன "குடிஅரசு" வார இதழ் மீண்டும் 13-1-1935 முதல் தனது பகுத்தறிவுப் பயணத்தைத் தொடங்கியது. அதன் ஆசிரியர் ஈ.வெ. கிருஷ்ணசாமி. முதல் இதழிலேயே தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் இடம்பெற்றது. தனி இதழ் ஓரணா.

"குடிஅரசு" இதழ் 29-12-40 முதல் நிறுத்தப்பட்டு மீண்டும் 16-10-1943 அன்று ஈரோட்டிலிருந்து என். கரிவரதசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. இதழ் நிறுத்தப்பட்டபோது குடிஅரசின் ஆசிரியர் அ. பொன்னம்பலனார் ஆவார்.

29-12-40 "குடிஅரசில்" கீழ்க்கண்ட அறிவிப்பு வெளிவந்தது. "நமது குடிஅரசு விடுதலை காரியாலயம் சென்னை செல்லுவதால், தற்காலிகமாகக் குடிஅரசு பத்திரிகை மாத்திரம் இவ்வாரம் முதல் நிறுத்தி இருக்கிறோம்.

சென்னை சென்றதும் மீண்டும் வழக்கம்போல் சென்னையிலிருந்து வெளிவரும் - மேனேஜர்." என்று அறிவிப்பு வெளிவந்தது. அதன்படி 29-12-40ல் நிறுத்தப்பட்ட "குடிஅரசு" மீண்டும் 16-10-43ல்தான் வெளிவந்தது.

''விடுதலை''

"விடுதலை" ஏடு வாரம் இருமுறை ஏடாக ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் டி.ஏ.வி. நாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு அரையணா விலையில் 1-6-35 முதல் 14 மவுண்ட் ரோட், மதராஸ் என்ற முகவரியிலிருந்து வெளிவந்தது. (ஆதாரம் 7-6-35 "குடிஅரசு")

அதன்பின் 1-1-1937 முதல் அதே முகவரியில் பண்டித எஸ். முத்துசாமி பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டு நாளேடாக காலணா விலையில் வெளிவந்தது.

(ஆதாரம்: "குடிஅரசு" 10-1-1937)

3–7–1937 முதல் "விடுதலை" நாளேடு காலணா விலையில் அவரையே ஆசிரியராகக் கொண்டு ஈரோட்டிலிருந்து வெளிவந்தது.

(ஆதாரம் "குடிஅரசு" 3–1–1937)

1939ல் அண்ணா அவர்கள் 'விடுதலை' ஏட்டின் ஆசிரியராக இருந்து, அதன்பின் 21–12–41ல் அப்பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார்.

'விடுதலை' ஏட்டில் வந்த ஒரு கட்டுரைக்காக 124–ஏ பிரிவின்படியும் 153–ஏ பிரிவின் படியும் 'விடுதலை' வெளியீட்டார் ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்கள் மீதும், ஆசிரியர் பண்டித முத்துசாமி பிள்ளை மீதும் ராஜகோபாலாச்சாரியார் அரசு வழக்குத் தொடுத்து அதன் காரணமாக இருவரும் 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்.

அதன் காரணமாக அ. பொன்னம்பலனார் 'விடுதலை'யின் ஆசிரியர்ப் பொறுப்பை 9–1–39 முதல் ஏற்றுக்கொண்டார்.

'விடுதலை' ஏடு யுத்தப் பிரச்சாரத்திற்காக தரப்பட்டது. அந்தக்கால கட்டத்தில் குத்தூசி குருசாமி அவர்கள் 12–9–1943 முதல் 30–9–1945 வரை ஆசிரியர்ப் பொறுப்பில் இருந்தார். அதன்பின் என். கரிவரதசாமி ஆசிரியராக இருந்தார்.

யுத்த பிரச்சாரத்திற்கு வழங்கப்பட்ட 'விடுதலை' மீண்டும் தந்தை பெரியாரின் பொறுப்புக்கு 6–6–1946 முதல் வந்தது. அதன் ஆசிரியராக கே.ஏ. மணி (அன்னை மணியம்மையார்) இருந்தார். தனி இதழ் விலை முக்காலணா. சென்னை, பாலகிருஷ்ண பிள்ளை தெருவிலிருந்து 'விடுதலை' வெளியாகத் தொடங்கியது.

20–6–1943 முதல் குத்தூசி குருசாமி 'விடுதலை' ஆசிரியரானார். 2–1–1962 வரை அவர் அப்பொறுப்பில் இருந்தார்.

'விடுதலை'க்கு ஜாமீன் கேட்கப்பட்டது

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் தேதியன்று திராவிடநாடு பிரிவினை நாள் கொண்டாடுமாறு தோழர்களுக்கு தந்தை பெரியார் 'விடுதலை'யில் அறிக்கை விட்டார். சென்னை மாகாண அரசு வாளா இருக்குமா? 'விடுதலை' இருக்குமா? 'விடுதலை' மீது பாய்ந்தது. ரூ. 2000 'விடுதலை'க்கு ஜாமீன் கட்ட வேண்டும் என்று ஏட்டின் பதிப்பாசிரியரும், வெளியீட்டாளருமாகிய அன்னை மணியம்மையார் அவர்களுக்கு அரசு ஆணை பிறப்பித்தது.

இந்த பிரச்னையை பொதுமக்களிடத்தில் தந்தை பெரியார் வைத்தார்! 'விடுதலை'யின் ஈடு இணையற்ற தொண்டின்

அவசியத்தை உணர்ந்த பொது மக்களோ ரூ. 15,200 அள்ளித் தந்தனர்.

ஆசிரியர் கி. வீரமணி

குருசாமி அவர்களைத் தொடர்ந்து கி.வீரமணி அவர்கள் 'விடுதலை' ஆசிரியராக (Executive Editor) இருந்து வருகிறார். அன்னை மணியம்மையார் அவர்களது மறைவிற்குப் பிறகு 21–3–1978 முதல் கி.வீரமணி அவர்கள் ஆசிரியராகவும், பிரசுர தாரராகவும் இருந்து வருகின்றார்.

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, 2, பாலகிருஷ்ணபிள்ளை தெருவில் இயங்கி வந்த 'விடுதலை' பணிமனை–2, ரண்டால்ஸ் ரோடு வேப்பேரி, சென்னையில் 15–12–65 முதல் இயங்கத் தொடங்கியது. இந்தப் பணிமனையை 31–10–65 ஞாயிறு மாலை 5.30 மணிக்கு தந்தை பெரியார் தலைமையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் திறந்து வைத்தார். இதன் மதிப்பீடு அப்போது ரூ. 70 ஆயிரம்.

படமெடுத்தாடும் தணிக்கைப் பாம்பு!

இந்திய நடுவணரசு நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்து, பத்திரிகைகளுக்குக் கடுமையான தணிக்கையைக் கொண்டுவந்தது. அதன்படி 1–2–76 முதல் விடுதலையும் கொடிய தணிக்கைக்கு இலக்கானது. தணிக்கை தலைமை அதிகாரியும் அலுவலர்களும் முழுக்க முழுக்க பார்ப்பனர்களாக இருந்து இனவெறியுடன் விடுதலையிடம் நடந்துகொண்டனர். ஓராண்டு காலம் அதற்கும் ஈடு கொடுத்து தனது பீடுறு பயணத்தை 'விடுதலை' தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ரிவோல்ட்

"ரிவோல்ட்" என்ற பெயரில் ஆங்கில வார இதழ் தந்தை பெரியார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 7–11–1928 முதல் 19–1–30 வரை வெளிவந்தது. (55 இதழ்கள் வெளிவந்தன.)

''உண்மை'' இதழ்

"உண்மை" என்ற மாத இதழ் தந்தை பெரியார் அவர்களால் பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் சார்பில் 14–1–70 முதல் திருச்சி பெரியார் மாளிகையில் அறிவுக் கடல் அச்சகத்தில், அன்னை மணியம்மையார் அவர்களை அச்சிடுபவராகவும், புலவர் கோ. இமயவரம்பன் அவர்களை ஆசிரியராகவும் கொண்டு வெளியிடப்பட்டது. ஆண்டு சந்தா ரூ. 3.

அதன்பின் 1–1–73 முதல் சென்னை பெரியார் திடலில் திராவிடன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. ஆண்டு சந்தா ரூ. 5.

1–1–76 முதல் மாதமிருமுறை இதழாக ஆண்டு சந்தா ரூ. 10 என்ற அளவில் வெளிவந்தது. 1–1–82 முதல் (தனி இதழ் ஒன்று விலை ரூபாய் ஒன்று அளவில்) ஆண்டு சந்தா ரூ. 24 ஆக்கப்பட்டு வெளிவந்து கொண்டுள்ளது. 1–8–75 முதல் புலவர் கோ. இமயவரம்பன் அவர்களை ஆசிரியராகவும் பிரசுரதாரராகவும் கொண்டு அறிவுக்கடல் அச்சகத்தில் சென்னை பெரியார் திடலிலிருந்து (2, ரண்டால்ஸ் சாலை, சென்னை 600 007) வருகின்றது.

தி மாடர்ன் ரேஷனலிஸ்ட்

1–9–1971 முதல் தி மாடர்ன் ரேஷனலிஸ்டு என்ற ஆங்கில மாத இதழ் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தால் துவக்கப்பட்டது.

நெருக்கடி நேர காலகட்டத்தில் நிறுத்தப்பட்டு மீண்டும் 17–9–1978 முதல் துவக்கப்பட்டது. இதன் ஆசிரியர் கி. வீரமணி எம்.ஏ., பி.எல்., துவக்கத்தில் தனி இதழ் விலை 40 காசுகள் பின் 50 காசுகளாக்கப்பட்டது.

ஆரம்பத்திலிருந்தே சென்னை, பெரியார் திடலிலிருந்து வெளிவந்து கொண்டுள்ளது.

– விடுதலை

தந்தை பெரியார் 105வது பிறந்தநாள் விழா மலர், 1983

உதவி ஆசிரியர்

— கண்ணதாசன்

பழுப்பேரிப்போன ஒரு கதர் ஜிப்பா; அதைப் பிரதிபலிக்க ஒரு கதர் வேட்டி; அதன் நடுவே தையற்காரனின் கைவண்ணம். எண்ணெயுமில்லாமல், தண்ணீரு மில்லாமல், 'பொல பொல'வென்று சீவி விடப் பட்டிருக்கும் தலைமயிர், குழிவிழுந்த கண்கள்: வற்றிய கன்னங்கள்; அதிலே சல்லடையின் பின்பக்கத்தைப் போலக் குமிழிட்டு நிற்கும் பருக்கள் ஜிப்பாவையும் மீறித் தெரியும் என்பு தோல் போர்த்த உடம்பு; பலவிதமான தோல்களால் ஆன செருப்பு.

அவன் எழுத்தாளன்...!

பத்திரிகாலயத்தில் உதவி ஆசிரியர்.

வீதியின் ஓரத்திலே நடந்து வருகிறான்.

கையிலே சில புத்தகங்கள்...

அவன் வேகமாக நடக்கிறான்.

அதிலே அடிமைத்தனம் இல்லை, ரணகளத்திலே வீறுகொண்ட — ஆனால் ரத்தப் பசையே இல்லாத குதிரையின் நடைபோலக் காணப்பட்டது.

அவன் நடந்து கொண்டிருக்கிறான்; ஆனால்... ...

நினைவு எங்கேயோ சென்று கொண்டிருந்தது! அவன் என்ன நினைக்கிறான்? அதுதான் அவனுக்கும் தெரியாது!

கற்பனையோ?

இருக்கலாம்: அடிக்கடி குனிந்து நிமிரும் தலை அதைத்தான் காட்டுகிறது.

அல்லது, கவலையாக இருக்கலாமோ?

அப்படியும் இருக்கலாம், அவனது தன் நினைவற்ற போக்கிலிருந்து அப்படியும் நினைக்கலாம்.

யூகம்தான் செய்ய முடியும்; மனோதத்துவ நிபுணனால் கூட அவனது மனத்தை அறிந்துகொள்ள முடியாது!

வாசலிலே 'தமிழ் வீரன்' என்று பலகை மாட்டியிருந்த கட்டிடத்துக்குள் நுழைந்தான் அவன்.

* * * *

காரியாலயத்திலே ... ...

ஒரு 'கத்தை' 'புரூப்' காத்துக்கிடந்தது மேஜைமேல்!

'மிஸ்டர் காஞ்சிநாதன், அதைக்கொஞ்சம் சீக்கிரம் பார்த்துக் கொடுத்திருங்கோ. நேரமாச்சு 'பாரம்' காத்துக்கிட்டுக் கெடக்கு!'

இது ஆசிரியரின் உத்தரவு!

அவனை எதற்காக உதவி ஆசிரியராகச் சேர்த்தார்கள்? 'மொழி பெயர்க்க', 'புரூப்' படிக்கத்தான்! அதுதான் அவன் 'விதி'! அவனென்ன, தினசரிப் பத்திரிகை உதவி ஆசிரியர்களின் பொது விதி அது!

அவனுக்குச் சொந்தக் கற்பனையில்லையா? ''யார் சொன்னது? அவனது வாழ்க்கை அனுபவமே ஒரு அழகான கற்பனையாக உருவாகிவிடுமே அவன் நினைத்தால்''

பூண் பிடித்த ஓட்டைப் பேனாவைத் திறந்து, இடது கையில் தலையைத் தாங்கிய வண்ணம் திருத்த ஆரம்பித்தான்.

"காந்தியின் நிர்வாணத்திட்டம் நிறைவேற்றத் தொண்டைகள் தேவை..." என்றிருந்தது முதல் பாரா.

அவனுக்கு தலைவலி எடுக்க ஆரம்பித்தது! உடலெங்கும் அருவருப்பும் கவலையும் ஊடாடுவது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது.

கொஞ்ச நேரம் பேனாவை உபயோகிக்காமல் வைத்துக் கொண்டிருந்தான். முதல் பாராவைத் திரும்பப் படித்தான்.

சிரித்தான்... வரண்ட சிரிப்பு.

''நிர்வாணத் திட்டத்திற்குத் தொண்டைகள் தேவையா?

இந்தக் கம்பாஸிட்டர்களுக்கு மூளையே இல்லை. இந்த மாதிரி கம்பாஸிட்டர்களும், அச்சாபீஸ்களும், பத்திரிகாலயங்களும் இருக்கிறவரை காந்தியின் திட்டம் நிர்வாணத் திட்டமாகத்தான் போகும்!''

மெல்லக் கூறிவிட்டுத் திருத்தினான்.

கொஞ்சம் காப்பி சாப்பிடலாம் என்று நினைத்தான். பையில் கையைவிட்டுப் பார்த்தான், ஒன்றே காலணாத்தான் இருந்தது. அதிலும் காலணாத் 'தேசல்'!

''மிஸ்டர் ராமசாமி! அரையணா இருக்கா?''

''இல்லையே சார்'' இப்போதுதான் சிகரெட் வாங்கக் கொடுத்தனுப்பிச்சேன்! கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே கேட்டிருக்கப்படாதா?''

உபசார வார்த்தையாவது சொன்னாரே! அது போதுமா அவனுக்கு? அவன் இப்பொழுது காப்பி சாப்பிட வேண்டும். அரையணா வேண்டும் அவனுக்கு! யார் கொடுப்பார்கள்?

ஒருமுறை உதவி ஆசிரியர்களைச் சுற்றிப் பார்த்தான். எல்லோரும் 'வரச்சை'களாகத் தோன்றினார்கள். கடைசியில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைப் போல், டே அம்பி என்று கூப்பிட்டான்.

பையன் வந்தான்.

''தர்பார் ஹோட்டல்லே ஒரு 'சாய்' வாங்கிகிட்டு வா'' என்று ஒரு அணாவைக் கொடுத்தனுப்பினான்.

அவன் சொன்னான் மனதுக்குள்: ''ஒரு அணாவிற்குச் 'சாய்' விற்கும் முஸ்லிம்கள் வாழ்க!''

''சார் இதையும் கொஞ்சம் படித்துக் கொடுத்துடுங்கோ!'' ஒரு கம்பாஸிட்டர் பல்லவி.

மீண்டும் ஒரு கத்தைக் காகிதம் மேஜையிலே துவண்டது.

படித்துத் திருத்த முனைந்தான்.

முதலாளித்வத்தைப் பற்றி, ஜெயப்பிரகாஷ் நாராயணன் பேசிய பேச்சு அது. முதலாளித்வத்தை ஒழிப்பது பற்றி அழகாக ஆணித்தரமாகப் பேசியிருந்தார் சோஷலிஸ்ட் 'தோழர்'.

அவன் 'புரூப்' படித்தான்.

இடையிடையே, 'கொல்லு', 'சபாஷ்' போன்ற வார்த்தைகளைச் சொன்னான், வெளிப்படையாக. அவன் ஒரு அபேதவாதி,

அவன்பட்ட கஷ்டங்கள், அவனைச் சித்திரவதை செய்த சமுதாயம், அவனை, அவன் தோழர்களைப் பட்டினிபோட்ட முதலாளித்வம்; அவனை அபேதவாதியாக்கியிருந்தன.

காலம், சமுதாயத்தைச் செய்த அனுகூலம், எழுத்தாளர் களை—ஆசிரியர்களைப் பட்டினி போட்டுப் போட்டு அபேதவாதி களாக்கியதுதான், அவர்கள் அபேதவாதிகளானதனால்தான் சமுதாயத்தில் இன்று விழிப்பேற் பட்டிருக்கிறது. இனி மாற்றம் ஏற்படப் போகிறது. காலம் அதன் கடமையைச் செய்துவிட்டது.

'புரூப்' படித்து முடித்தான்! 'சாய்' வந்தது; குடித்தான். மேலும் 'புரூப்' ...

ஒரு ஆங்கில செய்திக் குறிப்பு வந்தது. மொழி பெயர்த்தான், வேலை முடிந்தது.

காரியாலயத்தை விட்டு வெளியேற இன்னும் அரைமணி நேரம் இருந்தது. அவனது அன்றைய அடிமைத்தனம் நீங்க இன்னும் அரைமணி நேரம் இருந்தது. யந்திரம் ஓய்வு பெற இன்னும் அரைமணி நேரம்.

அவன் பேனாவை மூடிப் பையில் சொருகிக் கொண்டு, சோம்பல் முறித்தான், தீ வாய்ப்பட்ட பச்சை மூங்கில் வளைந்து கொடுத்துக் கருகுவதைப்போல. காஷியரிடம் கேட்டுக் கொஞ்சம் பணம் வாங்கலாம் என்ற நினைவோடு மெல்ல நாற்காலியை விட்டு எழுந்து 'காஷியர்' இருந்த அறைக்குள் நுழைந்தான்.

"என்ன மிஸ்டர்! என்ன விசேஷம்" அவருக்குள்ள அதிகாரத்தின் எல்லையில் நின்று பேசினார் 'காஷியர்.'

"ஒரு இருபது ரூபாய் வேணும் அட்வான்ஸா!"

"பணம் இல்லையே சார்! இன்னிக்கு 'பிரஸ்'ஸுக்குச் சம்பளம் போடணும். நாளை வேண்டுமானால் பார்க்கலாம். ரொம்ப மன்னிச்சுக்குங்கோ!"

"உ...ம்"

அவன் வெறுங்கையோடு அறையை விட்டு வெளியே வந்தான். மேஜையில் வைத்திருந்த புத்தகங்களை எடுத்துக்கொண்டு வெளியேறினான்.

அந்தப் புத்தகங்களை அவன் எதற்காகக் கொண்டு வந்தான்? அதுவும் அவனுக்குத் தெரியாது! எழுத்தாளன் என்ற அடை யாளத்துக்காக இருக்கலாம்!

அழமாட்டாக் குறையோடு, கவலையால் நெஞ்சு விம்ம நடந்தான்! நடந்து கொண்டேயிருந்தான். கவலை புகைபோலச் சூழ்ந்தது; தலை சுற்றியது; நடந்தான். வீட்டுக்கு வந்துவிட்டான்.

புத்தகத்தைத் தூக்கிப் போட்டுவிட்டுக் கட்டிலில் சாய்ந்தான். அவனையறியாமல் அவன் கண்களில் நீர் நிரம்பிற்று, வாய், "என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது!" என்று முணு முணுத்தது.

அவன் மனைவி ஏதோ சொல்ல வந்தவள், அவனது நிலையைப் பார்த்து வாயை மூடிக்கொண்டாள்.

அப்படியே கிடந்தான்.

அவள் சமையல் அறைக்குள் நுழைந்தாள்.

குழந்தை "அம்மா! பால்!" என்று கத்திற்று.

அந்தச் சத்தம் அவன் காதிலும் விழுந்தது. அவனை மீறிவிட்டது அழுகை.

விம்மி விம்மி அழுதான்.

அப்படியே உறங்கிவிட்டான்.

இரவு சாப்பிடவில்லை.

இரவு என்ன நடந்தது என்பது அவனுக்குத் தெரியாது.

அவனும் – அவன் மனைவியும் பட்டினி! விடிந்தது.

என்ன செய்வதென்றே அவனுக்குப் புரியவில்லை. இன்றைக்கு இருபது ரூபாய் கிடைக்கும் என்ற தெம்பு மட்டும் ஓரளவு இருந்தது.

மனைவியிடம் சொல்லிச் சமாதானப்படுத்திவிட்டு அந்தப் பழைய உடுப்புகளை மாட்டிய வண்ணம் நடந்தான். திரும்பவும்...

அவன் யந்திரமாகி விட்டான்.

– தென்றல்

31.07.1954

கழக இதழ்களில் கால் நூற்றாண்டு

ஐம்பதாவது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் 'கழகக்குரல்' துணையாசிரியர் மா. செங்குட்டுவன் அவர்கள் திராவிடரியக்க இதழ்களில் கால் நூற்றாண்டுக்கும் மேலாகப் பணியாற்றியவராவார். 'எழுச்சி' என்னும் இதழை ஆசிரியராக இருந்து நடத்திய இவர் 'மாலைமணி', 'விடுதலை', 'நம்நாடு' ஆகிய திராவிடரி யக்க வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இதழ்களில் அறிஞர் அண்ணா, குத்தூசி குருசாமி, டாக்டர் கலைஞர் ஆகியோருடைய சீரிய தலைமையில் பல்லாண்டுகள் பணியாற்றியவராவார்.

கழக வரலாற்றுடனேயே ஒட்டி வளர்ந்து வந்திருக்கும் இவர், கழக வரலாற்று நிகழ்ச்சிகள் அனைத்தையும் தமது நினைப்பில் அடக்கிக் கொண்டிருக்கிறார். கழக வரலாற்றின் எந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்டாலும் எடுத்த எடுப்பிலேயே அதைப்பற்றிப் புள்ளி விவரங் களுடன் 'சுவைபட எடுத்துரைக்கும் ஆற்றல் உடைய வராகத் திகழ்கிறார். வெறும் பத்திரிகையாளராக மட்டுமின்றி கழக இலட்சிய 'வெறி' கொண்டவராகவும் விளங்குகிறார். இவர் கழகப்பணியையும், தமிழ்ப் பணியையும், தமது இரு கண்களாகக் கொண்டிருக்கிறார்.

தலைமைக் கழகத்திலேயே நீண்ட காலமாகப் பணியாற்றி வருகின்ற இவர், இயக்கத் தலைவர்களுக்கும், முக்கியமான தொண்டர்களுக்கும் அறிமுகமானவராக விளங்குகிறார். நம்நாடு மா. செங்குட்டுவன் என்று சொன்னால் தமிழகமெங்கிலும் உள்ள கழகத் தோழர்கள் இவரை அடையாளம் தெரிந்துகொள்கிறார்கள்.

மடித்துவிடப்பட்ட முழுக்கைச் சட்டை, இடையில் சாதாரண வேட்டி, கையில் தோல்பை; முகத்தில் ஷெல் பிரேமிட்ட கண்ணாடி – இவற்றுடன் எப்போதும் எளிமையாகக் காட்சிதரும் மா. செங்குட்டுவன் எந்த நேரத்திலும் சிரித்த முகத்துடன் கலகலப்பாகப் பேசுகிறார்.

பழம் பெரும் இயக்கத் தோழர்களிடம் பரிவும் பாசமும் காட்டுகிறார்.

செங்குட்டுவன் உணர்ச்சியுடனும், கருத்துடனும், இலக்கிய நயத்துடனும் பல மணிநேரம் மேடையில் பேசக்கூடிய சொற்பொழிவாளராகவும் விளங்குகிறார்.

கவியரங்குகளில் கலந்துகொண்டு கவிஞராகவும் விளங்கி, கவிதைகள் பாடுகிறார். 'தமிழ்ச் சொல் கேளீர்', 'முதன் முதலில்', 'கழகக் கதிர் மணிகள்', 'கழகம் பிறந்தது ஏன்?', 'கல்லக்குடி கொண்டான்' என்னும் நூல்களின் ஆசிரியரான இவர் ஓவியரும் ஆவார்.

'தூய தமிழில் எழுத வேண்டும்' என்று அடிக்கடி கூறும் இவர், நல்ல தமிழிலேயே தமது படைப்புகளைப் படைத்து வருகிறார்.

*1959*இல், பேராசியர் அன்பழகன் அவர்கள் தலைமையில் தாமரைச் செல்வி அம்மையாரை மணந்துகொண்ட இவருக்கு அன்பரசு, மதிவாணன், புகழேந்தி, முத்துச் செல்வன் என்னும் நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர்.

கழகக் குரல் துணை ஆசிரியராகப் பணியாற்றும் இவர் மேலே குறிப்பிட்ட இதழ்களைத் தவிர, தனியரசு, சினிமா நியூஸ், திராவிட சினிமா, சம்மட்டி, இன்பம் ஆகிய இதழ்களையும் சிலகாலம் ஆசிரியராகவும் துணையாசிரியராகவும் இருந்து நடத்தி இருக்கிறார்.

"பத்திரிகை உலகிற்குப் பணியாற்ற வந்தது திடீரென்று நேர்ந்துவிட்ட ஒன்றன்று; இயல்பாகவே, இளமைக்காலமுதலே எனக்குப் பத்திரிகைத் துறையில் பேரார்வம் இருந்து வந்தது. இடைக்காலத்தில் சில மாதங்கள், இத்துறையிலிருந்து நீங்கி வேறு துறைகளில் பணியாற்றினாலும், பத்திரிகைத் துறையிலிருந்த ஈடுபாட்டின் காரணமாக அத்துறைகளிலிருந்த மிகுந்த பொருளிழப்பையும் பொருட்படுத்தாமல் மீண்டும் பத்திரிகை உலகிற்கே பணிபுரிய வந்து விட்டேன்" என்று பெருமையுடன் கூறும் இவரிடம் "உங்கள் இளமைக்காலத்தைப் பற்றிக் கூறுங்கள்" என்று கேட்டபோது, ஆர்வத்துடன் சொன்னார்:–

''தஞ்சை மாவட்டத்தில், திருவாரூருக்கன்மையிலுள்ள திருக்காரவாசல் என்னும் ஊரில், தேவஸ்தான மணியக்காரரான மாணிக்கனாரின் மகனாகப் பிறந்த எனக்கு அப்போது செங்குட்டுவன் என்ற பெயரில்லை, நடராசன் என்ற பெயரே இருந்தது. மன்னார்குடி, கொடைவள்ளல் கோட்டூர் அரங்கசாமி மாணவர் இல்லத்தில் தங்கி, நேஷனல் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரையிலும், பின்லே உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரையிலும் படித்தேன். இப்போது தமிழ் வளர்ச்சித்துறை இயக்குனராக விளங்கும் கொண்டல் சு. மகாதேவன் அப்போது எனக்கு ஆசிரியராக இருந்து பகுத்தறிவை ஊட்டினார்.''

''படிக்கும் காலத்திலேயே தந்தை பெரியாரின் திராவிடர் கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் சேர்ந்து பணியாற்றினேன். 1947ல் பெரியார் சுதந்திரநாளை துக்கநாள்' என்று கூறியதை ஒட்டி சுதந்தரநாள் அணிவகுப்புக்கு கறுப்புச்சட்டை அணிந்து பள்ளிக்குச் சென்றதால் எனக்கு அந்த ஆண்டு பள்ளி இறுதித் தேர்வுக்கு 'செலக்ஷன்' கொடுக்காமல் நிறுத்திவிட்டார்கள். அந்த அளவுக்கு இளம்மாணவராக இருந்தபோதே இயக்கத்தில் தீவிரம் கொண்டிருந்தேன்''

இளமைக்கால நினைவுகளில் மூழ்கிவிட்ட செங்குட்டுவனை 'பத்திரிகைத் துறைக்கு எப்படி வந்தீர்கள்?' என்று கேள்வி கேட்டுத் திசைதிருப்ப வேண்டியிருந்தது.

''......... 'அறிவுச்சுடர்' என்னும் கையேட்டை எட்டாம் வகுப்பு மாணவராக இருந்தபோதே 1944–45லேயே ஆசிரியராக இருந்து நடத்தினேன். அப்பொழுது கையெழுத்துப் பத்திரிகை நடத்துவது எழுத்தாற்றல் மிக்க மாணவர்களிடையே வழக்கமாக இருந்தது. இப்பொழுது கவிஞர் வானம்பாடி என்னும் பெயரில் 'கவிதா மண்டலம்' என்னும் இதழை நடத்திக் கொண்டிருக்கும் எழில் சுந்தரேசன் 'நிறைமதி' என்னும் பெயரில் ஒரு இதழை நடத்தினார் .... அறிவுச்சுடர் இதழில் இளம் நாவலரின் தாடியோடு கூடிய படத்தை ஓவியமாகத் தீட்டி இருந்தேன். நாவலர் அந்த இதழைப் பார்த்துவிட்டு மகிழ்ந்து வாழ்த்தினார்.

''மன்னார்குடியில் படிக்கும்போது பேராசிரியரின் இளவல் அறிவழகன், நாவலரின் தம்பி இராமதாசு ஆகியோருடன் சேர்ந்து திராவிட மாணவர் கழகத்தைத் தொடங்கினேன். இன்றைய அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்களின் துணையும் கிடைத்தது... மீண்டும் பள்ளி இறுதித் தேர்வு எழுதுவதற்காக திருவாரூரில் தங்கிப் படித்தபோது கலைஞரின் வழி காட்டுதலில் கட்சிப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவ்வூர்

திராவிட மாணவர் கழகச் செயலாளனாகவும் ஓராண்டுக் காலம் பணியாற்றினேன்.''

மீண்டும் செங்குட்டுவன் இளமைக்கால நினைவுகளில் ஆழ்கிறார்.

''..... *1949* ஜூன் மாதத்தில் மாவூர் சர்மா அவர்கள் மாளிகையில் நடைபெற்ற திராவிடக்கழக மாணவர் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு தந்தை பெரியாரிடம் பேச்சுப் பயிற்சி பெற்றேன். அங்கு, பயிற்சி முடிவில் தவமணிராசன் தலைமையில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு முதல் பரிசு பெற்றேன். இந்தப் பயிற்சி முகாமில் தந்தை பெரியாருடன் தங்கியிருந்த என்.வி.நடராசன் அவர்கள் எனக்குப் பத்திரிகையிலிருந்த ஆர்வத்தை அறிந்து, சென்னைக்கு வரும்படிச் சொன்னார். 'துணை ஆசிரியர் தேவை' என்று விளம்பரம் செய்திருந்த டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களின் 'எங்கள் நாடு' இதழுக்குச் சிபாரிசு செய்வதாகவும் சொன்னார். அதன்படி சென்னைக்கு வந்த எனக்கு என்.வி.என். கடிதமும் கொடுத்து அனுப்பினார். அப்பொழுது 'எங்கள் நாடு' இதழ் நின்று போகும் நிலைமையிலிருந்ததால், டாக்டர் கிருஷ்ணசாமியை நான் பார்க்கவில்லை.

''..... என்னுடைய சிறிய தந்தையரான அமிர்த கணேச முதலியார், என்னை 'விடுதலை' இதழுக்குச் சிபாரிசு செய்து அனுப்பினார். ஆசிரியர் குருசாமி அமிர்தகணேசனாரிடம் முன்னமேயே விடுதலைக்குத் துணை ஆசிரியர் தேவை என்று சொல்லி வைத்திருந்தார்''....

''குருசாமி 'இந்து' நாளிதழை எடுத்துக் கொடுத்து ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டி தமிழில் மொழிபெயர்த்து செய்தியாக எழுதிக் காட்டும்படி என்னிடம் கூறினார். எழுதிக்காட்டினேன். திருப்தி அடைந்த குருசாமி மறுநாள் முதல் வேலைக்கு வரச்சொன்னார்.''

''...''

''விடுதலையில் வேலை கிடைத்த மகிழ்ச்சியான செய்தியை எங்கள் ஊர்க்காரரான, விடுதலை துணை ஆசிரியர் அரங்கண்ணல் அவர்களைச் சந்தித்துக் கூறியபோது அவர் பலமாகச் சிரித்தார். நான் திகைத்தேன். ''ஐயா திருமணம் செய்துகொள்ள முடிவு செய்து விட்டதையொட்டி, நான், பூ. கணேசனெல்லாம் விடுதலையிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறோம். இப்போதுதான் நீ உள்ளே போகிறாயா?'' என்றார். 'இந்தச் செய்தி தெரிந்திருந்தால் நானே போயிருக்கமாட்டேனே'

என்று சொல்லிவிட்டு கிடைத்த வேலையையும் விட்டுவிட்டேன். இதற்காக என் குடும்பத்தினர் கோபித்துக் கொண்டார்கள்.''

''1949 ஆகஸ்ட் 10இல் மாலைமணி இதழை அண்ணா ஆசிரியராகக் கொண்டு, இயக்கப் பணிக்காக டி.எம். பார்த்தசாரதி தொடங்கினார். என்.வி.என். அண்ணாவுக்குச் சிபாரிசு கடிதம் கொடுத்து அண்ணாவிடம் அனுப்பி வைத்தார். அண்ணா பொறுப்பாசிரியர் நாவலர் நெடுஞ்செழியனைப் பார்க்கச் சொன்னார். நாவலர் அண்ணாவைக் கேட்டுக் சொல்வதாகக் கூறினார். .... நாளாகவே நான் சொந்த ஊருக்கு போய்விட்டேன். திடீரென்று ஒருநாள் மாலைமணியில் வந்து சேரும்படி தந்தி வந்தது. தந்தி தாமதமாகக் கிடைத்ததால், நான் வருவதற்குள் வேறு ஒருவரை அந்த வேலைக்கு நியமித்து விட்டார்கள்.''

''நான் வந்து சேர்ந்ததும் புதிய (தி.மு.க.) அமைப்பு தொடங்க இருந்ததால் அமைப்பு அலுவல்களையும், மாலைமணி பணிகளையும் பார்ப்பதற்கென்று என்னையும் வேலைக்கு வைத்துக் கொண்டனர்.''

''நான் செப்டம்பர் 15ல் அண்ணா பிறந்தநாளில் – அப்போது அண்ணா பிறந்த நாள் அதுதான் என்று யாருக்கும் தெரியாது – அலுவலில் சேர்ந்தேன். மறுநாள் தி.மு.க. அமைப்புக் கூட்டம் நடந்தது. அதற்கு அடுத்த நாள்தான் தி.மு.கழகம் தொடங்கப் பெற்றது''

– திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய கால முதலே தாம் தலைமைக் கழகத்தில் பணியாற்றுவதைப் பற்றிச் செங்குட்டுவன் மிகுந்த பெருமையுடன் சொல்கிறார்.

தி.மு.கழகத் தொடக்க விழாவிலேயும் கலந்துகொண்ட பெருமை செங்குட்டுவனுக்கு உண்டு. அவர் மாலைமணிக்காகவும் செய்தி திரட்டச் சென்றிருந்தார்.

''கலைஞர் தி.மு.கழகத் தொடக்க விழாவிலே கலந்து கொள்ளவில்லை என்று ஒருசில எதிர்க்கட்சிக்காரர்கள் பேசி வருகிறார்களே அது உண்மைத்தானா?'' என்று கேட்டபோது, செங்குட்டுவன் சொன்னார்:–

''அன்று கலைஞர் மேடையிலமர்ந்திருந்தார்; பிறகு பேசினார். அதற்கு நான் மட்டும் சாட்சியல்ல; அன்று கூட்டத்திற்கு வந்திருந்த பல்லாயிரக் கணக்கான மக்களும் சாட்சிகளாவர். அன்றுதான் நான் கண்ணதாசனை முதன் முதலாகச் சந்தித்தேன். என் பக்கத்திலிருந்த அரங்கண்ணலிடம், 'இவர் யார்?' என்று கேட்டபோது இவர்தான் கண்ணதாசன்; சினிமாவுக்குப் பாடல்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்! என்று அறிமுகம் செய்து வைத்தார்.

கலைஞர் பேசி முடித்ததும் மேடையை விட்டு இறங்கி வந்து "எங்கே இருக்கிறீர்கள்! என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று என்னிடம் கேட்டார். நான் மாலைமணியில் பணியாற்றுவதை சொன்னேன். அதைக்கேட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்து எனக்கு ஊக்கம் ஊட்டினார்."

கலைஞர் தி.மு.கழகத் தொடக்கநாள் விழாவிலே கலந்துகொண்டதை உணர்ச்சியுடன் விவரித்த செங்குட்டுவன் மாலைமணி அனுபவங்களை விவரிக்கலானார்!

மாலைமணி இதழ் மூன்று முறை நின்று நின்று வெளிவந்தது.

முதலில் அண்ணா, பின்னர் கலைஞர் ஆகியோர் 'மாலைமணி' ஆசிரியராகப் பொறுப்பேற்றனர். அவர்களுடைய சீரிய தலைமையில் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதை இன்றைக்கும் எனக்குக் கிடைத்த பெரும் பேறாகவே கருதுகிறேன்"

"ஒரு சந்தர்ப்பத்தில் என்னையே ஆசிரியராக இருக்கும்படி டி.எம்.பி. கேட்டுக்கொண்டார். என் பெயரில் 'பிளாக்' எல்லாம் கூடத் தயாராகிவிட்டது. ஆயினும் முன்னமேயே நாவலர் தொடங்க இருந்த மன்றம் பதிப்பகத்தில் பணியாற்ற நான் ஒப்புதல் அளித்திருந்தேன்! அதற்கேற்றாற் போல் வெளியூர்ச் சுற்றுப் பயணத்திலிருந்த நாவலரும் உடனடியாக மன்றம் பதிப்பகத்தில் அலுவலரை ஏற்குமாறு தகவல் அனுப்பினார். எனவே மாலைமணியில் ஆசிரியராகப் பொறுப்பேற்கும் வாய்ப்பை இழந்துவிட்டு, மன்றம் பதிப்பகத்தில் பணியில் சேர்ந்துவிட்டேன்."

இவர் மன்றம் பதிப்பகத்தில் பொறுப்பேற்றவுடன் நாவலரின் கண்ணீரும், செந்நீரும் வளர்த்த கழகம், நாவலரின் இளவல் செழியனின் 'ராஜாதி ராஜா' பொது அறிவு ஆகிய நூல்கள் விரைவாகத் தயாரிக்கப்பட்டு முதல் மாநில மாநாட்டுக்கு விற்பனைக்கு அனுப்பப்பெற்றன.

பின்னர் மன்றம் பதிப்பகம் செயல்படவில்லை. வேறு வேலை கிடைக்காமலிருந்த செங்குட்டுவனுக்கு நாவலர் மூன்று மாதம் வரை எவ்வித வேலையுமின்றி தொடர்ந்து சம்பளம் கொடுத்து வந்தார். செங்குட்டுவன் இதை நன்றியுடன் நினைவில் கொண்டு நாவலரைப் போற்றுகிறார். வேலை செய்யாமல் சம்பளம் வாங்க மனச் சான்று இடம் தராததால் மாயவரத்துக்கு சென்று தம் மாமா ஆதரவில் சில காலம் இருந்தார். பத்திரிகைத் துறையில் ஆர்வம் உடைய செங்குட்டுவன் இக்காலத்தில் சொந்தமாகவே ஒரு பத்திரிகை தொடங்கினார்.

“மாயவரத்தில் கழகத் தோழர்களின் அறிமுகமும் கவிஞர் கருணானந்தம், கிட்டப்பா (மயிலாடுதுறை முன்னாள் எம்.எல்.ஏ), பழனிச்சாமி ஆகியோருடைய நட்பும் எனக்குக் கிடைத்தது.

எனக்கு பத்திரிகைத் துறையிலிருந்த ஆர்வம் அங்கேயும் பத்திரிகை நடத்த வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது–

மாமாவின் ஆதரவோடும், நண்பர்களின் உதவியோடும் ‘எழுச்சி’ என்ற பத்திரிகையைத் தொடங்கினேன். கவிஞர் கருணானந்தம்தான் எழுச்சி என்னும் பெயரைச் சூட்டினார். கிட்டப்பா இணையாசிரியராக இருந்தார்.

மாயவரத்தில் எழுச்சி பத்திரிகையின் தொடக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே சென்னையில் ‘நம் நாடு’ இதழ் தொடங்கப் போவதாக அறிவிப்பு வந்தது.

எழுச்சிக்கு வாழ்த்து வாங்க சென்னைக்கு வந்த என்னிடம் நாவலர் “நம்நாடு ஆரம்பிக்கப் போகிறோம். இப்பொழுது ஏன் உனக்குப் பத்திரிகை?... நம்நாட்டுக்கே வந்துவிடு” என்றார்.

“என்னுடைய பத்திரிகைக்கான தொடக்க வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டன. நடுவில் எப்படி விடுவது!”

“நாவலர் வாழ்த்து அளித்தார்” “தென் ஆற்காடு மாவட்ட முதல் மாநாடு சிதம்பரத்தில் நடைபெற்ற போது ‘எழுச்சி’ வெளிவந்தது. இம்மாநாட்டில்தான் கல்லக் குடிப் போராட்ட அறிவிப்பு வெளியிடப்பெற்றது. அதைத் தொடர்ந்து மும்முனைப் போராட்ட அறிவிப்புகளும் வெளிவந்தன.

இச்செய்திகளைத் தாங்கி எழுச்சி வெளிவந்தது.”

“டால்மியாபுரப் போராட்டத்தையொட்டி எழுச்சி இணையாசிரியர் கிட்டப்பா கைது செய்யப்பட்டார். ஆசிரியரான என்னைக் கைது செய்யவில்லை.”

“இதழ்களை அச்சிட்டு தந்த அச்சத்தார் அரசிடமிருந்த அச்சத்தின் காரணமாக எழுச்சி இதழ்களை அச்சிட அஞ்சி மறுத்து விட்டனர். எனவே எழுச்சி ஐந்து இதழ்களோடு நின்றுவிட்டது.

எழுச்சியை சென்னையிலிருந்து நடத்தலாம் என்று சென்னைக்கு வந்து சேர்ந்தேன். கோடம்பாக்கத்தில் தங்கிக் கொண்டு, நுங்கம்பாக்கத்திலிருந்த பூ. கணேசனின் ‘நிலவு அச்சகத்தில்’ அச்சிட ஏற்பாடு செய்தேன். அரசு அனுமதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது... ‘எழுச்சி’ வெளியிடும் எண்ணத்தை நாளடைவில் கைவிட்டு விட்டேன்.

எவ்வித வேலையும் கிடைக்காமல் சும்மா இருந்த செங்குட்டுவன் மீண்டும் விடுதலையில் துணை ஆசிரியராகச் சேர்ந்துவிட்டார். அந்நிகழ்ச்சிகளைச் சுவையுடன் விவரித்தார்.

விடுதலை ஆசிரியர் குருசாமி அமிர்தகணேசனாரிடம் விடுதலைக்குத் துணை ஆசிரியர் தேவை என்று மீண்டும் சொல்லி வைத்திருந்தார். அமிர்த கணேசனார் வேலையின்றி இருந்த என்னை விடுதலைக்குப் போகச் சொன்னார். வேறு கட்சி இதழான விடுதலையில் வேலைசெய்ய நான் யோசித்தேன். வேலை இல்லாமலிருந்ததால் வீட்டிலும் வேலையில் சேரும்படி வற்புறுத்தினார்கள். இச்செய்தியைப் பேராசிரியரிடமும், நாவலரிடம் நான் சொன்னபோது பேராசிரியர் "உனக்கென்ன? அரசாங்க வேலை மாதிரி நினைச்சு வேலை செய்யேன்" என்றார். நாவலர், நீ அங்கேயே இரு! சமயம் வரும்போது, 'நம்நாடு' இதழுக்குக் கூப்பிடுகிறேன்' என்றார். மனச்சங்கடத்துடன் விடுதலையில் வேலையில் சேர்ந்தேன். குருசாமி தி.மு.க.விலிருந்து நான் விலகியதாக அறிக்கை எழுதித் தரும்படிக் கேட்டார்.

''விலக முடியாது; விருப்பம் இருந்தால் வைத்துக் கொள்ளுங்கள்; உங்களுக்கு விரோதமா நடக்கமாட்டேன்'' என்றேன் நான்.

''சரி பரவாயில்லை; தி.மு.க சம்பந்தப்பட்ட எந்த நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம்'' என்ற எச்சரிக்கையுடன், விடுதலையில் சேர்த்துக்கொண்டார், குருசாமி.

விடுதலையில் 1955ல் சேர்ந்த நான் இரண்டாண்டுக் காலம் அங்கேயே வேலை பார்த்தேன். க.து. (கண்ணீர்த்துளி) என்று ஒரு மாதிரியாகவே என்னைக் கண்காணித்து, விடுதலையில் நடத்தினர். இந்த நிலையில் 57 தேர்தல் வந்தது.

ஒருநாள், திராவிடர் கழகக் கொடியை ஒரு பக்கமும், காங்கிரசுக் கொடியை ஒரு பக்கமும் பறக்கவிட்ட, ஒலிபெருக்கி வைக்கப்பட்ட வண்டியில், விடுதலை அலுவலகத்துக்கு வந்த சென்னை மாவட்ட தி.க. செயலாளர் டி.எம். சண்முகம் என்னை தி.மு.கவுக்கு எதிராகத் தேர்தல் பிரசாரம் செய்ய அழைத்தார். "நான் இங்கு துணை ஆசிரியர் வேலை பார்க்கத்தான் வந்தேனே தவிர பிரசாரம் செய்ய வரவில்லை" என்று கூறி மறுத்துவிட்டேன்.

'விடுதலையில்' வேலை பார்ப்பது இனி இயலாத காரியம் என்பதை நான் புரிந்து கொண்டேன். தி.மு.கவுக்கு நேர் எதிராகச் செயல்பட்ட விடுதலையில் தொடர்ந்து பணியாற்ற மனச்சான்று இடந்தரவில்லை. அதன் காரணமாக சிந்தாதிரிப்பேட்டை,

விடுதலை அலுவலகம் எதிரில் நடைபெற்ற அன்பழகனுக்காதர வான தி.மு.க. பிரசாரக் கூட்ட மேடையில், அன்றே, ஏறிவிட்டேன்.

"இதே விடுதலை அலுவலகத்தில் அன்று மாலை வரை வேலை பார்த்தேன். மேலும் மனச்சாட்சிக்கு எதிராக வேலை பார்க்க முடியாததால் விடுதலை அலுவலகத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டேன். என் ராஜிநாமாக் கடிதத்தை அனுப்பி விட்டேன். இதயத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிற இலட்சியத்தினடிப்படையில் இனி இயக்கப் பணியாற்றுவேன் என்று பேசினேன்." செய்தி அறிந்தபோது பேராசிரியர் அன்பழகன் என்னைக் கடிந்து கொண்டார்.

"பின்னர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் தனியரசு வார இதழிலும், திராவிட சினிமா இதழிலும் சில காலம் வேலை பார்த்தேன். 'நம்நாடு' இதழிற்கே வந்து விடும்படி நம்நாடு பொறுப்பாசிரியர் காஞ்சி கல்யாணசுந்தரம் அழைத்தார். அதன்படி 1957 ஆகஸ்டு முதல்நாள் முதல் நம்நாட்டில் சேர்ந்து நம்நாடு நிறுத்தப்பெற்ற 1972 டிசம்பர் 5ஆம் நாள் வரை 15 ஆண்டுகளுக்கும் மேலாக நம்நாட்டில் வேலை பார்த்தேன்.

அங்கே அறிஞர் அண்ணா, நாவலர், சி.பி.சிற்றரசு, முதுபெரும் இயக்கத் தோழரும் பத்திரிகையாளருமான காஞ்சி கல்யாண சுந்தரம் ஆகியோரின் சீரிய தலைமையில் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இது என் வாழ்நாளில் கிடைத்த மிகப்பெரிய பெருமையாக நான் கருதுகிறேன். அதுபோன்றே, 'விடுதலை'யில் ஆசிரியர் குத்தூசி குருசாமியின் தலைமையில் பணியாற்றியதையும் பெருமையாக எண்ணுகிறேன்.

'நம்நாடு' நிறுத்தப்பெற்றதும் 'நவமணி'யில் சேர்ந்தேன். பின்னர், குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையில் வேலை கிடைத்தது. சில மாதங்கள் வேலை செய்தேன்; பத்திரிகைத் துறையிலேயே நீண்ட காலம் இருந்து வந்த எனக்கு அங்கு இருக்க பிடிக்காமற் போனதால் அந்த வேலையை விட்டுவிட்டு மீண்டும் நவமணிக்கே சென்றுவிட்டேன்."

தலைமைக்கழகச் சார்பில் கழகக்குரல் தொடங்கப்பெற்றதும் மீண்டும் கழகக் குரலில் சேர்ந்துவிட்டேன்.

"அறிவகத்திலேயே நீண்டகாலம் பணியாற்றிவிட்ட நான் அறிவகத்தையே என் பிறந்த வீடாகக் கருதுகிறேன்; என் ஆயுளில் கணிசமான அளவு அறிவகத்திலிருந்ததைப் பற்றி நான் ஒரு மகிழ்ச்சி அடைகிறேன்."

"நம் நாட்டிலிருந்த போது அண்ணா அவர்களிடம் நாள்தோறும் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருக்குமே.

அண்ணாவால் பாராட்டப்படும் வாய்ப்புகள் உங்களுக்கு கிடைத்ததுண்டா?'' என்று கேட்டபோது செங்குட்டுவன் சொன்னார்:

எத்தனையோ நிகழ்ச்சிகள் உண்டு.

ஒருமுறை 1957ல் அண்ணா கடற்கரையில் கலைவாணர் என்.எஸ்.கே. இரங்கல் கூட்டத்தில் பேசினார். அன்று அண்ணா பேசிய பேச்சு அண்ணாவுக்கே மிகப்பிடித்தமானதாக அமைந்துவிட்டது.

நான் குறிப்பெடுக்கச் சென்றிருந்தேன். ஒலிப்பதிப்பில் அண்ணா பேச்சு டேப் செய்யப்பட்டதால், பக்கத்திலிருந்த அரங்கண்ணல், டேப் செய்யும்போது, நீ ஏன் அண்ணா பேச்சை எழுதுகிறாய்?'' என்று கூறவே நானும் பேச்சை எழுதாமலிருந்து விட்டேன்.

மறுநாள் அறிவகத்துக்கு வந்த அண்ணா 'ஒலிப்பதிவை இயக்கச் சொல்லியிருக்கிறார். பேச்சு சரியாகப் பதிவாகவில்லை.

அண்ணா, பேச்சை நான் எழுதியிருப்பேன் என்ற நம்பிக்கையிலும், நம் நாட்டில் முழு அளவில் வெளியிட வேண்டும் என்பதற்காக என்னை எதிர்பார்த்தபடி இருந்தார்.

நான் உள்ளே நுழைந்ததும் 'செங்குட்டுவன், நேற்றையக் கூட்டப் பேச்சை எழுதி இருக்கிறாயா?'' என்றார். ''டேப் செய்ததால் நான் எழுதவில்லை'' என்றேன். அண்ணாவின் முகம் சுருங்கிவிட்டது.

கோபமான குரலில் 'ஏன் எடுக்கவில்லை? டேப் இருந்தாலென்ன? இல்லாவிட்டாலென்ன? நீ உன் வேலையைச் செய்ய வேண்டியதுதானே!'' என்றார் அண்ணா.

அண்ணா கோபம் அடையும் அளவுக்குப் பணியில் தவறி விட்டோமே என்று நான் கண்கலங்கினேன். அண்ணாவின் முகத்தில் நான் அதற்கு முன்னாலும் பின்னாலும் அவ்வளவு கோபக் குறியைக் கண்டதில்லை. சமாளித்துக் கொண்டு அந்தப் பேச்சை இப்பொழுது வேண்டுமானாலும் எழுதித்தருகிறேன் என்றேன். ''எப்படி எழுதுவாய்?'' என்றார் அண்ணா. நினைவில் நன்றாக இருக்கிறது; எழுத முடியும், அண்ணா'' என்றேன். ''சரி, எழுது பார்க்கலாம்!'' என்று சொல்லிவிட்டு மாடிக்குச் சென்றுவிட்டார். நான் சிறிது நேரத்தில் எழுதிக்கொண்டுபோய் காட்டினேன்.

அதைப்பார்த்து மனநிறைவு அடைந்த அண்ணா, 'சரி பரவாயில்லை, இதைப் பத்திரிகையில் போடு!' என்றார்.

அறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டுப்பெற்ற இந் நிகழ்ச்சியை என்றைக்கும் மறக்க மாட்டேன் என்கிறார் செங்குட்டுவன். இதேபோன்று கலைஞர், நாவலர், பேராசிரியர் ஆகியவர்களுடைய பாராட்டுதல்களையும் பல சந்தர்ப்பங்களில் தான் பெற்றிருப்பதாக செங்குட்டுவன் குறிப்பிட்டு மகிழ்ச்சி அடைகிறார்.

"சுருக்கெழுத்துப் பயிற்சி முறை இல்லாமலேயே சொற் பொழிவுகளை அப்படியே திரட்டித் தரக்கூடிய பயிற்சியை அனுபவத்தில் பெற்றேன். இம் முறையில் எழுதக் கூடிய விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரில் நானும் ஒருவன்" என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார் செங்குட்டுவன்.

இப்பொழுது இயக்க இதழ்கள் முன்பு விற்றது போல அதிகம் விற்பனையாவதில்லை என்ற ஒரு கருத்து இருக்கிறதே அது சரிதானா? என்று செங்குட்டுவனைக் கேட்டபோது அவர் உற்சாகத்துடன் பதிலளித்தார்:

ஓரளவு உண்மைதான். 57க்கு முன்னால் பார்லிமெண்டரி கட்சியாகும் வரை நம்முடைய செய்திகளை, நம்முடைய தலைவர்களுடைய பேச்சுகளை யெல்லாம் கழக ஏடுகளில் மட்டுமே படிக்க முடிந்தது. மற்ற ஏடுகள் இருட்டடிப்புச் செய்து வந்தன. 57ல் அண்ணா சட்டமன்றத்துக்குச் சென்ற பிறகு எல்லாருடைய கவனத்தையும் நமது கழகம் ஈர்த்தது. விரும்பியோ, விரும்பாமலோ சட்டமன்ற நிகழ்ச்சிகளையும், நம்மைப் பற்றிய செய்திகளையும் மற்ற பத்திரிகைகளும் வெளியிட ஆரம்பித்தன. நாளடைவில் தி.மு.க. செய்தியைப் போட்டால்தான் பத்திரிகைகள் விற்கும் என்னும் நிலைமை உருவாயிற்று. அப்பொழுது கழக ஏடுகளைவிட மற்ற ஏடுகள் போட்டி போட்டுக் கொண்டு கழகச் செய்திகளையும் அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்களுடைய பேச்சுகளையும் வெளியிட்டன. இதனால் நம்முடைய கழகச் செய்திகள் எல்லா ஏடுகளிலும் கணிசமான அளவுக்கு வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. அதன்பின்னர் ஆளும்கட்சியான பிறகு நமது தலைவர்கள், அமைச்சர்களின் பேச்சுக்களும், இயக்கச் செய்திகளும் ஏடு தவறாமல் பத்தி பத்தியாக வெளிவரலாயின. மேலும் எல்லா வசதிகளோடும் கூடிய மற்ற ஏடுகள், வசதிகள் குறைந்த நமது ஏடுகளைவிட விரைந்தும் கூடுதலாகவும் நமது செய்திகளைத் தந்தன. இதனால் நம்முடைய இயக்கத் தோழர்களும் மற்ற ஏடுகளை வாங்கத் தொடங்கினர். இதுதான் முக்கியக்காரணம் என்று நான் கருதுகிறேன்.

செய்திப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை நீங்கள் சொல்வது சரிதான்; கழக வார இதழ்கள் கூட முன்போல அதிகம் விற்ப தில்லையே, ஏன்?

நீங்கள் சொல்வது சரிதான். ஏராளமான வாசகர்களைப் பெற்றிருந்த அறிஞர் அண்ணா, கலைஞர், நாவலர், பேராசிரியர் போன்ற தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் மிகுதியான அலுவல்கள் காரணமாக முன்போல எழுதுவதைக் குறைத்துக் கொண்டார்கள். எழுத்தாளர்களாக உள்ள மற்றவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் களாகவும் பதவிப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட காரணத்தால் அவர்களும் எழுத்துப் பணியில் முன்போல ஈடுபடமுடியவில்லை. இதைத்தவிர நமது தோழர்களும் இயக்க இதழ்களை விரும்பி வாங்கிப் படிப்பதில் முன்போலப் போதிய ஆர்வம் காட்டுவ தில்லை என்றும் எனக்குத் தோன்றுகிறது. மேலும் ஒரு சிலர் ஆர்வத்தோடு பத்திரிகைகள் தொடங்குகிறார்கள்; ஆனால் அவர் களுக்குப் பத்திரிகைத் துறையில் போதிய அனுபவம் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே தரமான இதழ்களை அதிகமாகக் காணமுடியவில்லை. இக்குறைகளையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் 'கழகக்குரல்' ஏட்டைத் தலைமைக்கழகமே செம்மையான முறையில் நடத்தி வருகிறது.

"தி.மு.க. என்றாலே சிறந்த எழுத்தாளர்களையும் பேச்சாளர் களையும் கொண்ட அமைப்பு என்ற எண்ணம் பொது மக்களிடையே உண்டு. அதனை நிலைநாட்டும் வகையில் நமதியக்க எழுத்தாளர்களெல்லாம் மீண்டும் எழுதத் தொடங்க வேண்டும் என்பது என்னுடைய விழைவு. இவர்கள், பல்வேறு பணிகளுக் கிடையிலும் கழகத் தலைவர் கலைஞரவர்கள் தொடர்ந்து எழுதி வருவதைக் கருத்தில் கொள்ள வேண்டும்"

"நம்நாடு இதழில் 5 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி இருக்கிறீர்கள். நம்நாடு இதழைப் பற்றிச் சிறிது கூறுங்கள். செங்குட்டுவன் மிகுந்த பெருமையுடனும், ஆர்வத்துடனும் இக்கேள்விக்கு விடையளித்தார்.

தி.மு.க. நடத்திய நம் நாடு இதழைப் போன்று வேறு எந்த அரசியல் கட்சியும் ஒரு நாளிதழைத் தொடர்ந்து இருபதாண்டுக் காலம் நடத்தியதில்லை. மேலும் நம்நாடு செய்திகளை வெளியிட்ட விதமும் தனிச்சிறப்புடையதாகும். அளவில் சிறியதாக இருந்த போதிலும், அதைப்படித்தவர்கள், பெரிய அளவு செய்திப் பத்திரிகையைப் படித்து முடித்த மனநிறைவைக் கொள்ள முடியும். அன்றாடம் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய எல்லாச் செய்திகளையுமே சுருக்கமாகத் தெளிவாக வெளியிட்டோம்.

மேலும் நம் நாடு இதழில் வரும் செய்திகளையெல்லாம் நல்ல, தூய, தமிழிலேயே இருக்கும் படிப் பார்த்துக் கொண்டோம். தலைவர்களுடைய சொற்பொழிவுகளை நாங்கள் திரட்டி வெளியிட்ட முறையே அனைவரையும் ஈர்த்துப் படிக்கச் செய்தது. எதிர்க்கட்சிக்காரர்களைத் தாக்கும்போது கூட இம்மியளவும் தரம் குறையாமல் மரபு பிறழாமல் கண்ணியத்துடன் எழுத வேண்டும் என்பது அண்ணா அவர்களின் கட்டளை. அதனை இறுதி வரையில் பின்பற்றி வந்தோம். இப்பொழுது கழகக் குரலிலும் அப்படித்தான்.

பொதுவாக இன்றையப் பத்திரிகைகளைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

''ஒரு காலத்தில் பத்திரிகைகளெல்லாம் மக்களுக்கு அறிவு புகட்டும் வகையில் அமைந்திருந்தன. தரத்தைக் காப்பாற்றுவதிலும் அக்கறை செலுத்தி வந்தன. இப்பொழுது நாளிதழ்கள் என்னும் பெயரில் வெளிவந்து கொண்டிருக்கும் பெரும்பாலான ஏடுகள் தரத்தைப் பற்றிக் கவலைப்படாமல், காசையே நோக்கமாகக் கொண்டு அபாண்டமான செய்திகளைத் தாறுமாறாக தரமின்றி வெளியிட்டு மக்களின் அறிவையும், பண்பாட்டையும் சிதைக்கின்றன.......''

''இப்பொழுது பத்திரிகைகளில் நல்ல தமிழைக் காணமுடியவில்லை. நம்முடைய இயக்கம் முப்பதாண்டுகளுக்கும் மேலாகப் பாடுபட்டு ஏற்படுத்திய தமிழ் மறுமலர்ச்சியைப் பல ஏடுகள் பாழாக்கிக் கொண்டிருக்கின்றன. இப்பத்திரிகைகள் இயன்ற வரையிலேனும் நல்ல தமிழில் செய்திகளை வெளி யிடுவதில் ஆர்வம் காட்ட வேண்டும். பாலுணர்வூட்டும் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை நிறுத்திக்கொண்டு தரமான இலக்கியங்களை வெளியிடுவதில் அக்கறை செலுத்த வேண்டும்''

''பல தமிழ்ப் பத்திரிகைகள் இலக்கணப் பிழையுடன் வெளிவருகின்றன. ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒரு இலக்கணப் பிழை ஏற்பட்டு விட்டால்கூட அதைப் பெரிதுபடுத்திக் கவலை அடையக்கூடியவர் உண்டு. எனவே ஆங்கிலப் பத்திரிகைகள் பிழையின்றி வெளிவருகின்றன. தமிழ்ப் பத்திரிகைகள் பிழைகளோடு வெளிவரும்போது அதற்காக யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை''

''தமிழ்ப் பத்திரிகைகளில் இலக்கணப் பயிற்சி உடைய தமிழ்ப் புலவர்களை பிழை திருத்த நியமிக்க வேண்டும்; அதன் மூலம் தமிழ்ப் புலவர்களுக்கும் வேலை வாய்ப்புகள் பெருக வாய்ப்புண்டு''

இதுவரை பத்திரிகையாளராகவே வாழ்ந்துவிட்ட செங்குட்டுவன் அப்பணியில் சிறிதும் சலிப்போ, அலுப்போ, அடைந்தவராகத் தெரியவில்லை. தொடர்ந்து இப்பணியில் இருப்பதையே இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்.

– திருவிளக்கு
பொங்கல் மலர், *1976*

‘முரசொலி’ பொங்கல் மலர் விளம்பரம்

கரும்புபோல் இனித்து,
களிப்பால்
சுரும்புபோல் உங்களைச்
சுற்றவைக்கும்
பொங்கல் மலர்!

தை முதல் நாள் என்று வரும் என எதிர்பார்த்து நிற்கிறோம்; கரும்புடனும் கட்டி வெல்லத்துடனும் “முரசொலி” பொங்கல் மலரும் வருமல்லவா? எனவேதான் அந்நாளைப் பொன்னாளாகக் கருதுகிறோம் – என்று எழுதி யிருந்தீர்கள் அல்லவா?

– அதை நனவாக்க வருகிறது –
‘முரசொலி’ பொங்கல் மலர்
அறிஞர் அண்ணாவின் பொன்னோவியத்துடன்
துவங்கும்!

நாட்டுக்கு ஒரு சேதி!

நாதியற்றுக் கிடக்கும் திராவிடரின் புது வாழ்வுக்காக வெல்லச் சொல் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் உவந்தளிக்கும் உரிமை முழக்கக் கட்டுரை!

தாழை மரம்!

தமிழுக்கு ஓர் பெருமையாம் டாக்டர் மு. வரதராசனார் படைக்கும் அமிழ்தினும் இனிய கருத்து விருந்து!

உரிமையுணர்ச்சி!

காவிரி சூழ் நாடா! உன் பூவிரிந்த சோலை இன்று புழுதி மேடானது ஏன்? என்று எக்காளம் ஊதி, எலி போன்றோரையும் ஏறு நடைச் சிங்கங்களாக்கும் அறிவுரைகளை பேராசிரியர் க. அன்பழகனார் தருகிறார்!

ஊழ்!

உலகமெல்லாம் கட்டியாண்டவன் இன்று விதியென்று மதிபிழக்கும் பேதமையை எடுத்துக் காட்டும் எழில்மிகு எழுத்தோவியம்; புலமைக்கு ஓர் எடுத்துக் காட்டு! புலவர் குழந்தை எழுதியிருக்கிறார்!

அந்த நாளும் வந்திடாதோ!

ஊனுக்கும் உணவிற்கும் குறைவின்றி, வான்மட்டம் வளர்ந்த புகழோடு அன்று நாம் வாழ்ந்த காட்சியை நினைவுத் திரைக்குக் கொண்டுவரும் உங்கள் நெஞ்சை விட்டு நீங்காத சித்திரம்! அழகுத் தமிழ் எழுத்தோவியர் அரங்கண்ணல் தீட்டியது!

தந்தையும், மகனும்!

நகைச்சுவை பொங்க; இலக்கியச்சுவை கொழிக்க உங்களைக் கலைப்பூங்காவிற்குப் பாக்கு வைத்து அழைத்துச் செல்லும் சின்னஞ்சிறு நாடகம்! தித்திக்கும் தமிழ்நடைக்காரராம் தில்லை வில்லாளன் தீட்டியது!

தியாக மாளிகை!

– மொகலாயர் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு; கண்ணுக்குள் மணி போல் வளர்ந்த இரு காதலர் கதையினை உங்கள் எண்ணத்திலிருந்து விலகா வகையில் வண்ணமுடன் வரைகிறார் முன்னணி எழுத்தாளர் பி.சி. கணேசன்!

நடிகையின் செல்வன்!

– இதயத்தை ஈர்க்கும் காந்தம் போல் நிகழ்ச்சிகளைக் கோத்து; உதயத்தைக் கண்டு மலரும் குமுதம்போல் உங்களை மகிழ வைக்கும் இனிய காவியம்! கலையழகுடன் கதைகள்தரும் டைரக்டர் காசிலிங்கத்தின் படைப்பு!

கரும்புபோல் இனித்து,
களிப்பால்
கரும்புபோல் உங்களைச்
சுற்றவைக்கும்
பொங்கல் மலர்!

தை முதல் நாள் என்று வரும் என எதிர்பார்த்து நிற்கிறோம்: கரும்புடனும் கட்டி வெல்லத்துடனும் "முரசொலி" பொங்கல் மலரும் வருமல்லவா? எனவே நான் அந்நாளைப் பொன்னாளாகக் கருதுகிறோம்—என்று எழுதியிருந்தீர்கள் அல்லவா?

—அதை நனவாக்க வருகிறது—

'முரசொலி' பொங்கல் மலர்

அறிஞர் அண்ணாவின்
பொன்னோவியத்துடன் துவங்கும்!

நாட்டுக்கு ஒரு சேதி!

நாதியற்றுக்கிடக்கும் திராவிடரின் புது வாழ்வுக்காக வெல்லச் சொல் **நாவலர் நெடுஞ்செழியன்** அவர்கள் உவந்தளிக்கும் உரிமை முழக்கக் கட்டுரை!

தாழை மரம்!

தமிழுக்கு ஓர் பெருமையாம் டாக்டர் **மு. வரதராசனார்** படைக்கும் அமிழ்தினும் இனிய கருத்து விருந்து!

உரிமையுணர்ச்சி!

காவிரி சூழ் நாடா! உன் பூவிருக்கும் சோலை இன்று புழுதி மேடானது ஏன்?—என்று எக்காளம் ஊதி, எல்லோரையும் ஏறு நடைச் சிங்கங்களாக்கும் அறிவுரைகளை **பேராசிரியர் க. அன்பழகனார்** தருகிறார்!

ஊழ்!

உலகமெல்லாம் கட்டியாண்டவன் இன்று விதியென்று மதிப்ழக்கும் பேதமையை எடுத்துக் காட்டும் எழில்மிகு எழுத்தோவியம்; புலமைக்கு ஓர் எடுத்துக் காட்டு! **புலவர் குழந்தை** எழுதியிருக்கிறார்!

அந்த நாளும் வந்திடாதோ!

ஊணுக்கும் உணவிற்கும் குறைவின்றி; வான்மட்டம் வளர்ந்த புகழோடு அன்று நாம் வாழ்ந்த காட்சியை நினைவுத்திரைக்குக் கொண்டுவரும் உங்கள் நெஞ்சை விட்டு நீங்காத சித்திரம்! அழகுத் தமிழ் எழுத்தோவியர் **அரங்கண்ணல்** தீட்டியது!

தங்கையும், மகனும்!

நகைச் சுவை பொங்க; இலக்கியச்சுவை கொழிக்க உங்களைக் கலைப்பூங்காவிற்குப் பாக்கு வைத்து அழைத்துச் செல்லும் சின்னஞ்சிறு நாடகம்! தித்திக்கும் தமிழ்நடைக்காரராம் **தில்லை வில்லாளன்** தீட்டியது!

தியாக மாளிகை!

—மொகலாயர் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு; கண்ணுக்குள் மணி போல் வளர்ந்த இரு காதலர் கதையினை உங்கள் எண்ணத்திலிருந்து விலகா வகையில் வண்ணமுடன் வரைகிறார் முன்னணி எழுத்தாளர் **பி.சி. கணேசன்**

நடிகையின் செல்வன்!

—இதயத்தை ஈர்க்கும் காந்தம் போல் நிகழ்ச்சிகளைக் கோத்து; உதயத்தைக் கண்டு மலரும் குமுதம்போல் உங்களை மகிழ வைக்கும் இனிய காவியம்! கலையழகுடன் கதைகள்தரும் **டைரக்டர் காசிலிங்கத்தின்** படைப்பு!

அவாள் ஏடுகளுக்கு சவால்; அழகும் கவர்ச்சியும் மிக்க பேரேடு!

பொங்கல் மலர்!

மலேயாவில் மூன்று மாதம் !

தாயகம் விட்டு; வேறுலகத்தில் அடிமைவேலை செய்து பிழைக்கும் ஆயிரமாயிரம் திராவிடத் தோழர்களிடையே தென்னகத்தின கலைத்தூதுவராகச் சென்று; விலையில்லாப் பணியாற்றித் திரும்பிய நடிப்பிசைப்புலவர் கே. ஆர். ராமசாமி மலேயா பற்றிய அனுபவங்களை எழுதுகிறார், படங்களுடன்.

நாடகத்தில் நாம்!

திராவிடத்தின் கெடுதலையே கருதியிருக்கும் கயவர்களைக் கருவறுக்கவந்த விடுதலைப் பட்டாளம் கலைத்துறையைக் கைப்பற்றி; அதன் மூலம் ஆற்றும் அறிவுலகப் பணியதனை அற்புதமாகச்சித்தரிக்கிறார் நடிகமணி டி. வி. நாராயணசாமி!

வலைப்புரு :

உள்ளம் புத்துணர்ச்சி பெறும் விதத்திலே உணர்ச்சிகளின் மோதுதலை வினயமுடன் விளக்குகிறார்; இனிமையும் எளிமையும் கலந்து எழிலோவியம் படைக்கிறார் க. அறிவழகன் !

நடந்ததும் நடக்காததும் !

மர்மமொன்றினைப் பின்னணியாக வைத்து; சம்பவங்களை அடுக்கிக்காட்டி; உங்களைத் திகைப்பிலாழ்த்தும் துப்பறியும் ஓவியம் அரிமமான் தருகிறார்!

இளவரசியின் காதல்!

உண்மைக் காதல்தனை ஒளி விளக்கால் காட்டும் அழகுச் சிறுகதை சக்தி எழுதுகிறார்.

நான் கண்ட வ. உ. சி.

தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் விடுதலை வீரர் வ. உ. சிதம்பரனார் பற்றித் தனது எண்ணங்களை வழங்குகிறார் !

நனவாக வேண்டிய கனவு :

நாளை மலர இருக்கும் திராவிடத்தை உங்கள் மனக் கண்முன் கொண்டுவரும் புதுமை ஒவியம். மாறன், எம். ஏ. தீட்டும் உங்கள் மனதைவிட்டு மறையாத இன உணர்ச்சிக் காவியம்!

உடுமலை நாராயணக்கவி, வாணிதாசன், கருணானந்தம், முடியரசன், புதுவை சிவப்பிரகாசம்

ஆகிய கவிஞர்கள் தேனூறும் கவிதைச் சோலையிலே உங்களை உலவ விடுகிறார்கள் !

- ★ நாடகம்
- ★ நீண்ட கட்டுரை
- ★ சிறு கதை
- ★ கவிதை நடைச் சொல்லோவியம்

— இவையனைத்தையும் உங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றும் மகிழ்ந்திடும் வகையில் மு. க. தீட்டுகிறார் !

- ★ வனப்பும் சிறப்பும் கொண்ட மூவர்ண ஓவியம்
- ★ உள்ளே உங்கள் இதயம் கவரும பல வண்ணப் படங்கள் ! ஓவியர் கே. மாதவன் தீட்டியவை.
- ★ தலைவர்களின் பொன்மொழிகள்!
- ★ முரசொலி செல்லப்பன், ஓவியர் சது—பக்கத்திற்குப் பக்கம் அள்ளித் தெளித்திடும் சித்திரங்கள் !
- ★ மற்றும் உங்கள் கருத்துக்கும், கண்ணுக்கும் விருந்தளிக்கும் பல புதிய பகுதிகள் உண்டு !

இவை யனைத்தையும் கொண்டு, கரும்பினும் இனிதாய்; கட்டி வெல்லத்திலும் சுவை மிக்கதாய் முரசொலி பொங்கல் மலர் உங்களை நாடி வரப் போகிறது!

விலை இரண்டே ரூபாய்தான்!

★ முன பணம் அனுப்பாத விற்பனை யாளர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் கண்டிப்பாய் மலர் அனுபபப்பட மாட்டாது.

அவாள் ஏடுகளுக்கு சவால்;

அழகும் கவர்ச்சியும் மிக்க பேரேடு!

பொங்கல் மலர்!

மலேயாவில் மூன்று மாதம்!

தாயகம் விட்டு; வேறுலகத்தில் அடிமைவேலை செய்து பிழைக்கும் ஆயிரமாயிரம் திராவிடத் தோழர்களிடையே தென்னகத்தின் கலைத்தூதுவராகச் சென்று; விலையில்லாப் பணியாற்றித் திரும்பிய நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி மலேயா பற்றிய அனுபவங்களை எழுதுகிறார், படங்களுடன்.

நாடகத்தில் நாம்!

திராவிடத்தின் கெடுதலையே கருதியிருக்கும் கயவர்களைக் கருவறுக்கவந்த விடுதலைப் பட்டாளம் கலைத்துறையைக் கைப்பற்றி; அதன் மூலம் ஆற்றும் அறிவுலகப் பணியதனை அற்புதமாகச் சித்தரிக்கிறார் நடிகமணி டி.வி. நாராயணசாமி!

வலைப்புறா:

உள்ளம் புத்துணர்ச்சி பெறும் விதத்திலே உணர்ச்சிகளின் மோதுதலை வினயமுடன் விளக்குகிறார்; இனிமையும் எளிமையும் கலந்து எழிலோவியம் படைக்கிறார் க. அறிவழகன்!

நடந்ததும் நடக்காததும்!

மர்மமொன்றினைப் பின்னணியாக வைத்து; சம்பவங்களை அடுக்கிக்காட்டி; உங்களைத் திகைப்பிலாழ்த்தும் துப்பறியும் ஓவியம் அதிகமான் தருகிறார்!

இளவரசியின் காதல்!

உண்மைக் காதல்தனை ஒளி விளக்கால் காட்டும் அழகுச் சிறுகதை சக்தி எழுதுகிறார்.

நான் கண்ட வ.உ.சி.

தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம் விடுதலை வீரர் வ.உ.சிதம்பரனார் பற்றித் தனது எண்ணங்களை வழங்குகிறார்!

நனவாக வேண்டிய கனவு:

நாளை மலர இருக்கும் திராவிடத்தை உங்கள் மனக் கண்முன் கொண்டுவரும் புதுமை ஓவியம். மாறன், எம்.ஏ. தீட்டும் உங்கள் மனதைவிட்டு மறையாத இன உணர்ச்சிக் காவியம்!

உடுமலை நாராயணக்கவி, வாணிதாசன், கருணானந்தம், முடியரசன், புதுவை சிவப்பிரகாசம் ஆகிய கவிஞர்கள் தேனூறும் கவிதைச் சோலையிலே உங்களை உலவ விடுகிறார்கள்!

* நாடகம்
* நீண்ட கட்டுரை
* சிறுகதை
* கவிதை நடைச் சொல்லோவியம்

– இவையனைத்தையும் உங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றும் மகிழ்ந்திடும் வகையில் மு.க. தீட்டுகிறார்!

* வனப்பும் சிறப்பும் கொண்ட மூவர்ண ஓவியம்
* உள்ளே உங்கள் இதயம் கவரும் பல வண்ணப் படங்கள்! ஓவியர் கே.மாதவன் தீட்டியவை.
* தலைவர்களின் பொன்னோவியங்கள்!
* முரசொலி செல்லப்பன், ஓவியர் சது – பக்கத்திற்குப் பக்கம் அள்ளித் தெளித்திடும் சித்திரங்கள்!
* மற்றும் உங்கள் கருத்துக்கும், கண்ணுக்கும் விருந்தளிக்கும் பல புதிய பகுதிகள் உண்டு!

இவையனைத்தையும் கொண்டு, கரும்பினும் இனிதாய்: கட்டி வெல்லத்தினும் சுவை மிக்கதாய் முரசொலி பொங்கல் மலர் உங்களை நாடி வரப் போகிறது!

விலை இரண்டே ரூபாய்தான்!

* முன் பணம் அனுப்பாத விற்பனையாளர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் கண்டிப்பாய் மலர் அனுப்பப்பட மாட்டாது.

– முரசொலி

04.01.1957

அனுதாபத்துக்குரிய 'கல்கி' ஆசிரியர் குழாம்!

– பி.ஆர். இலட்சுமிகாந்தன்

திராவிட முன்னேற்றக் கழகம் எந்தத் துறையிலும், ஆமையும் அல்ல – ஆடும் அல்ல!

'தூங்காத முயல்' என்பதைக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், 'கழகக் குரலின் சென்ற இரண்டு இதழ்களில் – உடன் பிறப்புக்கு எழுதிய கடிதங்களின் மூலம், புள்ளி விவரங்களுடன் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

அதற்குக் 'கல்கி' ஆசிரியர் குழாம் பதில் தரும் என்று எதிர்பார்க்க முடியாது; ஏனெனில், அதனால் பதில் சொல்ல இயலாது!

ஆனால், 'கல்கி' ஆசிரியர் குழாம், இனியேனும் தனக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத விவகாரங்களில் எல்லாம் தலையங்கம் எழுதி, தனது அறியாமையைக் காட்டிக் கொள்ளாது என்று நம்புகிறோம்.

மொத்தமுள்ள 72 பக்கங்களில், 32 பக்கங்களை விளம்பரத்தைக் கொண்டு நிரப்பி – மறைந்துபோன பேராசிரியர் 'கல்கி'யின் பழைய 'சிவகாமி சபத'த்தையும் – மறைந்த மூதறிஞர் இராஜாஜியின் படத்தையும் போட்டுத் தனது காலத்தை ஓட்டுக் கொண்டிருக்கின்ற 'கல்கி' ஆசிரியர் குழாத்திற்குப் புதிய விஷயங்கள் எதுவும் புரியாது என்பது நமக்குத் தெரியும். மாநில சுயாட்சி கேட்பது சுயநலமா என்பதை, 'கல்கி'யின் ஆசிரியர் குழாம், பேராசிரியர் க. சந்தானத்தைக் கேட்டிருக்கலாம்;

அல்லது, பழைய 'கல்கி' இதழ்களையாவது புரட்டிப் பார்த்திருக்கலாம்.

கடந்த 3 ஆண்டுக் காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர், மாநில சுயாட்சி பற்றி மிகத் தெளிவான விளக்கங்களைத் தந்திருக்கிறார்; தமிழகத்தில் மாத்திரமல்ல – ஆந்திரத்தின் தலைநகரான ஐதராபாத்திலும், உத்தரப் பிரதேசத்தின் தலைநகரமான இலட்சுமணபுரியிலும், கருநாடகத்தின் தலைநகரமான பெங்களூரிலும், கலைஞர், மாநில சுயாட்சித் தத்துவத்திற்கு அளித்த விளக்கங்கள், எல்லாப் பத்திரிகைகளிலும் மிகத் தெளிவாக வந்துள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகம் கோரும் மாநில சுயாட்சி என்ன, என்பதை விளக்கி, கழகத்தின் பொதுக்குழுவிலும் – செயற்குழுவிலும் பல தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் கோரும் மாநில சுயாட்சித் தத்துவம் என்ன என்பதை விளக்கித் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன், மிகப்பெரிய வரலாற்றுப் புத்தகத்தையே எழுதி வெளியிட்டிருக்கிறார்.

தமிழக வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்களும், மாநில சுயாட்சி பற்றி ஒரு தெளிவான கருத்துரையை எழுதிப் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், கழகத் தலைவர்கள், 'மாநில சுயாட்சி பற்றிச் சென்ற சில ஆண்டுகளாகத் தெளிவான விளக்கங்களைத் தந்துள்ளனர்.

மாநில சுயாட்சி பற்றிக் கலைஞர் அவர்கள் மிக விரிவாகவும் தெளிவாகவும், இரண்டு கருத்துக்கள் தெரிவித்துள்ளதை, நாட்டிலுள்ள அறிஞர்கள் – அரசியல்வாதிகள் நன்றாக அறிவார்கள்.

"மாநில சுயாட்சி என்னும்போது, 'அதிகாரங்கள் பரவலாக்கப் பட வேண்டும் – ஒரே இடத்தில் அதிகாரங்கள் குவிந்திருக்கக் கூடாது; அரசியல் துறையில் – சமுதாயத் துறையில் – பொருளாதாரத் துறையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்' என்கிறோம்.

"மத்திய அரசு, எல்லா அதிகாரங்களையும் முடக்கி வைத்துக் கொண்டும் – மாநில அரசுகள் கையைக் கட்டிக் கொண்டும் இருக்கின்ற நிலைமை இருக்கக்கூடாது என்றுதான் சொல்லுகிறோம்"

இது கலைஞர் அளித்துள்ள மிகத் தெளிவான விளக்கம்.

''மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதுதான் மாநில சுயாட்சித் தத்துவமே அல்லாமல், 'மாநிலம், இந்தியாவிலிருந்து துண்டித்துக்கொண்டு – சுதந்திர நாடாக வாழ வேண்டும்' என்பதற்காக நாங்கள் இப்படிப்பட்ட கோரிக்கைகளைச் சொல்லவில்லை.''

இதையும் கலைஞர், மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இந்த விவரங்களெல்லாம் தெரியாமல் – தெரிந்து கொள்ளவும் முயலாமல், 'மாநில சுயாட்சி கேட்பது சுயநலம்' என்று எழுதுவது, எவ்வளவு அறிவின்மை ஆகும்!

தமிழகத்தில் மட்டும்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிறது; மற்ற மாநிலங்களில் இந்திரா காங்கிரசுக் கட்சி ஆளுகிறதே – அது, 'கல்கி'யின் கண்ணுக்குத் தெரியவில்லையா?

தமிழ் நாட்டிற்கு மட்டுமா மாநில சுயாட்சி கேட்கிறோம்? – இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அத்தனை மாநிலங்களுக்கும் சேர்த்துத்தானே திராவிட முன்னேற்றக் கழகம், மாநில சுயாட்சி கேட்கிறது? இதுகூடத் தெரியாமலா தலையங்கம் எழுதுவது?

''திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்க வேண்டும் – எதிர்க்க வேண்டும்'' என்ற எண்ணத்தில் யாராவது இப்படிச் சொல்லுவார்கள் என்பதை முன்கூட்டியே தெரிந்துதான், தனது 1971ம் ஆண்டுத் தேர்தல் பிரகடனத்தில், தி.மு.கழகம் மிகத் தெளிவாகக் கீழேயுள்ள வாசகத்தைக் கூறியுள்ளது:–

''அரசியல் துறை அதிகாரங்களும் – நீதித்துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது, மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகரவேண்டும் என்ற ஆசையால் அல்ல!''

''மாநில அரசுகள், மக்களுக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால், அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற்கொண்ட பிறகே, எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் என்பதால்தான், மாநில சுயாட்சி கோருகிறோம் என்பதையும் தெளிவாக்க விரும்புகிறோம்.''

'கல்கி' ஆசிரியர் குழாம், 'மாநில சுயநல ஆட்சி' என்று தன்னுடைய தலையங்கத்திற்குத் தலைப்புக் கொடுக்கும் முன்னர், யோசித்திருக்க வேண்டும்.

— **கழகக்குரல்**
03.11.1974

தீபாவளியும் தினத்தந்தியும்
- வேத்தரசன்

தீபாவளி வருகிறது!

இன்னும் நான்கு நாட்களில் ஐப்பசி மாதம் 3ம் நாளுக்குச் சரியான ஆங்கிலம் 19-10-60 தேதியன்று தீபாவளி!

இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் கொண்டாடும் பண்டிகைகளிலேயே மிகப் பெரிய திருநாள்!

இந்தத் தீபாவளியைக் கொண்டாடுகிறவர்கள், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும், இந்தப் பண்டிகையைப் பெருமைப்படுத்திப் பேசி வருகிறார்கள்!

காலையில் விடியுமுன் எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளித்துக் கோடி யாடை யணிந்து, புதிய பலகாரங்கள் செய்து தின்பதும், வெடி (பட்டாசு) சுடுவதும், மத்தாப்புக் கொளுத்துவதும், கோவிலுக்குப் போய் வருவதும் தீபாவளியன்று சிறப்பாகச் செய்யப்படும் காரியங்கள்.

இப்படித்தான் பெரும்பாலானவர்கள் தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள்.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் கங்கையில் நீராடிய பலன் கிடைக்குமாம்! கங்கையில் நீராடினால் என்ன பலன் கிடைக்குமோ? இதற்கு பதில் எம லோகத்தில்தான் கிடைக்கும்! இல்லாவிட்டால் அந்த லோகத்துக்கு இந்த லோகத்தில் ஏஜண்டுகளாயிருக்கும் பஞ்சாங்கக்காரர்கள், சோதிடர்கள், புராண பண்டி

தர்கள் ஆகியோர்களிடம் கிடைத்தாலும் கிடைக்கலாம்! கிடைத்தாலும் அது உண்மைதானா என்பதை அங்கே ஒரு முறை போய்ப் பார்த்து வந்தால்தான் தெரியும்!

தீபாவளிக் கொண்டாட்டம் ஏற்பட்டதைப் பற்றிக் கூறப் படுகிற கதை நமக்குத் தெரிந்ததுதான்.

நரகாசுரன் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை யாண்டு வந்தான்.

அவன் பூசுரர்களைக் கொடுமைப்படுத்தினான். வட மதுரையையாண்டு வந்த கிருஷ்ணனிடம் பூசுரர்கள் போய் முறையிட்டார்கள். அவர்கள் துன்பத்தை துடைப்பதற்காக கிருஷ்ணன், நரகாசுரன் மீது படையெடுத்து வந்தான்.

நரகாசுரனுடைய கோட்டையை கிருஷ்ணனுடைய படைகள் வளைத்து கொண்டன. கோரமான போர் நடைபெற்றது. நரகாசுரனுடைய கதாயுதத்தால் கிருஷ்ணன் மூர்ச்சையடைந்து வீழ்ந்துவிட்டான். கிருஷ்ணனுக்குத் தேரோட்டி வந்த அவன் மனைவி சத்தியபாமா போரைத் தொடர்ந்து நடத்தினாள். கடைசியில் நரகாசுரனைக் கொன்று விட்டாள்.

சாகப்போகும் நிலையில் நரகாசுரன் சத்தியபாமாவிடம் கேட்டுக்கொண்டான். "உலகினர் என்னை மறவாதிருக்க ஒரு வரம்கொடு" என்று கேட்டான். அதற்காகத்தான் நரகாசுரன் அழிந்த நாளை உலகத்தினர் தீபாவளி யாகக் கொண்டாட வேண்டுமென்ற ஏற்பாடு அமுலுக்கு வந்தது.

உலகத்தினர் என்றால் இதில் கிருத்தவர், முகமதியர், பௌத்தர், ஜைனர், சமணர் ஆகியோர் சேர்த்தியில்லை. அதுபோலவே மாக்சீயவாதிகள், திராவிட கழகத்தினர், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆகியோரும் இன்னும் சீர்திருத்த நோக்கம் கொண்டுள்ளவர்களும் சேர்த்தியில்லை. இவர்கள் நீங்கலாக மீதியிருக்கின்ற உலகத்தினர் நரகாசுரனுக்குச் சத்தியபாமா கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றத் தீபாவளி கொண்டாடுகிறார்கள்.

தீபாவளியைப் பற்றிய கதை இதுதான்! தீபாவளி கொண்டாட வேண்டும் என்று சொல்வதற்குக் காரணமாயிருக்கிற இந்தக் கதையில் கூறப்படுகிற காரணம் சிறிதாவது அறிவுக்குப் பொருத்தமா யிருக்கிறதா என்றால், கதையைப் பற்றி இப்போது யாரும் கவலைப்படவில்லை.

தீபாவளி வந்திருக்கிறது!

நெடு நாட்களாக இந்த நாட்டிலே கொண்டாடப்பட்டு வருகிறது. அதைத் தொடர்ந்து கொண்டாடுவதால் ஒன்றும்

கெட்டுப் போய்விடவில்லை. கொண்டாடுபவர்கள் இப்படிப் பேசுகிறார்கள்.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் தீபாவளிக்காக மூன்று நாட்கள் அரசாங்க விடுமுறை. மக்கள் கோலாகலமாக விழாக் கொண்டாடட்டும் என்று அரசாங்கம் வசதி செய்து கொடுக்கிறது. அரசாங்க நிறுவனங்களிலும், பிற தொழில் நிலையங்களிலும், ஆண்டுக்கொரு முறை கொடுக்கும் போனசுப் பணம் தீபாவளிக்கு முன் கொடுக்கப்படுகிறது. இதனால், வேலைகளில் இருப்பவர்கள் கவலையில்லாமல் தீபாவளி கொண்டாட வழி செய்யப்படுகிறது.

கல்கி, ஆனந்தவிகடன், கலை, தமிழ்நாடு கலைமகள், தினத்தந்தி போன்ற பத்திரிகைகள் தீபாவளி மலர் வெளியிட்டு வாசகர்களை ஆண்டுதோறும் ஆனந்தத்தில் திளைக்கச் செய்து வருகின்றன.

காங்கிரசுக்காரர்கள், தீபாவளிக்குக் கதர் வாங்கிக் கட்டிக் குடிசைத் தொழிலுக்கு ஆதரவு தர வேண்டுமென்று தீபாவளிப் பிரசாரம் செய்கிறார்கள்.

தினத்தந்திப் பத்திரிகை இப்பொழுதே தீபாவளிப் பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டது. இரவு ராணிகள், நடிகை, தேவிகள் எப்படியெப்படி தீபாவளிப் பண்டிகை கொண்டாடப் போகிறார்கள், என்னென்ன மாதிரிச் சேலைகளை எப்படியெப்படிக் கட்டுகிறார்கள் என்றெல்லாம் படம் போட்டுத் தீபாவளிக்கு மக்களைத் தயார்ப்படுத்துகிறது நாம் தமிழர் இயக்கத்தின் ஏடு தினத்தந்தி.

நாம் தமிழர்கள் தினத்தந்தியின் உதவியோடு நடிகைகளைச் சுற்றி வலம் வந்து தீபாவளி கொண்டாடலாம்.

சென்னை மாநகரில் போலீஸ் கமிஷனர் விடுத்திருக்கும் ஓர் உத்தரவு – தீபாவளியின் வேகத்தைக் குறைப்பதாயிருக்கிறது. இதனால் தீபாவளியின் வேகம் குறைந்து தன்னுடைய தீபாவளி சீசன் வியாபாரம் பாதிக்கப்படுமோ என்று எண்ணித் தினத்தந்தி போலீஸ் கமிஷனர் மீது சீறி விழுகிறது!

"பட்டாசு கொளுத்துவதால் தீ விபத்து ஏற்படுகிறது" ஆகவே, தெருவில் பட்டாசு கொளுத்துபவர்கள் தண்டிக்கப்படுவார்கள்! 50 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படுவார்கள்" என்று கமிஷனர் அறிக்கையிட்டிருக்கிறார். இது தினத்தந்திக்குக் கோபம் ஊட்டுகிறது.

தெருவில் பட்டாசு வெடிக்கக் கூடாதென்றால், வீட்டுக் குள்ளேயா வெடிப்பது? வீடு தீப்பற்றி எரியாதா? என்று

ஆத்திரப்படுகிறது தினத்தந்தி. தெருவில் பட்டாசு வெடித்தால் அப்படி என்ன ஆபத்து வந்து விடப்போகிறது? கணக்குக் காட்டுங்கள். அமெரிக்காவில் கிருஸ்துமஸ் கொண்டாட்டத்தில் ஏற்பட்டதைக் காட்டிலும் எந்த வருடமாவது தீபாவளியால் சாவு ஏற்பட்டிருக்கிறதா என்று புள்ளி விவரம் கேட்டு வாதாடுகிறது தினத்தந்தி.

பட்டாசு இல்லாத தீபாவளி பருப்பில்லாத சாம்பார். இதற்குத் தீபாவளியே கொண்டாடக் கூடாது என்று போலீசார் தடை விதிக்கலாமே! என்று மனம் பொருமி எழுதியிருக்கிறது தினத்தந்தி.

தினத்தந்திக்குத் தீபாவளியின் மேல் ஏன் இத்தனை மோகம்? அது தினத்தந்திக்குத்தான் தெரியும்! நாம் தமிழர்களுக்குத் தெரிந்திருக்குமா என்பது சந்தேகம் தான்!

என்னைக் கேட்டால், இந்தத் தீபாவளி என்ற பண்டிகைக்கு நாம் இவ்வளவு ஆர்ப்பாட்டம் போடத் தேவையில்லை. வடநாட்டான் புராணத்திலே ஏதோ எழுதி வைத்திருப்பதற்கு நாம் விழாக் கொண்டாட வேண்டியதில்லை.

நரகாசுரன் திராவிடனாயிருக்கலாம் என்று கருதப்படுகிறது. அவன் திராவிடனாக இல்லா விட்டாலும், அவன் இறந்ததற்காக நாம் விழாக் கொண்டாட வேண்டியதில்லை.

அவன் இறந்ததால் யாருக்கு நன்மையோ, அவர்கள் கொண்டாடுவதில் பொருளிருக்கிறது. அவன் இறந்ததால் திராவிடர் களுக்கு, தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்பட வில்லை — ஏற்பட்டதாக கதையிலும் எழுதி வைக்கப்பட வில்லை. பூசுரர்களின் ஆசை தீர்ந்ததற்காக அவர்கள் கொண்டாடு கிறார்கள். ஆனால், நாம் தமிழர்கள் ஏன் கொண்டாட வேண்டும்?

தீபாவளிக் கதையின் மீது நம்பிக்கை வைத்தால், நாம் தீபாவளியை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று நினைப்பதுதான் பொருத்தமானது. ஆனால், அது பொய்க் கதை என்று நாம் அறிவோம். ஆகவே ஏதோ பரம்பரையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது என்ற காரணத்தால் நாமும் கொண்டாடுவது என்றால் அதுவும் அறிவுக்குப் பொருத்தமானதல்ல.

தீபாவளி கொண்டாடப்படும் வரையிலே, அது கொண்டாடப் படுவதற்குக் காரணமான கதையும் இருந்துதான் தீரும். கதையை மறந்துவிட்டுத் தீபாவளி கொண்டாடுவதாக வெறும் வீம்புக்கு வேண்டுமானால் சொல்லலாம்.

தீபாவளிக் கதை தமிழனுக்கு — திராவிடப் பெருங்குடி யினருக்கு இழிவு சேர்க்கும் கதையாக இருக்கிறது! தமிழ் மறவன்

ஒருவனைக் கொன்றழித்தற்காக வெற்றி கொண்டாடும் நிகழ்ச்சியாக இருக்கிறது.

நரகாசுரன் திராவிடன் என்பதற்காக அவனை இழிவு படுத்த அவன் பிறப்பைப் பற்றிக் கேவலமான கதையொன்று கட்டி விட்டிருக்கிறார்கள் புராணவாதிகள்.

இரண்யாட்சன் என்ற அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலுக்கடியிலே போய் ஒளிந்து கொண்டானாம். உடனே விஷ்ணு பன்றியாக மாறி அவனிடமிருந்து பூமியை மீட்டுக் கொண்டு வந்தாராம். அப்போது, விஷ்ணுவின் உடலில் பூமியின் உடல் உரசியதாம். பூமிக்குக் காமம் ஏற்பட்டதாம். அதைத் தெரிவிக்கவும் விஷ்ணு பூமியோடு கலவி செய்யப் பிறந்த குழந்தைதான் நரகாசுரனாம். தனக்குப் பிறந்த மகனையே தன் மனைவியை விட்டுக் கொன்று அவனுடைய மனைவிகள் பன்னீராயிரம் பேரையும் தாரமாக்கிக் கொண்டாராம் கிருஷ்ணன். தீபாவளி கொண்டாடும் திருவாளர்கள் இந்தக் கதையைக் கேட்ட பிறகாவது மடமை ஒழிவார்களா என்று தான் நாம் ஏங்கி எதிர்பார்க்கிறோம்.

இந்தக் கதையை மறந்து விட்டுத் தீபாவளி கொண்டாடு கிறேன் என்று சொல்லுகிற தமிழன் மானமுள்ள தமிழனாக மாட்டான். தீபாவளிக்காக வக்காலத்து வாங்கிப் பேசுகிற தமிழன் அறிவுள்ள தமிழனாக மாட்டான். அவன் நாம் தமிழர் என்று கூவினாலும் நல்ல தமிழனாகமாட்டான்.

இன்ஷியல் முதல்கொண்டு தமிழிலே வேண்டும் என்று தமிழ்ப் பற்றுப் பிரசாரம் செய்கிற தினத்தந்தி விளையாட்டு முதல்கொண்டு தமிழ்விளையாட்டாக விளையாட வேண்டு மென்று தலையங்கம் தீட்டுகிற தினத்தந்தி தீபாவளிக் கொண்டாட்டம் கெட்டுப்போகிறதே என்று கனன்று எழுதுவது ஏன்? மானங் கெட்டா? அல்லது மதிகெட்டா?

– தென்றல்

15.10.1960

தென்றல் அலுவலகத்தில் போலீஸ் படையெடுப்பு! கவிதைகளைக் கைப்பற்றினர்!

– கண்ணதாசன்

அன்று சனிக்கிழமை!

அந்தி சாய்ந்து விட்டது. எறும்புகளைப்போல் மவுண்ட் ரோட்டில் மோட்டார்கள் ஊர்ந்து கொண்டிருந்தன. அந்த நேரத்தில் சென்னை எப்போதும் பரபரப்பாகவே இருக்கும். தொழில்புரிவோர் அனைவரும் அப்போதுதான் வெளியில் வருவார்கள். தெருவில் ஒரே ஆட்டமும் பாட்டமுமாக இருக்கும்–அப்போது! நமது 'தென்றல்' அலுவலகத்திலும் எல்லோரும் பணியை முடித்துவிட்டு இல்லம் செல்ல ஆயத்தமாகியிருந்தார்கள். அப்போது ஏழெட்டுப்பேர் அலுவலகத்திற்குள் நுழைந்தார்கள். அவர்களில் இருவரைத் தவிர மற்றவர்கள் போலீஸ்காரர்கள்.

உள்ளே வந்த அவர்கள், பத்திரிகையின் நிர்வாகியைச் சந்திக்கவேண்டுமென்றார்கள். நிர்வாகி அவர்களோடு பேசினார்.

''எங்கள் கையில் பரிசோதனை வாரண்ட் இருக்கிறது'' என்றார்கள் போலீஸ்காரர்கள்.

"ஏன், எதற்காக?" – நிர்வாகி கேட்டார்.

"31–8–57ம் தேதிய 'தென்றல்' பத்திரிகையில் சர்க்காரின் கட்டளையை மீறி ஒரு கவிதையைப் பிரசுரித்திருக்கிறீர்கள்'' – அவர்கள்.

நிர்வாகி அந்த இதழை எடுத்துப் பார்த்தார். அதில் 'இராமனின் மனப்போர்' என்று ஒரு மொழிபெயர்ப்புக் கவிதை அச்சாகி இருந்தது. அந்த மொழிபெயர்ப்பின்

மூலம், 'சரிதா' என்னும் இந்தி இதழில் பிரசுரமானது. இந்தியில் 'விசாரத்' பட்டம் பெற்ற துறையூர் ந. அலி என்பவர் அந்தக் கவிதையைத் தமிழ்படுத்தி நமக்கு அனுப்பியிருந்தார். அது தென்றல் 31–8–57ம் தேதி இதழில் பிரசுரமாகியிருந்தது. அந்தக் கவிதையின் சாரம் சீதையை இழந்த இராமனின் மனக்குழப்பம் பற்றியது.

– நிர்வாகி இதழைப்பார்த்துவிட்டு, "இந்தக் கவிதையைப் பிரசுரிக்கக் கூடாதென்று எங்களுக்கு ஒன்றும் சர்க்கார் உத்தரவு வரவில்லையே" என்றார்.

"கெஜட்டில் பதிவாகியிருக்கிறது"–என்று கூறி, 31–8–57ம் தேதி இதழ்கள் அனைத்தையும் கைப்பற்றிச் செல்லவேண்டும் என்றார்கள் வந்தவர்கள்.

அலுவலகத்தில் அந்த இதழ் பதினாறுதான் இருந்தது. அவைகளை நிர்வாகி அவர்களிடம் கொடுத்தார். போலீஸ் காரர்களுக்கு அதில் நம்பிக்கை இல்லை.

"எத்தனையோ ஆயிரம் அச்சடிக்கிறீர்கள்; மீதம் பதினாறுதானா?" என்றார்கள்.

"உள்ளது இவ்வளவுதான். வேண்டுமானால் நீங்களே அலுவலகத்தைச் சோதனை போட்டுக் கொள்ளுங்கள்" என்று நிர்வாகி கூறினார்.

அவர்களும் சோதனைபோட்டார்கள். சோதனை முடிந்ததும் அந்தக் கவிதை எழுதியவரின் கையெழுத்துப் பிரதி வேண்டும் என்றார்கள். அதுவும் எடுத்துக் கொடுக்கப்பட்டது. அந்த நேரத்தில் தான் நான் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தேன். நடந்தவற்றைச் சொன்னார்கள். போலீசாரும் சி.ஐ.டி. தோழர்களும், 'தென்றல்' அலுவலக நண்பர்கள் சோதனைக்கு ஒத்துழைத்ததை என்னிடம் பாராட்டினார்கள். நான் மகிழ்ந்தேன்.

சனிக்கிழமை இரவு ஏழு மணிக்குள் இந்தச் 'சோதனைத் திருவிழா' முடிந்துவிட்டது. நமக்கு இது புதிதல்ல, காங்கிரஸ் அரசாங்கத்திற்கும் இது புதிதல்ல; கட்டைவிரலை வெட்டி விடுவேன்–என்றார்கள். ஜாமீன் தொகை கட்டவேண்டு மென்றார்கள். வழக்குத் தொடுப்பேன் என்று மிரட்டினார்கள். அந்தக் கண்டங்களையெல்லாம் தாண்டித்தான் தி.மு.கழகம் வெற்றி முகப்பை எட்டியிருக்கிறது. இதுவரை எந்த வழக்கும் இயக்கத்தின் பக்கம் தோல்வி கண்டதில்லை. அதற்கே உரித் தானவர்கள் அரசியலார்தான்!

"சர்க்காரின் அடக்குமுறையினால் இராமாயணம் கடவுட் காதையாகக் கருதப்பட்டுவிடும்' என்று அவர்கள் கருதுவார் களாயின் அது நகைப்புக்குரியதாகும்.

ஒரு காலத்தில், தென்னாட்டில் மட்டும்தான் இராமாயணத்தின் குறைபாடுகள் எடுத்துச் சொல்லப்பட்டன. அதுவும் திராவிட இயக்கம் மட்டுமே அந்த அறிவுப் பணியைச் செய்து வந்தது. இன்று அப்படியல்ல! வடநாட்டிலேயே இராமாயணத்தைக் கேலி செய்து எழுதத் தொடங்கிவிட்டார்கள். காலம் வளர்ந்துவிட்டது. இராமாயணத்தின் பெருங்குறைகள் வடவருக்கே புலப்பட்டுவிட்டன. உண்மையைப் பரவவிடாமல் எந்தச் சர்க்கார் மறுத்தால்தான் என்ன? வடநாட்டு சர்க்காராக இருந்தாலும் சரி, தென்னாட்டுக் காமராசர் சர்க்காராக இருந்தாலும் சரி, வெற்றி உண்மையின் பக்கம்தானே கிடைக்கும்! அடக்கு முறை என்பது எதிர்க்கட்சிகளுக்கு உண்மையான நண்பனைப்போன்றது. அது தட்டிக்கொடுக்கும்! பயமுறுத்தி அடக்க நினைக்கும் பள்ளி ஆசிரியராக அதை எதிர்க்கட்சிக்காரர்கள் ஒருபோதும் மதிக்க மாட்டார்கள்.

– தென்றல்

26.10.1957

சிரிப்புத்தான் வருகுதையா...!
பலே பாண்டியா!

– 'சேனா'

தமிழ்நாட்டில் 'ஜனசக்தி' என்னும் ஓர் ஏடு இருக்கிறதே- தெரியுமா? பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை; தெரிந்திருப்பவர்களுக்கும் அதைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்காது; வாய்ப்பு இருந்தாலும் அதனைப் படிப்பதற்கான பொறுமையும்–படித்துப் 'புரிந்து' கொள்வதற்கான 'சக்தி'யும்–'மொழி அறிவு'ம் இருக்க முடியாது; அவ்வளவு சிறப்புக்குரிய அரும்பெரும் ஏடு அது!

'வலது கம்யூனிஸ்டுக் கட்சி' என்ற ஒன்று இருக்கிறதே- அதாவது தெரியுமா? அதுதான் கல்யாண சுந்தரம் கட்சி! அந்தக் கட்சியின் அதிகாரபூர்வமான வார ஏடுதான் 'ஜனசக்தி'!

அந்தக் கட்சிக்கு 'ஜனம்' இருக்கிறதோ இல்லையோ – ஏதாவது ஒரு கட்சியின் தயவிலே 'உயிர் வாழ்ந்து' கொண்டிருக்கிற 'சக்தி' இருக்கிறது!

அந்த 'ஜனசக்தி'க்கு இப்போது புதிதாக ஓர் ஆசிரியர் வந்திருக்கிறார் (ஜீவா போன்றவர்களெல்லாம் இருந்த இடம்–இப்போது இந்தப் புதியவருக்குக் கிடைத்திருக்கிறது); அவர் வாரா வாரம் வெளுத்துக் கட்டுகிறார்! 'புது ஜோர்' அல்லவா–அப்படித்தான் இருக்கும்!

பேனாவைப் பிடித்துவிட்டால், அவருக்கு 'என்ன எழுதுகிறோம்–எப்படி எழுதுகிறோம்' என்று கூடப் பார்க்கத் தோன்றுவதில்லை! எதிலோ தொடங்கி

எங்கேயோ போய் முடிக்கிறார்! தொட்ட இடத்துக்கும்-விட்ட இடத்துக்கும் தொடர்பே இருப்பதில்லை! இப்படி ஓர் எழுத்தாளர்-ஒரு பத்திரிகை!

அவர் சில நாட்களுக்குமுன், தி.மு.க. பற்றித் தம் 'கை வரிசை'யைக் காட்டி, ஒரு கட்டுரை எழுதியிருந்தார்; வேடிக்கை யான கட்டுரை அது!

தி.மு.கழகத்தவரெல்லாம் போலி பகுத்தறிவாளர்களாம்! 'ஜனசக்தி'யாரும்- அவர் கூட்டமும்தான் அசல்- ஒரிஜினல்- –ஒண்ணாம் நம்பர் பகுத்தறிவாளர்களாம்! எனவே, தி.மு.கழகத்தில் உள்ளவர்களெல்லாம் அவர் கட்சிக்குப் போய்- அவரோடு சேர்ந்து- 'உலகம் தழுவிய' பகுத்தறிவுப் பணியில் ஈடுபட வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தார்!

இதற்கு நமது 'கழகக் குரல்' பதில் அளித்திருந்தது – காம்ரேடின் ஞானோதயம்' என்ற தலைப்பில்!

அதைப் படித்ததும் சும்மா இருப்பாரா, அந்த சூரப்புலி! எடுத்தார் பேனாவை – தொடுத்தார் எழுத்துப்போர் – விடுத்தார் கருத்துக் கணைகளை – 'ஒரே வீழ்த்தாக வீழ்த்திவிட்டோம் 'கழகக் குரல்' எழுத்தாளரை என்ற 'ஆத்ம திருப்தி' அவருக்கு! பாவம்!

இதற்கு முன்பெல்லாம் அந்த ஏட்டின் கடைசிப் பக்கத்தில், 'எரிமலை' என்று சொல்லிக் கொண்டு 'எரிச்சலை'க் கக்கிக் கொண்டிருந்தார் – ஓர் அப்பாவி எழுத்தாளர்! இப்போது அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டார் – இந்த 'மேதாவி' எழுத்தாளர்! அவர் எங்கே போனாரோ – பாவம்!

'எரிமலை'க்குப் பதில் சவுக்கடியாம்! எரிமலையே அடங்கிச் சாம்பலாகிவிட்டபிறகு, சாட்டையும் சவுக்கும் என்ன செய்யப்போகின்றன?

பேனா பிடிக்கவே இன்னும் முழுமையாகக் கற்றுக்கொள்ள வில்லை என்றால், சவுக்குப் பிடிக்க எங்கே தெரியப் போகிறது!

சவுக்கைப் பிடிக்க வேண்டிய முறைப்படி பிடித்து – சொடுக்க வேண்டிய முறைப்படி சொடுக்கினால்தான், அடி எதிரியின் மீது விழும்; இல்லையேல், அந்தச் சொடுக்கு, சவுக்குப் பிடித்தவன் உடம்பையே பதம் பார்க்க ஆரம்பித்துவிடும்!

'சவுக்கினால் யாரைத் தாக்கலாம்' என்பதையும் தெரிந்து சவுக்கைப் பிடிக்க வேண்டும்; கையிலே சவுக்கு இருக்கிறது என்பதால், கண்ணிலே பட்டவரையெல்லாம் தாக்க ஆரம்பித்தால் விளைவு என்ன ஆகும்?

கையில் வலிவும்–மனத்தில் துணிவும் இல்லாதவன் சவுக்கைத் தொடக்கூடாது; அதேபோல், மூளையில் ‘சரக்கு’ இல்லாதவன் பேனாவைப் பிடிக்கக் கூடாது!

* * *

‘கழகக் குரலும் கலகக் கொடியும்’ என்ற தலைப்பிட்டு எழுத ஆரம்பித்திருக்கிறார், ‘ஜனசக்தி’யார்!

அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பதுபோல, எதையோ நினைத்துக்கொண்டு வேறு எதை எதையோ எழுதிக் கட்டுரையின் பாதிக்கு மேல் சென்ற பின்னர்தான், அவருக்கு எழுத வேண்டிய விவகாரமே நினைவுக்கு வந்திருக்கிறது!

‘பிழைக்கும் பத்திரிகை’யாளர்களின் பாணியைப் பின்பற்றிக் கொஞ்சம் கைவரிசை! அப்புறம் கொஞ்சம் கம்யூனிஸ்டுகளுக்கே உரிய ‘மேடைப் பிரசங்க பாணி’! அதன்பிறகு, ‘கழகக் குரலுக்குப் பதில்’ என்ற பெயரில் உளறிக் கொட்டிக் கிளறி முடித்திருக்கிறார்– கட்டுரையை!

நான்கூட அதைப் படிப்பதற்கு முன், ஏதாவது ‘விஷயம்’ இருக்கும் என்றுதான் நினைத்தேன்; ஏனென்றால், அதை எழுதியவர், ‘எம்.ஏ.’ படித்தவராயிற்றே! அதுவும், ‘பிரபல’ மேடைப் பிரசங்கி!

படித்துப் பார்த்தால், அத்தனையும் சொத்தை வாதம்! ‘இதற்காக ஒரு பக்கத்தை வீணாக்கி விட்டாரே’ என்பதுதான் எனது கவலை!

ஒரு காலத்தில் கம்யூனிஸ்டுப் பேச்சாளர்களானாலும் சரி– எழுத்தாளர்களானாலும் சரி – புள்ளி விவரங்களை அள்ளிக் கொட்டுவார்கள்; கேட்பவர்களுக்கும், படிப்பவர்களுக்கும் புரிகிறதோ இல்லையோ – ‘விஷய ஞான’த்தோடு பேசுவார்கள் – எழுதுவார்கள் – என்ற பெயர் இருந்தது.

இப்போது, அதுவும் போய்விட்டது; ‘1976ம் ஆண்டு மாடல்’ கம்யூனிஸ்டு எழுத்தாளர் இப்படித்தான் எழுதுவார் போலும்!

‘கழகக் குரல்’ கட்டுரையைப் படித்துப் பார்த்து, வரிக்கு வரி மறுப்போ– பதிலோ எழுதியிருந்தால், அதை வரவேற்கலாம்; ‘பண்பட்ட எழுத்தாளர்’ என்று அவரை மதிக்கலாம்!

‘பிச்சைக்காரன் வாந்தி எடுத்தது போல’ அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பிய்த்துப் பிடுங்கி–கற்பனைச் சரக்கையும் கலந்து–உளறி வழிந்திருக்கிறார்! பதில் சொல்ல வேண்டியதற்குச் சொல்லாமல்– ‘கழகக் குரல்’ எழுதாததையெல்லாம் எழுதியதாகக் குறிப்பிட்டு– அதற்குப் பதில் சொல்ல முயன்றிருக்கிறார்! அதுவும் ஒரே ‘அபத்தம்’!

இந்த வேடிக்கையை என்னென்பது!

''பகுத்தறிவு இயக்கத் தலைவரான பெரியார், பொதுவுடைமைக் கொள்கையையும் – பொதுவுடைமை வாதியான சிங்காரவேலர் பகுத்தறிவுக் கருத்துக்களையும் பிரசாரம் செய்து வந்தார்கள்!''

இதுதான் 'கழகக் குரல்' கட்டுரையில் இருந்த வாசகம்.

இதற்குப் பதிலளிப்பதாகக் கருதிக்கொண்டு அவர் எழுதுகிறார் பாருங்கள்:–

''பொதுவுடைமைக் கொள்கை(யை)யும், பகுத்தறிவையும் பரப்பப் பாடுபட்ட ம. சிங்காரவேலர்தான் எங்கள் மூலவர் என்று இப்பொழுது உரிமை கொண்டாடுகிறது; மறைக்க முடியாமல் வெளியிட்டதற்கு நன்றி.''

(அடைப்புக் குறிக்குள் உள்ள 'யை' என்னும் எழுத்தை நானாகச் சேர்த்துக் கொண்டேன்–இலக்கணம் கருதி.)

சரிதானா பதில்? இதற்குத்தான் 'சவுக்கடி' என்ற பெயரா? 'ம. சிங்காரவேலர்தான் எங்கள் மூலவர்' என்று 'கழகக் குரல்' எங்கே சொல்லிற்று?

'பொதுவுடைமைவாதியான சிங்காரவேலர்' என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, 'பகுத்தறிவு இயக்க மூலவர் சிங்காரவேலர்' என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. 'பகுத்தறிவியக்கத் தந்தை பெரியார்தான்' என்பதை அந்தக் கட்டுரை ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளது; இது, 'ஜனசக்தி'யாரின் மூளையில் பதியாதது ஏன்?

'சிங்காரவேலர்தான் எங்கள் மூலவர்' என்று நாங்கள் உரிமை கொண்டாடி விடுவோமோ– என்ற அச்சத்தில் அவர் இப்படி எழுதியிருக்கிறார்.

உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறோம்– அப்படி உரிமை கொண்டாட நாங்கள் வரமாட்டோம்; பயப்படத் தேவையில்லை; அவர்களின் மூலவராகவே அவரை உரிமை கொண்டாடிக் கொள்ளட்டும்!

'தமிழ்நாட்டின் முதல் கம்யூனிஸ்டு சிங்காரவேலர்தான்' என்பதை, 'கழகக் குரலே' பலமுறை எடுத்துரைத்துள்ளதையும் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

''சிங்காரவேலர், எங்கள் பகுத்தறிவியக்கத் தந்தை பெரியாருக்கும் உறுதுணையாக இருந்து பிரசாரம் புரிந்தார்''

என்பதுதான் உண்மை; இந்த உண்மையை மறைக்க வேண்டும் என்ற அவசியம் எங்களுக்கு எப்போதும் ஏற்பட்டதில்லை!

இன்னும் சொல்லப்போனால், நாங்கள்தான், இந்த உண்மையை வாய்ப்பு நேரும் போதெல்லாம் நாட்டுக்குச் சொல்லி வந்திருக்கிறோம்! கம்யூனிஸ்டுகள்தான் இதை மறைத்து வந்தார்கள்!

'ஜனசக்தி'யார் மேலும் எழுதியிருப்பதைச் சிரிப்பை அடக்கிக்கொண்டு படியுங்கள்:–

''அந்தச் சிந்தனைச் செல்வன் சிங்காரவேலரின் எழுத்தெண்ணிப் படித்து, அதன் வழி நடக்கும் வாரிசுகள்தான் நாங்கள்!''

''தி.மு.க. தம்பிமார், சிங்காரவேலரின் புத்தகங்களை இப்பொழுதாவது வாங்கிப் படிக்க வேண்டுகிறேன்!''

படித்து முடித்தீர்களா—இப்பொழுது சிரியுங்கள்!

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் எழுத்தெண்ணிப் படித்தவர்களாம் அவர்கள்

'சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்' என்ற ஒரு மேதை இருந்தார் என்பதைத் தமிழ் நாட்டில் மேடைதோறும் நினைவுபடுத்திக் கொண்டிருந்தவர்களே திராவிட இயக்கத்தவர்தான் என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

அவருடைய கட்டுரைகளைத் தொடர்ந்து அச்சிட்டதும், பெரியாரின் 'குடியரசு' ஏடுதான்; அவருடைய கட்டுரைகளை நூலாக அச்சிட்டு வெளியிட்டு இன்றுவரை விற்பனை செய்து கொண்டு வருவதும் 'குடியரசுப் பதிப்பகம்'தான் என்பதை அந்த எழுத்தாளருக்கு யாரும் தெரிவிக்கவில்லை போலும்!

சிங்காரவேலரின் எழுத்தெண்ணிப் படித்த அந்தப் புத்தகங்களை அவர் எங்கே வாங்கி யிருப்பார்? ஒருவேளை, 'ஜனசக்தி' காரியாலய'மே அந்தப் புத்தகங்களை அந்தக் காலம் முதல் வெளியிட்டு வருகிறதா? அல்லது 'நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்' வெளியிட்டுள்ளதா?

நானும் 'ஜனசக்தி' இதழைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன்; அதில், 'ஜனசக்தி காரியாலய' வெளியீடுகள் பற்றி எந்த விளம்பரமும் காணப்படவில்லை.

'நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்' புத்தக விளம்பரங்கள் மட்டும் ஒரே இதழில் மூன்று இடங்களில் வெளியிடப்பட்டுள்ளன; எல்லாம் நீண்ட பட்டியல்; ஆனால், எல்லாம் சோவியத்

படைப்பு–தமிழில் மொழிபெயர்ப்பு; அவற்றில் ஒன்று கூடச் சிங்காரவேலரின் நூல் இல்லை!

அன்றும் சரி–இன்றும் சரி – ம.சிங்காரவேலரின் பகுத்தறிவு நூல் வேண்டுமென்றால் எங்கள் தந்தை பெரியாரின் குடியரசுப் பதிப்பகத்துக்கோ, ‘விடுதலை’ அலுவலகத்துக்கோ சென்றுதான் வாங்கிப் படிக்க வேண்டும்.

இது புரியாமல், நமக்கு அந்தப் பிரகஸ்பதி எழுத்தாளர் புத்திமதி சொல்கிறார் – ‘இப்பொழுதாவது வாங்கிப் படியுங்கள்’ என்று!

‘குடியரசு’ இதழில் சிங்காரவேலர் போன்றவர்கள் எழுதிய கட்டுரைகளைத் தந்தை பெரியார், ‘குடியரசுக் கலம்பகம்’ என்ற பெயரில் புத்தகமாக வெளியிட்டாரே – தெரியுமா? அந்தப் புத்தகத்தைப் படிப்பதே கூடாது என்று – சில ஆதிக்கவாதிகளின் தூண்டுதலால் அன்றிருந்த வெள்ளைக்கார அரசு தடை விதித்ததே–தெரியுமா? அதற்காகக் ‘குடியரசு’ப் பதிப்பாளருக்கே தண்டனை கிடைத்ததே – அது தெரியுமா?

அந்தப் புத்தகங்களையெல்லாம் படித்துக் கரைத்துக் குடித்தவர்கள்தாம் இன்று திராவிடர் இயக்கத்தில் உள்ள மூத்த தலைவர்களும் – முன்னோடிகளும்! இன்றைய ‘ஜனசக்தி’யார் இதையெல்லாம் அறிந்திருக்க வாய்ப்பில்லை!

யாரைப் பார்த்துப் ‘போலிப் பகுத்தறிவாளர்’ என்று கூறுவது?

இதைவிட இன்னொரு வேடிக்கை என்னவென்றால், கம்யூனிஸ்டுக் கட்சியில் போய்ச் சேருவதற்காக ஆசைப்படுகிறார்களாம் – கழகத்தவர்!

‘கம்யூனிஸ்டுக் கட்சியில் வந்து சேர்ந்துகொள்ள இது சந்தைமடக் கட்சி அல்ல’’–

என்று எழுதுகிறார், அந்தக் கற்றுக்குட்டி எழுத்தாளர்!

ஐயா, பாண்டியரே–பயப்படாதீர்; உங்கள் கட்சிக்கு நாங்கள் வந்து, ‘உமது இடத்தைப் பறித்துவிடுவோமா’ என்ற ஐயப்பாடு வேண்டாம்; நீரும் – உமது தலைவர் கல்யாணசுந்தரனாரும்தான், உங்கள் கட்சிக்குக் கடைசித் தலைமுறை; உங்களோடு உங்கள் கட்சியின் கதை முடியட்டும்; இன்னும் அதற்கு உயிர் கொடுக்க நாங்கள் என்ன – பைத்தியக்காரர்களா?

தாய்மொழிப் பற்றும், தமிழ் இன உணர்வும் உள்ள எந்தத் தமிழ் மகனும் உங்கள் கட்சிக்கு வருவான் என்று கனவில் கூடக் கருத வேண்டாம்!

தி.மு.கழகம், கூலி உயர்வுக்கு மட்டுமே போராடும் வெறும் வயிற்றுச் சோற்றுக் கட்சியன்று!

உணவு மட்டுமல்ல – உணர்வும் மனிதனுக்குத் தேவை!

வயிற்றுணவைவிடத் தன்மான உணர்வையே மதிப்பவர்கள், எங்கள் இயக்கத்தில் உள்ளவர்கள்!

பகுத்தறிவு உணர்வைக்கூட வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள விரும்பாத உங்களோடு வந்து நாங்கள் என்ன செய்ய இயலும்?

நாங்கள் வெறும் பகுத்தறிவாளர்களாக மட்டுமிருந்தால் உங்களோடு சேர்ந்துகொண்டு கூலி உயர்வுக்குக் குரல் கொடுக்கலாம் – உழைப்பாளிகளிடையே உண்டியல் குலுக்கலாம் – சந்தா வசூலிக்கலாம் – பிழைப்பும் நடக்கும்!

ஆனால் நாங்கள் சமுதாய மறுமலர்ச்சிக்கும்–பொருளாதார மேம்பாட்டுக்கும்–அரசியல் விழிப்புணர்ச்சிக்கும் பாடுபடும் அறிவியக்கத்தைச் சேர்ந்தவர்கள்; அறவழியில் போராடுபவர்கள்; உங்களோடு ஒரு வகையிலும் எங்களுக்கு ஒத்து வராது; வீண் கனவு கண்டு 'விரக்தி'யடைந்துவிட வேண்டாம்!

'பிரச்சாரம் செய்தே மூடநம்பிக்கையை ஒழித்துவிட முடியும் என நினைப்பதே ஒரு மூட நம்பிக்கை!'

– இது 'ஜனசக்தி'யாரின் புதிய கண்டுபிடிப்பு!

அதனால்தான், இதுநாள்வரை கம்யூனிஸ்டுக்காரர்கள், மூடநம்பிக்கை ஒழிப்புப் பிரசாரத்தில் ஈடுபடாமலே இருந்து விட்டார்கள் போலும்!

பிரசாரத்தின் மூலமே மூடநம்பிக்கையை ஒழித்துவிட முடியும் என்று திராவிட இயக்கம் ஒருபோதும் சொல்லவில்லை!

அதேபோல, சட்டம் இயற்றுவதன் மூலமும் அடியோடு மூடநம்பிக்கையை ஒழித்துவிட முடியாது!

ஒரு புறத்திலே சட்டமும் இயற்ற வேண்டும் – மறுபுறத்திலே மக்கள் மனமாற்றமடையும் வரையில் பிரசாரமும் செய்யப்பட வேண்டும்; அப்போதுதான் எதிர்பார்க்கும் பலனை முழுமையாக அடைய முடியும்!

பகுத்தறிவியக்கம் கடந்த ஐம்பதாண்டுக் காலமாக ஆற்றி வந்த பிரசாரம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத்தான், கழக ஆட்சி சமுதாயச் சீர்திருத்தச் சட்டங்களையும் இயற்ற முற்பட்டது!

சாதி ஒழிப்புக்கு அடிப்படையாக, 'தகுதியுள்ள ஆதித் திராவிடனும் ஆலயங்களில் அர்ச்சகராக வரலாம்' என்ற சட்டம் இயற்றியவர்கள் யார்?

கலப்புத் திருமணத்துக்கு ஊக்கமளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது எதனால்?

சுயமரியாதைத் திருமணச் சட்டம் இயற்றியது எதற்காக?

நாங்கள் உண்மைப் பகுத்தறிவாளர்களா – போலிப் பகுத்தறி வாளர்களா என்று நாடியைப் பிடித்துப் பார்த்துச் சொல்லும் தகுதி உமக்கு இல்லை ஐயா, பாண்டியரே!

முதலில் உங்கள் ஆட்களை யெல்லாம் முழுமையான – உண்மையான பகுத்தறிவாளர்களாக மாற்ற உமது பேனாவை ஓட்டுங்கள்!

விளையாட்டுத்தனமாகக் 'கழகக் குரலு'டன் மோதிப் பார்க்கத் துணியும் உம்மை நினைத்தாலே சிரிப்புதான் வருகிறது; உமது துணிவும் பாராட்டத் தக்கதுதான்; அதற்காகவேனும், 'பலே பாண்டியா' என்று உம்மைப் பாராட்டுகிறேன்!

– **கழகக் குரல்**

27.06.1976

எது வெத்து வேட்டு விகடனாரே?

- மின்சாரம்

'இந்தியைத் திணித்தவர் சி.ஆர். ஆச்சாரியார்! இந்தியை எதிர்த்துப் போர்த் தீயில் குதித்த தாளமுத்து, நடராசன் களை சிறையில் தள்ளி சாவூருக்கு அனுப்பியதோடு அல்லாமல் 'படிக்காத தற்குறிகள் அதனால் செத்துப் போனார்கள்' என்று சட்டமன்றத்திலேயே ஆணவமாகப் பேசியவர்!

அந்த ஆச்சாரியாருக்குத் திராவிட இயக்க ஆட்சி யில் பன்னீர்செல்வத்துக்குப் பெயர் சூட்டும் அதே அறிவிப்பில், இப்படி ஒன்று என்றால், அதைவிடக் கொடுமை வேறு இருக்க முடியுமா?' என்று அறிக்கை விடுத்தார் தமிழர் தலைவர் வீரமணி.

உடனே ஹண்டே அய்யருக்குக் கோபம் வந்தது; தொடர்ந்து ஆனந்த விகடனுக்கும் சினம் சீறிக்கொண்டு கிளம்பி இருக்கிறது. "வெத்து வேட்டு கண்டனம்" ன்று தலையங்கம் தீட்டி இருக்கிறது *(7.7.96)*.

ஹண்டேவுக்கும், ஆனந்த விகடனுக்கும் மட்டும் கோபம் வருவானேன்? அதுதான் பார்ப்பனருக்கே உரித்தான ரத்தப் பாசம்!

ஒரு ஆட்சி என்று வரும்போது அதற்கென்று ஒரு கொள்கை உண்டு; அதைத் தெரிந்து தான் மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த நிலையில் அந்தக் கொள்கைப் பாதையில் சக்கரத்தைச் சுழற்றச் செய்வதுதான் ஆட்சித் தர்மமும்கூட! அதைத் தான் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கேட்கிறார். 'திராவிட இயக்க ஆட்சி என்றால் அதற்குரிய மரபு,

தனித்தன்மை என்ன என்பதை அறிந்து ஆட்சியாளர்கள் பெயர் சூட்டுவதில் விழிப்புடன் செயல்பட வேண்டாமா?' என்று பொறுப்புடன் வினா எழுப்பினார்.

ஆச்சாரியார் – யார்? குல்லூகப்பட்டர் – இப்படி ஆயிரம் ஆயிரம் முறை அழைத்தவர் அறிஞர் அண்ணா – இன்றைய தமிழக முதல்வர் கலைஞர்!

குல்லூகப்பட்டர் யார்? ஒரு குலத்துக்கு ஒரு நீதி சொல்லும் மனுதர்ம சாத்திரத்துக்கு வியாக்யானம் செய்த வேதியக் குலத் திலகம்.

அழகுக்காக அல்ல – அர்த்தத்தோடு தான் அந்த அடை மொழியைக் கொடுத்தது ஆச்சாரியாருக்குத் திராவிடர் இயக்கம்.

எந்த நிலையிலும் குலதர்ம குணத்தை அவர் விட்டுக் கொடுத்ததில்லை. உடம்பெல்லாம் மூளை என்று அவரைப் பாராட்டுவார்களே பார்ப்பனர்கள் – அந்த மூளை 1937–1939லும் சரி 1952–1954லும் சரி, ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும் வராததுமாக முதலில் செய்த காரியம் என்ன?

கிராமப்புறத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட – பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஏழை – எளிய பிள்ளைகள் படிக்கும் பள்ளிகளை இழுத்து மூடியதுதானே! 1937–39ஆம் ஆண்டுகளில் இருந்த பள்ளிகளின் எண்ணைக்கையே 15 ஆயிரம்தான். அதிலும் 2500 பள்ளிகளை மூடினார் என்றால் பஞ்சமனும், சூத்திரனும் படிப்பதிலே அவருக்கு இருக்கும் அடக்க முடியாத ஆத்திர உணர்வுதானே! 1952–54லும் குலக் கல்வித் திட்டம் கொண்டு வந்து அரை நேரம் படித்தால் போதும், மீதி அரை நேரம் அப்பன் தொழிலைச் செய்ய வேண்டும் என்கிற பார்ப்பனீய வருணாசிரமத்தைப் புகுத்தினாரா இல்லையா? அப்பொழுதும் அய்யாயிரம் பள்ளிகளை இழுத்து மூடியது உண்டா இல்லையா? இதற்குப் பெயர் என்ன? இதனைத் திராவிடர் இயக்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? இத்தகையவரின் பெயரை திராவிடர் இயக்க ஆட்சியில் ஒரு மாவட்டத்துக்குச் சூட்ட வேண்டுமா என்று தாய்க் கழகத்தின் பொதுச்செயலாளர் கேட்டதில் என்ன குற்றம்? கேட்காமல் இருந்திருந்தால் தான் மாபெரும் குற்றம்!

கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்க நீதிக்கட்சி ஆட்சி அமைத்திருந்த காலேஜ் செலக்சன் கமிட்டியைக் கலைத்த மகானுபாவர் அல்லவா ஆச்சாரியார்? நேர்முகத் தேர்வுக்கு என்று இருந்த 150 மதிப்பெண்களை 50ஆகக் குறைத்த குள்ள நரித்தனத்துக்கு அர்த்தம் என்ன?

ஒடுக்கப்பட்ட மக்கள் எந்த வகையிலும் கல்விச் சாலைக்குள் நுழைந்துவிடக்கூடாது என்பதற்கு கதவடைக்கும் காழ்ப்புணர்வு இல்லாமல் வேறு என்ன?

உத்தியோகத்துறையில் பார்ப்பனர் அல்லாதாருக்கு இவ்வளவு கொடுமைகள் இழைக்கிறீர்களே என்று எதிர்க்கட்சிகள் கேட்டதற்கு, "பார்ப்பனர்கள் 15 ஆண்டு கஷ்டப்பட்டார்களே ஜஸ்டிஸ் ஆட்சியில்; பார்ப்பனர் அல்லாதார் ஒரு அய்ந்தாண்டு கஷ்டப்படட்டுமே!' என்று கொக்கரித்தவர் தான் ஆச்சாரியார்.

இத்தகைய தமிழின விரோதியின் பெயரில் ஒரு மாவட்டம் அமைக்கப்படலாமா திராவிட இயக்க ஆட்சியில் என்பதுதான் எங்களின் வினா.

அதுவும் திராவிடர் தளபதி ஏ.டி. பன்னீர் செல்வம் பெயரில் மாவட்டம் அமைத்த கையோடு – இன்னொரு பக்கம் ஆச்சாரி யாரின் பெயரா? – ரத்தம் கொதிக்காதா சுயமரியாதைக் காரர்களுக்கு?

இதே ஆச்சாரியார் பற்றி திராவிடர் தளபதி ஏ.டி.பி. அவர் களின் எண்ணம் என்ன? 1939ஆம் ஆண்டு பிப்ரவரி 26ஆம் நாள் ஆச்சாரியார் ஆட்சி – இந்தி எதிர்ப்பின் காரணமாகத் தந்தை பெரியாரை மூன்றாண்டு தண்டித்துப் பெல்லாரி சிறைக்கு அனுப்பியது. அன்றைய தினம் சென்னை எழும்பூர் ஏரிக்கரையில் ஏறு நிகர் பார்வையாளர் ஏ.டி.பன்னீர் செல்வம் எழுச்சி முரசம் கொட்டினார்! அந்தச் சிங்கக் கர்ச்சனை இதோ!

"பனகல் அரசர் காலத்தில்தான் மருத்துவ இலாக்காவை வெள்ளையர்களிடமிருந்து பிடுங்கித் தமிழர் கையில் ஒப்படைக்கப் பட்டது. ஆனால் அதன் பயன் என்ன ஆயிற்று என்றால், டாக்டர் ராஜன் (அய்யங்கார்) என்ற ஒரு பார்ப்பனர் வைத்திய இலாக்கா மந்திரியாக வந்தவுடன், கவுரவ டாக்டர்களை நியமிக்கின்றேன் என்கின்ற பெயரால் ஒரு சில மாதங்களுக்குள் 225 பேர்களைக் கவுரவ டாக்டர்களாக நியமித்தார். இந்த 225 பதவிகளில் 125 பதவிகளைப் பார்ப்பனர்களுக்குக் கொடுத்ததுடன் 85 பதவிகளை மாத்திரம் தமிழருக்குகக் கொடுத்துவிட்டு 15 பதவிகளை மாத்திரம் "இந்துக்கள் அல்லாதவர்கள்" என்பவர் களுக்கு கொடுத்து விட்டார். 100க்கு 3 பேர் விகிதம் உள்ள பார்ப்பனர்களுக்கு 125 உத்தியோகத்தைக் கொடுத்திருக்கின்றார்!

இதில் ஒரு பெரிய அக்கிரமம் என்னவென்றால், ஜெனரல் ஆஸ்பத்திரியில் பிரபல டாக்டராக இருந்த டாக்டர் சடகோபனை வெளியாக்கி விட்டு, அவருக்குப் பதிலாக என்று 3 பார்ப்பனர் களைத் திணித்து இருக்கின்றார். எப்படி இருக்கின்றது ஆட்சி?

இவ்வித ஆட்சியை இனி நடத்தவிட மாட்டோம் என்பதன் அறிகுறிதான் பெரியார் அவர்கள் கூறும் "தமிழ்நாடு தமிழருக்கே" என்பது ஆகும்.

நான் இப்படி சொல்வதை ஆச்சாரியார் (முதல் மந்திரி) கொடுமை என்கின்றார். ஆனால், தமிழர்களை இப்படி நடத்துவது கொடுமையாக இல்லையா?" என்று பேசியவர்தான் ஏ.டி. பன்னீர்செல்வம்.

ஏரிக்கரையில் மட்டுமல்ல – சட்டமன்றத்திலும் ஆச்சாரியாருக்கு முகத்துக்கு முகம் பதிலடி கொடுத்த சங்கநாதத்துக்குப் பெயர்தான் சர்.ஏ.டி.பி.! அந்த இனத் தளபதி பெயராலும் ஒரு மாவட்டம், இன எதிரியின் பெயராலும் ஒரு மாவட்டமா?

திராவிடர் இயக்கக் கொள்கையின் அடிப்படையில் திராவிடர் இயக்க ஆட்சியை நோக்கி தாய்க் கழகத்தின் பொதுச் செயலாளர் கேட்கிறார் உரிமையுடன் – ஆனந்த விகடனுக்கு அடி வயிறு கலங்குவது ஏன்? தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆச்சாரியார் செய்த துரோகம்தான் கொஞ்சமா? அண்ணல் அம்பேத்கர் அவர்களே ஆச்சாரியாரின் முகத் திரையைக் கிழித்துக் காட்டியுள்ளாரே!

"நான் அந்தக் காலத்தில் எக்சிகியூட்டிவ் கவுன்சில் மெம்பராக இருந்தபோது, வெள்ளைக்கார வைசிராயுடன் பேசி, விளக்கி, தாழ்த்தப்பட்ட இனத்திலிருந்த திறமைமிக்க மாணவர்களைப் பொறுக்கி, மேல் நாட்டுக்கு அனுப்பி, கல்வி பெற வசதியளிக்கும் திட்டத்தை சர்க்கார் செய்ய வேண்டும் என்பதை அவர் ஒப்புக்கொள்ளும்படிச் செய்தேன்.

அதன்படி, அப்போது ஆண்டுக்கு – இதற்கு மூன்று லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள்; இது தொடர்ந்து நடந்து வந்தது. நான் மந்திரி பதவியிலிருந்து வெளியேறியவுடன், எனது நண்பர் திரு. ராஜகோபாலாச்சாரியார் இதை ஒழித்துக் கட்டி விட்டார்" (Report of Backward Classes Commission Vol III. பக்கம் *75* பாரா *2)* ஒவ்வொரு ஆண்டிலும் *26* தாழ்த்தப்பட்ட சமூக மாணவர் களுக்குக் கிடைத்த வாய்ப்பில் இதன் மூலம் மண்ணை அள்ளிப் போட்டவர் ஆச்சாரியார்! அண்ணல் அம்பேத்கர் அவர்களே மனம் வெதும்பிக் குமுறி இருக்கிறார்.

அத்தகைய ஆச்சாரியாரின் பெயரால் ஒரு மாவட்டமாம்! தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் கொந்தளிக்கும் கடலாகக் கோடிக்கரம் தூக்கிக் கொப்பளித்து எழ வேண்டாமா? எதிலும் இனவெறி, வருணாசிரமக் கண்ணோட்டம் – இவர்தானே ஆச்சாரியார்!

பச்சைத் தமிழர் காமராசர் முதலமைச்சர் ஆனார் என்றவுடன் எவ்வளவு வெறுப்பு அனலைக் கக்கினார். காமராசரைக் "கறுப்புக் காக்கை" என்று கூறி அவரை கல்லால் அடித்து வீழ்த்தச் சொல்ல வில்லையா? ஆச்சாரியாரின் இந்த அழுக்காற்றை பண்டித நேரு அவர்களே அழகாகப் படம் பிடித்துக் காட்டினாரோ!

"இன்று ராஜாஜிக்கு ஏற்பட்டுள்ள அரசியல் ஏமாற்றம்தான் அவரை காங்கிரஸ் எதிரியாக்கியிருக்கிறது. ராஜாஜிக்கு வேதனை தருவது இதுதான். அதாவது – நாகரிகமற்ற படிப்பில்லாத, பட்டிக் காட்டுப் பேர் வழி (Illiterate Boor) என்று தாம் கருதிக் கொண்டிருக்கும் ஒருவர், தாம் முன்பு இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டு, நன்றாக நிர்வாகம் நடத்தி வருகிறாரே என்ற மன வேதனை தான் ராஜாஜியை வாட்டுகிறது"

– என்று காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சி நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பிரதமர் நேரு பேசினாரே ('தினமணி' சித்தூர் பதிப்பு 25.3.1960 பக்கம் 2)

இந்தத் தகுதியில் உள்ள ஒருவரைத்தான் 'இந்திரன் – சந்திரன்' என்று ஆனந்தவிகடன் புகழ்கிறது!

ஒரு வகையில் 'ஆனந்தவிகடன்' இப்படிப் புகழுவது கூட பொருத்தமானதுதான் பொருளாதார மேதை சர். ஆர்.கே. சண்முகம் செட்டியாரை இகழ்வதற்காக அவரின் சாதியைக் குறிப்பிடும் வண்ணம் செக்கு மாட்டை கார்ட்டூனாகப் போட்டதே – அதை மறக்க முடியுமா? ஆச்சாரியாரும் அந்தக் குலக் கல்வித் திட்டத்தை உயிரினும் மேலாகப் போற்றுபவராயிற்றே! சும்மா ஆடுமா ஆனந்தவிகடன் குடுமி?

ஆச்சாரியாரின் தியாகம், நாட்டுக்கு ஆற்றிய தொண்டு ஆகியவற்றைப் போற்றுவதற்காக அவரின் பெயர் சூட்டப் பட்டுள்ளது என்று சாதிக்கப் பார்க்கிறது விகடன்.

முக்கியமான நெருக்கடி காலங்களில் எல்லாம் எனக்கும் காங்கிரசுக்கும் சம்பந்தமில்லை என்று கூறி 'அண்டர்கிரவுண்ட்' ஆவதுதான் அவர் செய்த தேசத் தொண்டா? அவர் செய்த தொண்டு ஒரு மடங்கு என்றால், அதற்காக அவர் பெற்ற கூலி கொள்ளை கொள்ளையாயிற்றே! 'ஆகஸ்டு துரோகி!' என்று தூற்றப்பட்ட அவருக்குத்தானே முதல் கவர்னர் ஜெனரல் பதவி தூக்கிக் கொடுக்கப்பட்டது! மறுக்க முடியுமா ஆனந்த விகடன் வகையறாக்கள்? 'ஆகஸ்டு துரோகி ஆச்சாரியார் ஒழிக!' என்று காங்கிரசார் கோஷம் போட்டதை காங்கிரஸ் இதழான விகடன் மறந்து விட்டதா?

சென்னை மாநகராட்சி விதித்த தொழில் வரி ரூபாய் அய்ம்பதைக்கூடக் கட்ட மறுத்து நீதிமன்றத்தில் 'ரிட்' போட்டவரா யிற்றே ஆனந்த விகடன் போற்றும் இந்தத் 'தியாகி!' வ.உ.சி.யின் தியாகத் தழும்புகளுக்கு முன் ஆச்சாரியார்கள் கை கட்டிச் சேவகம் செய்ய வேண்டுமே!

ஆச்சாரியாரின் நாட்டுப் பற்றின் இலட்சணம் ஜெனரல் அயூப்கான் அவருக்கு வாழ்த்து அனுப்பியபோதே வெட்ட வெளிச்சமானதே! அப்பொழுது ஆச்சாரியாரின் கொடும்பாவி நாடெங்கும் கொளுத்தப்படவில்லையா? அந்த 1971 நிகழ்ச்சிகள் எல்லாம் மீண்டும் நினைவூட்டப்பட வேண்டுமா? சீன ஆக்கிரமிப்பின்போதுகூட இந்தியத் தரப்பில் செத்தவர்கள் எத்தனை பேர் என்று கணக்குக் கேட்டு அதனால் பெரும் எதிர்ப்பை ஆச்சாரியர் சந்திக்க நேர்ந்ததை எல்லாம் மறுமுறையும் எழுத வேண்டுமா?

பைசா பைசாவாகச் சேர்த்த காசையும் சொந்த சொத்துக்களையும் சேர்த்து அறக்கட்டளை ஏற்படுத்தி, இந்த நாட்டு மக்களின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் பயன்படும்படி செய்தவர் தந்தை பெரியார். அது இன்றைய தினம் கல்விச் சோலை யாகப் பூத்துக் குலுங்கி அறிவு மணம் வீசிக் கொண்டிருக்கிறதே! ஆச்சாரியார் தாம் சம்பாதித்த பணத்திலிருந்து ஒரு திண்ணைப் பள்ளிக்கூடமாவது வைத்ததுண்டா? புள்ளி விவரம் இருந்தால் விரலை மடக்கட்டுமே!

எந்த வகையில் எந்தத் தகுதியில் ஆச்சாரியாரின் பெயரில் மாவட்டம்?

"ராஜாஜி மறைந்தபோது சுடுகாட்டில் சக்கர நாற்காலியில் அமர்ந்து, பெரியார் கண்ணீர் விட்டு 'அஞ்சலி' செலுத்தியதை தமிழகம் மறந்து விடவில்லை. கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும், அவர்களிடையே நிலவிய நட்பு தமிழ்ப் பண்பாட்டின் இலக்கணமாகும்" என்று எழுதுகிற ஆனந்தவிகடன் ஆத்திகர் ராஜாஜிக்கும் நாத்திகர் பெரியாருக்கும் இடையே நிலவிய உயர்ந்த நட்பை அறிந்தவர்களுக்கு வீரமணியின் எதிர்ப்பு நிச்சயம் வியப்பைத் தரும் என்று குறிப்பிடுகின்றது.

ஆச்சாரியார் இறந்த நேரத்தில் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த பெரியாருடன் உடன் இருந்தவர்தான் வீரமணி! அதை ஆனந்த விகடன் நினைவூட்ட வேண்டிய அவசியமில்லை.

இரங்கல் தெரிவிக்க மனிதாபிமானத்தோடு சென்றதை யெல்லாம் கவனத்தில் வைத்து மாவட்டம் அமைக்க வேண்டும் என்று வாதாடுவது கோமாளித்தனமல்லாமல் வேறு என்ன?

அப்படி யென்றால் தந்தை பெரியார் பொதுவாழ்வோடு சம்பந்தப்பட்ட எத்தனைப் பேர்கள் பெயரால் மாவட்டங்களை ஏற்படுத்துவது?

ஆச்சாரியாருடன் ஆழமான நட்புக் கொண்டிருந்தார் அய்யா – உண்மைதான்! அதேநேரத்தில் ஆச்சாரியாரைப் பற்றி அவரின் கணிப்பும் ஆழமாகத்தானே இருந்தது – சென்னை உயர் நீதிமன்றத்திலேயே பதிவு செய்துள்ளாரே பகுத்தறிவுப் பகலவன்!

“இதுவரை எந்த இந்தியனும் வகித்திராத உயர்ந்த பதவி வகித்தவர்கள் என்கிற தன்மையில், முதல் வரிசையில் முதல்வராக இருக்கும் மாஜி கவர்னர் ஜெனரல் உயர்திரு சி. ராஜகோபாலாச் சாரியார் அவர்கள் சொல்கிறார்கள். “நான் வேத, சாஸ்திர, புராண, இதிகாச, உபநிஷத்தர்மங்களிலே நம்பிக்கை உடையவன்; ஜாதிப் பிரிவில் அதாவது வர்ணாஸ்ரம தர்மத்தில் மிக்க நம்பிக்கை உடையவன். அவைகளைப் பரப்பவும், நிலை நிறுத்துவுமே நான் பாடுபடுகிறேன். இனியும் அதற்காகவே பாடுபடுவேன்” என்று சொல்லுகிறார்; எழுதுகிறார்; அதற்கு வேண்டிய காரியங்களையும் செய்கிறார் என்றால் இனி யாரை மனதில் வைத்துக்கொண்டு “எல்லாப் பார்ப்பனர்களும் இப்படித்தான் இருப்பார்களா? என்று நினைப்பது?” என்று தந்தை பெரியார் வினா எழுப்பி யுள்ளாரே... இதற்கு ஆனந்த விகடன் என்ன பதில் சொல்லப் போகிறது? ‘ஆகா – ராஜாஜியிடம் எப்படி எல்லாம் அன்பு செலுத்தினார் பெரியார்’ என்று ஊருக்கும் உலகுக்கும் ஊதிக் காட்டும் இவர்கள், பெரியார் ராஜாஜி பற்றி வைத்த கணிப்பு என்ன என்பதை மூடி மறைப்பது ஏன்? இதற்குப் – பெயர்தானே பார்ப்பனத் தன்மை!

நட்பு என்பது வேறு; கொள்கை என்பது வேறு என்கிற பாடம்கூட தெரியவில்லையே பாலசுப்பிரமணியர்களுக்கு!

நட்புக்காக மட்டுமல்ல; எந்த நிலைமைக்காவும் கொள்கையை விட்டுக் கொடுத்தவரல்ல தந்தை பெரியார்! இதை ஆச்சாரியாரே கூறி இருக்கிறார்.

“விடுதலை”யும் பெரியாரும் என் அன்பார்ந்த எதிரிகள், என் நண்பரின் 86ஆம் ஆண்டு பிறந்த நாளன்று என் வாழ்த்துக்களை அன்புடன் பெற்றுக் கொள்வார்களாக!” *(11.8.1964)*

இங்கு ஆச்சாரியார் அன்பு என்பது நட்பை; எதிரிகள் என்பது கொள்கையை! இவ்வளவுத் தெளிவாக ஆச்சாரியாரா லேயே நட்புக்கும், கொள்கைக்கும் வேறுபாடு கூறப்பட்டுள்ள ஒன்றை அந்த ஆச்சாரியாரைச் சம்பந்தப்படுத்தி போலிவாதம் செய்யப் பார்க்கிறது ஆனந்த விகடன்! அதன் நிலையை நினைத்துப் பரிதாபப்படத்தான் வேண்டியுள்ளது!

‘கண்ணியத்தோடு எடுக்கப்பட்ட ஒரு முடிவுக்கு ‘வெத்து வேட்டாக’ எதிர்ப்புத் தெரிவிக்கும் வீரமணியாருக்கு இதெல்லாம் நினைவூட்டுவது நல்லது!’ என்று கட்டுரையில் முடிக்கப் பட்டுள்ளது.

மானமிகு வீரமணிக்கு இவற்றையெல்லாம் நினைவூட்ட வேண்டிய அவசியமில்லை. 64 ஆண்டு அகவையில் 54 ஆண்டு பொது வாழ்வுக்குச் சொந்தக்காரர் அவர்! அதில் பெரும்பாலும் தந்தை பெரியாரிடம் ஒட்டி உறவாடி சங்கமமானவர்!

தமிழக அரசின் முடிவு சரியானதல்ல என்று அவர் கூறுவதற்குக் காரணம் – கொள்கையும், கோட்பாடும், ஆச்சாரியார் கொட்டிக் குவித்திருக்கிற கொடுமைகளும்தான்!

அகால மரணமடைந்தவர்கள் எல்லாம் அவதாரப் புருஷர்களல்ல – என்று அறிஞர் அண்ணாவின் மறைவையொட்டி திருவாய் மலர்ந்த திருவாளர் பெயரில் அதே அண்ணாவை அரசியல் வழி காட்டியாகக் கொண்ட அரசு எப்படி ஒரு மாவட்டத்தை அமைத்தது என்பதுதான் கேள்வி! இதையெல்லாம் தெரிந்த நிலையில்தான் எம்.ஜி.ஆரேகூட ஆச்சாரியார் பெயரில் மாவட்டத்தை அமைக்கவில்லை. ஏன் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாகூட அந்த முயற்சியை மேற்கொள்ளவில்லை.

ஆச்சாரியார் – யார் – அவர் வகித்த பதவிகள் என்ன என்பது முக்கியமல்ல! அவர் நம் சமுதாயத்துக்குச் செய்த கொடுமைகளும், நாட்டுக்கு இழைத்த துரோகங்களும்தான் கண்ணுக்குத் தெரிய வேண்டும்; எடை போட்டுப் பார்க்க வேண்டும்; அந்த வகையில் இன்றைய முதல்வர் பெரும் சறுக்கலுக்கு ஆளாகிவிட்டார் என்றே வரலாறு காலாகாலத்திற்கும் கூறிக் கொண்டிருக்கும்!

இதற்குப் பெயர் – வெத்து வேட்டல்ல – வெத்து வேட்டென்றால் ஆனந்த விகடன் இப்படி வெலவெலத்துப் போயிருக்காது!

கொள்கைப் பார்வையில் குறி பார்த்து வைக்கப்பட்ட வேட்டு! – அதனாலேதான் இப்படி அலறுகிறது ஆனந்தவிகடன் வகையறா!

– **விடுதலை**

ஞாயிறு மலர், *14.7.1996*

குற்றம் செய்யத் தூண்டுகிறது 'குமுதம்'!

– மா. செங்குட்டுவன்.

மக்களின் பொது அறிவை வளர்த்துக் கொள்வதற்குச் செய்திப் பத்திரிகைகள் பயன்படுவதுபோலவே, பொழுதுபோக்குக்கென நடத்தப்படுகின்ற வார–மாத ஏடுகளும் சமுதாயத்துக்கும் நல்ல வழியில் பயன்பட வேண்டும்.

காசு சம்பாதிப்பது ஒன்றை மட்டுமே முழு முதல் குறிக்கோளாகக் கொண்டு பத்திரிகை நடத்துபவர்களிடம், இந்த நல்ல இலட்சியத்தை எதிர்பார்க்க முடியாதுதான்!

நாட்டு நலனில் அக்கறை கொண்ட பண்பாளர்களின் கையில் பத்திரிகைகள் இருந்தால், அது நாட்டுக்குப் பலன்தரும்; எதையும் பணம் பண்ணும் நோக்குடைய 'வியாபாரி'களிடம் பத்திரிகைகள் சிக்கிக்கொள்ளுமானால், அவற்றின் மூலம் நாட்டுக்கு நன்மையா கிட்டும்?

நாடகம் – சினிமா – பத்திரிகை போன்ற வலிமை மிக்க பிரசாரக் கருவிகளைப் பயன்படுத்துவதைப் பொறுத்தே, விளையக்கூடிய நன்மையும், தீமையும் உள்ளன!

தமிழ்நாட்டில் மக்களின் பொழுதுபோக்குக்கென்று நடத்தப்படும் சில பத்திரிகைகள், சமுதாயத்துக்கு நன்மை செய்யாவிட்டாலும், தீமை செய்யாமலயாவது இருக்கின்றனவா என்றால், இல்லை!

அப்படி, சமுதாயத்துக்குத் தவறான வழிகாட்டித் தீய காரியங்களைச் செய்யத் தூண்டும் சில ஏடுகளில் முதலிடம் வகிப்பது, 'குமுதம்' ஏடாகும்!

அந்த ஏட்டில், 'கதை' என்ற பெயரில் வெளியாகும் அபத்தக் களஞ்சியங்களைப் படித்து – இன்றைய இளைய தலைமுறையினர் கெட்டுக் குட்டிச் சுவராகி வருவதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை!

ஆபாசப் படங்களையும் – அருவருக்கத்தக்க செய்திகளையும் வெளியிட்டு வரும் நாலாந்தர, ஐந்தாம் தரக் கழிசடை ஏடுகளைத்தான், 'மஞ்சள்' பத்திரிகை என்று ஒதுக்கி விடுகிறோம்!

ஆனால், அந்தப் பட்டியலில் 'குமுதம்' இடம் பெறவில்லையே தவிர, ஏறக்குறைய அந்தப் பத்திரிகைகள் செய்து வரும் அதே வேலையைத்தான் 'குமுதமு'ம் நாசூக்காகச் செய்து வருகிறது!

'மேட்டுக் குடியினர் கையிலே தவழும் குடும்பப் பத்திரிகை' என்ற பெயரெடுத்து விட்ட 'குமுதம்' எதைவேண்டுமானாலும் எழுதத் தயங்குவதில்லை!

உள்ளபடியே, நல்ல குடும்பத்தில் உள்ளவர்கள் வெளிப் படையாக வைத்திருக்கவோ–படிக்கவோ கூசும் அளவுக்கு அதில் படங்களும்–கதைகளும் வெளிவரத் தொடங்கி ஆண்டுகள் பல ஆகிவிட்டன!

பற்றாக்குறைக்கு சட்டவிரோதச் செயல்களை––கிரிமினல் குற்றங்களைத் தூண்டிவிடும் வகையிலும் 'கதை'கள் என்ற பெயரால் அதில் எழுதப்பட்டு வருகின்றன!

அந்த ஏட்டில் வரும் கதைகளையும், கட்டுரைகளையும் படித்து, நல்ல குடும்பத்தில் உள்ளவர்களும் கெடாமல் இருக்க முடியாது!

எடுத்துக்காட்டாகப் பலவற்றைக் கூற முடியும்! இதோ ஒரு செய்தி:–

மதுரை மாவட்டம் திருமங்கலத்தைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர் பழனிச்சாமி தேவர் என்பவர், பணியில் இருந்த காலத்தில் இறந்துவிட்டாராம்; அவர், இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் ஓய்வு பெற வேண்டியவராம்; ஓய்வு பெறுமுன்பே இறந்ததால், அவருடைய குடும்பத்துக்கு அரசு ஊழியர் குடும்ப நல்வாழ்வுத் திட்டத்தின் கீழ் ரூ. 10,000 கிடைத்திருக்கிறது! அந்தத் தொகையை, அவருடைய மனைவி அமிர்தாம்பாள் என்பவர் பெற்றுக் கொண்டாராம்! அமிர்தாம்பாளும் ஓர் ஆசிரியையாம்.

ஆசிரியர் பழனிச்சாமி தேவரை அவரது மனைவியும்— மற்றும் ஐந்து பேரும் சேர்ந்து கொலை செய்ததாக இ.பி.கோ. 302, 201 பிரிவுகளின் கீழ் திருமங்கலம் போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளதாகவும், தமது கணவர் கொலை செய்யப்பட்டது உண்மை என்று ஒப்புக்கொண்டு மனைவி அமிர்தாம்பாள் போலீஸ் விசாரணையில் வாக்குமூலம் கொடுத்திருப்பதாகவும், இந்த வழக்கு விசாரணையில் இருந்து வருவதாகவும் 'குமுதம்' இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இறந்த பழனிச்சாமி தேவரின் படமும் அதில் வெளியிடப் பட்டுள்ளது.

இந்தச் செய்தியை – நடந்த உண்மை நிகழ்ச்சி என்ற முறையில் – ஒரு பத்திரிகை என்ற அளவில் வெளியிடுவதில் தவறொன்றுமில்லை!

'செய்தி' என்ற அளவில் இதனைப் படிப்பதாலும் எந்த விதத் தீய விளைவும் ஏற்பட்டுவிடாது!

ஆனால், 'குமுதம்' ஏடு இச்செய்தியை வெளியிட்டுள்ள 'முறை'யைக் காணும்போது, அதன் உள்நோக்கமும் 'பளிச்'சென்று வெளிப்படுகிறது!

எப்படியாவது இன்றுள்ள தி.மு.க. ஆட்சிக்கும் – ஆட்சியின் நல்ல திட்டங்களுக்கும் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் 'குமுதத்'தின் இன்றையத் தலையாய இலட்சியம்!

அந்த இலட்சியத்தை ஈடேற்ற எதையும் செய்யலாம்— எப்படியும் எழுதலாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டது அந்த ஏடு!

தி.மு.க. எதிர்ப்புவெறி தலைக்கேறிவிட்டதால், தான் செய்வது சட்டப்படி குற்றம் என்பதைக்கூட அதனால் உணர்ந்துகொள்ள முடியவில்லை!

பக்கத்திலே வெளியாகியுள்ள செய்தித் தலைப்பைப் பாருங்கள் – (குமுதத்தில் வெளியாகியுள்ள செய்தித் தலைப்பை அப்படியே பிளாக் செய்து வெளியிட்டுள்ளோம்) – இப்படி ஒரு தலைப்புக் கொடுத்துச் செய்தி வெளியிடுவது சட்டத்துக்கு உட்பட்டதுதானா – சமுதாய மரபுக்கு உகந்ததுதானா – என்பதை, மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

நாட்டிலே குற்றங்கள் நிகழாமல் தடுப்பதற்காகத்தான் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன.

சட்டத்தையும் மீறி நடந்துவிடக்கூடிய குற்றங்களுக்காகத் தண்டனை விதிக்கும் சட்டமும் இருக்கிறது.

சட்டங்களும் – தண்டனை வழங்கும் முறையும் இருந்தும், தவறுகள் நடப்பதில்லையா நாட்டில்?

எங்கோ–யாரோ சட்ட விரோதமான காரியங்களில் ஈடு படுகிறார்கள் என்பதனால், சட்டத்தையே களங்கப்படுத்துவது என்பது அறிவுடைமையாகுமா?

தமிழ்நாட்டில் குற்றமே நிகழ்வதில்லை என்றோ–குற்றவாளிகளே கிடையாது என்றோ சொல்லவில்லை! நாலரைக்கோடி மக்கள் வாழும் இந்த நிலப்பரப்பில், குற்ற மனப்பான்மை கொண்டவர் களும் இருக்கத்தான் செய்வார்கள்; அப்படிப்பட்டவர்களைத் தடுக்கவும்–தண்டிக்கவும்தான் சட்டங்கள்–நீதிமன்றங்கள் இருக்கின்றன!

இந்தப் பரந்த உலகத்தில், குற்றமே நிகழாத நிலப் பகுதி ஒன்று உண்டு என்றோ, நீதிமன்றங்களுக்கே வேலை இல்லாத நாடு ஏதேனும் இருப்பதாகவோ 'குமுதம்' ஆசிரியர் குழாமால் சுட்டிக்காட்ட முடியுமா?

மதுவினால் மக்களுக்குத் தீமை என்பதால்தான், மதுவிலக்குச் சட்டம் இயற்றப்பட்டது; 'சட்டத்தையும் மீறிச் சிலர் மது அருந்த வில்லையா' என்று 'குமுதம்' கேட்கக்கூடும்.

அப்படி நிகழும் குற்றங்களைத் தடுக்கத்தான், சட்டமும் – காவல்துறையும் – நீதிமன்றங்களும் இருக்கின்றன!

யாரோ சிலர் குடிக்கிறார்கள் என்பதற்காக, மதுவிலக்குச் சட்டத்தையே களங்கப்படுத்துவதா? மதுவிலக்குக் கொண்டு வந்துள்ள ஆட்சியாளர் மீது மக்களுக்கு வெறுப்பை உண்டாக்கலாமா?

இப்படிப்பட்ட செயலில்தான் 'குமுதம்' ஆசிரியர் குழாம் உற்சாகத்துடன் ஈடுபட்டுள்ளது.

அரசு ஊழியர்கள், தங்கள் பணிக் காலத்தில் (ஓய்வு பெறுவதற்குமுன்) இறக்க நேரிட்டால், அப்படி இறந்தவரின் குடும்பம் பராரியாகத் தவிக்கக்கூடாது என்பதற்காகத்தான், 'அரசு ஊழியர் குடும்ப நல்வாழ்வுத் திட்ட'த்தைத் தமிழக அரசு இந்தியாவிலேயே முதன்முதலாகக் கொண்டுவந்து செயல் படுத்திவருகிறது!

இத்தகையதொரு நல்ல திட்டம் அனைத்து இந்தியாவில் மட்டுமல்ல – அயல் நாடுகளிலும்கூட இல்லை என்று திட்ட வட்டமாகச் சொல்லலாம்!

தி.மு.க. ஆட்சியில்தான் முதல்வர் கலைஞர் அவர்கள் மனத்திலே இந்தத் திட்டம் முதன் முதலாகத் தோன்றியது!

காங்கிரசு ஆளும் வேறு எந்த மாநில முதல்வருடைய சிந்தனை யிலும் இத் திட்டம் கருக்கொள்ளவுமில்லை!

அயல் மாநிலத்தவரும் – அயல் நாட்டவரும் போற்றிப் பாராட்டும் இந்தத் திட்டத்தை, ‘குமுதம்’ ஆசிரியர் குழாமினால் பாராட்டி வரவேற்க மனமில்லையென்றாலும், அதற்குக் களங்கம் ஏற்படுத்தாமலாவது இருக்கலாம் அல்லவா?

திருமங்கலத்தில் நடந்துவிட்டதாகக் கூறப்படும் இந்த நிகழ்ச்சியை, ஏன் இப்படி ஊர் உலகத்துக்கெல்லாம் பறைசாற்ற வேண்டும்?

இந்தச் செய்தியைப் படிப்பதனால் யாருக்காவது கடுகளவு பயனாவது ஏற்படுமா?


கணவனைக் கொலை

தி.மு.க. அரசாங்க ஊழியர் வேலையில் இருக்கும்போது இறந்து விட்டால் அந்தக் குடும்பத்தினருக்கு அரசு ரூபாய் பத்தாயிரம் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஓர் ஆசிரியரை அவருடைய மனைவி அந்தப் பத்தாயிரம் பெறுவதற்காக கொலை செய்ததாக வழக்குப் பதிவாகி இருக்கிறது.


செய்துவிட்டு

மதுரை மாவட்டம் திருமங்கலம் சவுகத்அலி முஸ்லிம் தெருவில் பள்ளி ஆசிரியர் பழனிச்சாமித் தேவர் என்பவர் ஒரு நாள் இரவில் இறந்து விட்டார்.

இறந்த பின் சம்பிரதாயப் படி கொட்டு மேளங்களுடன் சவ


பத்தாயிரம் ரூபாய்

அடக்கம் நடந்தது. அவர் கள்ளர் பள்ளியில் ஆசிரியராக இருந்து வந்தவர். இந்த ஆண்டு ஏப்ரலில் வேலையில் இருந்து ஓய்வு பெறுவதாக இருந்தது. ஆனால் வேலைக் காலத்துக்கு முன்பே இறந்துவிட்டதால் அரசிடமிருந்து அவருடைய மனைவி அமிர்தம்மாள் ரூபாய் பத்தாயிரம் கோரி அதை அடையவும்


வாங்குவது எப்படி?

அடைத்துவிட்டார். அமிர்தம்மாளும் ஆசிரியையாக இருந்து வருபவர்.

1.3.75'ம் தேதியன்று திருமங்கலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு.கே. ராமசாமி இறந்தவரின் மனைவி மீதும், இன்னும் ஐந்து பேர் மீதும் இ.பி.கோ. 302, 201 பிரிவின்படி வழக்குத் தொடர்ந்தார். பழனிச்சாமித் தேவரை

தி.மு.க. ஆட்சியால் செயல்படுத்தப் படும் திட்டம், இன்ன வகையில் மோசமானது – தேவையற்றது என்று வேண்டுமானால் ஆதாரத்தோடு ‘குமுதம்’ கூறட்டும் – திருத்திக்கொள்ள அரசு தயங்காது! ஆனால், அப்படிக் கூறும் துணிவோ – திராணியோ ‘குமுதத்’துக்குக் கிடையாது!

‘ஏமாளி’ வாசகர்களை இந்த ஆட்சிக்கு எதிராகத் திசைதிருப்பி விடலாம் என்ற அற்ப ஆசையினால், இவ்வளவு படு மோசமான காரியத்தில் ‘குமுதம்’ இறங்கி யிருக்கிறதே தவிர, சமுதாயத்தின்பால் கொண்டுள்ள நல்லெண்ணத்தினால் அல்ல!

இந்தச் செய்தியை வெளியிட்டதன் மூலம் சமுதாயத்துக்கு ஏற்பட்டு வரும் ஒரு நன்மையைக் களங்கப்படுத்துவது மட்டுமல்ல – சட்டவிரோதமான காரியத்தையும் துணிந்து செய்திருக்கிறது ‘குமுதம்’ ஏடு!

செய்தித் தலைப்பை மீண்டும் ஒருமுறை படித்துப் பாருங்கள்:

**“கணவனைக் கொலை செய்துவிட்டு
பத்தாயிரம் ரூபாய் வாங்குவது எப்படி?”**

இப்படி ஒரு தலைப்பை, இதுவரையில் எந்த ஒரு பத்திரிகை யிலாவது யாரேனும் படித்ததுண்டா?

வேறு எந்தப் பத்திரிகை ஆசிரியர் மனத்திலும் தோன்றாத தெல்லாம், 'குமுதத்' தின் குயுக்தி மூளையில் தோன்றுவது உண்டு; அப்படித் தோன்றியதுதான், இந்தச் செய்தித் தலைப்பு!

வேறு எந்தப் பத்திரிகை ஆசிரியருக்குத்தான் இப்படி ஒரு தலைப்புப் போடும் துணிவு வரும்? 'குமுதம்' ஆசிரியரின் மூளையே மூளை! துணிச்சலே துணிச்சல்!

'கணவனைக் கொலை செய்து விட்டுப் பத்தாயிரம் ரூபாய் **பெற்றது** எப்படி?' என்று தலைப்புப் போடலாம்; அப்படிப் போடுவதும் தவறில்லை!

'கணவனைக் கொலை செய்து விட்டுப் பத்தாயிரம் ரூபாய் **பெறுவது** எப்படி?' என்று 'குமுதம்' ஆசிரியர் போட்டதில்தான் புதுமை இருக்கிறது-புரட்சி இருக்கிறது!

'இதற்கு, 'குமுதமான' தலைப்பு-என்றுகூடக் 'குமுதம்' ஆசிரியர் பெயர் கொடுக்கக் கூடும்!

தலைப்பிலே அவர் புதுமை செய்வதையோ-புரட்சி செய்வதையோ வேண்டாம் என்று நாம் கூறவுமில்லை-அப்படிக் கூறவும் நமக்கு உரிமையில்லை!

ஆனால், இப்படிப்பட்ட தலைப்புகளினால் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இன்று இப்படித் தலைப்புப் போடுபவர், நாளை, 'விஷ ஊசி போட்டுக் கொலை செய்வது எப்படி?' என்றுகூடத் தலைப்புடன் செய்தி போடக்கூடும்!

இன்-னும் இப்படிப்பட்ட சட்ட விரோத-சமுதாய விரோத காரியங்களையெல்லாம் தூண்டும் வகையில் 'குமுதத்'தில் தலைப்புகள் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

"குற்றம் செய்யத் தூண்டும் வகையில் செய்தித் தலைப்புப் போடலாமா?" என்று நாம் கேட்டால், 'உனக்கு என்ன சட்டம் தெரியும்?' என்று 'குமுதம்' வெளியீட்டாளரே நம்மைத் திருப்பிக் கேட்கக் கூடும்! ஏனென்றால், அவரே எம்.ஏ.பி.எல். பட்டம் பெற்றவர் அல்லவா?

"அவருக்குத் தெரியாத சட்ட நுணுக்கமா" நமக்குத் தெரியப்போகிறது?

சட்ட நுணுக்கம் ஒருபுறமிருக்கட்டும்; சமுதாய நலனுக்காவது இப்படிப்பட்ட தலைப்பு உகந்ததுதானா? இப்படிப்பட்ட செய்திகளாகத் தேடிப் பிடித்து-இவ்வாறு தலைப்பிட்டு வெளியிடுவதே சமுதாய விரோதச் செயல் அல்லவா?

"நாங்கள் அப்படித்தான் வெளியிடுவோம்–கேட்க நீங்கள் யார்?'' என்று 'குமுதம்' ஆசிரியர் குழாம் நம்மைப் பார்த்துச் சீறிப் பாயக்கூடும் – நாம் என்ன செய்ய?

கழுகு மேலே பறந்தாலும், அதன் தொலைநோக்கிலே பளிச்சென்று கண்ணுக்குத் தெரிவது தரையிலே கிடக்கின்ற, அழுகல் பொருளாகத்தான் இருக்கும்; நல்லவற்றை நாடுவதில்லை!

அதைப்போல, நாட்டிலே எவ்வளவு நல்ல காரியங்கள் நடந்து கொண்டிருந்தாலும், 'குமுதத்'தின் பார்வை இப்படிப்பட்ட சமூக விரோதச் செயல்களின் மீதுதான் படுகிறது! அதன் பிறவிப் புத்தி இது!

'குமுதம்' இதழில் வெளியாகும் ஆபாசக் கதைகளுக்கெல்லாம் கருப்பொருளாக அமைவது, சமுதாய விரோதச் செயல்களாகத் தானே இருக்கின்றன?

அரசு ஊழியர் குடும்ப நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ் தவறான முறையில் பணம் பெற முயற்சி செய்வதைக் கருப்பொருளாகக் கொண்டு முன்புகூட சில கதைகள் 'குமுதத்'தில் வெளியாகி யிருக்கின்றன!

எடுத்துக்காட்டாக, 17–10–74 'குமுதம்' இதழில் வெளியான 'தேதி வைத்தாகி விட்டது' என்ற கதையைக் குறிப்பிடலாம். பத்தாயிரம் ரூபாயைத் தமது குடும்பம் பெறுவதற்காக ஒரு பெண் (அரசு ஊழியர்) தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக அந்தக் கதை கூறுகிறது!

இதற்குப் பெயர்தான் 'குமுதமான' கதை!

இல்லையென்றால், 'கணவனைக் கொலை செய்துவிட்டுப் பத்தாயிரம் ரூபாய் வாங்குவது எப்படி?' என்று தலைப்புப் போடுமா 'குமுதம்?'

சமுதாயத்தில் நிலவும் குற்றங்குறைகளைக் களைவதற்குப் பாடுபட வேண்டிய ஏடுகள், மேலும் குற்றங்களைத் தூண்டும் வகையில் எழுதுகின்றன என்றால், இதற்கு என்ன பொருள்?

'சட்டமோ, சமுதாயமோ எக்கேடு கெட்டுப் போகட்டும்; நமக்கு வேண்டியது காசுதான்' என்று 'குமுதம்' ஆசிரியர் குழாம் கருதுமானால், அதனை நாம் மறுத்துரைக்க விரும்பவில்லை!

இதுதான் 'குமுதம்' – என்று தமிழ் மக்கள் அடையாளம் கண்டுகொண்டால் சரிதான்!

– *கழகக்குரல்*

20.04.1975

‘குமுத’த்தையே படியுங்கள்–
குட்டிச்சுவர் ஆகி மடியுங்கள்!

– ‘‘அரிமா’’

மக்களின் மாபெரும் வழிகாட்டிகளுக்குள்ள புகழே மக்கி மண்ணாகும்படி – அவர்களுக்கே அறிவுரைகள் பகர்ந்து நல்வழி காட்டக்கூடிய– ஓர் அற்புதமான ‘கற்புக்கரசி’ கலங்கரை விளக்கமாக ஒளியை விசிறியடித்து உங்களைக் கரைசேர்க்கக் கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருக்கிறாள்!

யார் அந்தப் பெருமாட்டி–பெருங் கருணைப் பேரரசி–என்றெல்லாம் திகைக்கிறீர்களா?

அவள்தான், உங்கள் உள்ளத்தையே கொள்ளையடித்து – உங்களிடம் உள்ளத்தையும் (பணம், அறிவு எதுவானாலும்) கொள்ளையடித்தும் – உங்களை அள்ளியணைத்துக் கொண்டே பள்ளத்தில் உருட்டிவிடக் கற்றிருக்கும் கொள்ளையழகி! ‘குமுதம்’ எனும் பேரழகி!

அவளைப் போலக் கறைபடாத – மற்றவர்களின் வாழ்க்கையில், நட்பில் ‘கறையான் வேலை’ செய்யாத – கள்ளங் கவடு என்பதே அறியாத – ஒரு காரிகையை நீங்கள் காணவே முடியாது!

கறுப்புப் பணத்தையே காணாத கற்புக்கரசி!

கறுப்புப் பணம் என்பதே அந்தக் ‘குமுத’க் கோமளவல்லியின் கண்ணிலேயே பட்டதில்லையே!

‘‘படி ஒன்று ஐம்பத்தைந்து காசு விலையில் – ஐந்து லட்சங்களுக்கு மேல் விற்பனையாகிறதே!’’

‘‘ஏராளமான விளம்பரக் கட்டணத்திலேயே அதனுடைய செலவில் பெரும் பகுதி தாராளமாக அடைந்து விடுமே!’’

"தாள் விலை – அச்சுக் கூலி – எழுத்தாளர்களுக்கு அன்பளிப்பு – ஊழியர்களுக்கு ஊதியம்–விற்பனையாளர்களுக்குக் கழிவுத் தொகை முதலான எல்லாச் செலவுகளையும் தள்ளிப் பார்த்தாலும், மாதாமாதம் எத்தனையோ இலட்சங்கள் இலாபமாக நிற்கக் கூடுமே!''

"அந்த இலட்சங்கள் ஒரு சிலருடைய கைகளுக்குள்ளேயே ஒடுங்கிவிடவும் கூடும் – அவர்களைப் பணக்காரத் திமிங்கிலங்களாகப் பருக்க வைக்கவும் கூடுமே''

என்றெல்லாம் நீங்கள் கணக்குப் பார்க்கக்கூடாது!

என்னதான் சொன்னாலும், வெள்ளிவிழாக் கண்டுவிட்ட – ஏன் – இருபத் தொன்பது 'நிலவு'களைக் கழித்துவிட்ட – குமுதக் கோமளவல்லிக்குக் 'கறுப்புப் பணம்' என்பதே தெரியாது!

அதாவது, தன்னிடம் முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரிக்கும் கறுப்புப் பணத்தைத் தெரியவே தெரியாது!

கோமளவல்லியின் குறிக்கோள்?

அருமைத் தமிழர்களே!

அவளுடைய குறிக்கோள் முழுவதும் பாட்டாளி மக்களை வாழ வைக்க வேண்டும் என்பதே!

அவளுடைய ஒரே உயிர் இலட்சியம் – உழைப்பாளிகளின் கண்ணீரைத் துடைத்தெறிய வேண்டும் என்பதே!

இல்லாவிட்டால், அவளுக்கு உறக்கமே வராது!

எத்தனை இலட்சக்கணக்கான தாழ்த்தப்பட்ட–பிற்படுத்தப் பட்ட மக்களுக்குத் தன் சொந்தப் பணத்தைக் கொண்டே அவள் மாளிகைகளை எழுப்பித் தந்திருக்கிறாள் தெரியுமா?

எத்தனை இலட்சக்கணக்கான ஏழை எளியவர்களுக்குப் பசி என்பதே தெரியாதபடி 'பாயசமாக'வே வேளா வேளைக்கு விருந்து வைத்துக்கொண்டே இருந்திருக்கிறாள் தெரியுமா?

எத்தனை இலட்சக்கணக்கான வறிய மக்களுக்குத் தன் கைப்பணத்தைக் கொண்டே வண்ண வண்ண ஆடைகளை யெல்லாம் வழங்கியிருக்கிறாள் தெரியுமா?

அவளைப் போன்ற 'வள்ளலை' இந்த வையம் முழுதும் தேடினாலும் உங்களால் காணமுடியுமா?

இரக்கப்படும் ஏமாளியா?

அவள் குழந்தையாகத் தவழ்ந்தபோது, அவளை அரவணைத்து வாழ வைத்த வள்ளல் அழகப்பச் செட்டியார்கூட அவளுடைய வள்ளல் தன்மையை வெல்ல முடியுமா?

அருமைத் தமிழ் மக்களே!

கொடுமையான தொழு நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் குளிர் நிழலாக–புகலிடமாக–இல்லங்களை எழுப்புவதெல்லாம் எவ்வளவு பெரிய முட்டாள் தனம் – வடிகட்டிய தன்னலத்தனம்!

அந்தத் தொழு நோயாளிகள் எக்கேடு கெட்டு எப்படிப் புறக்கணிக்கப்பட்டால் என்ன? புழுக்களையும்–பூச்சிகளையும் போலத் தங்கள் உற்றார்–உறவினர்களாலேயே நடத்தப்பட்டு, நடைப் பிணங்களைவிடக் கேவலமாக அவர்கள் நலிந்தால் என்ன? அழிந்தால் என்ன?

அவர்களுக்குப் போய் இதயங்கசிந்திட இரக்கத்தைச் சொரிவது எவ்வளவு பெரிய ஏமாளித்தனம்!

அந்த ஏமாளித்தனத்துக்கெல்லாம் இடம் கொடுத்து இளிச்சவாய்ப் பட்டங் கட்டிக்கொள்ள குமுதக் கோமளவல்லிக்கு என்ன – பைத்தியமா பிடித்திருக்கிறது?

அந்தத் தொழுநோய் கொண்டவர்களுக்குத் துணையாக–சுமைதாங்கியாகப் பணியாற்றக் கிளம்பியவரைப் பழித்துப் பூரிப்படைவதில் அல்லவா குமுதக் கோமளவல்லியின் பரந்த மனப்பான்மை – படு சுட்டித்தனமான அறிவுக் கூர்மை பட்டொளி வீசுகின்றன!

அலாவுதீன் விளக்கு!

தொழுநோயாளிகளை வாழ வைக்கக் கிளம்பியதோடு நில்லாமல்,

கண்ணொளி இழந்தோர் –

கை, கால் ஊனமுற்றோர் –

கை வண்டியால் மனிதர்களை இழுத்தோர் –

பெற்றோரை இழந்துவிட்ட அனாதைப் பிஞ்சுகள் –

கணவனை இழந்த கைம்பெண்கள் –

இப்படிக் கண்ணீர் கடலிலேயே கரைந்து அமிழ்ந்தவர்களுக்குக் கப்பலாகக் கை கொடுக்க முன்வரலாமா ஒருவர்?

அவர் மீது அவதூறுகளையும் – அபாண்டப் பழிகளையும் அள்ளிப் பொழிவதைப் போல வேறு கொள்ளை இன்பம் என்ன இருக்க முடியும் – குமுதக் கோமளவல்லிக்கு?

அவ்வாறு இன்பத்தில் திளைத்து – ஈரம் கசியும் இதயங்களை இழிமொழி ஈட்டிகளால் துளைத்து – வெற்றிக்கொடி நாட்டும் வீராங்கனையே குமுதக் கோமளவல்லி!

அருமைத் தமிழர்களே!

அவள்தான் உங்களை அடியோடு வாழ வைக்கப்போகும் 'அலாவுதீன் விளக்கு' - அருமையான கற்பகத் தரு!

திரையுலகக் கறுப்புப் பணமே தெரியாதவள்!

அவள், 'கறுப்புப் பணம்' என்பதையே தொட்டறியாத சுடர்க்கொடி என்று முன்பே சொன்னோம் அல்லவா?

அவளுக்குக் கறுப்புப் பணம் வைத்திருக்கும் 'கண்ணியமான' திரையுலகப் பெரியவர்களையும் கண்டிப்பாகத் தெரியவே தெரியாது!

எட்டு இலட்சம்-பத்து இலட்சம் என்று 'கறுப்பாக' வாங்கிக் கொண்டு, அவற்றை ஓர் இலட்சம் என்றோ-இரண்டு இலட்சம் என்றோ 'வெள்ளை'யாகக் கணக்குக் காட்டி வருமான வரித் துறையை எத்தனையோ ஆண்டுகளாகச் சிலர் ஏமாற்றலாம்-நூற்றுக்கு மேற்பட்ட எத்தனையோ படங்களின் மூலம் கொள்ளை யடித்துப் பணத்தைக் குவித்திருக்கலாம்-தம்மை வள்ளலாகப் பறைசாற்றியே வளர்ந்தும் இருக்கலாம்!

அவர்கள் யாருமே கறுப்புப் பணக்காரர்களாகக் குமுதக் கோமளவல்லியின் குளுமையான கண்ணுக்குப் படவே மாட்டார்கள்!

அவ்வளவு நேர்மையான பார்வை அவளுக்கு!

அந்தக் கறுப்புப் பணக்காரர்களை அட்டையிலே தாங்குவதை யும் பெருமிதமாகக் கருதக்கூடிய பெருநோக்குப் படைத்தவளே அவள்!

அருமைத் தமிழர்களே!

அந்த நடுநிலைமை பிறழாத நளின நங்கையே உங்களை நன்னிலைக்கு இட்டுச் செல்லும் மிக உயர்ந்த வழிகாட்டி!

விளம்பரமே வேப்பங்காய்?

விளம்பரம் என்பதே அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காத எவ்வளவு கொடிய வேப்பங்காய் தெரியுமா?

தலைவர்கள் மீது தணியாத பற்றுக்கொண்ட தொண்டர்கள் தங்கள் உள்ளக்கிடக்கைக்கு உருவம் கொடுத்துத் தங்கள் தானைத் தளபதிகளின் பிறந்த நாட்களின்போது வாழ்த்துச் சுவரொட்டிகள் ஒட்டினால் அவளுக்கு எப்படியெல்லாம் எரிச்சல் பற்றிக்கொண்டு வரும் தெரியுமா?

ஆனால், தி.மு.கழகத் தலைவர்களுக்குப் பிறந்த நாள் கொண்டாடுவதுதான் அவளுடைய கண்ணைக் கரிக்கும்– வயிற்றைக் கலக்கும்! திரு.கோசல்ராம் போன்ற மற்றக் கட்சிக் காரர்களுக்குப் பிறந்த நாளை ஒட்டிப் பெரிய பெரிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டால், கோபம் என்பதே துளிக்கூட வராது– கோமளவல்லிக்கு!

அது போகட்டும்!

தனக்கு ஒரு விளம்பரம் வேண்டும்–அதன் மூலம் விற்பனை பெருக வேண்டும் என்று அவள் என்றைக்காவது எண்ணியது உண்டா? அப்படியானால், சென்னை மாநகரின் நெடுஞ்சாலை களில் ஆங்காங்கே பேருந்துகள் நிற்கும் இடங்களில் நிழற் கொடைகள் பல அவளுடைய பெயரைச் சுமந்து நிற்கின்றனவே– அவை மட்டும் விளம்பரத்தின் வெளிப்பாடு இல்லையா என்று கேட்கிறீர்களா?

அய்யோ! எவ்வளவு அறியாமையோடு இப்படிப்பட்ட கேள்விகளை எல்லாம் எழுப்ப நினைக்கிறீர்கள்?

அந்த நிழற்கொடைகள், 'பயணிகள் வெயிலிலே வெந்து– மழையிலே கரையக்கூடாதே' என்கின்ற கருணைக் கடலின் அலைமோதலால்தான், 'அந்தக் காலத்திலேயே' அமைக்கப் பட்டனவே தவிர, தன்னை எப்படியாவது விளம்பரப்படுத்திக் கொள்ள வேண்டும் என்கின்ற ஆசையினாலா?

சே! சே!

அத்தகைய அற்ப ஆசைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவள் அய்யா–குமுதக் கோமளவல்லி! தன்னுடைய விற்பனையைப் பெருக்கிக்கொள்ள வேறு எந்தத் தந்திரமுமே தெரியாதவளாக இருந்தால் அல்லவா இப்படிக் கேவலம்-நிழற்கொடைகளைப் போய் நிறுவி–அவற்றில் தன்னுடைய பெயர்களைப் பொறித்துக் கொள்ள வேண்டும்?

என்னென்ன பாடுகள்-எத்தனை வேடங்கள்!

அருமைத் தமிழர்களே! உங்களை– கால் நூற்றாண்டுக் காலத்திற்குப் பிறகேனும் வாழ வைக்க வேண்டும்-–உங்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்கின்ற வற்றாத ஆசை வெள்ளத்தோடு குமுதக் கோமளவல்லி, தன்னைக் கோபுரம் போல வளர்த்துக் கொள்ள என்னென்ன பாடெல்லாம் பட்டிருக்கிறாள் தெரியுமா? என்னென்ன வேடமெல்லாம் புனைந்திருக்கிறாள் தெரியுமா?

– கழகக் குரல்,
27.06.1976

பத்திரிகை [அ] தர்மம்!

– செ. கந்தப்பன்

அண்ணாவின் கோட்பாடுகளை என்றைக்கும் மேட்டுக் குடியினர் போற்றியதில்லை. ஒரு சிலர் விதிவிலக்குகளாக இருக்கலாம்!

ஆனால், நாளேடுகளைப் பொறுத்து – குறிப்பாகத் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட நாள்தொட்டு – திராவிட இயக்கத்திற்கு எதிரான அர்ச்சனை நித்திய நியமம் ஆகிவிட்டது! அதுவும் சென்னையிலிருந்து வெளிவரும் மூன்று ஆங்கில நாளேடுகள், தி.மு.க.வைத் திட்டாத நாளைத் தமது வாழ்வில் பாழ்பட்ட நாட்கள் எனக் கருதும் போலும்! பொருத்தம் இருக்கிறதோ இல்லையோ நாள்தோறும் கண்டனக் கணைகளை நம் கழகத்திற் கெதிராகவோ அல்லது கழகத் தலைவர் கலைஞருக்கு எதிராகவோ அவை தொடுக்கத் தவறுவதில்லை!

கண்டனக் கணைகள் என்பது கூட அவைகளைப் பொறுத்து ஒரு மென்மையான வார்த்தையே! இனக்காழ்ப்பு என்னும் நஞ்சு தடவிய ஆயுதங்களைத் தம்மால் முடிந்தவரை கூராக்கி வீசுகின்றன எனலாம்!

சர்க்காரிய கமிசனை அவை ஒரு நாளும் மறப்பதில்லை! அரைத்த மாவையே அரைக்கிறோமே என்றும் அவை கவலைப்படுவதில்லை! திரும்பத் திரும்பச் சொன்னால் பொய்யும் மெய் போன்ற ஒரு மயக்கத்தைத் தரும் என்ற கலையை அந்த ஏடுகளை நடத்துவோர் நன்கு கற்றவர்கள்! இதிகாசங்களை அப்படித்தானே இன்றும் விடாமல் பரப்ப அவர்களால்

முடிகிறது? இன்றைய அறிவியல் உலகத்திற்கு பாரதமும், ராமாயணமும் வாழ வழிகாட்ட வல்லவை என்ற பிரசாரத்தின் வலுவே திரும்பத் திரும்பச் சொல்லுவதில்தானே உள்ளது?

சர்க்காரியாவின் பரிந்துரைகளைச் சில நேரங்களில் 'தீர்ப்பு' என்று வர்ணிக்கவும் அந்த ஏடுகள் கூசுவதில்லை! பரிந்துரைகளின் மீது அரசு ஆதாரம் இருப்பதாகக் கருதினால் மட்டுமே வழக்குப்போட முடியும் என்பது குறித்தும் அவைகள் கவலை கொள்ளுவதில்லை!

வழக்குப் போடத் தடயங்கள் இருந்து, வழக்கும் தொடுக்கப்பட்டால், நீதிமன்றம் நடுநிலையாக இருந்து, குற்றவாளிகள் என மெய்ப்பிக்கப்படுபவர்களைத் தண்டித்தே தீரும் என்று கருதியும் அந்த ஏடுகளை நடத்துவோர் நெஞ்சம் சாந்தப்படுவதில்லை!

எந்நேரமும் கொதி நிலையிலேயே தம் இதயங்களை வைத்துக்கொண்டு கசப்பைக் கக்கும் இந்த ஏட்டாளர்கள் ஏதும் அறியாதவர்களும் அல்லர்! எல்லாம் தெரிந்தவர்கள்! ஏன் இப்படிச் செய்கிறார்கள்?

அங்கேதான் இருக்கிறது சூட்சுமம்! அண்ணாவை மனப்பூர்வமாக அவை என்றும் ஆதரித்ததில்லை என்றாலும், மக்கள் சக்தியைத் தன்பால் திரட்டி, மாநில அரசையும் அவர் கைப்பற்றியபின் இந்த ஏடுகள் நிலையில் சிறிது மாற்றம் ஏற்பட்டது. இனித் தங்கள் 'விஷமம்' பலிக்காது எனப் புரிந்துகொண்டு சில நேரங்களில் ஒத்துப்போகவும் செய்தன!

ஆச்சாரியார் ஆதரவும் கழகத்தைவிட்டால் இந்தியை எதிர்க்க வேறு நாதியில்லை என்ற உணர்வும், கழகம் ஆட்சிக் கட்டிலில் இருந்ததும் அந்த நேரத்தில் அவைகளுக்குக் கொஞ்சம் நிதான புத்தியைத் தந்திருக்க வேண்டும்!

ஆனால், ஆட்சிக் கவிழ்ப்பும், அதனைச் செய்த அம்மையார் திராவிட இனத்தையும் அதன் பண்பாட்டையும் தடந் தெரியாமல் அழிக்க முனைந்ததும் மீண்டும் அவர்களை ஊக்கிவிட்டது! வேதாளம் முருங்கை மரம் ஏறிக்கொண்டது என்பார்களே விக்ரமாதித்தன் கதையில், அதுபோல நம் பூசுரர்களும் வரிந்துகட்ட ஆரம்பித்து விட்டனர், சூத்ராளை 'துவம்சம்' செய்ய வேண்டும் என்ற நப்பாசையுடன்! இன்றைக்கு அந்த யுத்தம்தான் தமிழகத்தில் அவர்களால் தொடுக்கப்பட்டு உள்ளது! நாம் அமைதியாக இருப்பதைப் பலகீனம் என்று கருதிக்கொண்டு கடுமையாக நம்மைச் சாடுகிறார்கள்! நாராசமான வார்த்தைகளால் நாள்தோறும் அர்ச்சிக்கிறார்கள்!

பிப்ரவரி 14ஆம் தேதி 'மெயில்' ஏடு தன் தலையங்கத்தில் கழகம் கர்நாடகத்தில் ஜனதாவையும், ஆந்திராவில் ரெட்டி காங்கிரசையும் ஆதரிப்பதைச் சந்தர்ப்பவாதம் எனக் கண்டித் துள்ளது! அதை இங்கு விவாதிப்பது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல! தேர்தல் கூட்டுகள் அனைத்தும் ஒரு வகையில் சந்தர்ப்பத்தால் நிகழும் கூட்டுகள்தாம், கொள்கையை விட்டுவிட்டு எந்தக் கட்சியும் கூட்டிலோ உடன்பாட்டிலோ இறங்குவதில்லை! பல கட்சிகளைக் கொண்ட நம் நாட்டில் ஒரு பொது எதிரியை வீழ்த்த இதைவிட்டால் வேறு வழியுமில்லை!

1967இல் சுதந்திராக் கட்சி தி.மு.கவுடன் உடன்பாடு கொண்டதே, இந்த இரு கட்சிகளுக்கும் கொள்கையில் ஏது உடன்பாடு? காங்கிரசின் ஆதிக்கத்தை வீழ்த்துவது அன்றைய உடனடித் தேவையாக இரு கட்சிகளுக்கும் தோன்றியதால் தேர்தலில் இணைந்து நின்றன. இன்றைக்கும் இந்திராவின் ஆதிக்கத்தை வீழ்த்த நம்மால் ஆன பங்கைச் செலுத்த வேண்டும் என்ற ஜனநாயக நோக்கமே கழகத்தின் முடிவுக்குக் காரணம் என்பதை உணருவது கடினமல்ல!

இரு மாநிலங்களிலும் ஒரு கட்சியை ஆதரிக்கக்கூடாதா என்று கேட்கப்படலாம். ஆனால், யார் யாருக்கு எங்கெங்கு வெற்றி வாய்ப்பு அதிகம் இருப்பதாகக் கருதப்படுகிறதோ அவர் களுக்குத் துணை நிற்பதுதான் கழகத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வல்லது என்பதை நிலைநாட்ட அதிக ஆராய்ச்சி தேவையில்லை!

தேர்தல் முடிவு கழகத்தின் மதிப்பீட்டுக்கு மாறாகக்கூட அமையலாம். அதனால் அன்று எடுத்த முடிவு தவறு என்று ஆகிவிடாது! அன்றிருந்த சூழ்நிலையில் அந்தரங்க சுத்தியோடு எடுக்கப்பட்ட முடிவு இது!

இந்திய நாட்டில் எல்லாக் கட்சிகளும் இவ்வாறுதான் செயல்படவேண்டியுள்ளது என்பதை மறந்துவிட்டு, கழகத்தின் மீது சேறுவீசக் கிடைத்த வாய்ப்பை நழுவவிடாமல் 'மெயில்' தனது தலையங்கத்தை அசிங்கப்படுத்தி உள்ளது!

போகட்டும்; ஏற்கனவே குறித்ததுபோல் தலையங்கத்தை விமர்சிப்பது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல! விமர்சிக்கிற அளவுக்கு அதில் சத்துமில்லை!

உடன்பாடுகளைப் பேச வந்த தலையங்கம் கழகத்தைக் குறிப்பிடும் இடங்களில் எல்லாம் மறவாமல் disgraced, discredited போன்ற அடைமொழியைத் தந்துதான் அந்தக் கட்சியை குறிப்பிட வேண்டுமா?

52 லட்சம் வாக்குகளைப் பிறகட்சிகளின் துணையோடு பெற்று ஒரு கட்சி கோலோச்சுகிற நாட்டில், பத்து லட்சம்

வாக்குகள் மட்டுமே குறைவாக, அதுவும் தனித்து நின்று 42 லட்சம் வாக்காளர்களின் ஆதரவைப் பெற்று பிரதான எதிர்க்கட்சியாக வீற்றிருக்கும் ஒரு கட்சி மக்களால் அவமானப் படுத்தப்பட்ட ஓர் இயக்கமா? தூக்கியெறியப்பட்ட அல்லது மக்கள் மனதில் மரியாதை இழந்த என்ற அடைமொழி இதற்குப் பொருந்துமா?

தமது வயிற்றெரிச்சலை இவ்வளவு நிதானமின்றிக் கொட்டித் தீர்க்கும் அளவுக்கு ஆத்திரம் அவர்கள் கண்களை மறைக்கிறது! 'அழிந்தது' என நினைத்தோம், இன்னும் 'உலவுகிறதே' இந்த இயக்கம் என்ற அங்கலாய்ப்புதான் தலையங்கம் தீட்டியவரின் பேனாவை இயக்கியுள்ளது. இல்லையென்றால் பிரச்னையை அலசுவதோடு விட்டு இருக்கலாமே? 'மேட்டுக்குடியினர் ஆதிக்கம்' மெத்த பரபரப்போடு மீண்டும் தலைதூக்க முயலுகிறது என்பது இந்த ஏடுகளின் போக்கில் நிதர்சனமாகத் தெரிகிறது!

இல்லையென்றால் –

1. காரணமில்லாமல் சர்க்காரியாவைக் கட்டிக்கொண்டு அழுவார்களா?
2. நாட்டுக்குத் தெரிய வேண்டிய 'ஷா' கமிசன் நடவடிக்கை களைப் போதிய அளவுக்குப் போடாமல் இருட்டடிப்பு செய்வார்களா?
3. அண்ணாவின் கோட்பாடுகளைத் தகர்க்கக் கழகத்தை அர்த்தமின்றி வசைபாடும் அதே கூட்டம், அண்ணா வழி நடப்பதாகச் சொல்லும் எம்.ஜி.ஆரின் குறைபாடுகளை கூடப் பாராட்டிக் கொண்டு இருக்கிறது.

மூன்றாவதாகச் சுட்டப்பட்ட செய்தி சற்று விரிவாக விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று.

வீடணனை வைத்துத்தான் ராவணன் அழிக்கப்பட்டான். பிரகலாதனை வைத்துத்தான் இரணியன் கொல்லப்பட்டான். இந்த நெறி வழி என்றும் வெற்றிநடைபோட்டது சமுதாய ஆதிக்க வர்க்கம் என்பதை நாம் நன்றாக அறிவோம்!

அதைப் பின்பற்றித்தான் இன்றும் களியாட்டம் நடக்கிறது. அண்ணாவின் கொள்கைகள் இன்றைய ஆளும் வர்க்கத்தால் உரம் பெற்றுள்ளதா என்ற அச்சம் கொஞ்சமேனும் இருக்கு மானால் இந்த அளவுக்கு எம்.ஜி.ஆரைத் துதிக்க இந்த ஏடுகள் துணியுமா?

தமிழகத்தில் இதற்கு முன் எந்த ஆட்சியும் இன்றைய அ.தி.மு.க. ஆட்சி போற்றப்படுவதுபோல் தொடர்ந்து நமது (?) ஆங்கில

ஏடுகளால் துதிக்கப்பட்டதில்லை! கொள்கைக் குழப்பங்கள் ஒப்பற்ற கொள்கை விளக்கங்களாக சித்தரிக்கப்படுகின்றன. பேசியவருக்கே புரியாத செய்திகள், ஏதோ பெரிய புதிருக்கான விடை கண்டுவிட்டது போன்ற பாணியில் வெளியிடப் படுகின்றன!

கண்டிக்கப்பட வேண்டிய கருத்துக்கள் கட்டுப்பாட்டோடு மறைக்கப் படுகின்றன! காரணமற்ற உளறல்கள் தத்துவ விளக்கங்கள் என்பதாக கரைகட்டித் தரப்படுகின்றன இந்த ஏடுகளால்!

தமிழகத்தைப் பொறுத்தவரை முன்னேற்றக் கழகத்தை அழித்துவிட்டால், செத்துக் கொண்டிருக்கும் தம் பழையக் கருத்துகளுக்குப் புது தெம்பு கிடைத்துவிடும் என இந்த ஏடுகள் நினைப்பது பகற்கனவு. மாறாக, இந்தப் போக்கு மாறாவிட்டால், நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கும் இன உணர்வு வெடித்துக் கிளம்ப வழி யமைத்ததாகி விடும் என்பதை அந்த ஏட்டாளர்கள் உணர்வது நல்லது!

இது மிரட்டல் அல்ல! காலத்தையும் இடத்தையும் கொஞ்சம் கூடக் கருத்தில் கொள்ளாமல் கண்மூடித்தனமாக 'இயக்கம்' என்கிற ஒரே காரணத்திற்காகக் கழகத்தினை வசைபாடிவரும் ஏட்டாளர்களுக்கு நாம் வேதனையோடு தருகின்ற விளக்கம்!

தெளிவு இருப்பின் திருந்தட்டும்! இல்லையென்றால் ஏற்படும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பு!

நல்ல நல்ல செய்திகளைத் தரவேண்டிய ஏடுகள், நாள்தோறும் இனப்பகை ஊட்டும் நச்சினைத் தூவுதல் நாட்டுக்கு நல்லதல்ல; ஏட்டாளர்களுக்கு அது ஏற்றதல்ல!

'பத்திரிகா தர்மம்' என்ற ஒன்று இருப்பது உண்மையானால் இதை அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

– **நம்நாடு**

05.03.1978

சந்திக்கலம்பகம்

- மிளைக்கந்தன்

[இரண்டு நிருபர்களின் உரையாடல்]

(3–2–78) அண்ணா நினைவுநாள் அன்று; வள்ளுவர் கோட்டத்திற்கு எதிரில் அவர் சிலைத் திறப்பு விழா இனிதே நிறைவேறிய பிறகு இரண்டு நிருபர்கள் வீட்டிற்குத் திரும்பும் – போது இந்த உரையாடல் காதில் விழுந்தது!

நிருபர் 1: என்ன ஓய், இந்தக் கருணாநிதி என்னதான் சமாதானம் சொன்னாலும் நம்ம எம்.ஜி.ஆரிடம் பயந்துட்டார்!

நிருபர் 2: நீங்க எதைச் சொல்றேள்?

நிருபர் 1: என்னங்காணும்; தெரியாத மாதிரி கேக்கறேள்! இப்ப பேசினாளே அதைத்தான். ஏதோ ரத்த ஆறு ஓடியிருக்கும் அப்படி இப்படீன்னு பேத்தினாளே, அதைத்தான் சொல்றேன்! இவா பயந்துண்டு பயத்தை மாத்தினதும் இல்லாமே, இப்போ ஜனங்க கிட்டே சாமர்த்தியமா சப்பைக் கட்டு கட்றாள்!

நிருபர் 2: எனக்கு அப்படித் தோணலை! நாம தான் கார்த்தாலே பார்த்தோமே அழுது வடிஞ்சுதே எம்.ஜி.ஆர். கூட்டம்! இவா கூட்டம் ஒரே ஜன வெள்ளமான்னா இருக்கு! எம்.ஜி.ஆர்.னோ அதைக் கண்டு பயப்படணும்? ஏதோ காரணத்தோடதான் நேரத்தை மாத்தி

இருக்கார். கலைஞர் சொல்றதிலே உண்மை இருக்கும்னுதான் தோணுறது.

நிருபர் 1: அப்படீன்னா ஏங்காணும் டயத்தை மாத்திக்கணும்? எம்.ஜி.ஆர்.தான் தெளிவா அறிக்கை விட்டிருந்தாரே – கார்த்தாலே 7 மணிக்கு அவா போகட்டும்; நாங்க 9 மணிக்குப் போறோம்னு! இவா கூட்டத்தை அப்பவே காட்டி இருந்தா அவாளுக்குத்தானே 'ஷேமா' போயிட்டு இருக்கும்? இவா ஏன் அதைச் செய்யலே?

நிருபர் 2: எப்படி சார் முடியும்? நமக்குத் தெரியாதா இதெல்லாம்! ஏழு மணிக்குன்னா சரியாக கிளம்பிட முடியுமோ? கொஞ்சம் முன்னே பின்னே கிளம்பி இவா சமாதிக்குப் போயிட்டு வர்ரதுக்குள்ளே, அவாளும் கிளம்பி வந்துட்டானா என்ன ஆகும்? அல்லது வேணுமின்னே இவா கிளம்பினதும் அவாளும் பின்னாலேயே போறான்னு வச்சுக்குங்க – வீண் வம்புதானே? புனிதமான சமாதியண்டை போய் ஒத்தருக்கொருத்தர் மோதிண்டா நன்னாவா இருக்கும்?

நிருபர் 1: பேஷ், கருணாநிதிக்கு நன்னா வக்காலத்து வாங்கறேளே! எம்.ஜி.ஆருக்கு மட்டும் இதெல்லாம் தெரியாதா? மோத வுட்டுடுவாரா?

நிருபர் 2: ஏன் மாட்டார்! நாமதான் எத்தனையோ விவகாரத்திலே பார்த்துட்டோமே! ஆட்சிக்கு வந்ததிலே இருந்து தி.மு.க.வோட மோதறதுதானே அவருக்கு வேலை? எனக்கென்னமோ அவர் ரொம்பக் கண்ணியக் குறைவா நடக்கிறதாத்தான் தோணுது!

நிருபர் 1: (ஆத்திரத்தோடு) எங்கே ஒண்ணு சொல்லுமே பார்ப்போம்!

நிருபர் 2: ஒண்ணு என்ன; ஓராயிரம் சொல்லலாம்! கறுப்புக் கொடி காட்டினத்துக்கு கொலை முயற்சி குற்றம் சாட்டி 307 செக்ஷன் போட்டாரே, இந்த அநியாயத்தை எங்காவது கண்டது உண்டா ஓய்?

நிருபர் 1: அது கொஞ்சம் அதிகந்தான்! ஆனா அதுக்கும் காரணம் இல்லாமே இல்லை! இவா போராட்டத்தை முளையிலேயே கிள்ளாமெ வுட்டுட்டா இதே பழக்கமாயிடும்னு அப்படிச் செஞ்சார்! இதெல்லாம் ராஜ தந்திரம்!

நிருபர் 2: இவர் என்ன ராஜாவா, நெனைச்சா ஒருத்தர் தலையைச் சீவறதுக்கு? இது ஜனநாயகம்!

நிருபர் 1: ரொம்ப ஜனநாயகத்தைக் கண்டுட்டான்! மொதல்லே நான் கேட்பதுக்கு பதில் சொல்! என்னமோ பெரிசா, தமிழன் ரத்தம் சிந்தி இருக்கும் – அதைத் தடுக்கத்தான் நான் பணிஞ்சு கொடுத்துட்டேன் – டயத்தை மாத்திக் கிட்டேன் – அப்படிங்கறதெல்லாம் சுத்தப் பொய்! 'நம்ம ஆட்சியிலே ஏதேனும் கலவரம் நடந்துட்டா நமக்குத்தானே கெட்டபேரு' என்பது கூடவா ஒரு முதலமைச்சருக்குத் தெரியாமெ போயிடும்?

நிருபர் 2: இங்கேதான் நீ அவரே சரியாப் புரிஞ்சுக்கலே! கலைஞரை ஒழிச்சாத்தான் தனக்கு நிம்மதின்னுதான் அவர் எப்பவும் செயல்படறார்! அதுக்காக எத்தனை தலை உருண்டாலும் அவர் கவலைப்பட மாட்டார்! இல்லாட்டா சென்னையிலே – இந்திரா வந்தப்போ... தடையை மீறி கூட்டத்தைச் சேர வுட்டுட்டு அப்புறம் சுட்டிருப்பாரோ?

நிருபர் 1: நீர் திரும்பத் திரும்ப அங்கேயே ஓடறீர்! இவாளுக்கு மட்டும் தமிழங்க மேலே அக்கறை இருக்காதா? தமிழன் ரத்தம் கொட்டட்டும்னா ஒரு மனுசன் நெனைப்பான்? அவர் மலையாளி – அதனால் தமிழ் நாட்டுக்காரன் சாகறதைப் பத்திக் கவலைப்பட மாட்டார்னு, தன் பேச்சு சாதுர்யத்தாலே கருணாநிதி எல்லாத்தையும் 'ட்விஸ்ட்' பண்ணிவுடறார்! இன்னிக்கு அவர் பேச்சைக் கேட்டப்புறம் நீயும் அதில் மயங்கிட்டே!

நிருபர் 2: சாலமன் நீதி வழங்கிய கதை நோக்குத் தெரியுமோ?

நிருபர் 1: எத்தனையோ இருக்கு! எதைச் சொல்றே?

நிருபர் 2: ரெண்டு பொம்மனாட்டிகள் ஒரு குழந்தையைத் தூக்கிண்டு அவன் சபைக்குப் போனா. ரெண்டு பேரும் அது தன்னுதுதான்னு சொந்தம் கொண்டாடினா! மன்னன் சாலமன் அந்த வழக்கை எப்படித் தீர்த்தான் தெரியுமா?

நிருபர் 1: நன்னாத் தெரியும்! அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?

நிருபர் 2: நெறைய இருக்கு! அரசன் வாளை உருவி குழந்தையைக் கூறு போட்டுக் கொடுக்கிறதாச் சொன்னப்போ, ஒருத்தி சரி அப்படியே செய்யுங்கோன்னு ஒத்துண் டுட்டா! ஏன்னா அவ குழந்தைக்குத் தாயில்லே! இன்னொருத்தியோ பதறிப் போய் எனக்குக் குழந்தையே வேண்டாம் – அவளுக்கே கொடுத்துடுன்னு சொல்லிட்டா! ஏன்?

நிருபர் 1: இதென்ன கேள்வி? தாய்ப் பாசத்தாலே குழந்தை தப்பினா போதும்னு நெனைச்சா!

நிருபர் 2: அது மாதிரிதான் இதுவும்! இனப் பாசத்தாலே நம்மவா சாக வேண்டாம்னு கலைஞர் நெனைச்சார்! அதனாலே யார் என்ன சொன்னாலும் பரவா யில்லைன்னு நேரத்தை மாத்திட்டார்! வழக்கத்திற்கு மாறாக எம்.ஜி.ஆர். தலைமையிலே அந்தக் கட்சி அன்னிக்கு சென்னையிலே ஊர்வலம் விட்டதும், இவர் என்னிக்கும் இருக்கிற மௌனவிரதத்தைக் கலைச்சுட்டு தி.மு.க.வுக்கு போட்டியாக கூட்டம் நடத்தினதும் ஏதோ தப்பான உள்நோக்கம் இல்லாமலா நடந்திருக்கும்? அதைக் கலைஞர் சாமார்த்தியமாய்ப் புரிஞ்சுகிட்டு அசம்பாவிதம் எதுவும் நடக்காம தடுத்துவிட்டார்! இனப் பாசம்தானே ஓய், இதற்குக் காரணம்?

நிருபர் 1: எப்ப இருந்து ஓய், இந்தப் பேத்தல்! உமக்கும் இந்த இனப்பாசம் பிடிச்சுட்டுதோ? இனி நீர் உருப்பட்ட மாதிரிதான்.

நிருபர் 2: என்ன தப்பு கண்டீர்? மனித தர்மத்தைத்தான் பேசறேன்; உலகமே ஒவ்வோர் இனமாத்தான் கூடி வாழுது. அவனவன் இனத்து மேலே பற்று வைக்காமே எவன் இருக்கான்? நாமதான் இருக்கோம், வயிற்றைக் கழுவினா போதும்னு நெனைச்சுண்டு!

நிருபர் 1: லோகத்திலே எல்லா மனுஷாளும் ஒன்னுதான்!

நிருபர் 2: நீ ரொம்பக் கண்டுட்டே! அதெல்லாம் பேசறதுக்கு நன்னா இருக்கும். நடைமுறைக்கு ஒத்து வராது! அதில் ஒண்ணும்னல்லை – அவாளவா இனத்தைப் பேணிக் காத்தா லோகம் தன்னாலே நல்லா இருந்துட்டுப் போவுது! பற்று வைக்கிறதிலே தப்பில்லை. மற்ற இனத்தான் மேலே பகை வெச்சி அழிக்க நினைக்கறதுதான் தப்பு!

நிருபர் 1: போதுண்டா உன் 'லக்சர்!' தமிழினத்தைக் காப்பாத்த நீயே கிளம்பிடுவ போல இருக்கே?

நிருபர் 2: கிளம்பினாத்தான் என்னவாம்? இந்தியாவிலே தமிழங்க கிட்டேதான் இனப்பற்று ரொம்பக் கொறைச்சலா இருக்கு; நாமும் பொறந்ததிலே இருந்து தமிழ்தான் பேசறோம். இந்திரா காந்தியையே எடுத்துக்

கியேன் – காஷ்மீரத்தான் எவனும் கெடைக்க லேனாத்தான் நம்மவாளுக்கு வேலை கொடுத்தா.

நிருபர் 1: அவதான் தொலைஞ்சுட்டாளே?

நிருபர் 2: நம்ம குடியரசுத் தலைவர் ரெட்டி இருக்காரே அவர் மட்டும் என்ன செஞ்சார்? புயல் சேதத்தைப் பார்க்க வந்தப்போ, ஆந்திராவிலே எறங்கிப் பார்த்தார். தமிழ்நாட்டிலே விமானத்திலேயே சுத்திட்டுப் போயிட்டார்!

நிருபர் 1: அடப்பாவி, அவர் மேலேயே கையை வச்சுட்டியே!

நிருபர் 2: நான் ஒண்ணும் தப்பாச் சொல்லலே, அவர் பொறந்த மண்; அவர் பேசற பாஷை, அந்த மக்கள் செத்தப்போ அவருக்கு இரக்கம் அதிகமாத்தான் இருக்கும்! நமக்கு இல்லாம இருக்கிறதுதான் தப்பு!

நிருபர் 1: சரி ஆளைவுடு! இனியும் பேசிண்டிருந்தா நீ என்னையே மாத்திடுவே! நீ கருணாநிதி ஆள்தான்!

நிருபர் 2: நான் யாரோட ஆளும் இல்லை! நியாயத்தைச் சொன்னேன். எதையும் நடுநிலையா விமர்சிக்கிறது என் தொழில்! "குட் நைட்!"

– நம்நாடு

19.02.1978

வெளிநாட்டு பத்திரிகைகள் இந்தியாவிற்குள் நுழைய அனுமதி அளிப்பது நாட்டிற்கு நன்மையா?

– ஏ.கே. வில்வம்

"மீடியா" (Media) என்ற சொல்லுக்கு "செய்தி சாதனம்" என்று பொருள் கூறலாமா? ஓரளவுக்கு அது பொருத்தமாக இருக்கும். பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகிய அனைத்துமே ... மக்களை ஒரு கருத்து மற்றும் செய்தி சென்றடைய பயன்படுத்தப்படும் ஒரு சாதனமே "மீடியா" என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப் படுகிறது.

வெளிநாட்டு மீடியா என்று குறிப்பிடப்படும்போது அதில் தொலைக்காட்சிகளும் அடங்கும். ஸ்டார் டிவி., ஜீ டிவி., பி.பி.சி., சி.என்.என். என்று பல்வேறு வெளிநாட்டு தொலைக்காட்சி சாதனங்களும் ஏற்கனவே இங்கு கடை விரிக்க அனுமதிக்கப்பட்டு விட்டன. அதன் காரணமாக இந்திய தொலைக்காட்சி (தூர்தர்ஷன்) ஏற்கனவே பெரும் பாதிப்பிற்குள்ளாகி உள்ளது.

அப்போதே இதற்கு ஒரு அணை எழுப்பப் பட்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறியதன் விளைவாகவே, இப்போது – ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியில் மனிதனையே கடிக்க வந்த கதைபோல– ஒவ்வொரு துறையையும் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்த புதிய பொருளாதாரக் கொள்கை... கடைசியில் பத்திரிகைகளை எதிர்த்துப் போர் தொடுக்கத் தொடங்கிவிட்டது.

மத்திய அரசில் ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சி – வழக்கம் போல இதிலும் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்து – கடைசியாக வெளிநாட்டு பத்திரிகைகளை இந்தியாவில் அனுமதிக்க மத்திய அரசு முடிவு செய்து விட்டது என்று அறிவிக்கப்பட்டு விட்டது. ஆகவே, வெளிநாட்டுப் பத்திரிகைகள் வருவது நிச்சயம்... எப்போது என்பது மட்டும்தான் இன்னமும் முடிவு செய்யப்படாமல் உள்ளது.

இதுபற்றி ஆராய ஒரு அமைச்சரவைத் துணைக்குழு அமைக்கப்பட்டது. அக்குழு வெளிநாட்டுப் பத்திரிகைகளை அனுமதிக்க ஒப்புதல் அளித்துவிட்டது என்று மத்திய அரசு அறிவித்தது. ஆனால் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு கிளம்பியது. மத்திய மனித வளத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங், முன்னால் மத்திய அமைச்சர் மாதவ்ராவ் சிந்தியா ஆகியோரும் எதிர்ப்பு அணியில் இருந்தனர். அதன் காரணமாக காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் சந்துலால் சந்துராகரும் வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு அனுமதி அளிப்பதை எதிர்த்து காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயே கருத்து தெரிவித்தார்.

ஆனால், ஓரிரு நாட்களிலே மத்திய அரசு தனது முடிவை – வெளிநாட்டு பத்திரிகைகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதை – அறிவித்துவிட்டது.

அரசு எடுத்த முடிவு சரியா? நாட்டிற்கு நன்மை பயக்குமா என்ற சர்ச்சை நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. அதில் இருதரப்புக் கருத்துக்களும் கூறப்பட்டு வருகின்றன. இருதரப்பு வாதங்களையும் முதலில் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 19வது பிரிவின் துணைப் பிரிவு 1(ஏ)ல் இந்தியர்கள் மட்டும் சுந்திரமான பத்திரிகைகள் நடத்த இந்திய அரசியலமைப்புச் சட்டம் உத்தரவாதமளிக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புகழ்பெற்ற முதலாவது திருத்தத்தில், "அமெரிக்க குடிமக்களுக்கு மட்டும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனையே பின்பற்றி இந்தியாவிலும் அரசியல் சட்டத்தை உருவாக்கிய அறிஞர்கள் இந்திய குடிமக்களுக்கு மட்டுமே பத்திரிகை சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

மத்திய அரசு வெளிநாட்டு பத்திரிகைகளை அனுமதித்தன் மூலம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்ட

உத்தரவாதத்தை மறுக்க முன்வந்துள்ளது. சட்டப்படியேகூட அது சரியானது அல்ல.

இன்றைக்கு எழுந்துள்ள இதே பிரச்சினை 1955ஆம் ஆண்டிலேயே ஒருமுறை எழுந்தது. அப்போது ஜவகர்லால் நேரு இந்திய நாட்டின் பிரதமராக இருந்தார். அவர் வெளிநாட்டு பத்திரிகைகளை அனுமதிக்க மறுத்துவிட்டார். அதுமட்டுமல்ல வெளிநாட்டுச் செய்திகள்கூட, வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் மூலம் நேரடியாக நாட்டிற்குள் வரக் கூடாது. இந்திய செய்தி நிறுவனங்கள் (அப்போது இருந்த நிறுவனம் பி.டி.ஐ.) மூலம், அவற்றுடன் செய்து கொள்ளும் கூட்டுகள் மூலமே வர வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால் இன்று நேருவின் மற்ற கொள்கைகளைப்போலவே வெளிநாட்டுப் பத்திரிகைகளை அனுமதிப்பதில்லை என்ற முடிவும் காற்றில் பறக்க விடப்பட்டுவிட்டது.

வெளிநாட்டுத் தொழிலதிபர்களை – அதாவது பன்னாட்டு நிறுவனங்களை – இந்தியாவிற்குள் நுழைய அனுமதிக்கப்பட்ட முடிவிற்கு – புதிய பொருளாதாரக் கொள்கை, தாரளமயம், "காட்" ஒப்பந்தம் என்று – பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் உண்மையான காரணம் பேரம் பேசுவதற்கு, ஊழல் செய்வதற்கு அது ஒரு உன்னதமான வழி என்று ஆட்சியாளர்கள் கருதுவதுதான்! தாராள மயம் என்று கருத்து முளைவிட்ட நேரத்திலேயே அம்பலமான அதை வைத்து நடத்தப்பட்ட – பல்லாயிரம் கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்ட – பங்குச் சந்தை ஊழல் அதற்கு ஒரு உதாரணமாகத் திகழ்கிறது.

ஆட்சியாளர்களின் குறுகிய உணர்வுகளின் காரணமாக உலகளாவிய தாராளமயம் என்ற ஆயுதம் தேசத்தின் ஆணிவேரை அறுப்பதற்காக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை. இது வெளிநாட்டுப் பத்திரிகைகளை அனுமதிப்பதற்கும் பொருந்தும்.

வெளிநாட்டுப் பத்திரிகைகளை நாட்டில் அனுமதிப்பது எந்த வகையில் நாட்டைப் பாதிக்கும்? அதை இந்திய பத்திரிகை அதிபர்களும், பத்திரிகையாளர்களும் ஆதரிக்கிறார்களா? எதிர்க்கின்றார்களா? என்பது அடுத்து எழும் கேள்வி!

வெளிநாட்டுப் பத்திரிகைகள் இந்தியாவில் அனுமதிக்கப்படும் போது அதை எதிர்த்து இந்திய பத்திரிகைகள் போட்டி போட முடியாது. காலப் போக்கில் இந்திய பத்திரிகை உலகம் அழிந்துவிடும்! தேசத்தின் சொத்து வெளிநாட்டுக்குப் போய் விடும் என்பது ஒரு வாதம்.

வெளிநாட்டுப் பத்திரிகைகள் வந்தால் நாட்டில் – நல்ல போட்டி உருவாகும். இந்திய ஏடுகளும் நவீன உத்திகளைக் கையாண்டு அவற்றுடன் போட்டி போட இயலும் என்பது இன்னொரு வாதம்.

இதை ஆதரிப்பதா? எதிர்ப்பதா? என்பதிலும் பத்திரிகை யாளர்களும், பத்திரிகை அதிபர்களும் இருவிதமான கருத்து களைக் கொண்டுள்ளனர். பெரும்பான்மையானோரின் கருத்து, தேசத்திற்கும், கலாச்சாரத்திற்கும் வெளிநாட்டுப் பத்திரிகைகளை அனுமதிப்பது ஆபத்தானது என்பதுதான்!

பத்திரிகை அதிபர்களைப் பொறுத்தவரை வெளிநாட்டு பத்திரிகைகள் நுழைந்தால் ஏற்படக் கூடிய விளைவுகள்:

1. செயற்கைகோள் போன்ற சாதனங்கள், பல்வேறு நாடுகளில் விற்பனை என்பதால் கூடுதல் வாய்ப்புகள், வசதிகள், பன்னாட்டு நிறுவனங்களின் விளம்பரங்கள் இவற்றின் மூலம் சோமாலியாவில் இந்திய வீரர்கள் ஆற்றும் பணி, அண்டை நாடான ஆப்கானிஸ் தானின் அவலநிலை போன்றவற்றை சிறப்பாகப் படம் பிடித்து இந்திய சந்தையை அவை கைப்பற்றக் கூடும்.

2. இந்தியாவின் பெரும் தொழிலதிபர்களிடமும் அவர்கள் விளம்பரம் பெற முயற்சிக்கக் கூடும் என்பதால், இந்திய பத்திரிகைத் துறைக்கு கிடைத்து வந்த விளம்பரம் மேலும் பாதிக்கப்படக் கூடும்.

3. ஏற்கனவே நியூஸ் பிரிண்ட் தட்டுப்பாடு நிலவி வரும் இந்தியாவில், சிறந்த காகிதங்களைப் பயன்படுத்தும் வெளிநாட்டுப் பத்திரிகைகளை விஞ்ச இந்திய பத்திரிகைகளும் முயற்சி செய்யும்போது அவை நலிவடைந்துவிடும்.

சரி, இவற்றால் பத்திரிகை அதிபர்கள் எதிர்க்கிறார்கள். பத்திரிகையாளர்கள் ஏன் எதிர்க்கிறார்கள்?

வெளிநாட்டுப் பத்திரிகைகள் அனுமதிக்கப்படுவதன் மூலம் இந்திய பத்திரிகையாளர்களின் சம்பள விகிதங்கள் உயரும். இருந்தும் ஏன் அவர்கள் எதிர்க்க வேண்டும்? சம்பளம் உயர்ந்த போதிலும் அவர்கள் தொழிலை அது எந்திர நிலைக்கு மாற்றிவிடும்.

இந்திய நலனை வெளிநாட்டுப் பத்திரிகைகள் பாதுகாக்காது. இதன் காரணமாக பத்திரிகையாளர்களும் இதை எதிர்க்கின்றனர்.

பொதுவாக வெளிநாட்டுப் பத்திரிகைகள் வருவதை ஆதரிப்பவர்கள் கூறும் கருத்துக்கள் இவை:

1. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆழமான இந்திய கலாச்சாரத்தை வெளிநாட்டுப் பத்திரிகைகள் அவ்வளவு எளிதாக மாற்றிவிட முடியாது.

2. இந்திய பத்திரிகை உலகமும், பத்திரிகையாளர்களும் வெளிநாட்டினருடன் போட்டி போடும் அளவுக்கு திறமை மிகுந்தவர்கள்.

3. ஏற்கனவே ஜீ டி.வி., ஸ்டார் டி.வி. போன்றவற்றை அனுமதித்து விட்டோம். பத்திரிகைகளுக்கு மட்டும் ஏன் தடைபோட வேண்டும்?

இவை ஆதரிப்போரின் வாதம்.

எதிர்ப்போரின் கருத்துக்கள் இவை:

* சிங்கப்பூர் ஒரு சிறிய நாடு. இங்கு வேறு எந்த நாட்டின் பத்திரிகையும், தொலைக்காட்சியும் அனுமதிக்கப்படுவதில்லை. எனவே இந்தியாவால் அது முடியாமல் போகுமா?

* சில இந்திய ஏடுகள் வெளிநாடுகளில் நிருபர்கள் போன்ற வசதிகளுடன் வெளிநாட்டுப் பத்திரிகைகளுடன் போட்டியிடும் வசதிகளைப் பெற்றுள்ளன. எனவே அவற்றால் வெளிநாட்டு ஏடுகளுடன் போட்டியிட முடியும். இருந்தபோதிலும் அந்த நாடுகளில் எல்லா இந்திய ஏடுகளின் விற்பனை அமோகமாக இல்லை. ஆனால், "டைம்ஸ்" (The Times) போன்ற இங்கிலாந்தின் புகழ்மிக்க ஏடுகளைக்கூட தரமோ, பாரம்பரியமோ, பொறுப்புள்ள பத்திரிகை உணர்வோ இல்லாமலேயே ரூபர்ட் முர்டாக் (Ropert Murdoch) போன்ற பன்னாட்டு பத்திரிகை அதிபர்கள் திணற அடித்து, வீழ்ச்சியடையச் செய்துள்ளனர். அதேநிலை இந்திய ஏடுகளுக்கு ஏற்படாது என்பது என்ன நிச்சயம்?

* "காட்" (GATT) ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையின்போது ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற வளர்ச்சி பெற்ற – அதுவும் கூட்டாளிகளான – மேலை நாடுகள்கூட அமெரிக்காவின் கேட்கும்–பார்க்கும் செய்தித் தொடர்புகளை (தொலைக்காட்சி போன்றவற்றை) ஏற்க முடியாது என்று வாதிட்டதை இந்திய ஆட்சியாளர்கள் தங்கள் சுயநலத்திற்காக எப்படி மறந்து விட்டார்கள் என்பது வியப்பளிக்கிறது.

* கனடாவுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

ஆனால் அமெரிக்காவின் ஆலிவுட் படங்களை தடையே இல்லாமல் அப்படியே ஏற்றுக் கொள்ள கனடா மறுத்துவிட்டது என்பதை மறந்துவிடக் கூடாது.

* சில ஆயிரம் பிரதிகள் தான் வெளிநாட்டு ஏடுகள் விற்பனையாகும். அவை இலட்சக்கணக்கில் விற்கும் இந்தியாவின் ஏடுகளை பாதித்துவிடாது என்று கூறப்படுகிறது. சில "செக்ஸ்" ஏடுகள் பரபரப்பான விற்பனையை பெற்று விடுவதை நாம் காண்கிறோம். சில வெளிநாட்டு தொலைக்காட்சிகள் வரவேற்பைப் பெறுவதுகூட அதுபோன்ற செக்ஸ் காட்சிகளால்தான். அதேபோல வெளிநாட்டு ஏடுகளும், விற்பனையை பெருக்கிக் கொள்ள மாட்டா என்பது என்ன நிச்சயம்? ஒன்று அந்த அளவுக்கு இந்திய ஏடுகளும் தரம் தாழ்ந்து போக வேண்டும். அல்லது அழிந்துபோகும். இரண்டில் எது நிகழ்ந்தாலும் இழப்புதானே!

* இந்தியாவில் உள்ள ஆங்கில ஏடுகள் 5 சதவிகித வாசகர்களால்தான் படிக்கப்படுகின்றன. மற்றவர்கள் தேசிய மொழி பத்திரிகைகளையே படிக்கின்றனர். அவற்றிற்கு பாதிப்பு ஏற்படாது என்ற வாதத்தையும் ஏற்க இயலாது. ஏனெனில் வெளிநாட்டு பத்திரிகைத்துறை இந்தியாவிற்குள் நுழைந்துவிட்டால் அவர்களுடைய பார்வையை கவர்ந்திழுக்கக் கூடியது மாநில மொழிப் பத்திரிகைகள்தான். எனவே அவற்றிலும் அவை முதலீடு செய்ய தயங்கமாட்டா.

ஏற்கனவே ரஷியா, அமெரிக்கா போன்ற வெளிநாட்டு தூதரகங்களின் வெளியீடுகளான சோவியத் நாடு, வாய்ஸ் ஆப் அமெரிக்கா போன்றவை மாநில மொழிகளிலும் வெளியிடப் பட்டன என்பதை நினைவு கூற வேண்டும்.

* வெளிநாட்டு ஏடுகளால் இந்தியாவின் கலாச்சாரத்திற்கு பாதிப்பு வரும் என்பதை மறுக்கும் வெளிநாட்டு பத்திரிகைகளுக் கான அனுமதியை ஆதரிப்பவர்கள் தொன்மை வாய்ந்த நாகரிகமும் கலாச்சாரமும் சில ஆயிரம் பத்திரிகைகளால் பாதிக்கப்பட்டுவிட முடியாது என்று வாதிடுகின்றனர்.

ஆனால் அமெரிக்க பத்திரிகை உலகின் மனச்சாட்சி என்று குறிப்பிடப்படும் பென்.எச். பக்டி கியான் (BEN. H. BAGDI KAN) எழுதிய முன்னோடி நூலான "பத்திரிகை ஆதிக்கம்" (The Media Monopoly) என்ற நூலில், பெரும்பாலான நாளேடுகள், பத்திரிகைகள், ஒலிபரப்பு, ஒளிபரப்பு, புத்தகங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றை அமெரிக்காவில் நடத்தி வரும் சுமார் 50 நிறுவனங்களின் திரித்துக் கூறும், முட்டாள்தனமான, சிதைக்கும் எதிர் விளைவுகள் பற்றி எச்சரித்து, அது தொடர்பாக தனியாக செய்தி மற்றும் கலாச்சார அமைச்சகம் ஒன்று அமைக்கப்பட

வேண்டும் என்று தெரிவித்துள்ளார். அங்கேயே அந்த நிலை என்றால் நாம் இன்னும் அதிக எச்சரிக்கையாக இருக்க வேண்டாமா?

ஏற்கனவே இந்தியாவின் பூர்வீக நாகரிகமான – அரப்பா, மொகஞ்சதோராவில் கண்டறியப்பட்டது திராவிட நாகரிகம் தகவல்கள் திரித்துக் கூறப்பட்டதன் மூலம் இன்று சிலர் அதையே ஆரிய நாகரிகம் என்று பிரச்சாரம் செய்ய முயன்று வருவதை மறந்துவிடக்கூடாது.

இவ்வாறு இப்போது பலத்த சர்ச்சைகள் நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன. இவற்றின் மூலம் நரசிம்மராவ் அரசு உண்மையை உணர்ந்து, வெளிநாட்டு ஏடுகளை தடை செய்துவிடப் போவதில்லை. ஆனால் நரசிம்மராவ் அரசு திடீரென்று வெளிநாட்டுப் பத்திரிகைகளை அனுமதிக்க முடிவு செய்தது ஏன் என்தபற்கு ஒரு பிரபல – மூத்த பத்திரிகையாளர் ஆங்கில ஏடு ஒன்றில் கூறியுள்ள காரணம் அதிர்ச்சியையும், அதுதான் உண்மையாக இருக்குமோ என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அவர் கூறும் காரணம் இதுதான்:

பங்குச் சந்தை ஊழலுக்குப் பின் மத்திய அரசுக்கு எதிராக அனைத்து ஏடுகளும் ஒரே மூச்சில் தாக்குதல் நடத்தத் தொடங்கிவிட்டன. எவ்வளவு முயற்சித்தும் இந்திய ஏடுகளை தனக்குச் சாதகமாக திருப்ப நரசிம்மராவால் முடியவில்லை. எனவே தனக்கு சாதகமாக ஒரு பத்திரிகை உலகை "சிருஷ்டிக்க"வே வெளிநாட்டு ஏடுகளை அனுமதிக்க வாயிற் கதவுகளை அகலத் திறந்து வைத்திருக்கிறார் நரசிம்மராவ்.

ஒருவேளை இது உண்மையாக இருக்குமானால் நரசிம்மராவ் இந்த நாட்டிற்கு இதைவிட மோசமான தீமையை செய்திருக்க முடியாது. எனவே "டங்கல்" திட்டப்படி கையெழுத்தான "காட்" ஒப்பந்தத்தை எதிர்க்க .... பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரைவார்க்கும்தொழிலாளர் விரோத போக்கை எதிர்க்க .... ஏற்கனவே அணி திரண்டுள்ள இந்திய மக்கள் – குறிப்பாக முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் – இந்த வெளிநாட்டு பத்திரிகையின் ஆக்கிரமிப்பையும் எதிர்த்து போர்க்குரல் எழுப்ப முன்வரவேண்டும்

இல்லையேல், எதிர்கால சந்ததிகளின் வாழக்கையை பாதிக்க வழிவிட்ட நமது கையாலாகத்தனத்தை எண்ணி சரித்திரம் நாளைமுகம் சுழிக்கும். என்ன செய்யப் போகிறோம்?

– *முரசொலி*

ஞாயிறு மலர், *02.10.1994*

எரிச்சல் ஏன் 'இந்து'வுக்கு?

- இனநலம்

முதற் பக்கத்தில் காட்சியமைவு பெற்றிருக்கும் கட்டங்களில் இருப்பவை இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் அச்சிடப்படும் 'இந்து' ஆங்கில நாளிதழின் வெளியீட்டாளர் அறிவிப்புப் பொறிப்புகளாகும். (Imprints)

பெங்களூர், கோயம்புத்தூர், குர்காவன், அய்தராபாத், மதுரை, விசாகபட்டினம், சென்னை ஆகிய ஏழு நகரங்களில் அச்சிடப்பெறுகிறது இந்து இதழ். குர்காவன் நகரில் அச்சாகும் 'இந்து'வின் ஆசிரியக் குழாத்தின் அலுவலகம் தில்லியின் ஒரு பகுதியிலும், அதன் வணிகப் பணிமனை தில்லியின் வேறோர் இடத்திலும் இருக்கிறது.

ஒவ்வொன்றாக...

இனி வெளியீட்டாளர் அறிவிப்புப் பொறிப்பை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

பெங்களூர் 'இந்து'வின் அறிவிப்பில் அது அச்சிடப்பெறும் இடத்தை குறிக்கும் வகையில் "at 19 – 21, Infantry Road. Bangalore – 560 001" எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

கோவை 'இந்து'வில் அச்சிடும் இடம், at 19 – 20, A.T.T. Colony, LIC Road, Coimbatore – 641 018" என்று குறிக்கப்பெற்றிருக்கிறது.

குர்காவன் 'இந்து' அச்சாகும் இடம், "at 412–413, Udyog Vihar – IV, Dun-dahera, Gurgaon" எனக்

காட்டப்பட்டுள்ளது. அதன் ஆசிரியர் அலுவலகம், "No.5, INS Building, Rati Marg, New Delhi – 110 001" என்றும், அதன் வணிகப் பணிமனை, "No.210, 2nd Floor, Ansai Bhavan, 16, Kasturiba Gandhi Marg. New Delhi – 110 001" எனவும் சுட்டப்படுகின்றன..

அய்தராபாத் 'இந்து'வில், "at 6-3-879 - 879-B, Begumpet Public Road, Hyderabad - 500 016" என்று இருக்கிறது.

மதுரை 'இந்து'வில், "at 147–2A, Eighty Feet Road, K.K. Nagar, Madurai – 625 020" என்பதாகப் போடுகிறார்கள்.

விசாகப்பட்டினத்து 'இந்து'வில் "at 50-19-9. T.P.T. Colony, Seethammadhara, Visakhapatnam – 530 013" எனக் குறிக்கின்றனர்.

சென்னை பதிப்பில், "at the National Press, Kasturi Buildings, Madras – 600 002" என்று பொறிக்கின்றனர்.

உணர்வுகள் உடையோர்கட்கு இந்நேரம் உண்மை புலப்படத் தொடங்கியிருக்கும்.

பெங்களூரில், 'இந்து' அச்சாகும் இடம் "Infantry Road" என்றும்,

கோவையில் "LIC Road" பகுதியில் A.T.T. Colony'யில் அது அச்சாகிறதென்றும்;

குர்காவனில் Dun-dahera'வைச் சார்ந்த Udyaog Vihar' – இந்து அச்சிடப்பெறும் இடம் என்றும்,

அதன் ஆசிரிய அலுவலகம் Rati Marg –இல் அமைந்த INS Building–இல் உள்ளது என்றும்,

அய்தராபாத் 'இந்து' இதழ், Begumpet Public Road' – இல் அச்சியற்றப்படுகிறது என்றும்,

மதுரையில் 'இந்து' அச்சகம் K.K. Nagar (கவனிக்கவும்: கலைஞர் கருணாநிதி நகர் குறுக்கப்பட்டு வேற்றுருவாகிவிட்டது!) பகுதியின் Eighty Feet Road' – இல் இருக்கிறது என்றும்.

விசாகப்பட்டினத்தில் Seethamma dhara'வைச் சார்ந்த T.P.T. Colony'யில் 'இந்து' அச்சுப் போடப்படுகிறது என்றும் தெளிவாக அனைவரும் தெரிந்து கொள்ள முடிகிறது.

சூழ்ச்சி - சூது

ஆனால் சென்னையில் அது எங்கே அச்சியற்றப்படுகிற தென்றால், National Press'இல் இயற்றப்படுகிறதாம். அது எங்கே

இருக்கிறதென்றால் Kasturi Buildings'இல் இருக்கிறதாம். அது எங்கே உள்ளதென்றால் Madras – 600 002இல் உள்ளதாம்!

இப்போது சூழ்ச்சி புரிந்துவிட்டதல்லவா? சூது விளங்கி விட்டதல்லவா?

பிற ஊர்களில் அச்சிடப்பெறும் 'இந்து' இதழ்களின் 'இந்து' இதழ்களின் பொறிப்புகளிலெல்லாம் Road என்றும், 'Marg' என்றும், 'Dhara' என்றும், சாலைகள் சுட்டிக்காட்டப்படுகையில், சென்னைப் பதிப்பில் மட்டும் சாலை எதுவெனக் குறிக்கப் பெறாமை எதிர்பாராமல் நேர்ந்துவிட்ட ஒன்றா?

இல்லை, இல்லை, இல்லவே இல்லை!

'Mount Road' என்று போட்டுக் கொண்டிருந்தவர்கள்தாமே! அதை நீக்கி விட இதழ் உடைமையாளர்கள் முடிவு செய்தபோது, அந்த இடத்தில் 'Anna Salai' தானே இயல்பாக வந்து உட்கார வேண்டும்? ஏன் அது நடைபெறவில்லையா?...

நிகழ்ந்தது என்ன?

மறைந்த அண்ணா அவர்களின் பெயரை முன்னாள் Mount Road–க்குப் புதிதாக சூட்டி, "இனிமேல் அது அண்ணாசாலை' என்று அழைக்கப்படும்" என்பதாக மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றியது அய்யங்கார்கட்குத் தெரியாதா? (அவர்களே வேறு சூழ்நிலைகளில் 'அண்ணாசாலை' என்றும் பெயரைப் பயன்படுத்துகின்றனர்!)

தொடர்ந்து 'Mount Road' என்றே அவர்கள் போட்டுக்கொண்டு வந்தது கண்டு நம் இயக்கம் – நம் இயக்கம் என்றால் திராவிடர் கழகம் – கேள்வி எழுப்பியது. "இந்து இருக்கும் இடத்திற்குப் பெயர் இப்போது 'Mount Road' என்பதா? அண்ணா சாலை எனப் பெயர் மாற்றம் நடந்த பிறகும், பழைய பெயரையே பயன்படுத்துகிறீர்களே, உங்களுக்கு நாணயமே கிடையாதா? நாணம் என்ற உணர்வே உங்கட்கு வராதா? 'மவுண்ட் ரோட் மஹாவிஷ்ணு' எனும் நாமகரணமே நிலையாக இருக்க வேண்டும் என்பதே உங்கள் தணியாத வெறியா?" என்று.

எண்ணிப் பார்த்தனர். "சரி, 'மவுண்ட் ரோட்' தானே கிடையாது! எடுத்து விடுவோம் அதை" என முடிவு செய்து 'Mount Road' என்பதை அகற்றிவிட்டனர். ஆனால் Anna Salai' போடக்கூடாது என்றே தீர்மானித்து விட்டனர்!

இவ்வளவு கசப்பு - காழ்ப்பு - எரிச்சல் ஏன்?

என்னதான் இருந்தாலும் அண்ணா ஒரு சூத்திரர்; அதிலும் அவர் பகுத்தறிவாளர் – நாத்திகர். ஆச்சாரியாருடன் உறவாடி

உதவிகள் பெற்று ஆட்சிக் கட்டில் ஏறியவுடன், தம் அரசைப் பெரியாருக்குக் காணிக்கை ஆக்குவதாக அறிவித்தவர்! ஆச்சாரியார் வழிகாட்டலை ஏற்றுக் கொள்ளாதவர். பதவியேற்பின் போது 'கடவுள் பெயரால்' எனும் சொற்களைத் தாமும் கைவிட்டு, தம் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அவ்வாறே கடவுளைக் கைவிடுமாறு செய்தவர்; தரணியின் வரலாற்றிலேயே 'தமிழ்நாடு' எனுமொரு புதிய நாட்டைப் படைத்துக் காட்டியவர்; இந்து திருமணச் சட்டத்தைத் திருத்தி, சுயமரியாதை மணங்கள் யாவற்றையும் செல்லுபடியாக்கியவர்; பார்ப்பனியக் கொள்கைகளைக் கட்டோடு வெறுத்தவர்; இந்திய நடுவணரசு அமைச்சர் வி.கே.ஆர்.வி. ராவ் காஞ்சி வரதராசப் பெருமாள் கோயிலுக்குத் தம்மோடு வருமாறு அழைத்தபோது, முடியாதெனத் துணிவுடன் மறுத்தவர்.

அப்படிப்பட்டவர் பெயரினை அன்றாடம் பல இலட்சக் கணக்கான அச்சடிக்க 'அவாளி'ன் உள்ளம் ஒருப்படுமா? ஆகவேதான் அண்ணாவின் பெயரே அவர்களுக்கு ஒவ்வாமை ஆயிற்று! அதன் விளைவாக, Mount Road' என்பதை எடுத்து விட்டவர்கள் Anna Salai' என்பதை இணைத்துக் கொள்ளாது விட்டுவிட்டனர். அறமில்லை இது என அவர்களுக்குப் புரிந்தாலும் அதற்காக அலட்டிக் கொள்ளவில்லை. பொதுமக்கள் பொருட் படுத்தித் திறனாய்வு செய்வார்களே என்றெல்லாம் அவர்கள் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை!

ஈரோட்டுக் கண்ணாடி!

இதைக் கண்டுணர்ந்தோர் ஈரோட்டுக் கண்ணாடி யணிந்த திராவிட கழகத்துக்காரரே. இதுபற்றி ஆயிரக்கணக்கான பொதுக் கூட்டங்களின் வாயிலாக மக்களிடையே நம் இயக்கத்தினரால் விளக்கிக் கூறப்பட்டது. 'இவ்வளவு காழப்புணர்வு இருக்கலாமா? எனும் கேள்வி வைக்கப்பட்டது. 'இந்துவுக்கு (துக்ளக், இதயம் பேசுகிறது ஆகிய இதழ்களிலும் 'மவுண்ட் ரோடு' எனப் பொறிக்கப்பட்டதையும் கூடக் காட்டினோம்! 'இந்து' – நாளிதழ்ப் பணிமனைத் தொழிலாளர் கழகத் தலைவராக பல ஆண்டுகள் பொறுப்பாற்றிக் கொண்டு வரும் தி.மு.க. வழக்குரைஞர் தோழர் என்.வி.என்.சோமு அவர்களின் கவனத்திற்கும் இதனை எடுத்து வைத்தோம். ஒருமுறை சென்னை–புரசைப் பகுதியில் நிகழ்ந்த ஒரு பொதுக்கூட்டத்தில் தி.மு.க.வை நிறுவிய அய்ம்பெருந் தலைவர்களுள் ஒருவராகிய மதியழகன் அவர்களின் முன்னிலை யில் 'இந்து'வின் தீய நடத்தையை எடுத்துக் காட்டப்பட்டபோது, கழகப் பொதுச்செயலாளர் அவர்களிடம் விளக்கம் கேட்ட பின்னர், கண்களில் நீர் மல்கிய நிலையில் அவர் குமுறி

வெடித்தார், "வெட்கங் கெட்டவர்களே, நீங்கள் விளங்குவீர்களா?" என்று.

The Hindu'வின் உரிமையாளர்களுக்கு நாம் வேண்டுவாவுடன் தெரிவித்துக் கொள்வோம்: IMPRINT' என்பது அச்சிடுவோர், வெளியிடுவோர் – ஆசிரியர் பெயர் விவரப் பொறிப்பு அல்லவா? ஆம் எனில், ஏனைய ஊர் 'இந்து' இதழ்களிலெல்லாம் சாலைப் பெயர்கள் இடம் பெற்றிருக்க, சென்னை இதழில் மட்டும் சாலை விவரமே தேவையில்லை யென நீக்கியிருப்பது செம்மையா? ஞாயமா? ஊருக்கும் உலகிற்கும் ஞாயங்களையும் பொறுப்புகளை யும் கற்பிக்க முந்தும் 'இந்து' இவ்வாறு பொறுப்பற்று நடக்கலாமா?

நீங்களே பொறுப்பு!

'சேச்சே... இவ்வளவு பச்சையாகவா பாகுபாடு காட்டுவது?' என நாட்டோர் எண்ணமாட்டார்களா? நடுநிலையில் நிற்கும் நல்லவர்கள் 'இவ்வளவு வெறி 'இந்து'வுக்கு ஆகாது' என்று கருதமாட்டார்களா? வருங்கால வரலாறு 'மன்னிக்கக் கூடாத குற்றத்தினை 'இந்து' செய்து விட்டது' எனத் தீர்ப்பு எழுதாதா?

எனவே தவற்றைத் தொடர்ந்து செய்து பெரும் பழிக்கு இலக்காகாமல், நீங்கள், வணிக விளம்பரங்களில் வெளியிடுவதைப் போன்றே, 'Imprint' பகுதியில், 859–860. Anna Salai' என்பதைச் சென்னை – 'இந்து'வில் பொறித்து, ஏற்கெனவே படிந்த கறையைப் போக்கிக் கொள்ளுங்கள்.

மாறாக விடாப்பிடியாக இதில் நீங்கள் நின்றால், விளைவுகளுக்கும் நீங்களேதாம் பொறுப்பு!

– விடுதலை

ஞாயிறு மலர், *04.09.1994*

அந்தப் புன்னகை எங்கே?

– ஏ. சுந்தரம்

சென்னை கடற்கரையில் நடைபெறும் பொதுக்கூட்ட மொன்றில் தந்தை பெரியார் அவர்கள் பேசுகிறார்கள். அவரது பேச்சு முழுவதும் சுருக்கெழுத்தில் எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று திரு நாதன் சொன்னதன் பேரில் அந்தக் கூட்டத்திற்கு நிருபராக சென்றிருந்தேன். சுருக்கெழுத்தில் எழுதுவதைப் பார்த்த ‘விடுதலை’ அலுவலகத்தைச் சேர்ந்த ஒருவர் ஆசிரியர் வீரமணி அவர்களிடம் மறுநாள் வரச்சொல்லியிருந்தார். அய்யா அவர்கள் சென்னையில் பேசும் பொதுக் கூட்டங்களில் எல்லாம் சுருக்கெழுத்தில் பேச்சை எடுத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டதன் பேரில் பல கூட்டங் களுக்குச் சென்று அய்யாவின் பேச்சுக்களை எழுதிக் கொடுத்து வந்தேன். “தமிழ்நாடு” நாளிதழில் நிருபராக பணியாற்றும் வாய்ப்பும் கிட்டியது.

அய்யா அவர்களிடம் அறிமுகமான விதம்

அய்யா அவர்களிடம் முதன் முதலில் நிருபராகத் தான் அறிமுகப்படுத்தப்பட்டேன்.

“தமிழ்நாடு” நாளிதழ் சென்னையில் நிறுத்தியதும் ஒரு நண்பர் “புகைப்படம்” எடுக்க பழகிக்கொள்” என ஆர்வம் காட்டினார். அதனையொட்டி முதன் முதலில் புகைப்படம் எடுக்கச் சென்றதும் வில்லி வாக்கத்தில் நடைபெற்ற அய்யா அவர்கள் தலைமையில் நடந்த மாநாடு ஒன்றில்தான். அய்யா அவர்களின்

பேச்சைக் குறிப்பெடுத்த பின் நான் கொண்டு சென்ற 35 எம்.எம். காமிராவில் சில புகைப்படங்களை எடுத்தேன்.

பேச்சுக்களை குறிப்பெடுத்து எழுதிக்கொடுக்கும்போது பாராட்டிய அதே தோரணையில் புகைப்படம் எடுப்பதைப் பார்த்ததும் காமிராவை வாங்கிப் பார்த்தார். விவரம் கேட்டார். தனியே சில படங்கள் எடுக்க அனுமதி கொடுத்தார்.

அய்யாவிடம் கிடைத்த விருது!

அய்யாவிடம் புகைப்படங்களைப் பேச்சு குறிப்புகளுடன் கொண்டு காட்டினேன். பாராட்டினார். அன்று எடுத்த அய்யாவின் புகைப்படங்களைப் பார்த்த சிங்கப்பூர் "தமிழ்முரசு" இராதாகிருஷ்ணன் அய்யாவின் சில பிரத்தியேகப் புகைப் படங்களை எடுத்துக் கொடுக்கும்படிக் கேட்டிருந்தார்.

சென்னை மீரான் சாகிப் தெருவில் அய்யாவின் வீட்டு மாடியில் பல கோணங்களில் புகைப்படம் எடுத்தேன். காமிராவைத் தூக்கி படம் எடுக்க நான் தயாராவதற்குள் வெண்தாடிப்புதரில் ஒரு புன்னகை என்னைப் படம் எடு என்று எனக்கு உத்திரவிடும். அய்யாவின் புகைப்படங்கள் யாரெடுத்தாலும் அவர் அறியாமல் எடுத்தால் ஒழிய படங்கள் ஒவ்வொன்றிலும் அவர் சிரிப்புடன் இருப்பதுதான் தெரியும்.

அய்யாவைப் படம் எடுப்பதற்குத் தேர்ந்த புகைப்படக் காரரோ, எந்த கோணத்தில் படம் எடுக்க வேண்டும் என்று தெரிந்தவ்ராகவோ இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

என் நீண்ட புகைப்படத் தொழில் அனுபவத்தில் எத்தனையோ பேரை படம் எடுத்திருந்தாலும், அய்யாவின் முகத்தோற்றத்தை எங்கள் தொழில் பாணியில் சொல்லப்போனால் அவரைப் போன்ற போட்டோஜெனிக் முகத்தை நான் கண்டதில்லை. அய்யா அவர்கள் நான் புகைப்படம் எடுக்கும் தொழிலில் நுழையும்போது எந்த அளவுக்கு ஆசைகாட்டி ஆதரித்து வந்தாரோ, அதேபோல் கடைசிவரை என்னை ஊக்குவித்து என்னிடம் அன்புடன் இருந்தார் என்பது எனக்குக் கிடைத்த பெரிய விருதாகும்.

பூரிப்படைகிறேன்

இந்தியாவிலுள்ள எல்லா மொழிப் பத்திரிகைகளிலும் வந்த அய்யாவின் படங்களில் பெரும்பகுதி நான் எடுத்ததேயாகும் என்பதைப் பூரிப்போடு சொல்லிக்கொள்கிறேன்.

'விடுதலை' மலருக்கு முகப்புக்கு வண்ணப் படம் எடுக்க வேண்டுமென்பதற்காக கேட்டதற்கு, "தாங்கள் எங்கு எடுத்தால்

நன்றாக வருமென்று நினைக்கிறீர்களோ, அங்கேயே நான் வருகிறேன்'' என்று கருஞ்சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டே சொன்னார். ஒருமுறை திருச்சிக்குச் சென்றிருந்தபோது அய்யாவை கலர் படம் எடுக்க வேண்டுமென்று பெரியாரிடம் விரும்பிக் கேட்டதற்கு, திருச்சியிலிருந்து 5 மைல் தொலைவில் இருக்கும் காஜாமலை தோட்டத்திற்கு வேன் எடுத்துக்கொண்டு வந்து நான் விரும்பியபடியெல்லாம் வண்ணப்படம் எடுக்க வகை செய்து கொடுத்தார்.

ஒவ்வொரு முறை விடுதலை மலருக்குப் படமெடுக்க நான் செல்லும் போதும் நிருவாகியிடமும், ஆசிரியரிடமும் 'சென்ற ஆண்டு எடுத்த படம் என்னாயிற்று?'' என்று கேட்பார்.

போன ஆண்டைவிட ஓராண்டு அதிகமானதால் இவ்வாண்டு புதியதாகத் தான் படமெடுத்துப் போட வேண்டும் என்று சொல்லி சமாதானப்படுத்தும்போது "ஏதோ உங்கள் ஆசை; நான் ஏன் தடுக்க வேண்டும்? சுந்தரம் வா,'' என்று சட்டைக்குப் பொத்தான் மாட்டித் தயார் ஆகிக்கொள்வார்.

மனநிறைவு

நான் யார் யாரையோ எவ்வளவோ புகைப்படங்கள் எடுத்திருந்தாலும், அய்யாவைப் படமெடுக்கும் போது பெற்ற மனநிறைவைப் போல் எப்போதும் பெற்றதில்லை.

இதேபோல பேரறிஞர் அண்ணா அவர்களிடம் முதன் முதல் புகைப்படக்காரனாக அறிமுகம் செய்யப்பட்டபோது, "நீ யார், யாரைப் படமெடுத்திருக்கிறாய்?'' என்று கேட்டார். அண்ணா அவர்களிடம் நான் அய்யா அவர்களை எடுத்திருந்த பல படங்களைக் காட்டினேன். அவைகளைப் பார்வையிட்ட அவர் "எப்படியப்பா உன்னை இவ்வளவு படங்கள் எடுக்க அனுமதித்தார்? சில புரியாதவர்கள் சொல்லுவார்கள். படம் எடுக்கக்கூட காசு கேட்பார் என்று. புகைப்படம் எடுக்கும் தொந்திரவைத் தவிர்க்கத்தான் காசு கேட்கிறாரே தவிர அவருக்குக் காசு மீது உள்ள ஆசை காரணம் அல்ல'' என்று சொன்னார்.

அதை நான் பலமுறை நேரில் கண்டிருக்கிறேன்.

அண்ணா சொன்னதை நினைத்தேன்!

ஒருமுறை தர்மபுரியில் பகுத்தறிவாளர் கழகச் சார்பில் ஒரு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த விருந்தின்போது சுமார் 100 குடும்பத்தினர், அய்யாவுடன் குடும்பம் குடும்பமாகப் படம் எடுத்துக்கொள்ள ஆசைப்பட்டார்கள். 100 குடும்பத்தினரும் தனித் தனியாக அய்யாவுடன் படம் எடுக்கச் சுமார் 5 மணி

நேரமாவது ஆகும். அப்போது அய்யா சொன்னார்கள், "என்னுடன் படம் எடுத்துக்கொள்ள அய்ந்து ரூபாய் கொடுக்க வேண்டும்" என்று. அப்படிச் சொன்னதன் மூலம் படம் எடுத்துக் கொள்பவர்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்தது. சளைக்காமல் படம எடுக்க அனுமதி கொடுத்த அய்யா அவர்கள் ஒரு கட்டத்தில் சோர்ந்துபோய் படுத்துவிட்டார். அவர் அப்படிப் படுத்ததைப் பார்த்ததும், அண்ணா சொன்னதுதான் நினைவிற்கு வந்தது.

அய்யா அவர்கள் சென்னை வந்துவிட்டார் என்றாலே பெரியார் திடலுக்குப் போகாமல் இருக்க மாட்டேன். அவரைப் பார்க்க தனிப்பட்ட முறையில் வெறும் சுந்தரமாக போனாலும் கூட அய்யா அவர்களின் உருவத்தில் இருந்த கவர்ச்சியும், அந்த முகத்தைப் பார்க்கும்போதே புகைப்படம் எடுக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றும் வெறியும் என்னை காமிராவுடனேயே செல்லச் செய்யும். சில தடவைகளில் அவரிடம் விவாதிக்கும்போது சில சமயங்களில் அவர் பேசுவது கோபமாகக் கூட தோன்றும். அப்போது அவர்களை யாரும் அறியாமலேயே படமெடுத்திருக் கிறேன். உடனே சிரித்துக்கொண்டே "இதை ஏன் படம் எடுத்தாய்" எனக் கேட்பார். "இந்த உணர்வுடன் உள்ள படம் எனக்குத் தேவை" என்று சொன்னால் "என்னவோ நீ எடுத்துக்கொண்டே இருக்கிறாய்" என்று சிரித்துக்கொண்டே சொல்வார். அவருக்குத் தெரிந்து நாம் படம் எடுக்க வேண்டு மென்றால் கருப்புச் சட்டை அணியாமல் படம் எடுக்க அனுமதி கொடுக்க மாட்டார்.

இன்னும் 50 வருடத்தில் ...

சில சமயங்களில் குளிர்காலங்களில் காஷ்மீர் சால்வை போர்த்திக்கொண்டு படத்திற்கு அனுமதி கொடுப்பார். சால்வையில் இருக்கும் நெளிவு சுளிவுகள், அதை அணிந்திருக்கும் முறை, அவரது படத்திற்கு மிகவும் கம்பீரம் அளிப்பதாய் அமையும்.

அய்யா அவர்களை முதன் முதலில் கலர்படம் எடுத்தவன் என்ற பெருமையும் எனக்கு உண்டு. அவைகளைப் பிரிண்ட் போட்டு அவரிடம் காட்டும்போது, "எங்கள் காலத்தில் எல்லாம் படத்திற்குச் சாயம் பூசுவார்களே தவிர, இப்படி அதே நிறம் கொண்ட படத்தை எடுக்க முடியாது. இன்னும் 50 வருடம் போனால் இந்தப் படங்களேகூட காட்டு மிராண்டிக் காலத்தவை யாக ஆகிவிடும். இதைவிடப் புதிதாகக் கண்டுபிடிப்பார்கள்" என்று சொன்னார்.

எந்த இடத்திலும் தன் கருத்தை உதிர்ப்பார்!

ஒருமுறை லென்சுகளை மாற்றி மாற்றிப் படம் எடுத்துக்கொண்டிருந்தேன். அதைக் கவனித்த அய்யா அவர்கள்,

“என்னப்பா, பிலிமைதான் திருப்புவார்கள்; எடுக்கும் கண்ணாடியையே மாற்றுகிறாயே” என்று கேட்டார். அப்போது அய்யா அவர்களிடம் தூரத்தில் இருப்பதை எடுக்க ஒரு லென்ஸ் என்றும், சாதாரணமாக எடுக்க ஒரு லென்ஸ் என்றும், அதிக அளவு பரப்பளவை எடுக்க ஒரு லென்ஸ் என்றும் விளக்கியபோது ‘‘அவன் என்னென்னவோ கண்டுபிடிக்கிறான்; நாம்தான் பழைய குப்பை களுக்குப் பதவுரையையும், பொழிப்புரையையும் எழுதிக் கொண்டிருக்கிறோம்’’ என்றார்.

நான் அய்யாவுடன் பழகிய சுமார் 15 ஆண்டுகளில் தன் வீட்டு பிள்ளையாகக் கருதினாரே தவிர ஒரு தொழில்முறை புகைப்படக்காரனாக என்னைக் கருதியதே இல்லை.

அம்மா அவர்களும் என்னை தன் மகன் போலவே கருதி நடத்துவார்கள்.

ஓய்ந்து இருக்கிறேன்

அய்யா அவர்களை ஆயிரக்கணக்கில் படம் எடுத்த எனக்கு நீண்ட நெடுங்காலமாக அவருடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள முடியவில்லையே என்ற ஏக்கம் பல ஆண்டுகளாக இருந்து வந்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு திருச்சியில் நடந்த பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் நிறுவனர் நாள் விழாவிற்குச் சென்றிருந்தேன். விழா முடிந்து சென்னைக்குப் புறப்படுமுன் அய்யாவிடம் விடைபெற்றேன். வழக்கம்போல் காமிராவைத் தோளில் மாட்டியிருந்தேன். நான் எதிர்பாராத முறையில் தன் தலையணைக்கு அடியில் புதிதாக வைத்திருந்த ஒரு உல்லன் சால்வையை எனக்கு எடுத்துப்போர்த்த தயாரானார்கள். நான் அந்தச் சால்வையை அய்யா அவர்களிடம் போர்த்திக் கொள்ளாமல் பின்வாங்கி அரைகுறையாகப் படம் எடுக்கத் தெரிந்த ‘விடுதலை’ நிர்வாகி சம்பத்திடம் காமிராவைக் கொடுத்து அய்யா அவர் களிடம் சென்றேன். அய்யா சால்வையை எனக்குப் போர்த்தி னார்கள். திரு சம்பந்தம் படத்தையும் எடுத்தார். என் நீண்ட நெடுங்கால ஆசை நிறைவேறியது. பொன்போல அந்தப் படத்தைப் பாதுகாத்து வருகின்றேன். அய்யா அவர்களுடன் பல தலைவர்கள் உடனிருக்கும்போது படம் எடுக்கும் பெரும் வாய்ப்பைப் பெற்றவன் நான். பேரறிஞர் அண்ணா, காமராஜர், கலைஞர், ராஜாஜி, எம்.ஜி.ஆர் ஆகியவர்கள் அய்யாவை வந்து காணும்போது படம் எடுத்துள்ளேன். ஓயாது உழைத்து வந்த தலைவரை படமெடுத்து வந்த நான் அந்த முகத்தைப் படம் எடுக்கும் வாய்ப்பை இழந்த காரணத்தால் ஓய்ந்து இருக்கிறேன்.

– **விடுதலை**

பெரியார் நினைவு மலர், *1974*

நகைச்சுவை என்ற பெயரில்–
இந்தி எதிர்ப்பை கேலி செய்யும்
விகடனின் முரண்பாடுகள்

– சின்னக்குத்தூசி

நகைச்சுவை பொங்க எழுதுவது, பேசுவது என்பது தனிக்கலை; அது எல்லோருக்கும் கைவந்துவிடாது!

சிரிக்க வைக்க வேண்டும்; அத்தோடு சிந்திக்க வைக்கவும் வேண்டும். அதுதான் அர்த்தமுள்ள நகைச்சுவை.

அந்தக்கலை – நமக்குத் தெரிந்தவரையில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்குத்தான் முழுமையாக கைவந்த கலையாக இருந்தது!

எழுத்தாளர்களிலே கல்கி அவர்களும், பேச்சாளர் களிலே காலஞ்சென்ற சிந்தனைச்சிற்பி சிற்றரசு அவர்களும் சிரிக்க வைப்பதிலே வல்லவர்களாக இருந்தார்கள்.

இன்று தமிழகத்திலே – நகைச்சுவை பொங்கிட எழுதுவதாக நினைத்துக்கொண்டு, 'துக்ளக்' ஆசிரியர் 'சோ' பக்கம் பக்கமாய் எழுதுகிறார்! ஆனால் அவரது எழுத்துக்களிலே நகைச்சுவை உணர்வு என்ற பேரால், துவேஷம் – சாதிவெறி வகுப்புவாத நெடி – தனிமனித அகம்பாவம் ஆகியவைகள்தான் கொடிகட்டிப் பறக்கின்றன!

எனினும் வேறு எவரையும்விட அவருக்கென்று ஒரு தனிப்பெரும் வாசகர் கூட்டம் இருக்கிறது என்பதையும் நாம் மறுத்துவிட முடியாது; அதுமட்டு மல்ல; சமீப காலத்திலே பேனா பிடித்து, அரசியல் விமர்சனங்கள் எழுத முன்வந்த பலபேர் – துக்ளக்

'சோ'வைப் போல எழுதுவதுதான் 'நகைச்சுவை கலந்த விமர்சனம்' என்று நினைத்துக்கொண்டு, அவரது 'பாணி'யையே காப்பி அடித்து எழுதுகிறார்கள்!

'துக்ளக்' சோ பாணியில் எழுதினால் அது முரண்பாடுகளின் மூட்டையாகவும் – அபத்தக் களஞ்சியமாகவும்தான் இருக்கும்!

உதாரணத்திற்கு இந்த வாரத்து ஆனந்த விகடனில் வெளிவந்துள்ள 'துக்ளக்' பாணிக் கட்டுரை ஒன்றினைப் பார்க்கலாம்!

கடந்த சில வாரங்களாக – ஆனந்த விகடனில் 'மிஸ்டர் கூடுவாஞ்சேரி' என்ற பெயரில் ஒருவர் எழுதும் கற்பனைப் பேட்டிகள் தொடர்ந்து வருகின்றன. அதுபோலவே "அமைச்சரே .... மன்னா" என்றொரு பகுதியும் தொடர்ந்து வருகிறது! இந்த இரு பகுதிகளிலுமே – ஆனந்தவிகடன் ஏடு துக்ளக்கோடு போட்டி போட முயலுகிறது! துக்ளக் போல எழுத எங்களாலும் முடியும்' என்று நிரூபிப்பது போல எழுதித்தள்ளி வருகிறது!

இந்த வாரத்து 'ஆனந்த விகடனில்' மிஸ்டர் கூடுவாஞ்சேரி' – தலைவர் கலைஞர் அவர்களை கற்பனையில் பேட்டி கண்டு எழுதியிருக்கிறார்.

கலைஞரைக் கேலி செய்து எழுத வேண்டும் என்ற அக்கறையில் சில உண்மைகளையே கேலி செய்திருக்கிறார் அவர்.

ஆனந்தவிகடனாலேயே – அதன் தலையங்கப் பகுதியில் 'உண்மை' என்று ஒப்புக்கொள்ளப்பட்ட பிரச்சினையையே அவர் கேலி செய்திருக்கிறார்; அதையும் 'ஆனந்தவிகடன்' கவனப் பிசகினாலோ என்னவோ வெளியிட்டிருக்கிறது!

கூடுவாஞ்சேரி கட்டுரையின் இறுதிப்பகுதி கற்பனைப்பேட்டி – இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது.

"என்ன இந்த ராஜீவ்காந்தி மறுபடியும் இந்தித் திணிப்பு செய்யறார்?"னு கேட்டேன்.

"சீ! பாவம் ராஜீவ் காந்தி! எப்படி மார்கழி மாசம்னா குளிருமோ; அதே மாதிரி செப்டம்பர், அக்டோபர்லே இந்தித் திணிப்பு வரும். அது இந்திராம்மா இருக்கும்போதே எங்களுக் குள்ளே செய்துகொண்ட சின்ன அட்ஜஸ்ட்மெண்ட். எத்தனை நாளைக்குத்தான் இலங்கைப் பிரச்சினையே பேசறது; ஒரு மாறுதலுக்கு செப்டம்பர், அக்டோபர்ல இலங்கைப் பிரச்சினைக்கு லீவு விட்டுவிட்டு 'இந்திப் பிரச்சினையை எடுத்துப்போம். இதையும் நமக்குள்ளே வச்சுக்கோ... பேப்பரில் போட்டுடாதே..." என்று கண்டிஷனா சொல்லியவரிடம்,

"இ. காங்கிரசோட மறுபடியும் ஏதாவது உறவுக்குச் சான்ஸ் இருக்கா...?'' என்று நான் கேட்க, "பாவம் ராஜீவ் காந்தி.... தாயில்லாப் பிள்ளை... எம்.ஜி.ஆர். கழட்டிவிட்டுட்டா நமக்கு மனசு கேட்குமா.... ஆதரவு தந்துதான் ஆகணும். அதுதானே கடமை'' என்றார் கலைஞர்!

'பின்னே' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினேன்!

– என்பதாக பேட்டியை முடித்திருக்கிறார் மிஸ்டர் கூடுவாஞ்சேரி!

நகைச்சுவையாக – அரசியல் விமர்சனம் செய்வதென்றால் – இந்தி எதிர்ப்புக் கொள்கையில் கலைஞரிடமோ, தி.மு.கழகத்திடமோ ஏதாவது முரண்பாடு தென்பட்டால் அதனை நாசூக்காக – நகைச்சுவை பொங்க எடுத்துக்காட்டலாம்!

மிஸ்டர் கூடுவாஞ்சேரிக்கு இந்தி எதிர்ப்பு பற்றிய தி.மு.க.வின் வரலாறும் தெரியவில்லை; ஆனந்தவிகடனின் அதிகார பூர்வமான கருத்தும் தெரியவில்லை! நகைச்சுவை என்ற பேரால் தமிழக மக்கள் 1937ம் வருடத்திலிருந்து போராடும் ஒரு பிரச்சினையை – "செப்டம்பர், அக்டோபர் மாதத்து அட்ஜஸ்ட்மெண்ட். இந்திராகாந்தி காலத்து அட்ஜெஸ்ட்மெண்ட்'' என்றெல்லாம் எழுதி கொச்சைப்படுத்தியிருக்கிறார்!

இந்தி திணிப்பு என்பதும் இந்தி எதிர்ப்பு என்பதும் இந்திராகாந்தி காலத்தில் ஏற்பட்டதல்ல; அது 1937ம் வருடம் ராஜாஜி ஆட்சிக் காலத்தில் தொடங்கியது!

அப்போதும் தமிழகம் இந்தியை எதிர்த்திருக்கிறது! அது ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் ஆட்சிக் காலத்திலும் திணிக்கப் பட்டு இருக்கிறது! அப்போதும் போராட்டம் நடந்திருக்கிறது. மீண்டும் ராஜாஜி முதல்வர் ஆனபோதும் – காமராசர் ஆட்சிக் காலத்திலும் இந்தித் திணிப்பும் இருந்தது; எதிர்ப்பும் இருந்தது! பின்னர் பக்தவச்சலனார் ஆட்சிக் காலத்தில் 'இந்தி மட்டும்தான்' என்று அது தன்னை சட்டபூர்வமாக அமுலாக்கிக்கொள்ள வந்தபோது தமிழகம் – 18 நாட்கள் வீரஞ்செறிந்த போராட்டம் நடத்த வேண்டியதாயிற்று! அதன் பின்னர் இந்திராகாந்தி ஆட்சிக் காலத்திலும் – மொரார்ஜி ஆட்சிக்காலத்திலும்கூட இந்தித் திணிப்புக்கு எதிராக தி.மு.கழகமும், தமிழகமும் எதிர்ப்புக் குரல் கொடுத்திருக்கின்றன!

எனவே மிஸ்டர் கூடுவாஞ்சேரி கருதுவது போல – அது செப்டம்பர், அக்டோபர் மாதத்து அட்ஜெஸ்ட்மெண்ட் அல்ல; இந்திராகாந்தி காலத்துச் சங்கதியும் அல்ல;

இதனைக்கூட – நாம் ஆனந்த விகடனுக்கு மறுப்பாக ஏன் எழுத நேர்ந்தது என்றால் மிஸ்டர் கூடுவாஞ்சேரி தமது கட்டுரையில் கூடுவாஞ்சேரியின் சொந்தக் கருத்தாக “இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்பது கலைஞரும் – இந்திராவும் ஒப்பந்தம் செய்துகொண்டு செப்டம்பர், அக்டோபரில் நடத்தும் நாடகம்'' என்று பொருள்பட கேலியாக எழுதியிருந்தாரானால் – அதனை – நாம் அது அவரது சொந்தக் கருத்து என்று கருதி விட்டிருப்போம்!

ஆனால் அவர் “இந்தி எதிர்ப்புப் போராட்டம் இந்திராவுக்கும் – எனக்கும் இடையில் ஏற்பட்ட சின்ன அட்ஜெஸ்ட்மெண்ட்! செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் இந்திப் பிரச்சினையை வைத்துக் கொண்டோம்''

– என்று கலைஞர் கூறியதாக எழுதியிருக்கிறார்! ஒருவர் சொன்ன கருத்தை தவறு என்று கண்டிக்கலாம்; கேலிக்குரியது என்று எழுதலாம்; ஆனால் 1937ம் வருடத்தில் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்திலிருந்து இந்தி எதிர்ப்புப் போர் வீரனாக – தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் தியாகமறவனாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் கலைஞர் தமது வாயாலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒரு அட்ஜெஸ்ட்மெண்ட் என்று சொன்னதாக – எழுதியது கற்பனையாக இருந்தாலும் கூட – அது விஷமத்தனமான கற்பனை!

அதுமட்டுமல்ல; இந்தி எதிர்ப்பு செப்டம்பர் – அக்டோபர் மாதத்து சங்கதி என்று ஆனந்தவிகடனே ஒப்புக் கொள்ளவில்லை!

8–12–85 அன்று ஆனந்த விகடன் இந்தித் திணிப்பு பற்றி ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. அந்தத் தலையங்கத்தை கும்பகோணத்தில் நடந்த இந்தி எதிர்ப்பு விளக்கப் பொதுக் கூட்டத்தில் கலைஞரே படித்துக் காட்டியிருக்கிறார். அதுவருமாறு:–

''மத்திய அரசு இந்தியைத் திணிக்க முயல்வதும் தமிழகத்திலிருந்து எதிர்ப்புக் கிளம்பியவுடன் ‘யாரோ தெரியாமல் நடந்து கொண்டுவிட்டார்கள்.... அரசு கொள்கை அதுவல்ல;’ என்பது போல வாபஸ் பெறுவதும் அடிக்கடி நடந்து வருகின்றன. ஆனால் விரைவிலேயே இந்த எதிர்ப்புகளுக்கு அடங்காமல் ‘திணிப்பு முயற்சி’ வலுப்பெற்று விடுமோ என்று சந்தேகப்படத் தோன்றுகிறது.

இந்தி எதிர்ப்பு விஷயத்தில் தமிழகம் தனிமைப்பட்டு நிற்கிறது. தமிழ்நாட்டைப்போல வேறு எந்த மாநிலமும் இந்தி எதிர்ப்பு விஷயத்தில் தீவிர அக்கறை செலுத்தவில்லை. இப்படி தனிமைப்பட்டு நின்று எதிர்ப்புத் தெரிவிப்பது எத்தனை

காலத்துக்கு முடியும்? இதைத்தமிழக அரசியல் அறிஞர்கள் எண்ணிப்பார்க்க வேண்டிய நேரம் வந்துவிட்டது''

– என்று ஆனந்தவிகடன் 85 டிசம்பரில் தலையங்கம் எழுதியது!

கலைஞரைக் கேலி செய்வதாக நினைத்துக்கொண்டு – இந்தி எதிர்ப்பையே கேலிப்பொருளாக்கி மிஸ்டர் கூடுவாஞ்சேரி எழுதிய கட்டுரை வெளிவந்திருக்கிற விகடனுக்கு – முதல் வாரத்தில் கூட விகடன் ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. 28–9–86 தேதியிட்ட ஆனந்த விகடனில் தலையங்கத்தின் ஒருசில பகுதிகள் வருமாறு:–

''இந்தியாவுக்கான ஆட்சிமொழி விஷயத்தை வெற்று அரசியல்வாதிகளுக்கே உரிய முறையில் நெருங்குவது ஆபத்தான தாகும். ஆங்கிலம் இருந்த இடத்தில் இந்தி' என்ற எண்ணத்துடன் அவசர அவசரமாகச் செயல்படுவது விபரீதத்தில் முடியும். அதோடு, அந்நியர் ஆட்சியர் ஆங்கிலம் இந்திய மொழிகளை அடிமைப்படுத்தத்தான் ஆண்டது என்பதை மறந்துவிட முடியாது. இந்திய மொழிகள் செழித்து வளரத்துடிக்கும் இன்றைய சுதந்திர இந்தியாவில் ஒரு தனிமொழிக்கு மட்டுமே சிம்மாசனம் அளிக்கப் படுவது போன்ற உணர்வைத் தோற்றுவித்தால், அது தேச ஒற்றுமைக்கு முள்ளாகக் குத்தும் செயலாகிவிடும்!

* தமிழ்நாடு மட்டுமே இந்திக்கு எதிராகக் குரல் கொடுப்பதாக மத்திய அரசு நினைத்தால்; அது தவறு; கிளர்ச்சி என்று ஆரம்பித்தால், தென்னிந்தியாவில் மட்டுமின்றி நாடு தழுவிய பெரும் போராட்டம் ஆகிவிடும்.

மத்திய அரசு இந்தித் திணிப்பு முயற்சிகளை கைவிட்டு ஆட்சிமொழி விஷயத்தில் அறிஞர்கள் துணைகொண்டு முற்றிலும் புதியதொரு சிந்தனையை உருவாக்க வேண்டிய தருணம் நெருங்கிவருகிறது.

– என்று எழுதி இருக்கிறது ஆனந்தவிகடன்.

8–12–85ல் ஒரு தலையங்கம் எழுதி ''இந்தி எதிர்ப்பு விஷயத்தில் தமிழகம் தனிமைப்பட்டு நிற்கிறது; வேறு எந்த மாநிலமும் இந்தி எதிர்ப்பு விஷயத்தில் தீவிர அக்கறை செலுத்த வில்லை''– என்று கவலைதெரிவித்த விகடன், – 28–9–86ல் ''தமிழ்நாடு மட்டுமே இந்திக்கு எதிராகக் குரல் கொடுப்பதாக மத்திய அரசு நினைத்தால் அதாவது ; கிளர்ச்சி என்று ஆரம்பித்தால் தென்னிந்தியாவில் மட்டுமின்றி நாடு தழுவிய பெரும் போராட்டம் ஆகிவிடும்'' என்று நம்பிக்கை பொங்கிட மத்திய அரசை எச்சரித்து தலையங்கம் எழுதியது!

9 மாதங்களுக்கு முன்பு கவலைப்பட்ட விகடனே – மத்திய அரசை எச்சரித்து எழுதும் அளவுக்கு – இந்தித் திணிப்பும் அதிகரித்து வருகிறது; இந்தி எதிர்ப்பு உணர்ச்சியும் கனன்று வருகிற சூழ்நிலையில் மிஸ்டர் கூடுவாஞ்சேரியின் பெயரால் "இந்தி எதிர்ப்பு என்பது செப்டம்பர் அக்டோபர் மாதத்து நாடகம்" என்பது போல கேலி செய்து கட்டுரை வெளியிடுவது சரியா?

அதுவும் 1937 முதல் இந்தி எதிர்ப்புப்போர் வீரராக செயல்பட்டுவரும் கலைஞரை கேலி செய்து – கலைஞரே இந்தி எதிர்ப்பை கேலிப்பொருளாக்கிக் கூறியது போல கற்பனையை அவிழ்த்துவிடுவது நாகரீகமானதா? நகைச்சுவை என்பது இதுதானா?

விகடன்–'துக்ளக்' ஆக முயற்சிக்கலாமா? ஊரைக் குழப்பவும் விஷ(ம) விவசாயம் செய்யும் ஒரு 'துக்ளக்' போதாதா? விகடன் ஆசிரியர் குழுவினர் சிந்திக்க வேண்டும்!

— முரசொலி

05.10.1986

கலைஞரின் கருத்துப்படங்கள்



மத்திய அரசின் இந்தித் திணிப்புப் புதிய சுற்றறிக்கை கண்டு தமிழ்நாடே கொந்தளித்துக் குமுறி எழுகிறது.



"இலங்கைப் பிரச்சினையை தீர்ப்பதில் ஜெயவர்த்தனேக்கு உண்மையிலேயே அக்கறை கிடையாது. பேச்சுவார்த்தைஎன்ற பெயரில் காலங்கடத்தி; அப்படிக் கிடைத்த அவகாசத்தில் ஈழத்தமிழர்களை கொன்று குவிக்கிறார்'' என நாம் சொன்னதை இப்போதுதான் ராஜீவ்காந்தி புரிந்துகொண்டு, காலதாமதமாக இலங்கை அரசின்மீது கண்டனம் தெரிவித்துள்ளார்....


தமிழகம்
தி.மு.க.
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து
தடைகளைத் தாண்டி, வண்டி
இழுக்கும் எருது போல
விடாமுயற்சியுடையோரின்
துன்பங்கள் தொலைந்து போகும்!
"முரளியின் பொங்கல்"



எம். ஜி. ஆர். கட்சி ஏடுகளும் அக் கட்சியின் ஆதரவு ஏடுகளும் தி. மு. க. நடத்தும் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை கண்டித்தும் கேலி செய்தும் தொடர்ந்து எழுதி வருகின்றன.

‘சோ’ கூட்டத்துக்குத் தெரியுமா? கற்பூர வாசனை?

– மின்சாரம்

‘இந்தியா டுடே’ இதழ் புத்தாயிரத்தை ஒட்டி சிறப்பு வெளியீடு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் நூறு பேர்களைப் பற்றிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது.

அதில் தந்தை பெரியார் அவர்கள் பற்றி... இல்லை... இல்லை... ‘இராமசாமி நாயக்கர்’’ பற்றியும் ஒரு கட்டுரை.

துவக்கமே – இப்படிப் பார்ப்பனக் கொழுப்பில் இருந்தால் அதன் உள்ளடக்கம் எப்படியெல்லாம் இருக்கும் என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

கட்டுரை எழுதியவர் யார் தெரியுமா? திருவாளர் சோ. ராமசாமி என்கிற பச்சை ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர். நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைப்பது என்று மறைந்த குத்தூசி குருசாமி அவர்கள் ஒரு உவமையைக் கூறுவார் – அது இங்கு மிக மிகப் பொருத்தம்.

தந்தை பெரியார் பற்றி சோ எழுதினால் எப்படி இருக்கும் அப்படித்தான் இருக்கிறது கட்டுரை!

* தமிழைக் காட்டுமிராண்டி என்றவர்.
* நாட்டை வெள்ளைக்காரனுக்கு விற்க முயன்றவர்.
* பார்ப்பனர்களை ஒழித்துக் கட்ட நினைத்தவர். பார்ப்பனர்களை ஒழித்துக் கட்ட நினைத்தால் அத்துடன் இந்து மதத்தின் எல்லாப் பிரச்சினைகளும் முடிவுக்கு வந்து விடும் என்று கருதியவர்.
* விநாயகர் சிலைகளை உடைத்தார். ஆனால் தமிழ்நாட்டில் விநாயகர் சிலை ஊர்வலம் ஓகோ

என்று நடக்க ஆரம்பித்துவிட்டது. பெரியார் வழிவந்த திராவிடக் கட்சியினர் மூடநம்பிக்கைவாதிகளாகி விட்டனர்.

* தலித் மக்களுக்காக உழைக்கவில்லை. தலித் மக்கள் தனி அமைப்புகளை உருவாக்கிக் கொண்டு விட்டனர்.

இப்படியாகச் சகட்டுமேனிக்கு உளறிக் கொட்டியிருக்கிறார்.

சோ இராமசாமி சங்கராச்சாரியாரின் சீடர்; ஆர்.எஸ்.எஸ். கொள்கைக்காரர் பார்ப்பன வெறியர்! அத்தகைய ஒருவரிடமிருந்து வேறு எவற்றை எதிர்பார்க்க முடியும்?

குற்றச்சாட்டுகளை ஆதாரப் பூர்வமாகவும் எங்கும் குறிப்பிட வில்லை. மொட்டைத் தலையன் குட்டையில் விழுந்தான் என்பது மாதிரிதான்யெல்லாம்.

தமிழைப் பற்றி தந்தை பெரியார் கூறிய கருத்துகள் எல்லாம் பார்ப்பனர்களின் பார்வை போல, தமிழை "நீசப் பாஷை" என்று கூறி இழிவுபடுத்தும் நோக்கமல்ல; மாறாக அதன் குறைகளைச் சுட்டிக் காட்டி; அதனை மேன்மைப்படுத்த வேண்டும் என்கிற அக்கறையின் பேரில்தான்!

தந்தை பெரியார் *95*–ஆவது ஆண்டு பிறந்த நாள் சென்னை – பெரியார் திடலில் நடிகவேள் எம்.ஆர். இராதா மன்றத்தில் நடைபெற்றது *(16.9.1973)*

கவிஞர் சுரதா தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்கள் கலி. பூங்குன்றன், சுகி சிவம், குடியரசு, பொன்னிவளவன், வேழவேந்தன் ஆகியோர் கவிதை பாடினார்கள்.

அந்நிகழ்ச்சியில் இறுதியாக உரையாற்றிய தந்தை பெரியார் பளிச் சென்று மின்னல் வெட்டு போல ஒரு கருத்தைக் கூறினார்.

"நான் நமது தமிழ் மொழியைக் காட்டுமிராண்டி மொழி என்று *31* வருடமாகக் கூறி வருகிறேன். நான் மொழியைக் குறை கூறவில்லை. அது உண்டான காலத்தைத்தான் குறை கூறுகிறேன். அது உண்டாக்கப்பட்ட காலம் காட்டுமிராண்டிக்காலம்" என்றார்கள்.

*(**'விடுதலை'** 16.9.1973 **பக்கம்** 1)*

"முதலாவதாக, தமிழ் முன்னேற்றமடைந்து உலக பாஷை வரிசையில் அதுவும் ஒரு பாஷையாக இருக்க வேண்டுமானால் தமிழையும், மதத்தையும் பிரித்து விட வேண்டும். தமிழுக்கும், கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் கொஞ்சமாவது தள்ளி வைக்க வேண்டும். மத சம்பந்தமற்ற ஒருவனுக்குத் தமிழில் இலக்கியம் காண்பது, மிக மிக அரிதாகவே இருக்கிறது. தமிழ்

இலக்கணம்கூட மதத்தோடு பொருத்தப்பட்டு இருக்கிறது'' ('குடிஅரசு' *26.1.1936*) என்று எழுதினார்கள்.

தமிழில் தந்தை பெரியார் எவற்றைக் குறை கூறுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தந்தை பெரியார் எவற்றை யெல்லாம் குறை என்று கூறி கடிந்து கொள்கிறார்களோ, அவை எல்லாம் பார்ப்பனர்களுக்குப் பாதாம் அல்வாவாக இருக்கிறது. ஒரு முழு பகுத்தறிவுவாதி என்கிற முறையிலும், தமிழ்மொழி வளர்ச்சித் திசையில் மேலோங்கி நிற்க வேண்டும் என்கிற கண்ணோட்டத்திலும் தந்தை பெரியார் கூறும் கருத்தினை – பார்ப்பனீயத்துக்கே உரிய வன்மத்தோடு திசை திருப்புவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மொழியிலிருந்து சமஸ்கிருத ஆக்ரமிப்பைத் தூக்கி எறிய அடியெடுத்துக் கொடுத்தவர் அரிமா பெரியார். அக்ராசனர் தலைவர் ஆனதும், உபந்நியாசம் சொற்பொழிவானதும் நமஸ்காரம் வணக்கம் ஆனதும் வந்தனோபசாரம் நன்றி யுரையானதும் யாரால் – எந்த இயக்கத்தால்?

சமஸ்கிருத மயமாகிவிட்ட தமிழன் பெயர்கள் தமிழ் மயமாகிட தன்மான உணர்ச்சியை உண்டாக்கியவர் யார்?

பிறப்பிலிருந்து சாவு வரை பார்ப்பன – சமஸ்கிருத பண்பாட்டைப் படையெடுப்புக்கு ஆளாகி உருக்குலைந்து போன நிலையில், அனைத்துத் துறைகளிலும் ஆரிய ஆதிக்கத்தை – ஊடுருவலை ஒழித்துக் கட்ட உரிமைக் குரல் கொடுத்த பகுத்தறிவுப் பகலவன் மீது பார்ப்பனர்களுக்கு காலாக் காலத்திற்கும் காழ்ப்புணர்வும் பகை வெறியும் போட்டிப் போட்டுக் கொண்டு கூத்தாடாதா? அதைத்தான் 'சோ' உருவில் காண முடிகிறது.

தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று சொன்ன தந்தை பெரியார் தான் எழுத்துச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தினார். ஆனால் சோ இன்றுவரை 'துக்ளக்'கில் அதனைக் கடைபிடிப்ப தில்லை. ஆனால் அய்யாவின் சீர்திருத்தம்தான் வெற்றி பெற்றுள்ளது. பள்ளி மாணவன் சீர்திருத்த முறையில் எழுதாவிட்டால் அவனுக்குக் கிடைக்கும் மதிப்பெண் முட்டைதான். பெரியார் வெற்றி பெற்றுள்ளாரா இல்லையா?

ஏதோ பெரியார் தமிழைப் பழித்தது போலவும், பார்ப்பனர்கள் மட்டும் அதைப் போற்றியது போலவும் பம்மாத்து அடிப்பதைத் தமிழர்கள் நம்பத் தயாராக இல்லை. வழிபாட்டு மொழியாகத் தமிழ் இருக்க வேண்டும் என்கிற அரசின் ஆணையை எதிர்த்து உச்சநீதிமன்றம் செல்லுபவர்கள் உச்சிக் குடுமிகள்தான் என்பதைத் தமிழர்கள் அறிந்துதான் வைத்துள்ளார்கள். இதே சோ பார்ப்பனர்

– வழிபாட்டு மொழியாக சமஸ்கிருதம்தான் இருக்க வேண்டும் என்று 'துக்ளக்'கில் தலையங்கம் தீட்டியவர்தான் என்பதை நினைவூட்டுகிறோம். *(18.11.1998 'துக்ளக்' தலையங்கம்)*

* **நாட்டை வெள்ளைக்காரனுக்கு விற்க முனைந்தவராம் பெரியார் – சொல்லுகிறார் அக்கிரகார ஆசாமி.**

1932 டிசம்பர் *28, 29* நாள்களில் சுயமரியாதைத் தொண்டர்கள் கூட்டத்தை ஈரோட்டில் தந்தை பெரியார் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கியமான முடிவுகளுள் ஒன்று: பிரிட்டிஷ் முதலிய எந்தவிதமான முதலாளித்தன்மை கொண்ட ஆட்சியிலிருந்தும் இந்தியாவைப் பூரண விடுதலை அடையச் செய்வது.

சோணகிரி கூட்டத்துக்கு இந்த உண்மையெல்லாம் தெரியுமா?

'வெள்ளையனே வெளியேறு' என்ற முழக்கத்தை காங்கிரஸ் *1942* ஆகஸ்டில் கொடுத்தது என்றால், அதற்கு முன்னதாக பத்தாண்டுகளுக்கு முன்பே வெள்ளை ஆட்சி நடைகட்ட நாள் குறித்தவர் நாயகர் பெரியார்.

வெள்ளையனே வெளியேறு முழக்கத்தை காங்கிரஸ் கொடுத்தபோது அதற்கு எதிர் குரல் கொடுத்தவர்தான் 'சோ' போற்றும் சக்ரவர்த்தி ராஜ கோபாலாச்சாரியார்! 'ஆகஸ்டு துரோகி!' என்று காங்கிரஸ்காரர்களாலேயே அடைமொழி கொடுக்கப் பட்டவர்தான் ஆச்சாரியார்.

வெள்ளையனுக்கு வெண் சாமரம் வீசிய ஆச்சாரியாருக்குக் கிடைத்த வெகுமதிதான் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் பதவி! இதுபற்றியெல்லாம் வாய்த் திறக்க மாட்டார் மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி கூறும் குல்லூகப்பட்டப் பரம்பரைக்காரர்!

*1933*இல் இந்த ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்!'' என்று 'குடிஅரசு' இதழில் தலையங்கம் தீட்டியதற்காக ஒன்பது மாதத் தண்டனையையும் *300* ரூபாய் அபராதமும் வெள்ளை அரசால் தண்டிக்கப்பட்டவர் தந்தை பெரியார். தந்தை பெரியார் மட்டுமல்ல; தந்தை பெரியாரின் தங்கை எஸ்.ஆர். கண்ணம்மாள் அவர்களும் தண்டிக்கப்பட்டார் என்ற வரலாறுயெல்லாம் தெரியாமல் காட்டிக் கொடுப்பதையே கலையாக பிழைப்பாகக் கொண்ட வெங்கண்ணா பரம்பரை வாய்ப்புளித்ததோ மாங்காய்ப் புளித்ததோ என்று உளரலாமா?

* **பார்ப்பனர்களை ஒழித்துக் கட்ட நினைத்தார். பார்ப்பனர்களை ஒழித்துக் கட்ட நினைத்தால், அத்துடன் இந்து மதத்தின் எல்லாப் பிரச்சினைகளும் முடிவுக்கு**

வந்துவிடும் என்று பெரியார் நினைத்தார் – என்று எழுதுகிறார் சோ.

பார்ப்பன எதிர்ப்பை முழு மூச்சாகக் கொண்டு எதிர்த்தார் என்பது உண்மைதான். இந்துமதத்தின் மூக்கணாங்கயிறு அவர் களிடத்தில் தான் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான்.

இந்து மத சமூக அமைப்பில், வருணாசிரம வரிசை முறையில் முதல் தட்டு – முதல் பந்தி – முதல் மரியாதை என்பதுயெல்லாம் பார்ப்பனர்களுக்குத் தான்! கோடானுகோடி தாழ்த்தப்பட்டவர்கள் பஞ்சமர்கள்; கோடானுகோடி பிற்படுத்தப்பட்டவர்கள் எல்லாம் சூத்திரர்கள்.

இவர்களின் விழிப்புணர்வு, உரிமை உணர்வு என்பது இவற்றின் ஆணி வேரைப் பிடித்து தலைகீழாக அடிப்பதில்தான் இருக்கிறது என்று தந்தை பெரியார் நினைத்ததில், பாடுபட்டதில் என்ன குற்றம்?

“இன்று ஒரு சிறு அளவாவது ஆரியத்திலிருந்து திராவிடன், தமிழன் விடுதலையும், உரிமையும் பெற்று வருகிறான் என்றால், அது ஆரிய வெறுப்பினாலும், ஆரியக் கடவுள்கள், சாதி தர்ம, புராண இதிகாசங்களின் பகிஷ்காரத்தினாலுமே அல்லாமல், திராவிடனின் அறிவு உணர்ச்சியாலோ, சுயமரியாதை உணர்ச்சி யாலோ அல்ல. இனியும் நல்ல அளவுக்குத் திராவிடன்– தமிழன் அறிவும், மானமும் பெற்று, உலக மக்களைப் போல் விடுதலையும், சுதந்திரமும் பெற்று வாழ வேண்டுமானால், எந்த அளவுக்குத் தமிழன் ஆரியத்தை, ஆரியனை வெறுக்கிறானோ எந்த அளவுக்குத் தமிழன் ஆரியக் கடவுள், மத், சாஸ்திர, தர்ம புராண, இதிகாச சம்பிரதாய கலாச்சாரத்தில் இருந்து விலகுகிறானோ அந்த அளவுக்குத்தான் நிறைவேறும் என்று துணிந்து கூறுவேன்'' (*‘விடுதலை’ 12.4.1966*) என்று தந்தை பெரியார் அடித்துக் கூறியதில் எந்தச் சொல், எந்த வரி தவறு உடையது?

இந்தக் கூற்றில், இந்த முடிவில் தந்தை பெரியார் வெற்றி பெறாமல் தோல்வியைச் சுமந்தாரா? பார்ப்பானை பிராமணன் என்று சொல்லி சாமி என்று மதித்து சாஸ்டாங்கமாகக் காலில் விழும் நிலை இன்று சமுதாயத்தில் உண்டா?

அவுட்டுத் திரியுடன் பஞ்ச கச்சம் கட்டி நெற்றியில் நாமம் போட்டு வீதியில் ஒரு பார்ப்பான் நடந்து போகட்டும்; கோலி விளையாடும் சிறுவன்கூட பின்பொறியால் சிரித்து ஓட ஓட விரட்டுவானே!

சமூக நீதி என்ற தத்துவத்தைக் கூறி, கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று அவர் எழுப்பிய குரல் குமரி முதல் இமயம் வரை இன்று எதிரொலிக்கிறதே – அரசியல் சாசனத்திலேயே இடம் பெற்று விட்டதே! பார்ப்பன பா.ஜ.க. ஆட்சியாலேயே அதனை ஒன்றும் செய்ய முடியவில்லையே!

ஒரு கட்டத்தில் எதிர்த்துப் பார்த்து, பின் கொச்சைப் படுத்திப் பார்த்த பார்ப்பனர்களே 'எங்களுக்கும் இட ஒதுக்கீடு வேண்டும்' என்று பிச்சை கேட்கும் நிலையை தந்தை பெரியார் ஏற்படுத்தி விட்டாரே – இதற்கு என்ன பதில்? பெரியாரின் இந்தப் பெரு வெற்றியைப் பற்றி பூணூல் திருமேனியார் ஏன் மறைக்கிறார்? இந்தப் பக்கமே நெருங்காமல் வேறு எங்கெங்கே ஓடித் திரிகிறாரே – ஏன்?

* **விநாயகர் சிலைகளை உடைத்தார். இன்று விநாயகர் ஊர்வலம் ஓகோ என்று நடக்கிறது என்று கொட்டி முழங்குகிறார் சோ.**

விநாயகர் ஊர்வலத்தின் யோக்கியதையைக் கண்டு நாடே காரி உமிழ்கிறது. காலித்தனம், மது மயக்க ஆட்டம் பற்றி பார்ப்பன ஏடுகளே படம் பிடித்தனவே!

பெரியார் விநாயகர் பொம்மைகளை உடைத்தார் என்றால் பக்தர்கள் அந்தச் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று கடலில் போட்டு மிதித்து, உதைத்து நாசப்படுத்தும் செயலை என்ன சொல்ல!

பக்தி பெருகி விட்டதா? சாமி கண்ணைக் குத்தும் என்று பயப்படும் ஒரே ஒரு பக்தனைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

1978 மே திங்கள் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அகில இந்திய இந்து மாநாட்டில் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி என்ன பேசினார்?

"மக்களிடையே கஷ்டங்கள் அதிகரித்து வருவதால் கடவுள் மீது அதிகப் பற்றுக் கொண்டு வருவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. கோயில்களுக்குப் போவதையும், மதச் சடங்குகளில் கலந்து கொள்வதையும் ஒரு ஃபேஷனாக கருதுகின்றனர். பக்தர்கள் பெரும்பாலோரிடம் வர்த்தக மனப்பான்மை காணப்படுகிறது" என்று காஞ்சி சங்கராச்சாரியார் மனம் விட்டுப் பேசினாரே – இதுதான் பக்திக்குக் கிடைத்த வெற்றியா?

"கொலை – கொள்ளை செய்யத் துணிகிறவர்களில் அனேகப்

பேர் பக்தர்களாகவே இருந்து, ஆண்டவனிடதில் பிரார்த்தனை செய்து கொண்டு தப்பித்துக் கொள்வதற்கு வழி தேடுகிறார்கள். **நாத்திகத்திற்கும், இப்படி எடுத்துப் போவதற்கும் சம்பந்தம் இருப்பதாக நாம் நினைக்கவில்லை.** பொதுவாக பேராசை ஜாஸ்தியாகி விட்டது. பணமுடை அதிகரித்துள்ளது" – என்று சொன்னவர் யார்?

சாட்சாத் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர்தான்! ஆதாரம் 'குமுதம்' *12.9.1996.*

நாத்திகத்தின் பண்பாட்டையும் ஆத்திகத்தின் ஒழுக்கக் குறைவையும் சங்கராச்சாரியாரே ஒப்புக் கொண்டு சரணாகதி அடைந்துவிட்ட பிறகு பெரியார் தோற்றுவிட்டார் என்று கூறுவதற்கு 'சோ'விக்கு தார்மீக உரிமையே கிடையாதே!

அரசியலுக்குப் போன திராவிட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் மஞ்சள் துண்டு போடுகிறார்கள்; மண் சோறு சாப்பிடுகிறார்கள் என்பது உண்மையே! அரசியலுக்குச் சென்று ஓட்டுப் பொறுக்க ஆசைப்படுபவர்களால் கொள்கைப்படி வாழ முடியாது என்பதை அன்றைக்கே பெரியார் அய்யந்திரிபன்றி அடித்துக் கூறிவிட்டார்.

ஒருவனே தேவன் என்று அண்ணா எடுத்துக்கொடுத்த அடி எங்கேயோ கொண்டு போய்க் குடைசாய்த்துவிட்டது! அதற்குத் தந்தை பெரியார் பொறுப்பாளியாகி விட மாட்டார்.

பகுத்தறிவு – நாத்திக நெறியில் தந்தை பெரியார் என்ன சொன்னார் – திராவிடர் கழகம் எப்படி நடந்து கொள்கிறது என்பதுதான் அளவுகோலே தவிர அரசியலுக்குச் சென்றவர் களோ! அமைப்புகளோ அல்ல – அல்லவே அல்ல!

* **தலித் மக்களுக்காகப் பெரியார் உழைக்கவில்லை தலித் மக்கள் தனி அமைப்புகளை உருவாக்கிக் கொண்டு விட்டனராம் – கூறுகிறார் சோ.**

பிரித்தாளும் சூழ்ச்சி என்பது பார்ப்பனர்களின் இரத்தத் திலேயே பிறந்தது. புத்தாயிரத்திலும் அவர்களின் புத்தி மனு காலத்தில்தான் சஞ்சரிக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு!

திராவிடர் கழகத்துக்கே பெயர் – பள்ளன் கட்சி – பறையன் கட்சி என்பதுதான்! – மற்ற மற்ற அரசியல் கட்சிகளைப் போல ஆதி திராவிடர் பிரிவு = அரிஜன பிரிவு என்பதெல்லாம் இங்கு கிடையாது.

அடித்தட்டு மக்களுக்காக உழைப்பது – அம்மக்களிடம்

பிரச்சாரம் செய்வது என்பதை இரத்த வோட்டமாகக் கொண்ட இயக்கத்தில் தனித் தனிப் பிரிவுகள் எப்படி இருக்க முடியும்?

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் குடியரசுத் தலைவராக வரவேண்டும் என்று முதல் குரல் கொடுத்தது திராவிடர் கழகமே!

இந்தியத் துணைக் கண்ட வரலாற்றிலேயே முதல் மனித உரிமைப் போர் என்று போற்றப்படும் வைக்கம் போராட்டத்தின் தளகர்த்தர் தந்தை பெரியார் அல்லவா?

வரலாறு ஒப்புக் கொண்ட அந்த உண்மையை, தலை கீழாகத் தப்பிலித்தனம் என்கிற தன்மையில், காந்தியார்தான் அதனை நடத்தினார் என்று புரட்டாக எழுதியவர்தான் 'சோ' ராமசாமி அய்யர்!

அடிப்படையிலேயே கோளாறான ஆசாமி உண்மைகளைத் தலை கீழாகப் புரட்டித்தான் எழுதுபவர்.

ஜாதி இருக்க வேண்டும்; ஆனால் தீண்டாமை ஒழிய வேண்டும் என்று முரண்பாடாக பேசிய, எழுதிய காந்தியார் தான் அவர்கள் கண்ணோட்டத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பாடுபட்டவர்.

தீண்டாமை என்பது ஜாதியின் விளைவு – ஜாதி இந்து சமூக அமைப்பின் ஏற்பாடு – சமத்துவ சமுதாயத்துக்கு இவற்றை யெல்லாம் நிர்மூலமாக்க வேண்டும் என்று தந்தை பெரியார் சொன்னால், அது பார்ப்பனீய ஆதிக்கத்துக்குச் சாவுமணி என்கிற போது – சோக்கள் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு தாழ்த்தப் பட்ட மக்களுக்குப் பெரியார் பாடுபடவில்லை என்று அள்ளி விடுகிறார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிப் பள்ளி, தனிக் கோயில், தனிக் கிணறு என்று சொன்னவர் காந்தியார்.

இத்தகைய தனி ஏற்பாடுகள் தாழ்த்தப்பட்டவர்களைச் சமுதாயத்திலிருந்து நிரந்தரமாகத் தனிமைப் படுத்தி விடும் என்று எதிர்த்தவர் தந்தை பெரியார்.

பள்ளிகளில் தாழ்த்தப்பட்டவாகளைச் சேர்க்காவிட்டால் மானியம் நிறுத்தப்படும்; பேருந்துகளில் தாழ்த்தப்பட்டவர்களை அனுமதிக்காவிட்டால் உரிமங்கள் ரத்து செய்யப்படும் என்று ஆணை பிறப்பித்தது நீதிக் கட்சி. பொது வீதிகளில் நடக்க ஆணை பிறப்பித்தது நீதிக் கட்சி. இந்த வரலாற்று உண்மை களுக்கெல்லாம் வெள்ளை அடித்துவிட்டு புதுப் புராணங்களைப் புனையலாம் என்று அக்கிரகாரம் நினைத்தால், அது பலிக்காது.

தாழ்த்தப்பட்டவர்கள் உட்பட அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆக உரிமை வேண்டும் என்கிற போராட்டத்தை வரும் ஏப்ரல் முதல் தேதி திராவிடர் கழகம் அறிவித்திருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் கசிந்துருகும் இந்தக் கூட்டம் அதற்கு ஆதரவு அளிக்குமா? சவால் விட்டுக் கேட்கிறோம்.

தீண்டாமை க்ஷேமகரமானது என்று கூறிய சங்கராச்சாரியின் வால் பிடித்து வாழும் 'சோக்கள்' பகிரங்கமாக சங்கர மடங்களின் நிர்வாணமான தீண்டாமை அனுசரிப்பைக் கண்டிக்கத் தயாரா?

ஜாதி ஒழிப்பு, பெண்ணடிமை எதிர்ப்பு, மூடநம்பிக்கை முறியடிப்பு, சமூக நீதி, அறிவியல் அணுகுமுறை போன்ற களங்களில் தந்தை பெரியாரின் சிந்தனைகள் இன்றைய தினம் தமிழ்நாட்டைக் கடந்து, இந்தியத் துணைக் கண்டத்தையும் தாண்டி, உலக அளாவிய நிலையில் தனித் தன்மையான முத்திரைகளை நாளும் பதித்து வருகிறது.

இவற்றை வெளிப்படையாக யாரும் எதிர்க்க முடியாது என்கிற நிலை – தந்தை பெரியாருக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியல்லவா? இந்தக் கொள்கைகள் எதிர்பார்க்கும் அளவுக்கோ உடனடியாகவோ, முழு வெற்றியை பெறவில்லை என்று வைத்துக் கொண்டாலும்கூட, அந்த நிலை மானுட சமூகத்தின் பாதிப்பாகவே கருதப்படும். அதை எப்படியும் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கருதுவதும், அதற்காக கடுமையாக உழைப்பதும்தான் மானுடத்தின் வளர்ச்சியை நோக்கிய உண்மையான அக்கறையாக, பொறுப்புணர்ச்சியாகக் கணிக்கப்படும்.

ஆனால் 'சோ' கூட்டம் அடிமனத்தில் தேக்கி வைத்திருக்கும் நஞ்சும், நய வஞ்சகமும், பேத உணர்வுகளும் சமூகக் கேடு! அவை வெற்றி பெற்றால் மானுடத்தின் அழிவு!! அவற்றைப் பகிரங்கப்படுத்தி, மக்கள் மன்றத்திலே அறிமுகப்படுத்த முடியாது! இந்த நிலை தந்தை பெரியாருக்குக் கிடைத்த மகத்தான வெற்றியல்லவா?

தந்தை பெரியாரின் சிந்தனைகள் நீண்ட ஆயிரம் கால சமுதாய நோய்க்கான மருத்துவம்! நோய் உடனடியாகக் குணமாகாவிட்டாலும்கூட, அந்த மருத்துவம் பெருமைக்குரியது – தேவையானது. அது வெற்றி பெற்றே தீர வேண்டும் என்பதுதான் சமூகத்தின் எதிர்ப்பார்ப்பு! ஆனால் பார்ப்பனீயம் சமூக அமைப்பில் நிலவினாலும் – அது சமூகத்தைப் பீடித்த நோய் – அதற்குப் பெருமை கிடையாது – அதற்கு வெற்றி என்ற பேச்சுக்கு இடமும் இல்லை. அது ஒழிக்கப்பட்டே தீர வேண்டும் என்ற நிலைதான்!

தந்தை பெரியாரின் கருத்துக்கள் எங்கேயாவது தோல்வி அடைந்தாலும் அது வெற்றி பெற்றாக வேண்டும்.

பார்ப்பனீயக் கருத்துகள் எங்கேயாவது வெற்றி பெற்றாலும் அது தோல்வியைச் சந்தித்தாக வேண்டும். இதுதான் இன்றைய சமுதாயத்தின் எதிர்ப்பார்ப்பும் – நிலையும் – தேவையும்!

சமூக இயலின் இந்த நேத்திரம் – இந்தக் கற்பூர வாசனை சோக்களுக்குத் தெரியாது – புரியாது! காரணம் அந்த அளவுக்கு அவர்களின் நுரையீரல்களில் ஆரிய காசம் முற்றிப் புரையோடிப் போயிருக்கிறது!

எதிர்கால உலகம் என்பது தந்தை பெரியாருக்கே உரியது – சங்கர மடத்துக்கு உரியதல்ல!

நினைவிருக்கட்டும்!

– விடுதலை

ஞாயிறு மலர், 05.02.200

திராவிட இயக்க இதழாளர்களின் இதழியல் பார்வை, அணுகுமுறை, இதழியலின் உட்கூறுகளைக் கருத்தியல் பரப்புரைகளுக்குப் பயன்படுத்தியமுறை, திராவிட இயக்க இதழ்கள் ஏற்படுத்திய புதிய போக்குகள், பார்ப்பனர்களும் அவர்களுடைய சார்பாளர்களும் இந்த இயக்க இதழ்களை எதிர்கொண்டவிதம் முதலானவை பற்றிய திராவிட இயக்க இதழாளர்களின் கட்டுரைத் தொகுப்பு இந்நூல். ஏகாதிபத்தியச் சார்பாளர்கள், சூனாமானா, பள்ளன் பறையன் கட்சி என சமூகப் பண்பாட்டுப் புறக்கணிப்புக்கு ஆளான திராவிட இயக்கத்தின் அறிவுப்பூர்வமான இதழியல் பணிகளைப் பதிவுசெய்யும் அச்சு ஊடக ஆவணம் இது.

முனைவர் இரா. பாவேந்தன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

ISBN - 978-81-909922-3-7
9 788190 992237
Code No: KK1004 Price: Rs.450

கயல் கவின்